சுபமஸ்து

முநிவர்கள்
அருளிச்செய்த
நீதிநூலாகிய நாலடியார்.

இதற்கு

கூடலூர்.

சபாபதிமுதலியார்

சிறுவர்முதலியயாவரு மெளிதினுணரும்படி பதமறு
ருனையவெளிப்படையாக்கிப்பதப்பொருளுங்
கருத்துமாக உரைசெய்துதருகவெனக்
கேட்டுக்கொண்டதால்
சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவராகிய
புகழ.

நயநப்பமுதலியாரவர்களால்
உரைசெய்யப்பட்டு

வளவனூர்.

சுப்பராயமுதலியாரவர்கள்
குமாரராகிய
முத்துச்சாமிமுதலியாரால்

ரிக்கார்ட்-அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகந சகவருடம் தூளசுளல்

நிகழுங்குரோதிஹ காரத்திகைமீ

இதன்விலை, ரூபா...எ.

உரைப்பாயிரம் நேரிசையாசிரியம்.

மணிவண நிறைகடன்-மாயிருஞாலத்..... ... ... *
தணிமலையங்கமு-மாகடபுராணமு .... *
நகையுறுமநுமுதுரைதராரிதர்..... ..... *
மிகையறுகாதி-யாயநர்வியாசர் .... *
பற்பலமுநிவர்-பகரறநூல்களும்..... ..... *
பொற்புயர்குசை நுனி-போலறிவினர்க்கலான் ..... *
மற்றையோர்தங்கண்-மஞ்சிக்கெட்டிணையுந் ... . *
தெற்றெனப்புலப்படுந்-திறனரிதாலறு..... ... *
சமையத்துள்ளோர்-தத்தமக்குரித்தா ... . *
யமையறநூலிஃதாமென் றுவப்ப..... .... *
விளைஞர்முதிய-ரிதயத்தாமிருட்... ... . *
டளையறத்தாதையா-ரியர்கமையாப்ப... .... *
நீங்காதிருந்தூட-னிலையதுவிளக்கித்..... .... *
தாங்காவிருபொருட்-டகைமையிதிற்றெளி... .... *
யுயிர்க்குறுதுணையா-வுரைத்தறத்தாற்றின்..... ..... *
பயிர்ப்பில்பயனெடு-பலவிதிவிலக்குக..... ..... *
ளனைத்தையுந்தெரிக்குமா-றகத்தாடின்னிக்..... ..... *
கனைத்தெழுகொண்மூ-கவிப்பச்சிறந்தாங்..... ..... *
கெப்பெருளிற்கு-மீதிடனெனச்..... .... *
செப்பிருங்குன்றச்-சீர்சாவிடத்தினர்... .... *
கண்ணுயிரன்மூதற்-கடவுளர்பராவுமோ..... .... *
ரொண்ணுயிரவ-ரொழுகிருடிகண்மூன்..... .... *
னைந்நாட்டினுமூய-மொழினலமொழியாத்... .... *
தென்னாட்டின்வயிற்-செங்கோலோச்சுமா... .... *
வேந்தன்மாறன்-வீறுநன்னிலித்... .... *
ரூந்தனித்தனியே-சாற்றியவெண்பா... .... *
வியலெண்ணுயிர-மிவையுலகதனி... .... *
னையனுறுமாறு-நவிற்றெழுப்பண்டை..... .... *
நூலடிமுறைமுன்ற-றுவலளவதனு ... . *
லெடியெனப்பெயர்-நாட்டினரவற்றுள்... .... *
வையையினேடெதிர்-வந்தநானூற்றி..... .... *
னேயமொழிக்கவீ-ரார்தொன்றியலாப்... .... *
பகுத்ததிகாரநாற்-பானெனவவற்றை .... *
வகுத்துப்பதுமனர்-வாய்மலர்ந்தருளுரை... .... *
மிகத்தெளிவுறுதன்-மேதையோர்க்கன்றி..... ..... *
யகத்துட்பற்றுத-லருமையதாகவி..... .... *

னைத்திறத்தோரு-மெளிதினுணர்தர... ... . *
வித்தலத்தோருரை-யியற்றித்தருகெனு... .... *
நாவலர்குழாங்க-ணல்குரவகற்றப்... ..... *
பூவுலகுநித்தப்-புகழ்தருமிருநிதி... .... *
பாரெழும்பொருளெலாம்-பரவுவெங்கானலி... .... *
னீரனக்கருத்தி-னிறுவியபண்பின... ... ... *
னில்லறமதனு-ளெய்தியுமெய்தா..... ..... *
நல்லுணர்வுள்ளுளே-நாட்டியதன்மைய..... ..... *
னுடல்பொருளாவி-யொருங்கறவிடுத்தக்..... *
கடவுடன்னிலைகைக்-கனியெனக்கண்டோன்... ..... *
தண்ணுற்றைச்சார்-தருகூடற்பதி..... .... *
அண்ணுத்தையெனுமெய்-யறிஞர்முவந்த... .... *
மருமான்வனப்புயர்-மாரனிப்புவிக்குப்... .... *
பெருமான்செல்வப்-பெருக்கமைந்துமைந்... .... *
தருசபாபதிமால்-சாற்றினுகத்..... ... . *
தெருண்மிகுபதுமனூர்-செய்தருளுரைகொளீஇச் ... ... *
சொன்னயந்தோன்றச்-சுருக்கியவ்விடத்தும் ... ... *
பன்னியவரும்பதப்-பகுப்பினெழுதித்தந்த..... ..... *
திருந்தகுமூருவினைத்-தெரித்திடுமாடியிற் .... *
கருத்தொடுபதப்பொருள்-காட்டிச்செய்தனம்... ... ... *
மூத்தமிழாளக்கரின்-முகந்துதாந்தவியலும்..... ... ... *
புத்தமுதெங்களும்-பொழிந்திடுவிண்முகி... .... *
லொருவாவார்வத்-துடனருண்ஞாநத்.. ... . *
தூருவாய்வந்தீண்-டுதித்தபன்னிருவ.. ... . *
ரளித்தபாசுரநா-லாயிரமுணர்ந்து..... ..... *
களித்திடுபுந்தன்-கவிஞர்சிரோமணி..... ..... *
யுரைநலஞ்செறிகலி-யுறுபொருட்டிறனெலாம் ... . *
வையறுதிதுரைசெய்வோன்-மதுரவாக்குடையோன் ... *
அவையகமலயம்வா-ழருந்தவமுமெனு... ... . *
நவையறுபுலமை-நடாத்துழுதறிவின .... *
னித்தலுநாரண-னீண்மலரடிதொழுஉஞ்..... ..... *
சுதீதனுதீதமவளந்-தன்னியபுதுவை... .. . . *
நன்னகர்வாழ்நயநப்ப ... ... *
னென்னுமியற்பெயரொய்துநாவலனே..... ... ... *

இஃது-பு-பொன்னுச்சாமிமுதலியார்சொல்லியது.

பாயிரம்.

உரைகூறுமிடத்து நான்குவகையாற்கூறப்படும்-அவையாவையெனின்- கருத்துரைத்தல்-கண்ணழித்தல் - பொழிப்புத்திரட்டல் -, அகலங்கூறலெனநான்குவகைப்படும். அவற்றுள்- கருத்துரைத்தலாவது-சொல்லப்படுஞ் செய்யுளின்கருத்தையுரைத்தல். கண்ணழித்தலாவது-பதப்பொருளுரைத்தல். பொழிப்புத்திரட்டலாவது-அச்செய்யுளிற்கூறப்படும்பொருளைத் தொகுத்தொருபிண்டமாகக்கூறல். அகலங்கூறலாவது - அச்செய்யுளின்பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவிடையுள்ளுறுதலையுய்த்தீரவிரித்துக்கூறல். அவற்றுள்-அறத்துப்பாலின்பொருட்பால்களின்செய்யுட்குக்கூறியகருத்துரையைக்கருத்துரைத்தலும்- அல்லது - பொழிப்புத்திரட்டலும் - காமத்துப்பாலின்செய்யுட்குக்கூறியகிளவிய கருத்துரைத்தலும்- மற்றவற்றைக்கண்ணழித்தலும் - பொழிப்புத்திரட்டலுமாகக்கொள்க. பதப்பிரிவிற்சிலபதங்கள் மைவிகுதிகள்ளிப்பிரித்தும்-சிலபதங்கள் அம்மைவிகுதிகள்ளி வழக்குப்பற்றிப்பிரித்தும்-சிலதனிமொழிதொடர்மொழிகளாகப்பிரித்தும்-பழைமை இலமையென்னும்பண்புச்சொற்களையவ்வழக்குநடைபற்றி-பழமை இளமையெனவும் - வடமொழியிற்சிலபதங்கள் பொதுநகரமின்றிச்சான்றோராட்சியிற்சிறப்புநகரமாகவும்- பெயர்ச்சொல்-வினைச்சொல - இடைச்சொல - உரிச்சொல்-திசைச்சொல் - வடசொல்லெனு மறுவகைச்சொற்களுள்- இடைச்சொற்களின் பொருளொருபரியாயமாகவும்-சிலசெய்யுட்களதுகருத்துரையின்கண்முன்னிலைமூதலாகவும்-சிலவற்றிற்குப்பாட்டினடையாகவும் - சிலசெய்யுட்களத்நுவயப்படிக்கும்-சிலவற்றிற்குச்செம்பொருணடையாகவும் - பதுமனாரருளிச்செய்தவுரைகொடென்புல்லறிவிற்குத்தோற்றியகாறும்பதப்பொருளுங் கருத்துமாக யானியற்றிய இந்நாலடியுரையில் வழுவியவழூஉக்களைக்கற்றோர் ஆராயப்புகின்மனத்சோற்றினுங்கறறோடுவர்போலும்.

அதிகாரக்கோவை.

அறவிய லிருவகைத் தாமவை
தம்மூட்-டுறவேழில்லறமி
ருமூன்றென்ப. - - *
அறவியலிருவகையாவன—
துறவறவியல்,
இல்லறவியல். - - - ஆ உ.

அவற்றுட்டுறவறவிய லேழதி
காரம். - - - - - *
அவையாவன—
செல்வநிலையாமை,
இளமைநிலையாமை,
யாக்கைநிலையாமை,
அறன்வலியுறுத்தல்,
தூய்தின்மை,
துறவு,
சினமின்மை. - - ஆ எ.

இல்லறவியலாறதிகாரம். - *
அவையாவன—
பொறையுடைமை,
பிறர்மனைநயவாமை,
ஈகை,
பழவினை,
மெய்ம்மை,
நீவினையச்சம். - - ஆ கூ.

இப்பதின்மூன்றும் அறத்து
ப்பால். - - - - - - *
பொருளியல்வகையேழ்புலப்
படக்கிளப்பி-னரசியலேழ
திகாரமாகு - நட்பியனுன்
கேநண்ணுதலியின்ப - மூன்
றேதுன்பவியலதிகார - நான்
கேயொன்பீற பொதுவியல்
பகையியல் - கூறதிகாரநான்
கே பன்னெறி - கூறதிகார
மொன்றெனக்கிளப்பர். *

பொருளிய லெழு வகையாவ
ன. - - - - - *
அரசியல்,
நட்பியல்,
தலையின்பவியல்,
துன்பவியல்,
பொதுவியல்,
பகையியல்,
பன்னெறியியல். - - ஆ எ.

அவற்றுளரசியலேழதிகாரம்.
அவையாவன—
கல்வி,
குடிப்பிறப்பு,
மேன்மக்கள்,
பெரியாரைப்பிழையாமை,
நல்வினைஞ்சேர்தல்,
பெருமை,
தாளாண்மை. - - ஆ எ.

நட்பியனுன்கதிகாரம். - *
அவையாவன—
சுற்றந்தழால்,
நட்பாராய்தல்,
நட்பிற்பிழைபொறுத்தல்,
கூடாநட்பு. - - ஆ ச.

தலையின்ப வியன்மூன் றதிகா
ரம். - - - - *
அவையாவன—
அறிவுடைமை,
அறிவின்மை,
நன்றியில்செல்வம். - ஆ ஈ.

துன்பவியலுன்கதிகாரம் - *
அவையாவன —
ஈயாமை,
இன்மை,
மானம்,
இரவச்சம். - - ஆ சு.

பொதுவியலோரதிகாரம். *
அஃதாவது—
அவையறிதல்.
பகையியலுன்கதிகாரம் - *
அவையாவன —
புல்லறிவாண்மை,
பேதைமை,
கீழ்மை,
கயமை. - - - ஆ சு.

பன்னெறியோரதிகாரம் - *
அஃதாவது—
பன்னெறி.

இவ்விருபத்துநான்கும்பொ
ருட்பால். - - - *
கடையின்ப வகைதான்கருதி
னிருவகை - யின்பதுன்பவ
திகாரமொன்றே - யேனையி
ன்பவதிகாரமிரண்டே. *
கடையின்பவிய லிருவகையா
வன. - - - - *
இன்பதுன்பவியல்,
இன்பவியல். - - ஆ உ.

அவற்று ளின்பதுன்ப விய
லோரதிகாரம். - - *
அஃதாவது—
பொதுமகளிர்.
இன்பவியலிரண்டதிகாரம் *
அவையாவன—
கற்புடைமகளிர்,
காமநுதலியல். - ஆ உ.

இம்மூன்றுங்காமத்துப்பால்
ஆகச்சூத்திரம் - ஈ - இ
பால் - ஈ - இ
இயல் - ஐ ஈ - இ
அதிகாரம். - - (சுஎ)

இம்முறையாகப் பதுமனாரால் வகுக்கப்பட்டிருந்தாலும் இன்னுஞ்சில உரையாசிரியர் செல்வதிலியாமைமுதலாகத் தீவினையச்சமீறாகப்பதின்மூன்றதிகாரம் அறப்பகுதியாகவுங் கல்விமுதலாகக்கற்புடைமகளிர்ஈறாகவிருபத்தாறதிகாரம்பொருட்பகுதியாகவுங் காமநுதலியலோரதிகாரமாகவும் வகுக்கப்பட்டிருப்பதானும் - தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார் கற்புடைமகளினை அறத்துப்பாலினும் பொதுமகளினைப்பொருட்

அதிகாரவடைவு.

பாவினுள்சேர்க்கப்பட்டிருப்பதானும்-செய்ஞ்ஙக்கல்விச்சங்
கத்துத்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய தாண்டவராயமூத
லியாரவர்களைச்சிற்பதிப்பித்ததாலடிமூலத்தினுங்காமத்துப்பா
லொரதிகாரமாகவிருப்பதானும் - மற்றையிரண்டதிகாரங்கட்
கும் அகப்பொருட்கிளவியிலலாமையினுலும் - காமத்துப்பா
லொரதிகாரமென்றும் - மூன்றதிகாரமென்றும்வருக்கப்பட்
டது.

அதிகாரக்கோவைமூற்றிற்று.

அதிகாரவடைவு.

செல்வநிலையாமை-இளமைநிலையாமை-யாக்கைநிலையாமை
யென்னுமதிகாரவடைவுக்குமேலெலாம் அஃறிணையாதெனின் மூன்
புயாக்கைநிலையாமையையுணர்த்தி அதுநிலைன்றபின்பிளமை
நிலையாமையையுணர்த்திப்பின்பந்த விளமைப்பருவத்திலேமூ
யன்றுண்டானசெல்வநிலையாமையையுணர்த்துவேண்டாவா
வென்னின் யாக்கைக்குப்புருடாயுளுறுவயதென்றும் - இள
மைப்பருவமூப்பதிரண்டுவயதென்றும் ஒருநியமங்களுண்டி
இந்தச்செலவமித்தனைநாணிற்கு மென்றேருருதியில்லாமை
யாலிப்படியுறுதியில்லாத செல்வம் வந்தெய்தினபொழுதே
மறுமைக்குறுதியான அறங்களைச்செய்யவேண்டுமென்றற்கு
மூன்பு செல்வநிலையாமையைவைத்ததன்பின் பப்படிநிலையாத
செல்வத்தையநுபவித்தற்கிளமைப்பருவத்தை நிலையாகக்கரு
தியிராமன் மூப்பதிரண்டுவயதுக்குள்ளே துறந்ததலஞ்செ
ய்ய வேண்டுமென்றற்குப்பின்பு யாக்கை நிலையாமையினைச்
சொன்னுனென்பதாம் ஆதலானிலையாமையின்பின்புவினைவுசூ
றற்பொருட்டு மூன்றுவகுழுவாமற் செய்யவேண்டுமென்ற
தீகிளமைநிலையாமையினை அதிகாரவடைவுசெய்துயாக்கைக்கு
க்கற்பித்தவயது நூறென்றிதனை நிலையென்று கருதாமலறத்தி
னைநாடோறும் வழுவாமற்செய்யவேண்டுமெனச்செல்வநிலை
யாமையினைவைத்ததற்குப்பின்பு சிறிதுகாலநின்று பின்புநிலை
யாவான விளமைநிலையாமையினை வைத்ததற்குப்பின்பு மூதிய
ரான பருவத்தைக்குறித்து நிலையாவான யாக்கைநிலையாமை
யைவைத்ததன்பின்பேயப்பெறற்கரியயாக்கையினைப்பெற்ற

பொழுதே அறஞ்செய்தற்பொருட்டாக அறன்வலியுறுத்தலை வைத்ததன்பின்பாக அறத்தினை மறந்துவிடயங்களிலே மயங் காமல்விடயங்களேயல்லாமையையறிவித்தற்பொருட்டாக த்தூய்தன்மையவைத்ததன்பின்பாக அப்படித்தூய்தன்மை யினின்றுமயங்காமன் மறுமைக்குறுதியாகமனைவாழ்க்கையை த்திறந்துதவுஞ்செய்தற்பொருட்டாகத்திறவென்னுமதிகார த்தைவைத்ததன்பின்பிந்தத்திறவுக்குமறுதலையாகிய சினமு மாமலுயிர்கண்மேலன்புவைத்தற்பொருட்டாகச்சினமின்மை யைவைத்ததன்பின்பாக இப்படியொத்ததவத்துக்குமறுதலை யாகிய பசியைப்பொறுத்தலும் அறியாமையாலொருவர்தன் னையொருதீங்குசெய்தாலதனைப்பொறுக்கவேண்டுமென்ப தைகொண்டுபொறையுடைமையைவைத்ததன்பின்பாகஇல்ல றத்தினைநடத்துவதற்குப்பிறர்மனைநயவாமல்பெரும்பான்மை யாக இந்தப்பிறர்மனைநயவாமையையில்லறத்திற்குமூலதனகா ரமாகவைத்தார் இந்திரியங்கள்செய்யுமிகைகண்மீட்டித்தன்வ யத்திலொருப்படுத்திக்கொள்ளுதன்மூன்சொன்னபொறையு டைமையினும் பிறர்மனையாளைநயவாமையரிதாகலினதன்பின் பிந்தப்பிறர்மனை நயவாமையைவைத்திந்தத் தீயகுணமில்லா தவனுக்கல்லது கொடுத்தல்கூடாமையின் பிறர்மனைநயவா மையின்பின் னீகையென்னுமதிகாரத்தைச்சேர்த்து முற்பிறப் பிலொருவர்க் கொன்றைக்கொடாதவன் றுண்பமுற்றுப்பசிபி ணியானலியவிரந்து திரிவனென்னு மிதனையறிவித்தற் கீகைக் குப்பின்பாகப் பழவினையைவைத்திந்தப்பழவினையைத் நீரவு ணருமவனுலகத்தினடந்துபோது மொழுக்கத்தினைத் தப்பா னென்பதுகொண் டவ்வொழுக்கத்தி னுண்மையினை மெய்ம் மையென்று பழவினையின்பின்பே வைத்துலகத்தி னடந்து போதுந் தருமதானங்களைச்செய்யாமற்றீமையிலேபுரிந்தொ ழுகுமவர்க்கறிவித்தற்பொருட்டாக இப்பிறப்பிலேயுந்தன்ப முறுவர் முற்பிறப்பிற் றீங்குசெய்தவனென்னு மதுதோன்ற அதன்பின்பு தீவினையச்சத்தினைவைத் திப்படியறத்துப்பால் பதின்மூன்றதிகாரமாகச்சேர்த் தினிப்பொருட்பா லதிகாரவ டைவுசெய்தற்குக் கல்விமுதலாக வெடுத்துக்கொண்டார்பொ ருட்பாலுக்கரசர்க்குமற்றுமொழிந்தார்க்குங்கல்வியுண்டாலு லகத்திற்பிராணிகளிரட்சைப்படுதலானுந்தருமம்பரிபாவித் துவருதலானும் பொருட்பகுதிக்குக் கல்விபெரும் பான்மை யாதலிற் கல்விமுதல்வைத்திந்தக்கல்விக்குப்பின்பு குடிப்பிறப்

புவைத்தார்கல்விக்குத்தக்கதாகவொழுகுதல்குடிப்பிறந்தார்க்
குப்பெரும்பான்மையாதலின்குடிப்பிறப்புக்குப்பின்புமேன்
மக்கணூவைத்தப்படி மேன்மக்களைப் பிழைத்தவர்கட்கு மறு
மைக்குறுதியுமில்லையா யிப்பிறப்பினும்யாவரானு மிகழப்பட்
டந்தப்பிராணிமானமென்கின்றது மில்லையாய்விடுவராதலின்
மேன்மக்களைப்பிழைக்கலாகாதென்பது கொண்டதன்பின்பு
பெரியாரைப் பிழையாமையைவைத் திப்படிக்கொத்த முறை
மையினையுடையாரைச்சேர்ந்து மதிப்புண்டாக வேண்டுமென்
பதுதோன்றப்பின்பு நல்வினஞ்சேர்தலைவைத்தொருவர்தீயரா
யினு நல்வினஞ்சேரவேபெருமையுடையராவரென்பதுதோ
ன்ற அதன்பின்புபெருமையென்னுமதிகாரத்தைவைத்தந்தப்
பெருமையு முயற்சியுடையார்க்கல்லதில்லையென்பதுதோன்ற
ப்பெருமைக்குப்பின்பு தாளாண்மையைவைத்திப்படி முயன்
றுசெல்வதீதையுண்டாக்கினுர்க்கல்லது சுற்றமுண்டாகாதென்
பதுதோன்றத்தாளாண்மைக்குப்பின்புசுற்றந்தழாலைவைத்துச்
சுற்றந்தழுவியிருப்பாரொருவர் தமக்குச்சுற்றமாகத்தக்காரை
யாராய்ந்துட்கொள்ளவேண்டுமென்பதுதோன்ற அதன்பின்
புநட்பாராய்தலைவைத்தப்படியாராய்ந் துறவுகொண்டபின்ப
வன்செய்த பிழைகளைப்பொறுக்கவேண்டுமாதலினதன்பின்பு
நட்பிற்பிழைபொறுத்தலை வைத்ததன்பின்பு கூடாநட்பாகிய
முறைமையினையுடையவர்தமதுகாரியங்களுள்ளதுகுறைவறப்
பலிப்பித்துக்கொள்ளுமளவும்வேற்றுமைசிறிதும் புலப்படா
மற்கலப்புண்டாக அவர்மனங்கொள்ள வொழுகிப்பின்பு கால்
தாழ்ந்துவிடுவராதலினிவர்குணத்தினைப்பின்புகண்டவருடனரி
ஷ்டங்கொள்ளாமலிதுசிலர்க்கியலபென்றிருத்தனைப்பிற்பிழை
பொறுக்கும்பெரியோராற்கெடுவரிவரென்பதுகொண்டதன்
பின்பே கூடாநட்பைவைத்திப்படியொத்தாரையுதல்லவராக்
கித்தமதுசுபாபதன்மையுங் குன்றுமலிருத்தலறிவுடையோர்க்
கல்லது கூடாதென்பதுகொண்டறிவுடைமையை அதன்பின்
புவைத்தறியாமையால்வருங் குற்றம்விரித்துரைத்தாலல்லதறி
வுடைமை சாயாமனில்லாதென்பதுகொண்டு மூன்சொன்ன
அறிவுடைமையைப் பேணவேண்டியதன்பின்பே யறியாமை
யைவைத்திந்த வறிவில்லாதார்க்குளதாகியசெல்வம் பிறர்க்கு
ப்பயன்படாதென்பதுதோன்றவதன்பின்பேநன்றியில்செல்
வத்தைவைத்திந்தச்செல்வம் பிறர்க்குப்பயன்படாமையாலந்த
லில்வருங்குற்றந்தோன்றவேண்டியதன்பினீயாமையைவைத்

தொருவர்க் கொன்றினைக் கொடாமன் மறுமைக்குறுதியான அறங்களையுஞ்செய்யாமற்றூனுந்தன்னுடம்பினைச்செறுத்திருக்குமவனே மிடியனென்று நாடுதற்கியாமையின்பின்பேயின்மையைவைத்து வறுமையுற்றவிதற்கே மாறிக்கத்தக்க செய்கையுண்டாவதாதலா லப்படிவறுமையிலே துன்பமுறுமவன் மாறபங்கம் வந்தகாலத்து வறுமையினுங்கிடந்து நலங்காமற் றன்பிராணனைவிட்டு மாறத்தினைப்பரிகரிக்கின்றது வறியவனுக்கேபெரும் பான்மையாதலினதன்பின்பே மாறமென்னு மதிகாரத்தைவைத் தப்படியொத்த மாறத்தினைப்பரிகரியாமல்வறுமையாலே பிறர்பக்கற்சென்றிரந் துயிர்வாழ்வனென்று துணிவதுயினிடுவாருமிலாதுயாயிகழு மவரோயுள்ள துலகத்திலே துவிரப்பினையஞ்சவேண்டுமாறமுடையாரொருவர்க்காதலானிரவச்சத்தினை அதன்பின்பே வைத்தெல்லாக் கல்வியுமுடையராய்ப்பலசபையினுமிருந்துலகத்தினுள்ளாருடைய வியல்புகளையுமறியுமவரிரப்புக்குத்துணிந்து செல்லாரென்பதுதோன்ற அதன்பின்பவையறிதலைவைத்துச் சபையினுள்ளாரியல்புகளையறியாமலவைக்குள்ளே யொன்றினைச்சொல்லி யிகழப்படுவர் புல்லறிவாளராதலானவையறிவார்க்கிவை குற்றமாதலினவையறியுமவரிற்றக்குற்றந்தவிரவேண்டுமென்றற்கவையறிதலின்பின்பே புல்லறிவாண்மையினைவைத் திந்தப்புல்லறிவு சிலவறிந்துமறியாமையுமான தன்மையாதலிற் பேதைமைநேராயறியாமையாலேயாயிருக்குமாதலிற் புல்லறிவாண்மைக்குப்பின்புபேதைமையவைத்திந்தப் பேதைமையையறிவிலனென்னுமாத்திரையல்லது பிறர்செல்வங்கண்டது பொறுமையுமவரைப் புறஞ்சொல்லுதலு மவர்மனங்கொள்ளும்படி யவருடனேகூடி யுறவுபோலத்திரிந்தவர்க்குத் தாழ்வுசெய்தலானகீழ்மைக்குணம்பேதைமையினுமிகவுநீக்கப்படுமாதலினதன்பின்புகீழ்மையென்னு மதிகாரத்தை வைத்திந்தக் கீழ்மைபோலுமன்றித்தனக்கொருவர்பலநன்றிகளையுஞ்செய்துதாமுமவராலேயுரிகாரப்பட்டிருந்தாலு மவர்நெஞ்சறியாமற் றனக்குச்சிறிது குறையுண்டாயினவ்வளவுகொண்டே யவர்க்குக்கொலையினைச்செய்துந்தன்னை நெருங்கிவந்தாராயினவர்க்குப் பயன்படுமாசாரஞ்செய்துஞ் சிறிதுபொருட்பெறித்றன்னைப்பெரியாரெனருவருகமந்தித்து மவர்சிலரையுங்கண்ணேட்டமற அவரொதிர்நின்று குடிப்பழுதானவசனங்களைச்சொல்லியு மிப்படியொத்த குணங்களையுடையராதலின் முன்சொன்னகீழ்மையி

னுமிகவுந் தூஷிக்கப்படுவராதலினதன்பின் பிற்தக்கயமையி னைவைத்துப் பின்பதிகாரத்துக்கூறின பாட்டுகளையெடுத்துப் பன்னெறியென்றோரதிகாரத்தைவைத்ததன்பின்பாக இழிவா னகுணங்களையுடையபொதுமகளிலாவைத்துப்பின்புநின்றவி ரண்டதிகாரத்தையுஞ்சேர்த்திப்படியறத்துப்பால் பதின்மூன் றதிகாரமும் பொருட்பாலிருபத்து நாலதிகாரமுங்காமத்துப் பால் மூன்றதிகாரமுமாக நாற்பததிகாரமும் பதமலரடை வுசெய்தருளினுரிந்த அறம்பொருளின்பமூன்றும் வழுவாம னடத்தியிந்த நாற்பததிகாரத்தினுஞ் சொலலப்பட்டகுற்றங்க ளைத்தவிர்த்துகுணங்களை நூல்சொன்னபடியே தப்பாமலொ ழுகினவர்கள்வீடடைவரெனக்கொள்க.

அதிகாரவடைவுமுற்றிற்று.

வெண்பா.

எண்ணுயிரவரிசைத்தவெண்பாநானூறுங்..... ✻
கண்ணுமிந்நாலடியைக்கற்றுணரத்-தண்ணுர்... ... ... ✻
திருக்குருகூர்மாறனேயேதேர்ந்தமறைதேர்ந்த ... ... ✻
திருக்குருகூர்மாறனேயேதேர்..... ..... (க)

நானூறும்வேதமாநானூறுநானூறும் .... ✻
நானூறுங்கற்றற்குநற்றுணையாநானூறும் .... ✻
பண்டமாழியாள்பாகம்பகிர்ந்தசடைக்கரத்த..... ... .. ✻
கண்ணுதலான்பெற்றகளிறு..... .... (உ)

வெள்ளான்மரபுக்குவேதமெனச்சான்றோர்க..... ..... ✻
லெல்லாருங்கூடியெடுத்தாைத்த-சொல்லாய்ந்த... ..... ✻
நாலடிநானூறுநன்கினிதாவென்மனத்தே... .... ✻
சீலமுடனிற்கதெளிந்து..... .... (ங)

மன்னன்வழுதியர்கோன்வையைப்பேராற்றி... ... ... ✻
ணெண்ணியிருநான்கோடாயிரவர்-நண்ணி..... ... ... ✻
யெழுதிவிடுமேட்டுக்குளேடெதிரேயேறும்..... ✻
பழுதில்லாநாலடியைப்பார்..... ..... (ச)

நாலடியார்

உரைபாடம்

கடவுள் வாழ்த்து.

வானிடுவில்லின்வரவறியாவாய்மையாற் . . . . . *
கானிலந்தோயாக்கடவுளாயாநிலஞ் . . . . . *
சென்னியுறவணங்கிச்சேர்துமெம்முள்ளத்து . . . . . *
மூன்னியவைமுடிகவென்று . . . . . *

இதன்பதப்பொருள்.

வான்-மேகத்திலே. இடு - இடுகின்ற. வில்லின் - வில்லினது தோற்றம்போன்ற. வரவு - பிறப்பினியல்பை. அறியா - அறிந்து. வாய்மையால்-உண்மையால். கால்-பாதங்கள். நிலம்-பூமியிலே. தோயா-கலவாத. கடவுள் - சுவாமியை. யாம்-நாம். நிலம் - நிலத்திலே. சென்னி - சிரசு. உற-பொருந்த. வணங்கி-தொழுது. எம்-எம்முடைய. உள்ளத்து-மனத்தில். மூன்னியவை - நினைந்தன. முடிகவென்று - முடிவனவாகக்கருதி. சேர்தும்-அடைதும். என்றவாறு. யாம்-எழுவாய். சேர்தும்-பயனிலை. கடவுள்-செயப்படுபொருள். வாய்மை-தெருஞ்சும்வாக்குமுண்மையாதல். மனத்துநினைந்தன-பிறப்பறுகை முதலிய.

இதன்கருத்து.

வானிடுவில்லினது தோற்றம்போன்ற பிறப்பினியல்பையறிந்துவாய்மையாற்கானிலந்தோயாக்கடவுள் யாம்நிலத்திற்சென்னியுறவணங்கியெம்மனத்துநினைந்தனமுடிவனவாகக்கருதிச்சேர்துமென்பதாம்.

முதலாவது அறத்துப்பால்

அஃதாவது.

செய்யத்தக்கனவற்றைச்செய்தலுஞ்செய்யத்தகாதனவற்றைவிடுதலுமாகியதருமத்தின்பகுதியாம்.

முதல் அதிகாரம்.

செல்வநிலையாமை

செல்வம் - செல்வமானது. நிலையாமை - நில்லாதென்னுந்தன்மை. அஃதாவது செல்வங்கொண்டறஞ்செய்யவேண்டுமாகவிற்செல்வமொருபடியு நிலையாதாதலினிம்மைக்குப்புகழையுமறுமைக்குறுதியாகியதருமத்தையும் விரைந்துசெய்தற்பொருட்டுச்செல்வநிலையாமையையுணர்த்தப்பட்டது.

அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட.....*
மறுசிகைநீக்கியுண்டாரும்வறிஞராய்ச்.....*
சென்றிரப்போரிடத்துக்கூழெனிற்செல்வமொன்.*
றுண்டாகவைக்கற்பாற்றன்று.....*

இதன்பதப்பொருள்.

அறுசுவை - அறுசுவையாகிய. உண்டி-உண்ணவை. அமர்ந்து-விரும்பி. இல்லாள்-மனையாள். ஊட்ட-உண்பிக்க. மறு-வேறே. சிகை-சிகையை. நீக்கி-மாற்றி. உண்டாரும்-உண்டவரும். வறிஞராய்-தரித்திரராய். ஓரிடத்து - ஒருவிடத்தில். சென்று-போய். கூழ்-கூழை. இரப்பவொனில்-இரப்பராகில். செல்வமொன்று-செல்வமென்பதொன்று. உண்டாக-உளதாக. வைக்கல்-வைக்கும். பாற்று-பகுதியுடைத்து. அன்று - அல்ல. என்றவாறு. செல்வமொன்று - எழுவாய். உண்டாகவைக்கற்பாற்றன்று-பயனிலை. அறுசுவை-கார்த்தல், கூர்த்தல், கைத்தல், புளித்தல், துவர்த்தல். மறுசிகை-கறிசோறுமுற்சிகையைநீக்கிப்பிற்சிகையையுண்டல். சிகை-ஒருபிடிசோறு, அல்லதுகவளம்.

இதன்கருத்து.

அறுசுவையுண்டியைவிரும்பி மனையாளூட்டமறுசிகையைநீக்கியுண்டாரும் வறிஞராயோரிடத்துச்சென்றுகூழையிரப்பராயிற்செல்வமென்பதொன்றுநிலையுளதாகவைக்கற்பாற்றன்றென்பதாம்.....(க.)

துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப் . . *
பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க. . . . . *
வகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வஞ். . . . . *
சகடக்கால்போலவரும். . . . . *

இதன்பதப்பொருள்.

அகடுற-சாயாமல்நடுவுற. யார்மாட்டும்-யாவரிடத்தும். செல்வம்-ஐசுவரியம். நில்லாது-நிலையாது. சகடக்கால்போல-தேர்க்கால்போல. வரும்-கீழ்மேலாய்வருமாதலால். துகள்-குற்றம். தீர்-தீர்ந்த. பெருமை-பெரிய. செல்வம்-செல்வமானது. தோன்றியக்கால்-உண்டானகாலமே. தொட்டு-தொடங்கி. பகடு-ஏர். நடந்த-நடத்தி. கூழ்-உணவை. பல்லாரோடு-பலருடன். உண்க-நீவிர்கூடியுண்க. என்றவாறு. நீவிர்-தோன்ற வெழுவாய். உண்க-பயனிலை. கூழ்-செயப்படுபொருள். இதில் ஐயுருபுமறைந்துநின்றது. பகடுநடந்தகூழ்-நன்முயற்சியாகச்சொல்லப்பட்டவுழவுத்தொழிலால்வந்தசோறு.

இதன்கருத்து.

தடிவுறயாவர்மாட்டுஞ் செல்வநிலைபாது சகடக்கால்போலத்திரிந்துவருமாதலாற்குற்றந்தீர்ந்தபெருஞ்செல்வந்தோன்றியகாலமேதொடங்கியேர்நடந்தகூழினைப் பல்லாரோடுநீங்களுண்ணவேண்டுமென்பதாம். . . . . (உ.)

யானையெருத்தம்பொலியக்குடைநிழற்கீழ்ச். . . . . *
சேனைத்தலைவராய்ச்சென்றேரூருமேனை. . . . . *
வினையுலப்பவேறுகிவீழ்வர்தாங்கொண்ட. . . . . *
மனையாளைமாற்றூர்கொள. . . . . *

இதன்பதப்பொருள்.

யானை-யானையது. எருத்தம்-பிடரி. பொலிய-பொலிவுபெற. குடை-தவளசத்திரத்தின். நிழற்கீழ்-நிழலின்கீழே. சேனை-சேனையையுடைய. தலைவராய்-இறைவராய். சென்றேரூரும்-சென்றூருமெ. ஏனை வினை-நீவினை. உலப்ப-கெடுக்க. வேறுகி-வேறுபட்டு. தாம்-தாங்கள். கொண்ட-கொள்ளப்பட்ட. மனையாளை-மனைவியை. மாற்றூர்-பகைவர். கொள-கொள்ள. வீழ்வர்-கெடுவர். என்றவாறு. சென்றேர்-எழுவாய். வீழ்வர்-பயனிலை. உம்மை-சிறப்புவும்மை. பொலிவு-மங்கலம்.

செல்வநிலையாமை.

இதன்கருத்து.

யானையெருத்தம்பொலிவுபெறக்குடைநிழற்கீழ்ச்சே
னைத்தலைவராய்ச்சென்றுருந்தீவினையுலப்பவேலுபட்டுத்தாங்
கொண்டமனையாளோப்பகைவர்கொள்ளக்கெடுவதொன்
பதாம்.....(கூ.)

நின்றனநின்றனநில்லாவெனவுணர்ந்*.....*
தொன்றினவொன்றினவல்லேசெயிற்செய்க.....*
சென்றனசென்றனவாழ்நாள்செறுத்துடன்.....*
வந்ததுவந்ததுகூற்று.....*

இதன்பதப்பொருள்.

வாழ்நாள்-தாம்வாழுநாள்களும். சென்றனசென்றன-கழிந்
தனகழிந்தன. செறுத்து-அடர்த்து. உடன்-உடனே. கூற்று-
கூற்றும். வந்ததுவந்தது-வந்ததுவந்ததாதலால். நின்றனநி
ன்றன-நின்றனநின்றனவென்றுதாங்கருதப்பட்டபொருள்
கள். நில்லாவென-நிலையாவென. உணர்ந்து-அறிந்து. ஒன்
றினவொன்றின-பொருந்தியபொருந்தியவறங்களை. செயில்-
ஒருவர்செய்வராயில். வல்லேசெய்க-விரைந்துசெய்க. என்ற
வாறு.ஒருவர்-தோன்றுவெழுவாய். செய்க-பயனிலை. நின்ற
னநின்றனவென்றும்-ஒன்றினவொன்றினவென்றும். இரட்
டியமொழிகள்பொருட்பன்மையின்கண்வந்தன. சென்ற
னசென்றனவென்றும்வந்ததுவந்ததுஎன்றும் இரட்டியமொழி
கள்விரைவின்கண்வந்தன.

இதன்கருத்து.

வாழ்நாள்களுங்கழிந்தனஅடர்த்துடனேகூற்றும்வந்ததுஆத
லால்நின்றனவென்றுதாங்கருதப்பட்டபொருள்கள்நிலையா
வெனவுணர்ந்துபொருந்தியவறங்களையொருவர்செய்வராகி
ல்விரைந்துசெய்யவேண்டுமென்பதாம்.....(ச.)

எண்ணுமொன்றுதங்கையுறப்பெற்றக்காற்.....*
பின்னுவதென்னுபிடித்திராமுன்னே.....*
கொடுத்தாருயப்போவர்கோடிறீக்கூற்றந்.....*
தொடுத்தாறுசெல்லுஞ்சுரம்.....*

இதன்பதப்பொருள்.

என்னுணும்-யாதாகிலும். ஒன்று-ஒருபொருள். தம்-தமது. கை-கையிலே. உற-வர. பெற்றக்கால்-பெற்றபொழுது. பின்னுவதென்று-பிறர்க்கீதல்பின்னொருகாலத்தாவதென்று. பிடித்திரா-பிடித்திராதுமற்றதனை. முன்னே-முற்காலத்திலே. கொடுத்தார்-கொடுத்தவர். கோடு-தன்செய்கையிற்கோட்டம். இல்-இல்லாத. தீ-பொல்லாத. கூற்றம்-கூற்று. தொடுத்து-பாசத்தாற்கட்டிக்கொண்டு. செல்லும்-போம். சுரம்-காட்டினது. ஆறு-வழியை. உயப்போவர்-தப்பப்போவர். என்றவாறு. கொடுத்தார்-எழுவாய். உயப்போவர்-பயனிலை. ஆறு-செயப்படுபொருள். இதில்ஐயுருபுகுன்றிநின்றது.

இதன்கருத்து.

யாதானுமோர்பொருள்தங்கையுள்ளேயாகப்பெற்றுற்பிறர்க்கீதல்பின்னொருகாலத்தாவதென்றுபிடித்திராதுமற்றதனைமுன்னேகொடுத்தவர் தன்செய்கையிற்கோட்டமில்லாததீக்கூற்றம்பாசத்தாற்பிணித்துக்கொண்டுபோங் காட்டுவழியைத்தப்பப்போவரென்பதாம்.....(கு.)

இழைத்தநாளெல்லையிகவாபிழைத்தொரீஇக்.....*
கூற்றங்குதித்துய்ந்தாரீங்கிலையாற்றப்.....*
பெரும்பொருள்வைத்திர்வழங்குமினூஉத்.....*
தழீஇந்தழீஇந்தண்ணம்படும்.....*

இதன்பதப்பொருள்.

இழைத்த-தமக்குவரைந்த. நாள்-நாள்கள். எல்லை-தம்மளவை. இகவா-கடவா. கூற்றம்-கூற்றுவனை. பிழைத்து-தப்பி. ஒரீஇ-நீங்கி குதித்து-அவனெண்ணத்தைக்கடந்து. உய்ந்தார்-பிழைத்தார். ஈங்கு-இவ்வுலகத்து. இல்லை-இல்லை. நாளை-நாளை. தழீஇந்தழீஇம்-தழீஇந்தழீஇயென்னுமோசையுடனே. தண்ணம்-தண்ணுமை யென்கிறசாக்காட்டுப்பறை. படும்-சாற்றுமாதலால். ஆற்ற-மிகவும். பெரும்-பெரிய. பொருள்-பொருளை. வைத்தீர்-தேடிவைத்தவரே. வழங்குமின்-அப்பொருளைக்கொடுங்கள். என்றவாறு. நீவிர்-தேதான்றுவெழுவாய். வழங்குமின்-பயனிலை. பொருளை-செயப்படுபொருள். இதுதொக்குநின்றது.

இதன்கருத்து.

தமக்குவரைந்தநாள்கள்தப்மெல்லையைக்கடவாகூற்றுவனைத் தப்பியவனெண்ணத்தைக்கடந்துபிழைத்தவர்களில்வுலகத்தில்லை நானிலத்தழீஇத்தழீஇமென்னுமோனையுடனேசாக்காட்டுப்பறைசாற்றும் ஆதலாற் பொருளைத்தேடிவைத்தவரோ அப்பொருளைவழங்குமினென்பதாம்.....(கூ.)

தோற்றஞ்சான்ஞாயிறுநாழியாவைகலுங்.....*
கூற்றமளத்துநுந்நாளுண்ணுமாற்ற.....*
வறஞ்செய்தருளுடையீராகுமின்யாரும்.....*
பிறந்தும்பிறவாதாரில்.....*

இதன்பதப்பொருள்.

தோற்றம்-ஒளி. சால்-அமைந்த.ஞாயிறு-சூரியனே.நாழியா-அளவுநாழியாக.வைகலும்-நாள்தோறும்.கூற்றம்-கூற்றுவன். அளத்து-அளந்துகொண்டு. நும்-உம்முடைய நாள்-வாழ்நாட்களை. உண்ணும்-உண்ணுவனதலால். ஆற்றமிகவும். அறம்-தருமத்தை. செய்து-பணிந்.அருளுடையீராகுமின்-கிருபையுடையீராகுங்கள். யாரும்-யாவரும்.பிறந்தும்-மனிதப்பிறப்பிற்பிறந்தும்.அறஞ்செய்யாராகில். பிறவாதாரில் - பிறவாதவரிகளில்வைத்தெண்ணப்படுவர். என்றவாறு. நீவிர்-தோன்றுவெழுவாய். அருளுடையீராகுமின்-பயனிலை.

இதன்கருத்து.

தோற்றமமைந்தசூரியனேநாழியாக நாள்தோறுங்கூற்றுவனளந்தும்முடையவாழ்நாட்களையுண்ணுவனதலான் மிகவுந்தருமத்தைச்செய்தருளுடையீராகுமின்யாரு மக்கட்பிறப்பிற்பிறந்துதருமஞ்செய்யாராகிற்பிறவாதாரில்வைத்தெண்ணப்படுவரென்பதாம்.....(எ.)

செல்வர்யாமென்றுதாஞ்செல்வழியெண்ணுத.....*
புல்லறிவாளர்பெருஞ்செல்வமெல்லித்.....*
கருங்கொண்மூவாய்திறந்தமின்னுப்போற்றோன்றி..*
மருங்கறக்கெட்டுவிடும்.....*

இதன்பதப்பொருள்.

செல்வர்யாமென்று-யாஞ்செல்வமுடையோமென்று. தாம்-தாங்கள். செல்வுழி-செல்லுமிடத்தை. எண்ணுத-கருதாத. புல்-புல்லிய. அறிவாளர்-அறிவினையுடையார். பெரும்-பெரிய. செல்வம்-ஐசுவரியம். எல்லில்-இராக்காலத்தில். கரும்-கரிய. கொண்மூ-மேகம். வாய்-வாய். திறந்த-விடப்பட்ட. மின்னுப்போல்-மின்னலைப்போல. தோன்றி-உண்டாகி. மருங்கு-வழி. அற-அற. கெட்டுவிடும்-கெட்டுப்போம். என்றவாறு. செல்வம்-எழுவாய். கெட்டுவிடும்-பயனிலை.

இதன்கருத்து.

யாஞ்செல்வமுடையோமென்றுகருதித்தாஞ்செல்லுமிடத்தையாராயாதபுல்லறிவினையுடையார்பெருஞ்செல்வம்இரவின்கண்கருமுகில்வாய்திறந்தமின்னுப்போலத்தோன்றிவழியறக்கெட்டுவிடுமென்பதாம்.....(அ.)

உண்ணுநெனிநிருணேங்குபுகழ்செய்யான்.....*
துன்னருங்கேளிர்துயர்கூயான்கொன்னே.....*
வழங்கான்பொருள்காத்திருப்பானேல்அஆ.....*
விழுந்தானென்றெண்ணப்படும்.....*

இதன்பதப்பொருள்.

உண்ணுன்-தானுண்ணுதும். ஒளி-ஒளியை. நிருன்-நிறுத்தாதும். ஓங்கு-மிக்க. புகழ்-புகழை. செய்யான-தேடாதும். துன்-பெறுதற்கு. அரும்-அரிய. கேளிர்-சுற்றத்தாருடைய. துயர்-துன்பத்தை. கூயான்-நீக்காதும். வழங்கான்-ஒருவற்கொன்றைக்கொடாதும். கொன்னே-பயனின்றியே. பொருள்-பொருளை. காத்து-காத்துக்கொண்டு. இருப்பானேல்-இருப்பானுகில். அஆ-ஐயோ. விழுந்தானென்று-இவனிப்பொருளையிழந்தனனென்று. எண்ணப்படும்-யாவராலுங்கருதப்படுவன். என்றவாறு. இவன்-தோன்றுவெழுவாய். விழுந்தானென்றெண்ணப்படும்-பயனிலை. பொருளை-செயப்படுபொருள் இதுதொக்குநின்றது. ஒளிநிருனென்பதற்கு-ஆடையணிமுதலியவற்றுலலங்கரியாவெனப்பொருள்கொள்க. புகழென்பது-தானிறந்தகாலத்துமுளதாமுளை. அஆவென்றது-அருளின்கட்குறிப்பு.

செல்வநிலையாமை.

இதன்கருத்து.

தானுண்ணுதுமொளியைநிறுத்தாதுமிக்கபுகழைத்தேடாதும்பெறற்கரியகேளிர்தன்பங்களைநீக்காதுமொருவற்கொன்றைக்கொடாதும்பயனின்றியேபொருளைக்காத்திருப்பானுகிலையோவிவனிப்பொருளையிழந்தனனென்றுகருதப்படுமென்பதாம்.....(கூ.)

உடாஅதுமுண்ணுதுந்தம்முடம்புசெற்றுங்.....*
கெடாஅதநல்லறமுஞ்செய்யார்கொடாஅது.....*
வைத்தீட்டினரிழப்பர்வான்றோய்மலைநாட.....*
வுய்த்திட்டுந்தேனீக்கரி.....*

இதன்பதப்பொருள்.

உடாதும்-உடாதேயும். உண்ணுதும்-உண்ணுதேயும். தம்-இப்படித்தம்முடைய. உடம்பு-உடம்பை. செற்றும்-ஒடுக்கியும். கெடாத-அழியாத. நல்-நல்ல. அறமும்-தருமங்களையும். செய்யார்-செய்யாதேயும். கொடாது-ஒருவற்கொன்றைக்கொடாதேயும். வைத்தீட்டினர்-பொருளைத்தேடிவைத்தவர்கள். இழப்பர்-அப்பொருளையிழந்துவிடுவர். வான்-ஆகாயத்தை. தோய்-தோயும். மலை-மலைகளையுடைய. நாட-நாட்டையுடையவனே. தேன்-பூவின்மதுவை. உய்த்து-முயன்று. ஈட்டும்-கொண்டுவந்துவைத்திழந்துவிடுகிற. ஈ-ஈயன். றோ. கரி-சான்று. என்றவாறு. ஈட்டினர்-எழுவாய். இழப்பர்-பயனிலை. பொருளை-செயப்படுபொருள் இதுதொக்குநின்றது.

இதன்கருத்து.

உடாதுமுண்ணுதுந்தம்முடம்பைச்செற்றுங் கெடாதநல்லறங்களையுஞ் செய்யாது ஒருவற்கொன்றைக்கொடாதுபொருளைத்தேடிவைத்தவரப்பொருளையிழப்பர்வானைத்தோயுமலைநாடனே பூவின்மதுவைமுயன்றுகொண்டுவந்துவைத்திழந்துவிடுகிறஈயன்றோசான்றென்பதாம்.....(ஙி.)

செல்வநிலையாமைமுற்றிற்று.

இளமை நிலையாமை.

இளமை - இளமைப்பருவம். நிலையாமை - நில்லாதென்னுந் தன்மை. அஃதாவது. பதினாறுவயதுக்குமேல்மூப்பத்திரண்டு வயதுக்குள்ளேவிடயங்களிலே மயங்கப்பட்ட காமக்குழவிப் பருவம்இப்பருவத்திலேதுறத்தல்பலனுண்டென்பதுதோன்ற இளமைநிலையாமையையுணர்த்தப்பட்டது.

நாவருமென்றெண்ணிநல்லறிவாளர்.....*
குழவியிடத்தேதுறந்தார்புனைதீரா.....*
மன்னுவிளமைமகிழ்ந்தாரேகோலூன்றி.....*
யின்னுங்கெழுந்திருப்பார்.....*

இதன்பதப்பொருள்.

நா-மூப்பான து. வருமென்று-வருமென்று. எண்ணி-கருதி. நல்-நல்ல. அறிவாளர்-அறிவினையுடையார். குழவியிடத்தே-காமக்குழவிப்பருவத்தே. துறந்தார்-இல்வாழ்க்கையை விட்டார். புனை-குற்றம். தீரா-திராத. மன்னு-நிலையாத. இளமை-இளமைப்பருவத்தை. மகிழ்ந்தார்-விரும்பினர். கோல்-தடியை. ஊன்றி-ஊன்றிக்கொண்டு. இன்னுங்கு-வருத்தத்துடனே. எழுந்திருப்பார்-எழுந்திருப்பர். என்றவாறு. அறிவாளர்-எழுவாய். துறந்தார்-பயனிலை. மகிழ்ந்தார்-எழுவாய் எழுந்திருப்பார்-பயனிலை. காமக்குழவிப்பருவம்-இளமைப் பருவம். ஏகாரம்-அசை.

இதன்கருத்து.

மூப்புவருமென்றெண்ணி நல்லறிவாளர் காமக்குழவிப்பருவத்திலே யில்வாழ்க்கையைத்துறந்தார் குற்றநீங்காத நிலையாத இளமைப்பருவத்தைவிரும்பினர்தடியையூன்றிவருத்தத்துடனேயெழுந்திருப்பரென்பதாம்.....(க.)

நட்புநாரற்றனநல்லாருமகிழ்கிலை.....*
ரற்புத்தளையுமவிழ்த்தனவுட்காணாய்.....*
வாழ்தலினிதியமென்னுண்டாம்வந்தசே.....*
யாழ்கலத்தன்னகலி.....*

இளமைநிலையாமை.

இதன்பதப்பொருள்.

நட்பு-உறவாகிய. நார்-பாசங்களும். அற்றன-அறுந்தன. நல்லாரும்-தன்மேற்காதலையுடையமகளிரும். அகன்கிழர்-அன்புகுறைந்தார். அற்பு-அன்பாகிய. தளையும்-கட்டுகளும். அவிழ்ந்தன-நெகிழ்ந்தன; உள்-உள்ளே. காணுய்-பாராய். ஆழ்-ஆழும். கலத்தன்ன-மரக்கலத்திலெலிபோல. கலி-சுற்றத்தாரழுகைக்குரலும். வந்தகே-வந்ததல்லோ ஆதலால். வாழ்தலின்-மனையின்கண்வாழ்தலில். ஊதியம்-பயன். என்-யாது. உண்டாம்-உள்தாம். என்றவாறு. ஊதியம்-எழுவாய். என்னுண்டாம்-பயனில. அற்பு-செய்யுள்விகாரம். அற்புநீத்தளையுமவிழ்ந்தன என்பவற்றிற்கு அன்பாகிய பிணிப்பென்னுந் தன்புதல்வர்முதலாயினேருங்கைநெகிழ்ந்தார்களெனப் பொருள்கொள்க. கலுழென்றுபாடமோதி-அழுகையென்றுபொருளுரைப் பாருமுளர்.

இதன்கருத்து.

உறவாகியபாசங்களும் அற்றனமகளிரும் அன்புகுறைந்தார் அன்பாகியதளைகளும்நெகிழ்ந்தன ஆராய்ந்துபாராய்ஆழுமரக்கலத்திலெலிபோலச்சுற்றத்தார் அழுகைக்குரலும்வந்ததன்றே ஆதலால்மனைவாழ்க்கையிற்பயனென்னுண்டாகுமென்பதாம்.....(உ.)

சொற்றளர்ந்துகோனூன்றிச்சோர்ந்தநடையினராய்ப்....*
பற்கழன்றுபண்டம்பழிகாறுமிற்செறிந்து.....*
காமநெறிபடருங்கண்ணிரைக்கில்லையே.....*
யேமநெறிபடருமாறு.....*

இதன்பதப்பொருள்.

கொல்-சொல்லும். தளர்ந்து-தளர்வுற்று. கோல்-கோலும். ஊன்றி-ஊன்றிக்கொண்டு. சோர்ந்த-தள்ளாடிய. நடையினராய்-நடையுமுடையராய். பல்-பல்லும். கழன்று-விழுந்து. பண்டம்-உடம்பென்னும்பண்டம். பழிகாறும்-இப்பெற்றியாற்பிறராற்பழிக்கப்படுமளவும். இல்-மனையின்கண்ணே. செறிந்து-நெருங்கி. காமம்-ஆசை. நெறி-வழியே. படரும்-ஓழுகும். கண்ணிரைக்கு-அறிவினையுடையார்க்கு. ஏமம்-தமக்கரணிய. நெறி-நன்னெறிக்கணின்று. படரும்-ஓழுகும். ஆறு-

வழி. இல்லை-இல்லை. என்றவாறு. ஆறு-எழுவாய். இல்லை-பயனிலை. ஏகாரம்-அசை. சோர்ந்தநடையென்பதனைத் தளர்ந்த செல்வமென்பாருமுளர்.

இதன்கருத்து.

சொல்லுந்தளர்ந்துகோலுமூன்றித் தள்ளாடியநடையுமுடையராய்ப்பல்லுமிழந்துஉடம்பென்னும்பண்டம்இப்பெற்றியாற்பிறராற்பழிக்கப்படுமளவும் மனையின்கண்ணேசெறிந்து ஆசைவழியேயொழுகும் அறிவினையுடையார்க்கு அரணுகியநன்னெறிக்கண்ணின்றுழுகும்வழியில்லையென்பதாம். (๓.)

தாழாதிளராத்தலைநடுங்காத்தண்டூன்று.....*
வீழாவிறக்குமிவண்மாட்டுங்காழில்லா.....*
மம்மரீகொண்மாந்தர்க்கணங்காகுந்தன்கைக்கோ...*
லம்மனைக்கோலாகியஞான்று.....*

இதன்பதப்பொருள்.

தாழா-தாழ்ந்து. தளரா-தளர்ந்து. தலை-தலையை. நடுக்கா-நடுக்கி. தண்டு-தண்டினை. ஊன்று-ஊன்றி. வீழா-வீழ்ந்து. இறக்கும்-கழிகின்ற. இவண்மாட்டும்-இவ்விடத்தும். காழ்-திண்மை. இல்லா-இல்லாத. மம்மர்-மயக்கம். கொள்-கொண்ட. மாந்தர்க்கு-மனிதர்க்கு. தன்கை-இவள்தன்கையிலிருக்கும். கோல்-கோலானது. அம்மனை-இவள்தாய்கையிலிருக்கும். கோலாகிய-ஊன்றுகோலாகிய. ஞான்று-நாளில். அணங்கு-வருத்தம். ஆகும்-உண்டாகும். என்றவாறு. அணங்கு-எழுவாய். ஆகும்-பயனிலை. விறக்குமென்றுபாடமோதி வெருவுமென்றுபொருளுரைப்பாருமுளர்.

இதன்கருத்து.

தாழ்ந்துதளர்ந்துதலையைநடுக்கித்தண்டினைஊன்றிவீழ்ந்திறக்குமிவள்மாட்டும்உறுதியில்லாதமையக்கங்கொண்டமாந்தர்க்கு இவள்தன்கையிற்பிடித்ததடி இவள்தாய்கையிற் பிடித்திருக்கிறதாளில்வருத்தமுண்டாகுமென்பதாம்.....(๔.)

எனக்குத்தாயாகியாளென்னையீங்கிட்டுத்.....*
தனக்குத்தாய்நாடியேசென்றுடனக்குத்தா.....*
யாகியவளுமதுவாறூற்றுய்த்தாய்க்கொண்.....*
டேகுமளித்திவ்வுலகு.....*

இதன்பதப்பொருள்.

எனக்கு-எனக்கு. தாயாகியாள்-தாயானவளும். என்னை-என்னை. ஈங்கு-இவ்விடத்திலே. இட்டு-பெற்றுவைத்து. தனக்கு-தனக்கொரு. தாய்-தாயை. நாடி-தேடி. சென்றாள்-இறந்தாள். தனக்கு-அவள்தனக்கு. தாயாகியவளும்-தாயானவளும். அதுவானால்-அப்பெற்றியளாயினால். தாய்த்தாய்க்கொண்டு-தாயைத்தாயைநாடிக்கொண்டு. ஏகும்-போகாநின்ற. இவ்வுலகு-இவ்வுலகம். அளித்து-ஏழுமையுடைத்து. என்றவாறு. உலகு-எழுவாய். அளித்து-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

எனக்குத்தாயானவளும்என்னையீங்கிட்டுத்தனக்கொருதாயை நாடியிறந்துபோயினாள்அவள்தனக்குத்தாயானவளும் அப்பெற்றியளாயினால்தாயைத்தாயைநாடிக்கொண்டுபோகாநின்றஇவ்வுலகம்ஏழுமையுடைத்தென்பதாம்.....(ஙி.)

வெறியயர்வெங்களத்துவேன்மகன்பாணி.....*
முறியார்நறுங்கண்ணிமுன்னர்த்தயங்க.....*
மறிகுளகுண்டன்னமன்னுமகிழ்ச்சி.....*
யறிவுடையாளர்கணில்.....*

இதன்பதப்பொருள்.

வெறி-வெறித்தொழிலை. அயர்-செய்கின்ற. வெம்-வெய்ய. களத்து-கொலைக்களத்து. வேன்மகன்-வெறியாட்டாளன். பாணி-கையில். முறி-தளிர். ஆர்-நிறைந்த. நறும்-நறுவிய. கண்ணி-மாலை. முன்னர்-தன்முன்னே. தயங்க-அசைந்து தோன்றஅதனை. மறி-ஆடு. குளகு-உணவாக. உண்டன்ன-உண்டாற்போலும். மன்னு-நிலையாத. மகிழ்ச்சி-இளமையால் வருங்களிப்பு. அறிவுடையாளர்கண்-அறிவுடையாளரிடத்தில். இல்-இல்லை. என்றவாறு. மகிழ்ச்சி-எழுவாய். இல்-பயனிலை. வெங்களம்-தெய்வத்தொழிலைச்செய்யப்பட்டகொலைக்களம். வெறியாட்டாளன்-பூசாரி. குளகு-இலையுணும்விலங்குணவு. மன்னுமகிழ்ச்சி-நிலையில்லாதவுடம்பிலேநுகருநுகர்ச்சி.

இதன்கருத்து.

வெறித்தொழிலைச்செய்கின்றகொலைக்களத்துவேன்மகன்கையின்கட்டளிரார்ந்தநறுங்கண்ணிதன்முன்னரசைந்துதோன்ற

அதனை ஆடுதன்னைக்கொல்லவிட்டதென்றறியாதுகுளகாக உண்டாற்போலும்நிலையில்லாதமகிழ்ச்சி அறிவுடையார்மாட்டில்லையென்பதாம்.....(சு.)

பனிபடுசோலைப்பயன்மரமெல்லாங்.....*
கனியுதிர்ந்துவீழ்ந்தற்றிளமைதனிபெரிதும்.....*
வேற்கண்ணெனென்றிவளைவெஃகன்மின்மற்றிவளுங்..*
கோற்கண்ணளாகுங்குனித்து.....*

இதன்பதப்பொருள்.

பனி-குளிர்ச்சி. படு-உண்டாகிய. சோலை-சோலையில். பயன்-பலனைக்கொடுக்கிற. மரமெல்லாம்-மரங்களெல்லாம். கனி-பழம். உதிர்ந்து-உதிர்ந்து. வீழ்ந்தற்று-கழிந்தாற்போலும். இளமை-இளமைப்பருவமாதலால். தனி-மிக. பெரிதும்-பெரிதாயிருக்கிற. வேல்-வேலொத்த. கண்ணெனென்று-கண்ணினையுடையெனென்று. இவளை-இக்காலத்திற்றப்பெண்ணை. வெஃகன்மின்-விரும்பாதிருங்கள். மற்றிவளும்-பின்பிற்றப்பெண்ணும். குனித்து-மூதுகுகூனி. கோல்-கோலாகிய. கண்ணளாகும்-கண்ணினையுடையளாவள். என்றவாறு. நீவிர்-தோன்றுவாய். வெஃகன்மின்-பயனிலை. இவளை-செயப்படுபொருள். கோற்கண்-கோலேகண்ணுதல்.

இதன்கருத்து.

குளிர்படுசோலையிற்பயனைக்கொடுக்கிற் மரங்கள்தோறும்பழமுதிர்ந்துகழிந்தாற்போலும்இளமையாதலால் இக்காலத்துமிகப்பெரிதும் வேலொத்தகண்ணெனென்றிவளைவிரும்பாதிருங்கள் பின்பிவளுமூதுகுகூனிகோலாகியகண்ணினையுடையளாவளென்பதாம்.....(எ.)

பருவமெனைத்துளபல்லின்பாலேனை.....*
யிருசிகையுமுண்டோவென்றுவரிசையா.....*
ணுணுட்டங்கொள்ளப்படுதலால்யாக்கைக்கோ.....*
ளெண்ணுரறிவுடையார்.....*

இதன்பதப்பொருள்.

பருவம்-ஆண்டு. எனைத்து-எத்தனை. உள்-உள்ளன. பல்லின்-பற்களின். பால்-பகுதி. ஏனை-எத்தனைய. இருசிகையும்-

இளமைநிலையாமை.

ஒருசிகையேயன்றியிருசிகைச்சோறும். உண்டோவென்று-புகித்தீரோவென்றுகேட்டு. வரிசையால்-முறைமையால். உள்-உமதுள்ளத்தை. நாட்டம்-பிறர்பலராராய்ச்சி. கொள்ளப்படுதலால்-செய்யப்படுதலால். யாக்கை-சரீரத்தினது. கோள்-கோட்பாட்டை. அறிவுடையார்-அறிவினையுடையார். எண்ணூர்-ஒன்றுகக்கருதார். என்றவாறு. அறிவுடையார் - எழுவாய். எண்ணூர்-பயனிலை. கோள் - செயப்படுபொருள் இதில் ஐயுருபுகுன்றிநின்றது. இருசிகை - இரண்டுபோதுணவு.

இதன்கருத்து.

ஆண்டெத்தனையுளபற்களின்பகுதியெத்துணைய ஒருசிகையேயன்றியிருசிகைச்சோறுமுண்டோவென்றுகேட்டுமுறைமையால்யாக்கைதான் உள்ளாராய்ச்சிகொள்ளப்படுதலால்யாக்கைக்கோளினை அறிவுடையார்ஒன்றுகக்கருதாரென்பதாம்.....(அ.)

மற்றறிவாநல்வினையாமினையமென்னுது.....*
கைத்துண்டாம்போழ்தேகரவாதறஞ்செய்ம்மின்....*
மூற்றியிருந்தகணியொழியத்தீவளியா.....*
னற்காயுதிர்தலுமுண்டு.....*

இதன்பதப்பொருள்.

மூற்றி - மூதிர்ந்து. இருந்த - இருக்கின்ற. கனி - பழம். ஒழிய-தவிர. தீவளியால் - தீக்காற்றினால். தல்-தல்ல. காய் - காய்கள். உதிர்தலும்-உதிர்ந்துபோதலும். உண்டு-உண்டாதலால். நல்வினை-நல்வினையை. மற்று-பின்பு. அறிவாம்-அறிந்துசெய்வோம். யாம்-நாம். இளையம் - இப்போதிளமைப்பருவத்தையுடையம். என்னுது-என்றுகருதாது. கைத்து-பொருள். உண்டாம்-உண்டாயிருக்கும். போழ்தே - காலத்திலே. கரவாது-வஞ்சியாமல். அறம்-தருமத்தை. செய்ம்மின்-செய்யுங்கள். என்றவாறு. நீவிர்-தோன்றுவாய். செய்ம்மின்-பயனிலை. அறம்-செயப்படுபொருள். இதில் ஐயுருபுகுறைந்துநின்றது.

இதன்கருத்து.

மூதிர்ந்திருந்தபழமொழியத்தீக்காற்றினால் நல்லகாய்கள் வீந்தலுமுண்டு ஆதலால்நல்வினையைப்பின்னேச்செய்வாம் நாமி

ப்போதிஸேயமென்றுகருதாதுலகிலோநீங்கள்பொருளுண்டானகாலத்திலே வஞ்சியாமல் அறத்தைச் செய்யுங்களென்பதாம்..... (கூ.)

ஆட்பார்த்துழலுமருளில்கூற்றுண்மையாற்.....*
ரோட்கோப்புக்காலத்தாற்கொண்டுய்ம்மின்பீட்பிதுக்கிப்*
பிள்ளையைத்தாயலறக்கோடலான்மற்றதன்.....*
கள்ளங்கடைப்பிடித்தனன்று.....*

இதன்பதப்பொருள்.

ஆள் - தான்கொண்டுபோம்ஆளை. பார்த்து - காலம்பார்த்து. உழலும்-திரியும். அருள்-கிருபை. இல்-இல்லாத. கூற்று-கூற்றுனது. உண்மையால் - உள்ளதாதலால். தோட்கோப்பு-தோட்கோப்பாகிய அறங்களை. காலத்தாற்கொண்டு-இளமைப்பருவத்திலேதேடிக்கொண்டு. உய்ம்மின் - பிழைத்துப்போங்கள். பிள்-மூற்றுக்கருவினை. பிதுக்கி-பிதுங்கச்செய்து. தாய்-தாயானவள். அலற-அழ. பிள்ளையை-குழந்தையை. கோடலால்- கொண்டுபோதலால். மற்றதன் - மற்றத்தக்கூற்றினது. கள்ளம்-வஞ்சத்தை. கடைப்பிடித்தல் - மறவாதொழுகல். நன்று - நன்மை. என்றவாறு. கடைப்பிடித்தல்-எழுவாய். நன்று-பயனிலை. தோட்கோப்பு - கட்டுச்சோறு. பொதிசோறுமுடிந்தமுடிச்சுநடக்குந்தோறுந்தோளின்கண்ணேசூழ்தலாற்றோட்கோப்பென்றார்.

இதன்கருத்து.

தான்கொண்டுபோம்ஆளைப்பார்த்துத்திரியும்அருளில்லாதகூற்றுளதாதலால்தோட்கோப்பாகியதருமங்களை யிளமைப்பருவத்திலேதேடிக்கொண்டுபிழைத்துப்போங்கள் மூற்றுக்கருவினைப்பிதுக்கித் தாயழப்பிள்ளையைக் கொண்டுபோதலால் மற்றந்தக்கூற்றினது வஞ்சத்தைமறவாதொழுகல் தன்றென்பதாம்..... (ஐ.)

இளமைநிலையாமைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-உஇ-வெண்பா. உஐ.

யாக்கைநிலையாமை.

யாக்கை-சரீரம். நிலையாமை - நில்லாதென்னுந்தன்மை. அஃதாவது. மகாமாயையென்பதொருசத்திகன்மவசத்துக்கீடாகப்பூவின்மணத்தைக்காற்றுகொடுவந் தறிவிக்குமாறுபோலக்கன்மங்களுக்கானவனுபோகக்கருத்தையவத்தாகாலத்திலேயுண்டாக்கிக்கருவிற்றுகவந்தஆன்மாவைச்சுக்கிலசுரோணிதங்களிலேகூட்டிக்கட்டிவிக்கையால்யாக்கையென்றுபெயராயிற்றுஇஃதிவ்விடத்திற்சொன்னதென்னெனில்இதற்குப்புருடாயுள்நூறென்றுகற்பித்துவைக்கையாலிதனைநம்பிமாக்களறத்தைத்தப்பின்புசெய்வோமென்றதனையுதாசனித்திளமைப்பருவவிடயங்களிலேபரத்துதிரிவராதலில்யாக்கையினதுநிலையாமையைஅவர்கட்குணர்த்திஅவர்களை அறஞ்செய்யும்படிபண்ணினது.

மலைமிசைத்தோன்றுமதியம்போல்யானைத்.....*
தலைமிசைக்கொண்டகுடையர்நிலமிசைத்.....*
துஞ்சிலொன்றெடுத்துத்தூற்றப்பட்டாரல்லா.....*
லெஞ்சிலிவ்வுலகத்தில்.....*

இதன்பதப்பொருள்.

மலைமிசை-மலைமேலே. தோன்றும்-உதிக்கும். மதியம்போல்-சந்திரனைப்போல. யானை-யானையினது. தலைமிசை - தலைமேலே. கொண்ட-பிடித்துக்கொண்ட. குடையர்-குடையையுடையஅரசரும். நிலமிசை-பூமியிலே. துஞ்சிலொன்று. இறந்தாரொன்று. எடுத்து-எடுத்துக்கொண்டு. தூற்ற - பலருந்தூற்ற. பட்டார்-உண்டாயிருந்தார். அல்லால்-அல்லாமல். எஞ்சிலிர்-ஒழிந்திருந்தார். இவ்வுலகத்து-இந்தவுலகத்திலே. இல்-இல்லை. என்றவாறு. எஞ்சிலிர்-எழுவாய். இல்-பயனிலை.

இதன்கருத்து.

மலைமேலேதோன்றுந்திங்களைப்போலக்களிற்றைனதுதலைமேற்கொண்டகுடையையுடையஅரசரும்நிலமிசைஇறந்தாரொன்றெடுத்துத்தூற்றப்பட்டாசல்லாற்சாவையொழிந்திருந்தார்இவ்வுலகத்திலில்லையென்பதாம்.....(க.)

வாழ்நாட்கலகாய்வயங்கொளிமண்டிலம்.....*
வீழ்நாள்படாஅதெழுதலால்வாழ்நா.....*
ஞலவாமூனெப்புரவாற்றுமின்யாரு.....*
நிலவார்நிலமிசைமேல்.....*

இதன்பதப்பொருள்.

வாழ்நாட்கு-வாழுநாள்கட்கு. அலகாய்-எண்ணுங்கருவியாய். வயங்கு-விளங்காநின்ற. ஒளி-ஒளியையுடைய. மண்டிலம்-சூரியன். வீழ்நாள்-வீழுநாள். படாது-படாமல். எழுதலால்-தோன்றுதலால். வாழ்நாள்-வாழ்நாள்கள். உலவாமுன்-கெடுதற்குமுன்னே. ஒப்புரவு-ஒப்புரவாகியவறங்களை. ஆற்றுமின்-செய்யுங்கள். யாரும்-யாவரும். நிலமிசைமேல்-நிலத்தின்கண். நிலவார்-நிலையார். என்றவாறு. நீவிர்-தோன்றுவீர். ஆற்றுமின்-பயனிலை. ஒப்புரவு-செயப்படுபொருள். இதில்ஐயுருபுகுன்றிநின்றது. மிசைமேலென்றது-மீமிசை. ஒப்புரவு-முறைமை.

இதன்கருத்து.

வாழ்நாள்கட்கெண்ணுங்கருவியாய் விளங்காநின்ற ஒளியையுடைய சூரியன் வீழ்நாள் படாமைத்தோன்றுதலால் உலகீரே உம்மூடைய வாழ்நாள்முடிதற்குமுன்னே நீங்கள் செய்யத்தகும் அறங்களைச்செய்யுங்கள்யாவருநிலத்தின்கணிலையாரென்பதாம்.....(உ.)

மன்றங்கறங்கமணப்பறையாயின.....*
வன்றவற்காங்கேபிணப்பறையாய்ப்பின்றை.....*
யொலித்தலுமுண்டாமென்றுய்த்துபோமாறே.....*
வலிக்குமாமாண்டார்மனம்.....*

இதன்பதப்பொருள்.

மன்றம்-சபைக்குள்ளே. கறங்க-ஒலிக்கத்தக்க. மணப்பறையாயின-மணக்கோலத்திற்காயினபறை. அன்று-அப்பொழுதே. அவற்கு-அவற்கே. ஆங்கே-அவ்விடத்தே. பிணப்பறையாய்-பிணக்கோலத்திற்குக்கொட்டும்பறையாய். பின்றை-பின்பு. ஒலித்தலும்-ஆரவாரித்தலும். உண்டாமென்று-உள்தாமென்றுகருதி. உய்த்துபோம்-பிழைத்துப்போகிற. ஆறு-வழியை.

வலிக்கும்-துணியாநிற்கும். மாண்டார்-மாட்சிமைப்பட்டார். மனம்-மனது. என்றவாறு.மனம்-எழுவாய். வலிக்கும்-பயனிலை. ஆறு - செயப்படுபொருள். இதில்ஐயுருபுசுன்றிநின்றது. உய்ந்துபோம்வழி - துறத்தல். ஆங்கேயென்றதில்தேற்றேகாரம். ஆறேயென்றதில்-அசைநிலையேகாரம். ஆம்-அசைச்சொல்.

இதன்கருத்து.

மன்றத்துள்ளே ஒலிக்குமணக்கோலத்திற் காயினபறை அன்றே அவற்கே அவ்விடத்தே பிணக்கோலத்திற்குப்பின்புபறையா யொலித்தலும் உள்தாமென்று கருதிப்பிறவித்தடுமாற்றத்தைநீக்கலானவழியைத் துணியாநிற்குமாட்சிமைப்பட்டார்மனமென்பதாம்.....(கூ.)

சென்றேயெறிபவொருகால்கிறுவரை.....*
நின்றேயெறிபபறையினநன்றேகாண்.....*
மூக்காலக்கொட்டினுண்மூடித்திக்கொண்டெழுவர்...*
செத்தாரைச்சாவார்சுமந்து.....*

இதன்பதப்பொருள்.

சென்று-போய். ஒருகால்-ஒருதரம். எறிப-பறையையறைவர். சிறுவரை-சிறிதுபொழுது. நின்று - தவிர்ந்துநின்று. பறையினை-இரண்டாந்தரம்பறையை. எறிப-அறைவர். மூக்காலை-மூன்றாந்தரம். கொட்டினுள் - கொட்டுமிடத்தில். மூடி-பிணத்தைமூடி. திக்கொண்டு-தீயையுங்கொண்டு. செத்தாரை-செத்தவரை. சாவார் - சாவக்கடவார். சுமந்து - சுமந்து. எழுவர்-போவராதலால். நன்று-இவ்வுலகியற்கைநன்றாயிருந்தது. என்றவாறு. உலகியற்கை-தோன்றாஎழுவாய். நன்று-பயனிலை. சென்றேநின்றேநன்றேகாண் - என்பவற்றிலிருக்கின்றஏகாரங்களும். காணும் - அசைநிலைகள். அறைபவென்றுபாடமோதுவாருமுளர்.

இதன்கருத்து.

சென்றுஒருதரம்பறையை அறைவர்சிறிதுபொழுதுதவிர்ந்துநின்று இரண்டாந்தரம்பறையைஎறிவர்மூன்றுங்கொட்டினுட்பிணத்தை மூடித்தீயையுங் கொண்டுசாவக்கடவார் செத்தாரைச்சுமந்தெழுவராதலால்இவ்வுலகியற்கை நன்றென்றிகழ்த்தவாறென்பதாம்.....(சு.)

கணங்கொண்டுசுற்றத்தார்கல்லென்றலறப்.....*
பிணங்கொண்டுகாட்டுய்ப்பார்க்கண்டுமணங்கொண்டூண்*
டுண்டுண்டுண்டென்னுமுணர்விறற்சாற்றுமே.....*
தொண்டொண்டொடென்னும்பறை.....*

இதன்பதப்பொருள்.

கணங்கொண்டு-கூட்டங்கொண்டு. சுற்றத்தார்-உறவின்முறை யார். கல்லென்று-கல்லென்னுமோசையுடைத்தாய். அலற-அ ழ. பிணம்-பிணத்தை. கொண்டு-சுமந்துகொண்டு. காடு-சுடு காட்டில். உய்ப்பார்-செலுத்துவாரை. கண்டும்-கண்டருந்தும். மணங்கொண்டு-கல்யாணம்பண்ணிக்கொண்டு. ஈண்டு-இவ்வி டத்தில். உண்டுண்டுண்டென்னும்-அம்மனைவாழ்க்கையின் கணுகர்ச்சிஉண்டென்றிருக்கும். உணர்விறன்-புல்லறிவுடை யாளுக்கு. தொண்டொண்டொடென்னும்-தொண்தொண் தொடுவென்னுமோசைபெறக்கொட்டும். பறை-சாக்காட்டுப் பறை. சாற்றும்-நிலையாமையைஅறிவிக்கும். என்றவாறு. ப றை-எழுவாய். சாற்றும்-பயனிலை. கல்-அணுகாரணவோசை. ஏகாரம். அசைநிலை. உண்டு. உண்டு-உண்டென்பன-அடுக்கு மொழிகள். தொண்-தொண். ஈறுகெட்டகொலிக்குறிப்பு. தொடு-ஒலிக்குறிப்பு.

இதன்கருத்து.

கூட்டங்கொண்டுற்றார்கல்லென்றலறப்பிணத்தைச்சுமந் துகொண்டுசுடுகாட்டுட்செலுத்துவாரைக்கண்டும்மணத்தினைவி ரும்பி அம்மனைவாழ்க்கையின்கண்ணுகர்ச்சி உண்டென்றிருக் கும் புல்லறிவுடையாற்குச்சாக்காட்டுப்பறையாக்கை நிலையா மையைஅறிவிக்குமென்பதாம்.....(கி.)

தார்த்தொடுத்தீர்க்கிலெனன்றுய்ந்தடக்கிலென்.....*
பார்த்தழிப்பெய்யிலென்பல்லோர்பழிக்கிலென்.....*
ஈற்றையுணின்றுதாழிலறச்செய்தூட்டுங்.....*
கூத்தன்புறப்பட்டக்கால்.....*

இதன்பதப்பொருள்

தோற்பையுள்-தோற்பையாகியஉடம்பினுள்ளே. நின்று-நி லைத்து. தொழிலற-செய்கையற. செய்து-பண்ணி. ஊட்டும்-

நுகர்விக்கும். கூத்தன்-கூத்தருகியஆத்துமநாயகன். புறப்பட்டக்கால் - புறப்பட்டுப்போனகாலத்திவ்வுடம்பை. தார்-தாரால். தொடுத்து-கட்டி. ஈர்க்கிலென் - இழுத்தாலென்னை. தன்று-தன்றுக. ஆய்ந்து - ஆராய்ந்து. அடக்கிலென் - அடக்கிலுலென்னை. பார்-பூமியை. தூழி - கிழித்து. பெய்யிலென்-பெய்தாலென்னை. பல்லோர் - பலரும். பழிக்கிலென் - பழித்தாலென்னை. என்றவாறு. ஒருவன் - தோன்றுவழுவாய். ஈர்க்கிலென் முதலிய - பயனிலைகள். உடம்பை - செயப்படுபொருள். இது தொக்கிநின்றது. பார்த்தூழியென்பதற்கு - கண்டிழியெனப் பொருள்கூறுவாருமுளர்.

இதன்கருத்து.

தோற்பையாகியஉடம்பினுள்ளேநின்றுசெய்யக்கடவதொழில்களை அறச்செய்துநுகர்விக்குங் கூத்தன்புறப்பட்டுப்போனகாலத்திவ்வுடம்பையாதுசெய்கிலென்னென்பதாம். . . (சு.)

படிமழைமொக்குளிற்பல்காலுந்தோன்றிக். . . . . *
கெடுமிதோர்யாக்கையென்றெண்ணித்தடுமாற்றந். . . .*
தீர்ப்பேம்யாமென்றுணருந்திண்ணறிவாளரை. . . . .*
தேர்ப்பார்யார்நீணிலத்தின்மேல். . . . . *

இதன்பதப்பொருள்.

படி-பெய்கிற. மழை-மழையின்கண். மொக்குளில்-தோன்றியழியுங்குமிழியேபோல. பல்காலம்-பலகாலமும். தோன்றி-உண்டாகி. கெடும்-அழியும். இது-இதை. ஓர்-ஒரு. யாக்கையென்று-உடம்பென்று. எண்ணி-கருதி. தடுமாற்றம் - பிறவித்தடுமாற்றத்தை. தீர்ப்பேம் - ஒழிப்போம். யாமென்று-தாமென்று. உணரும்-விசாரிக்கும். திண்-திண்ணிய. அறிவாளரை-அறிவினரை. நீணிலத்தின்மேல் - இந்நீண்டபூமியினிடத்து. தேர்ப்பார்-ஒப்பார். யார் - யாவர். என்றவாறு. தேர்ப்பார் - எழுவாய். யார்-பயனிலை. தடுமாற்றம்-நடுக்கம்.

இதன்கருத்து.

பெய்கிறமழைக்கட்டோன்றியழியுங்குமிழியேபோலப் பலகாலும்உண்டாகிஅழியும்இவ்வுடம்பென்றுகருதிப் பிறவித்தடு

மாற்றத்தைஒழிப்போமென்றுராயுத்திண்ணிய அறிவினரா
இவ்வுலகத்திலொப்பவர்யாவரொன்பதாம்.....(எ.)

யாக்கையையாப்புடைத்தாப்பெற்றவர்தாம்பெற்ற..*
யாக்கையாலாயபயன்கொள்கையாக்கை.....*
மலையாடுமஞ்சுபோற்றோன்றிமற்றுங்கே.....*
நிலையாதுநீத்துவிடும்.....*

இதன்பதப்பொருள்.

யாக்கையை-உடம்பை.யாப்புடைத்தா-வலியுடைத்தாக.பெற்றவர்-பெற்றவர்கள்.தாம்-தாங்கள்.பெற்ற-பெற்றிருக்கிற.யாக்கையால்-அவ்வுடம்பினால்.ஆய-ஆகிய.பயன்-அறப்பயனை.கொள்க-செய்துகொள்ளக்கடவர்.யாக்கை-அவ்வுடம்பானது.மலை-மலையிலே.ஆடும்-படியும்.மஞ்சுபோல்-மேகம்போல.தோன்றி-பிறந்து.நிலையாது-நிலையாமல்.நீத்துவிடும்-தன்னையொழித்துவிடும்.என்றவாறு.பெற்றவர்-எழுவாய்.கொள்க-பயனிலை.பயன்-செயப்படுபொருள்.இதில் ஐயுருபுகுன்றிநின்றது.மற்று-ஆங்கு-ஏ-இம்மூன்றும்அசைநிலை.

இதன்கருத்து.

உடம்பினைவலியுடைத்தாகப்பெற்றவர்தாம்பெற்றஅவ்வுடம்பிலாலயஅறப்பயனைச்செய்துகொள்வர்.ஏனெனில் அவ்வுடம்புதான்மலையின்கணுடிமுகில்போற்றோன்றி நிலையாதுதன்னைநீக்கிவிடுமென்பதாம்.....(அ.)

புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி....*
யின்னினியேசெய்கவறவினையின்னினியே.....*
நின்றுனிருந்தான்கிடந்தான்றன்கேளலறச்.....*
சென்றுனெனப்படுதலால்.....*

இதன்பதப்பொருள்.

இன்னினி-இப்பொழுது.நின்றுன்-ஒருவனின்றுன்.இருந்தான்-இருந்தான்.கிடந்தான்-கிடந்தான்.தன்-தன்னுடைய.கேள்-சுற்றத்தார்.அலற-அழ.சென்றுன்-இறந்தான்.எனப்படுதலால்-என்றுசொல்லப்படுதலால்.புல்-புல்லினது.நுனிமேல்-நுனியின்கண்.நீர்போல்-நிற்குநீரைப்போல.நிலையாமையென்று-யாக்கைநில்லாததன்மையென்று.எண்ணி-கருதி.

இன்னினியே-இப்பொழுதே. அறவினை-அறப்பயனை.செய்க-செய்துகொள்வீராக. என்றவாறு.நீவிர் - தோன்றுஎழுவாய். செய்க - பயனிலை. அறவினை-செயப்படுபொருள்.இதில்ஐயுருபுகுன்றிநின்றது. இன்னினியென்பன அடுக்குப்பண்பு.ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

இப்பொழுதொருவனின்றுன்இருந்தான்கிடந்தான்தன்கேளிரெல்லோரும்அலறஇறந்துபோயினனென்றுசொல்லப்படுதலால்புன்னுனிமேல் நிற்குநீர்போல யாக்கைநில்லாதென்றெண்ணி உலகீரே நீங்கள் இப்பொழுதே அறவினையைச்செய்துகொள்வீராகவென்பதாம்.....(கூ.)

கேளாதேவந்துகிளைகளாயிற்றோன்றி.....*
வாளாதேபோவரான்மாந்தர்கள்வாளாதே.....*
சேக்கைமரமெழிலியச்சேணீங்குபுட்போல.....*
யாக்கைதமர்க்கொழியநீத்து.....*

இதன்பதப்பொருள்.

மாந்தர்கள்-மனிதர்கள்.கேளாது-கேளாமல்.வந்து-வந்து.கிளைகளாய்-சுற்றத்தாராய். இல்-குடியின்கண்ணே.தோன்றி-பிறந்து.வாளாது-சொல்லாமல்.மரன்-மரத்திலேவைத்த.சேக்கை-கூட்டை. ஒழிய-விட்டு.சேண் - தூரத்திலே.நீங்கு-நீங்காநின்ற.புட்போல-பட்சிபோல. யாக்கை-உடம்பை.தமர்க்கு-தம்மூற்றார்க்கு.ஒழியநீத்து-ஒழியவிட்டு.வாளாது-சொல்லாமல்.போவர்-இறந்துபோவாராம்.என்றவாறு.மாந்தர்கள்-எழுவாய். போவர்-பயனிலை. ஏகாரம்.மூன்றும்ஆலொன்றுப் அசைநிலை.

இதன்கருத்து.

மாந்தர்கள் கேளாமல்வந்துசுற்றத்தாராய்க்குடியின்கட்டோன்றிச்சொல்லாமல் மரத்தின் கட்குடம்பை யொழியச்சேய்த்தாக நீங்காநின்றபறவைபோலத்தம்மூடம்பைத்தம்மூற்றார்க் கொழியவிட்டுச்சொல்லாமலிறந்துபோவரென்பதாம்..(ஙி.)

யாக்கைநிலையாமைமூற்றிற்று.

அடு அதிகாரம்-ஈ-இ-வெண்பா.ஈஙி.

சு-ம். அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்.

அஃதாவது. அறன் - தருமத்தினுடைய.வலி - வலியை.உறுத்தல் - அறிவித்தல். அறனுவது பிராணிகளுக்கிதமாவனசெய்தலுஞ்சத்தியஞ்சொல்லலும்இயமநியமாதிகளுந்தானதருமங்களுஞ்சுபத்தியானபாவனைகளும்ஒதலோதுவித்தல் மூதலானவைகளுந்தவத்தைப்பண்ணுதலுஞ்சாந்தியும்நித்தியாநித்தங்களையறிதலுமாம் இதனைவலியுறுத்தலாவது இப்பெற்றியாகிய அறஞ்சுவர்க்கமோட்சங்களைத்தருமென்பதுலகத்தார்க்கறிவித்தல்.

அகத்தாரோவாழ்வாரென்றண்ணுத்துநோக்கிப்.....*
புகத்தாம்பெரும்அர்புறங்கடைபற்றி.....*
மிகத்தாம்வருந்தியிருப்பரேமேலைத்.....*
தவத்தாற்றவஞ்செய்யாதார்.....*

இதன்பதப்பொருள்.

அகத்தாரோ-அகத்தினுள்ளாரோ.வாழ்வாரென்னு-வாழுமவரென்னுமேகட்டு. அண்ணுத்து-மேலேக்கி. நோக்கி-பார்த்து.புகத்தாம் - தாமுள்ளேபுக.பெரும் - பெருமாய். புறங்கடை - தலைவாயிலை.பற்றி-பிடித்துக்கொண்டுநின்று.மிக-மிகவும்.வருந்தி-வருத்தமுற்று. இருப்பர்-இருப்பார். மேலை-முன்பு. தவத்தால்-தாஞ்செய்ததவங்காரணமாக.தவம்-பின்புதவம்.செய்யாதார்-செய்யாதவரென்றவாறு.தவஞ்செய்யாதார்-எழுவாய் வருந்தியிருப்பர் - பயனிலை. முன்புசெய்ததவங்காரணமாகப் பின்புதவஞ்செய்யாதானென்பது-மக்கட்பிறப்புக்குத்தவம்பண்ணிச்செல்வத்துக்குத்தவம்பண்ணுதவர்.

இதன்கருத்து.

வீட்டினுள்ளாரோவாழ்வானென்றுவினவிஅண்ணுந்துபார்த்துள்ளேபுகப்பெருதுகடைப்புறத்தைப்பற்றிநின்றுவருந்தியிருப்பர்முன்புதாஞ்செய்ததவங்காரணமாகப்பினபுதவஞ்செய்யாதானென்பதாம்.....(க.)

ஆவாநாமாக்கநசைஇயறமறந்து.....*
போவாநாமென்னுட்புலைநெஞ்சேபோவாது.....*
நின்றுஞற்றிவாழ்தியெனினுநின்வாழ்நாள்கள்.....*
சென்றனசெய்வதுரை.....*

இதன்பதப்பொருள்.

ஆவாம்-மேலாகக்கடவோம். நாம்-நாமென்று. ஆக்கம்- செல்வத்தை நசைஇ-விரும்பி. அறம்-தருமத்தை. மறந்து-மறந்து. போவாம் - இறக்கக்கடவோம். நாமென்ற - நாமென்றுநினையாத. புலை-கீழ்மையான. நெஞ்சே - மனமே. தவாது-ஒழியாது. நின்று-நிலைத்து. உஞற்றி-முயன்று. வாழ்தியெனினும்-வாழ்வாயாகிலும். நின்-நின்னுடைய. வாழ்நாள்கள் - வாழுநாள்கள். சென்றன-கழிந்தன. செய்வது - இனிநீசெய்வது. உரை-சொல். என்றவாறு. நீ-எழுவாய். செய்வதுரை-பயனிலை.

இதன்கருத்து.

மேலாகக்கடவோமென்றுசெல்வத்தைவிரும்பிஅறத்தினைமறந்துநாமிறக்கக்கடவோமென்று பாராதகீழ்மைநெஞ்சேஒழியாதுநின்றுவாழ்வாயெனினுநின்வாழ்நாள்கள்கழிந்தனஇனிநீசெய்வதுசொல்லென்பதாம்.....(உ.)

வினைப்பயன்வந்தக்கால்வெய்யவுயிரா.....*
மனத்தினழியுமாம்பேதைநினைத்ததனைத்.....*
தொல்லையதென்னுணர்வாரோதடுமாற்றத்.....*
தெல்லையிகந்தொருவுவார்.....*

இதன்பதப்பொருள்.

வினைப்பயன்-தீவினைப்பயன். வந்தக்கால் - வந்தால். வெய்ய-வெய்தாக. உயிரா-உயிர்த்து. மனம்-நெஞ்சு. அழியும் - துக்கப்பட்டுத்திரிவன். பேதை - அறிவில்லாதவன். அதனை-அத்தீவினைப்பயனை. நினைத்து-ஆராய்ந்து. தொல்லையதென்னுமுன்புசெய்ததென்று. உணர்வார்-அறியுமவர். தடுமாற்றத்து-பிறவித்தடுமாற்றத்தினது. எல்லை-அளவை. இகந்தொருவுவார்-கடந்துவிடுவார். என்றவாறு. பேதை-எழுவாய். அழியும்-பயனிலை. உணர்வார்-எழுவாய். இகந்தொருவுவார்- பயனிலை. தடுமாற்றம்-நடுக்கம். அத்து-இன் - இவ்விரண்டும்இடைச்சொல். ஆம்-அசைச்சொல்.

இதன்கருத்து.

தீவினைப்பயன் வந்தகாலத்தில்லா னெஞ்சு துக்கப்பட்டிரங்கின் அதனை விசாரித்துத் தொல்லையதன்றுணர் வார் பிறவித்தடுமாற்றத் தெல்லையைக்கடந்து விடுவரென்பதாம் ..... (கூ)

அரும்பெறல்யாக்கையைப்பெற்றபயத்தாற்.....
பெரும்பயனுமாற்றவேகொள்க - கரும்பூன்ற.....
சாறுபோற்சாலவும்பின்னுதவிமற்றதன்.....
கோதுபோற்போகுமுடம்பு.....

இதன்பதப்பொருள்.

பெறல் - பெறுதற்கு. அரும் - அரிய. யாக்கையை - மக்கள் யாக்கையை. பெற்ற - பெற்றிருக்கிற. பயத்தால் - பேற்றால். பெரும் - பெரிய. பயனும் - அறப்பயனையும். ஆற்றவே - மிகவே. கொள்க - செய்துகொள்வீராக. கரும்பு - கரும்பினை. ஊன்ற்ற - நெருக்கிக்கொள்ளப்பட்ட. சாறுபோல் - சாறுபோல. சாலவும் - மிகவும். பின்னுதவி - அறப்பயனை மறுமைக்குதவி. அதன் - அந்தக்கரும்பினது. கோதுபோல் - சக்கைபோல. உடம்பு - சரீரம். போகும் - கழிந்துபோம். என்றவாறு. — நீவிர் - நோன்றுவெழுவாய். கொள்க - பயனில. மற்று - அசை நிலை. பிறப்புத்தன்பமென்று பிறப்பறமுயல்வதுஞ் சொல்வாரரும் பெறல்யாக்கையென்ற தெண்ணையினின் - அல்லாதபிறப்பினிழிவைநோக்கியும் - மக்கள்யாக்கையினுயர்ச்சியை நோக்கியுமாம் - இதனைப்பெற்றபயத்தாற் பெரும்பயனைமிகக்கொள்ளுகையாவது - இம்மையிற்சுகமும் - மறுமையிற்பிறவாமையுமாம்.

இதன்கருத்து.

பெறுதற்கரியமக்கள் யாக்கையைப்பெற்றால் உலகோரேறிங்கள்பெறும் பேற்றையுமிகவேகொள்வீராக கொண்டாலுடம்பானது கரும்பாட்டிக்கொண்ட சாறுபோல அறப்பயனை மறுமைக்குதவி அதனதுகோதுபோற் கழிந்துபோமென்பதாம். ..... (கூ)

அறன்வலியுறுத்தல்.

கரும்பாட்டிக்கட்டிசிறுகாலைக்கொண்டார்... ..... *
திரும்பெழுந்துவேங்காற்றுயராண்டுழுவார்..... *
வருந்தியுடம்பின்பயன்கொண்டார்கூற்றம்... ..... *
வருங்காற்பரிவதிலர்... .... *

இதன்பதப்பொருள்.

கரும்பு-கரும்பினை. ஆட்டி-ஆடச்செய்து. கட்டி-பாகினை. சிறுகாலை-மூற்காலத்தே. கொண்டார்-கொண்டவர். திரும்பு-அதன்கோது. எழுந்து-எழுந்து. வேங்கால்-வேம்பொழுது. ஆண்டு-அவ்விடத்து. துயர்-துயரமுற்று. உழவார்-வருந்தாரதுபோல. உடம்பின்-உடம்பிலுள்ள. பயன்-அறப்பயனை. வருந்தி-வருத்தமுற்று. கொண்டார்-கொண்டவர். கூற்றம்-கூற்று. வருங்கால-வருங்காலத்து. பரிவது-இரங்குவது. இலர்-இலராவர். என்றவாறு.—பயன்கொண்டார்-எழுவாய்-பரிவதிலர்-பயனிலை. வருந்தியுடம்பின் பயன்கொள்ளுதல்-துறந்துதவம்பண்ணுதல்.

இதன்கருத்து.

கரும்பினையாட்டிப்பாகினை மூற்காலத்தேகொண்டார் அதன்கோதுவேம்போதுவருந்தார் அதுபோலவருந்தியுடம்பின்பயன்கொண்டார் கூற்றம் வருங்காலிரங்குவதிலராவரென்பதாம்..... .... (நு)

இன்றுகொலன்றுகொலென்றுகொலல்லது... ... *
பின்றையேநின்றதுகூற்றமென்றெண்ணி..... ..... *
யொருமின்றீயவையொல்லுமவகையான்... ... ... *
மருமின்மாண்டாரறம்... ... ... *

இதன்பதப்பொருள்.

இன்றுகொல்-இன்றோ. அன்றுகொல்-அன்றோ. என்றுகொல-என்றோ. என்னுது-என்றுநினையாது. பின்றையே-பிறகே. நின்றது-நிற்கின்றது. கூற்றமென்று-கூற்றென்று. எண்ணி-கருதி. தீயவை-தீயனவற்றை. ஒருமின்-தவிருங்கள். மாண்டார்-மாட்சிமைப்பட்டாராற்சொல்லிய. அறம்-அறங்களை. ஒல்லுமவகையால்-இயன்றவாற்றால். மருமின்-

பொருந்தங்கள் - என்றவாறு.—நீவிர் - தோன்றுவெழுவாய். ஒருவுமின் - பயனிலை. தீயனவற்றை - செயப்படுபொருள். நீவிர் - தோன்றுவெழுவாய். மருவுமின் - பயனிலை. அறங்களை - செயப்படுபொருள். கொல்லாமன்றும் - ஐயப்பொருளில்வந்த தவிடைச்சொல்.

இதன்கருத்து.

இன்றுமக்கட்குவாழ்நாளெல்லைகுறிக்கப்பட்ட அன்றே நடுவுபட்டநாளென்றுவென்றுநினையாது பின்னேவந்து நின்றது கூற்றமென்றுதுணிந்து தீவினைகளைநீங்கி அறங்களை இயன்றவாற்றுற் செய்யுங்களென்பதாம்..... ... (சு)

மக்களாலாயபெரும்பயனுமாயுங்கா... .... *
லெத்தனையுமாற்றப்பலவாஞற்-றொக்க..... *
வுடம்பிற்கேயொப்புரவுசெய்தாழாதும்பர்க் ... *
கிடந்துண்ணப்பண்ணப்படும்..... ..... *

இதன்பதப்பொருள்.

மக்களால் - மக்கட்பிறப்பிலுள். ஆய - கொள்ளலாகிய. பெரும் - பெரிய. பயனும் - விளைவும். ஆயுங்கால் - ஆராயுங்காலத்து. எத்தனையும் - எவ்வளவும். ஆற்ற - மிக. பலவாஞல் - பலவுளவாஞல். தொக்க - பொருந்திய. உடம்பிற்கே - உடம்பிற்கேயான. ஒப்புரவு - ஒப்புரவுகளை. செய்து - பண்ணி. ஒழுகாது - நடவாது. உம்பர் - மேலுலகத்திலுமே. கிடந்து - இருந்து. உண்ண - நுகர. பண்ண - அறங்களைச்செய்ய. படும் - தகும் - என்றவாறு.—நீவிர் - தோன்றுவெழுவாய். பண்ணப்படும் - பயனிலை. அறங்களை - செயப்படுபொருள். பொருந்தியவுடம்பென்பது - சேர்ந்ததுதிக்குருங்கூடியது. சதித்ததாதிக்களாவன - இரசம் இரத்தம். சுக்கிலம். மூளை. தசை. என்பு. தோல். உடம்பிற்கான ஒப்புரவுகள் - உண்டி. பூசி. உடுத்து. முடித்தலென்பவை. மக்களாலாயபெரும்பயனுவது - உளனும் உறக்கமும். அச்சமும். புணர்தலும். பொதுவியலபாகவுடைய எல்லாப்பிறப்புமுள்ளும் - மக்கட்பிறப்பிற்குப்பெருமை. அறிவுடைமை. அதுதான்மூன்றுவகை. லோகதிட்டி - சாத்திரதிட்டி - ஞானதிட்டி - அவற்றுள். லோகதிட்டியாவது - லோகா

சாரமும் - ஒப்புரவும் - சமூசாரமும் - வாசனையுமறிந்திடம் பைநானென்றிருத்தல். சாத்திரதிட்டியாவது - அறம். பொருள் இன்பம். வீடென்பன - முதலாகவெண்ணப்பட்டசகல லோகமும் - சுவர்க்கபாதாளமூட்பட்டச் சொல்லாநின்ற எல்லா லோகங்களினுமுள்ள விசேடங்களையுநூன்முகமாகக் கேட்டறிந்திடம்பை நானல்லேனென்றிருத்தல். ஞானதிட்டியாவது - யாதாருபொருளையுந்தன்னையுமுண்மையுணர்தல். ஆதலால் - அறஞ்செய்தருளுண்டாகையும் பொருளினுலே இவ்வுலகத்தண்டான இன்பங்களை அநுபவிக்கையும் - மறுமைக்கான அறச்செயலுடனேதவத்தைச்செய்து சுவர்க்கசுகம்பெறுகையும் - ஞானத்தாலே மோட்சசுகம் பெறுகையுமாம். பெரும்பயனுமென்ற உம்மையால் - அறிவிலார் - விலங்கோடொப்பர்மக்கட்பிறப்பாலாயபயனைப்பெற்றிலராவராம்.

இதன்கருத்து.

மக்கட்பிறப்பினுற் கொள்ளலாய பெரும்பயனுமாயுங்காலத்தினையு மிகப்பலவுளவாலுல் பொருந்திய உடம்பிற்கே செய்யத்தக்கனசெய்யாதுமேலுலகத்தின்கண்ணேபெற்று அநுபவிக்கத்தக்கநுகர்ச்சியாகிய அறங்களைச்செய்யத்தகு மென்பதாம்..... (எ)

உறக்குந்துணையதோராலம்விதிதீண்டி..... ..... *
பிறப்பதிழற்பயந்தாஅங்-கறப்பயனுந்..... ... ... *
தான்சிறிதாயினுந்தக்கார்கைப்பட்டக்கால்... ..... *
வான்சிறிதாப்போர்த்துவிடும்..... .... *

இதன்பதப்பொருள்.

உறக்குஞ்-உறங்கும். துணையது - அளவினதான. ஓர் - ஒரு. ஆலம் - ஆலமரத்தினது. விதி - விதை. ஈண்டி - வளர்ந்து. இறப்ப - மிக. நிழல் - நிழலை. பயந்தாங்கு - தந்தாற்போல. அறம் - தருமத்தினுடைய. பயனுந்தான் - விளைவுந்தான். சிறிதாயினும் - சிறிதாயிருந்ததாயினும். தக்கார் - தகுதியுடையார். கைப்பட்டக்கால் - கைப்புகுந்தகாலத்து. வான் - ஆகாயம். சிறிதா - சிறிதாக. போர்த்துவிடும் - மூடிவிடும். என்றவாறு. — அறப்பயன் - எழுவாய். போர்த்துவிடும் - பயனிலை. உறக்குந்துணை - செய்யுள்விகாரம். அடக்கத்தாலே - உயிருள

தாகத்தோன்றுது கிடந்துறங்கும் உறக்கத்தளவும்போலும் நுண்மையாலேதோன்றுத ஆலம்விதது செவ்விபெற்றுதன் னிலஞ்சார்வாகத்தோன்றி உறுப்புகளீண்டி மிகநிழலப்பயந் தாற்போல அறங்காரணமாகக்கொடுத்தபொருள் தான்சிறி தாயினும் நல்லார்கைப்பட்டக்கால்வான்சிறிதென்னும்படி யன்பெருத்துவிடும்.

இதன்கருத்து.

உறக்குமளவினதோராலம்விதது வளர்ந்து மிகநிழலத்தந் தாற்போலக்கொடுத்தபொருள்சிறிதாயினு நல்லார்கைப்பட் டக்கால் அவ்வறத்தான் வரும்பயன்விசும்பு சிறிதென்னும்ப டிபெருகுமென்பதாம்..... (அ)

வைகலும்வைகல்வரக்கண்டுமஃதுணராதார்... ... ... *
வைகலும்வைகலைவகுமென்றின்புறுவர்... ... ... *
வைகலும்வைகற்றம்வாழ்நாண்மேல்வைகுதல்..... *
வைகலைவைதீதுணராதார்..... *

இதன்பதப்பொருள்.

வைகலும்-நாள்தோறும். வைகல்-நாள்கழிதலை. தம்-தம் மூடைய. வாழ்நாண்மேல்-வாழுநாளின்மேல். வைகுதல்வை த்து-கழிவுநாளாகவைத்து. வைகலை - அந்நாட்களை. உணரா தார்-எண்ணியறியாதார். வைகலும் - நாள்தோறும். வைகல் வர-தம்வாழ்நாள்கழிவுவர. கண்டும்-பார்த்தும். அஃது-அத னை. உணரார்-அறியாது. வைகலும்-நாள்தோறும். வைகலை-நாள்களை. வைகுமென்று - கழியுமென்று. இன்புறுவர்-இன் புறுதிபர். என்றவாறு.—உணராதார் - எழுவாய். இன்புறு வர்-பயனிலை. இது அறிவின்மையென்னு மதிகாரத்திற்குப் பொருத்தினபாட்டு இவ்விடத்திற் சொன்னதென்னெனின் இப்படிமாதிரைதோறுந் தம்மூடையவாழ்நாள் கழிவுவரக் கண்டும் அதனையறியாமல் அதற்கு மகிழ்ந்திருத்தல் மூன் சொன்னதீவினைப்பயனதலால் தீவினையிப்படிமதிமயக்குமா போல நல்வினையு நல்லறிவைக்கொடுக்குமென்பது போதா தி இப்படி அறத்தினதுவலியை உலகத்தார்க்கறிவிக்கைகார ணமாக அறன்வலியுறுத்தலென்னு மதிகாரத்திற் சேர்க்கப்ப ட்டது.

இதன்கருத்து.

நாள்தோறுநாள்கழிதலைத்தம்வாழ்நாள்மேற்கழிவாகவை
த்தந்நாட்களையெண்ணி உணராதார் நாள்தோறுந் தம்வாழ்
நாள்கழிவுவரக்கண்டும் அதனையறியாது நாள்தோறு நாள்க
ழிதலுக்கின்புறுநிற்பரென்பதாம்... .... (கூ)

மானவருங்கலநீக்கியிரவென்னு..... .... *
மீனவிளிவிலல்வாழ்வேன்ம-னீனத்தா... .... *
ஊட்டியக்கண்ணுமுறுதிசேர்ந்திவ்வுடம்பு..... ..... *
நீட்டித்துநிற்குமெனின்... .... *

இதன்பதப்பொருள்.

ஈனத்தால்-இழிவிலுல். ஊட்டியக்கண்ணும்-இரந்தூட்டி
யவிடத்தும். உறுதி-உறுதியை. சேர்ந்து-அடைந்து. இவ்வு
டம்பு-இந்தவுடம்பு. நீட்டித்து - நெடுங்காலம். நிற்குமெனி
ன்-நிற்குமாகில். மானம்-மானமென்கிற. அரும்-பெறற்கரி
ய. கலம்-அணியை. நீக்கி-கழற்றி. இரவென்னும்-இரப்பென்
கிற. ஈனம்-ஈனமாகிய. இளிவிலல்-இழிவரவிலல். வாழ்வே
ன்மன்-உயிர்வாழ்வேனன்றே. எனறவாறு.—யான்-எழுவா
ய். வாழ்வேன்-பயனிலை. மன் - ஒழியிசைப்பொருளில்வந்த
விடைச்சொல். ஈனத்தாலூட்டியக்கண்ணும் - தீவினையான்வ
ரும்பொருள்களாலேனுகர்வித்தவிடத்தும். இதுமானமென்
கிற அதிகாரத்திற்குப்பொருந்தினபாட்டு-இவ்விடத்திற்சொ
ன்னதென்னெனின். இரக்கத்தக்கமிடிவந்தகாலத்துத்துறந்
துதவம்பண்ணுமல் இரக்கக்கடவேனேனென்றுதுறப்பதாக
த்துணிதல். இதுமூன்செய்தறல் வினைப்பயனுதலில் அறத்தி
னதுவலியை உலகத்தார்க்கதிவிக்கை காரணமாக அறன்வலி
யுறுத்தலென்னும் அதிகாரத்திற்சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

ஈனமென்கிற இழிவரவினுலிரந்தூட்டியவிடத்தும் உறுதி
யையுடைத்தாய் இவ்வுடம்புநீட்டித்துநிற்குமாயின்மானமெ
ன்கிற ஆபரணத்தைநீக்கி இரப்பென்னுநின்றவாழ்வையுடை
ய இழிவரவினுலுயிர்வாழ்வேன் நில்லாதாகலின் துறப்பதாக
த்துணிவேனென்பதாம்... .... (ஙு)

அறன்வலியுறுத்தல்முற்றிற்று.

ஆ அதிகாரம் ச-இ வெண்பா...(சுஙு)

தூய்தன்மை.

தூய்து-சுத்தம். அன்மை - அல்லவென்னுந்தன்மை. அஃதாவது-குடரும்-மலமும்-கிருமிகளும் - துர்க்கந்தங்களும்-தோன்றுமல் - மூடியிருந்த தோவின்புறத்தைக்கண்டு - தூய்தென்றுமயங்குவார்கள். அவர்கட்கிவ்வுடம்பினுள்ளமலங்களினிழிவைச்சொல்லித்தம்மூடம்பினும்விடயங்களினும்இவ்விழிவைநோக்கி ஆசைசெல்லாமல் அறிவுறுத்தி அவர்களைத்துறந்து தவஞ்செய்யும்படிபண்ணினது.

மாக்கேழ்மடநல்லாயென்றரற்றுஞ்சான்றவர்..... ❋
நோக்கார்கொலெனையதோர்புக்கில்லை-யாக்கைக்கோ❋
ரீச்சிறகன்னதோர்தோலறினும்வேண்டுமே..... ❋
காக்கைகடிவதோர்கோல் .... ❋

இதன்பதப்பொருள்.

யாக்கைக்கு-உடம்பிற்கு. ஓர்-ஒரு. ஈ-ஈயினது. சிறகன்னது-சிறகுபோன்றது. ஓர்-ஒரு. தோல்-தோலானது. அறினும்-அற்றாலும். காக்கை-காக்கையை கடிவது - ஓட்டுதற்கு. ஓர் - ஒரு. கோலும் - கோலும். வேண்டுமே - வேண்டுமன்றே ஆதலால். மாக்கேழ்-மானைநிறத்தையும். மடம்-மென்மையையுமுடைய. நல்லாயென்று-பெண்ணேயென்று. அரற்றும்-பலகால்சொல்லும். சான்றவர்-சால்புடையோர். நோய்யது -சீர்மையில்லாதது. ஓர் - ஒரு. புக்கில்லை - உடம்பை. நோக்கார்கொல் - காணாரோ. என்றவரறு.—சான்றவர்-எழுவாய். நோக்கார்கொல்-பயனிலை. புக்கில்லை-செயப்படுபொருள். கொல் - ஐயப்பொருளில்வந்தவிடைச்சொல். புக்கில்-தனக்கெனவமையாதவில். மாக்கேழென்பதற்கு-மாந்தளிர்போலுநிறமெனப்பொருளுரைப்பாருமுளர்.

இதன்கருத்து.

உடம்பிற்கீச் சிறகன்னதோர் தோலறினுங் காக்கையைத் துரப்பதற்கோர்கோல் வேண்டுமன்றே வாகலிற்மானைநிறத்தையுமென்மையையுமுடைய நல்லாயென்றாற்றுஞ் சான்றவரிழிவாயிருப்பதோருடம்பை ஆராய்ந்துபாராரோ வென்பதாம்..... .... (க)

தோற்போர்வைமேலுந்தூவுபலவாய்ப்பொய்ம்மறைக்கு *
மீப்போர்வைமாட்சித்துடம்பாலுன்-மீப்போர்வை..... *
பொய்ம்மறையாக்காமம்புகலாதுமற்றதனைப்..... *
பைம்மறியாப்பார்க்கப்படும்..... ..... *

இதன்பதப்பொருள்.

தோல்-தோலாகிய. போர்வை-போர்வை. மேலும்-மேலும். தூவு-தூவுகள். பலவாய் - பலவுளவாய். பொய்-பொய்யை மறைக்கும் - மறைத்திருக்கும். மீ-மேலே. போர்வை-போர்த்தபோர்வையாலே. மாட்சித்து-மாட்சிமையுண்டாயிருந்தது. உடம்பாலுல் - உடம்பினாலல். மீ-மேலே. போர்வை - போர்த்தபோர்வையாலே. பொய்-பொய்யை. மறையா-மற்றக்கும். காமம்-காமநுகர்ச்சியை. புகலாது - விரும்பாது. அதனை-அவ்வுடம்பை. பை-பையினது. மறி-மறியாக. பார்க்க-நோக்க. படும்-தகும். என்றவாறு.— நீவிர் - எழுவாய். பார்க்கப்படும் - பயனிலை. உடம்பினை-செயப்படுபொருள். மற்று - அசைநிலை. பொய்-உள்ளுள்ளபொல்லாங்குகள்.

இதன்கருத்து.

தோலாகியபோர்வைமேலுந்தூவுபலவுளவாய் உள்ளுள்ள பொல்லாங்குகளைமறைக்குமீப்போர்வையாலுள்ள மாட்சித்துடம்பாதலால் மேற்போர்த்த அப்பொய்ம்மறைப்பானே காமநுகர்ச்சியைவிரும்பாது அவ்வுடம்பினைப்பைம்மறியாக நோக்கத்தகுமென்பதாம்..... (உ)

தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப்..... ..... *
பொய்க்கோலஞ்செய்யவொழியுமே - யெக்காலு... *
மூண்டிவினையுளுறைக்குமெனப்பெரியோர்..... *
கண்டுகைவிட்டமயல்..... *

இதன்பதப்பொருள்.

எக்காலும்-எப்பொழுதும். உண்டி-உணவிலல்வரும். வினையுள்-தொழிலிலுலே. உறைக்குமென-தூர்க்கந்திக்குமென்று. பெரியோர்-பெரியோர்கள். கண்டு-பார்த்து. கைவிட்ட-கைவிடப்பட்ட. மயல்-உடம்பாகியசெத்தைக்கு. தக்கோலம்-

தக்கோலப்புட்டிலே. நின்று-அருந்தி. தலை-தலே. நிறைய-நிரம்ப. பூ-பூவை. சூடி-தரித்து. பொய்-பொய்யாகிய. கோலம்-கோலங்களை. செய்ய-பண்ண. ஒழியுமே-உள்ளுள்ளபொல்லாங்குகளொழியுமோ. என்றவாறு.—பொல்லாங்குகள் - எழுவாய். ஒழியுமே-பயனிலே. எ-வினாப்பொருளில்வந்தவிடைச்சொல். தக்கோலம்-பஞ்சவாசத்திலொன்று.

இதன்கருத்து.

எப்பொழுதும் உண்டிவினையிலுலே இயங்கும்வாயுகொண்டுபுறப்படுந்தோறுந்துர்க்கந்திக்குமென்றுகொண்டுபெரியோர் இயங்குகின்ற பொல்லாங்கைக்கண்டுகைவிட்ட உடம்பாகியசத்தைக்குத் தக்கோலத்தைத்தின்றுதலே நிறையப்பூவினைச்சூடி இவ்வகையாற்பொய்யாகியகோலங்களைச்செய்யவே உள்ளுள்ளபொல்லாங்குகளொழிந்துபோமோவென்பதாம்... ... ... (௬)

தெண்ணீர்க்குவளைபொருகயல்வேலென்று..... ✻
கண்ணில்புன்மாக்கள்கவற்றவிடுவேலே... ... . ✻
வுண்ணீர்களைந்தக்காலுங்குரூஉந்திட்டன்ன..... ... ✻
கண்ணீர்மைகண்டொழுக்குவேன்... ..... ✻

இதன்பதப்பொருள்.

உள்-உள்ளிருக்கின்ற. நீர்-நீரை. களைந்தக்கால்-களைந்தால். நுங்கு-நுங்கை. சூன்றிட்டன்ன-தோண்டிவைத்தாலும். கண்-கண்ணினுடைய. நீர்மை-தன்மையை. கண்டு-பார்த்து. ஒழுகுவேன்-செல்கின்றயான். தெள்-தெளிந்த. நீர்-நீரிலுள்ள. குவளை-குவளைப்பூப்போலும். பொரு-பொருகின்ற. கயல்-கெண்டைமீன்போலும். வேலென்று-வேல்போலுமென்று. கண்ணில்-அறிவில்லாத. புல்-புல்லிய. மாக்கள்-மனிதர். கவற்ற-கவலைப்படித்த. விடுவேலே-துறைவிட்டுநீங்குவதேலே. என்றவாறு.—யான்-எழுவாய். விடுவேலே-பயனிலை. ஓ-எதிர்மறைப்பொருளில்வந்த விடைச்சொல்.

இதன்கருத்து.

உள்ளினீரைவாங்கிலுற் பனைநுங்கினைக்கழற்றிப்போட்டாற்போன்றிருக்கின்றகண்ணீர்மையைக்கண்டொழுகுகின்றயா

ன்குவளைப்பூப்போலுங்கயல்போலுமென்றுசொல்லி அறிவில்லாதபுன்மாக்களென்மனத்தைக் கவலைப்படுத்த அதற்குடன்பட்டுத்துறவைவிட்டுநீங்குவலேனென்பதாம்... ... (ச)

முல்லைமுகைமுறுவன்முத்தென்றிவைபிதற்றுங்..... *
கல்லாப்புன்மாக்கள்கவற்றவிடுவலே..... *
வெல்லாருங்காணப்புறங்காட்டுதிர்த்துக்க... ... .. *
பல்லெண்புகண்டொழுகுவேன்... ... . *

இதன்பதப்பொருள்.

எல்லாரும்-எல்லோரும். காண - காணும்படி. புறங்காடு-சுடுகாட்டில். உதிர்த்து - உதிர்த்து. உக்க - உக்கிக்கிடக்கின்ற. பல்-பல்லாகிய. என்பு-எலும்பினை. கண்டு - பார்த்து. ஒழுகுவேன்-செல்கின்றயான். முறுவல்-அப்பற்களை. முல்லை - முல்லையினது. முகை-அரும்புபோலும். முத்து-முத்துப்போலுமென்று. இவை-இப்படி. பிதற்றும்-சொல்லும். கல்லா-கல்லாத. புல்-புல்லிய. மாக்கள் - மனிதர்கள். கவற்ற-கவலைப்படுத்த. விடுவலே-துறவைவிடுவலே. என்றவாறு.—யான்-எழுவாய். விடுவலே - பயனிலை. ஓ-எதிர்மறைப்பொருளில்வந்தவிடைச்சொல்.

இதன்கருத்து.

யாவருங்காணச்சுடுகாட்டிலுதிர்த்துகிடக்கின்ற பல்லாகியஎன்பினைக்கண்டு செல்கின்றயான் அப்பற்களை முல்லையரும்பென்றும் முத்தென்றுஞ்சொல்லிக் கல்லாதபுல்லிய மாக்கள்என்மனத்தைக்கவலைப்படுத்த அதற்குடன்பட்டுத்துறவைவிட்டுநீங்குவலேனென்பதாம்..... .... (ரு)

குடரும்கொழுவும்குருதியுமென்புந்..... *
தொடருநரம்பொடுதோலுமிடையிடையே .... *
வைத்ததடியும்வழும்புமாமற்றிவற்று .... *
லெத்திறத்தாலீர்ங்கோதையாள்.... ..... *

இதன்பதப்பொருள்.

குடரும்-குடலும். கொழுவும் - மூளையும். குருதியும்-இரத்தமும். என்பும்-எலும்பும். தொடரும் - தொடர்ந்த. நரம்

பொடி-நரம்புடனே. தோலும்-தோலும். இடையிடையே-நடுநடுவே. வைத்த-வைத்திருக்கின்ற. தடியும்-தசையும். வழும்புமாம்-நிணமுமாகிய. இவற்றுள்-இவைகட்குள்ளே. எத்திறத்தாள்-எப்பக்கத்தாள். ஈர்ங்கோதையாள்-குளிர்ச்சிபொருந்தியமாலையையுடையாள். என்றவாறு.—கோதையாள்-எழுவாய். எத்திறத்தாள்-பயனிலை. மற்று-அசைநிலை.

இதன்கருத்து.

கூடருமூளையுங் குருதியும் என்பும்படர்ந்த நரம்புடனே தோலுமிடையிடையேயவைத்ததசையும் வழும்புமாகிய இவற்றுள் ஈரபாகத்திலுற் சிறந்தமாலையையுடையாளெத்திறத்தாளென்பதாம்..... (சு)

ஊறியுவர்த்தக்கவொன்பதுவாய்ப்புலனும்... ... ... ✻
கோதிக்குழம்பலைக்குங்கும்பத்தைப்பேதை ... ... ✻
பெருந்தோளிபெய்வளாயென்னுமீப்போர்த்த ... ✻
கருந்தோலாற்கண்விளக்கப்பட்டு..... ..... ✻

இதன்பதப்பொருள்.

ஊறி - மலங்கள்பொசிந்து. உவர்த்தக்க-வெறுக்கத்தக்க. ஒன்பது-ஒன்பதென்னும். வாய்-வாயிலையுடைய. புலனும்-இடந்தோறும். கோதி-சிதறப்படும். குழம்பு-குழம்புகள். அலைக்கும்-வந்தலைக்கின்ற. கும்பத்தை-உடம்பாகியகுடத்தை. பேதை-அறியாதவன். மீ-மேல். போர்த்த-மூடிய. கரும்-கரிய. தோலால்-தோலினால். கண்-கண்களுக்கு. விளக்கப்பட்டு-விளக்கமாயிருக்கப்பட்டு. பெரும்-பெரிய. தோளி-தோளினையுடையாய். பெய்-இடப்பட்ட. வளாய்-வளையினையுடையாய். என்னும்-என்றுசொல்லுவன். என்றவாறு.—பேதை-எழுவாய். என்னும்-பயனிலை. கும்பத்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

மலங்கள்பொசிந்தொன்பது வாயிலிடந்தோறும் உண்ணினைந்தின்றகாற்றினாற் சிதறப்படுமலக்குழம்புகள்வந்தலைக்கின்ற உடம்பாகியகுடத்தை அதன்மேன்மூடிய கருந்தோலாற்

கண்விளக்கப்படுதலின் காமுகன்தோளினையுடையாய் வளையி னையுடையாயென்றரற்றுநிற்பனென்பதாம்..... ... (எ)

பண்டமறியார்படுசாந்துங்கோதையுங்..... *
கொண்டுபாராட்டுவார்கண்டிலர்கொன்மண்டிப்..... *
பெடைச்சேவல்வன்கழுகுபேர்த்திட்டுக்குதீது... .. *
மூடைச்சாகாடச்சிற்றுழி .... *

இதன்பதப்பொருள்.

மண்டி-நெருங்கி. பெடை-பெட்டையும். சேவல்-சேவலு மாகிய. வன்-வலிய. கழுகு - கழுகுகள். பேர்த்து - மறித்து. குதீதும்-குத்தாநிற்கும். மூடை-மூடைதாறுகிற. சாகாடு-உட ம்பாகியபண்டி. அச்சு-உயிராகிய அச்சு. இற்றுழி-முறிந்தகா லத்தில். பண்டம் - அவ்வுடம்பாகியபண்டத்தினை. அறியார்-உண்மையையறியாது. படு - மேற்பூசின. சாந்தும் - சந்தனத் தையும். கோதையும் - பூமாலையினையும். கொண்டு - பார்த்துக் கொண்டு. பாராட்டுவார் - அவ்வுடம்பினைப்பெருமைபாராட் டுவார். கண்டிலர்கொல் - பார்த்தாரில்லையோ. என்றவாறு.— பாராட்டுவார்-எழுவாய். கண்டிலர்கொல் - பயனிலை. கொல்-ஐயப்பொருளில்வந்த விடைச்சொல். இட்டு - அசைநிலை. மூ டையென்பது-தீயநாற்றம்.

இதன்கருத்து.

பெடையொடுகூடியகழுகுமறித்துக்குத்தாநிற்கும் அவ்வு ன்சகடம் அச்சுமுறிந்தகாலத்தில்உடம்பாகிய பண்டத்தினுண் மையறியாதுபூசுஞ்சாந்தையும் இட்டமாலையையும்பற்றி அவ் வுடம்பினைக்கொண்டு பாராட்டுவார் கண்டிலரோ வென்ப தாம்..... .... (அ)

கழிந்தாரிடுதலைகண்டார்நெஞ்சுட்கக்..... ..... *
குழிந்தாழ்ந்தகண்ணைவாய்த்தோன்றியாழித்தாைப் ... *
போர்த்திறந்நின்மினித்திதன்பண்டென்று..... *
சார்ந்துங்கொல்சாலச்சிரித்து..... ..... *

இதன்பதப்பொருள்.

கழிந்தார்-இறந்தவர்களுடைய. இடு - இட்டிருக்கிற. தலை-யோலகை. கண்டார்-பார்த்தவர்கள். நெஞ்சு-மனங்கள். உட்க-

அஞ்ச. குழிந்தாழ்ந்த - குழிந்தாழ்ந்திருக்கின்றவதீதலைகள். கண்ணவாய்-கண்களையுடையவாய் தோன்றி-தோற்றி. ஒழிந்தானா-ஒழிந்திருந்தவரை. போற்றி பாதுகாத்து. நெறி-நல்வழியிலே. நிற்மின்-நில்லுங்களென்று. இற்று-இத்தன்மைத்து. இதன்-இவ்வுடம்பினது. பண்பென்று-தன்மையென்று. சால-மிகவும். சிரித்து-நகைத்து. சாற்றுங்கால்-அறிவிக்கின்றனபோலும். என்றவாறு.—தலை-எழுவாய். சாற்றும்-பயனிலை. குழிந்தாழ்ந்தவென்பது-மீமிசைச்சொல். கொல்-ஐயப்பொருளில்வந்த விடைச்சொல். இடுதலை-போகட்டதலை.

(இதன்கருத்து.)

செத்தாருடையபோகட்டதலைகளைக் கண்டவர்கள் மனங்களிலெருவ அத்தலைகள்குழிந்தாழ்ந்த கண்களையுடையவாகத் தோன்றிச்சாவா தொழிந்திருந்தாரைப்பாதுகாத்து நெறியின்கண்ணேநின்றொழுகும் இப்பெற்றிற்றிவ்வுடம்பின்றன்மையென்றுசிரித்தறிவிக்கின்றனபோலுமென்பதாம்..... (கூ)

உயிர்போயார்வெண்டலையுட்கச்சிரித்துச்... ... . *
செயிர்தீர்க்குஞ்செம்மாப்பவரைச்-செயிர்தீர்ந்தார்... ... *
கண்டிற்றிதன்வண்ணமென்பதறற்றம்மையோர்... ..... *
பண்டத்துள்வைப்பதிலர் .... *

(இதன்பதப்பொருள்.)

உயிர்-உயிர். போயார்-போயினார். வெள்-வெள்ளிய. தலை-தலைகள். உட்க-கண்டவர்களஞ்சும்படி. சிரித்து-நகைத்து. செயிர்-குற்றங்களை. தீர்க்கும்-நீக்கும். செம்மாப்பவரை-மனவாழ்க்கையிலிறுமாந்திருப்பவரை. செயிர்-குற்றம். தீர்ந்தார்-தீர்ந்தவர்கள். கண்டு-பார்த்து. இற்று-இத்தன்மைத்து. இதன்-இவ்வுடம்பினது. வண்ணம்-தன்மை என்பதனால்-என்று சொல்லப்படுதலினாலே. தம்மை-தங்களை. ஓர்-ஒரு. பண்டத்துள்-பொருளிலே. வைப்பது-வைத்தெண்ணுவது. இலர்-இலராவர். என்றவாறு.—தலை-எழுவாய். தீர்க்கும்-பயனிலை. செயினை-செயப்படுபொருள். செயிர்தீர்ந்தார்-எழுவாய். வைப்பதிலர்-பயனிலை. தம்மை-செயப்படுபொருள். இறுமாப்பு-மிகுமானிழ்ச்சி.

துறவு.

இதன்கருத்து.

மனைவாழ்வின்கணின்று செம்மாப்பவனை உயிர்போகப்பட்டாருடையதலைகள்வெருவச்சிரித்துக்குரற்நங்கணீக்கும் அவ்வகையன்றிக் குற்றந்தீர்ந்தாரறிந்து இத்தன்மைத்திவ்வுடம்பின்பெற்றியென்று சொல்லுதலால் அதனைக்கொண்டுதம்மூடம்பினை ஒருபண்டத்தோடு வைத்தெண்ணுர் அறிவுடையாரென்பதாம்..... .....(ய)

தூய்தன்மைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-கு-இ வெண்பா... (குய)

கூ-ம். அதிகாரம்.

துறவு.

துறவு-துறத்தல். அஃதாவது - துறப்பதன்மூன்றெழுகப்பட்ட வுலகவொழுக்கத்தின்மேலும் இந்தவுடம்பிற்குத் தொடர்ச்சியான பொருள்களின்மேலும்பற்றற்றுத்துறத்தலவம்பண்ணுதல். அத்தவமென்பதுகொலைகளவு கட்காமம் பொய்யென்கின்றவிவற்றிற்செல்லுகின்றமனத்தைமீட்டுடம்பினைப்போற்றுமலொழுக்கத்தானதன்மதியான செபவோமதர்ப்பணமென்கின்ற அதுட்டானங்களாலுடையவனைவழிபடுதல். ஒழுக்கத்தலாவது-இவற்றுக்கோரிடை யூறுவரினிலையாத வுடம்பைக்கைவிட்டிந்த வழிபாடுகளைத் தப்பாதிருத்தல்.

விளக்குப்புகவிருண்மாய்த்தாங்கொருவன்... ... ... *
றவத்தின்மூன்னில்லாதாம்பாவம் - விளக்குநெய்... *
தேய்விடத்துச்சென்றிருள்பாய்த்தாங்குநல்வினை... *
தீர்விடத்துநிற்குமாந்தீது... ... ... *

இதன்பதப்பொருள்.

விளக்கு-விளக்கு. புக-புக்கவிடத்து. இருள்-இருள். மாய்த்தாங்கு-கெட்டாற்போல. ஒருவன்-ஒருவன்செய்யும். தவத்தின்-விரதத்தின். மூன்-முன்னே. பாவம்-பாபம். நில்லாது-

நிற்காது. விளக்கு-அவ்விளக்கிலிருக்கும். நெய் - நெய்யான
து. தேய்விடத்து-குறைந்தவிடத்து. இருள்-இருட்டு. சென்
று-வந்து. பாய்ந்தாங்கு-அடைந்துநின்றாற்போல. நல்வினை-
முன்செய்ததல்வினை. தீர்விடத்து-நீங்கினகால்த்து. தீது-தீவி
னை. நிற்கும்-வந்தடர்ந்துநிற்கும். என்றவாறு.—பாவம்-எழு
வாய். நில்லாது-பயனிலை. தீது-எழுவாய். நிற்கும்-பயனிலை.
ஆம்-இரண்டும் அசைநிலை.

இதன்கருத்து.

விளக்குச்சென்றுபுக்கவிடத்திருள்கெட்டாற்போல ஒருவ
ன்செய்யுந்தவத்தினெதிர் நிற்கமாட்டாதுபாவம்-அவ்விளக்கி
லிருக்கின்றநெய்தேய்ந்தவிடத்து அதனையிருள்சென்றடைந்
தாற்போலத்தவமாகிய நல்வினைநீங்கினவிடத்துத்தீவினைசெ
ன்றடர்ந்து நிற்குமென்பதாம்..... .... (க)

நிலையாமைநோய்மூப்புச்சாக்காடென்றெண்ணித்... ❋
தலையாயார்தங்கருமஞ்செய்வார்-தொலைவில்லாச்... ❋
சத்தமுஞ்சோதிடமுமென்றாங்கிவைபிதற்றும்..... ❋
பித்தரிற்பேதையாரில்..... ..... ❋

இதன்பதப்பொருள்.

நிலையாமை-இளமைமுதலியநிலையாமையும். நோய்-வியா
தியும். மூப்பு-முதுமையும். சாக்காடென்று-சாவுமுள்ளன
வென்று. எண்ணி-கருதி. தலையாயார்-தலையாய அறிவினையு
டையார். தம்-தமது. கருமம்-கருமமாகியதவத்தை. செய்
வார்-செய்வர். தொலைவு-முடிவு. இல்லா-இல்லாத. சத்தமும்-
சத்தசாத்திரமும். சோதிடமும்-சோதிடசாத்திரமும். என்
று-என்றுசொல்கின்ற. இவை-இவற்றை. பிதற்றும்-விடா
துபேசுகின்ற. பித்தரில்-பித்தர்போல. பேதையார்-அறிவில்
லாதார். இல்-இல்லை. என்றவாறு.—தலையாயார்-எழுவாய். செ
ய்வார்-பயனிலை. கருமத்தை-செயப்படுபொருள். பேதை
யார்-எழுவாய். இல்-பயனிலை. ஆங்கு-அசைநிலை. தங்கருமம்-
தவம். பிதற்றும்பித்தரிற்பேதையாரி லென்றது-பிதற்று
ம் கடைகளானபித்தரின்றிக்க பேதையாரில்லை. மோக்கவித்
தையல்லாதனவற்றை-வித்தையாகக்கருதலால் பித்தரென்றார்.
பித்தன்-மாறுபட்டவன். பேதை-ஒன்றுமறியாதவன்.

இதன்கருத்து.

பிறந்தார்க்கிளமைமுதலியநிலையாமையு நோயுமூப்புஞ்சாக்காடுமே யுள்ளனவென்றுகருதி மேலானவர் தவத்தைச்செய்வர் - முடிவில்லாத இலக்கணச்சத்தமும்சோதிடமுமென்கின்ற விவ்விரண்டினையே பிதற்றும் பித்தர்போல அறிவில்லாதார் இவ்வுலகத்திலிலையென்பதாம்..... (உ)

இல்லமிளமையெழில்வனப்புமீக்கூற்றஞ்..... *
செல்வம்வலியென்றிவையெல்லா-மெல்ல ..... *
நிலையாமைகண்டுநெடியார்துறப்பர்..... *
தலையாயார்தாமுய்யக்கொண்டு .... *

இதன்பதப்பொருள்.

இல்லம் - குடிப்பிறப்பும். இளமை - இளமைப்பருவமும். எழில்-தோற்றப்பொலிவும். வனப்பு-அழகும். மீக்கூற்றம்-மூதன்மையும். செல்வம்-ஐசுவரியமும். வலியென்று-சுற்றத்தின்வலிமையுமென்றுசைக்கின்ற. இவையெல்லாம் - இவைகளெல்லாம். மெல்ல - ஆராயுங்கால். நிலையாமை - நிலையாமையை. கண்டு-பார்த்து. தலையாயார் - தலையாய அறிவினையுடையார். தாம்-தம்மை. உய்யக்கொண்டு-பிழைத்துப்போதலைக்கொண்டு. நெடியார்-நீட்டியாராய். துறப்பர்-துறந்துபோவர். என்றவாறு.—தலையாயார்-எழுவாய். துறப்பர் - பயனிலை. மீக்கூற்றம்-சொற்செலவு.

இதன்கருத்து.

குடிப்பிறப்பிளமைபொலிவழகுமீக்கூற்றஞ்செல்வம் வலியென்கின்ற இவையெல்லாம் நிலையாமையை ஆராய்ந்துதலையாயார் நீட்டியாதேதம்மையுய்யக்கொண்டு துறந்துபோவரென்பதாம்..... (ரு)

துன்பம்பலநாளுழந்துமொருநாளே..... *
பின்பமேகாமுறுவரோழையா-ரின்ப..... *
மிடைதெரிந்தின்னுமைநோக்கிமனையா..... ... *
நடைவொழிந்தார்நன்மைந்தார்..... ..... *

இதன்பதப்பொருள்.

பலநாள்-பலநாளும். துன்பம்-துன்பத்தை. உழந்தும்-அநுபவித்தும். ஒருநாளை-ஒருநாளில்வரும். இன்பமே-இன்பத்தையே. காமுறுவர்-காதலிப்பர். ஏழையார்-ஏழைமையுடையார். இன்பம்-மனைவாழ்க்கையினுள்ளவின்பத்தினது. இடை-வேறுபாட்டை. தெரிந்து-ஆராய்ந்து. இன்மைமை-அவ்வின்பத்திலில்வருந்துன்பத்தை. நோக்கி-பார்த்து. மனையாறு-அம்மனைவாழ்க்கையது. அடைவு-வழியை. ஒழிந்தார்-மருவுதலொழிந்தார். ஆன்றமைந்தார்-அறிவாலமைந்தடங்கினர். என்றவாறு.—ஏழையார்-எழுவாய். காமுறுவர்-பயனிலை. இன்பத்தை-செயப்படுபொருள். ஆன்றமைந்தார்-எழுவாய். ஒழிந்தார்-பயனிலை. அடைவை-செயப்படுபொருள். ஏகாரம்-தேற்றப்பொருளில்வந்த இடைச்சொல். இடை-இடையூறெனப்பொருள்கூறுவாருமுளர்.

இதன்கருத்து.

பலநாளுந்துன்பத்தையுழந்து மொருநாளை யின்பத்தையே காதலிப்ப ரேழைமையுடையார் மனைவாழ்க்கையினுள்ளவின்பத்தின் வேறுபாட்டையாராய்ந்தவ்வின்பத்தின்மையநிந்தம்மனைவாழ்க்கையதுநெறியைமருவுதலொழிந்தாரறிவாலமைந்தடங்கிரொன்பதாம்..... .... (ச)

கொன்னேகழிந்தன்றிளமையுபின்னே... .... *
பிணியொடுமூப்பும்வருமாற்-றுணிவொன்றி .... *
யென்னெடுசூழாதெழுநெஞ்சேபோதியோ ..... *
தன்னெறிசேரநமக்கு..... .... *

இதன்பதப்பொருள்.

கொன்னே-நமக்குப்பயன்படாதே. கழிந்தன்று-கழிந்தது. இளமையும்-இளமைப்பருவமும். இன்னே-இப்பொழுதே. பிணியொடு-நோயுடனேகூடி. மூப்பும்-மூதுமையும். வருமால்-வந்தடையுமாதலால். துணிவு-துணிதலை. ஒன்றி-பொருந்தி. என்னெடு-என்னுடனே. சூழாது-ஆராயாதே. எழு-எழுகின்ற. நெஞ்சே-நெஞ்சமே. போதியோ-போகி

ன்றறியோ. நமக்கு - நமக்கு. நன்னெறி-பிறப்பறுநல்வழி யை. சேர-அடைவிக்க. என்றவாறு.—நீ-எழுவாய். சேர-பய னிலை. நன்னெறியை - செயப்படுபொருள். என்றெடுத்தூழா தெழுந்தஞ்சேயென்பதற்கு - நிலையாமையில்லாதவென்னுட னேயாராயாதேநீயேதுணிந்தெழுவாயாகவென்றபொருளு ணர்ப்பாருமுளர். கழிந்ததற்று-கழிந்தது என்பனவுமபாடம்.

இதன்கருத்து.

நமக்குப்பயன்படாதேகழிந்தநிளமையு மிப்பொழுதேபி ணியொடுகூடி மூப்புமுந்தடையு மாதலாற்றுணிவொன்றி யென்றேடாராயாதேபோதியோதெஞ்சேபோயினமக்குப் பிறப்பறுநல்வழியையடைவிக்கவென்பதாம்... .....(கூ)

மாண்டகுணத்தொடுமக்கட்பேறில்லெனினும்..... ✻
பூண்டான்கழித்தற்கருமையாற்-பூண்ட..... ✻
மிடியென்னுங்காரணத்தின்மேன்மூறைக்கண்ணே... ✻
கடியென்றூர்கற்றறிந்தார்..... ✻

இதன்பதப்பொருள்.

மாண்ட - தன்மனையாட்குமாட்சிமைப்பட்ட. குணத்தொ டு-குணமும். மக்கட்பேறு-பிள்ளைப்பேறும். இல்லெனினு மி-இல்லையாயினும். பூண்டான்-பூண்டவன். கழித்தற்கு-பின் புவிடுத்தற்கு. அருமையால்-அரிதாதலால். பூண்ட-பூண்டுகொ ண்ட. மிடியென்னும்-இடரென்னும். காரணத்தின்-காரணத் தினாலே. மேன்முறைக்கண்ணே - மூற்காலத்திலே. கற்றறிந் தார்-கற்றறிந்தவர். கடியென்றூர் - மணத்தைக்கடியென்றே பெயர்கூறினர். என்றவாறு.—கற்றறிந்தார் - எழுவாய். கடி யென்றூர்-பயனிலை. பூண்டமிடி-செய்துகொண்டவிடர்.

இதன்கருத்து.

தன்மனையாட்குநல்லகுணமும்பிள்ளைப்பேறும் இல்லையா யினுங்கொண்டவன்பின்பு விடுத்தற்கரிதாதலால் இப்படிப்பூ ண்டுகொண்ட மிடியென்னுங்காரணத்தினாலேமூற்காலத்தின் கண்ணே பெரியோர்மணத்தைக்கடியென்றே பெயர்கூறினரு ன்பதாம்..... ..... (ஙு)

ஊக்கித்தாங்கொண்டவிரதங்களுள்ளுடையதீ... ... ❋
தாக்கருந்துன்பங்கடாந்தலைவந்தக்கா .... ❋
னீக்கிநிறூஉமூரவோரோநல்லொழுக்கங்... ..... ❋
காக்குந்திருவத்தவர் .... ❋

இதன்பதப்பொருள்.

ஊக்கி-ஒருப்பட்டு. தாம்-தாங்கள். கொண்ட-கொண்டிருக்கிற. விரதங்கள்-தவங்கள். உள்ளுடைய-உள்ளுடையும்படி. தாக்கு-தாங்கற்கு. அருந்-அரிய. துன்பங்கள்-துயரங்கள். தலை-தம்மிடத்து. வந்தக்கால்-வந்தகாலத்தில். நீக்கி-அத்துயரங்களை நீக்கி. நிறூஉம்-தம்மையவ்விரதங்களிலே நிறுத்தும். உரவோரோ-வலியினையுடையோரோ. நல்லொழுக்கம்-தாங்கொண்டநல்லசீலங்களை. காக்கும்-தவறுவராமற்காக்கும். திருவுத்தவர்-திருவினையுடையார். என்றவாறு.—உரவோர்-எழுவாய். திருவுத்தவர்-பயனிலை. தாம்-அசைநிலை. தாக்கு-செய்யுள்விகாரம். திருவுத்தவர்-செய்யுள்விகாரம் அல்லது அத்துச் சாரியையிரிந்ததெனினுமமையும். ஊக்கல்-ஏறுதல். அல்லது-ஒருப்படல்.

இதன்கருத்து.

ஒருப்பட்டுத்தாங்கொண்ட விரதங்களுள்ளுடையும் படிதீதுயரங்கள்தம்மிடத்துவந்தாலத்துயரங்களைநீக்கித் தம்மையவ்விரதங்களிலேநிறுத்தும்வலியுடையோரேநல்லசீலங்களை அழியாமற்காக்கவல்லதிருவினையுடையாரென்பதாம்..... (எ)

தம்மையிகழ்ந்தமைதாம்பொறுப்பதன்றிமற்..... ... ❋
றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தா-லும்மை..... ❋
யெரிவாய்நிரயத்துவீழ்வர்கொலென்று..... ..... ❋
பரிவதுஉஞ்சான்றேர்கடன்..... ❋

இதன்பதப்பொருள்.

தம்மை-தங்களை. இகழ்ந்தமை-பிறரிகழ்ந்துசொன்னவற்றை. தாம்-தாங்கள். பொறுப்பதன்றி-பொறுப்பதேயன்றியும். எம்மை-நங்களை. இகழ்ந்த-இகழ்ந்துசொல்லிய. வினை-வினையினுடைய. பயத்தால்-விளைவினால். உம்மை-மற்றிற

ப்பில். எரி-எரிபோல. வாய்-வாய்ந்த. நிரயத்து-நரகத்திலே. வீழ்வனென்று-வீழ்வாரேயென்று. பரிவதூஉம்-இரங்குவதும். சான்றோர்-பெரியோர்கள். கடன் - முறைமை. என்றவாறு —சான்றோர்-எழுவாய். கடன்-பயனிலை. மற்று - கொல்- இவ்விரண்டும் அசைநிலை. எம்மையென்றது-இவ்வகையாற்பலனையுமென்றது. எரிவாய்நிரயம்-எரிகிறவாயினையுடையநரகமெனினுமமையும். இதுபொறையுடைமைக் கடித்தபாட்டு. இவ்விடத்திற்சொன்னதென்னெனின். துறக்குமவன்காமக்குரோதலோபமோகமதமாற்சரியங்களைத் துறக்கவேண்டுமாதலாற் கோபத்தையிப்படித்துறந்தான் துறவியாதலிற்றுறவிலேசேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

தம்மைப் பிறரிகழ்ந்தமை தாம்பொறுப்பதேயன்றியும் எம்மையிகழ்ந்துசொல்லிய தீவினைப்பயத்தான் மறுமையில் எரிபோலவாய்ந்த நரகத்தின்கண்ணவாய்வீழ்வரோ யென்றுவருந்துவதுஞ்சான்றோர்கடனென்பதாம்..... (அ)

மெய்வாய்கண்மூக்குச்செவியெனப்பேர்பெற்ற ... *
வைவாயவேட்கையவாவினைக்-கைவாய் .... *
கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடையான்... ... ... *
விலங்காதுவீடுபெறும்..... .... *

இதன்பதப்பொருள்.

மெய்-உடம்பும். வாய்-வாயும். கண்-கண்ணும். மூக்கு-மூக்கும். செவியென-செவியுமென. பேர்பெற்ற-பேர்பெற்றிருக்கின்ற. ஐவாய-ஐந்துநெறிகளினுடைய. வேட்கை-ஆசையினையும். அவாவினை-மனத்தால்வருமாசையினையும். கைவாய்-ஒழுக்கநெறியில். கலங்காமல்-கலங்காது. காத்து-பாதுகாத்து. உய்க்கும்-செலுத்தும். ஆற்றலுடையான் - வலியினையுடையான். விலங்காது-தப்பாது. வீடு - வீட்டினை. பெறும்-பெறுவன். என்றவாறு.—ஆற்றலுடையான் - எழுவாய். பெறும்-பயனிலை. வீட்டினை-செயப்படுபொருள். ஐவாயவேட்கை-ஐம்பொறியினிடத்துள்ளவாசை. அவா-மனத்திலுளை.

இதன்கருத்து.

உடம்பும்வாயுங்கண்ணுழுக்குஞ் செவியுமெனப்பேர்பெற்ற ஐந்தறிகளினுடைய ஆசையினையு மனத்தால்வரும் ஆசையினையும் ஒழுக்கநெறியிற்கலங்காதகாத்துச்செலுத்தும் அறிவென்னும் வலியினையுடையான் தப்பாதுவீழ்தினைப் பெறுவனென்பதாம்..... (கூ)

துன்பமேமீதூரக்கண்டுந்துறவுள்ளா ..... *
நின்பமேகாமுறுவமோழையா-ரின்ப .... *
மிசைதோறுமற்றதனின்னுமைநோக்கிப்..... *
பசைதல்பரியாதாமேல்... ... ... *

இதன்பதப்பொருள்.

துன்பமே-துயரமே. மீதூர-இடையறுதே அடர்ந்துவர. கண்டும்-பார்த்தும். துறவு-துறவினை. உள்ளார் - நினையாது. இன்பமே-தமக்கெய்தாத இன்பத்தையே. காமுறுவர்-காதலியாநிற்பர். எழையார் - ஏழைமையுடையார். இன்பம்-தமக்கின்பம். இசைதோறும்-அடுத்துவருந்தோறும். அதன்-அவ்வின்பத்திலுல்வரும். இன்னுமை - துன்பத்தை. நோக்கி-ஆராய்ந்து. பசைதல்-அவ்வின்பத்தின்மேவுதலை. பரியாது-காதலியார். மேல்-மேலாயினுர்.என்றவாறு —எழையார்-எழுவாய். காமுறுவர்-பயனிலை. இன்பத்தை - செயப்படுபொருள். மேல்-எழுவாய். பரியாது-பயனிலை. பசைதலை-செயப்படுபொருள். மற்று-ஆம்-இவ்விரண்டும் அசைநிலை. பரியாதென்றது-காதலியாளை. மேலென்றது-மேலாயினுளை-இஃதாகுபெயர். மீதூரல்-நெருங்கல்.

இதன்கருத்து.

துன்பமேதம்மேலிடையறுதேயடர்ந்துவரக்கண்டுந் துறவினைநினையாது தமக்கெய்தாத வின்பத்தையே காதலிப்பர் ஏழ்மையுடையார்-மேலாயினுர் இன்பமிடையறுதே தமக்குவந்தெய்துந்தோறும் அதனுலவருந் துன்பத்தை யாராய்ந்து அவ்வின்பத்தின்மேவுதலைக்காதலியாரென்பதாம்.. ... (ம)

துறவுமூற்றிற்று.

ஆ அதிகாரம்-சுஉ-இ வெண்பா... (சுஉ)

எட்டாம் அதிகாரம்.

தினைமின்மை.

தின்மை-கோபம். இன்மை-இல்லாதிருக்குந்தன்மை. அஃதாவது-யாவரிடத்தும் தம்மையிழிவாகச் சொல்லுதலைக் கண்டு சொன்ன இழிவுண்டாயிருக்குமாகி லிதுநமக்குள்ள தலைமையென்னும் இலேயாகிவிடுமன்செய்ன்னது பொய்யன்றுபொறுத்தலுந்தம்மையிகழ்வாரிடத்தும் மெய்த்துரிந்தடித்தாருங்கிரதம்மேலேயொருமரத்தினை முள்ளுரைத்தல் செய்ததேபோலவாகியதற்று இதனாமூன்புசெய்த பாவமலலோவந்ததென்று அதற்குக்கருவியாகிய கோபமெழுந்திராதபடியறிவாலேமீட்டல்.

மதிதிறப்பாருமிறக்கமதியா..... ... ... *
மிதித்திறப்டாருமிறக்க-மிதித்தேதறி .... *
யீயுந்தலைமேலிருத்தலாற்றறிவார்..... *
காயுங்கதமின்மைநன்று..... ... . *

இதன்பதப்பொருள்.

மிதித்து - தம்மையிவரிதல்லவொன்றெண்ணி. இறப்பாரும்-போவாரும். இறக்க-போக. மதியா-எண்ணுமல். மிதித்து-மிதித்தக்கெண்ணி. இறப்பாரும்-போவாரும். இறக்க-போக. மிதித்தேதறி-தம்மைமிதித்தேறி. ஈயும் - ஈயானதும். தலைமேல்-தலையின்மேல். இருத்தலால்-இருத்தலினாலே. அஃது-அவ்வீயின்றன்மையை. அறிவார்-அசேதனமன்றறிந்து அதன்மேற்றினமெழாததுபோல. காயும்-பிறனைச்சீறும். கதம்-கோபம். இன்மை-இல்லாமை. நன்று-நல்லது. என்றவாறு.—கதமின்மை-எழுவாய். நன்று-பயனிலை.

இதன்கருத்து.

தம்மையிவர் நல்லவொன்று மதித்துப்போவாரும்போக. மதியாதுமிதித்துப்போவாருமபோக. மிதித்தேதறித்தலைமேலீயுஞ்செந்நிருத்தலால் அதனையறிந்ததன்மேற் றினமெழாததுபோலப் பிறனைச்சீறும்வெகுளியிலலாதிருக்குந்தன்மை நன்றென்பதாம்..... .... (க)

தண்டாச்சிறப்பிற்றம்மின்னுயிரைத்தாங்காது .... *
கண்டுழியெல்லாந்துறப்பேமா-மண்டி..... ..... *
யடிபெயராதாற்றவிளைவந்தேபாழ்த்தின்... ... . *
மூடிகிற்குமுள்ளதீத்தவர்..... ..... *

இதன்பதப்பொருள்.

மண்டி-நெருங்கி. அடி-பாதநிலை. பெயராது-பெயர்த்தலையாது. ஆற்றவிளைவும். இளி-தாங்கொண்டமேற்கோளழிய இழிவரவு. வந்தேபாழ்த்தின்-வந்தவிடத்து. மூடிகிற்கும்-மூடிக்கவல்ல. உள்ளதீதவர்-ஊக்கத்தினையுடையார். தண்டா-கெடாத. சிறப்பின்-சிறப்பினையுடைய. தம்-தமது. இன்-இனிய. உயிரை-சீவனை தாங்காது-காவாது. கண்டுழியெல்லாம்-கினதீதுக்குக்காரணமாகியபிழைகண்டவிடமெல்லாம். துறப்பேமா-உயிரைவிடுவோம், என்றவாறு.—உள்ளத்தவர்-எழுவாய். துறப்பேமா-பயனிலை. மேற்கோளழிதலாவது-தம் மூடையவிரதத்திற்கோரிடையூறுவந்தத்தவமழிதல்.

இதன்கருத்து.

நின்றநிலையிற்பெயராதுசென்று தாங்கொண்ட மேற்கோளழிய இழிவரவுவந்தலிடத்தவ்விழிவரவுகள் செய்யாதுமுடிக்கவல்லவூக்கத்தினையுடையார்தமதின்னுயிரைக்காவாதுபிழைகண்டுழியெல்லாம் உயிரைவிடுவோவென்பதாம்... ... (உ)

காவாதொருவன்றன்வாய்திறந்துசொல்லுஞ்சொ... *
லோவாதேதன்னைச்சுடுதலா-லோவாதே .... *
யாய்ந்தமைந்தகேள்வியறிவுடையாரெஞ்ஞான்றுங்... *
காய்ந்தமைந்தசொல்லார்கறுத்து..... ..... *

இதன்பதப்பொருள்.

காவாது-பாதுகாவாது. ஒருவன்-பிறனொருவன். தன்-தன்னுடைய. வாய்-வாயை. திறந்து-திறந்து. சொல்லும்-சொல்லுகிற. சொல்-கடுஞ்சொற்கள். ஓவாது-ஒழியாது. தன்னை-வைதவன்றன்னையே. சுடுதலால்-சுடுமாதலால். ஓவாது-ஒழியாது. ஆய்ந்து-நூல்களோயாராய்ந்து அமைந்த-நிரம்பிய. கேள்வி-கேள்வியால்லாய. அறிவுடையார்-அறிவினையுடை

யார். காய்ந்து-பிறரைக்காய்ந்து. அமைந்த-நிரம்பிய சொற்கள். கறுத்து - வெகுண்டு. சொல்லார்-கூறார். எஞ்ஞான்றும்-எந்நாளும். என்றவர்று.—அறிவுடையார்-எழுவாய். சொல்லார்-பயனிலை. காய்ந்தமைந்தனவற்றை-செயப்படுபொருள். ஏகாரம்-இரண்டிடம்-அசைநிலை.

இதன்கருத்து.

காரணமுபிறரொருவன்றன்வாய்திறந்து சொல்லுஞ்சொற்கள் ஒழுங்காதலன்னச்சுடுதலால்ஒழியாது ஆராய்ந்து நிரம்பியகேள்வியாலாய அறிவினையுடையார்பிறரைக்காய்ந்தமைந்த சொற்களைவெகுண்டுசொல்லாரெஞ்ஞான்றுமென்பதாம்(ரு)

நேர்த்துநிகரல்லார்நீரல்லசொல்லியக்கால்..... ... *
வேர்த்துவெகுளார்விழுமியோ-ரோர்த்ததனை ..... *
யுள்ளத்தா னுள்ளியுரைத்தராயூர்கேட்பத் .... *
துள்ளித்தூண்மூட்டுமாங்கீழ்..... *

இதன்பதப்பொருள்.

நிகரல்லார்-தமக்கெதிரில்லாதார். நேர்த்து-எதிர்ந்து. நீரல்ல-நீர்மையல்லாதசொற்களை. சொல்லியக்கால்-சொன்னால். வேர்த்து-மனம்புழுங்கி. வெகுளார்-கோபியார். விழுமியோர். சீரியோர். ஓர்த்து-ஆராய்ந்து. அதனை - பிறர்வைததனை. உள்ளத்தான்-மனத்தால். உள்ளி-நினைந்து. உரைத்து - சொல்லி. துள்ளி-துடித்து. தூண்-தூணினிடத்து மூட்டும்-மூட்டிக்கொள்ளுவன். கீழ்-கீழானவன். என்றவாறு.—விழுமியோர்-எழுவாய். வெகுளார்-பயனிலை. கீழ்-எழுவாய். மூட்டும்-பயனிலை. நேர்த்து - ஓர்த்து - இவையிரண்டுஞ் செய்யுள்விகாரம். கீழன்பது-கீழாயினான். இம்தாகுபெயர். ஆம்-அசைநிலை.

இதன்கருத்து.

தமக்கெதிரில்லாதாரெதிர்ந்து நீர்மையல்லாத சொற்களைச் சொன்னால்மனம்புழுங்கிவெகுளார் சீரியோர்சொன்ன குற்றத்தைமறவாதுமனத்தானினைந்து உரைதியச்சென்று சொல்லித்துடித்துத்தூணின்கட்டலையமூட்டிவலீகீழாயினனென்பதாம்..... .... (ரு)

இஃயானடக்கமடக்கங்கிஃபொரு... .... ※
எில்லான்கொடையேகொடைப்பய-னெல்லா... ... ※
மொறுக்குமதுகையுரனுடையாளன்..... ..... ※
பொறுக்கும்பொறையேபொறை..... ..... ※

இதன்பதப்பொருள்.

இஃயான்-இஃயாலுயிலுன். அடக்கம்-ஐம்பொறிகஃயடக்குதல். அடக்கம்-அடக்கமாவது. கிஃ-வளரும். பொருள்-பொருள்கள். இல்லான்-இல்லாதான். கொடையே-கொடுத்தலே. பயன்-பயனுடைய. கொடை-கொடையாவது. எல்லாம்-எல்லாவகையாலும். ஒறுக்கும்-ஒறுக்கவல்ல. மதுகை-மூதன்மையையும். உரன்-வன்மையையும். உடையாளன்-உடையான். பொறுக்கும்-பொறுக்கின்ற. பொறையே-பொறுமையே. பொறை-பொறுமையாவது. என்றவாறு.—அடக்கம்-எழுவாய். அடக்கம்-பயனிலை. கொடை-எழுவாய். கொடை-பயனிலை. பொறை-எழுவாய். பொறை-பயனிலை.

இதன்கருத்து.

இஃயாலுயிலுன் ஐம்பொறிகஃயடக்குதல் அடக்கமாவது. பொருளில்லாதான்கொடையேபயனுடையகொடையாவது. எல்லாவகையாலும் ஒறுக்கவல்லமூதன்மையையும் வலியினையுமுடையான்பொறுக்கின்றபொறையே பொறையாவதென்பதாம்... .... (ரு)

கல்லெறிந்தன்னகயவர்வாயின்னுச்சொல்..... ※
லெல்லாருங்காணப்பொறுத்துய்ப்ப-மொல்லை..... ※
யிடிநீர்றூற்றையவிந்தநாகம்போற்றத்தங்... ... ... ※
குடிமையான்வாதிக்கப்பட்டு ..... ※

இதன்பதப்பொருள்.

இடி-மந்திரித்திட்ட. நீற்றூல்-நீற்றினூலே. ஒல்லை-விரைந்து. பை-படம். அவிந்த-அடங்கிய. நாகம்போல்-நாகத்தைப்போல. தந்தம்-தந்தாமுடைய. குடிமையால்-பழையகுடிப்பிறப்பால். வாதிக்கப்பட்டு-ஒறுக்கப்பட்டு. கல்-கல்லை. எறிந்தன்ன-எறிந்தாற்போலும். கயவர்-கீழானவர்களுடைய. வாய்-

வாயிற்பிறக்கும். இன்னுச்சொல்-பொல்லாதசொற்கள். எல்லாரும்-யாவரும். காண-அறியமே. பொறுத்துப்பர்-பொறுத்துச்செலுத்துவர். என்றவாறு.—மேலோர்-எழுவாய். பொறுத்துப்பர்-பயனிலை. இன்னுச்சொல்லை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

மந்திரித்திட்டநீற்றுல்விரைந்துபடமடங்கிய பாம்புபோலத்தம்முடைய பழையகுடிப்பிறப்பாலொறுக்கப்பட்டுக்கல்லெறிந்தாற்போலுங்கயவர்வாயின்னுதசொற்களையெல்லாருமறியவேபொறுத்துச்செலுத்துதலென்பதாம்..... (கூ)

மாற்றாராய்நின்றுதம்மாறேற்பார்க்கேலாமை... ... ※
யாற்றுமையென்னுரதிவுடையா-தாற்றுமை... ..... ※
நேர்தீதின்னுமற்றவர்செய்தக்காற்றுமவரைப்... ... ※
பேர்த்தின்னுசெய்யாமைநன்று ..... ※

இதன்பதப்பொருள்.

மாற்றாராய்-பகைவராய். நின்று-நின்று. தம்-தம்மோடு. மாறேற்பார்க்கு-மாறுபடுமவர்க்கு. ஏலாமை-தாமெதிராமையை. ஆற்றுமை-வலியின்மை. என்னுர்-என்றுசொல்லார். அறிவுடையார்-அறிவினையுடையார். ஆற்றுமை-பொறுத்தற்கரிதாம்வகை. தேர்த்து-மாறுபட்டு. இன்னு-துன்பங்களை. அவர்-அப்பகைவர். செய்தக்கால்-செய்தால். தாம்-தாங்கள். அவரை-அப்பகைவரை. பேர்த்து-மீண்டு. இன்னு-துற்றதை. செய்யாமை-செய்யாதொழிதல். நன்று-நல்லது. என்றவாறு.—அறிவுடையார்-எழுவாய். என்னுர்-பயனிலை. மற்று-அசைநிலை.

இதன்கருத்து.

பகைவராய்நின்றுதம்மோடுமாறேற்பார்க்குத்தாமெதிராமையைவலியின்மையாகச்சொல்லாரறிவுடையார் பொறுத்தற்கரிதாம்வகைமாறுபட்டு இன்னுதனவுற்றை அப்பகைவர்செய்தால்தாமப்பகைவரைவேறுபடித்து இன்னுசெய்யாதொழிதல்நன்றென்பதாம்..... .... (எ)

நெடுங்காலமோடினுநீசர்வெகுளி..... ..... *
கெடுங்காலமின்றிப்பரக்கு-மடுங்காலே..... *
நீர்கொண்டவெப்பம்போற்றானேதணியுமே..... *
சீர்கொண்டசான்றோர்சினம் ... . *

இதன்பதப்பொருள்.

நெடுங்காலம்-வெகுகாலம்.ஓடினும்-செல்லினும். நீசர்-கயவருடைய. வெகுளி-கோபம். கெடுங்காலம்-ஆதரும்பொழுது. இன்றி-இல்லாமல். பரக்கும்-வளராநிற்கும். அடுங்காலே-தருப்பினடும்பொழுது. நீர்-நீரானது. கொண்ட-கொண்டிருக்கிற. வெப்பம்போல-வெம்மைபோல. தானே-ஆற்றுவாரின்றித்தானே. தணியும்-ஆறும். சீர்-சீர்மையை. கொண்ட-கொண்டிருக்கின்ற. சான்றோர் - சால்புடையோர். சினம் - வெகுளி. என்றவாறு.—நீசர்வெகுளி-எழுவாய். பரக்கும்-பயனிலை. சான்றோர்சினம்-எழுவாய். தணியும் - பயனிலை. ஏகாரம் - அசைநிலை.

இதன் கருத்து.

நெடுங்காலஞ்சென்றாலுங்கயவர்வெகுளி கெடும்பொழுதின்றிவளராநிற்குஞ்சான்றோர்வெகுளி தெருப்பினடும்பொழுது நீர்கொண்டவெம்மைபோல் ஆற்றுவாரின்றித்தானேதணியுமென்பதாம்.....(அ)

உபகாரஞ்செய்ததனேயோராதேதங்க... ..... *
ணபகாரமாற்றச்செயினு-முபகாரந்..... *
தாஞ்செய்வதல்லாற்றவற்றிணுற்றீங்கூக்கல்..... *
வான்றோய்குடிப்பிறந்தார்க்கில்..... *

இதன்பதப்பொருள்.

உபகாரம்-தாமுபகாரத்தை. செய்ததனே - செய்ததனால். ஓராது-அறியாது. தங்கண்-தம்மிடத்து. அபகாரம்-ஒருவரபகாரத்தை. ஆற்ற-மிக. செயினும்-செய்தாராயினும். உபகாரம்-தாஞ்செய்யுமுபகாரத்தை. செய்வதல்லால்-செய்வதல்லது. தவற்றினுல்-அவர்செய்ததவறுகாரணமாக. தீங்கு - தீயனவற்றை. ஊக்கல் - செய்யவொருப்படுதல். வான்-ஆகாயத்தை. தோய்-தோயும். குடிப்பிறந்தார்க்கு - குடியின்கட்பிறந்தார்க்

கு. இல்-இல்லை. என்றவாறு.—ஊக்கல்-எழுவாய். இல்-பயனிலை. தீங்கை-செயப்படுபொருள். தீங்கூக்கல்-தீங்கைமேற்கொள்ளுதல். வான்மீப்குடி-வானிலேதோய்வதுபோல உயர்ந்தகுடி. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

உபகாரஞ் செய்ததனையறியாது அபகாரத்தைத்தம்மாட்டு மிகச்செய்தாராயினுந் தாமுபகாரஞ்செய்வதல்லது அவர்செய்த தவறுகாரணமாகத்தீயனவற்றைமுயன்றுசெய்தல் உயர்ந்தகுடியின்கட்பிறந்தார்க்கில்லையென்பதாம்..... .... (கூ)

கூர்த்துநாய்கௌவிக்கொளக்கண்டுந்தம்வாயாற். ... *
பேர்த்துநாய்கௌவினீங்கில்லை-நீர்த்தன்றிக் ..... *
கீழ்மக்கள்கீழாயசொல்லியக்காற்சொல்பவோ... ... *
மேன்மக்கடம்வாயான்மீட்டு .... *

இதன்பதப்பொருள்.

கூர்த்து-சினமிக்கு. நாய்-நாயானது. கௌவிக்கொள-தன்வாயாற்கடித்துக்கொள்ள. கண்டும் - பார்த்தும். பேர்த்து-மீண்டு. தம்-தம்முடைய. வாயால்-வாயினால். நாய்-அந்நாயை. கௌவினீர்-கடித்தவர். ஈங்கு-இவ்வுலகத்து. இல்லை - இல்லை. நீர்த்தன்றி-நீர்மையல்லாத. கீழ்மக்கள்-கீழானவர்கள். கீழாய-கீழ்மையாகியசொற்களை. சொல்லியக்கால்-சொன்னவிடத்து. மேன்மக்கள்-மேலானவர்கள்-தம்-தம்முடைய. வாயால்-வாயினால். மீட்டு-மறுத்து. சொல்பவோ - சொல்லுவரோ. என்றவாறு.—மேன்மக்கள்-எழுவாய். சொல்பவோ-பயனிலை. கீழானவற்றை-செயப்படுபொருள். கூர்த்து-சினங்கூர்த்து. நீர்த்தன்றி-நீர்த்தனவன்றி. மீட்டு-செய்யுள்விகாரம்.

இதன்கருத்து.

சினமிக்குநாய்தன்வாயாற்கௌவிக்கொளக்கண்டும் பேர்த்துத்தம்வாயால் அந்நாயைக்கௌவினால்வுலகத்தில்லை. நீர்மையுடைத்தன்றும்படி கீழாயசொற்களைக் கீழ்மக்கள்சொல்லினால் மேன்மக்கள் தம்வாயான்மீண்டு சொல்லுவரோவென்பதாம்..... .... (ஙி)

சினமின்மைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-எ-இ வெண்பா... (எஙி)

பொறையுடைமை.

பொறை-பொறுமையை. உடைமை-உடைத்தாயிருத்தற்றன்மை. ஆஃதாவது. பொறையென்னும்விரதத்தைநேசமாகக்குடைமையாகக்கொள்ளுதல்-சினமின்மையேயமையாதோ பொறையுடைமையும் வேண்டுமோவென்னில் - சினமின்மையாவது. தம்மைப்பிறரொருவர் சினக்கத்தக்கதுறங்களைச் செய்யின்-அதன்மேற்கோபமெழுந்திராமல் அதனைமீட்டல். பொறையுடைமையாவது-மெய் வாய் கண் மூக்குச்செவிகட்கிதமானவையாழிந்து பிறிதொன்றிலை அப்புலன்கட்குத்தக்காதகுற்றங்கள் வந்ததாகில் பூவுக்குயனைமுஞ் கரும்புக்கிரதமும்போலப் பாவிக்கப்படாமல் சுபாவமாகப்படிவம்போன்றிருத்தலும்விரதத்துக்கிடையூறியடிதண்ணீர்த்தாகமென்னுமிவற்றைப்பொறுத்தலுமாம்.

கோதையருவிக்குளிர்வரைநன்னாட..... ..... *
பேதையோடியாதுமுரையற்ற-பேதை .. .. *
யுரைப்பிற்சிதைந்துரைக்குமொல்லும்வகையான்.. ... *
வழுக்கிக்கழிதலேநன்று..... *

இதன்பதப்பொருள்.

கோதை-மாலைபோலேவிழுகிற. அருவி - அருவியினையுடைய. குளிர்-குளிர்ந்த. வரை-மலைகளையுடைய. நல்-நல்ல. நாட-நாட்டையுடையவனே. பேதையோடி-அறியாதவளோடு. யாதும்-ஒன்றினையும். உரையற்ற-சொல்லாதொழிக. பேதை-அப்பேதையாயினுன். உரைப்பில்-ஒன்றைச்சொல்லில். சிதைந்து-கெட. உரைக்கும்-சொல்லுவதலால் அவனை நீங்குதற்கு. ஒல்லும் - பொருந்தும். வகையால் - வகையினால். வழுக்கு - தப்பி. கழிதல்-நீங்குதல். நன்று. நல்லது. என்றவாறு.—கழிதல்-வழுவாய். நன்று-பயனிலை. அவனை-செயப்படுபொருள். எகாரம்-அசைநிலை. இது-ஒருத்தன்பேதைமையிடத்துப்பிறை.

இதன்கருத்து.

மலைபோற்றேன்றும் அருவியையுடையகுளிர்ந்தவரைநன்னாடனே பேதையாயிருப்பானுடன் யாதொன்றினையுஞ்சொ

பொறையுடைமை.

ல்லாதொழுக அப்பேதையாயிருவெனின்றினைச் சொல்விற்றி
தையச்சொல்லுவன் ஆதலால் பொருந்தும்வகையால் அவனை
த்தப்பிநீங்குதல் நன்றென்பதாம்..... (க)

நேரல்லார்நீரல்லசொல்லியக்கான்மற்ற... ... . ✻
தாரித்திருத்தறகுமற்றேரும்..... ... . ✻
புகழ்மையாக்கொள்ளாதுபொங்குநீர்ஞாலஞ் ... ... ✻
சமழ்மையாக்கொண்டுவிடும்..... ... ✻

இதன்பதப்பொருள்.

நேரல்லார்-தமக்குநிகரல்லாதார். நீர்-நீர்மை. அல்ல-அல்
லாதசொற்கள். சொல்லியக்கால்-சொன்னால். அது-அச்சொ
ல்லை. தாரித்து-பொறுத்து. இருத்தல்-இருத்தல். தகுதி-ஒரு
வற்குப் பொறுமையாவது. மற்று - அதனைப்பொருளில்.
புகழ்மையர்-புகழுந்தன்மையாக. கொள்ளாது-கொள்ளாமல்.
பொங்கு - மிக்க. நீர்-நீர்சூழ்ந்த. ஞாலம் - பூமி. சமழ்மையா-
அதனைத்தாழ்வாக. கொண்டுவிடும் - கொள்ளும். என்றவா
று.— ஞாலம்-எழுவாய். கொண்டுவிடும்-பயனிலை. தாரித்திரு
த்தல்-செய்யுள்விகாரம். சமழ்ப்பு-மதிக்கப்படாததாழ்வு. மற்
றும-ஒரும்-இடைச்சொல். இது-நிகரல்லாதார்பொறை.

இதன்கருத்து.

தமக்குநிகரல்லார் ஈனர்ந்தநீர்மையல்லாதனவற்றைச்சொ
ன்னால் அச்சொல்லைப் பொறுத்திருத்தல் ஒருவற்குத்தகுதி
அன்றிப்பொறுதலைப்புகழாகக்கொள்ளாதுபொங்குநீர்ஞா
லமதிக்கப்படாததாழ்வாகக்கொள்ளுமென்பதாம்... ... (உ)

காதலார்சொல்லுங்கடுஞ்சொல்லுவந்தூரைக்கு..... ✻
பேதிலாரின்சொலித்தீதாமோ-போதெலா... ..... ✻
மாதர்வண்டார்க்குமலிகடற்றண்சேர்ப்ப ... . ✻
வாவதறிவார்ப்பெறின்..... .... ✻

இதன்பதப்பொருள்.

காதலார்-தம்மேற்காதலையுடையார். சொல்லும் - சொல்
லுகின்ற. கடுமை-கடிய. சொல்-சொல்லானது. ஏதிலார் - அய

லார். உவந்து-மகிழ்ந்து. உரைக்கும்-சொல்லும். இன்-இனிய. சொல்லை-சொல்லைப்பார்க்கிலும். தீதாமோ - தீதாகவற்றோ. போதெலாம்-பூகதடோறும். மாதர்-அழகிய. வண்டு-வண்டுகள். ஆர்க்கும்-ஆரவாரிக்கும். மலி-மிக்க. தண்-குளிர்ந்த. கடந்தேர்ப்ப-கடந்தைமையையுடையவனே. ஆவது - அவ்விரண்டினையுஞ்சீர்தூக்கி. அறிவார்-அறியவல்லாரை. பெறின்-பெற்றால். என்றவாறு.—கடுஞ்சொல்-எழுவாய். தீதாமோ-பயனிலை. கடுஞ்சொல்-இடைகுறுஞ்சொல. இது-காதலார்பொறை.

இதன்கருத்து.

போதெலாம்வண்டார்க்குமலிகடந்தண்சேர்ப்பனேசீர்தூக்கியறியவல்லாரைப்பெறின்தம்மேற் காதலையுடையார்சொல்லுங்கடியசொல் அயலாருவந்துசொல்லுறின்சொற்றீதாலத்தீதாமோவென்பதாம்..... .... (ஈ)

அறிவதறிந்தடங்கியஞ்சுவதஞ்சி..... .... ❋
யுறுவதிலகுவப்பச்செய்து-பெறுவதலை..... ... ❋
லின்புற்றுவாழுமியல்புடையாரொருஞாலத்துற்... ... ❋
துன்புற்றுவாழ்தலரிது... ... ... ❋

இதன்பதப்பொருள்.

அறிவது-அறியத்தக்கதனை. அறிந்து-உணர்ந்து. அடங்கி-அடங்கி. அஞ்சுவது-அஞ்சப்படுவதனை. அஞ்சி-பயந்து. உறுவது-தங்கையுற்றபொருளை. உலகு - உலகத்தார். உவப்ப-மகிழ. செய்து-கொடுத்தலைச்செய்து. பெறுவதலால் - தாம்பெற்றதலால். இன்பு-இன்பத்தை. உற்று-அடைந்து. வாழும் - வாழ்கின்ற. இயல்புடையார் - இயல்பினையுடையார். எஞ்ஞான்றும்-எந்நாளும். துன்பு-துன்பத்தை. உற்று - அடைந்து. வாழ்தல்-வாழுதல். அரிது-அருமை. என்றவாறு.—வாழ்தல்-எழுவாய்-அரிது-பயனிலை. இதிற்பொறையுடைமையிலலையெனிற்கெடுவழியிலேசெல்லும்புலன்களைமீட்டுத்தப்பாமை யாசத்தாக்கித்தீர்த்துக்கொண்டிருத்தலேபொறையுடைமையாவது.

இதன்கருத்து.

யாவராலுமறிதற்கரிதாகியறிய வேண்டுவதாயிருந்ததுள்ளபடியறிந்து அதற்குத்தக்ககாமவெகுளிகளின்வழிச்செல்லாத

டங்கி அஞ்சுவதாகுங்கொலுமுதலாயினபாவங்களேயஞ்சி மறு மைக்குவந் துறுவதாய் அறங்களே உயர்ந்தோருவக்கும்படி செய்து பெற்றபொருளளவிலுல் இன்புற்று வாழும் இயல்பினே யுடையார் எல்லாநாளுந் துன்புற்றுப்பிறந்திறந்து வாழ்தல் அரிதென்பதாம்..... (சு)

வேற்றுமையின்றிக்கலந்திருவர்நட்டக்காற்..... ..... ✻
றேற்றுவொழுக்கமொருவன்கணுண்டாயி .... ✻
லூற்றுந்துணையும்பொறுக்கபொருளையிற் .... ✻
றூற்றுதேதூரவிடல்..... .... ✻

இதன்பதப்பொருள்.

வேற்றுமை-வேறுபடுந்தன்மை. இன்றி-இல்லாமல். கலந்து-பொருந்தி. இருவர்-இரண்டுபேர். நட்டக்கால்-நட்புச் செய்தகாலத்து. தேற்று-தெளியத்தகாத. ஒழுக்கம்-நடை. ஒருவன்கண்-ஒருவனிடத்தில். உண்டாயின்-உண்டாயிருந்தால். ஆற்றும்-அவன்கொண்டமெருளியடங்கும். துணையும்-அளவும். பொறுக்க-பொறுக்கக்கடவன். பொருளையில்-பொறுக்கமாட்டாளையில். தூற்று-அவன்செய்த தீமைகளேப்பிறர்க்குரையாது. தூரவிடல்-அவனட்பினே நீளவிடுக. என்றவாறு.—ஒருவன்-எழுவாய். தூரவிடல்-பயனிலே. நட்பினே-செயப்படுபொருள். எகாரம்-அசைநிலே. தேற்றுவொழுக்கமென்பது-பிறர்க்கறிவித்தற்காகாதவொழுக்கம். இது-ஒருவன் ஆற்றுந்துணையும் பொறுக்கும்பொறை.

இதன்கருத்து.

வேறுபாடின்றிப்பொருந்தி இருவர்நட்புச்செய்தால் அறிவின்மையால் வருந்தியவொழுக்கம் ஒருவன்மாட்டுளதாயின் ஆற்றுமளவும் பொறுக்கபொருளையில் அவன்செய்த தீமைகளேப் பிறர்க்குரையாது அவனட்பினேத்தூரவிடுக வென்பதாம்..... (கூ)

இன்னுசெயினுமினியவொழிகென்று..... ..... ✻
தன்னேயேதாமேவினல்லது-துன்னிக்..... ..... ✻
கலந்தாரைக்கைவிடுதல்கானகநாடு..... ..... ✻
பிலங்கிற்கும்வில்லெலிது..... ..... ✻

இதன்பதப்பொருள்.

இன்னு - இன்னுதனவற்றை. செயினும்-நட்டார்செய்தாராயினும். இனிய-அவையினியவே. ஒழிகென்று-அவற்றின்மேற்றினத்தையொழிகவென்றுகருதி. தன்னையேதான்-தன்னைத்தானே. நோவின்-நொந்துகொள்வது. அல்லது-அல்லாமல். தன்னி-பொருந்தி. கலந்தாரை-நட்டாரை. கைவிடுதல்-விட்டுவிடல். காணகம்-காட்டையுடைய. நாட-நாட்டையுடையவனே. விலங்கிற்கும்-மிருகங்கட்கும். விள்ளல்-சொல்லல். அரிது-அரிது. என்றவாறு.--கைவிடுதல் - எழுவாய். அரிது-பயனிலை. கலந்தாரை-செயப்படுபொருள். தன்னைத்தாழ்தலென்பது - உடம்பினுற்றானேதோன்றுந் துன்பங்களான்வருமின்னுமையும். ஒன்றனுலேதோய்பட்டுவருமின்னுமைகளும்-கன்மபலமென்று கினஞ்செல்லாத வாறுபோலப்பிறர்செய்த இன்னுமையும் இவர்சார்வாகவந்தது நாமூன்புசெய்த வினையென்றுநோவது. இது - தன்னைச்செய்த இன்னுமையைப் பொறுத்தல்.

இதன்கருத்து.

காணகநாடனைநட்டாரின்னுதனவற்றைச் செய்தாராயினும் அவையினியவேயெனத்தீயனவாகக் கொள்ளாதொழிகவென்றுகருதி என்னகுற்றத்தாலே யவரின்னுதனசெய்யவந்ததென்றுதன்னைத்தானேநோவதல்லதுநட்டாரைக்கைவிடுதல்விலங்கிற்குஞ்சொல்லுதல் அரிதென்பதாம்..... .. .. (சூ)

பெரியார்பெருநட்புக்கோடலுஞ்செய்த..... *
வரியபொறுப்பவென்றன்றே-வரியோர்... ... ... *
வொல்லெனருவியுயர்வரைநன்ன..... ..... *
நல்லசெய்வார்க்குதீதமர்..... ... ... *

இதன்பதப்பொருள்.

பெரியார்-பெரியோருடன். பெரும்-பெரிய. நட்பு-உறவு. கோடல்-கொள்ளுதல். தாம்-தாங்கள். செய்த-செய்யப்பட்ட. அரிய-அரிதாகியபிழைகளை. பொறுப்பவென்று-பொறுப்பனென்று. அன்றே-அல்லவோ. ஒல்லென்-ஒல்லென்றொலிக்கும். அருவி - அருவியையுடைய. உயர்-உயர்ந்த. -வரை

பொறையுடைமை.

மலிகளையுடைய. நல்-நல்ல. நாட-நாட்டையுடையவனே. நல்ல-நல்லனவற்றை. செய்வார்க்கு-செய்யுமவர்க்கு. தமர்-சுற்றத்தார். அரியதோ-கிடையாதோ. என்றவாறு.—தமர்-எழுவாய். அரியதோ-பயனிலை. இது-பொறையுடைமையின் பெருமை. ஒல்-ஒவிக்குறிப்பு.

இதன் கருத்து.

ஒல்லென்றொலிக்கும் அருவியினையுடைய உயர்ந்தவனை நண்ணடனே பெரியாரோடு நட்புச்செய்தல்தான்செய்யப்பட்டவரியபிழைகளைப் பொறுப்பொன்றன்றோ நல்லனவற்றைச்செய்வார்க்குத்தமரரியதோவென்பதாம்..... ... .. (எ)

வற்றிமற்றுற்றப்பசிப்பினும்பண்பிலார்க் ..... *
கற்றமறியவுரையற்க-வற்ற..... ..... *
மறைக்குந்துணையார்க்குரைப்பவேதம்மைத்.. ... *
துறக்குந்துணிவிலாதார்,..... .... *

இதன்பதப்பொருள்.

வற்றி-உடம்புமெலிந்து. ஆற்ற-மிக. பசிப்பினும்-பசித்தாலும். பண்பிலார்க்கு-நட்புப்பண்பில்லாதார்க்கு. அற்றம்-தம்முடையவறுமையை. அறிய-அறியும்படி. உரையற்க-சொல்லாதொழிவர். அற்றம்-அவ்வறுமையை. மறைக்கும்-கெடுக்கும். துணையார்க்கு-அளவினையுடையார்க்கு. உரைப்ப-சொல்லுவர். தம்மை-தமதுயிரை. துறக்கும்-நீக்கும். துணிவு-தெளிவு. இலாதார்-இல்லாதவர். ஏன்றவாறு.—துணிவிலாதார்-எழுவாய். உரைப்ப-பயனிலை. மற்றும்-ஏகாரமும்-அசைநிலை. இது-தம்பசியைப்பொறுத்தல்.

இதன்கருத்து.

தம்முடையவுடம்பு மிகமெலிந்து பசிப்பினுந்தம்மொடு நட்புப்பண்பில்லாதார்க் கறியத்தமது வறுமையைச் சொல்லார் அவ்வறுமையைக்கெடுக்குந்துணையார்க்குச்சொல்லுவர் பெரிதான பொறையுடைமையைக் காத்துத்தம்முயிரை நீக்குந்துணிவிலாதானென்பதாம்..... .... (அ)

இன்பம்பயந்தாங்கிழிவுதலைவரினு..... *
மின்பத்தின்பக்கமிரிந்தைக்க-வின்ப..... *
மொழியாமைகண்டாலுமோங்கருவிநாட ... ... *
பழியாகாவாறேதலை..... *

இதன்பதப்பொருள்.

இன்பம் - இன்பத்தை. பயந்து-தந்து. ஆங்கு - அவ்விட த்து. இழிவு - இழிவரவு. தலைவரினும் - தம்மாட்டுவரக்கண் டாராயினும். இன்பத்தின் - அவ்வின்பத்தினுடைய. பக்கம்- திறம். இரிந்தைக்க-ஒழிக. இன்பம் - அவ்வின்பமான து. ஒழி யாமை-நீங்காது. கண்டாலும் - தம்மிடத்துவரக்கண்டாரா யினும. ஓங்கு-உயர்ந்த. அருவி - அருவியினையுடைய. நாட- மலைநாடனே. பழி-தமக்குப்பழி. ஆகா-ஆகாத. ஆறே-தெ றியே. தலை-தலைமை. என்றவாறு.—ஆறு-எழுவாய். தலை-பய னிலை. பழியென்பது - நிலையாதவின்பத்தினை விரும்பி நிலைநிற் கும்வீடுபேற்றை விலைவிக்கிற விரதத்தைத்தவிர்ந்தாரென்று பெரியோராலேபழிக்கப்படுதல். இது - பொல்லாதவின்பத் தையொழியும்பொறை.

இதன்கருத்து.

ஓங்கருவிநாடனே இன்பத்தைப்பயந்து அவ்விடத்தினிழி வரவுதம்மாட்டுவரினும் அவ்வின்பத்தின்றிறமொழிக. அவ்வி ன்பநீங்காது தம்மாட்டுவரக்கண் டாராயினுந் தமக்குப்பழி யாகாதநெறியே தலைமையென்பதாம்..... ..... (கூ)

தான்கெடினுந்தக்கார்கேடெண்ணற்கதன்னுடம்பி *
னூன்கெடினுமுண்ணுர்கைத்துண்ணற்க-வான்கவித்த *
வையகமெல்லாம்பெறினுமூரையற்க..... *
பொய்யோடிடைமிடைந்தசொல்..... *

இதன்பதப்பொருள்.

தான்-தான். கெடினும்-கெடுவழியினும். தக்கார்-தன்னை க்கெடுக்கத்தக்கார்க்கு. கேடு-அழிவை. எண்ணற்க - எண்ணு தொழிக. தன்-தன்னுடைய. உடம்பின்-உடம்பினது. ஊன்- தசை. கெடினும் - பசியான்மெலிந்துகெடினும். உண்ணுர்- உண்ணப்படாதார். கைத்து - கைப்பொருள். உண்ணற்க-

பிறர்மனை நயவாமை.

உண்ணுதொழிக. வான்-ஆகாயத்தினுல். கவிந்த-கவிக்கப்பட்ட. வையகம்-பூமி. எல்லாம் - முழுமையும். பெறினும்-பெற்றாயினும். உரையற்க - சொல்லாதொழிக. பொய்யோடு-பொய்யுடனே. இடைமிடைந்த-கலந்த. சொல் - சொல்லை. என்றவாறு.—ஒருவன்-எழுவாய். எண்ணற்க-பயனிலை. கேட்டை - செயப்படுபொருள். ஒருவன் - எழுவாய். உண்ணற்க-பயனிலை. கைத்தை-செயப்படுபொருள். ஒருவன்-எழுவாய். உரையற்க-பயனிலை. சொல்லை. செயப்படுபொருள். பொய்யோடிடைமிடைந்தசொல்லென்பது-தனக்கும் பிறர்க்குந் துன்பம்விளைத்தலால் பொய்சொல்லற்க அதனோடொத்துச் செறிந்தசொல்லாகியமெய்யும் பிறர்க்குத்துன்பத்தைப்பயக்கிறபொய்யின்றன்மைத்தாதலால் அப்பெற்றிப்பட்டமெய்யுஞ்சொல்லலாகாது.

இதன்கருத்து.

தான்கெடுவழியினுந்தன்னைக் கெடுக்கத்தக்கார்க்குக்கேட்டையெண்ணுதொழிக தன்னுடம்பினான்வற்றிக்கெடினுமுண்ணப்படாதார் கைப்பொருளை யுண்ணற்கவான்கவிந்தவையகமெலாம்பெறினும் பொய்யோடுகலந்தசொல்லைச்சொல்லாதொழிகவென்பதாம்..... .... (ஐ)

பொறையுடைமைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-அ-இ வெண்பா... (அஐ)

பிறர்மனை நயவாமை.

பிறர்-அன்னியருடைய. மனை-மனைவியை. நயவாமை-விரும்பாமை. அஃதாவது-தன்மனையாளிடத்தொரு பழுதுண்டாயுற்றனக்கதனுண்டாகியமானமும் அதனை நீக்கவொண்ணுமையும் தான்மரிக்குமளவும் ஒருவரருகு போயிருந்தற்கு நாணமுடைமையால்வரும் நெஞ்சுதுக்கமுந் தானிறந்தபின்பு நிந்தாகியபழிப்புரையுநினைந்து பிறர்மனையாளிடத்துத்தானினைந்த பொல்லாவொழுக்கம் ஒழுகுங்காலத்தவர்கட்கும்

ஓஃதிம்மரியாதையன்றேவென்றும் மறுமைக்கு நரகமென்றும் இம்மைக்கும் அரசனுந்தனக்குக்கேடுவருமென்றுநிற்க நீதக்கபழிப்புளையென்றுமெண்ணிப்பிறர்மனையாளை நயவாமல் அவண்மேற்சென்றமனத்தினைமீட்டலென்பதாம்.

அச்சம்பெரிதாலதற்கின்பஞ்சிற்றளவா... .... ※
னிச்சநினையுங்காற்கோக்கொலையா-னிச்சலும்... ... ※
கும்பிக்கேகூர்த்தவினையாற்பிறன்றார... ..... ※
நம்பற்கநாணுடையார்..... ※

இதன்பதப்பொருள்.

அச்சம் - பிறர்மனையாளிடத்திற்சென்றுறும்பயம். பெரிதால்-மிகவுண்டாமாதலால். அதற்கு-அதுக்கு. இன்பம் - இன்பமும். சிற்றளவால்-சிறியவளவினதால். நிச்சம்-நாடோறும். நினையுங்கால்-ஆராயுங்கால். கோக்கொலையால்-அரசனுல்வருங்கொலையுமுளதால். நிச்சலும்-நாடோறும் கும்பிக்கே-இந்தச்செய்கைமறுமைக்குநரகத்திற்கே. கூர்த்த - மிக்க. வினைபால் - தீவினையாதலால். பிறன்றாரம் -பிறன்றாரத்தை. நம்பற்க-விரும்பாதொழிக. நாணுடையார்-நாணமுடையார். என்றவாறு.—நாணுடையார்-எழுவாய். நம்பற்க-பயனிலை. பிறன்றாரத்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பிறன்றாரத்தைவிரும்பினுல் அச்சம்பெரிதாமாதலால் அதற்கின்பஞ்சிறியவளவினதால்நாடோறுமாராயுங்கால் அரசனுல்வருந்தண்டமுமுளதால் நாடோறுநரகத்திற்கே மிக்கதீவினையாதலால் பிறன்மனையாளைவிரும்பாதொழிக நாணமுடையாரென்பதாம்..... (ச)

அறம்புகழ்கேண்மைபெருமையிந்நான்கும் ... ... ※
பிறன்றாரநச்சுவார்ச்சேரா-பிறன்றார..... ... ※
நச்சுவார்ச்சேரும்பழிபாவமென்... .... ※
றச்சத்தோடிந்நாற்பொருள்..... ※

இதன்பதப்பொருள்.

அறம்-தருமமும். புகழ்-கீர்த்தியும். கேண்மை - நட்பும். பெருமை-பெருமையுமென்கின்ற. இந்நான்கும்-இந்தநான்

இஃதிம்மரியாதையன்றுவென்றும் மறுமைக்கு நரகமென்றும் இம்மைக்கும் அரசனுற்றனைக்குக்கேடுவருமென்றுநீத்தக்கபழிப்புமையென்றுமெண்ணிப்பிறர்மனையாளை நயவாமல் அவண்மேற்சென்றமனத்தினைமீட்டலென்பதாம்.

அச்சம்பெரிதாலதற்கின்பஞ்சிற்றளவா... .... ※
னிச்சநினையுங்காற்கோக்கொலையா-னிச்சலுங்... ... ※
கும்பிக்கேகூர்த்தவினையாற்பிறன்மூர..... ..... ※
நம்பற்கநாணுடையார்..... ..... ※

இதன்பதப்பொருள்.

அச்சம் - பிறர்மனையாளிடத்திற்சென்றுறீபயம். பெரிதால்-மிகவுண்டாமாதலால். அதற்கு-அதுக்கு. இன்பம் - இன்பமும். சிற்றளவால்-சிறியவளவினதால். நிச்சம்-நாடோறும். நினையுங்கால்-ஆராயுங்கால். கோக்கொலையால்-அரசனுல்வருங்கொலையுமுளதால். நிச்சலும்-நாடோறும் கும்பிக்கே-இந்தச்செய்கைமறுமைக்குநரகத்திற்கே. கூர்த்த - மிக்க. வினையால் - தீவினையாதலால். பிறன்மூரம் - பிறன்மூரத்தை. நம்பற்க-விரும்பாதொழிக. நாணுடையார்-நாணமுடையார். என்றவாறு.—நாணுடையார்-எழுவாய். நம்பற்க-பயனிலை. பிறன்மூரத்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பிறன்மூரத்தைவிரும்பினுல் அச்சம்பெரிதாமாதலால் அதற்கின்பஞ்சிறியவளவினதால்நாடோறுமாராயுங்கால் அரசனுல்வருந்தண்டமுமுளதால் நாடோறுநரகத்திற்கே மிக்கதீவினையாதலால் பிறன்மனையாளைவிரும்பாதொழிக நாணமுடையாரென்பதாம்..... (ஏ)

அறம்புகழ்கேண்மைபெருமையிந்நான்கும் ... ... ※
பிறன்மூரநச்சுவார்ச்சேரா-பிறன்மூர..... ... ※
நச்சுவார்ச்சேரும்பழிபாவமென்... .... ※
நச்சற்தேதாடிந்நாற்பொருள்..... ..... ※

இதன்பதப்பொருள்.

அறம்-தருமமும். புகழ்-கீர்த்தியும். கேண்மை - நட்பும். பெருமை-பெருமையுமென்கின்ற. இந்நான்கும்-இந்தநான்

சும். பிறன்-அன்னியனுடைய. தாரம்-மனைவியை. நச்சுவார்-விரும்பினோர். சேரா-சேராது. பிறன்-அன்னியனுடைய. தாரம்-மனைவியை நச்சுவார்-விரும்பினோர். சேரும்-சேருவதினாலே. பகை-பகையும். பழி-பழியும். பாவமென்று-பாவமுமென்று சொல்லப்பட்ட. அச்சத்தோடு-பயத்துடனே கூட. இந்நான்கொருளும்-இந்நான்குபொருளும். என்றவாறு.—நான்கு-எழுவாய். சேரா-பயனிலை. நான்பொருள்-எழுவாய். சேரும்-பயனிலை.

இதன்கருத்து.

அறமும்புகழும் நட்பும்பெருமையுமாகிய விந்நான்கும் பிறன்மனையாளைக் காதலிப்பாரைச்சேரா. காதலிப்பாரைப் பகையும் பழியும்பாவமும் அச்சமுமாகியவிந்நான்குபொருளுஞ்சேருமென்பதாம்..... (உ)

புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சந்..... .. *
துய்க்குமிடத்தச்சந்தோன்றுமதற்காப்பச்ச..... ... *
மெக்காலுமச்சந்தருமாலெவன்கொலோ..... *
வுட்கான்பிறனில்புகல்..... *

இதன்பதப்பொருள்.

புக்கவிடத்து-பிறர்மனையாளிடத்துச்சென்றுபுகுங்காலத்து. அச்சம்-வருவதோரச்சம். போதருமபோது-மீண்டுபோதருங்காலத்து. அச்சம்-வருவதோரச்சம். துய்க்குமிடத்து-நுகருங்காலத்து. அச்சம்-வருவதோரச்சம். தோன்றுமல்-அந்நுகர்ச்சியைப்பிறரறியாமல். காப்பு-காக்குங்காலத்து. அச்சம்-வருவதோரச்சம். எக்காலும்-எப்பொழுதும். அச்சம்-அச்சத்தையே. தருமால்-தருமாதலால். எவன்கொலோ-என்னைகொல்லோ. உட்கான்-அஞ்சாது. பிறனில்-பிறன்மனையாளை. புகல்-விரும்புதல். என்றவாறு.—புகல்-எழுவாய். எவன்கொலோ-பயனிலை. பிறனில்லை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

புக்காலத்தின்கண் வருவதோரச்சம்-மீண்டுபோதுங்காலத்துவருவதோரச்சம்-நுகருங்காலத்துவருவதோரச்சம்-அந்நுகர்ச்சியைப்பிறரறியாமற் காக்குங்காலத்து வருவதோரச்ச

மீ - எக்காலத்தும் அச்சமே தாராநின்ற தாதலாற் பிறன்மனை யாளையஞ்சாது விருப்புதலென்ன பயனேக்கருதியோ வென்ப தாம்..... (கூ)

காணிற்குடிப்பழியாங்கையுறிற்கால்குறையு..... *
மாணின்மைசெய்யுங்காலச்சமா-நீணரயத்..... *
துஞ்சம்பயக்குமாற்றுச்சாரிநீகண்ட..... *
வின்பமெனக்கெனைத்தாற்கூறு..... *

இதன்பதப்பொருள்.

காணில்-பிறர்மனையாளிடத்துச்சென்ற காலத்தொருவர்காணில். குடி - தன்குடிக்கு. பழியாம் - பழியாகும். கையுறில்-கைப்பிடில். கால்-தன்கால். குறையும்-குறைப்புண்ணும். மாண்-மாட்சிமை. இன்மை-இல்லாதசெய்கையிலே. செய்யுங்கால்-ஒழுகுகாலையில். அச்சமாம்-அச்சமுண்டாம். நீள்-நீண்ட. நிரயத்துன்பம்-நரகத்துன்பத்தினை. பயக்குமால் - உண்டாக்குமாதலால். துச்சாரி - பொல்லாவொழுக்கமுடையாய். நீகண்ட-நீபார்த்த. இன்பம் - இன்பம். எனைத்து - எத்தன்மைத்து. எனக்கு-எனக்கு. கூறு - அதனையறியச்சொல். என்றவாறு.—நீ-எழுவாய். கூறு-பயனிலை. அதனை-செயப்படுபொருள். ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

ஒருவர்காணிற்குடிப்பழியாம் கைப்படிற்றன்கால் குறைப்புண்ணும்மாண்டகைமையையழிவிக்கும் அச்சமிகவுண்டாம் நீண்டநரகத்திடும்பையையுந் தருதலாற் பொல்லாத செய்கையையுடையாய் நீயாராய்ந்த வின்பமெத்தன்மையா யிருக்கும் எனக்கதனைச்சொல்லென்பதாம்..... (கூ)

செம்மையொன்றின்றிச்சிறியாரினத்தராய்க்..... *
கொம்மைவரிமுலையாடோண்மீஇ-யும்மை..... *
வலியாற்பிறர்மனைமேற்சென்றூரேயிம்மை... ... ... *
யலியாகியாடியுண்பார்..... .... *

இதன்பதப்பொருள்.

செம்மை-மனத்திற்செப்பம். ஒன்று - ஒன்றும். இன்றி-இல்லாமல். சிறியார்-சிறியவர்கள். இனத்தராய்-இனத்தையுடையராய். கொடுமை-இளமையும். வரி-தேமலையும்பொருந்திய. மூலையாள்-மூலையாருடைய. தோள்-தோளினிடத்தில். மரீஇ-நெடுநாளாகப்பழகி. உம்மை-மூற்பிறப்பில். வலியால்-தமதுவலியால். பிறர்-அன்னியருடைய. மனைமேல் - மனையாளிடத்து. சென்றூர்-சென்றவர். இம்மை-இப்பிறப்பில். அலியாகி-அலிகளாய். ஆடி-கூத்தாடி. உண்பார்-உண்பர். என்றவாறு.—சென்றூர்-எழுவாய். உண்பார்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

மனத்திற்செப்பமொன்றின்றிச் சிறியாரினத்தையுடையராய் இளமையையுந் தேமலையுமுடைய மூலையினுள் தோளை நெடுநாளாகப்பழகி மூற்பிறப்பின்கட்டம்வலியான் வலிசெய்து பிறர்மனைமேற்சென்றழுகிஞர் இப்பிறப்பின்கண்ணலிகளாய்க்கூத்தாடியுண்பரென்பதாம்..... .... (சு)

பல்லாரறியப்பறையறைந்தநாட்கேட்டுக்... ... ... *
கல்யாணஞ்செய்துகடிபுக்க-மெல்லியற்... .... *
காதன்மனையாளுமில்லாளாவென்றெருவ ... . *
னேதின்மனையாளைநோக்கு..... .... *

இதன்பதப்பொருள்.

நாள்-நல்லநாளை. கேட்டு-கேட்டு. பல்லார்-பலரும். அறிய-அறியும்படி. பறை-பறையினை. அறைந்து-அடித்து. கல்யாணம்-கல்யாணத்தை. செய்து-பண்ணி. கடி-காவல. புக்க-புகுந்த. மெல்-மெல்லிய. இயல்-இயல்பினையுடையதான-காதல்-காதலிக்கப்பட்ட. மனையாளும் - மனைவியும். இல்லாளா-இல்லாளாக. ஒருவன்-ஒருதீதன். எதில்-அயலாருடைய. மனையாளை-மனைவியை. நோக்கு - பார்க்கும்பார்வை. என்-யாதுதான். என்றவாறு.—நோக்கு - எழுவாய். என்-பயனிலை. எதின்மனையாளை - செயப்படுபொருள். கடிபுகுதல் - தன்னுடம்புக்குப்பரிகாரியாய்வந்துபுகுதலுமாம்.

இதன்கருத்து.

நல்லநாள்கேட்டுப் பலருமறியப் பறையறைந்து மணஞ் செய்யப்பட்டுக்காவல் பூண்டமெல்லிய வியல்பினையுடையமா னின் மனையாளுந்தன்மனையகத்தாளாக ஒருவனையன்மனையா னக்காதவித்துநோக்குநோக்கென்னையென்பதாம் ... (சு)

அம்பலயலெடுப்பவஞ்சித்தமர்பரீஇ .... ✻
வம்பலன்பெண்மரீஇமைந்துற்று-நம்பு..... ... ... ✻
நிலைமையிலெஞ்சத்தான்றுப்புரவுபாம்பின்..... .. ✻
றலைநக்கியன்னதுடைத்தீது..... ✻

இதன்பதப்பொருள்.

அயல்-அயலார். அம்பல் - அலர்தூற்றுதல். எடுப்ப-எடுத்துச்சொல்ல. அஞ்சி - பயந்து. தமர் - உறவின்முறையார். பரீஇ-வருந்த. வம்பலன்-அயலானுடைய. பெண்-மனையாளை. மரீஇ-மருவி. மைந்து - மயக்கத்தை. உற்று-அடைந்து. நம்பும் - விரும்புகின்ற. நிலைமை - நிலை. இல்-இல்லாத. நெஞ்சத்தான்-நெஞ்சினையுடையவன். றுப்புரவு - நாகருறுகர்ச்சி. பாம்பின்-பாம்பினது. தலை-தலையை. நக்கியன்னது - நக்கியின்புற்றதுபோலும். உடைத்து-தன்மையையுடைத்து. என்றவாறு.—றுப்புரவு-எழுவாய். உடைத்து-பயனிலை.

இதன்கருத்து.

அயன்மனையினுள்ளார் பழிதூற்ற அஞ்சித்தன்னுற்றூர்வருத்த ஏதிலான்மனையாளைமருவிமயக்கமூற்றுவிரும்புகின்ற நிலையில்லாத நெஞ்சினையுடையான் நாகருறுகர்ச்சி பாம்பினது தலையைநக்கியின்புற்றூற்போலுந் தன்மையையுடைத்தென்பதாம் ..... (எ)

பரவாவெளிப்படாபல்லோர்கட்டங்கா... .... ✻
வுரவோர்கட்காமமேநாயோவொகொடிதே..... ... ... ✻
விரவாருணரப்படலஞ்சியாது..... ✻
மூரையாளுள்ளாறிவிடும்..... .... ✻

இதன்கருத்து.

நல்லறாள்கேட்டுப் பலருமதியப் பறையறைந்து மணஞ் செய்யப்பட்டுக்காவல் பூண்டமெல்லிய வியல்பினையுடையகா தன் மனையாளுந்தன்மனையகத்தாளாக ஒருவனயன்மனையா னைக்காதலித்துநோக்குமேனாக்கென்னையென்பதாம் ... (சு)

அம்பலையலெடுப்பவஞ்சித்தமர்பரீஇ .... *
வம்பலன்பெண்மரீஇமைந்துற்று-நம்பு..... ... ... *
நிலைமையினெஞ்சத்தான்றுப்புரவுபாம்பின்..... .. *
றலைநக்கியன்னதுடைத்து..... *

இதன்பதப்பொருள்.

அயல்-அயலார். அம்பல் - அலர்தூற்றுதலை. எடுப்ப-எடு த்துச்சொல்ல. அஞ்சி - பயந்து. தமர் - உறவின்முறையார். பரீஇ-வருந்த. வம்பலன்-அயலானுடைய. பெண்-மனையாளை. மரீஇ-மருவி. மைந்து - மயக்கத்தை. உற்று-அடைந்து. நம் பும் - விரும்புகின்ற. நிலைமை - நிலை. இல்-இல்லாத. நெஞ்சத் தான்-நெஞ்சினையுடையவன். துப்புரவு - நுகருநுகர்ச்சி. பா ம்பின்-பாம்பினது. தலை-தலையை. நக்கியன்னது - நக்கியின் புற்றதுபோலும். உடைத்து-தன்மையையுடைத்து. என்றவா று.—துப்புரவு-எழுவாய். உடைத்து-பயனிலை.

இதன்கருத்து.

அயன்மனையினுள்ளார் பழிதூற்ற அஞ்சித்தன்னுரிமைவரு ந்தவறிலான்மனையாளைமருவிமயக்கமுற்றுவிரும்புகின்ற நிலை யில்லாத நெஞ்சினையுடையான் நுகருநுகர்ச்சி பாம்பினது தலையைநக்கி யின்புற்றுப்போலுந் தன்மையையுடைத்தென்ப தாம் ..... (எ)

பரவாவெளிப்படாபல்லோர்கட்டங்கா... .... *
வுரவோர்கட்காமமேநோயோவொடிதே..... ... ... *
விரவாருணுப்படலஞ்சியாது..... *
மூளையாதுள்ளாநிவிடும்..... .... *

இதன்பதப்பொருள்.

உரவோர்கண் - அறிவுடையார்மனத்தின்கட்டோன்றிய. காமம்-காமம். பரவா-பின்னர்வளராது. வெளிப்படா-வெளிப்படாது. பல்லோர்கண்-பலரிடத்தினும். தங்கா-தங்காதாதலால். நோய்-அக்காமத்தால்வருநோயானது. ஓஒகொடிது-மிகவுங்கொடிதாயிருந்தது. விரவாருள்-பகைவரிடத்து. நாணுப்படல்-அவ்வுரவோர்கட்குநாணம்வருமென்று. அஞ்சி-பயந்து. யாதும்-யாதொன்றும். உரையாது-பிறருக்குச்சொல்லாது. உள்-உள்ளே. ஆறிவிடும் - ஆறிப்போம். என்றவாறு.—நோய் - சுழுவாய். ஆறிவிடும்-பூயனிலை. ஏகாரம்-அசைநிலை. இது-யாவரையுமயக்கிவிப்பதொன்றுதலால் இத்தத்தீயவொழுக்கத்திலேயெழுந்திருந்த மனத்தினையிப்படி வலிதாகமீட்டலென்பது காட்டுதற்குப்பிறர்மனை நயவாமையிலே சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

அறிவுடையார்மனத்தின்கட்டோன்றியகாமம் பின்னர்வளராது வெளிப்படாது பலர்மாட்டுந்தங்காதாதலால் அக்காமத்தான்வருநோய் மிகவுங்கொடிது பகைவர்முகத்து அவ்வுரவோர்கட்குநாணம்வருமென்றஞ்சியாதொன்றும்பிறர்க்குரைக்கப்படாதேயுள்ளேயாறிவிடுமென்பதாம்..... .. ... (அ)

அம்புமழலுமவிர்கதிர்ஞாயிறும்..... ... ...

இதன்கருத்து.

அம்பும் நெருப்புமிளங்கிய கதிர்களையுடைய ஞாயிறுங் கனன்றுசுடினும் உடம்பைச்சுடும் அத்துணையே உண்ணின்ற மனத்தைக்கவலைசெய்து சினந்துசுடுமாதலால் காமம் அவற்றினும் அஞ்சத்தகுமென்பதாம்..... (௬)

உளருளெழுந்தவருகெழுசெந்தீக்கு..... ..... *
நீருட்குளித்தமுயலாகு-நீருட்..... ..... *
குளிப்பினுங்காமஞ்சுடுமேகுன்றேறி... ..... *
யொளிப்பினுங்காமஞ்சுடும்..... ... . *

இதன்பதப்பொருள்.

உளருள் - உளரிலே. எழுந்த - எழுந்தெரிகின்ற. உருகெழு-அஞ்சத்தக்க. செந்தீக்கு-செந்தீயால்வருமிடும்பைக்கு. நீருள்-நீரிலே. குளித்தும்-மூழ்கியும். உயலாகும்-பிழைக்கலாம். நீருள் - பலதீர்த்தங்களிலே. குளிப்பினும் - ஆடினுமினும். காமம்-பிறர்மனைநயத்தலால்வருமாசைநோய். சுடும்-சுடும். குன்றேறி - மலைமேலேறி. ஒளிப்பினும்-தவம்பண்ணினுமினும் காமம்-அவ்வாசைநோயால்வரும்பாவம். சுடும்-சுடும். என்றவாறு.—காமம்-எழுவாய். சுடும்-பயனிலை. உருகு-உட்கு. ஏகாரம் - அசைநிலை. குளித்துமென்றவும்மையால்பிராமணனைக்கொன்றபாவம் பசுக்களைக்கொன்றபாவமுதலாயினவற்றிற்குப்பிராயச்சித்தமுண்டு-பிறர்மனைநயத்தலுக்குப்பிராயச்சித்தமில்லையெனவறிக.

இதன்கருத்து.

உளரின்கண்ணெழுந்தெரிகின்ற அஞ்சத்தக்க செந்தீயான் வருமிடும்பைக்கு நீரின்கட்குளித்துப்பிழைக்கலாம் நீரின்கட்குளித்தாலுங்காமஞ்சுடும் மலைமேலேறியொளித்தாலுங்காமஞ்சுடுமென்பதாம்..... (௭)

பிறர்மனைநயவாமைமுற்றிற்று.

அ.க. அதிகாரம்-கூ-இ வெண்பா... (கூ௭)

ய-ம். அதிகாரம்.

ஈகை.

ஈகை-கொடை. அஃதாவது - புகழைக்கருதியாதல்மறுமைக்குறுதிவேண்டியாதல் - இரக்கின்றவன்முகங்கண்டுமகிழுமாத்திரமாதல்-யாதொன்றுயினுமிரந்துவந்தவனுக்குநேராகமுமந்தனக்கியன்றனகொடுத்தல்.

இல்லாவிடத்துமியைந்தவளவினு..... .... *
லுள்ளவிடம்போற்பெரிதுவந்து-மெல்லக்... ..... *
கொடையொடுபட்டகுணனுடைமாந்தர்க்... ... ... *
கடையாவாமாண்டைக்கதவு .... *

இதன்பதப்பொருள்.

இல்லா - தமக்கில்லாத. இடத்தும் - காலத்தும். இயைந்த-பொருந்திய. அளவினுல் - அளவினுலே. உள்ளவிடம்போல்-உள்ளகாலம்போல. பெரிது-மிகவும். உவந்து-மகிழ்ந்து. மெல்ல-நேராக. கொடையொடு-மருமவியன்றகொடையுடனே. பட்ட-பொருந்திய. குணன்-குணத்தை. உடை-உடைய. மாந்தர்க்கு-மனிதர்க்கு. ஆண்டை- அவ்விடத்து. கதவு-கதவுகள். அடையாவாம் - அடைக்கமாட்டாவாம். என்றவாறு.—கதவுகள்-எழுவாய். அடையாவாம்-பயனிலை. ஆண்டைக்கதவு-சுவர்க்கத்துக்கதவு.

இதன்கருத்து.

தமக்கில்லாவிடத்தும்பொருந்திய அளவினுல்உள்ளகாலம்போல மிகவுமகிழ்ந்துமனத்தின்கண்ணேரமுடையராய்க்கொடையொடுபொருந்தியகுணத்தையுடைய மாக்கட்குத்துறக்கத்துக்கதவுகள் அடையாவென்பதாம்..... ....(க)

முன்னேசாநாண்முனிதக்கமூப்புள..... ..... *
பின்னரும்பீடழிக்குநோயுள-கொன்னே..... *
பரவன்மின்பற்றன்மின்பாத்தூண்மின்யாதுங்..... *
கரவன்மின்கைத்தூண்டாம்போற்கு... .... *

இதன்பதப்பொருள்.

சாநாள்-சாகின்றநாள். முன்னர்-முன்னே. முனிதக்க-பின்பெவ்வுற்றதீதக்க. மூப்புள-மூப்புண்டு. பின்னரும் - இதற்

நுநடுவே. பீடு-தன்பெருமையை. அழிக்கும்-அழிக்கத்தக்க. நோயுள-நோய்கள்பலவுமுள்ளவாதலால். கொன்னே-பயனின்றியே. பரவன்மின்-பரவாதிருங்கள். பற்றன்மின் - பொருளின்கட்பற்றுவிடுங்கள். பாத்து-பகுத்து. உண்மின்-உண்ணுங்கள். கைத்து-பொருள். உண்டாம்போழ்து - உண்டானகாலத்து. யாதும்-யாதொன்றினையும். கரவன்மின் - ஒளியாதே கொடுங்கள். எஃறவாறு.—நீவிர்-எழுவாய். பரவன்மின்முதலிய-பயனிலைகள். ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

முன்னதுசாதாரள்பிஃபே வெறுக்கத்தக்கமூப்புள இதற்கு நடுவேபீடழிக்குநோயுள ஆதலால்பயனில்லாதனவற்றைப்பரந்துசெய்யன்மின்பொருளின்கட்பற்றன்மின்பகுத்துண்மின்பொருளுண்டானபொழுது யாதுங்கரவாது கொடுமினன்பதாம் .... (உ)

நடுக்குற்றுத்தற்சேர்ந்தார்துன்பந்துடையார்..... ... ❋
கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டு ..... ❋
மிடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம்... .... ❋
விடுக்கும்வினையுலந்தக்கால்..... .... ❋

இதன்பதப்பொருள்.

நடுக்கு-வறுமையால்நடுக்கம். உற்று-அடைந்து. தன்-தன்னை. சேர்ந்தார்-சேர்ந்தவரது. துன்பம் - துன்பங்களை. துடையார். நீக்குகின்றிலார். கொடுத்து-பிறர்க்குக்கொடுத்து. தான்-தான். துய்ப்பினும்-உண்டாலும். ஈண்டுங்கால்-வளருங்காலமாயின். ஈண்டும்-வளரும். மிடுக்கு-வலிமை. உற்று-பொருந்தி. பற்றினும்-பற்றினராயினும். வினை - தான்முன்புசெய்ததல்வினை. உலந்தக்கால்-நீங்குங்காலத்தில். செல்வம்-செல்வமானது. நில்லாது-நிலையாமல். விடுக்கும்-விட்டுப்போம். என்றவாறு.—செல்வம்-எழுவாய். விடுக்கும்-பயனிலை.

இதன்கருத்து.

வறுமையானதுக்கமுற்றுத்தன்னையடைந்தார்தமதுதுன்பங்களைநீக்குகின்றிலார் பிறர்க்குக்கொடுத்துத்தானுண்பினும் ஈண்

டுங்காலமாயின் ஈண்டும்வலியுற்றுப்பற்றினும் தவ்வினை நீங்கி னகாலத்துச்செல்வதில்லையாதலிட்டுப்போமென்பதாம் (கூ)

இம்மியரிசித்தினையானும்வைகலு..... *
றுமமிலியைவகொடுத்தண்மி-னும்மைக்... ... ... *
கொடாதவரொண்பர்குண்டுநீர்வையத்..... .. ... *
தடாஅவடப்பினவர்... .... *

இதன்பதப்பொருள்.

இம்மியரிசி-மத்தங்காய்ப்புல்லரிசி. தினையானும்-அளவா யினும். வைகலும் - நாடோறும். றும் - உம்முடைய. இல்-மனையிடத்து. இலையவ-இயன்றமாத்திரம். கொடுத்து - பிறர்க்குக்கொடுத்து. உண்மின்-பிறகுண்ணுங்கள். குண்டு-ஆழ்ந்த. நீர்-கடல்சூழ்ந்த. வையத்து-பூமியிடத்து. அடாசமையாத. அடப்பினவர் - அடப்பினையுடையராயிரத்தாதிரியுமவரை. உம்மை-முற்பிறப்பில். கொடாதவர் - வழங்காதவர். என்பர்-என்றுசொல்லுவர் அறிவுடையார். என்றவாறு.—நீவிர் - எழுவாய். உண்மின்-பயனிலை. இம்மி-புல்லு-ஓரளவு. அடாவடப்பினவர்-தமக்கென்றடாது பிறர்க்குமடப்பையுடைய இரப்பாளர்.

இதன்கருத்து.

இம்மியரிசியளவாயினு நாடோறு றும்மனோபின்கண்ணுமகீயக்கூடுவனபிறர்க்குக் கொடுத்துப்பின்னருண்மின் கடலாற்சூழப்பட்டபூமியிடத்து அடா அடப்பினையுடையராய் இரத்தாதிரியுமவரை முற்பிறப்பின் கட்கொடாதவரென்று சொல்லுவர் அறிவுடையாரென்பதாம்..... ..... (கூ)

மறுமையுநிம்மையுநோக்கியொருவற்..... ... . *
குறுமாறியைவகொடுத்தல்-வறுமையா..... ..... *
லீதலிசையாதெனினுமிரவாமை..... ..... *
லீதலிரட்டியுறும்... .... *

இதன்பதப்பொருள்.

மறுமையும்-மறுபிறப்பையும். இம்மையும்-இப்பிறப்பையும். நோக்கி-ஆராய்ந்து. ஒருவற்கு-ஒருவனுக்கு. இலையவ-

இயைவன. கொடித்தல்-வழங்கல். உறுமாறு-உறுவதொன்றுஞ் ஞல். வறுமையால்-தரித்திரத்தினால். ஈதல்-கொடுத்தல். இசை யாதெனினும்-கூடாதாயினும். இரவாமை-ஒருவர்பக்கற்சென் றிரவாதிருத்தல். இரட்டி-இருமடங்காக. உறும்-அடையும். என்றவாறு.—இரவாமை-எழுவாய். இரட்டியுறும்-பயனிலை. மறுமையு மிம்மையு நோக்கலாவது - இம்மைப்பிறப்புமின் பதுன்பங்களுந்தம்வசத்தன அல்லாமைகண்டு இதுகண்டே போனபிறப்பும் உண்டென்று ஒருபிறப்பிற்செய்த இருவி னைமற்றைப்பிறப்பிற் பலித்தலுநோக்கி மறுமைக்குந் தமக் குறுவதாக இயைவனகொடுத்தல். வறுமையாலீத விசையா தெனினு மிரவாமை - ஈதலுறுதிகொடுக்குமேம்பாட்டினும் இரவாதமேம்பாடுபெரிதாம்.

இதன்கருத்து.

மறுமையுமிம்மையுநோக்கி யொருவற்கியைவனகொடுத்த லுறுவதொன்றுஞ்ஞல் நல்குரவாற்கொடுத்தல் கூடாதாயினும் ஒருவர்பாற்சென்றிரவாமை கொடுத்தலினிருமடங்காக வறு மென்பதாம்..... (கூ)

நடுவூருள்வேதிகைச்சுற்றுக்கோட்புக்க..... .... ✻
படுபனையன்னர்பலர்நச்சவாழ்வார்..... ... . ✻
குடிகொழுத்தக்கண்ணுங்கொடுத்துண்ணுமாக்க.... ✻
ளிடிகாட்டுமேற்றுப்பனை .... ✻

இதன்பதப்பொருள்.

நடுவூருள்-ஊர்நடுவின்கண். வேதிகைச்சுற்று-வேதிகைவ ட்டத்தையுடைய. கோட்புக்க - காய்த்தகபடி - குலைமுதலிய. பனை-பனையை. அன்னர்-ஒப்பர். பலர்-பலரும் நச்ச - தம் மைவிரும்ப. வாழ்வார்-வாழ்வர். குடி-தங்குடி கொழுத்தக் கண்ணும்-வளமிக்கவிடத்தும். கொடுத்து-வழங்கி. உண்ணு-உண்ணுத. மாக்கள்-மாந்தர்கள். இடிகாட்டின்-சுடுகாட்டினிற் கும். ஏற்றுப்பனை - ஆண்பனையையொப்பர். என்றவாறு.— படுபனையன்னர்-எழுவாய். வாழ்வார் - பயனிலை. மாக்கள்-

எழுவாய். ஏற்றுப்பனையன்னார்-பயனிலை. வேதிகை-திண்ணை. அன்னவென்னுமொழியை-ஏற்றுப்பனையினுமொட்டிக்கொள்க.

இதன்கருத்து.

ஊர்நடுவின்கண்வேதிகைவட்டத்தையுடையகோட்புக்கபடி முதலியபனையையொப்பர் பலருந்தம்மைநச்சவாழ்வார்-தங்குடிவளமிக்கவிடத்துங்கொடித்திண்ணைமாக்கள் சுடுகாட்டுள்நிற்கும் ஆண்பனையையொப்பரென்பதாம்..... (சு)

பெயற்பான்மழைபெய்யாக்கண்ணுமுலகஞ்..... ✻
செயற்பாலசெய்யாவிடினுங்-சயற்பாலால்..... ✻
புன்னைகடியும்பொருகடற்றண்சேர்ப்ப... ... . ✻
வென்னையுலகுய்யுமாறு..... ... . ✻

இதன்பதப்பொருள்.

பெயல்-பெய்தல். பால்-பகுதியான. மழை-மழை. பெய்யாக்கண்ணும்-பெய்யாதவிடத்தும். உலகம்-உயர்ந்தோர். செயல்-செய்தல். பால-பகுதியானவினை. செய்யாவிடினும்-செய்யாவிட்டாலும். கயல்-கயல்மீனின். புலால்-புலால்நாற்றத்தை. புன்னை-புன்னைப்பூவின்மணம். கடியும்-நீக்காநின்ற. பொரு-கரையைத்திரைமோதும். தண்-குளிர்ந்த. கடல்-சழுத்திரத்தினை. சேர்ப்ப-கரையையுடையவனே. உலகு-உலகத்துமாக்கள். உய்யுமாறு-பிழைக்குமாறு. என்னை-எப்படி. என்றவாறு.—உய்யுமாறு-எழுவாய். என்னை-பயனிலை.

இதன்கருத்து.

கயல்மீனின் புலாலுற்றத்தைப் புன்னைப்பூவின் மணங்கடியும் பொருகடற்றண் சேர்ப்பனே பெய்தற்றன்மையானமழைபெய்யாத காலத்தும் உயர்ந்தோர் தாஞ்செய்யக்கடவவினையைச்செய்யாவிடினும் உலகத்துமாக்கள் உய்யுமாறென்னை எனப்பதாம்..... ..... (எ)

ஏற்றகைமாற்றுமையெண்ணுந்தாம்வையா... ... ✻
றேற்றுதார்க்கீவதாமாண்கடற்றின்..... ✻
மலிகடற்றண்சேர்ப்பமாறீவார்க்கீதல்..... ... ✻
பொலிகடனென்னும்பெயர்த்து..... ... ... ✻

இதன்பதப்பொருள்

ஏற்ற-ஏற்கின்ற. கை-கைக்கு. மாற்றுமை - இல்லையென்று மறுத்துவிடாமல். என்னலும்-யாதாகிலும். தாம் - தமக்குள் ள. வையான்-அளவிலும். ஆற்றுதார்க்கு-தரித்திருக்கு. ஈவ தாம் - கொடுப்பதாம். ஆண்கடன் - ஆண்டகைமையாவது. ஆற்றின்-பொருள் வருவாயுடையார் ஆற்றுதலை யுடையராய். மலி-மிக்க. தண்-குளிர்ந்த. கடல் சூழுத்திரத்தினை. சேர்ப்ப-கையையுடையவனே. மாறிலார்க்கு - கைம்மாறுசெய்வார்க் கு. ஈதல் - கொடுத்தல். பொலி-பொலிகைக்குக்கொடுக்கும். கடனென்னும்-கடனென்று சொல்லும். பெயர்த்து - பெய ரினையுடைத்து. என்றவாறு.—ஆண்கடன்-எழுவாய். ஈவது-பயனிலை. பொலிகடன்-எழுவாய். ஈதல்-பயனிலை. ஆற்றின் மலி கடலென்பதற்கு-ஆற்றின்மிக்ககடலெனப்பொருள் கூறுவா ருமுளர்.

இதன்கருத்து.

மலிகடற்றண்சேர்ப்பனே ஏற்றகையின்கண்யாதானுந் தம் மளவினுல்மாற்றுதேவறியார்க்கொன்றினைக்கொடுத்தல் ஆண் டகைமையாவது-பொருள்வருவாயுடையார் ஆற்றுதலையுடை யராய்மாறிலார்க்குக்கொடுத்தல்பொலிதற்கிடங்கடனென்னு மப்பெயரினையுடைத்தென்பதாம்..... (அ)

இறப்பச்சிறிதென்னுதில்லென்னுதென்று ..... *
மறப்பயன்யார்மாட்டுஞ்செய்க-மூறைப்புதவி..... *
னையம்புகூஉந்தவகிகடிஞைபோற்..... *
பையநிறைத்துவிடும்..... *

இதன்பதப்பொருள்.

இறப்ப-மிகவும். சிறிது-சிறிது. என்னுது - என்றுகருதா து. இல்-இல்லை. என்னுது-என்றுசொல்லாது. என்றும்-எப் பொழுதும். அறப்பயன்-தருமப்பயனை. யார்மாட்டும்-யா வரிடத்தும். செய்க-செய். மூறை-மூறையாக. புதவின்-வீட்டு வாயிலேறும். புகூஉம்-புகுந்து. ஐயம்-பிச்சையேற்கும். தவ கி-தவகிகையிலிருக்கும். கடிஞைபோல்-பாத்திரம்போல. பை ய-மெல்ல. நிறைத்துவிடும் - நிறைத்துவிடும். என்றவாறு.—

நீவிர்-எழுவாய். செய்க-பயனிலை. அறப்பயனை - செயப்படு பொருள். கடிஞை-இரக்குங்கலம்.

இதன்கருத்து.

தமக்குள்ளபொருளை யிகவுஞ்சிறிதென்றுகருதாது இல்லை யென்றுதெளிப்பொழுதும் அறப்பயனையார்மாட்டுஞ்செய்க செய்யின்முறையாகமனைவாயில்தோறும்பிச்சைபுகுகின்றதவ சிகடிஞைபோலமெல்லநிறைதீதுவிடுமென்பதாம்..... (கூ)

கடிப்பிடிகண்ணுரசங்காதத்தீதார்கேட்ப..... .... ✻
ரிடித்தமூழங்கியதேர்யோசனையோர்கேட்ப... .. ✻
ரடுக்கியமூவுலகுங்கேட்குமேசான்ரோர்... .... ✻
கொடுத்தானெப்படுஞ்சொல்... .... ✻

இதன்பதப்பொருள்.

கடிப்பு-சூறுந்தடியிலை. இடி-அடிக்கப்பட்ட. கண்-கண்ணினையுடைய. முரசம்-முரசொலி. காதத்தேர் - காதவழியி னுள்ளார். கேட்பர்-கேட்பார். இடித்து-மேகமிடித்து. முழ ங்கியது-முழங்கியவோசை. ஓர்-ஒரு. யோசனையோர்-யோச னைக்கண்ணுள்ளார். கேட்டர்-கேட்பார். அடுக்கிய-அடுக்கின. மூவுலகும்-மூன்றுலகமும். கேட்குமும்-கேட்குமும். சான்ரோர்-சான்புடையோரால். கொடுத்தார்-இன்னுர்கொடுத்தார். எனப்படும்-என்றுசொல்லப்படும். சொல்-சொல். என்றவாறு.— காதத்தேர்-எழுவாய். கேட்பர்-பயனிலை. யோசனையோர்-எழுவாய். கேட்பர்-பயனிலை. சொல்-எழுவாய். கேட்குமும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. மூவுலகாவன-பூமி அந்தரம் சுவர்க்கம் என்பனவாம். மூவுலகுங்கேட்குமென்பது-புகழாலிவ்வுலகமும் இவன்வழியினுள்ளாரிருந்தபிருலோகமும் இவன் பெறுவதானசுவர்க்கலோகமுமாம்.

இதன்கருத்து.

கடிப்பிடிகண்ணினை யுடைய முரசொலி யொருகாதத்துள்ளார்கேட்பர் - மேகமிடித்தமுழங்கியவோசையோசனைக்கண்ணுள்ளார்கேட்பர் - சான்ரோரின்னுர்கொடுத்தாரெனப்படுஞ்சொல் அடுக்கியமூவுலகுங்கேட்குமென்பதாம்(ஐ)

ஈகைமுற்றிற்று.

அ அதிகாரம்-ஐ-இ வெண்பா... (ஈ)

பழவினை.

பழவினை-பழையவினை. ஊழெனப்படுவது-அஃதாவது-முற்பிறப்பிற்செய்தவினை யிப்பிறப்பிலே யநுபவிக்கையும் இப்பிறப்பிற்செய்தவினை பிற்பிறப்பிலேயநுபவிக்கையுமாகி-இப்படிமாறிவருகின்றது-இவையிவை தெப்படியென்னில் யாதொருபிறப்புக்காணப்பட்ட பிறப்பிலே இன்பதுன்பங்களியாதொன் றநுபவிக்கிறன் இதுதான் முற்பிறப்பிற்செய்த புண்ணியபாவங்களென்றும் இப்பிறப்பிலேதானொரு தானதன்மங்கள்செய்கிறன் செய்தபொழுதே மறுபிறப்புக்கிவைபவிக்குமென்றுந்தானேதன்மனத்திணருமென்பதாம்.

பல்லாவுளுய்த்துவிடினுங்குழக்கன்று..... *
வல்லதாந்தாய்நாடிக்கோடலைத்-தொல்லோர்..... *
பழவினையுமன்னதகைதீதேதற்செய்த..... *
கிழவனேநாடிக்கொளற்கு..... *

இதன்பதப்பொருள்.

பல்-பல. ஆவுள் - பசுக்கணின்றவிடத்திலே. குழக்கன்று-ஓரிளங்கன்றைக்கொண்டு. உய்த்துவிடினும்-செலுத்திவிட்டாலும். தாய்-தன்முயை. நாடி-தேடி. கோடலை-கண்டுகொள்ளல. வல்லதாம்-வன்மையுடைத்தாம். தொல்லோர்-முன்செய்த. பழவினையும்-ஊழ்வினையும். தன் - தன்னை. செய்த-செய்ததற்கு. கிழவனை-உரியவனை. நாடி-ஆராய்ந்து. கொளற்கு - பற்றிக்கொள்ளுதற்கு. அன்னதகைத்தே-அத்தன்மைத்தேயாம். என்றவாறு. --பழவினை-எழுவாய். அன்னதகைத்தே-பயனிலை.

இதன்கருத்து.

பலபசுக்கணின்ற விடத்தோரிளங்கன்றினைக்கொண்டு செலுத்திவிடினுந் தன்முயையறிந்துகொள்ளவல்லதாம்முன்செய்தபழவினைதானுந் தன்னைச்செய்ததலைவனை நாடிக்கோடற்கத்தன்மைத்தேயாகுமென்பதாம்..... (க)

உருவுமிளமையுமொண்பொருளுமூட்கு..... *
மொருவழிநில்லாமைகண்டு-மொருவழி..... *
யொன்றேயுமில்லாதான்வாழ்க்கையுடம்பிட்டு..... *
நின்றுவீற்றந்தக்கதுடைத்து..... *

பழ வினை.

இதன்பதப்பொருள்.

உருவும்-அழகும். இளமையும்-இளமைப்பருவமும். ஒண்-ஒள்ளிய. பொருளும் செல்வமும். உட்கும்-இவரித்தன்மையொன்றுபலருமஞ்சத்தக்கமதிப்பும். ஒருவழி - ஒருபிறப்பின்கண்ணெருவழிப்பட. நில்லாமை-ஒருவர்மாட்டுநிலையாமை. கண்டும்-அறிந்திருந்தும். ஒருவழி-ஒருபிறப்பினும். ஒன்றேயும்-ஒருநல்வினையும். இல்லாதான் - செய்யாதான். வாழ்க்கை-உளனுய்வாழ்கின்றவாழ்க்கை. உடம்பு - உடம்பினை. இடு-எடுத்து. நின்று-நின்றவளவினனுய். வீழ்ந்தக்கது-வீழுந்தகுதியை. உடைத்து - உடையது. என்றவாறு.—வாழ்க்கை - எழுவாய். உடைத்து-பயனிலை. வீழ்ந்தக்கதை-செயப்படுபொருள். உடம்பிட்டன்றது-சுவரிடுக்கிடந்தது. சுவரிட்டுநின்றவதனருற்போலக்கொள்க.

இதன்கருத்து.

உருவுமுதலிய நான்கும் ஒருபிறப்பின்கண் ஒருவழிப்பட ஒருவர்மாட்டு நில்லாமைகண்டும் ஒருபிறப்பினும் அறவினையொன்றேயு மில்லாதான்வாழ்க்கை சிலநாளுடம்பெடுத்துநின்ற அளவினனுய்ப்பின்னெழிவற வீழுந்தகுதியையுடைத்தென்பதாம்..... .... (உ)

வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை... ..... *
யளந்தனபோகமவரவரார்முன்... ... . *
விளங்காய்திரட்டினுரில்லைக்களங்கனியைக் ... ... *
காரொனச்செய்தாருமில் ..... *

இதன்பதப்பொருள்.

வளம்-தமக்குச்செல்வம். பட-உண்டாக. வேண்டாதார்-விரும்பாதார். யார்-யாவர். யாரும்-ஒருவருமே. இல்லை-இல்லை. அவரவர்-அவரவர்செய்த. ஆற்முன்-வினை நெறியானே. போகம்-அவரவர்க்குநுகர்ச்சிகள். அளந்தன-கற்பித்துநுகுடைந்தன. விளங்காய்-விளங்கனியை. திரட்டினுர் - திரளச்செய்துவைத்தாரும். இல்லை-இல்லை. களங்கனியை-களவின்கனியை. காரொன-கறுக்க. செய்தாரும் - செய்துவைத்தாரும். இல - இல்லை அதுபோல. என்றவாறு.—போகம் - எழுவாய். அளந்தன-பயனிலை.

இதன் கருத்து.

தமக்குச்செல்வமுண்டாகவேண்டாதார்யாவர் ஒருவருமில்லை அவரவர்முன்செய்தவினைதெறியாமேன அவரவர்க்கு நுகர்ச்சிகள் அளந்துகிடந்தன விளவின்கனியைத்திரளச் செய்தாருமில்லை களவின்பழத்தைக் கறுக்கச்செய்தாருமில்லை அதுபோலவென்பதாம்..... (கு)

உறற்பால்நீக்கலுறுவர்க்குமாகா..... ※
பெறற்பாலவேயவுமன்னவாமாரி..... ※
வறப்பித்தருவாருமில்லையதனைச்..... ※
சிறப்பித்தணிப்பாருமில்.....※

இதன்பதப்பொருள்.

உறற்பால-உறும்பகுதியானதீவினைகளை. நீக்கல்-நீக்குதல். உறுவர்க்கும்-தம்பாதனர்க்கும். ஆகா-இயலா. பெறற்பால்-பெறும்பகுதியானநல்வினைகள். அனையவும்-எல்லாம். அன்னவாம்-அத்தன்மையாம் அதுபோல. மாரி-மழை. வறப்பில்-மறுத்தகாலத்தில். தருவாரும்-அதனைப்பெய்வித்பாரும். இல்லை-இல்லை. சிறப்பில்-அம்மழைபெய்யுங்காலத்தில். அதனை-அதை. தணிப்பாரும்-பெய்யாமனிறுத்தவல்லாரும். இல்-இல்லை. என்றவாறு.—நீக்கல்-எழுவாய். ஆகா-பயனிலை.

இதன் கருத்து.

தன்பழமுறற்பாலவற்றைநீக்குதல் அருந்தவர்க்குமியலா இன்பம்பெறற்பாலனையவுமத்தன்மைத்தேயாம் அதுபோல மாரிவறற்தகாலத்து அதனைத்தரவல்லாருமில்லை அம்மாரிமிக்ககாலத்து அதனைத்தணிக்கவல்லாருமில்லையென்பதாம். (கு)

தினைத்துணையராகித்தற்றேனுள்ளடக்கிப்.. ..... ※
பனைத்துணையார்வைகலும்பாடழிக்குவாழ்வர்..... ※
நினைப்பக்கிடந்தெவனுண்டாமேலை..... ..... ※
வினைப்பயனல்லாற்பிற.....※

இதன்பதப்பொருள்.

தினை-தினையிலுடைய. துணையராகி-அளவினையுடையராய். தம்-தமது. தேனு-ஓரினை. உள்-உள்ளே. அடக்கி-அடங்க

ச்செய்து பனை-பனையினுடைய. துணையார் - அளவினையுடை யார். வைகலும்-நாடோறும். பாடு - பெருமை. அழிந்து-கெட்டு. வாழ்வர்-வாழாநிற்பர். நினைப்ப - விசாரிக்க. கிடந்தது-தக்கது. எவன்-என். உண்டாம்-உளதாம். மேலை-முன்செய்த வினைப்பயன் - வினையின்பயன். அல்லால்-அல்லது. பிறவேறொன்றுமில்லை. என்றவாறு.—பனைத்துணையார் - எழுவாய். வாழ்வர்-பயனிலை. மேலைவினைப்பயனல்லாதிறை-செல்வமுதலாயினவுளவாக நல்வினையுளவாயினும் அவற்றினுகர்தற்குந் நல்வினை வேண்டுமென்க.

இதன்கருத்து.

பனையளவினையுடையார் தினையளவினை யுடையராய்த் தம் மொளியினையுள்ளடக்கி நாடோறும்பாடழிந்து வாழாநிற்பர் முன்செய்தவினைப்பயனன்றி யிதனைக்கண்டுவேறோர் காரண மாராயக்கிடந்ததென்னுண்டென்பதாம்..... ..... (சு)

பல்லான்ற கேள்விப்பயனுணர்வார்வீயவும்... ... ... *
கல்லாதார்வாழ்வதறிதிறோற்-கல்லாதார்..... *
சேதனமென்னுமச்சேறகத்தின்மையாற்..... *
கோதென்றுகொள்ளாதாங்கூற்று..... ... *

இதன்பதப்பொருள்.

பல்-பலநூல்களையும். ஆன்ற-கற்றமைந்த. கேள்வி-கல்வியால்வரும். பயன்-பயனை. உணர்வார்-உணருமறிவினையுடையார். வீயவும்-இறக்கவும். கல்லாதார்-கல்லாதவர். வாழ்வது-உயிர்வாழவும். அறிதிறோல் - காரணமறிவீராகில். கல்லாதார்-கல்லாதவர். சேதனமென்னும் - அறிவென்னும். அச்சேறு-அச்சாரம். அகத்து-மனத்தில். இன்மையால் - இல்லாமையால். கூற்று - கூற்றனது. கோதென்று - அவரைக்கோதென்றுகருதி. கொள்ளாதாம் - கொள்ளாததுபோலும். என்றவாறு.—கூற்று-எழுவாய். கொள்ளாதாம்-பயனிலை. இதுபழவினையானதெப்படியென்னில் - அனேகதவம்பண்ணி யிம்மானிடப்பிறப்புப்பெறவேண்டுமாதலால் - இவ்வுடம்படுத்தற்குத்தவம்பண்ணிக் கல்விக்குத்தவம்பண்ணவுரிமையென்பதும். இறந்தவன்புருடாயுருக்குத் தவம்பண்ணுமந்கல்விக்கு

தீதவம் பண்ணினனென்பதும் இப்படிப்பழவினைப்பயன்பவிக்குமாதலிற்றன்மங்களாயிலையிரண்டிற்கு நிரம்பச்செய்யவேண்டும்.

இதன்கருத்து.

நிரம்பியபலகேள்வியான் வரும்பயனையுணருநல்லாரிறக்கவுங்கல்லாதார்நெடுநாள் வாழவுங்காரணமறிதிரேற்கல்லாதார்மனத்திற்சேதனமென்னுஞ்சாரமில்லாமையால்அவனைக்கோதென்றுகருதிக்கூற்றுகொள்ளாததுபோலுமென்பதாம் (சு)

இடும்பைகூர்நெஞ்சத்தாரெல்லாருங்காண .... *
நெடுங்கடைநின்றுழல்வதல்லா-மடம்பம்பூ... .... *
வண்ணங்கிழிக்குமலைகடற்றண்சேர்ப்ப ..... *
முன்னவினையாய்விடும்..... *

இதன்பதப்பொருள்.

இடும்பை-துன்பம். கூர்-மிக்க. நெஞ்சத்தார்-நெஞ்சினையுடையார். எல்லாரும்-எல்லோரும். காண - அறிய. நெடும்-நெடிய. கடை-வாயில்கடோறும். நின்றுஇரந்துநின்று. உழல்வது-திரிவது. எல்லாம்-யாவும். அடம்பம் - அடம்பினுடைய. பூ-பூக்களை. அன்னம்-அன்னங்கள். கிழிக்கும் - கிழித்துவினையாடும். அலை - அலைகளையுடைய. தண் - குளிர்ந்த. கடல்-சமுத்திரத்தினது. சேர்ப்ப-கரையையுடையவனே. முன்னை-முன்செய்த. வினையாய்விடும் - தீவினைப்பயனுய்விடும். என்றவாறு.—எல்லாம்-எழுவாய். வினையாய்விடும்-பயனிலை.

இதன்கருத்து.

அடம்பம் பூக்களையன்னங்கள் கிழித்துவினையாடும் அலைகடற்றண்சேர்ப்பனே இடும்பைகூர்நெஞ்சத்தார் எல்லோருமறியக் கடைவாயில்கடோறு நின்றுழல்வ தெல்லாமுன்செய்ததீவினைப்பயனுய்விடுமென்பதாம்..... (எ)

அறியாருமல்லரறிவதமித்தும்..... *
பழியோடுபட்டவைசெய்தல்-வளியோடி... ... .. *
நெய்தனறவுமிர்க்குநீள்கடற்றண்சேர்ப்ப..... .... *
செய்தவினையான்வரும்..... ... ... *

இதன்பதப்பொருள்.

அறியாரும் - அறியாதாரும். அல்லர் - அல்லர். அறிவது - அறியத்தக்கநூல்களின்பயனே. அறிந்தும் - அறிந்திருந்தும். பழியோடு - பழியுடனே. பட்டவை - கூடியகாரியங்களை. செய்தல் - சிலர்செய்தல். வளியோடி - காற்றின்வழியேயோடி. நெய்தல் - நெய்தற்பூவினது. நறவு - வாசனை. உயிர்க்கும் - கமழாநின்ற. நீள் - நிண்ட. தண் - குளிர்ந்த. கடல் - சமுத்திரத்தினது. சேர்ப்ப - கரையையுடையவனே. செய்த - முன்செய்த. வினையால் - தீவினைப்பயனாலே. வரும் - வரும் என்றவாறு. — செய்தல் - எழுவாய். வரும் - பயனிலை.

இதன்கருத்து.

காற்றின்வழியோடி நெய்தனறவுயிர்க்கும் நீள்கடற்றண்சேர்ப்பனே அறியாதாருமல்லர் அறியத்தக்கநூல்களை யறிந்தும்பழியோடு கூடியகாரியங்களைச் சிலர்செய்தல் முன்செய்ததீவினையால் வருமென்பதாம் .... (அ)

ஈண்டுநீர்வையத்தெல்லாருமெத்தணையும்..... ..... *
வேண்டார்மற்றீயவிழைபயனல்லவை..... ..... *
வேண்டினும்வேண்டாவிடினுமுறற்பால..... ..... *
தீவினைவிடுதலரிது..... ..... *

இதன்பதப்பொருள்.

ஈண்டுநீர்மிக்க - நீர்சூழ்ந்த. வையத்தாள் - பூமியிடத்தில். எல்லாரும் - யாவரும். எத்துணையும் தமக்கெவ்வளவும். தீயதுளவாய். விழை - வருந்திய. பயன் - துன்பங்களை. வேண்டார் - வேண்டியிரார். நல்லவை - நல்வினைப்பயன்களை வேண்டுவர். வேண்டினும் - அவ்வின்பதுன்பங்களை. அவர்விரும்பிஞாயினும். வேண்டாவிடினும் - விரும்பித்நிலராயினும். உறற்பால - உறற்பான்மையுடையனவாகிய அவ்வினையிரண்டும். தீண்டா - அவரைத்தீண்டாமல். விடுதல - நீங்குதல. அரிது - அரித்து. என்றவாறு. — விடுதல் - எழுவாய். அரிது - பயனிலை. மன் - ஒழியிசைப்பொருளிலவந்த இடைச்சொல். ஈண்டுநீர் - பெருநீர்.

இதன்கருத்து.

நிறைந்த நீர்சூழ்ந்த உலகத்துள்யாவருந் தமக்கெவ்வளவு நீதியளவாய் வருந்தியதுன்பங்களை வேண்டார் நல்வினைப்பயன்களைவேண்டுவர் அவ்வின்பதுன்பங்களை அவர்விரும்பினும்விரும்பாவிடினும் உறற்பான்மையுடைய அவ்வினையிரண்டும் உருதுவிடுகை அரிதென்பதாம்..... ..... (க)

சிறுகாபெருகாமுறைபிறழ்ந்துவாரா..... ... ... ✻
வுறுகாலத்தூற்றுகாவாமிடத்தேயாருஞ்..... ... ... ✻
சிறுகாலைப்பட்டபொறியுமதனை..... .... ✻
விறுகாலத்தென்னேபரிவு..... ✻

இதன்பதப்பொருள்.

சிறுகாலை-முற்காலத்து. பட்ட-உண்டாகிய. பொறியும்-நல்வினைகளும். சிறுகா-செய்தவளவிற்சிறுகுவதுஞ்செய்யா. பெருகா-பெருகுவதுஞ்செய்யா. முறை-முறைமை. பிறழ்ந்து-தடுமாறி. வாரா-வந்தடையா. உறுகாலத்து-துன்புறுங்காலத்து. ஊற்றுகா-வந்துதாங்கா. ஆயிடத்து-ஆங்காலத்து. ஆகும்-ஆம். அதனால்-அத்துணையேயாதலால். இறுகாலத்து-தீவினைப்பயத்தாலேகேடிவருங்காலத்து. பரிவு-வருந்துவது. என்னை-யாது. என்றவாறு.—பரிவு-எழுவாய். என்னே-பயனிலை.

இதன்கருத்து.

முற்காலத்துண்டாகிய நல்வினைகளுஞ்செய்த அளவிற்சிறுகாபெருகுவதுஞ் செய்யாமுறைதடுமாறி வாராதுன்பமுறுங்காலத்து வந்துதாங்கா ஆங்காலத்தாம் அத்துணையேயாதலால் தீவினைப்பயத்தாற் கேடிவருங்காற் பரிவதென்னை யென்பதாம்..... (ஐ)

பழவினைமுற்றிற்று.

அ அதிகாரம்-ஐக-ஐ வெண்பா... (ஈஐ)

ஙஉ-ம். அதிகாரம்.

மெய்ம்மை.

மெய்ம்மை-உண்மைசொல்லுதல். அஃதெப்படியென்னில் பொய்சொல்லக் கடவோமல்லவென்னும் விரதத்திற் கழிவாதலில்நிலையாத உடம்பைக்கருதிப்பொய்சொல்லாமல் மறுமைக்குறுதியாகிய மெய்கூறுதலேசவமென்பதாம்-இந்தவதிகாரமங்ஙனின்றுலகத்துக்கு நடத்துமியற்கையான உண்மையைச் சொன்னதாம்.

இசையாவொருபொருளில்லெனிறல்யார்க்குமீ... ... ❋
வசையன்றுவையத்தியற்கை-நசையழுங்க..... ❋
நின்றுடிப்பொய்த்தனிைதொடுஇசெய்நன்றி... ❋
கொன்றுரிற்குற்றமுடைத்து..... ..... ❋

இதன்பதப்பொருள்.

இசையா - தமக்கிசையாத. ஒருபொருள் - ஒருபொருளை. இல்-இல்லை. என்றல்-என்றுசொல்லுதல். யார்க்கு ம்-யாவர்க்கும். வசை-குற்றம். அன்று-அல்ல. வையத்து-உலகத்துள். இயற்கை-இயற்கையே. நசை-இரவலராசையின்கண்ணின்று. அழுங்க-அழிய. நின்றுடி-நெடுங்காலநின்று. பொய்த்தல்-பொய்சொல்லுதல். நினை-நினைத்த. தொடுஇ-வினையெச்சவுடையாய். செய்-செய்த. நன்றி-நன்மையை. கொன்றுரில்-சிதைத்தாரினும். குற்றம்-மிக்ககுற்றம். உடைத்து-உடைத்தாம். என்றவாறு.—பொய்த்தல்-எழுவாய். குற்றமுடைத்து-பயனிலை.

இதன்கருத்து.

நினைதொடுஇதம்மாற்கொடுக்கக்கூடாதபொருளையில்லென்றுமறுத்தல் யார்க்குங்குற்றமன்று உலகத்தியற்கையே இரவலராசையின் கண்ணின்றழிய நெடுங்காலநின்று பொய்த்தல் செய்நன்றியைச் சிதைத்தாரினுமிக்க குற்றமுடைத்தன்பதாம்..... .... (க)

தக்காருந்தக்கவரல்லாருந்தந்நீர்மை..... ❋
யெக்காலுங்குன்றலிலராவ-ரக்கார்ம்..... ❋
யாவரேதின்னினுங்கையாதாங்கைக்குமாந்... ... ❋
தேவரேதின்னினும்வேம்பு..... ❋

இதன்பதப்பொருள்.

தக்காரும்-தகுதியுடையாரும். தக்கவரல்லாரும் - தகுதியுடையரல்லாதவரும். தம்-தமது. நீர்மை-தன்மை. எக்காலும்-எப்பொழுதும். குன்றல்-கெடுதல். இலராவர் - இலவராவர். அக்காரம்-கருப்பின்கட்டியை. யாவர்-எவர்கள். தின்னினும்-தின்றாலும். கையாதது-கசக்காது. வேம்பு-வேம்பை. தேவர்-தேவர்கள். தின்னினும்-தின்றாலும். கைக்கும்-கசக்கும் அது போல. என்றவாறு.—குன்றல்-எழுவாய். இலராவர்-பயனிலை. ஆம்-இரண்டும்-ஏகாரம். இரண்டும்-அசைநிலைகள்.

இதன்கருத்து.

தகுதியுடையாருந் தகுதியுடையரல்லாதாருந்தமதுதன்மையெக்காலுங்குன்றுதலிலராவர் கரும்பின்கட்டியையெவர்கள்தின்றாலுங் கையாதுவேம்பைத் தேவர்கள்தின்றாலுங் கைக்கும் அதுபோலவென்பதாம்..... ... . (உ)

காலாடுபோழ்திற்கழிகிளைஞர்வானத்து... ... ... ✻
மேலாடுமீனிற்பலராவ-போல..... ✻
விடரொருவருற்றக்காலிற்குன்றநாட..... ✻
தொடர்புடையோமென்பார்சிலர்... .... ✻

இதன்பதப்பொருள்.

கால்-பாதம். ஆடுபோழ்தில்-இயங்குகிறகாலத்தில். கழி-மிக்க. கிளைஞர்-உறவின்முறையார். வானத்துமேல்-ஆகாயத்தின்மேலே. ஆடு-இயங்குகிற. மீனில்-மீன்போல. பலராவர்-பலராவார். எலா-தகாத. இடர்-துன்பத்தை. ஒருவர்-ஒருவர். உற்றக்கால்-உற்றகாலத்தில். ஈர்-அருவியாலீரப்பசத்தையுடைய. குன்றம்-மலைகளையுடைய. நாட-நாட்டையுடையவனே. சிலர்-சிலரே. தொடர்பு-அவையுறவு. உடையோம்-உடையோமே. என்பார்-என்று சொல்லுவர். என்றவாறு.—கிளைஞர்-எழுவாய். பலராவர்-பயனிலை. சிலர்-எழுவாய். என்பார்-பயனிலை. காலாடுபோழ்தென்பது-முயற்சியாற்செல்வமுண்டானகாலம்.

இதன்கருத்து.

ஈர்ங்குன்றநாடனேமுயற்சியோடுகாலியங்குங்காலத்தில் கண்மிக்கபலகிளைஞர்விசும்பின்மேலியங்குமீன்போலப்பலராவர்

மெய்ம்மை.

தமக்குத்தகாத இடும்பையுமுன்புசெல்வமுடையோராயினு
மொருவருற் றகாலத்திற்சிலசோவனையுறவுடையோ மென்று
சொல்லுவனென்பதாம்..... .. .. (கூ)

வடிவிலாவையத்தமன்னியமூன்றி..... ..... ※
னடிவனெதிர்தவிருதலையுமெய்து... ... . ※
நடிவணெதிர்தாதானெய்துமூலப்பெய்... ..... ※
தடிவதுபோலுந்துயர்... .... ※

இதன்பதப்பொருள்.

வடி-குற்றம். இலா-இல்லாத. வையத்து - பூமியினிடத்து மன்னிய-நிலைபெற்ற. மூன்றின்-அறம்பொருள் இன்பமென்னு மூன்றனுள்ளுரும். நடிவணது - நடிவுளதாயபொருளை. எய்த-ஒருவனெய்த. இருதலையும்-அறமும் இன்பமுமாகிய இரண்டினையும். எய்தும்-எய்துவன். நடிவணது-நடிவிற்பொருளை. எய்தாதான் - எய்தாதவன். உலை - உலையிலே. பெய்து - இட்டு. அடிவதுபோலும் - கொல்லுகின்ற ஆமைபோலும். துயர்-துயரத்தை. எய்தும்-எய்துவன். என்றவாறு.—இருதலை-எழுவாய். எய்தும்-பயனிலை. பொருளை-செயப்படுபொருள். எய்தாதான்-எழுவாய். எய்தும் - பயனிலை. துயரத்தை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

உலகத்தமன்னிய அறம்பொருள் இன்பமென்னும் மூன்றனுள் நடிவுளதாயபொருளையொருவனெய்த அதனும் இன்பமுமாகிய இரண்டினையுமெய்துவன்பொருளையெய்தாதான் உலையின்கட்பெய்து அடுகின்ற ஆமைபோலுந்துயரினை யெய்துவனென்பதாம்..... .... (சு)

நல்லாவின்கன்முயிலுகும்விலைபெறாஉங்... ..... ※
கல்லாரோயாயினுஞ்செல்வர்வாய்ச்சொற்செல்லும்... ※
புல்லிரப்போற்றினுமேவேபோன்மீதாடிச்..... ※
செல்லாவாநல்கூர்ந்தார்சொல்..... ..... ※

இதன்பதப்பொருள்.

நல்-நல்லவரி. ஆவின்-பசுவினுடைய. கன்முயின்-கன்முயல். நாகும்-அதனிளங்கன்றும். விலை-விலையை. பெறாஉம்-பெறும்.

கல்லாராயினும் - கற்றிலராயினும். செல்வர் - செல்வமுடை யோர். வாய்-வாயிற்பிறக்கும். சொல் - சொற்கள். செல்லும்-பொல்லாதனவாயினும் பலர்க்குமினியனவாயிருக்கும். புல்-புல்லிய. ஈரப்பேழ்நுன்-ஈரத்தையடையகாலத்தில். உழவே போல்-உழுமுழவேபோல. மீதாடி-மேலேசெல்லு. நலகூர் நீதார்-மிடியர். சொல் - சொல்லுஞ்சொற்கள். நன்றுகவிருக்கி னும். செல்லாவாம் - பலர்க்குமினியனவாய்விடும். என்றவாறு.—சொல்-எழுவாய். செல்லும்-பயனிலை. சொல்-எழுவாய். செல்லாவாம்-பயனிலை. நாகு-கிடாரிக்கன்று. ஏகா ரம்-அசைநிலை.

இதன்கருத்து.

நல்லவழிப்படுவின் கன்றுயினதனுகுகன்றும் விலைபெறும் கற்றிலராயினுஞ் செல்வமுடையார்வாயிற்சொற்கள் யாவர்க்கு மேனுங் கற்றாயினுநல்கூர்ந்தார்சொல்செவ்விதிரம்பாவீரப் போழ்தினுழவேபோன்மேலெழுந்தேறுவென்பதாம்... (கூ)

இடம்படமெய்ஞ்ஞானங்கற்பினுமென்று..... *
மடங்காதாரொன்றுமடங்கார்-தடங்கண்ணு..... *
யுப்பொடுநெய்பாறியிர்காயம்பெய்தடிஞுங்..... *
கைப்பறுபேய்ச்சுரையின்காய்..... *

இதன்பதப்பொருள்.

மெய்-மெய்யான ஞானம்-ஞானநூல்களை. என்றும்-எப் பொழுதும். இடம்பட-விரிய. கற்பினும்-கற்றறியினும். அட ங்காதார்-இயற்கையறிவாலடங்காதார். என்றும் - எப்பொழு தும். அடங்கார் - செயற்கையறிவாகியகல்வியாலுமடங்கார். தடம்-பெரிய. கண்ணுய் - கண்ணினையுடையாய். உப்பொடு-உப்புடனே. நெய்-நெய்யும். பால்-பாலும். தயிர் - தயிரும். காயம்-பலகாயங்களும். பெய்து-இட்டு. அடிஞும்-சமைத்தா லும். கைப்பு-கசப்பு. அறு - அறுத்து. பேய்ச்சுரையின்காய்-பேய்ச்சுரைக்காய்அதுபோலும். என்றவாறு.—அடங்காதார்-எழுவாய். அடங்கார்-பயனிலை. அயிரொன்றுபாடமோதிச்சரு க்கரையென்று பொருள்கூறுவாருமுளர். காயம்-பெருங்காய மெனினுமமையும்.

மெய்ம்மை.

இதன்கருத்து.

பெரியகண்ணினையுடையாய்மெய்ஞ்ஞானநூல்களோ என்றும் விரியக்கற்பினும் அடங்குந்தன்மையில்லாதார் என்றும் அடங்கார் உப்பொடுநெய்பால்தயிர் காயங்களோப்பெய்தழிஞும் பேய்ச்சுரைக்காய் கசப்பறாது அதுபோலு மென்பதாம்..... (சு)

தம்மையிகழ்வாரைத்தாமவரின்முன்னிகழ்க..... *
வென்னையவரோடிபட்டது-புன்னை..... *
விறற்பூங்கமழ்கானல்வீங்குநீர்ச்சேர்ப்ப..... *
வுறற்பாலயார்க்குமுறும்..... *

இதன்பதப்பொருள்.

புன்னை-புன்னையினது. விறல்-மிக்க. பூ-பூக்களின்மணம். கமழ்-கமழாநின்ற. கானல்-சோலையையுடைய. வீங்கு-நிறைந்த. நீர்-நீரினையுடைய. சேர்ப்ப-கடற்சேர்ப்பனே. உறல்-அடையும். பால்-பகுதிகள். யார்க்கும்-யாவர்க்கும். உறும்-வந்தடையுமாதலால். தம்மை-தம்மை. இகழ்வாரை-இகழ்பவரை. தாம்-தாமும். அவரோடு-அவருடனே. பட்டது-உண்டாகியதொடர்ச்சி. என்னை-யாதென்றெண்ணிப்புறங்கூறுமல். அவரின்முன்-அவர்முன்னே. இகழ்க-இகழ்ந்துசொல்லிவிடுக. என்றவாறு.—தாம்-எழுவாய். இகழ்க-பயனிலை.

இதன்கருத்து.

புன்னையின்மிக்கபூக்களின்மணங்கமழாநின்றகானலையுடையகடற்சேர்ப்பனே உறும்பகுதிகளியார்க்கும்வந்துறும் ஆதலாற்றம்மையிகழ்வாரைத்தாமும் அவருடன்யாது காரியமென்றெண்ணிப்புறங்கூறுமல் அவர்முன்னேயிகழ்ந்து சொல்லிவிடுகவென்பதாம்..... (எ)

ஆவேறுருவினவாயினுமாபயந்த..... *
பால்வேறுருவினவல்லவாம்-பால்போ..... *
லொருதன்மைத்தாகுமறநெறியாபோ..... *
லிருவுபலகொளலீங்கு..... *

இதன்பதப்பொருள்.

ஆ-பசுக்கள். வேறு-வேறுபட்ட. உருவினவாயினும்-வண்ணத்தனவாயினும். ஆ - அப்பசுக்கள். பயந்த - தரப்பட்ட. பால் -பாலெல்லாம். வேறு-வேறுபட்ட. உருவின - வண்ணத்தன. அல்லவாம்-அல்லனவாம். பால்போல்-அப்பால்போல. அறம்-அறத்தினது. நெறி-வழி. ஒரு ஒரு. தன்மைத்து-பெற்றித்து. ஆகும்-ஆம். ஆபோல்-அப்பசுக்கள்போல. ஈங்கு-இங்குண்டாகியசமயங்களும். பல-பல. உருவ - வேடங்களை. கொளல்-கொண்டிருக்கும். என்றவாறு.—அறநெறி-எழுவாய். ஆகும்-பயனிலை. சமயங்கள்-எழுவாய். கொளல்-பயனிலை. வேடங்களை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பசுக்கள் வேறுபட்ட உருவினவாயினும் அவைபயந்தபாலெல்லாம் வேறுபட்ட வண்ணத்தனவல்லவாம் அப்பாலேபோல அறநெறி ஒருதன்மைத்தாகும் அப்பசுக்கள்போல்சமயங்களும்பலவேடங்களைக்கொண்டிருக்குமென்பதாம்(அ)

யாஅருலகத்தோர்சொல்வில்லார்தேருங்கால்..... *
யாஅருபாயத்தின்வாழாதார்-யாஅ..... *
றிடையாகவின்னுதெதெய்தாதார்யாஅர்..... *
கடைபோகச்செல்வமுய்த்தார்..... .... *

இதன்பதப்பொருள்.

தேருங்கால்-ஆராயுங்கால். உலகத்து-இவ்வுலகத்துள். சொல் -புகழ். இல்லார் - இல்லாதிருக்கின்றவர். யார்-யாவர்தாம். உபாயத்தின் - மூற்பிறப்பிற்றருமஞ்செய்தவுபாயத்தால். வாழாதார்-இப்பிறப்பில்வாழாதவர். யார்-யாவர்தாம். இடையாக-சாவதற்குமுன். இன்னுதது-வசையுளை. எய்தாதார்-அடையாதவர். யார்-யாவர்தாம். கடைபோக-மூடிவளவும். செல்வம்-செல்வத்தை. உய்த்தார் - அமையுமெனச்செலுத்தினவர். யார்-யாவர்தாம் ஒருவருமில்லை. என்றவாறு.—சொல்லில்லார்-வாழாதார்-எய்தாதார்-உய்த்தார்-இவை எழுவாய். யார்-பயனிலை. ஓர்-இடைச்சொல். தேருங்காலென்பதனை-எங்குங்கூட்டுக. உபாயம்-செல்வமுயற்சி.

இரும்பார்க்குங்காலாயேதிலார்க்காளாயிக்..... ... *
கரும்பார்கழனியுட்சேர்வர்-சுரும்பார்க்குங்..... .. *
காட்டுளாய்வாழுஞ்சிவலுங்குறும்பூழுங்..... ... ... *
கூட்டுளாய்க்கொண்டுவைப்பார்..... ..... *

இதன்பதப்பொருள்.

சுரும்பு-வண்டுகள். ஆர்க்கும்-ஆரவாரிக்கும். காட்டுளாய்-காட்டின்ளேதமக்குரிமையாய். வாழும்-வாழ்கின்ற. சிவலும்-கவுதாரியும். குறும்பூழும்-காடையும். கூட்டுளாய்-இவைமூதலாயினவற்றைப்பிடித்துக்கூட்டுள்ளேசிறைசெய்து. கொண்டு-தம்வயத்தனவாக்கிக்கொண்டவற்றுலையபயனைக்கருதி. வைப்பார்-வைத்துத்திரிபவர்தாமும். இரும்பு-மறுபிறப்பில்லவ்து. ஆர்க்கும்-பூண்ட. காலாய்-காலையுடையாய். ஏதிலார்க்கு-அயலார்க்கு. ஆளாய்-அடிமைப்பட்டு. கரும்பார்-நரகமென்னும். கழனியுள்-துன்பம்விளைக்குங்கழனியிலே. சேர்வர்-சேர்வர். என்றவாறு. வைப்பார்-எழுவாய். சேர்வர்-பயனிலை. இரும்பு-ஆகுபெயர்.

இதன்கருத்து.

வண்டுகளாரவாரிக்குங்காட்டுள்ளேதமக்குரிமையாய்வாழ்கின்ற கவுதாரி காடை முதலாயினவற்றைக் கூட்டுள்ளே சிறைசெய்து தம்வயத்தனவாக்கிக்கொண்டவற்றுலையபயனைக்கருதிவைத்துத் திரிபவர் தாமும்மறுபிறப்பின் கட்டளைப்பட்டுப் பிறக்காளாய்ப்பின்பு துன்பம்விளைக்குநரகமாகிய கழனியுட்சேர்வரென்பதாம்..... (உ)

அக்கேபோலங்கையொழியவிரலழுகித்..... ... ... *
துக்கத்தொழுநோயெழுபவே-யக்கா..... ..... *
லலவனைக்காதலித்துக்கான்முரித்துத்தின்ற..... ... *
பழவினைவந்தடைந்தக்கால்..... *

இதன்பதப்பொருள்.

அக்கால்-முற்பிறப்பில். அலவனை-நண்டுகளை. காதலித்து-இச்சித்து. கால்-அவற்றின்கால்களை. முரித்து-முறித்து. தின்ற-அருந்திய. பழவினை-பழையதீவினை. வந்தடைந்தகால-வந்தெய்தியபொழுது. அக்கேபோல்-அகுமணிபோலும். அங்

கை-அகங்கை. ஒழிய-தவிர. விரல்-விரலெல்லாம். அழுகி-அழுகிவிழுந்து. தொழுநோய்-இப்படித்தொழுநோயிலே. தக்கம்-நெஞ்சுதக்கப்பட்டு. எழுப-திரிவர். என்றவாறு.—தொழுநோய்-எழுவாய். எழுப-பயனிலை. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

முற்பிறப்பின்கணலவனைக்காதலித்துக்கான்மூரித்துத்நின்றபழவினையுந்தடைந்தால் அங்கையொழிய அக்குமணிபோலுங்கைவிரலெல்லாம் அழுகிவிழுந்து இப்படித்தொழுநோயிலேநெஞ்சுதக்கப்பட்டுத்திரிவரென்பதாம். .. .. (ஈ)

தெருப்பழற்சேர்ந்தக்காணெய்போல்வதூஉ ... ... ✻
மெரிபச்சுட்டெவ்வநோயாக்கும்-பரப்பக் ... ... ✻
கொடுவினையராகுவர்கோடாருங்கோடிக்..... ✻
கடுவினையராகியார்ச்சார்ந்து..... ✻

இதன்பதப்பொருள்.

தெருப்பு-தெருப்பினது. அழல்-வெம்மையை. சேர்ந்தக்கால்-சேர்ந்தபொழுதே. நெய்போல்வதூஉம்-நெய்போலக் குளிர்ச்சியையுடையதும். எரிப்ப - எரிக்கும்படி. சுட்டு-சுட்டு. எவ்வம்-மிகவுந்துன்பமாகிய நோய்-நோயை. ஆக்கும்-செய்யும் அதுபோல. கோடாரும் - கோட்டமில்லாதவரும். கடு-வினையராகியார். அஞ்சத்தக்க - வினையாளரை. சார்ந்து-சேர்ந்து. கோடி - கோட்டமுடையராய். பரப்ப - மிகவும். கொடு-கொடிய வினையர் - வினையார். ஆகுவர் - ஆவர். என்றவாறு.—கோடாரர்-எழுவாய். ஆகுவர் - பயனிலை. இதுகூடாநட்பென்னுமதிகாரம்-தீவினையச்சத்திற்சேர்ந்தியாதெனின் முற்பிறப்பிற்செய்த தீவினைப்பயனிப்பிறப்பிலே தீவினையாளருடனே இணங்குவித்து இவன்தீயவனென்னும் பேரும்படைப்பித்து மறுமைக்கு நரகத்திலுமறுபவிப்பனென்பது கொண்டுதீவினையச்சமென்னுமதிகாரத்திற்சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

தெருப்பின்வெம்மையைச்சேர்ந்தநெய்யுங் கொதிப்பச்சுட்டுத்துன்பநோயையாக்கும் அதுபோலக்கோட்டமில்லாதா

ரும் அஞ்சத்தக்கவினையராகியாளையடைந்துபிறர்க்குக்கோட்டத்தைச்செய்துமிகவுங்கொடியவினையராவரென்பதாம் (சு)

பெரியவர்கேண்மைபிறைபோலநாளும்..... ..... *
வரிசைவரிசையாநந்தும்-வரிசையால் .... *
வானூர்மதியம்போல்வைகலுந்தேயுமே..... *
தானேசிறியார்தொடர்பு..... ..... *

இதன்பதப்பொருள்.

பெரியவர்-பெரியோருடனே. கேண்மை-கொண்டநட்பு. பிறைபோல-பிறையைப்போல. நாளும்-நாடோறும். வரிசைவரிசையா-முறைமுறையாக. நந்தும்-வளராநிற்கும். சிறியார்-சிறியாரோடு. தொடர்பு-கொண்டநட்பு. வான்-ஆகாயத்திலே. ஊர்-செல்லும். மதியம்போல்-சந்திரனைப்போல. வைகலும்-நாடோறும். வரிசையால்-முறைமையிலுலே. தானே-ஒருகாரணமின்றித்தானே. தேயும் - தேய்ந்துவிடும். என்றவாறு.—கேண்மை-எழுவாய். நந்தும் - பயனிலை. தொடர்பு-எழுவாய். தேயும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

பெரியவரோடுகொண்டநட்பு பிறைபோலநாடோறும்வரிசைவரிசையாகவளரும் சிறியாரோடுகொண்டநட்பு ஆகாயத்தின்கட்செல்லு மதியம்போல நாடோறுமுறையாலோர்காரணமின்றித்தானேகுறையுமென்பதாம்.. ... . (சு)

சான்ரோனமதித்துச்சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச் ... *
சான்றுண்மைசார்ந்தார்கணில்லாயிற்-சார்ந்தேயாய்கேள் ... *
சார்ந்தகத்துண்டென்றுசெப்புத்திறந்தொருவன் ..... *
பாம்பகத்துக்கண்டதுடைத்து..... ..... *

இதன்பதப்பொருள்.

சான்ரோனை-இவரமைந்தோனென்று. மதித்து - கருதி. சார்ந்தாய்-சார்ந்தவனே. சார்ந்தாய்க்கு-சாரப்பட்டவனுக்கு. சான்றுண்மை-அமைதியென்பதன்று. சார்ந்தார்கண்-நீசாரப்பட்டவரிடத்து. இல்லாயின் - இலலையாகில். சார்ந்

தோய் - சார்ந்தவனே. கேள்-கேளாய். சாந்து-சாந்து. அகத்து-உள்ளே. உண்டென்று - இருக்கின்றதென்று. செப்பு-செப்பை. திறந்து-திறந்துபார்த்த. ஒருவன்-ஒருத்தன். அதத்து-அதனுள்ளே. பாம்பு-பாம்பை. கண்டது-கண்டார்போலும். உடைத்து-தன்மையையுடைத்து. என்றவாறு. — ஒருவன்-எழுவாய். உடைத்து-பயனிலை. தன்மையை-செயப்படுபொருள். மன் - அசைநிலை. மூன்செய்ததீவினையொருவன் நெஞ்சறியாமல் அவனைச்சேர்வித்துப்பின்பவன்செய்யும் அறியாமைகண்டு நெஞ்சு தக்கமாக்குவிக்குமென்பது போதரதீவினையச்சத்திலே சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

அமைந்தாரொனக்கருதிச்சார்ந்தாய்சார்ந்தனைக்கு நீசாரப்பட்டவர்மாட்டுமதித்தசான்ருண்மையில்லையாயிற் சார்ந்தாய் நீகேளாய்சாந்துண்டென்று செப்பைத்திறந்துள்ளேயொருவன் பாம்பைக்கண்டாற்போலுந் தன்மையையுடைத்தென்பதாம்..... ..... (கூ)

யாஅரொருவரொருவர்தம்முள்ளத்தைதீ..... ..... *
தேருந்துணைமையுடையவர்-சாரற் .... *
கனமணிநின்றிமைக்குநாடகேண்மகனே..... *
மனம்வேறுசெய்கையும்வேறு... .... *

இதன்பதப்பொருள்.

சாரல்-மலைச்சாரலிலே. கனமணி - மிக்கமணிகள். நின்று-நின்று. இமைக்கும்-விளங்கும். நாட-நாடனே. கேள்-கேளாய். மக்கள்-மனிதர்கள். மனம்-மனத்திற்கருதுவதும். வேறு-வேறொன்று. செய்கையும்-செய்வதும். வேறு-வேறொன்று ஆதலால். ஒருவர்-ஒருவர். ஒருவர்-பிறொருவருடைய. உள்ளத்தை-நெஞ்சை. துணைமை-அளவிட்டு. தேரும்-ஆராய்ந்தறிய. உடையவர் - உடையவர்கள். யார் - யாவர். என்றவாறு.— உடையவர்-எழுவாய். யார்-பயனிலை. தம்-அசைநிலை.

இதன்கருத்து.

சாரற்கனமணிநின்றிமைக்குநாடனேகேளாய் மக்கண்மனங்குறட்கருதுவதும்வேறொன்றுசெய்வதும்வேறொன்று ஆத

தீவினையச்சம்.

லாற் பிறனொருவருள்ளத்தைத்தேர்ந்தறியு மறிவினையுடையார் யார் அவர்நெஞ்சைவே றுபடுத்தியிப்படிச்செய்விப்பதந்தீவினைப்பயன் இப்படியொத்த தீவினையாளரை யஞ்சவேண்டுமென்பதாம்..... (எ)

உள்ளத்தானள்ளாதுறுதித்தொழிலராய்க்..... ..... *
கள்ளத்தானட்டார்கழிகேண்மை-தெள்ளிப்..... *
புனற்செதும்புநின்றலைக்கும்பூங்குன்றநாட..... ..... *
மனத்துக்கண்மாசாய்விடும்..... .... *

இதன்பதப்பொருள்.

உள்ளத்தால் - ஒருவரோடொருவர் மனத்தால். நள்ளாது-உறவுபண்ணுது. உறுதி-மற்றவராற்றமக்குறுதியை. தொழிலராய்-செய்விக்கிக்கொள்ளுந்தொழிலராய். கள்ளத்தால்-வஞ்சகத்தால். நட்டார்-நட்புக்கொண்டாரது. கழி - மிக்க. கேண்மை-உறவு. தெள்ளி-மணிமுதலானவற்றைக்கொழித்துக்கொண்டு. புனல்-அருவிப்புனல். செதும்புநின்று - அசும்பின்கண்ணேவிழுந்துநின்று. அலைக்கும்-அலைக்காநின்ற. பூ-பொலிவினையுடைய. குன்றநாட-மலைநாடனே. மனத்துக்கண்-பின்பு மனத்தினிடத்து. மாசாய்விடும் - குற்றமாய்விடும். என்றவாறு.—கேண்மை-எழுவாய். மாசாய்விடும்-பயனிலை. செதும்பு-சிறுகியொழுகுமம்புனல்.

இதன்கருத்து.

மணிமுதலானவற்றைக்கொழித்துக் கொண்டசும்பின்கண்ணே விழுந்துநின்றலைக்கும் பூங்குன்றநாடனே ஒருவரோடொருவர்மனத்தானட்புச்செய்யாது மற்றவராற்றமக்குறுதியைச்செய்வித்துக் கொள்ளுந்தொழிலராய் வஞ்சனையாலே நட்புச்செய்தாரதுமிக்கவேண்மை அவரானட்புக்கொள்ளப்பட்டார்க்குமனத்தின்கட்குற்றமாயவினையாதலால் அவர்நட்டையஞ்சவேண்டுமென்பதாம்..... .... (அ)

ஒக்கியவொள்வாடன்ணெஞ்சுர்கைப்பட்டக்கா ... *
லாக்கமழிப்பதூஉமெய்யாகு-மாக்க..... ... *
மிருடையுஞ்சென்றுசுடுதலானல்ல..... .... *
கருமமேகல்லார்கட்டூர்வு..... ..... *

இதன்பதப்பொருள்.

ஒக்கிய-பகைவனையெறியவேவாங்கின. ஒள்-ஒள்ளிய. வாள்-வாளே. தன்-தன்னுடைய. ஒன்னார்-அப்பகைவர். கை-கையிலே. பட்டக்கால்-புகுந்தகாலத்து. உளக்கம்-அவ்வாளோங்கின வன்றன்மனவெழுச்சியை. அழிப்பதூஉம்-கெடுக்கின்றதும். மெய்யாகும்-உண்மையாம் அதுபோலுமன்றி. ஆக்கம்-கல்லாதானையாக்கியவாக்கம். இருமையும்-இம்மையுமுறுமையுமாக்கினவன்றன்னை. சென்று-போய். சுடுதலால்-அழிப்பதால். கல்லார்கள்-அக்கல்லாதானை. தீர்வு-விட்டுநீங்குதல். நல்லகருமம்-நல்லகாரியம். என்றவாறு.—தீர்வு-எழுவாய். கருமம்-பயனிலை. கல்லாதானை-செயப்படுபொருள். ஒக்கிய-செய்யுள்விகாரம். ஏகாரம்-அசைநிலை. ஈண்டுக்கல்லாதானென்றது-தீவினையாளனை.

இதன்கருத்து.

பகைவனையெறியவேவாங்கியவாளே அப்பகைவர்கைப்பட்டக்கால் அதுவாளோங்கினவன்றன்மன வெழுச்சியைக்கெடுப்பது மெய்ம்மையாகும் அதுபோலுமன்றிக் கல்லாதானையாக்கியவாக்கம் இம்மையுமுறுமையுமாக்கினவன்றன்னைச்சென்றுசுடுதலால் அக்கல்லாதானைவிட்டுநீங்குதல்நல்லகருமமென்பதாம்..... (கூ)

மனைப்பாசங்கைவிடாய்மக்கட்கென்றேங்கி..... ❋
யெனைத்தூழிவாழ்நியோநெஞ்சே-யெனைதீதுஞ்... ❋
சிறுவரையாயினுஞ்செய்தறன்றில்லா..... ❋
லுறுபயனேவிவ்வியுயிர்க்கு..... ❋

இதன்பதப்பொருள்.

மனை-மனைவாழ்க்கையினுள்ள. பாசம்-பிணிப்பை. கைவிடாய்-விட்டுவிடாய். மக்கட்கென்று-மக்கட்பொருட்டு. ஏங்கி-இரங்கி. எனைத்து-எத்தனை. ஊழி-ஊழிகாலம். வாழ்நி-வாழ்வாய். நெஞ்சே-நெஞ்சமே. சிறு-சிறிய. வரையாயினும்-அளவையாயினும். செய்தது-தான்முன்புசெய்தது. நன்று-அறப்பயன். அல்லால்-அல்லதூஉ. எனைத்தும்-யாதும். உயிர்க்கு-நம்முயிர்க்கு. உறுபயன்-உறுதிசெய்யும்பயன். இல்லை-இல்லை. என்ற

வாது.—உறுபயன்-எழுவாய். இல்லை-பயனிலை. ஓகாரம் இரண்டும்-ஏகாரமும்-அசைநிலைகள். நெஞ்சுவசம்வருவது-நல்வினை செய்தவர்க்கு. மூன்செய்ததீவினைப்பயன்றன்னுடைய நெஞ்சமுட்டபடத்தனக்குவசம் வராமல்நெஞ்சை வேறுபடுத்திச் செல்லுதலால் அத்தீவினைக்கஞ்ச வேண்டுமென்பதுகொண்டு தீவினையச்சத்திலேசேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

நெஞ்சமே மனைவாழ்க்கையினுள்ள பற்றினைக்கைவிடுகின்றில மக்கட்பொருட்டிரங்கி எத்துணைக்காலம்வாழ்வாய் சிற்றளவையாயினுஞ்செய்தநன்மையல்லதுயாதுநமக்குயிர்க்குறுபயனில்லையென்பதாம்..... (ம)

தீவினையச்சமூற்றிற்று.

அ அதிகாரம்-ஙசு-இ வெண்பா... (ஈசுஙு)

அறத்துப்பான்மூற்றிற்று.



இரண்டாவது.

பொருட்பால்.

அஃதாவது பொருளின் பகுதியாம்.

யசம். அதிகாரம்.

கல்வி.

கல்வி - வித்தை. பொருட்பாலென்பது - அரசர்க்குமற்று மொழிந்தார்க்கு மனைவாழ்க்கையின்கண்ணே நின்று பொருளுக்குவருவாய்ப் பண்ணிக்கொண்டு அறமும் இன்பமுஞ்செய்யவேண்டுமாதலில் இந்தப்பொருளென்னும்பகுதிக்குக்கல்வி பெரும்பான்மையாதலிற்பொருட்பாலிலேசேர்க்கப்பட்டது. அறத்துப்பாலுக்குக்கல்விபெரும்பான்மையல்லவோவெனில் அரசர்க்குக்கல்விகொண்டு மனுநூல்சொல்லுமுறைமையினையறிந்துபிராணிகளையரட்சிக்க இதுவேசருவபிராணிகளுக்குமிரட்சைப்படுத்துமாதலிற் பொருளுக்குக்கல்வியேபெரும்பான்மையென்பதாம்.

குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகு..... .... *
மஞ்சளழகுமழகல்ல-நெஞ்சத்து..... .... *
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையாற்..... ..... *
கல்வியழகேயழகு..... ..... *

இதன்பதப்பொருள்.

குஞ்சி-மயிரினது. அழகும்-அழகும். கொடும்-கோடிய. தானை-ஆடையினது. கோடு-கொய்சகத்தின். அழகும் - அழகும். மஞ்சள்-மஞ்சளாலீவந்த. அழகும்-அழகும். அழகல்ல-அழகல்ல. நெஞ்சத்து - நெஞ்சத்தின்கண்ணுள்ள. நடுவுநிலைமையால்-நடுவுநிலையால். நல்லம் - நல்லேம். யாமென்னும்-யாமென்றுதாந்தம்மையறியப்படும். கல்வி-வித்தையினுடைய. அழகே-அழகே. அழகு-ஒருவற்கழகாவது. என்றவாறு.---

அழகு-எழுவாய். கல்வியழகு - பயனிலை. கோடிய - வினையெச்சம்.

இதன்கருத்து.

மயிரினழகும் கோடிய வாடையினது கொய்சகத்தினழகு மஞ்சளால்வந்த அழகுமழகல்லநெஞ்சத்தின்கண்ணுள்ளநடுவு நிலைமையால் நல்லேம்யாமென்று தாந்தம்மை யறியப்படும் கல்வியழகேயொருவற்கழகாவதென்பதாம்..... (க)

இம்மைபயக்குமாலியக்குறைவின்றூம்..... *
தம்மைவிளக்குமாற்றூமுளராக்கேடின்று ... ... *
லெம்மையுலகத்தும்யாங்காணேங்கல்விபோன்..... *
மம்மரறுக்குமருந்து..... ... ... *

இதன்பதப்பொருள்.

இம்மைபயக்குமால்-பொருள்போலதீதானுள்ளளவும் பயன்படாதிராமலிந்தக்கல்வி யிப்பிறப்பிலே தனக்குப்பயன்படும். ஈயக்குறைவின்றூல்-பொருளொருவனுக்குக்கொடுத்தாற்குறைவுபடுங்கல்வியொருவற்குக்கொடுப்பினுங்குறைவுபடாது. தம்மைவிளக்குமால்-பொருளென்பதுண்டாலுல்தம்மையிப்படியொதீதவனென்று விளக்குவியாது கல்விதம்மைவிளக்குவிக்கும். தாமுளராக்கேடின்றூல்-பொருளென்பது தாமுளராகத்தேடுகாணப்படுங்கல்வி தாமுள்ளளவுங்தேடுகாணப்படாது ஆதலால். எம்மையுலகத்தும்-எல்லாவுலகத்தும். யாம்-நாம். கல்விபோல்-கல்விபோல. மம்மர்-மயக்கதை. அறுக்கும்-தீர்க்கும். மருந்து-மருந்து. காணேம் - கண்டறியோம். எல்லாறு.—யாம் - எழுவாய். காணேம் - பயனிலை. மருந்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

இப்பிறப்பின்கட்டமக் கின்பத்தைப் பயக்கும் பிறர்க்குக் கொடுத்தாற்குறைவுபடாது தம்மையிப்பெற்றிப்பட்டாரென்று எவரோருமறியவிளக்குஞ் செல்வம்போலதீதாமுளராகக் கேடுகாணப்படாது மனத்தின்கண்ணுள்ளமயக்கத்தைக்கல்வி போல அறுக்குமருந்து எவ்வுலகத்தும்யாங்கண்டறியோமென்பதாம்..... (உ)

களர்நிலத்துப்பிறந்தவுப்பினைச்சான்றோர்... ..... *
விளைநிலத்துநெல்லில்விழுமிதாக்கொள்வர்..... ... *
கடைநிலத்தோராயினுங்கற்றறிந்தோரைத்..... .. *
தலைநிலத்துவைக்கப்படும் .... *

இதன்பதப்பொருள்.

களர்நிலத்து - உவர்நிலத்திலே. பிறந்த - உண்டான. உப்பினை - உப்பை. சான்றோர் - சால்புடையோர். விளை - விளைகிற. நிலத்து - நிலத்திலேபிறந்த. நெல்லின் - நெல்லினும். விழுமிதா - சிரிதாக. கொள்வர் - கொள்வார் அதுபோல. கடை - கடையர்ன. நிலத்தோராயினும் - சாதியிலேபிறந்தாராயினும். கற்றறி - கல்வியுடையராய். அறிந்தோரை - பலவுமறிந்திருப்பாராயிலவரை. தலைநிலத்து - தலைமையுடையராக. வைக்கப்படும் - வைத்தெண்ணப்படுவர். என்றவாறு. —சான்றோர் - எழுவாய். வைக்கப்படுவர் - பயனிலை. கற்றறிந்தோரை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

உவர்நிலத்தின்கட்பிறந்தவுப்பினைவிளைநிலத்தின்கண் விளைந்தநெலலினுஞ்சிரிதாகக்கொள்வர்சான்றோர் அதுபோலக்கீழ்க்குலத்துப் பிறந்தாராயினுங் கற்றறிந்தோரைத்தலைநிலத்தின் கண்வைக்கப்படுவதொன்பதாம். .... (கூ)

வைப்புழிக்கோட்படாவாய்த்தீயிற்கேடில்லை ..... *
மிக்கசிறப்பினரசர்செறினீவ்வா..... ... ... *
கொச்சமெனவொருவன்மக்கட்குச்செய்வன..... *
விச்சைமற்றல்லபிற..... .... *

இதன்பதப்பொருள்.

வைப்புழி - பொருள்போலவைத்தவிடத்தில். கோட்படா - பிறராற்கொள்ளப்படாது. வாய் - இடத்துள்ள. தீயில் - தீயால் வரும். கேடில்லை - அழிவில்லை. மிக்க - மிகுந்த. சிறப்பின் - சிறப்பினையுடைய. அரசர் - அரசர்கள். செறின் - கோபித்தகாலத்தும். வவ்வார் - வாங்கப்படாது ஆதலால். எச்சமென - ஆக்கமாகக்கருதி. ஒருவன் - ஒருத்தன். மக்கட்கு - தன்புதல்வர்க்கு. செய்வன - பின்னுக்குத்தேடிக்கொடுக்கும்பொருள்கள். விச்

சை-கல்வியே. பிற-பிறவெல்லாம். அல்ல - ஆக்கமல்ல. என்ற வாறு.—விச்சை-எழுவாய். செய்வன-பயனிலை. மற்று-அசை நிலை. வாய்த்தநிற்கேடில்லையென்பது - வாய்த்தநற்கேடில் லையென்றுமாம்.

இதன்கருத்து.

பொருள்போலவைத்தவிடத்துக்கொள்ளப்படாது இடத் துள்ளதியால்வருங் கேடில்லை மிக்க சிறப்பினையுடைய அரசர் வெகுண்டாலும் வாங்கப்படாது ஆதலால் ஆக்கமாகக்கருதி யொருவன்றம்புதல்வர்க்குத்தேடிக்கொடுக்கும் பொருள்கள் கல்வியே பிறவெல்லாமாக்கமல்லவென்பதாம்..... ... (ச)

கல்விகரையிலகற்பவர்நாள்சில..... *
மெல்லநினைக்கிற்பிணிபலதள்ளிவிடும்..... *
ஞாயந்தமைவுடையகற்பவேநீரொழியப்... ..... *
பாலுண்குருகிற்றெரிந்து..... ..... *

இதன்பதப்பொருள்.

கல்வி-கல்விகள். கரையில-எல்லையில. கற்பவர்-கற்பவர்க்கு. நாள் - வாழ்நாள்களும். சில - சிலவுள. மெல்ல - விரையாது. நினைக்கில்-ஆராயுங்காலத்தில். பிணி-நோய்களும். பல - பலவு ள. தெள்ளிதின்-தெள்ளியவறிவினால். ஆராய்ந்து-விசாரித்து. அமைவுடைய-நிரம்புதலையுடையநூல்களை. நீரொழிய - நீரை யொழித்து. பால்-பாலை. உண்-உண்ணும். குருகில்-அன்னம் போல. தெரிந்து-வேறுபடுத்து. கற்ப-கற்கக்கடவன். என்ற வாறு.—ஒருவன்-எழுவாய். கற்ப-பயனிலை. அமைவுடையன வற்றை-செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கற்கப்படுங்கல்விகளெல்லையிலகற்பவர் வாழ்நாள் சிலவினா யாதாராயின்வருநோயும்பலதெள்ளியவறிவினலாராய்ந்தமை க்கமைவுடையனவற்றையே நீரினையொழியப்பாலினையுண்ணு மன்னம்போலவேயுபடுத்துக்கற்கவேண்டுமென்பதாம் (ஞ)

தோணியியக்குவான் றெல்லைவருணத்துக்..... ... ✻
காணிற்கடைப்பட்டானென்றிகழ்வார்-காணு..... ✻
யவன் றுணையாவா றுபோயற்றேநூல்கற்ற..... ✻
மகன் றுணையாநல்லகொளல்..... ..... ✻

இதன்பதப்பொருள்.

தொல்லை-பழைய. வருணத்து-சாதிகளுள். காணில்-ஆராயில். தோணி-தோணியை. இயக்குவான்-செலுத்துவான். கடை-கடையான சாதியிலே. பட்டானென்று-உண்டானவனென்று. இகழ்வார்-மற்றவனையிகழ்வது. அவன்-அவனை யே. துணையா-துணையாக. ஆறு-ஆற்றை. போயற்றே-கடந்துபோவதே போலும். காணுங்-பாராய். நூல்-நூல்களை. கற்றமகன்-கற்ற வனிழிவானசாதியாயினுமிகழாது. துணையா-அவனைதுணை யாக-நல்ல-நல்லநூற்பொருள்களை. கொளல்-கற்கவேண்டும். என்றவாறு.—ஒருவன்-எழுவாய். கொளல்-பயனிலை. நல்ல னவற்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பழையசாதிகளுள் ஆராயிற் றோணியைச் செலுத்துவான் கடைப்பட்டானென்று மற்றவனையிகழாது யவனையே துணை யாக ஆற்றைக்கடந்துபோவதேபோலும் நூல்கற்றமகன் இழி வானசாதியாயினுமிகழாது அவன் றுணையாகநல்லநூற்பொரு ள்களைமனத்தானறிந்துகோடலென்பதாம்..... ..... (சு)

தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையா..... ✻
ரிகவிலவொஃகுடையார்தம்மூட்சூழீஇ..... ... ... ✻
நகலினினிதாயிற்காண்பாமகல்வானத்..... ..... ✻
றும்பருறைவார்பதி..... ... . ✻

இதன்பதப்பொருள்.

தவலரும்-கேடில்லாத தொல்-பழைய. கேள்வி-கல்விகளா ல்வருட். தன்மை-குணங்களை. உடையார்-உடையர். இகவிலர்-தம்மூள்ளமாறுபாடிலராய். ஒஃகுடையார்-கூரியருமாயிருக் குமவர். தம்மூள்-தம்மில். சூழீஇ-கூடியிருந்து. நகலின்-மகி ழுமகிழ்ச்சியைப்பார்க்கிலும். அகல்-அகன்ற. வானத்து-வான த்தில். உம்பர்-தேவர்கள். உறை-உறையும். வார்பதி-நெடும் பதி. இனிதாயில்-இனிதாயிருந்தால். காண்பாம்-காணக்கட வோம். என்றவாறு.—யாம்-எழுவாய். காண்பாம்-பயனிலை. உம்பருறைநெடும்பதி-அமராவதி.

இதன்கருத்து.

கெடற்கரியபழையகேள்விகளால்வருங்குணங்களையுமுடை யார் எஃகுபோன்றகூர்மையையுமுடையார்தம்மூட்கூடியிருந் துமகிழுமகிழ்ச்சியைப்பார்க்கிலும் அகன்றவிசும்பிற்கடவுளரு றையும் அமராவதியினிதாயிற்காணக்கடவோமென்பதாம் (எ)

கனைகடற்றண்சேர்ப்பகற்றறிந்தார்கேண்மை ... ... *
நுனியிற்கரும்புதின்றற்றே-நுனிநீக்கித்..... ... ... *
தூரித்தின்றன்னதகைத்தோபண்பிலா... ... ... *
வீரமிலாளர்தொடர்பு .... *

இதன்பதப்பொருள்.

கனை-ஆரவாரத்தையுடைய. தண்-குளிர்ந்த. கடல்-சமுத்தி ரத்தினது. சேர்ப்ப-கரையையுடையவனே. கற்று-நூல்களைக் கற்று. அறிந்தார்-அந்நூற்பொருளையறிந்தாருடனே. கேண் மை-கொண்டவுறவு. கரும்பு - கருமையை. நுனியில் - நுனியே தொடங்கி. தின்றற்று - தின்றற்போலும். பண்பிலா-பழமை யுமிலராய். ஈரமிலாளர் - தயவுமில்லாதாருடனே. தொடர்பு- கொண்டவுறவு. நுனி - நுனியை. நீக்கி-விட்டு. தூரில்-அக்கரு ம்பையடியேதொடங்கி. தின்றன்ன - தின்றற்போலும். தகை த்து-தன்மையையுடைத்து. என்றவாறு.—கேண்மை-எழுவா ய். தின்றற்று-பயனிலை. தொடர்பு-எழுவாய். தகைத்து - பய னிலை. ஏகாரம்:அசை. ஓ-அசைநிலைகள். இதுகல்விக்குப்பொருந் துமோவெனில் ஒருவனுடனுறவுசேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

கனைகடற்றண்சேர்ப்பகற்றறிந்தார்நட்புநுனியேதொடங்கி க்கரும்பினைத்தின்றற்போலும்பண்பின்றியீரமில்லாதார்நட்பு நுனியைநீக்கி அக்கரும்பினையடியேதொடங்கித்தின்றற்போ லுந்தன்மையையுடைத்தென்பதாம்..... (அ)

கல்லாராயினுங்கற்றாரைச்சேர்ந்தொழுகி... ..... *
னல்லறிவுநாணுந்தலைப்படுவர்-தொல்சிறப்பி..... *
லெண்ணிறப்பாதிரிப்பூச்சேர்தலாற்புத்தோடு ..... *
தண்ணீர்க்குத்தான்பயந்தாங்கு..... .... *

இதன்பதப்பொருள்.

கல்லாராயினும் - கற்றிலராயினும். கற்றாரை - கற்றவரை. சேர்ந்து-அடைந்து. ஒழுகின்-ஒழுகுவராயின். தொல்-பழை ய. சிறப்பின்-சிறப்பினையுடைய. நல-நல்ல. அறிவு-அறிவினை

நாளும் - நாடோறும். தலைப்படுவர் - உடையராவர். ஒள் - ஒள்ளிய. நிறம் - நிறத்தினையுடைய. பாதிரி - பாதிரிமரத்தினது. பூ - பூவை. சேர்தலால் - அடைதலால். புத்தேடு புதியவோடானது. தண் - குளிர்ந்த. நீர்க்கு - சலத்துக்கு. தான்பயந்தாங்கு - தான்பயன்பட்டாற்போலும். என்றவாறு. — ஒருவர் - எழுவாய். தலைப்படுவர் - பயனிலை. அறிவை - செயப்படுபொருள். ஏகாரம் - அசைநிலை.

இதன்கருத்து.

நூல்களைக்கல்லாராய்இனுங்கற்றறிந்தாரைச்சேர்ந்தொழுகுவராயின் நாடோறும் பலதுயிறப்பினையுடைய நல்லறிவினைத் தலைப்படுவர் ஒண்ணிறப்பாதிரிப் பூவைச்சேர்தலாற் புத்தோடுதான்வாசத்தைத் தண்ணீர்க்குப்பயந்தாற் போலுமென்பதாம்..... (கூ)

அலகுசால்கற்பினறிவுநூல்கல்லா..... *
துலகநூலோதுவதெல்லாங்-கலகல..... *
கூவுந்துணையல்லாற்கொண்டுதடுமாற்றம்... ..... *
போலுந்துணையறிவாரில்..... *

இதன்பதப்பொருள்.

அலகு - எண். சால் - அமைந்த. கற்பின் - நூல்களைக்கற்குங்காலத்து. அறிவுநூல் - வீடுபேற்றுக்குக்காரணமான ஞானநூல்களை. கல்லாது - கற்காது. உலகநூல் - உலகவழக்குமானபல நூல்களையும். ஓதுவதெல்லாம் - படிப்பதெல்லாம். கலகல - கலகலவென்னுமோசையுடைத்தாய். கூவும் - கூவும். துணை - அளவு. அல்லால் - அல்லது. தடுமாற்றம் - பிறவித்தடுமாற்றத்தினின்றும். கொண்டு - தம்மையுய்யக்கொண்டு. போலும் - போலும். துணை - அளவு. அறிவார் - அறியுமவர். இல் - இல்லை. என்றவாறு. — அறிவார் - எழுவாய். இல் - பயனிலை.

இதன்கருத்து.

எண்ணமைந்தநூல்களைக்கற்குங்காலத்து ஞானநூல்களைக்கல்லாது உலகநூல்களையோதுவதெல்லாங் கலகலவெனக்கூவுந்துணையல்லது பிறவித்தடுமாற்றத்தினின்றுந்தம்மையுய்யக்கொண்டுபோமளவறிவாரில்லையென்பதாம்..... (ஙு)

கல்விமுற்றிற்று.

அ அதிகாரம் - ஙச - இ வெண்பா... (ஈசஙு)

யது-ம். அதிகாரம்.

குடிப்பிறப்பு.

குடி-நல்லகுடியில். பிறப்பு-சனனம். அஃதாவது-வருண நான்கிற்குமுட்பட்டு மண்ணுமக்களுந் தோன்றின நாண்முதலாகவருஞ்சனனம் அதனுளதாகிய குடிப்பெயரும் அதற்கு நடவுமாய்வருங்கோத்திரமுமோரிடமாகவும் குலத்துக்கேற்றவொழுக்கமும் அறமும் ஆசாரமும் அடிப்படுஞ்செயற்கையானகல்வியும் பிறரறிந்துகூறவேண்டுமறிவுந் தமக்கியற்கையாகவுண்டாதலுமாம்.

உடுக்கையுலறியுடம்பழிந்தக்கண்ணுங்..... *
குடிப்பிறப்பாளர்தங்கொள்கையிற்குன்று... ... .. *
நிடுக்கண்டலைவந்தக்கண்ணுமரிமா..... ..... *
கொடிப்புற்கறிக்குமோமற்று..... ..... *

இதன்பதப்பொருள்.

உடுக்கை - பொல்லாவாடையால். உலறி - பொலிவழிந்து. உடம்பு-உடம்பானது. அழிந்தக்கண்ணுங்-பசிதோயால்வற்றினவிடத்தும். குடிப்பிறப்பாளர்-குடிப்பிறப்பையுடையார். தம்-தம்முடைய. கொள்கையில்-ஒழுக்கத்தில். குன்றார்-குறையார். இடுக்கண்-பசியாற்றுன்பம். தலைவந்தக்கண்ணுங்-தலைவந்தவிடத்தும். அரிமா-சிங்கமானது. கொடிப்புல்-கொடிப்புல்லை. கறிக்குமோ - தின்னுமோ. என்றவாறு.—குடிப்பிறப்பாளர்-எழுவாய். குன்றார்-பயனிலை. மற்று-அசைநிலை.

இதன்கருத்து.

பொல்லாவாடையாற்பொலிவழிந்து உடம்புபசிதோயால்வற்றினவிடத்துங்குடிப்பிறப்பாளர்தம்மொழுக்கத்திற்குறைபடாரிடையால்வருமிடுக்கண்டலைவந்தவிடத்தும் அரிமாகொடிப்புல்லைத்தின்னுமோவென்பதாம்?..... ..... (க)

சான்றுண்மைசாயலொழுக்கமிவைமூன்றும் ... ... *
வான்றோய்குடிப்பிறந்தார்க்கல்லது-வான்றோயு .... *
மைதவழ்வெற்பபடாஅவெருஞ்செல்வ..... ..... *
மெய்தியக்கண்ணும்பிறர்க்கு .... *

இதன்பதப்பொருள்.

சான்றாண்மை-சால்புடைமையும். சாயல் - மேன்மையும். ஒழுக்கம்-ஒழுக்கமுமென்னும். இவைமூன்றும்-இவைமூன்று குணமும். வான்-வானை - தோய்-தோய்வதுபோலவோங்கிய. குடி-குடியின்கண். பிறந்தார்க்கு - பிறந்தவர்க்கு. அல்லது-அல்லாவ். வான்-ஆகாயத்தை. தோயும் - பொருந்தும். மை-மேகம். தவழ்-தவழும். வெற்ப-மலையையுடையவனே பிறர்க்கு - குடிப்பிறவாதார்க்கு. பெரும்-பெரிய. செல்வம்-ஐச்சுவரியம். எய்தியக்கண்ணும்-உண்டானவிடத்தும். படா-உளவாகா. என்றவாறு.—இவை - எழுவாய். படா-பயனிலை.

இதன்கருத்து.

வான்றோயுமைதவழ் வெற்பனே அமைதியு மேன்மையும் ஒழுக்கமுமென்னுமிவைமூன்றும் உயர்ந்தகுடியின் கட்பிறந்தார்க்கல்லது பிறர்க்குப்பெருஞ்செல்வ மெய்தியவிடத்தும் உளவாகாவென்பதாம்..... (2)

இருக்கையெழுமெனிர்செலவுமேனே..... *
விடுப்பவொழிதலோடின்ன-குடிப்பிறந்தார்... .... *
குன்றாவொழுக்கமாக்கொண்டார்கயவரோ..... ... *
டொன்றாவுணரற்பாற்றன்று..... ..... *

இதன்பதப்பொருள்.

இருக்கையெழுதும்-தம்மாற்சிறப்புச்செய்யப்படுவோரைக்காணிலிருந்த விருப்புவிட்டுத்தாமெழுந்திருந்து நிற்றலும். எனிர்செலவும்-அவர்க்கெதிரேசெல்லுதலும். ஏனை-அதுவொழிந்து - விடுப்பவொழிதலோடு. அவரிருந்துபோம் பொழுதவர்பின்சென்றுலவர் நிற்கவெனநிற்றலுமென்னும். இன்னை-இவைமுதலியவாசாரங்கள். குடி-குடியிலே. பிறந்தார்-பிறந்தவர். குன்றா-தமக்குக்கெடாத. ஒழுக்கமா-ஒழுக்கமாக. கொண்டார்-கொண்டார். கயவரோடு-அவ்வொழுக்கங்கீழானவரோடு. ஒன்றா-ஒன்றும்பகுதியுண்டாயினும். உணரல்-குடிப்பிறந்தாரைப்போலவியற்கையாகவுணரும். பாற்றன்று-பகுதியொன்றாதுமுடைத்தில்லை. என்றவாறு.—குடிப்பிறந்தார்-எழுவாய். கொண்டார்-பயனிலை.

குடிப்பிறப்பு.

இதன்கருத்து.

தம்மாற் சிறப்புச்செய்யப் படுவோரைக்கண்டா விருக்கை யெழலும் அவர்க்கெதிர்சேறலும் அவர்போம்போது பின் னேசென்று அவர்நிற்கவெனநிற்றலுமென்னுமிவைமுதலான ஆசாரங்கள் குடிப்பிறந்தார் தமக்குக்குன்றுவொழுக்கமாகக் கொண்டார் அவ்வொழுக்கங்கயவரோடொன்றினுங் குடிப்பி றந்தாரைப்போலவுணரற்பாற்றன்றென்பதாம்..... (ங)

நல்லவைசெய்யினியல்பாகுந்தீயவை..... ..... *
பல்லவர்தூற்றும்பழியாகு-மெல்லா..... *
மூணருங்குடிப்பிறப்பினுதியமென்றே..... *
புணருமொருவர்க்கெனின்..... *

இதன்பதப்பொருள்.

நல்லவை-நல்லனவற்றை. செய்யின் - செய்தால். இயல்பா கும் - தமக்கியற்கையாம். தீயவை - தீயனவற்றைச்செய்தால். பல்லவர்-பலரும். தூற்றும்-தூற்றத்தக்க. பழியாகும்-பழிப் புரையாம் ஆதலால். எல்லாம்-எல்லாநற்குணங்களையும். உண ருங்-தாமேயுணர்ந்தொழுகும். குடிப்பிறப்பின்-குடியின்கட் பிறத்தலின்மேல். ஒருவர்க்கு-ஒருவருக்கு. புணருமெனின்-அ க்குடிப்பிறப்புதானவற்று கூடுமாயின். உஞ்சியம் - உறுதி. எனை-யாது. என்றவாறு.—உஞ்சியம்-எழுவாய். என்-பயனிலை. ஓகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

நல்லனவற்றைச்செய்யிற்றமக்கியற்கையாகுந்தீயனவற்றை ச்செய்யிற்பலருந்தூற்றும்பழியாகும் ஆதலால்நற்குணங்களை யுந்தாமேயுணர்ந்தொழுகுங் குடியின்கட்பிறத்தலின்மேலொ ருவர்க்கு அக்குடிப்பிறப்புதானவற்று கூடுமாயினுறுதியா தென்பதாம் .... (ச)

கல்லாமையச்சங்கயவர்தொழிலச்சஞ்..... *
சொல்லாமையுள்ளுமோர்சோர்வச்ச-மெல்லா ..... *
மிரப்பார்க்கொன்றீயாமையச்சமரதிதாரிம்..... *
மாணக்குடிப்பிறந்தார்..... ..... *

இதன்பதப்பொருள்.

கல்லாமை-கல்லாதிருக்குந்தன்மை அச்சம்-ஓரச்சம். கயவர்-கீழ்மக்கள். தொழில்-தொழிலச்செய்கின்றது. அச்சம்-ஓரச்சம். சொல்லாமையுள்ளும் - பொய்சொல்லாமையுள்ளும். ஓர்-ஒரு. சோர்வு-சொற்சோர்வுபடுதலும். அச்சம்-ஓரச்சம். எல்லாம் - எல்லாப்பொருளையும். இரப்பார்க்கு - இரந்தவர்க்கு. ஒன்று - ஒன்றை. ஈயாமை-கொடாமையும். அச்சம்-ஓரச்சம் ஆதலால். இம்மாணு-இப்பெற்றிப்பட்டமாட்சிமையில்லாத. குடி-குடியிலே. பிறந்தார்-பிறந்தோர். மரத்தார்-மரத்தினுள்ளே வைத்தெண்ணப்படுவர். என்றவாறு.—குடிப்பிறந்தார்-எழுவாய். மரத்தார்-பயனிலை.

இதன்கருத்து.

கல்லாமையுமச்சங்கயவர் தொழிலுமச்சம் பொய்சொல்லாமையுள்ளும் ஒருசொற்சோர்வுபடுதலு மோரச்சம் எல்லாப்பொருளையுமிரப்பார்க்கொன்றைக்கொடாமையுமச்சமாதலால் இப்பெற்றிப்பட்டமாட்சிமையில்லாக்குடிப்பிறந்தார்மரத்துள்ளேவைத்தெண்ணப்படுவரென்பதாம் ... ... (இ)

இனநன்மையின் சொலொன்றீதன்மற்றேனை..... *
மனநன்மையென்றிவையெல்லாங்-கனமணி..... *
முத்தோடமைக்குமுழங்குவரித்தண்சேர்ப்ப ... ... *
விற்பிறந்தார்கண்ணேயுள .... *

இதன்பதப்பொருள்.

இனநன்மை - இனநன்மையும். இன்-இனிய. சொல்-வார்த்தையும். ஒன்று - ஒருவர்க்கொன்றை. ஈதல் - கொடுத்தலும். ஏனை-ஒழிந்த. மனம்-மனத்தினுடைய. நன்மை-நன்மையும். என்று - என்றுசொல்லப்பட்ட. இவையெல்லாம்-இவைகளெல்லாம். கனமணி-பிக்கமாணிக்கமணிகள். முத்தோடு-முத்துடனேகூட. இமைக்கும்-விளங்கி. முழங்கு-ஆரவாரஞ்செய்கின்ற. தண்-குளிர்ந்த. உவரி-கடல். சேர்ப்ப-சேர்ப்பனே. இற்பிறந்தார்கண்ணே-குடிப்பிறந்தாரிடத்தே. உள-உண்டு. என்றவாறு. எல்லாம்-எழுவாய். உள-பயனிலை. மற்று-அசைநிலை.

குடிப்பிறப்பு.

இதன்கருத்து.

கனமணிமுத்துடனேவிளங்கிமுழங்காநின்ற தண்கடற்சேர்ப்பனே இனநன்மையும் இன்சொல்லும் ஈதலும்மனநன்மையுமென்றுசொல்லப்பட்ட இவையெல்லாங்குடிப்பிறந்தார்மாட்டேயுளவென்பதாம்..... (சூ)

செய்கையழிந்துசிதன்மண்டிற்ருயினும்..... *
பெய்யாவொருசிறைபேரிலுடைத்தாகு ..... *
மெவ்வமுழந்தக்கடைதீதுங்குடிப்பிறந்தார் ..... *
செய்வர்செயற்பாலவை..... *

இதன்பதப்பொருள்.

செய்கை-பிணிக்கப்பட்டவுறுப்பு. அழிந்து-குலைந்து. சிதல்-செல். மண்டிற்ருயினும்-மிகச்சிறிந்ததாயினும். பெய்யா-ஒழுகாத. ஒருசிறை - ஓரிடத்தை. பேர் - பெரிய. இல் - வீடு. உடைத்தாகும் - சிறிதுண்டாயிருக்கும் அதுபோல. எவ்வம்-வறுமையாற்றுன்பம். உழந்தக்கடைதீதும்-உழந்தவிடத்தும். குடி-குடியின்கண். பிறந்தார்-பிறந்தவர். செயற்பாலவை-பிறர்க்குச்செய்யத்தகும்பகுதியானவொப்புரவுகளை. செய்வர்-செய்வார். என்றவாறு.—குடிப்பிறந்தார்-எழுவாய். செய்வர்-பயனிலை. செயற்பாலவை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

கட்டுக்குலைந்து சிதலைச்சிறிந்ததாயினும் ஒழுகாததோரிடத்தைப்பெரியமனையுடைத்தாகும் அதுபோலவறுமையாற்றுன்பமுழந்தாலுங்குடிப்பிறந்தார் பிறர்க்குச்செய்யத்தகுமுதவிகளைச்செய்வரென்பதாம்..... (எ)

ஒருபுடைபாம்புகொளினுமொருபுடை..... *
யங்கண்மாஞாலம்விளக்குமூஉத்-திங்கள்போற்..... *
செல்லாமைசெவ்வனோர்நிற்பினுமொப்புரவிற் ..... *
கொல்கார்குடிப்பிறந்தார்..... *

இதன்பதப்பொருள்.

ஒருபுடை-ஒருபக்கம். பாம்பு-பாம்பானது. கொளினும்-பற்றிக்கொண்டுநிற்பினும். ஒருபுடை - தின்றதொருபக்கத்திலுள். அம் - அழகிய. கண் - இடத்தையுடைய. மா-பெரிய.

ஞாலம்-பூமியை. விளக்குறூஉம்-விளங்குறச்செய்யும். திங்கள் போல - மதியம்போல. செல்லாமை - நடவாமையாகியபிடி. செவ்வனேர்-ஒருவழிப்பட. நிற்பினும்-நிலைத்ததாயினும். குடிப்பிறந்தார்-குடியிற்பிறந்தார். ஒப்புரவிற்கு - உலகவியற்கையான வொப்புரவுசெய்தற்கு. ஒல்கார்-தளரார். என்றவாறு. - குடிப்பிறந்தார் - எழுவாய். ஒல்கார் - பயனிலை. செவ்வனேயென்றுபாடமோதி - செவ்வையேயெனப்பொருளுரைப்பாருமுளர்.

இதன்கருத்து.

ஒருமருங்குபாம்புகொண்டதாயினுமதிலொருமருங்கிலுள்ள மாஞாலத்தை விளக்குறுத்துமதியம்போலச் செல்லாமையாகிய வுறுதி செவ்வனேர்நின்றதாயினுங் குடிப்பிறந்தாரொப்புரவிற்குத்தளராதொண்பதாம்..... (அ)

செல்லாவிடத்துங்குடிப்பிறந்தார்செய்வன..... *
செலவிடத்துஞ்செய்யார்சிறியவர்-புல்வாய்..... *
பருமம்பொறுப்பினும்பாய்பரிமாபோற்... ... ... *
பொருமுரணூற்றுதலின்று..... .. .. *

இதன்பதப்பொருள்,

செல்லாவிடத்தும்-வறுமையாற்செல்லாதவிடத்தும். குடி-குடியிலே. பிறந்தார். பிறந்தவர். செய்வன-செய்யுமொப்புரவுகளை. செலவிடத்தும் - தமக்குச்செல்வமுண்டாய்ச்செல்லுமிடத்தும். செய்யார்-செய்யமாட்டார். சிறியவர்-கீழ்மக்கள். புல்வாய்-புல்வாயானது. பருமம்-கல்லணையை. பொறுப்பினும்-பொறுத்ததாயினும். பாய்-பாய்கின்றசெலவையுடைய. பரிமாபோல்-குதிரையைப்போல. பொருந்-போரின்கட்பொருந். முரண்-சண்டையை. ஆற்றுதல்-செய்தல். இன்று-இல்லை அற்றுபோலும். என்றவாறு.—சிறியவர்-எழுவாய். செய்யார்-பயனிலை. செய்வனவற்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

வறுமையாற் செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார் செய்யும் ஒப்புரவுகளைத்தமக்குச்செல்வமுண்டாய்ச்செல்லுமிடத்துஞ் செய்யமாட்டார் குடிப்பிறவாதார் புல்வாய்பண்ணினைத்தாங்

மெய்ம்மக்கள்.

இற்றுயினும் பாய்பரிமாவைப்போலப்போரின்கட்பொருமு
ரணற்றுதவில்லை அதுபோலுமென்பதாம்... ... ... (எ)

எற்றென்றும்மில்லாவிடத்துங்குடிப்பிறந்தா..... ... *
ரற்றுத்தற்சேர்ந்தார்க்கைசவிடத்தூற்றுவ..... *
ரற்றக்கடைத்தூமெல்யாறுஞ்நீத்தக்காற்... ... ... *
றெற்றெனத்தெண்ணீர்படும்..... .... *

இதன்பதப்பொருள்.

எற்றென்றும் - யாதொன்றும். இல்லாவிடத்தும்-இல்லாதகாலத்தும். குடிப்பிறந்தார்-குடியிற்பிறந்தவர். அற்று ஒன்றுமற்றுவந்து. தன்-தம்மை. சேர்ந்தார்க்கு-அடைந்தார்க்கு. கைவிடதீது-தளர்ந்தவிடத்து. ஊற்றுவர்-உதவியாவர். அற்றகடைத்தும் - நீர்வற்றினவிடத்தும். அகல்-அகன்ற. யாறு - யாற்றிலே. அகழ்ந்தக்கால் - குழிதோண்டினவிடத்து. தெற்றென-விரைய. தெள்-தெளிந்த. நீர்-நீரை. படும்-தரும் அதுபோலும். என்றவாறு.—குடிப்பிறந்தார்-எழுவாய். ஊற்றுவர்-பயனிலை.

இதன்கருத்து.

யாதொரு பொருளு மில்லாத விடத்துங் குடிப்பிறந்தார் பொருளற்றுந்தம்மைசார்ந்தார்க்குத தளர்ந்தவிடத்துப்பற்றுவர் நீர்வற்றினவிடத்தமகலயாறுதோண்டினுற்றெற்றென்றத்தெண்ணீரைத்தரும் அதுபோலுமென்பதாம்..... (ம)

குடிப்பிறப்புமுற்றிற்று.

அ அதிகாரம்-ஐந்து-இரு. வெண்பா... (ஈஐம)

மெய்ம்மக்கள்.

மெய்-மேலாயிருக்கிற. மக்கள்-மனிதர். அஃதாவது-மேம்பாட்டுத்தன்மை இதுகுடிப்பிறந்தார்க் கியற்கையாகவுண்டாகாதோவெனில் இவ்வியற்கைக் கீழ்மக்களுஞ்சார்ந்து மேம்பாடுமாதலில மேம்பாட்டுத் தன்மையுடையார் தீயவர்கள்

வந்தடைந்தாலு மவர்களையுபசரித்தருணமுடையராம்படிபண்ணத் தாமுந்தம்முடைய தன்மைகுன்றாதொன்பது கொண்டு மெய்ம்மக்களென்னுமதிகாரமும்வேண்டுமென்பதாம்.

அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந்.....
திங்களுஞ்சான்றோருமாப்பர்மற்-றிங்கண்
மறுவார்றுஞ்சான்றோர்மைந்தற்குரிதெருமந்து.....
தெய்வமொருமாசுறின்.....

இதன்பதப்பொருள்.

அம்-அழகிய. கண்-இடைந்தையுடைய. விசும்பின்-ஆகாசத்தினின்றும். அகல்-அகன்ற. நிலா-நிலாவை. பாரிக்கும்-பரப்பும். திங்களும்-சந்திரனும். சான்றோரும்-சால்புடையோரும். ஒப்பர்-சமமிலொப்பராயினும். திங்கள்-சந்திரன். மறு-மறுவை. ஆர்றும்-பொறுக்கும். சான்றோர்-அமைந்தோர். மைந்தற்கு-அகுரற்றதிரனே. ஆற்றூர்-பொறூர். ஒருதமக்கொரு. மாசு-குற்றம். உறின்-வந்தவிடத்து. தெருமந்து-சுழற்சிவந்து. தெய்வர்-மாய்ந்தவிடுவர். எல்லாறு.—சான்றோர்-எழுவாய். தெய்வர்-பயனிலை. மன்-அசைநிலை.

இதன்கருத்து.

அங்கண்விசும்பினின்றுமிக்கநிலாவைப்பரப்புந் திங்களுஞ்சான்றோருமாப்பராயினுந்திங்கண்மறுவைப்பொறுசூஞ்சான்றோர்மைந்தர்தமக்கொரு மாசுற்றவிடத்தலமந்துதெய்வமொன்பதாம்..... (எ)

இசையுமெனினுமிசையாதெனினும்.....
உசைதீரவெண்ணுவர்சான்றோர்-விசையி.....
னரிமாவுளங்கிழித்தவம்பினிற்றீதோர்.....
வரிமாப்பிழைப்பெய்தகோல்.....

இதன்பதப்பொருள்.

இசையுமெனினும்-கூடுமாயினும். இசையாதெனினும்-கூடாதாயினும். வசை-குற்றம். தீர-நீங்க. எண்ணுவர்-எண்ணுவார். சான்றோர்-அமைந்தோர். விசையின்-விசையுடனே. நரிமா-நரிமாவை. உளம்-நெஞ்சம். கிழித்த-பிளந்த. அம்பி

னில்-அம்பைப்பார்க்கிலும். அரிமா - சிங்கத்தை. பிழைப்பு-பிழைக்க. எய்த-விட்ட. கோல் - அம்பான தை. தீதை-பொல்லாதை. என்றவாறு.—சான்றோர்-எழுவாய். எண்ணுவர்-பயனிலை.

இதன்கருத்து.

கூடுமாயினுங்கூடாதாயினுங் குற்றந்தீரநினைப்பர்சான்றோர் சிலசையினரிமாவினை நெஞ்சங்கிழித்தவம்பினி லரிமாவினைப் பிழைக்கவெய்தவம்புதீதன்றென்பதாம்..... (உ)

நரம்பெழுந்தநல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர் .... *
குரம்பெழுந்துகுற்றங்கொண்டோரு-ருரங்கவரு ... *
வுள்ளமெனுநாரிலுற்கட்டியுளவையாற்..... ..... *
செய்வர்செயற்பாலவை..... ..... *

இதன்பதப்பொருள்.

நரம்பு-பசிதோயாவுடம்புவற்றிநரம்பு. எழுந்து-தோன்றி. நல்கூர்ந்தாராயினும் - தரித்திரப்பட்டாராயினும். சான்றோர்-அமைந்தோர். குரம்பு - வரம்பை. எழுந்து - கடந்து. குற்றங்கொண்டு - குற்றத்தைக்கொண்டு. எருர்-இரப்பதாகத்தணிந்தொருவர்பக்கற்செல்லார். உரம் - தம்மறிவினையே. கவரு-கவருதக்கொண்டு. உள்ளமெனும்-முயற்சியென்கின்ற. நாரிலுல்-நாரால். கட்டி - வறுமையாற்றளர்ந்தமனத்தைச்சிக்கெனப்பிணித்து. உளதமக்குள்ள. வையால்-பொருளளவினுல். செயற்பாலவை. செய்யத்தக்கவொப்புரவுகளை. செய்வர்-செய்வார். என்றவாறு.—சான்றோர்-எழுவாய். செய்வர்-பயனிலை. செயற்பாலனவற்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

நரம்பெழுந்தநல்கூர்ந்தாராயினும் அமைவுடையார்வரம்பைக்கடந்து குற்றத்தைக்கொண்டிரப்பதாக ஒருவர்பக்கற் செல்லார் தம்மறிவினையேகவருதக்கொண்டு முயற்சியென்னு நாரால்வறுமையாற்றளர்ந்தமனத்தையாப்புறப்பிணித்துத்தக்க மக்குப்பொருளுள்ளவளவிற்செய்யத்தக்க ஒப்புரவுகளைச் செய்வரென்பதாம்..... .... (ஊ)

செல்வழிக்கண்ணெருநாட்காணினுஞ்சான்றவர் .... *
தொல்வழிக்கேண்மையிற்றோன்றப்புரிந்தியாப்பர் . *
நல்வரைநாடகிலநாளழிப்படிற்..... ..... *
கல்வரையுமுண்டாநெறி..... *

இதன்பதப்பொருள்.

செல்-போகின்ற. வழிக்கண்-வழியின்கண்ணே. ஒருநாள்-ஒருவரையொருநாள். காணினும் - காண்பினும். சான்றவர்-அமைந்தோர். தொல்-பழைய. வழி-வழிவந்த. கேண்மையில்-உறவேபோலவுட்கொண்டு. தோன்றப்புரிந்து-விளங்கச்செய்து. இயாப்பர் - நட்பாகப்பிணிப்பர். நல் - நல்ல. வரைநாடல்-மலைநாடனே. சிலநாள்-சிலர்ஞாள் அழிப்படில் - அழிப்பட்டகாலத்தில். கல்வரையும்-கல்லானவிடமும். நெறி-வழி. உண்டாம்-உண்டாகும் என்றவாறு. — சான்றவர்-எழுவாய். இயாப்பர்-பயனிலை. விளங்கச்செய்தலாவது - பலருமறியும்படிமகிழ்தல். செல்வழிக்கண்ணென்றும்பாடம்.

இதன்கருத்து.

செல்கின்றவழியின்கண்ணே யொருநாளொருவனைக்காணினும் அமைவுடையார் பழைதாகவழிவந்தகேண்மையேபோலவிளங்கச்செய்து அவனைநட்பாகப்பிணிப்பர் நல்லைநாடனேசிலநாளழிப்படநடந்தாற்கல்லைகண்ணும்வழியுண்டாகுமென்பதாம்..... ..... (க)

புல்லாவெழுத்திற்பொருளில்வறுங்கோட்டி..... *
கல்லாவொருவனுரைப்பவுங்கண்ணேழை..... *
நல்லார்வருந்தியுங்கேட்பமோமற்றவன்..... *
பல்லாருணரல்பரிந்து .... *

இதன்பதப்பொருள்.

புல்லா-இலக்கணத்தோடியைபொருந்தாத. எழுத்தின்-எழுத்தினிலியைபுடைத்தாய். பொருளில்-பொருளறிவில்லாத. வறும்-வறுமைய. கோட்டி-அவையின்கட்பயின்ற. கல்லா-கல்லாத. ஒருவன்-ஒருத்தன். உரைப்பவும்-ஒன்றைச்சொல்லுமவனிடத்தும். கண்ணேழை - கண்ணேழைட்மூடையராய். நல்லார்-மேன்மக்கள். வருந்தியும்-வருந்தியாயினும். அவன் - அத்தவறிவில்லாதவன். பல்லாருள்-பலர்மூன்றே. ஞாணல்-ஞாணுதற்கு. பரிந்து-

மெய்ம்மதிகள்.

இரங்கி. கேட்பர்-கேட்பார். என்றவாறு.—நல்லார்-எழுவாய். கேட்பர்-பயனிலை. ஏகாரமும்-மற்றும் அசைநிலைகள்.

இதன் கருத்து.

இலக்கணத்தோடு பொருந்தாத வெழுத்தறிவினையுடைத்தாயிற்பொருளில்லாதவறிவியவனையின் கட்பயின்றகல்லாவொருவனென்றினைச்சொல்லவும் அவன் மாட்டுக்கண்ணோடி நல்லறிவினையுடையார்வருந்தியாயினும் அவன்பலதொழிற் காணுதற் கிரங்கிக்கேட்பதொன்பதாம்..... (ரு)

கடித்துக்கரும்பினைக்கண்டகாலூறி..... *
பிடித்துநீர்கொள்ளினுமில் சுவைத்தேயாகும் ... ... *
வடுப்படவைதிறந்தக்கண்ணுங்குடிப்பிறந்தார்..... *
கூரார்தம்வாயிற்சிதைந்து..... *

இதன்பதப்பொருள்.

கரும்பினை-கரும்பை. கடித்து - கறித்து. கண் - கணுக்கள். தகர-உடைய. நூறி-தெரித்து. இடித்து-அதனையாலெவாயிற் முகைத்து. நீர்-இரசத்தை. கொள்ளினும் - கொண்டாலுமக் கரும்பு. இன்-இனிய. சுவைத்து-சுவையினையுடைத்து. ஆகும்-ஆம் அதுபோல. வடு-குற்றம். பட-உண்டாக. வைது-ஒருவர்தம்மைவைது. இறந்தக்கண்ணும்-போனவிடத்தும். குடி-குடியிலே. பிறந்தார்-பிறந்தவர். தம்-தப்முடைய. வாயில-வாயினுலே. சிதைந்து-சிதைய. கூரார்-சொல்லார். என்றவாறு.—குடிப்பிறந்தார்-எழுவாய். கூரார்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கரும்பைக்கறித்துக் கணுக்களுடையதெரித்ததனைத்துகைத்துச்சாறுகொள்ளினும் அக்கரும்பினியசுவையையுடைத்தேயாம் அதுபோலக்குற்றந்தோன்றவொருவர் வைதிறந்தவிடத்துங்குடிப்பிறந்தார்தம்வாயிற்சிதையக்கூறலென்பதாம் (சு)

கள்ளார்கள்ளுண்ணுர்கழுவகழிந்தொரீஇ..... *
யெள்ளிப்பிறரையிகழ்ந்துரையார்-தள்ளியும் ... ... *
வாயிற்பொய்கூரார்வடுவுங்காட்சியார்..... *
சாயிற்பரிவதிலர்..... *

இதன்பதப்பொருள்.

வடி-குற்றம். அறு-அற்ற. காட்சியார்-அறிவினையுடையார். கள்ளார்-களவுகாணார். கள்-கள்ளை. உண்ணூர்-குடியார். கடிவ-நல்லோர்கடியத்தக்கனவற்றை. கடிந்து-விட்டு. ஒரீஇ-ஒழிய. தீத்தக்கனவற்றையாழித்து. பிறனை-அன்னியனை. எள்ளி மனத்திணினைந்து. இகழ்ந்து-நிந்தித்து. உரையார்-ஒன்றைச் சொல்லார். தள்ளியும்-தடுமாறியும். வாயில்-வாயிலை. பொய்-பொய்யை. கூறார்-சொல்லார். சாயில்-தளர்ந்தகாலத்து. பரிவது-இரங்குவது. இலர்-இலராவர். என்றவாறு.—வடுவறு காட்சியார்-எழுவாய். பரிவதிலர்-பயனிலை. கடியத்தக்கவை-கொலைகளவுமுதலியவை. ஒழியத்தக்கவை-அநாசாரமுதலியவை.

இதன்கருத்து.

வடிவறுகாட்சியார்களவுகாணார்கள்ளுண்ணார் நல்லாரானீக்கத்தகுவனவற்றைநீக்கி ஒழியத்தகுவனவற்றை யொழித்துப்பிறனையிகழ்ந்துரையார் தடுமாறியும் வாயாற்பொய் சொல்லார் கேட்டாலிரங்குவதிலொன்பதாம்..... (எ)

பிறர்மறையின்கட்செவிடாய்த்திறனறிந்... ..... *
தேதிலாரிற்கட்குருடாயத்தீய..... .... *
புறங்கூற்றின்மூகையாய்நிற்பானேல்யாது..... ... *
மறங்கூறவேண்டாவவற்கு..... ..... *

இதன்பதப்பொருள்.

பிறர்-அன்னியர். மறையின்கண்-மறைத்துச்சொல்லுமிடத்தில். செவிடாய்-செவிடனைப்போலிருந்து. திறன்-நல்லவமூக்கமாகியநிறங்களை. அறிந்து-தெரிந்து. ஏதிலார்-அயலார். இற்கண்-மனையாளிடத்து. குருடாய்-குருடனைப்போலிருந்து. தீய-ஒருவனைத்தீங்காக. புறங்கூற்றின்-ஒருவர்புறஞ்சொல்லுமிடத்து. மூகையாய்-ஊமையைப்போலிருந்து. நிற்பானேல்-இல்லறத்தினின்றுமொருவனிப்படிச்செய்வதுகில். அவற்கு-அவனுக்கு. யாதும்-எதுவும். அறம்-தருமம். கூறவேண்டா-சொல்லவேண்டா. என்றவாறு.—ஒருவன்-எழுவாய். கூறவேண்டா-பயனிலை.

மேன்மக்கள்.

இதன்கருத்து.

பிறர்மறைகூறுமிடத்துச்செவிடனைப்போன்று செய்யத்த
க்கதிறங்களை யறித்தயலார் மனையின்கட் குருடனைப்போன்று
தீயபுறங்கூற்றின் கண்மூகையைப்போன்று இவ்வாறொருவன்
ஒழுகவல்லானாயின் அவற்கியாதும் அறங்கூறவேண்டாவென்
பதாம்..... (அ)

பண்ணுருஞ்சென்றக்காற்பண்பிலார்தம்மூழை... ... *
யென்னுமவேண்டுபவென்றிகழ்ப-வென்னுமும். . *
வேண்டினுநன்றுமற்றன்றுவிழுமியோர்... ... ... *
காண்டொறுஞ்செய்வர்சிறப்பு..... ... *

இதன்பதப்பொருள்.

பண்பிலார்-குணமில்லாதவர். தம்மூழை - நம்மிடத்தொரு
வர். பண்ணுரும் - பலதாரும். சென்றக்கால் - வந்தால். என்
னுமும் - இவர்யாதானுமொன்றை. வேண்டுபவென்று - வே
ண்டியல்லோ நம்பக்கல்வருகிறானென்று. இகழ்ப - அவரையிக
ழ்ந்துவிடுவர். என்னுமும் - யாதாயினும். வேண்டினுமும் - ஒன்
றைவிரும்பினாலும் நன்றென்று - இதுநமக்குநல்லதல்லா
வென்று. விழுமியோர்-சீரியோர். காண்டொறும்-அவரைவெ
ந்தாரைங்காணுந்தோறும். சிறப்பு-சிறப்பினை. செய்வர்-செய்
வார். என்றவாறு.—பண்பிலார்-எழுவாய். இகழ்ப-பயனிலை.
விழுமியோர்-எழுவாய். செய்வர்-பயனிலை. சிறப்பினை-செயப்
படுபொருள். மற்று-அசைநிலை. சிறப்புச்செய்கையாவது-அவ
ர்மனமகிழும்ப இனியவார்த்தையும் ஆசாரமு முதலானவை
செய்தல்.

இதன்கருத்து.

பல்தாரொருவர்தம்மாட்டிச் சென்றக்காற்பண்பிலாதார்
யாதானுமொன்றைவேண்டிவந்தாலொன்று கருதியகாலாநிற்பர்
யாதானுமொன்றுவேண்டினுந் தமக்குநன்றென்று சீரியோர்
அவைக்தானுந்தோறுஞ்சிறப்பினைச்செய்வரென்பதாம் (கூ)

உடையாரிவரென்றிருதலையாப்பரிக்.... ... ... *
கடையாயாரிவரின்றுவாழ்வ-ருடைய..... *
பிடித்தலைப்பட்டதுபோலாதேதல்ல..... *
குலத்தலைப்பட்டவிடத்து..... ..... *

பெரியாரைப்பிழையாமை.

இதன்பதப்பொருள்.

உடையார்-செல்வமுடையவர். இவனொன்று - இவர்களென்று. ஒருதலையா-துணிந்து. பற்றி - பிடித்துக்கொண்டு. கடையாயார்-கீழ்மக்களை. பின்சென்று-பின்னேயுஞ்சென்று. வாழ்வார்-சிலருயிர்வாழாநிற்பர். நல்ல-நல்ல. குலம் - குலத்திற்பிறந்தாரை-தலைப்பட்ட - சேர்ந்த. இடத்து-இடத்திலே. உடைய-எல்லாப்பொருளுமுடைய. பிலம் - பிலத்தை. தலைப்பட்டது போலாதே - தலைப்பட்டாற்போலுமல்லவோ. என்றவாறு. — சிலர்-தோன்றுவெழுவாய். வாழ்வர்-பயனிலை.

இதன்கருத்து.

உடையரிவனொன்று துணிந்துபற்றிக்கீழ்மக்களைப்பின்னேயுஞ்சென்றுசிலருயிர்வாழாநிற்பர் நல்லகுலத்திற்பிறந்தாரைச் சேர்ந்தவிடத்திலெல்லாப்பொருளுமுடைய பிலத்தைத்தலைப்பட்டதுபோலுமல்லவோவென்பதாம்..... (ம)

மேன்மக்கண்முற்றிற்று.

அ அதிகாரம்-ஙசு-இ. வெண்பா... (எகூம)

பெரியாரைப்பிழையாமை.

பெரியாரை-பெரியவர்களிடத்திலே. பிழையாமை-பிழைவராமனடக்குந்தன்மை. அஃதாவது-தம்மிற்பெரியராகியவைங்குரவோவலுமறாமல் அவர்வழிநிற்றலும் எல்லாநற்குணங்களையுமுடையராய்வேற்றுவேந்தரிடத்துத்தன்னுடையசெல்வவலியுணவலியென்னுமகங்காரங்கொண்டு அவரையிகழ்ந்து அவர்க்கொருகுற்றங்களைச் செய்யாமையுமாம். ஐங்குரவரவார்-மாதா-பிதா-மாமன், குரு-உபாத்தியாயர் என்பனவாம்.

பொறுப்பரென்றெண்ணிப்புரைதீர்ந்தார்மாட்டும் .. *
வெறுப்பனசெய்யாமைவேண்டும்-வெறுத்தபி..... *
ஞர்க்குமருவியணிமலைநன்னாட..... .... *
பேர்க்குதல்யார்க்குமரிது..... ..... *

பெரியாரைப்பிழையாமை.

இதன்பதப்பொருள்.

பொறுப்பொன்று-செய்தகுற்றத்தைப் பொறுப்பாரொன்று. எண்ணி-கருதி. புரை-குற்றம். தீர்ந்தார்மாட்டும் - தீர்ந்தவரிடத்தும். வெறுப்பன - அவர்வெறுக்கத்தக்கனவற்றை. செய்யாமைவேண்டும்-செய்யாதிருக்கவேண்டும். வெறுத்தபின்-அவர்வெறுத்தபின்பு. ஆர்க்கும்-ஆவாரிக்கும். அருவி-அருவியினையுடைய. அணி-அழகிய. நல-நல்ல. மலைநாட-மலைநாடனே. பேர்க்குதல்-அவர்வெகுளியைமீட்டல். யார்க்கும்-யாவர்க்கும். அரிது-அரிது. என்றவாறு.—பேர்க்குதல்-எழுவாய். அரிது-பயனிலை

இதன்கருத்து.

ஆர்க்குமருவி யணிமலைநன்னாடனே செய்த குற்றத்தைப் பொறுப்பொன்றுகருதிக்குற்றத்தீர்ந்தார்மாட்டும்வெறுப்பனசெய்யாமைவேண்டும்வெகுண்டபினவர்வெகுளியால்வருங் கேட்டினையாவர்க்குநீக்குதலரிதென்பதாம்... ... . (க)

பொன்னேகொடுத்தும்புணர்தற்கரியாரைக் ... ... *
கொன்னேதலைக்கூடப்பெற்றிருந்தும்-மன்னே... ... *
பயனில்பொழுதாக்கழிப்பரோநல்ல..... .. *
நயமிலறிவினவர்..... ... . *

இதன்பதப்பொருள்.

பொன்-பொன்னே. கொடுத்தும்-வழங்கியும். புணர்தற்கு-வந்தெய்தற்கு. அரியாரை-அரிதானவர்களை. கொன்-பயனின்றி. தலைக்கூட-வந்தெய்த. பெற்றிருந்தும்-பெற்றும். அன்னே-ஐயோ. பயனில்-பயனில்லாத. பொழுதா-காலமாக. நல்ல-நல்ல. நயமில்-நன்மையில்லாத. அறிவினவர்-அறிவினையுடையார். கழிப்பர் - போக்குவார். என்றவாறு.—நயமிலறிவினவர்-எழுவாய். கழிப்பர்-பயனிலை. ஏகாரம்-மூன்றும் அசைநிலைகள்.

இதன்கருத்து.

பொன்னைக்கொடுத்தாலும்பெறுதற்கரியாரையொன்றுங் கொடாதேசேரப்பெற்றிருந்தும் ஐயோதமக்குப்பயனிலாதபொழுதாக நாட்களைக்கழிப்பர் நயமிலறிவினையுடையாரென்பதாம்..... .... (உ)

அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு . . . . . ❋
மிகைமக்களான்மதிக்கற்பால-நயமுணராக்... . . . . ❋
கையறியாமாக்களிழிப்புமெடுத்தேத்தும் . . . . . ❋
வையார்வழுத்தநூலார் . . . . . ❋

இதன்பதப்பொருள்.

அவமதிப்பும்-ஒருவனைத்தாழ்வாகமதித்தலும். ஆன்றமதிப்பும்-உயர்வாகமதித்தலும். இரண்டும்-இவையிரண்டும். மிகைமக்களால்-மேன்மக்களால். மதிக்கற்பால-மதிக்கத்தக்கன. நயம்-நயமும். உணரா-அறியாராய். கை-ஒழுக்கமும். அறியா-இலராய. மாக்கள்-மனிதர்கள். இழிப்பும்-பழிக்கும்பழிப்பும். எடுத்தேத்தும்-எடுத்துப்புகழ்தலும். வழுத்த-ஆராய்ந்த. நூலார்-நூலினைக்கற்றவறிவினையுடையார். வையார்-மனத்தின் கண்ணெண்ணுகக்கருதார். என்றவாறு.—நூலார்-எழுவாய். வையார்-பயனிலை. எடுத்துரைப்புமென்றும்பாடம்.

இதன்கருத்து.

ஒருவனைத்தாழ்வாகமதித்தலும்உயர்வாகமதித்தலும் இவையிரண்டுமேன்மக்களான் மதிக்கத்தக்கனநயமுணராது தல்ல ஒழுக்கமுமறியாதமாக்கள்பழிக்கும்பழிப்பும் எடுத்துப்புகழ்தலுங்கோதற்றநூலறிவார் மனத்தின் கண்ணெண்ணுகக்கருதாரென்பதாம் . . . . . (கூ)

விரிநிறநாகம்விடருளதேனு..... .... ❋
மூருமின்கடுஞ்சினஞ்சேணின்றுமுட்கு... ... . ❋
மருமையுடையவரண்சேர்ந்துமூய்யார்..... ❋
பெருமையுடையார்செறின் . . . . . ❋

இதன்பதப்பொருள்.

விரி-மிக்க. நிறம்-நிறத்தையுடைய. நாகம் - நாகமானது. விடர் - பாதாளத்துள்ளே. உளதேனும்-உள்ளதாலும். உருமின் - உருமேற்றினது. கடும்-கடிய. சினம்-கோபம். சேணின்றும். ஆகாயத்திலேநின்றதிர்ப்பினும். உட்கும்-அஞ்சுமது போல. அருமையுடைய - அருமையுடைத்தாகிய. அரண்-அரணை. சேர்ந்தும்-அடைந்தும். பெருமையுடையார்-பெருமை

க்குணமுடையார். செறின்-கோபித்தால். உய்யார் - பகைவர் பிழைக்கமாட்டார். என்றவாறு.—பகைவர் - தோன்றுவெழு வாய். உய்யார்-பயனிலை.

இதன்கருத்து.

விரிநிறநாகம்விடரின்கண்ணுளதாயினும் உருமேற்றின்மிக் கினுஞ்சீற்றத்தாயினும் அதனையஞ்சுமதுபோல அருமையு டைத்தாகிய அரணினைச்சேர்ந்தாராயினும்பெருமையுடையா ரைவெகுளற்பகைவர்பிழையாரென்பதாம்..... ... (க)

எம்மையறிந்திலிரம்போல்வாரில்லென்று..... *
தம்மைத்தாங்கொள்வதுகோளன்று-தம்மை..... *
யரியராநோக்கியறனியுஞ்சான்றோர்..... *
பெரியராக்கொள்வதுகோள்..... *

இதன்பதப்பொருள்.

எம்மை-எம்மை. அறிந்திலிர்-அறிந்தீரில்லை. எம்போல்வா ர்-எம்மைப்போல்வார். இல்லென்று-இல்லையென்று. தம்மை-தம்மை. தாம்-தாமே. கொள்வது - உயர்த்திச்சொல்லிக்கொ ள்ளுதல். கோளன்று-கொள்ளுமுறைமையன்று. தம்மை-தம் மை. அரியரா-அரியராக. நோக்கி-பார்த்து. அறன்-அறத்தி னை. அறியும்-உணரும். சான்றோர்-அமைந்தோர். பெரியரா-பெரியராக. கொள்வது-மதித்துக்கொள்வது. கோள்-கோட் பாடு. என்றவாறு.—கொள்வது-எழுவாய். கோள்-பயனிலை.

இதன்கருத்து.

எம்மையுள்ளவண்ணமறிந்திலிர் எம்போல்வாரில்லென்று தம்மைத்தாமதித்துக்கொள்வது கோளன்றுதம்மைப்பெறு தற்கரியராகப்பார்த்துப்பெரியராக அறனியுஞ்சான்றோர் மதித்துக்கொள்வதுகோளென்பதாம்..... ..... (ங)

நளிகடற்றண்சேர்ப்பதானிழற்போல..... *
விளியுஞ்சிறியவர்கேண்மை-விளிவின்றி..... *
யலருநிழற்போலகன்றகலுமேறுடமே... .... *
தொல்படிதாளர்தொடர்பு..... ..... *

இதன் பதப்பொருள்.

நளி-செறிந்த. கடல்-கடலினுடைய. தண்-குளிர்ந்த. சேர்ப்ப-சேர்ப்பனே. நாள்-முற்பகல். நிழந்தேபோல-நிழலைப்போல. விளியும்-குறைந்துவரும். சிறியவர்-சிறியாருடனே. கேண்மை-கொண்டநட்பு. வளிவின்றி-கேடின்றியே. அல்கு-பிற்பகல். நிழற்போல-நிழலைப்போல. தொல்-பழைய. புகழாளர்-புகழ்ச்சியையுடையாருடன். தொடர்பு-கொண்டதொடர்ச்சி. அகன்றகன்று-வளர்ந்துவளர்ந்து. ஓடும்-செல்லும். என்மனவாறு.—நேண்மை-எழுவாய். விளியும்-பயனிலை. தொடர்பு-எழுவாய். ஓடும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன் கருத்து.

செறிந்ததண்கடற்சேர்ப்பனேமுற்பகனிழற்போலச் சிறியவர்கொண்டநேண்மை நாடோறுந்தேய்ந்துந் தொல்புகழாளர்கொண்டதொடர்பு தேய்வின்றியே பிற்பகனிழற்போல வளர்ந்துவளர்ந்துசெலலுமென்பதாம்..... .... (சு)

மன்னர்திருவுமகளிமிழினலமுந்..... ✻
துன்னியார்துய்ப்பர்தகவல்லவண்டார்-துன்னிக் ... ... ✻
குழைகொண்டிதழ்ந்தகுளிர்படரிமலா ..... ✻
மூழைதங்கட்செல்லுமுகாருங்கு..... ..... ✻

இதன் பதப்பொருள்.

மன்னர்-அரசர். திருவும்-செல்வமும். மகளிர்-மகளிருடைய. எழில்-தோற்றப்பொலிவாகிய. நலமும்-நன்மையும். துன்னியார்-சேர்ந்தவர். துய்ப்பர்-அநுபவிப்பர். தகவல்லவண்டார்-அவர்க்குரியுடையராகவேண்டாம். அஃதென்போலவென்னில். துன்னி-இலைச்செறிவையுடைத்தாய். குழைகொண்டு-தளிரைக்கொண்டு. தாழ்ந்த-கவிந்த. குளிர்-குளிர்ந்தநிழலையுடைய. மரமெல்லாம்-மரங்களெல்லாம். தங்கண-தம்மிடத்திலே. செல்முர்க்கு-வந்தவர்க்கெல்லாம். ஒருங்கு-ஒக்க. உழை-புகலிடமாவதுபோல. என்றவாறு.—துன்னியார்-எழுவாய். துய்ப்பர்-பயனிலை.

இதன் கருத்து.

அரசர்செல்வமும் மகளிரெழிலும் மடைந்தார் நுகர்வர் அவர்தகுதியுடையராகவேண்டாமெனுங்கருத்தைக்குழைகொண்டுதா

பெரியாரைப்பிழையாமை.

நீர்த்தருளிர்மரமெல்லாந்தம்மாட்டிச் சென்றூர்க்கொக்கப்புக
விடமாவதுபோலவென்பதாம் ..... (எ)

தெரியத்தெரியுந்தெரிவிலார்கண்ணும்... ... . *
பிரியப்பெரும்படர்நோய்செய்யும்-பெரிய ..... *
வுலவாவிருங்கழிசேர்ப்பயார்மாட்டுங்..... *
கலவாமைகோடியுறும் ..... *

இதன்பதப்பொருள்.

தெரிய - விளங்க. தெரியுந்-ஆராயுந். தெரிவிலார்கண்ணும்-ஆராய்ச்சியில்லாதாரிடத்தும். பிரிய-பிரிந்தால். பெருந்-மிக்க. படர்நோய்-துன்பமாகியநோயை. செய்யும்-பண்ணும் ஆதலால். பெரிய-பெரிதாய. உலவா-வற்றாத. இருங்-மிக்க. கழி-கழியினையுடைய. சேர்ப்ப-சேர்ப்பனே. யார்மாட்டும்-யாவரிடத்தும். கலவாமை - நட்புச்செய்யாதிருக்குந்தன்மையே. கோடி-கோடிமடங்கு. உறும் - உறுதியையடையும். என்றவாறு. —கலவாமை-எழுவாய். கோடியுறும்-பயனிலை.

இதன்கருத்து.

விளங்கவாராய்ந்தாராய்ச்சியில்லாதார் மாட்டுங் கேண்மை கொண்டுபிரிந்தாலவர்க்குப்பெரியதுன்பமெய்துவிருந்தோரையும் பிரிவுசெய்யும் ஆதலாற்பெரியவற்றுதவிக்கழிசேர்ப்பனே யார்மாட்டுங்கேண்மைகொண்டு கலவாமையே கோடிமடங்கு நலமென்பதாம்..... (அ)

கல்லாதுபோகியநாளும்பெரியவர்கட்... ... ... *
செல்லாதுவைகியவைகலு-மெல்ல .... *
கொடாதழிந்தபகலுமுணாப்பிற்..... *
படாவவாம்பண்புடையார்கண் .... *

இதன்பதப்பொருள்.

கல்லாது-நூல்களைக்கல்லாமல். போகிய-கழிந்த. நாளும்-நாள்களும். பெரியவர்கண்-பெரியோரிடத்து. செல்லாது-போகாது. வைகியவைகலும் - நாள்களும். ஈவது-தமக்கியன்றன. கொடாது - ஒருவர்க்கொன்றையளிக்காது. ஒழிந்த-நீங்கிய. பகலும்-நாள்களும். உணாப்பில-செலவுமுங்

காலத்தில். பண்புடையார்கண்-பண்புடையாரிடத்திலே. படர் வாம்-உளவாகாவாம். என்றவாறு.—நாள்-வைகல்-பகல்-இடம் மூன்றும்-எழுவாய். படர்வாம்-பயனிலை.

இதன்கருத்து.

நூல்களைக்கல்லாதகழிந்தநாள்களும் பெரியோர்மாட்டுஞ் செல்லாதுகழிந்தநாள்களுந்தமக்கியன்றனெகாடாதழிந்த நாள்களுமுண்மைப்போமாயிற்பண்புடையார்மாட்டிலராவென்பதாம்..... .... (கூ)

பெரியார்பெருமைசிறுதகைமையொன்றிற்..... ✻
சூரியாருரிமையடக்கந்-தெரிபுங்காற்.. .... ✻
செல்வமுடையாருஞ்செல்வரோதற்சேர்ந்தா..... ✻
சல்லல்களைபவெளினின்..... .... ✻

இதன்பதப்பொருள்.

பெரியார்-பெரியார்க்கு. பெருமை-பெருமையாவது. சிறுதகைமை-பணிந்தொழுகுதல். ஒன்றிற்கு-ஒருவித்தைக்கு. உரியார்-உரியவர்க்கட்கு. உரிமை-உரிமையாவது. அடக்கம்-பிறர்பாராட்டத்தானடங்கியிருத்தல். தெரியுங்கால்-ஆராயுங்காலத்து. தற்சேர்ந்தார்-தம்மையடைந்தாருடைய. அல்லல்-துன்பங்களை. களைபவெனின்-நீக்குவராயின். செல்வமுடையாருஞ்-செல்வமுடையவருஞ். செல்வர்-செல்வராவர். என்றவாறு.—செல்வமுடையார்-எழுவாய். செல்வர்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. இது-பெரியாரைப்பிழையாமையாவதெப்படியென்னின்; பெரியோர்க்குமுறைமையாவது-தம்மையடைந்தவர்களை யினிமையுண்டாகக்கொண்டுபோகலே அவர் பிழையாதொன்பதுகாண்மி பெரியாரைப்பிழையாமையென்னுமதிகாரத்திற்சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

பெரியார்க்குப்பெருமையாவது பணிந்தொழுகுதல் ஒன்றின்கட்டெள்ளியாரதுகேண்மையாவது அடங்கியாழுகுதல் ஆராயுங்காற்றம்மையடைந்தாரது வறுமையைநீக்குவராயின் செல்வமுடையாருஞ்செல்வராவரென்பதாம்..... (ய)

பெரியாரைப்பிழையாமைமூற்றிற்று.

அ அதிகாரம்-ஒள-இ. வெண்பா... (ளஎய)

யஅ-ம். அதிகாரம்.

நல்லினஞ்சேர்தல்.

நல்-நல்ல. இனம்-இனத்தை. சேர்தல்-அடைதல். அஃதாவது-யாவனையுந்தமக்குச் சிறந்தவர்களைப்போலநோக்கியருளுடையராய்த்தம்மையடைந்தவர்கட் கொருதீங்குவரிற்றமக்கொரு தீங்குவந்தாற்போல விளைந்ததைநீக்கி அவர்தமக்கொருபிழைசெய்தாலுந் தம்முடைய வுறுப்புக்கடம்மை வருந்தச் செய்ததுபோலக்கண்டுமறுஞ்சொல்லப்பட்டநற் குணங்கள் பலவுமுடையவனையாராய்ந்துநட்புச்செய்தலென்பதாம்.

அறியாப்பருவத்தடங்காதோடொன்றி... ... . *
நெறியல்லசெய்தொழுகியவ்வ-நெறியறிந்த... ..... *
நற்சார்வுசாரக்கெடுமேவெயின்மூறுகட்... .... *
புற்பனிப்பற்றுவிட்டாங்கு..... ... . *

இதன்பதப்பொருள்.

அறியா-அறியாத. பருவத்து-காலத்திலே. அடங்காதோடு-அடக்கமில்லாதாருடனே. ஒன்றி-இணங்கி. நெறி-வழி. அல்ல-அல்லனவற்றை. செய்தொழுகியவ்வும்-செய்தொழுகியபாவங் களும். வெயில்-வெய்யில். மூறு-மிகுந்தோறும். புல்-புல்லி. பனிப்பற்று-பனிப்பற்றலை. விட்டாங்கு-விட்டாற்போல. நெறி-நல்லவழியை. அறிந்த-தெரிந்த. நல-நல்ல. சார்வு-சார்வினை. சார-சேர. கெடுமே-கெட்டுப்போம். என்றவாறு.—பாவங்கள்-எழுவாய். கெடும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. அவ்வும்-அவையும்.

இதன்சருத்து.

அறியாக்காலத்தடக்கமில்லாதாரோடிணங்கி நெறியல்லாதனசெய்தொழுகியபாவங்களுமெய்யின்மிகுந்தோறும் புல்லிப்பனிப்பற்று விட்டாற்போல நெறியறிந்த நல்லோர்களைச் சாரவேகெடுமென்பதாம்..... .... (க)

அறிவினறநெறியஞ்சுமின்கூற்றம்..... .... *
பொறுமின்பிறர்செய்குஞ்சொற்றோற்றுமின்வஞ்சம்... *
வெறுமின்வினைதியார்கண்ணுமடவருண்ணுமீ ... *
பெறுமின்பெரியார்வாய்ச்சொல்... .. .. *

இதன்பதப்பொருள்.

அறம் - அறத்தினை. நெறி-வழியை. அறிமின் - அறிந்து. கூற்றம்-கூற்றத்தினை. அஞ்சுமின்-அஞ்சி. பிறர்-அயலாருடைய. கடும்-கடிய. சொல்-சொல்லை. பொறுமின் - பொறுத்து. வஞ்சம் - வஞ்சம்வாராதபடி. போற்றுமின் - பாதுகாத்து. வினை - தீவினையையுடைய. தீயார் - பொல்லாதவர்கள். கேண்மை-இணக்கத்தை. வெறுமின்-வெறுத்து. எஞ்ஞான்றும்-எந்நாளும். பெரியார் - பெரியோருடைய. வாய்-வாயிற்பிறக்கும். சொல்-சொல்லை. பெறுமின்-பெறுங்கள். என்றவாறு. — நிவிர்-சொன்ன வெழுவாய். பெறுமின் - பயனிலை. சொல்லை-செயப்படுபொருள். வஞ்சமாவது - கொலை. களவு. கள். காமம். பொய்.

இதன்கருத்து.

அறநெறியையறிந்துகூற்றத்தினையஞ்சிப்பிறர்கடுஞ்சொல்லைப்பொறுத்துப்படிறுவாராமற்பாதுகாத்துத் தீவினையாளர்கேண்மையையவெறுத்தெஞ்ஞான்றும்பெரியார்வாய்ச்சொல்லைப்பெறுமினென்பதாம் .... (உ)

அடைந்தார்ப்பிரிவுமரும்பிணியுங்கேடு..... *
மூடங்குடம்புகொண்டார்க்குறலாற்-றொடங்கிப் .... *
பிறப்பின்றுதென்றுணருமம்பேதறிவினை... ... ... *
யுறப்புணர்கவம்மாவென்னெஞ்சு..... ... *

இதன்பதப்பொருள்.

அடைந்தார் - அடைந்தவரை. பிரிவும் - பிரிதலும். அரும்-பொறுத்தற்கரிய. பிணியும்-நோய்களும். கேடும்-சாக்காடும். உடம்பு-உடம்பை. கொண்டார்க்கு-கொண்டவர்க்கு. உடங்கு-உடனே. உறலால் - வந்தெய்தலால். தொடங்கி - பழைய தாய்த்தொடங்கி. பிறப்பு- வருகின்றபிறப்பு. இன்றுதென்று-பொல்லாதென்று. உணரும் - அறிகின்ற. பேர்-பெரிய. அறிவினை - அறிவினையுடையாரை. என் - என்னுடைய. நெஞ்சு-நெஞ்சமானது. உற-சிக்கென. புணர்க - பிணிப்பதாக. என்றவாறு — நெஞ்சு - எழுவாய். புணர்க - பயனிலை. பேரறிவினை-செயப்படுபொருள். கேடு - செல்வக்கேடென்னுமமை

யும். உடங்கு-கூடி நிற்றல். அம்மா வென்பது-திரிபின் கண்வந்த இடைச்சொல். மூடங்குடம்பனைப்பாடமோது மூடங்கலானவுடம்பனைப்பொருள் கூறுவாருமுளர்.

இதன்கருத்து.

அடைந்தவரைப்பிரிதலும் பொறுத்தற்கரிய நோய்களுஞ் சாக்காடும் உடம்பைக்கொண்டார்க் குடனே வந்தியற்தலாற் பழையதாய்த்தொடங்கி வருகின்றபிறவியின் ஞ்தன்றுணரும் பேரறிவுளையென்னெஞ்சறப்புணர்கவென்பதாம் ... (கூ)

இறப்பநினையுங்காலின்ஞதெனினும்..... ... . *
பிறப்பினையாருமுனியார்-பிறப்பினுட்..... ..... *
பண்பாற்றுதெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்று..... *
நண்பாற்றிநட்கப்பெறின்..... ..... *

இதன்பதப்பொருள்.

பிறப்பினுள்-பிறந்தகாலத்துள். பண்பு - பண்பினை. ஆற்றும்-இடையறுமற்செலுத்திவரும். நெஞ்சத்தவர்களோடு - நெஞ்சினையுடையதலைவனத்தாருடனே. எஞ்ஞான்றும்-எந்நாளும். நண்பு-தாமுமந்தநண்பினை. ஆற்றி - வழுவாமற்செலுத்தி. நட்க-நட்புக்கொள்ள. பெறின்-பெற்றால். இறப்ப - மிகவும். நினையுங்கால்-ஆராயுங்காலத்து. இன்ஞதெனினும்-பிறட்புப் பொல்லாதாயினும். பிறப்பினை-அப்பிறப்பை. யாரும்-யாவரும். முனியார்-வெறார். என்றவாறு.—யாரும்-எழுவாய். முனியார்-பயனிலை. பிறப்பினை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பிறப்பினுட்பண்பினை யிடையறுமற்செலுத்தி நெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்றுநட்பினைவழுவாமற் செலுத்திநட்புக் கொள்ளப்பெறின்மிகவாராயுங்காற்பிறப்பின்ஞதாயினும்அப் பிறப்பினையாரும்வெறுவென்பதாம்..... (கூ)

ஊரங்கனீருரவுநீர்ச்சேர்ந்தக்காற்... .... *
பேரும்பிறிதாகித்தீர்த்தமா-மோருங்..... ..... *
குலமாட்சியில்லாருந்தன்றுபோனிற்பர்..... *
நலமாட்சிநல்லாளைச்சார்ந்து..... *

இதன்பதப்பொருள்.

ஊர்-ஊரின்கண். அங்கணநீர்-முற்றத்துநீர். உரவு-மிக்க. நீர்-நீரை. சேர்த்தகால்-அடைத்தகாலத்தில். பேருமம்-நாமமும். பிறிதாகி-வேறுபட்டு. தீர்த்தமாம்-தீர்த்தநீராம் அதுபோல. நலமாட்சி-நல்லமாட்சிமையுடைய. நல்லாளை-நல்லோளை. சார்ந்து-சேர்ந்து. குலம்-குலத்தாரை. மாட்சி-மாட்சிமை. இலலாருர்-இல்லாதாரும். குன்றுபோல்-மலைபோல. நிற்பர்-உயர்ந்துதான்றுவர். என்றவாறு.—குலமாட்சியில்லாரை-எழுவாய். நிற்பர்-பயனிலை. ஒருபெண்டதலைச்சென்சொல். மிக்கநீர்-ஆற்றுநீர்.

இதன்கருத்து.

ஊரங்கணநீர்மிக்கநீரைச்சேர்த்தக்காற்பேரும்பிறிதாகித்தீர்த்தமாம் அதுபோலநல்லமாட்சிமையுடையநல்லோளைச்சார்ந்துகுலத்தான் மாட்சிமையில்லாரும் மலைபோலுயர்ந்துநிற்பரென்பதாம்..... (கு)

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய ... ... ✻
வங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉங் .... ✻
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர்..... ✻
குன்றன்னர்கேண்மைகொளின்..... ... ✻

இதன்பதப்பொருள.

ஒண்-ஒள்ளிய. கதிர்-கிரணங்களையுடைய. வாள்-விளங்கிய. மதியம்-சந்திரனை. சேர்தலால்-அடைதலால். ஓங்கிய-உயர்ந்த. அம்-அழகிய. கண்-இடத்தையுடைய. விசும்பின்-ஆகாயத்திலுள்ள. முயலும்-முசலும். தொழப்படூஉம்-வணங்கப்படும் அதுபோல. குன்றிய-குறைந்த. சீர்மையராயினும்-சீர்மையையுடையராயினும். குன்றன்னர்-மலைபோலுயர்ந்தநல்லாரோடு. கேண்மை-நட்பு. கொளின்-கொள்ளப்பெறின். சீர்-சிறப்பை. பெறுவர்-பெறுவார். என்றவாறு.—கேண்மைகொண்டவர்-தோன்றுஞ் எழுவாய். பெறுவர்-ப்யனிலை. சோ-செயப்படுபொருள்.

நல்லினஞ்சேர்தல்.

இதன் கருத்து.

ஒள்ளிய கதிர்க்கோயுடைய விளங்கிய மதியத்தைச்சேர்தலால் உயர்ந்த அங்கண்விசும்பினுள்ளமுயலுந்தொழப்படும் அது போலத்தாழ்ந்த சீர்மையராயினுமேலோரியர்ந்த நல்லாரோடு நட்புக்கொளின்சீர்பெறுவரொல்பதாம்..... ..... (கூ)

பாலோடளாயநீர்பாலாகுமல்லது..... .... *
நீராய்நிறந்தெரிந்தூதோன்றுதாந்-தேரிற்... ... ... *
சிறியார்சிறுமையுந்தோன்றுகாநல்ல .... *
பெரியார்பெருமையைச்சார்ந்து..... *

இதன்பதப்பிரிபொருள்.

பாலோடு-பாலுடனே. அளாய-கலந்த. நீர்-நீரானது. பாலாகும்-பால்போலிருக்கும். அல்லது-அத்தன்மையல்லாமல். நீராய்-நீராகி. நிறம்-நிறம். தெரிந்து-விளங்கி. தோன்றுது-தெரியாது அதுபோல. தேரில் - ஆராயுங்கால். நல்ல-நன்மைபொருந்திய. பெரியார்-பெரியோருடைய. பெருமையை-பெருமைக்குணத்தை. சார்ந்து - சேர்ந்து. சிறியார்-சிறியாருடைய. சிறுமையும்-சிறுமைக்குணமும். தோன்றுது-தெரியாது. என்றவாறு.—சிறுமை-எழுவாய். தோன்றுது-பயனிலை. ஆம்-இரண்டும் அசைநிலைகள். உம்மை-இழிவுசிறப்பு.

இதன் கருத்து.

பாலோடுகலந்தநீர்பாலாகத்தோன்றுமல்லதுபிறர்க்குநீராய்நிறந்தெரிந்து தோன்றுது அதுபோலப்பெரியோருடைய பெருமைக்குணத்தைச்சார்ந்து சிறியாரது சிறுமைக்குணமுந் தோன்றுதல்பதாம்..... (எ)

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைத்தபு..... *
லொல்காவேயாகுமுழவருரூபடைக்கு... ... . *
மெல்லியரோயாயினுநீர்சார்வுசார்ந்தார்மேற்..... ... *
செல்லாவாஞ்செற்றார்சினம் .... *

இதன்பதப்பொருள்.

கொல்லை-கொல்லைநிலத்து. இருப்-பெரிய. புனத்து-புனத்திலே. குற்றி-மரக்கட்டையை. அடைந்த-அடித்துநின்ற. புல்-

புல். உழவர்-உழவர்கள். உழு-உழுகிற. படைக்கு-கலப்பைப் படைக்கு. ஒல்காவாகும்-அசையாவாகும் அதுபோல. மெல்லியராயினும்-வலியிலராயினும். நல்-நல்ல. சார்வு-சார்வை. சார்ந்தார்மேல்-சார்ந்தாரிடத்து. செற்றார்-பகைவருடைய. இனம்-கோபம். செல்லா-செல்லமாட்டா. என்றவாறு.—இனம்-எழுவாய். செல்லா-பயனிலை. ஏகாரம்-இரண்டும்ஆம்-ஒன்றும். அசைநிலைகள்.

இதன்கருத்து.

கொல்லைநிலத்துப் பெரிய புனத்தின்கணின்ற மரக்கட்டையையடைந்தபுல்லுழவருழுபடைக்கசையாவாகும் அதுபோல வலியிலராயினு நல்சார்வைச்சார்ந்தாரிடத்துப்பகைவர்வெகுளிகள்செல்லமாட்டாவென்பதாம்..... ..... (அ)

நிலநலத்தானந்தியதெல்லேபோற்றத்தங்..... ✻
குலநலத்தாலாகுவர்சான்றோர்-கலநலத்தைத்..... ✻
தீவளிசென்றுசிதைத்தாங்குசான்றுண்மை..... ✻
தீயினஞ்சேரக்கெடும்..... ✻

இதன்பதப்பொருள்.

நிலம்-நிலத்தினது. நலத்தால்-நன்மையாலே. நந்திய-வளர்ந்த. நெற்போல்-நெல்லைப்போல. தத்தம்-தந்தாமுடைய. குலம்-குலத்தினது. நலத்தால்-நன்மையாலே. சான்றோர்-சால்புடையோர். ஆகுவர்-ஆவர். கலம்-இடையூன்றிச்செல்கின்றமரக்கலத்தினது. நலத்தை-நன்மையை. தீவளி-தீக்காற்று. சென்று-போய். சிதைத்தாங்கு-கெடுத்தாற்போல. சான்றுண்மை-சால்புடையோர்தன்மையும். தீயினம்-தீயவினத்தை. சேர-அடையவே. கெடும்-கெட்டுவிடும். என்றவாறு.—சான்றோர்-எழுவாய். ஆகுவர்-பயனிலை. சான்றுண்மை-எழுவாய். கெடும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

நிலத்தினதுநன்மையான்மிகவெழுந்த நெற்போலத்தங்குலத்தினது நன்மையாற்சான்றோராவர் இடையூன்றிச்செல்கின்றமரக்கலத்தினது நன்மையைக்கடுங்காற்றுசென்று சிதை

பெருமை.

த்தாற்போலத் தீயவினத்தைச்சாரவே சான்ருண்மையுங்கெடு
மென்பதாம்..... (கூ)

மனத்தான்மறுவிலரோனைத்தாஞ்சேர்ந்த..... ..... *
வினத்தாவிகழப்படுவர்-புனத்து..... ..... *
வெறிகமழ்சந்தனமும்வேங்கையும்வேமே... ... . *
யெறிபுனத்தீப்பட்டக்கால்..... ..... *

இதன்பதப்பொருள்.

மனத்தால்-மனத்தில். மறு-குற்றம். இலோனைம் - இல்லாராயினும். தாம்-தாங்கள். சேர்ந்த-அடைந்த. இனத்தால்-தீயினத்திலுமே. இகழப்படுவர்-பலருமிகழப்படுவர் அதன்போலவெண்ணில். எறிபுனம்-வெட்டினபுனம். தீப்பட்டக்கால்-தெருப்புப்பட்டகாலத்திலே. புனத்து - தொல்லையின்கணுள்ள. வெறி-மணம். கமழ்-கமழாநின்ற. சந்தனமும்-சந்தனமரமும். வேங்கையும்-வேங்கைமரமும். வேம் - வெந்துபோம். என்றவாறு.—இனத்தால்-தாம்-இகழப்படுவர் - இதுகருமணப்புனர்வு. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

மனத்தின்கட்குற்றமிலராயினுந்தாமடைந்த தீயவினத்தாற் பலருமிகழப்படுவர் அதன்போலவெண்ணில் வெட்டியபுனத்தீப்பட்டாற்புனத்திலுள்ளமணங்கமழாநின்ற சந்தனமரமும்வேங்கைமரமுங்கூடவேவாதிற்குமென்பதாம் ... ... (ய)

நல்லினஞ்சேர்தன்மூற்றிற்று.

ஆ அதிகாரம்-யஅ-இ. வெண்பா... (ாஅம)

பெருமை.

பெருமை-பெருந்தன்மை. அஃதாவது-குலவொழுக்கத்திலுங்கல்வியொழுக்கத்திலுமன்புமறனுமருளுடைமையிலும் ஒப்புரவிலும் யாதொருதீங்கு வந்துறினுந்தாஞ்சிந்தியாதிருத்தலும் முடையதன்மை குன்றுமவற்றைமிகச்சிறியார் நட்டாரையலார்

பகையுறவென்றுசேவறுபடுத்திச்சொல்லுமுரையைநீக்கித்தமது முடையசுபாவங்குன்றுத அறிவுநிறைவு ஒர்ப்புகடைப்பிடிகளிலுஞ்சமயத்திய உயர்வுடைமையே பெருமையென்பதாம்- இதுமேன்மக்களைஃஞ்ஞான்றேர்க்கிலேயா அதுவேயமையாதோவென்னில் இவர்பகைவர்நட்டோரென்னுமேறுபாடுமாசையுமுண்டவர்க்கு இவர்க்கையிலலாமையினுந்பெருமையென்னுமதிகாரமும்வேண்டுமென்பதாம்.

ஈதலிசையாதிளமைசேணீங்குதலாற்..... .... ※
காதலவருங்கருத்தல்லர்-காதலித்..... ※
தாதுநாமென்னுமவாவினைக்கைவிட்டுப்..... ※
போவதேபோலும்பொருள்..... ..... ※

இதன்பதப்பொருள்.

ஈதல்-பிறர்க்கொன்றைக்கொடுத்தல். இசையாது-பெற்றுந்தாது இளமை - நம்மிளமைப்பருவம். சேண் - தூரத்திலே. நீங்குதலால் - நீங்கிப்போதலினால். காதல்வருங்-முன்புநம்மேற்காதலையுடையமகளிரும். கருத்தல்லர்-கருத்தினரல்லர். காதலித்து-நெஞ்சமேமனைவாழ்க்கையைக்காவித்து. ஆதுநாமென்னு-மேலாகக்கட்டுவோமென்னும். அவாவினை-ஆசையினை. கைவிட்டு - விட்டுவிட்டு. போவது - துறந்துபோவது. பொருள்-பொருளாவது. என்றவாறு.—பொருள்-எழுவாய். போவது-பயனிலை. ஏகாரமும்-போலுமசைநிலைகள். இது-அறத்துப்பாலித்துறவென்னுமதிகாரத்துக்கமைந்தது இவ்விடத்திலே வேண்டுமோவென்னின் மணஞ்செய்தன்மூன்றுறத்தல்தானாதலினிதுமனைவாழ்க்கையினின்றுங்பங்களை யதுபவித்துப்பின்புதுறக்கவேண்டுமென்னும் விதியினன்முப்பத்திரண்டுயதினின்மேற்பட்டவர் தமதுநெஞ்சையறிவுறுத்தித்துறந்துபோகைக்குடன்படுவித்துக்கொண்டதாம்.

இதன்கருத்து.

பிறர்க்கொன்றைக்கொடுத்தல் கூடுகின்றதில்லை நம்மிளமைசெய்த்தாக நீங்குதலால் முன்புநம்மைக்காதலித்தவருங்கருத்தினரல்லர் நெஞ்சமேமனைவாழ்க்கையைக்காதலித்துமேலாமோவென்னுமவாவினைக்கைவிட்டுத்துறந்துபோவது நமக்குப்பொருளாவதென்பதாம்..... .... (க)

பெருமை.

இற்சார்வினேமாற்தேமீங்கமைந்தேமென்றெண்ணிப் . ※
பொச்சாந்தாழுதுவர்பேதையா-ரச்சார்வு..... ※
நிற்றனபோன்றுநிலையாவெனவுணர்ந்தா..... ※
ரொன்றும்பரிவதிலர்..... ※

இதன்பதப்பொருள்.

இற்சார்வின் - இம்மனைவாழ்க்கையாகியசார்வின்கணின்று. ஏமாந்தேம் - இரட்சையுற்றோம். ஈங்கு - இவ்விடத்தினின்று. அமைந்தேமென்று - எல்லாவற்றாலும் நிரம்பினோமென்று. எண்ணி-கருதி. பொச்சாந்து-பின்புதமக்குவருந்துன்பத்தை விசாரியாததனைமறந்து. ஒழுகுவர் - நடப்பர். பேதையார்-அறிவிலாதார். அச்சார்வு - அம்மனைவாழ்க்கையாகியசார்வு. நிற்றனபோன்று-நிற்கின்றனபோன்று. நிலையாவென-நில்லாவென்று. உணர்ந்தார்-அறிந்தவர்கள். என்றும் - எந்நாளும். பரிவதிலர் - இரங்குவதிலர். எனறவாறு.—பேதையார்--எழுவாய். ஒழுகுவர்-பயனிலை. உணர்ந்தார்-எழுவாய். பரிவதிலர்-பயனிலை.

இதன்கருத்து.

இம்மனைவாழ்க்கையாகியசார்வின்கணின்றிரட்சைபெற்றோம் ஈங்கெல்லாவற்றாலும் நிரம்பினோமென்று தாமின்புறுவதுகடைப்பிடியாயாழுதுவரறிவிலாதார் அம்மனைவாழ்க்கையின்கணமைந்தனவெலலாநின்றனபோன்றேதான்றுகின்றவத்தினையே அவையெல்லா நிலையாவெனவுணர்ந்து நல்லமையின்கணின்றொன்றுந்துன்புறொன்பதாம்..... (உ)

மறுமைக்குவிதுமையவின்றிச்செய்து..... ※
சிறுமைப்படாதேநீர்வாழ்மி-னறிஞராய்..... ※
நின்றுழிநின்றேறநிறம்வேறுங்காரண..... ※
மின்றிப்பலவுமுள..... ※

இதன்பதப்பொருள்.

மறுமைக்கு - மறுபிறப்பிற்கு. விதுமை - விதையாகியவறங்களை. மயவின்றி-மயக்கமில்லாமல். செய்து-பண்ணி. சிறுமை-சிறுமையின்கண். படாது-தங்காமல். நீர்-நீங்கள். வாழ்மின்-உயிர்வாழுங்கள். அறிஞராய்-அறிவினராய். நின்றுழிநின்று-

நின்றநிலையுளேநின்று. நிறம் - பாலையெளவனவாலிபமென்கி
ன்றநிறம். வேறும்-வேறுபட். காரணம்-ஒருகாரணமும். இன்
றி - இல்லாமல். பலவும்-பலவேறுபாடுகளும். உள - உளவாம்.
என்றவாறு.— நீர்-எழுவாய். வாழ்மின்-பயனிலை. ஏகாரம் இர
ணடும் அசைநிலைகள் சிறுமையென்பது-விடயங்களினின்மயங்
குதல். அறிஞர்யாரென்றும்பாடம்.

இதன்கருத்து.

மறுமைக்குறுதியாகிய வறங்களை மயக்கமின்றிச்செய்துகி
றுமையின்கட்டங்காமலுயிர்வாழ்மின் அறிஞராய்நின்றநிலையு
ளேதின்றுநிறம்வேறுபட்காரணமுமின்றியேபலவேறுபாடு
களுமுளவென்பதாம் .... (ஈ)

உறைப்பருங்காலத்தும்ஊற்றுநீர்க்கேணி..... ✻
யிறைத்தூணுளூரூற்றுமென்பர்கொடைக்கடனுஞ் ✻
சாஅயக்கண்ணும்பெரியார்போன்மற்றையா..... ✻
ஈாஅயக்கையுடையரிது..... ✻

இதன்பதப்பொருள்.

உறைப்பு-மழைபெயல். அருங்காலத்தும்-அரியகாலத்தும்.
ஊற்று-ஊற்றினது. நீர்-நீரையுடைய. கேணி-குளம். இறைத்
தூ-ஊறவூறவிறைத்து. உணினும்-உண்டாலும். ஊர்-ஒருசார.
ஆற்றும்-இரட்டிக்கும். என்பர்-என்றுசொல்லுவர் அதுபோ
ல. கொடை-கொடையாகிய. கடனும்-முறைமையும். சாயக்க
ண்ணும்-தளர்ந்தவிடத்தும். பெரியார்போல்-பெருமைக்கு
ணமுடையாரைப்போலச்சுபாவமாக. மற்றையார்-மற்றந்த
ச்சிறியவர்கள். ஆயக்கண்ணும்-செல்வமுண்டானவிடத்துமவ
ரைப்போலச்சுபாவதன்மையுண்டாதல்-அரிது-அரிதாம். என்
றவாறு.—செய்தல்-தொன்றெழுவாய். அரிது-பயனிலை.

இதன்கருத்து.

மழைபெயலரியகாலத்தும்ஊற்றுநீரையுடையகேணி யிறைத்
தூணுளூரையாற்றுமென்றுசொல்லுவர் அதுபோலச்செல்
வங்கெட்டவிடத்தும் பெரியார்போலக்கொடையாகியகடனை
ச்செய்தல் சிறியார் செல்வமாகிய விடத்து மவர்க்கரிதென்ப
தாம்..... (ஈ)

பெருமை.

உறுபுனறந் திலகூட்டிய றுமிடத் தங்..... .... ✻
கல்லூர் றுழிபூறுமா றேபோற் செல்வம்... .... ✻
பலர்க்கா றிக்கெட்டிலந்தக் கண்ணுஞ்சிலர்க்கா றிச் . ✻
செய்வர்செயற்பாலவை..... .... ✻

இதன்பதப்பொருள்.

உறு-மிக்க. புனல்-நீரை. தந்-தை-கொடுத்து. உலகு-உலகத்தை. உளட்டி-உணபித்து. றுமிடத்தும்-நீரற்றகாலத்தும். கல்-தோண்டின. ஊர் றுழி-ஊற்றுகுழியில். ஊறுமா-ஊறுகிற. ஆறுபோல்-ஆறேபோல. செல்வம்-செல்வத்தை. பலர்க்கு-பலருக்கும். ஆற்றி-கொடுத்து. கெட்டு-கெட்டு. உலந்தக் கண்ணும்-மிடிவந்தவிடத்தும். சிலர்க்கு-சிலருக்கு. ஆற்றி-கொடுத்து. செயற்பாலவை-பெரியோர் செய்யத்தக்கவாப் புரவுகளை. செய்வர்-செய்வார். என்றவாறு.—பெரியோர்-தோன்று எழுவாய். செய்வர்-பயனிலை. செயற்பாலவை-செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

மிக்கநிறைத்தந்துலகத்தையூட்டிநீரற்றகாலத்துங்கல்லினவிடத்தூறுமாறுபோலச் செல்வத்தைப் பலர்க்கீந்தவாறே கெட்டுமுழுநந்தவிடத்தும் சிலர்க்கீந்துபெரியோர் செய்யத்தக்கவொப்புரவுகளைச்செய்வரொன்பதாம்... ... ... (அ)

பெருவனைநாடபெரியார்கட்டூமை..... ✻
கருநனைமேற்சூடேபோற்றோன்றும்-கருநனையைக். ✻
கொன்றன்னவின்னாசெயினுஞ்சிறியார்மே... ... ... ✻
லொன்றானுந்தோன்றாதெடும்..... ✻

இதன்பதப்பொருள்.

பெரு-பெரிய. வனைநாட-மலைநாடனே. பெரியார்கண்-பெரியோரிடத்தண்டாகிய. தீமை-குற்றம். கரும்-பெரிய. நனைமேல்-வெள்ளேற்றின்மேல். சூடேபோல்-சூடேபோல. தோன்றும்-விளங்கித்தோன்றும். கரும்-பெரிய. நனையை-வெள்ளேற்றினை. கொன்றன்ன-கொன்றாற்போலும். இன்னாச்-துன்பங்களை. செயினும்-சிறியார்செய்யினும். சிறியார்மேல்-அச்சிறியாரிடத்து. ஒன்றானும்-ஒருகுற்றமும். தோன்றா-

தோன்றுவாய். கெடும்-கெட்டுவிடும். என்றவாறு.—தீமை-எழுவாய். தோன்றும்-பயனிலை. குற்றம்-தோன்று எழுவாய். கெடும்-பயனிலை.

இதன் கருத்து.

பெரியமலைநாடனே பெரியவர்மாட்டுண்டாகியதீமைபெரியவெள்ளத்தின்மேற்சூடேபோலவிளங்கித்தோன்றும் அக்கருநாளையக்கொன்றுத்போலுமின்னுனைவற்றைச்செய்தஞாயிறுஞ்சிறியவர்மாட்டொன்றியிறுந் தோன்றுவாய்க்கெடுமென்பதாம்..... (சு)

இசைத்தசிறுமையியல்பிலாதார்கட்..... *
பசைத்தநட்பேயும்பரிவாமசைந்த..... *
நகையேயும்வேண்டாதநல்லறிவினுர்கட்..... *
பகையேயும்பாடுபெறும்..... *

இதன்பதப்பொருள்.

இசைந்த-பொருந்திய. சிறுமை-சிறுமைக்குணந்தீமையுடைய. இயல்பு-பண்பு. இலாதார்கண்-இல்லாதாரிடத்து. பசைந்தகலந்துநட்புக்கொண்ட. நட்பேயும்-அவ்வளவும். பரிவாம்-துன்பத்தையேயாரும். அசைந்த-தளர்ந்தசெய்திகளை. நகையேயும்-மகிழ்ச்சியின்கண்ணும். வேண்டாத-வேண்டியிராத. நல்-நல்ல. அறிவினுர்கண்-அறிவினையுடையாரிடத்து. பகையேயும்-கொண்டபகையும். பாடு-பெருமையை. பெறும்-அடையும். என்றவாறு.—பசைந்தநட்பேயும்-எழுவாய். பரிவாம்-பயனிலை. பகை-எழுவாய். பெறும்-பயனிலை. பாட்டை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பொருந்தியசிறுமைக்குணந்தீமையுடையபண்பிலாதார்மாட்டுநட்புச்செய்தவத்துணையுந்துன்பத்திற்குக்காரணமாம் ஒழுக்கத்தின் வேறுபட்டனவற்றை நகையின்கண்ணும் பிறராற்சொல்லுதல்வேண்டாதநல்லறிவினுர்மாட்டுக்கொண்டபகையும்பெருமையைப்பெறுமென்பதாம்..... (எ)

மெல்லியனல்லாருண்மேன்மையதுவிறற்..... *
தோன்றுட்கூற்றுட்குமுட்குடைமையல்லாஞ்... *
சலவருட்சாலச்சலமேதலவரு..... *
ணன்மைவரம்பாய்விடல்..... *

பெருமை.

இதன்பதப்பொருள்.

மெல்-மெல்லிய. இயல்-இயல்பையுடைய. நல்லாருள்-நல்லாரிடத்து. மேன்மை - மேன்மையையேவேண்டுக. அதுவிறந்து-அஃதொழிந்து. ஒல்லாருள்-பகைவரிடத்து- கூற்றுகூற்றுவனும். உட்கும்-அஞ்சத்தக்க. உட்குடைமை-அச்சத்தைச் செய்யும்வினையேவேண்டுக. எல்லாம் - எல்லாம்படிறேசெய்யும். சலவருள்-படிறுடையாரிடத்து. சால - மிகவும். சலமே-படிறுடைமையேவேண்டுக. நலவருள் நல்பண்பினையுடையாரிடத்து. நன்மை-நன்மைக்கு. வரம்பாய்விடல் - எல்லையேவேண்டுக. என்றவாறு. -- நீவிர் - தோன்ற எழுவாய். வேண்டுக-பயனிலை. மேன்மையை - வினை-படிறுடைமையை - எல்லையை-இவை நான்குஞ் செயப்படுபொருள். அதுவிறந்தினபதவுரைப்பொருடோறுமொட்டுக.

இதன்கருத்து.

மெல்லியவியல்பினையுடையநல்லாரிடத்துமேன்மையையேவேண்டுக பகைவரிடத்துக்கூற்றுவனும் அஞ்சத்தக்க அச்சத்தைச்செய்யும் வினையேவேண்டுக எல்லாம்படிறே செய்யும்படிறுடையார் மாட்டுப்படிறுடைமையையேவேண்டுக நல்லபண்பினையுடையார் மாட்டு நன்மைக்கெல்லையை வேண்டுகவென்பதாம்..... .... (அ)

கடுக்கியொருவன்கடுஞ்சூளேபேசி..... ..... *
மயக்கிவிடினுமனப்பிரிப்பொன்றின்றித்..... *
தெளிகசமிலாதவர்தூயமனத்தார்..... ..... *
வளக்கினுளொண்சுடரேபோன்று... .... *

இதன்பதப்பொருள்.

கடுக்கி-தம்மைக்கடியராகப்பண்ணி. ஒருவன்-ஒருவர். கடும்-மிகவும். சூளை-பொல்லாதசொற்களை. பேசி-சொல்லி. மயக்கிவிடினும்-வேறுபடுத்திவிடினும். மனம்-தம்மனத்து. பிரிப்பு-வேறுபாடு. ஒன்று-ஒன்றும். இன்றி-இல்லாமல். விளக்கினுள்-அசையாமனின்றெரியும்விளக்கினுள். ஒள்-ஒள்ளிய. சுடர்போன்று-தீபம்போன்று தூயமனத்தார்-மனமுந்தூயராயிருப்பர். ஆளக்கலிலாதவர் - திண்ணியராய்த்தமதுதன்மையுள்சலி

யார். என்றவாறு.—மனத்தார்-எழுவாய். துளக்கமிலாதவர்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

தம்மைக்கழுயராகப்பண்ணி யொருவர் கடுங்குறுகோகளைப் பேசிவேறுபடுத்தி விடினுந்தம்மனத்துவேறுபாடொன்றின்றிளைக்கினுளொண்டடோடோன்றுதுயமனத்தார் திண்ணியராய்நிலைதளராதொன்பதாம்..... (கூ)

மூற்றுத்துத்துத்தினைநாளுமறஞ்செய்து..... ❋
பிற்றுத்துத்துத்துவர்சான்றவ-ரத்துத்து..... ❋
மூக்குற்றநீக்கிமூடியுமளவெல்லாந்..... ❋
துக்கத்துணீக்கிவிடும்..... ❋

இதன்பதப்பொருள்.

மூற்றுத்தும்-மூற்படவுண்ணும். துத்தினை-உணவினை. நாளும்-நாடோறும். அறம்-அறத்தை. செய்து-பண்ணி. பிற்றுத்து-பிற்படவுண்ணுமுணவினை-துத்துவர்-உண்ணுவர். சான்றவர்-அமைந்தோர். அத்துத்து-அப்படியுண்டவுண். மூக்குற்றம்-காமவெகுளிமயக்கமாகியமூன்றுகுற்றங்களையும். நீக்கி-கெடுத்து. மூடியுமளவெல்லாம்-தாம்வீடுபெறுமளவெல்லாம். துக்கத்துள்-துன்பத்துணின்றும். நீக்கிவிடும்-நீக்கும். என்றவாறு.—அத்துத்து-எழுவாய். நீக்கிவிடும்-பயனிலை.

இதன்கருத்து.

மூற்படவுண்ணுமுணவினைநாடோறுமறமாகச்செய்துபிற்படவுண்ணுமுணவினையுண்பரமைந்தீதார் அப்பெற்றியிறுண்டவுண்காமவெகுளிமயக்கங்களைநீக்கி வீடுபெறுமளவெல்லாந்துன்பத்துணின்றுநீக்குமென்பதாம்..... (ஐ)

பெருமைமூற்றிற்று.

ஆ அதிகாரம்-ஐகூ-இ. வெண்பா... (ரகூஐ)

தாளாண்மை.

தாள்-முயற்சியை. ஆண்மை-ஆளுந்தன்மை. அஃதாவது-முயற்சியுடைமை. இத்தமுயற்சியுண்டாகவே பொருள் உருவாயுண்டாம் இத்தப்பொருளாலேதருமமும் பெருமையுமேம்பாடு மதிப்புஞ்சுகமுமின்பமுமுண்டாமென்பதறிகாண்டுமடிதலின்றியேயுற்சாகமுண்டாக்வேண்டுமென்பதாம்.

கோளாற்றக்கொள்ளாக்குளத்தின்கீழ்ப்பைங்கூழ்போற் .
கேளீவதுண்டுகிளைகளோதுஞ்சுக.....
வாளாடுகூத்தியர்கண்போற்றடுமாறுந்... .....
தாளாளர்க்குண்டோதவறு.....

இதன்பதப்பொருள்.

கோள்-நீர்கொள்ளுதலை. ஆற்ற-மிக. கொள்ளா-கொள்ளாத. குளத்தின்கீழ்-சிறுகுளத்தின்கீழுண்டாகிய. பைங்கூழ்போல். பயிரோபோல. கேள்-உறவின்முறையார். ஈவது-கொடுப்பதனை - உண்டு-புரிந்திருக்கின்றவுறவின்முறையார். துஞ்சுக - இறக்கக்கடவர். வாளாடு - வாளோடேதாக்கினை. கூத்தியர் - கூத்திவர். கண்போல்-கண்ணேபோல. தடுமாறும் - புடைபெயர்ந்து. தாளாளர்க்கு-உற்சாகம்பண்ணுபவர்க்கு. தவறு-யாதொருதாளுந்தவறு. உண்டோ-உளதோதா. என்றவாறு.—கிளைகள் - எழுவாய். துஞ்சுக-பயனிலை. தவறு - எழுவாய். உண்டோ-பயனிலை. ஓகாரம்-அசைநிலை. துஞ்சுவவெண்ணுப்பாடம்.

இதன்கருத்து.

நீர்கொள்ளுதலைமிகக் கொள்ளாச்சிறுகுளத்தின் கீழ்ப்பயிரோபோலக்கேளிரீவதனையுண்டுகிளைத்தாரிறக்க வாளாடுகூத்தியர்கண்ணேபோலப்புடைபெயர்ந்துமுயற்சியுடையார்க்குத்தவறிலையென்பதாம்..... ..... (க)

ஆடுகோடாகியதரிடைநின்றதூஉங்..... .....
காழ்கொண்டகண்ணேகளிறினைக்குங்கைத்தாருமம் ....
வாழ்கலுமன்னதகைத்தேயொருவன்முன்... ... ...
சூழ்வினைந்தின்னேச்செயின்..... ....

இதன்பதப்பொருள்.

ஆடு-அசைத்தாடுவது. கோடாகி - ஒருகொம்பாய். அதரிடை-வழியருகே. நின்றதும்-நிற்பதுவும். காழ்கொண்டகண்ணே-வயிரமேறினபொழுதே. களிறு யானையை. அணைக்கும்-சேர்க்கத்தக்கதாரு கந்தாகும்-தறியாம். ஒருவன் - யாவனொருவன். தாழ்வின்றி-மடிதலின்றிமுயன்று. தன்னைச்செயின்-தன்னையாகிக்கொளின். வாழ்தலும்-செல்வமுடையனுதலும். அன்னதகைத்தே-அத்தன்மைத்தாம். என்றவாறு.—வாழ்தல்-எழுவாய். அன்னதகைத்தே-பயனிலை. தான் - அசைநிலை. தாழ்வின்றி-முயற்சியிற்சுழ்வின்றி.

இதன்கருத்து.

அசைந்தாடுவதாருகொம்பாய்வழியிடைநின்ற இளமரமூழ்திய பொழுதேகளிற்றையணைக்குந்தறியாம் ஒருவன்மடிதலின்றிமுயன்றுதன்னையாகிக்கொளின்வாழ்தலும் அப்பெற்றித்தாகுமென்பதாம். .... (உ)

உறுபுலியுணினையின்றியொருநாட்..... .... ❋
சிறுதேனைபற்றியுற்றின்னுமறிவிலுற்..... ..... ❋
காற்சுழிலென்றுகருதற்கையிலுன்..... ..... ❋
மேற்சுழிலுமாங்கேமிகும்..... ..... ❋

இதன்பதப்பொருள்.

உறு-வலியுற்ற. புலி-புலிகளுக்கு. உளன் - உளதாகிய. இளை-உணவு. இன்றி-இல்லாமல். ஒருநாள்-பகியாலொருநாள். சிறு-சிறிய. தேனை-தேனையை. பற்றியும்-பிடித்தாயினும். தின்னும்-தின்னும் ஆதலால். அறிவிலுள்-அறிவிலுளே. காற்சுழிலென்று - முயன்றமுயற்சிபலிதத்திலுலையென்று. கருதற்க-நினையாதொழிக. கையிலுள்-தானிடைவிடாமலமுயலுகிறவாழ்க்கைநிலுள். மேற்சுழிலும்-மேலானதாழிலும். மிகும்-மிகும். என்றவாறு.—மேற்சுழில்-எழுவாய். மிகும் - பயனிலை. ஆங்கு-ஏகாரம்-இவ்விரண்டும் அசைநிலைகள்.

இதன்கருத்து.

புலிகளுக்கியல்பு வலின்றிப்பகியாலொருநாள் சிறுதேனையைப்பிடித்தாயினுந்தின்னும் ஆதலால் அறிவிலுற்காற்சுழி

ழிலென்றேகருதாதொழில ஆவ்வொழுக்கத்தானே மேலாகிய
தொழிலுமிருமென்பதாம் .... (சு)

இசையாதெனினுமியற்றியோராற்று... ... . ✻
லசையாதுநிற்பதாமாண்மை-யிசையுங்காற்.... ... ✻
கண்டறியாலைக்குங்கானலந்தண்சேர்ப்ப... ... ... ✻
பெண்டிரும்வாழ்வாரோமற்று ..... ✻

இதன்பதப்பொருள்.

இசையாதெனினும்-தன்னுடையமுயற்சியாருகாலத்தும் பலித்தலிலலையாயினும். இயற்றி-பின்புபடியாமலம்முயற்சியினைச்செலுத்தி. ஓர்-ஒரு. ஆற்றல்-வழியால். அசையாது-தளராமல். நிற்பதாம்-நிற்பதாயிருக்கும். ஆண்மை-ஒருவர்க்கான்மையாவது. இசையுங்கால் - முயன்றவையெல்லாம்பலிக்குமாகில். கண்டல்-முள்ளிச்செடிகய. தினை-அலைகள். அலைக்கும்-மோதும். கானலம்-கானலையுடைய. தண்-குளிர்ந்த. சேர்ப்ப-கடற்சேர்ப்பனே. பெண்டிரும்-பெண்டிர்களும். வாழாரோ-செல்வமுடையராவர். என்றவாறு.—ஆண்மை - எழுவாயி. நிற்பதாம்-பயனிலை. மற்று-அசைநிலை. ஓராற்றலென்னும் பாடம்.

இதன்கருத்து.

கண்டறியாலைக்குங்கானலந்தண்சேர்ப்பனேதான்முயன்ற முயற்சியாற்பயன்கூடாற்றில்லையாயினுமுள்ளந்தாழாதேயாருவகையானம்முயன்றுதளராதேநிற்பதாமொருவர்க்கான்மையாவதுமுயன்றனவெல்லாமுடியுமாயின் ஆண்மைத்தன்மையில்லாதபெண்டிருமிவ்வுலகிலிருப்பதாம்..... .... (சு)

நல்லகுலமென்றுநீயகுலமென்றுஞ்..... ..... ✻
சொல்லளவல்லாற்பொருளில்லைத்-தொல்சிறப்பி. ... ✻
ணெண்பொருளொன்றேறுதவுங்கல்வியாள்வினை..... ✻
யென்றிவற்றுக்குங்குலம் ,..... ... . ✻

இதன்பதப்பொருள்.

நல்லகுலமென்றும் - இவர்நல்லகுலமென்றும். நீயகுலமென்றும்-இவர்நீயகுலமென்றும். சொல்-சொல்லும். அளவில்

லால்-அளவல்லது. பொருளில்லை - அதிலொருபொருளில்லை. தொல்-பழைய. சிறப்பின்-சிறப்பினையுடைய. ஒன்ன-ஒள்ளிய. பொருள்-பொருளும். தவம்-தவமும். கல்வி-கல்வியும். ஆள்வினையென்று-ஆள்வினையுடைமையுமென்றுசொல்லப்பட்ட. இவற்றுள்-இவற்றிலுள். குலம்-குலம். ஆகும்-ஆம். என்றவாறு.—குலம்-எழுவாய். ஆகும்-பயனிலை. ஒன்றேயென்பது-எண்ணிடைச்சொல்.

இதன்கருத்து.

நல்லகுலமென்றுந்தியகுலமென்றுஞ் சொல்லுமளவல்லது பொருளொன்றில்லைபழையதாகச் சிறப்புடைத்தாய்வருகின்ற பொருளொன்றுந்தவமொன்றுங்கல்வியொன்றுமுயற்சியொன்றுமென்றுசொல்லப்பட்டவிந்நான்கினுங்குலமாவதென்ப தாம்..... (கூ)

ஆற்றுந்துணையுமறிவினையுள்ளடக்கி... ... . ✻
யூக்கமுடையாருணர்வுடையா-ருக்க ..... ✻
மூறுப்பிலுவராயுமொண்மையுடையார் ... . ✻
குறிப்பின்கீழ்ப்பட்டதுலகு..... ..... ✻

இதன்பதப்பொருள்.

ஆற்றும்-தாங்கருதினகாரியம். துணையும்-முடியுமளவும். அறிவினை-தமதறிவினை. உள்ளடக்கி-புலப்படாமலடக்கிக் கொண்டு. ஊக்கம்-தமதுமனவெழுச்சியினை. உணர்வுடையார்-அறிவுடையார். உரையார்-பிறரறியச்சொல்லார். ஊக்கம்-பிறருக்கங்களை. உறுப்பிலுல்-அவருறுப்பைக்கொண்டே. ஆராயும்-விசாரிக்கும். ஒண்மையுடையார்-ஒள்ளிமையுடையாரது. குறிப்பின்கீழ்-அவர்வினைகொள்ளுவதாகக்கருதினகாரியத்திற்கீழ். உலகு-உலகமானது. பட்டது-தங்கிற்று. என்றவாறு.—உணர்வுடையார்-எழுவாய். உரையார்-பயனிலை. ஊக்கத்தை-செயப்படுபொருள். உலகு-எழுவாய். பட்டது-பயனிலை. ஊற்றமெனப்பாடமோதியூக்கமெனப்பொருளுரைப்பாருமுளர். இதுதாளாண்மைக்குப்பொருத்தினதென்னெனில்தன்னுடைய விசாரத்தைத்தன்னுறுப்பைக்கொண்டாராய வல்லவாருண்டவற்றுலும் புலப்படாமலடக்கும் விசாரமுடைமையினையுமொன்றினைச்செய்து முடிப்பதாக வெண்ணுவதனி

லதற்கோரிடையூறுவந்ததாயினுமனந்தளராமலவ்விசாரத்தை முடியச்செலுத்தியந்தவினையைமுடிக்கிறதுமுயற்சியுடைமையாம்.

இதன்கருத்து.

தானினைத்தகாரியமுடியுமளவுந் தமதறிவினையுள்ளடக்கிவைகுளிவந்தாலுந்தமதுக்கங்களைச்சொல்லார் அறிவுடையார்பிறருக்கங்களையவருறுப்பைக்கொண்டேயாராயவல்லமாட்சிமையையுடையார்குறிப்பின்கண்ணேயுலகந்தங்கிற்றென்பதாம்.

(சு)

கிதலிநினப்பட்டவாலமரத்தை..... .... *
மதலையாய்மற்றதன்வீழ்நின்றியாங்குக்..... ..... *
குதலைமைதந்தைகட்டோன்றிற்றன்பெற்ற... ..... *
புதல்வன்மறைப்பக்கெடும்..... .... *

இதன்பதப்பொருள்.

கிதலை-செல்லாலே. நினப்பட்ட-திண்ணப்பட்ட. ஆலமரத்தை-ஆலமரத்தினை. அதன் - அந்தமரத்திலே. வீழ்-விழுந்தவீழ்தாமே. மதலையாய்-பற்றுக்கோடாகத்தளராதடி. உளன்றியாங்கு-தாங்கினுற்போல. தந்ததன்-தன்னுடையபிதாவினிடத்து. குதலைமை-தளர்ச்சி. தோன்றில்-வந்துதோன்றில். தான்பெற்ற-தான்பெறப்பட்ட. புதல்வன் - புத்திரனவன்மறைப்ப-அதனைமுயற்சியாற்பாதுகாக்க. கெடும் - கெட்டுப்போம். என்றவாறு.—குதலைமை-எழுவாய். கெடும்-பயனிலை. மற்று-அசைநிலை.

இதன்கருத்து.

கிதலாலேநின்னப்பட்டஆலமரத்தையதன்வீழ்பற்றுகத்தாங்கினுற்போலத் தந்தைமாட்டுத்தளர்ச்சிதோன்றிலவன்பெற்றபுதல்வன்பாதுகாக்கக்கெடுமென்பதாம்..... (எ)

ஈனமாயில்லிருத்தின்றிவிளியினு..... .... *
மானந்தலைவருவசெய்பவோ-யானை..... .... *
வரிமுகம்புண்படுக்கும்வள்ளுகிர்தோன்று... ... ... *
ளரிமாமதூகையவர்..... .... *

இதன்பதப்பொருள்.

யானை - யானையினது. வரிமுகம் - புகர்முகத்தை. புண்படுக்கும் - புண்செய்யத்தக்க. வள் - கூரிய. உகிர் - நகத்தினையும். தோன்றல் - வலியதாளினையுமுடைய. அரிமா - சிங்கத்தினது. மதுகையவர் - வலியையுடையவர். ஈனமாய் - தம்முடையமுயற்சிக் கோரிழிவுவந்தது. இல்லிருந்து - இல்லின்கண்ணேயிருந்து. இன்றி - ஒருசெயலுயின்றியே. விளியினும் - இறக்கத்தக்கதேடிவரினும். மானம் - குற்றம். தலை - தம்மாட்டு. வருவ - வருங்காரியங்களை. செய்பவோ - செய்வதோ. என்றவாறு. — மதுகையவர் - எழுவாய். செய்பவோ - பயனிலை. வருங்காரியங்களை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

யானையினதுபுகர்முகத்தைப்புண்படுக்கவல்லவள்ளுகிரையும்வலியதாளினையுமுடைய அரிமாவினது வலியையுடையார்குறைபட்டுத்தம்மனையின்கண்ணிருந்து வறியராயிறந்துபோயினுங்குற்றந்தம்மாட்டுவருமுயற்சியைச்செய்யாரென்பதாம்.

(அ)

தீங்கரும்பீன்றதிரள்காளையலரி..... .... *
தேங்கமழ்நாற்றமிழந்தாங்கு..... ... *
மூயர்குடியுட்பிறப்பினெண்ணும்பெயர்பொறிக்கும். *
பேராண்மையிலாக்கடை..... ..... *

இதன்பதப்பொருள்.

தீம் - இனிய. கரும்பு - கரும்பு. ஈன்ற - ஈனப்பட்ட. திரள் - திரண்ட. கால் - தாளினையும். உளை - மயிர்போலுந்தூய்மையினையுமுடைய. அலரி - பூ. தேம் - இனிதாக. கமழ் - மணங்கமழாநின்ற. நாற்றம் - வாசனையை. இழந்தாங்கு - இழந்தாற்போல. பெயர் - தன்பெயரை. பொறிக்கும் - எங்கும்பொறித்தாற்போலநிறுத்தவரும். பேர் - பெரிய. ஆண்மை - தாளாண்மை. இல்லாக்கடை - இல்லாவிடத்து. ஓங்கும் - ஓங்கி. உயர் - உயர்ந்த. குடியுள் - குடியின்கண். பிறப்பின் - பிறந்தால். என் - என்ன. ஆம் - பயனுண்டாம். என்றவாறு. — என் - எழுவாய். ஆம் - பயனிலை. திரள் காளவலென்னும்பாடம்.

தாளாண்மை.

இதன்கருத்து.

தன்பெயரையெங்கும்பொறித்தாற்போலநிறுத்தவருந்தா ளாண்மையில்லாவிடத்தினிய கரும்புபயந்ததிரண்டகாவினையு மயிர்போலுந் துய்மையினையுமுடைய பூவினியமணங்கமழா நின்றநாற்றத்தையிழந்தாற்போல வுயர்ந்தகுடியின்கட்பிறப் பினென்னபயனுண்டாகுமென்பதாம்..... (கூ)

பெருமுத்தரையர்பெரிதுவந்தீயுங்..... *
கருணைச்சோறூர்வர்கயவர்-கருணையைப்... .... *
பேருமறியார்தனிவிரும்புதாளாண்மை... ... . *
நீருமமிழ்தாய்விடும்..... ..... *

இதன்பதப்பொருள்.

பெரும்-பெரிய. முத்தரையர் - முத்தரையென்னுஞ் சிற ப்புப்பெயரையுடையவர். பெரிது-மிகவும். உவந்து மகிழ்ந் து. ஈயும்-இடுகின்ற. கருணை-பொரிக்கறியோடுகூடிய. சோ று-சோற்றை. ஊர்வர் - உண்பர். கயவர்-கீழ்மக்கள். கருணை யை-பொரிக்கறியை. பேரும்-பெயரும. அறியார்-அறியாரா ய். தனி-தாமிகவும். விரும்பு-விரும்பத்தக்க. தாளாண்மை-மூ யற்சியால்வரும். நீரும்-புற்கைநீரும். அமிழ்தாய்விடும்-அவர் க்கமிர்தம்போல்வது என்றவாறு.—கயவர்-எழுவாய். ஊர்வர்- பயனிலை. சோறீறை-செயப்படுபொருள். நீர்-எழுவாய். அமி ழ்தாய்விடும்-பயனிலை.

இதன்கருத்து.

பெருமுத்தரையனென்னுஞ் சிறப்புப்பெயர்பெற்றசெல்வர் பெரிதுங்காதலித்தீயுங்கருணையென்னுங்கறியோடுகூடியசோ றீறையுண்பர்கீழ்மக்கள்கருணைக்கறியைப்பெயரும்மறியாராய்நி கவும் விரும்பப்படுந்தாளாண்மையால்வரும்புற்கைநீரும்அமிழ் தம்போல்வதென்பதாம்..... (ம)

தாளாண்மைமூற்றிற்று.

ஆ அதிகாரம்-உ-இ. வெண்பா... (உக)

சுற்றந்தழால்.

சுற்றம்-சுற்றத்தை. தழால்-தழுவிக்கொண்டொடத்தல். அஃதாவது-பகைவரால்டர்ப்புண்டும்வறுமைமிக்குப்பிணிப்புண்டுஞ்சாமகாலங்களாலிடும்பைபமிக்குமிப்படித்துன்பமுற்றோருசெயலற்றுத்தம்மைவந்தடைந்தவர்கள்விதனங்களைநீக்கியவர்கடம்மையொருகாலத்தும்விட்டுநீங்காதபடிபண்ணிக்கொண்டிருத்தலுந்தம்முடையவுறவின்முறையார்கிளையினுள்ளார்குடியினுள்ளாரென்னப்பட்டவிவர்கட்குமோரிடும்பைவரிலவர்களையத்துன்பங்களடுப்பதன்முன்னந்தமக்கொருதுன்பம்வந்ததுபோலவிரைந்தவர்க்டுன்பங்களைநீக்கியவர்கள்பாரமெல்லாந்தம்முடையபாரமாகவேகொண்டிப்படிக்குத்தாமவர்களைத்தழுவிக்கொண்டுபோதலுமவர்கட்குந்தமக்குமொருதுன்பம்வாராமற்றம்மைத்தழுவிக்கொண்டிருத்தலுமாம்.

வயாவும்வருத்தமுமீன்றக்காலையும் .... *
கவான்அன்மகற்கண்டுதாய்மறந்தாஅங்... .... *
கசாஅத்தாணூற்றவருத்தமுசாஅத்தன் .... *
கேளிரைக்காணக்கெடும் .... *

இதன்பதப்பொருள்.

வயாவும் - கருக்கொள்ளுங்காலத்துவருவதொருநோவும். வருத்தமும்-கருவைப்பொறுத்துத்திரியுங்காலத்துவருவதொருநோவும். ஈன்றக்காலையும் - ஈனுங்காலத்துவருவதொருநோவும். கவான்-தொடையினிடத்திலே. மகற்கண்டு-பிள்ளையைக்கண்டு. தாய்-தாயானவள். மறந்தாங்கு-மறந்தாற்போல. அசா-தளர்ச்சியாள். தாணூற்ற - தானடைந்த. வருத்தம்-வருத்தமெல்லாம். உசா-சூழ்ச்சியையுடைய. தன்-தனது. கேளிரை-உறவின்முறையாரை. காண-காணவே. கெடும்-நீங்கிவிடும். என்றவாறு.—வருத்தம்-எழுவாய். கெடும்-பயனிலை.

இதன்கருத்து.

கருக்கொண்டால்வருவதொருநோவும்பின்புகருவைப்பொறுத்தலால்வருவதொருமெய்வருத்தமும்மதனையீனுங்காலத்துவருவதொருநோவுங்குறங்கின்கட்கிடந்தகுழவியைக்கண்டுதாய்மறந்தாற்போலத்தளர்ச்சியாற்றூனூற்ற வருத்தந்தன்னெழு

சூழுஞ் சுழிச்சியையுடைய கேளிரைக்காணவே கெடுமென்ப
தாம்..... .. (க)

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லா..... ... *
நிழன்மரம்போனேரொப்பத்தாங்கிப்-பழுமரம்போற் *
பல்லார்பயன்றுய்ப்பத்தான்வருந்திவாழ்வதே... ..... *
நல்லாண்மகற்குக்கடன் .... *

இதன்பதப்பொருள்.

அழல்-வெம்மை. மண்டு-மிக்க. போழ்தின்-கோடைகால
த்தில். அடைந்தவர்கட்கெல்லாம்-தன்னைச்சேர்ந்தவர்கட்கெல்
லாம். நிழல்-நிழலைக்கொடுக்கிற. மரம்போல்-விருட்சம்போ
ல. தேரொப்ப-ஒருநிறையாக. தாங்கி-தரிப்பித்துக்கொண்டு.
பழு-பழுத்த. மரம்போல்-மரம்போல. பல்லார்-பலரும். பய
ன்-தன்பயனை. துய்ப்ப-நுகர. தான்வருந்தி-தான்வருத்தமுற்
று. வாழ்வது-வாழுமது. நல்-நல்ல. ஆண்-ஆண்டகைமையை
யுடைய. மகற்கு-மகனுக்கு. கடன்-முறைமை. என்றவாறு.—
வாழ்வது-எழுவாய். கடன்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. பழு
மரம்-ஆலமரமெனினுமமையும்.

இதன்கருத்து.

வெம்மைமிக்ககோடைகாலத்தில் தன்னையடைந்தார்க்கெ
ல்லாநிழலைக்கொடுக்கிற மரம்போலச் சுற்றத்தாரையெல்லா
தேரொப்பத்தாங்கிப் பழுத்தமரம்போலப்பலபிராணிகளும்
பயனை நுகரத்தான்வருந்திவாழ்வதுநல்லாண்மையையுடையம
கற்குக்கடனென்பதாம். .... (உ)

அடுக்கன்மலைநாடதற்சேர்ந்தவரை..... *
யெடுக்கலமென்னுர்பெரியோ-ரடித்தடித்து..... *
வன்காய்பலபலகாய்ப்பினுமில்லையே..... ..... *
தன்காய்பொறுக்கலாக்கொம்பு..... *

இதன்பதப்பொருள்.

அடுக்கல்-மிக்க. மலை-மலையையுடைய-நாட-நாடமே. தன்-
தம்மை. சேர்ந்தவரை-சேர்ந்தாரை. பெரியோர்-பெரியோ
ர்கள். எடுக்கலமென்னுர்-தாங்கமாட்டோமென்னுசொல்லா

ரதென்போலவென்னில். அடித்தடித்து-மேன்மேலும். வன்-வலிய. காய்-காய்கள். பலபல-பலபலவாக. காய்ப்பினும்-காய்த்தாலும். தன்-தன்னுடைய. காய் - காய்களை. பொறுக்கலா-பொறுக்கமாட்டாத. கொம்பு-கொம்பு. இல்லை-இல்லை. என்றவாறு.—பெரியோர் - எழுவாய். எடுக்கலமைன்னுர்-பயனிலை. சேர்ந்தவரை-செயப்படுபொருள். எகாரம்-அசைநிலை. அடுக்கன்மலையென்பது-ஒன்றன்மேலொன்றேற்றியடுக்கியகல்லையுடையமலையெனப்பொருள்கொள்ளுமமையும். அல்லதுமீபிசைச்சொல்லெனினுமமையும்.

இதன்கருத்து.

மிக்கமலையையுடையநாடனேதம்மைச்சேர்ந்தாரைப்பெரியோர் தாங்கமாட்டோமென்னுரதென்போல வென்னில்மேன்மேலும் பலபலவன்காய்கள்காய்த்தாலுந்தன்காய் பொறுக்கலாக்கொம்பில்லையென்பதாம்..... (ரு)

உலகறியத்தீரக்கலப்பினுநில்லா..... .... *
சிலபகலாஞ்சிற்றினத்தார்கேண்மை-நிலைதரியா..... *
நிற்குஞ்பெரியோர்நெறியடையநின்றனைத்தா... ... *
லொற்கமிலாளர்தொடர்பு.. .... *

இதன்பதப்பொருள்.

உலகு-உலகமெல்லாம். அறிய-உணர. தீர - மிகவும். கலப்பினும் - உறவுகொள்ளினும். சிற்றினத்தார் - கீழ்மக்களுடனே. கேண்மை-கொண்டவுறவு. நில்லா-நில்லாது. சிலபகலாம்-சிலநாளளவேயாம். ஒற்கமிலாளர் - தளர்ச்சியில்லாதாருடன்கொண்ட. தொடர்பு-உறவு. நிலை - தாங்கொண்டதவறெதியில. திரியா-தப்பாமல். நிற்குஞ்-நிற்கின்ற. பெரியோர்-பெரியோர்கள். நெறி-தாங்குறித்ததல்லவழியை. அடைய - சேருமளவும். நின்றனைத்து - நின்றாற்போலும். எஃறலாறு.—கேண்மை-எழுவாய். சிலபகலாம்-பயனிலை. தொடர்பு-எழுவாய். நின்றனைத்து-பயனிலை. ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

உலகத்தாரறியும்படி மிக்கநட்புக்கொள்ளுஞ் சிற்றினத்தார்கேண்மைநிலையாவாய்சிலநாளளவேயாம் உள்ளத்தின்கட்ட

ளர்ச்சியில்லாரதுகேண்மை நிலேதிரியாமனிற்கும் பெரியோர் தாங்குறித்தநல்லவழியையடைய நின்றூற்போலுமென்பதாம்.

(சு)

இன்னரினேயமர்பிறனென்னுஞ்சொ..... *
லென்னுமிலராமியல்பிறற்-றுன்னித் ..... *
தொலேமக்கடன்பந்தீர்ப்பாரோயார்மாட்டுந்..... *
தலேமக்களாகநீபாலார் .... *

இதன்பதப்பொருள்.

இன்னர்-நல்லர்தீயரிவர். இனேயர்-பரிகரிக்கலாகாவளவினரிவர். எமர்-கேளிரிவர். பிறர்-கேளிரல்லாதாரிவர். என்னுஞ்சொல்-எஞ்ஞுவேறுபடுத்துச்சொல்லுஞ்சொற்கள். என்னும்-யாதாயினும்-இலராம்-இல்லாதவர்களாகிய. இயல்பிறல்-இயல்பிலே. துன்னி-சேர்ந்து. தொலே-தளர்ந்த. மக்கள்-மக்களது. தன்பம்-துன்பத்தை. தீர்ப்பாரோ-நீக்குவாரோ. யார்மாட்டும்-யாவரிடத்தும். தலேமக்கள்-மேன்மக்கள். ஆகற்பாலார்-ஆகும்பகுதியையுடையார். என்றவாறு.---தலேமக்கள்-எழுவாய். தீர்ப்பார்-பயனிலே. துன்பத்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

இன்னரியனேமொர்பிறனென்னுஞ்சொல்யாதுமிலராமியல்பிறற்றுன்னித்தளர்ந்தமக்களதுதுன்பத்தைத்தீர்ப்பாரோயாவர்மாட்டுந்தலேமக்களாருந்தன்கடமையையுடையாரென்பதாம்.

(கூ)

பொற்கலத்தூட்டெய்தபுலியுகிர்வான்புழுக்க ... ... *
லக்காரம்பாலோடமராரிகைத்துண்டலி .... *
ஞ்பிவிட்புற்கையுயிர்ப்போற்கிளஞர்மாட்... ... ... *
டெக்கலத்தாதுமினிது .... *

இதன்பதப்பொருள்.

பொற்கலத்து-பொன்னின்கலத்திலே. பெய்த-இட்ட. புலி-புலியினது. உகிர்-நகம்போன்ற. வான்-வெள்ளிய. புழுக்கல்-சோற்றினே. அக்காரம்-சருக்கரையும். பாலோடு-பாலுடனேகூட. அமராரி-தன்னேவிரும்பாதார். கைத்து-கையினிடத்து. உண்டலின்-உண்பதிலும். உப்பிலி-உப்பில்லாத. புற்கை-

புல்லரிசிக்கூழை. உயிர்போல் - தன்னுயிர்போலும். கிளைஞர் மாட்டு-உறவின்முறையாரிடத்து. எக்கலத்தானும்-எந்தக்கலத்தேதயாயினுங்கரப்பெறில். இனிது - அதுவேயினிது. என்றவாறு.—அது தோன்ற எழுவாய். இனிது-பயனிலை. புலியுகிர்வான்புழுக்கலாவது-பிடித்தவாறேகையிலடங்கிவிட்டவாறேதனித்தனியாதலிதுவினையுவமம்.

இதன்கருத்து.

பொற்கலத்தின்கட்பெய்த புலியுகிர்போன்ற வெண்சோற்றையுமகாரத்தையும்பாடுகூடவிரும்பாதார்கையினதினையுண்டவினும்பிலியாகியபுற்கையையுயிர்போலுங்கிளைஞர்மாட்டியாதானுமொருகலத்தினுங்கரப்பெறினஃதினிதெனபதாம்.

(சு)

நாள்வாய்ப்பெறினுந்தந்நள்ளாதாரில்லத்து..... *
வேளாண்மைவெங்கருணைவேம்பாகுங்-கேளா..... *
யபராதப்போழ்தினடகிடுவோனுந்..... *
தமராயார்மாட்டேயினிது..... ..... *

இதன்பதப்பொருள்.

நாள்வாய்-சிறுகாலையே. பெறினும்-பெற்றாராயினும். தம்-தம்முடைய. நள்ளாதார்-பகைவர். இல்லத்து - மனையில். வேளாண்மை-உபகாரத்தால்வந்த. வெம் - விருப்பத்தைத்தரும். கருணை-பொரிக்கறியோடுகூடியசோறும். வேர்பாகும் - வேம்புபோலாகும். கேளாய் - கேட்பாய்நெஞ்சமே. அபராதப்போழ்தின்-பின்பக்கற்பொழுதிலே. அடகு-இலைக்கறியை. இடுவோனும்-இடுவராயினும். தமராயார்மாட்டே-சுற்றத்தாரிடத்திலேயுண்டல். இனிது-இனிதாம். என்றவாறு.—கருணை-எழுவாய். வேம்பாகும்-பயனிலை. உண்டல - தோன்ற எழுவாய். இனிது-பயனிலை.

இதன்கருத்து.

சிறுகாலையேபெற்றாராயினுந்தம்முடைய நள்ளாதார்மனையின்கண்வேளாண்மையால்வந்தவெங்கருணைவேம்புபோலாகும்கேளாய் நெஞ்சமேயந்தப்பொழுதின்கண்இலைக்கறியையிடுவராயினுங்கிளைஞர்மாட்டேயுண்டலினிதென்பதாம்... ... (எ)

முட்டிகைபோலமுனியாதவைகலுங்..... ..... *
கொட்டியுண்பாருங்குறடுபோற்கைவிடுவர்... ..... *
சுட்டுகோல்போலவெரியும்புகுவரே..... *
நட்டாரெனப்படுவார்..... .... *

இதன்பதப்பொருள்.

முட்டிகைபோல-கொல்லன்சுத்திகைபோல. முனியாதவெறுது. வைகலும் - நாடோறும். கொட்டி-தம்முடையநட்டாரைப்பதஞ்செய்து. உண்பாரும்-உண்பவரும். குறடுபோல்-மற்றவர்க்குதவுந்தன்பம்வந்தகாலத்துக்குறடுபோல. கைவிடுவர்-கைவிட்டுப்போவர். நட்டார்-உறவின்முறையார். எனப்படுவார்-என்றுசொல்லப்படுவார். சுட்டுகோல்போல-அவனுலையாணிக்கோல்போல. எரியும்-அவர்புக்கநருப்பினும். புகுவர்-கூடப்புகுவர். என்றவாறு. - உண்பார்-எழுவாய். கைவிடுவர்-பயனிலை. நட்டார்-எழுவாய். புகுவர்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

முட்டிகைபோல நாடோறுந் தம்முடைய நட்டாரைப்பதஞ்செய்துண்பாருமற்றவர்க்குத்தன்பம்வந்தகாலத்துக்கொல்லனதுகொடிறுபோலக்கைவிடுவர் நட்டாரெனப்படுவாரவன்சுடுகோல்போலவெவர்புக்கவெரியும்புகுவரென்பதாம்.

(அ)

நறுமலர்த்தண்கோதாய்நட்டார்க்குநட்டார்..... *
மறுமையுஞ்செய்வதொன்றுண்டோ-விறுமளவு.... *
மின்புறுவின்புற்றெழீஇயவொடு... ... . *
துன்புறுவதுன்புருக்கால்..... ..... *

இதன்பதப்பொருள்.

நறும்-நறுவிய. மலர்-மலராற்றொடுத்த. தண்-குளிர்ந்த. கோதாய்-மாலையினையுடையாய். நட்டார்க்கு - உறவின்முறையார்க்கு. நட்டார்-உறவின்முறையார். இறுமளவும்-சாமளவும். இன்புறுவ-இன்புறுவனவற்றை. இன்புற்று-சாமுமின்புற்று. எழீஇ-ஒழுகி. அவொடு-தாமுமவவொடு. துன்புறுவ-அவர்துன்புறுவனவற்றை. துன்புருக்கால்-துன்புறுவிடத்து. மறுமையும் - மறுபிறப்பினும். செய்வது - போய்ச்செய்வது.

ஒன்று - ஒருசால். உண்டோ - உளதோ. என்றவாறு.—ஒன்று-எழுவாய். உண்டோ-பயனிலை.

இதன்கருத்து.

நறுமலர்த்தண்கோதாயுர்ரூர்க்குற்ரூர்சாமளவு மின்பறுவ னவற்றையவொடு தாமுமின்புற்ரெழுகி அவர் துன்பறுவன வுற்றையவொடுசாழுந்துன்புரூவிடின் மறுபிறப்பின்கண்ணு நன்மைசெய்வதான் றுண்டோவெனப்பதாம்..... . (கூ)

விருப்பிலாரில்லத்து வேறிருந்தண்ணும்..... ..... ❋
வெருகீருக்கண்ணெங்கருனை வேம்பாம்-விருப்புடைத் ❋
தம்போல்வாரில்லுட்டயீ நீர்த்தண்புற்கை ..... ❋
யென்போழையந்தவமிழ்து . . . . ❋

இதன்பதப்பொருள்.

விருப்பிலார் - தம்மொடுவிருப்பமில்லாதார். இல்லத்து-ம னையின்கண். வேறிருந்து - அளவளாவுதலின்றிவேறிருந்து. உ ண்ணும்-உணகிற வெருக்குக்கண் - பூனைக்கண்போன்றநிறத் தையுடைய. வெம்-வெய்ய. கருனை-பொரிகறியும். வேம்பா ம்-வேம்புபோலாகும். விருப்புடை-தன்மேலுவிருப்பமுடை யர். தன்போல்வார் - தன்னைப்போல்வார். இல்லுள்-மனையிட த்து. தயங்கு - தெளிந்த. நீர் - நீரில். தண் - குளிர்ந்த. புற்கை - புழுக்கைநீர்பெறினும். என்போடு-என்புடனே. இயைந்த-பொ ருந்திய அமிழ்து - அமிழ்துபோலாகும். என்றவாறு.—கரு னை-எழுவாய். வேம்பாம்-பயனிலை. புற்கை - எழுவாய். அமிழ் து-பயனிலை.

இதன்கருத்து.

காதலில்லாதார் மனையின்கணளவளாவுதலின்றிவேறிருந் துண்ணுமெருகிற கண்போன்ற நிறத்தையுடைய வெய்யபொ ரிக்கற்றவேம்புபோலுந்தன்மேற்காதலையுடைய தன்னைப்போ ல்வாரதில்லத்துடனெளிந்த நீர்க்குளிர்ந்த புற்கைபெறினுமெ ன்பளவுஞ்சென்று பொருந்திய வமிழ்துபோலாகு மென்ப தாம்... .... (ஈ)

சுற்றந்தழான்மூற்றிற்று.

அ அதிகாரம்-உக-இ. வெண்பா... (உஈ)

ஊஉ-ம். அதிகாரம்.

நட்பாராய்தல்.

நட்பு-உறவு. ஆராய்தல்-விசாரித்தல். அஃதாவது - ஒருவ
ர்குணங்களை யாராயாமலவிசாரித்து நட்புக்கொண்டாற் பின்
பொருகுற்றங்களுதிவிடுதல் குற்றமாதலினட்புக் கொள்ளுமிட
த்துக்குடிப்பிறப்புமொழுக்கமுங்குணதலனுஞ்சுற்றியஞ்சொ
லுதவுமுறையுடைமையும்பழுதுசெய்யாததன்மைகளுநீட்
டிக்கவாராய்ந்து நட்புக்கொள்ளக்கடவனெனபதாம்.

கருத்தறிந்தகாற்றறிந்தார்கேண்மையெஞ்ஞான்றும் . *
குருத்திற்கருமபுதின்றற்றேற்-குருத்திற்..... .. *
கெதிர்செலதின்றதகைத்தோவிலன்று... ... . *
மதரமிலாளர்தொடர்பு..... ... . *

இதன்பதப்பொருள்.

கருத்து-தங்கருத்திலை. உணர்ந்து-கற்கப்படுநூல்களையு
ணர்ந்து. கற்றறிந்தார்-கற்றறிந்தாரோடு. கேண்மை-கொண்
டவுறவு. எஞ்ஞான்றும்-எந்தாளும். கருமபின்-கருமபினது. கு
ருத்தில்-நுனியேதொடங்கி. தின்றற்று-தின்றுற்றபோலும். என்
றும்-எப்பொழுதும். மதரமிலாளர்-இனிமையில்லாதாருடன்.
தொடர்பு-கொண்டவுறவு. குருத்திற்கு - நுனிக்கு. எதிர்செல-
அழியதொடங்கி. தின்றதகைத்து - தின்றுற்றபோலுந்தகுதியு
டைத்து. என்றவாறு.—கேண்மை-எழுவாய். தின்றற்று - பய
னிலை. தொடர்பு-எழுவாய். தின்றதகைத்து-பயனிலை. வகாரம்-
அசை இவ்விரண்டும் - அசைநிலை. தின்றன்னதகைத்தென்ப
தூஉம்பாடம்.

இதன்கருத்து.

கருத்திறுற்கற்கத்தகுநூல்களையுணர்ந்துகற்றறிந்தாரோடு
கொண்டகேண்மையெஞ்ஞான்றுங்கருமபின்குருத்தேதொட
ங்கித்தின்றுற்றபோலுமெனறுமினிமையில்லாதாருடன் கொண்
டதொடர்பதன்குருத்திற் கெதிராகச்செலலத்தூரதொடங்கி
த்தின்றுற்றபோலுந்தன்மையுடைததென்பதாம்..... ... (க)

இறபிறப்பெண்ணியிடைதிரியாவன்பதோர்..... *
நற்புடைக்கொண்டமையல்லது-பொற்கேழ் ... ... *
புனலொழுகப்புள்ளிரியுர்பூங்குன்றநாட..... ... *
மனமறியப்பட்டதென்றன்று... .... *

இன்பதப்பொருள்.

இந்பிறப்பு-குடிப்பிறப்பை. எண்ணி - கருதி. இடை-நடுவு. தீரியார்-பேறுபடார். என்பது - என்று சொல்லுவது. ஓர்-ஒரு. நற்புடை - நல்மருங்குபற்றி. கொண்டமை - நடபுக்கொண்ட மை. அல்லது - அல்லாமல். பொன் - பொன்னைப்போலுமை. பேழ்-நிறத்தினையுடைய. புனல்-அருவி. ஒழுக-விழுந்தோறும். புள்-பறவைகள் இரியும்-ஓடும். பூ - பொலிவினையுடைய. குன்றநாட-மலைநாடனே. மனம்-அவர்தெஞ்சை. அறியப்பட்டது-உடபுகுந்தறியப்பட்டது. ஒன்று-ஒன்று-அன்று-அல்ல. என்றவாறு.—ஒன்று-எழுவாய். அன்று-பயனிலை.

இதன் கருத்து.

பொற்கேழ்புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்றநாடனே குடிப்பிறப்புடையராதலக்கருதியவர் நடியுபேறுபடாமென் றொருருநன்மருங்குகொண்டவத்தினையல்லதவர்மனமறியப்பட்டதென்றன்றென்பதாம் ..... (உ)

யானேயனேயவர்நண்பொரீஇநாயனேயார் ..... ✻
கேண்மைதழீஇக்கெளல்வேண்டும்-யானே ..... ✻
யறிந்தறிந்தும்பாகனேயெகொல்லுமெறிந்தவேன்... ✻
மெய்யதாவால்குழைக்குநாய்..... ✻

இதன்பதப்பொருள்.

யானே-யானேனை. அனேயவர் - ஒத்தவருடன். நண்பு-கொண்டநட்பை. ஒரீஇ-ஒழிந்து. நாய்-செய்தநன்றியையறியுநாயை. அனேயார்-ஒத்தவருடன். கேண்மை-கொள்ளுநட்பினை. தழீஇ-தழுவி. கொளல்வேண்டும்-கொள்ளவேண்டும். யானே-அற்றயானேயான தை. பாகனே-தனக்குக்கவளமிடும்பாகனைச்செய்தநன்றியை. அறிந்தறிந்தும்-உணர்ந்துணர்ந்தும். கொல்லும்-அவனைக்கொன்றுவிடும். எறிந்த-தன்னையுடையவனெறிந்த. வேல்-வேலானது. மெய்யதா - தன்மெய்யிற்பட்டுருவிநிற்க. நாய்-நாயானது. வால்-தன்வாலை. குழைக்கும்-குழைக்குமது போல என்றவாறு.— நீவிர் - தோன்று எழுவாய். கொளல்வேண்டும். பயனிலை. கேண்மையை-செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை. கெழீஇக்கொளல்வேண்டுமென்பது உம்பாடம்.

நட்பாராய்தல்.

இதன்கருத்து.

யானையனையவொடு கொண்ட நட்பினை தீதவிர்த்து செய்கை நன்றியையறியுதாயனையாரோடு கொள்ளுங்கேண்மையை தீதழுவிக் கொளல் வேண்டும் யானபாகன்செய்த தன்றியையறிந்து மவனைக்கொல்லுந்தன்னை வளர்த்து நன்மை செய்தவனை நிந்த வேல்தன்னுடம்பின்மேலுளதாய்நிற்கதாய்தன்வாலைகுழைக்குமது போலவென்பதாம். ..... (கூ)

பலநாளும்பக்கத்தாராயினுநெஞ்சிற் ..... ※
சிலநாளுமொட்டாரோடொட்டார்-பலநாளு... ... ※
நீத்தானெனக்கைவிடலுண்டோதந்நெஞ்சத்..... ※
தியாத்தாரோடியாதீததொடர்பு..... ※

இதன்பதப்பொருள்.

பலநாளும்-எந்நாளும். பக்கத்தாராயினும்-தம்மருகிருந்தாராயினும். நெஞ்சில-நெஞ்சிலே. ஒட்டாரோடு-ஒபாருத்தமில்லாதாருடனே. சிலநாளும்-சிறிதுநாளும். ஒட்டார்-நட்புக்கொள்ளார். தம்-தமது. நெஞ்சத்து-நெஞ்சிலுள்ள. இயாத்தாரோடு-பிணிக்கப்பட்டாருடன் விகாண்ட. இயாத்தபிணிப்புள்ள. தொடர்பு-உறவை. பலநாளும்-பலநாள்களும்-நீத்தானை-தம்மைவிட்டு நீங்கினானை. கைவிடலுண்டோ-கைவிடக்கடவதோ. என்றவாறு. — ஒருவர்-எழுவாய். ஒட்டார்-பயனிலை. ஒருவர்-எழுவாய். கைவிடலுண்டோ-பயனிலை. தொடர்பை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பலநாளும்பழகினாராயினுநெஞ்சிற்பொருத்தமில்லாதாருடனேயிருவர்சிலநாளுநட்புக்கொள்ளார்தம்மனத்தின்கட்பிணிக்கட்பட்டாருடனே பிணித்தநட்பினைப்பலநாளு நீத்தானெனக்கைவிடலுண்டோவென்பதாம்..... ..... (சு)

கோட்டுப்பூப்போலமலர்ந்துபிறர்கூம்பாது..... ※
வேட்டதேவேட்டதாநட்பாட்சி-தோட்ட..... ※
கையப்பூப்போன்மூனமலர்ந்துபிறர்கூம்புவாரை... ... ※
நயப்பாருநட்பாருமில்..... ※

இதன்பதப்பொருள்.

கோடு-கொம்பிற்பூத்த. பூப்போல - பூவேபோல. மலர்ந்து-முன்னேவிரிந்து. பின்-பிறகு. கூம்பாது-குவியாது. வேட்டமே-தலைநாளிலொருவனேவிரும்பியுட்கொண்ட கோட்பாடே. வேட்டதாம் - விருப்பமாகக்கொண்டதாகும். நட்பாட்சி-நட்புச்செய்தல். தோட்ட - தோண்டின. கயம-குளத்தில். பூப்போல்-பூவைப்போல. முன்-முன்னே. மலர்ந்து - விரிந்து. பின்-பின்னே. கூம்புவானை-குவியுமவனை. நயப்பாருட்-அவனையன்புவைப்பாரும். நட்பாரும்-அவருடனுறவுகொள்வாரும். இல்-இல்லே. என்றவாறு.—நட்பாட்சி-எழுவாய். வேட்டதாம்-பயனிலை. நயப்பார்-நட்பார்-எழுவாய். இல் - பயனிலை.

இதன்கருத்து.

மரக்கோட்டுப்பூவேபோலவிரிந்தபின் குவியாதொருவனைக்காதலித்துநட்புக்கொண்டாலந்நட்பினை விடாதன்புபடுதல் நட்புக்கோடலாவது பொய்கையிற் பூவேபோல முற்படவிரிந்துபின்புகுவியு நட்பினையுடையானைக் காதலிப்பாரு நட்புக்கொள்வாருமில்லையென்பதாம்..... (ரு)

கடையாயார்நட்பிற்கழுகனையரோனை..... *
யிடையாயார்தெங்கினனையர்தலையாயா..... *
ணெண்ணுறும்பெண்ணேபோன்றிட்டஞான்றிட்டதே *
தொன்மையுடையார்தொடர்பு..... *

இதன்பதப்பொருள்.

கடையாயார்-கடையாயினர். நட்பின்-நட்பின்கண். கழுகனையர்-கழுகையொப்பவொன்றும். ஏனை-ஒழிந்த. இடையாயார்-இடையாயினர்நட்பின்கண். தெங்கினனையர் - தெங்கையொப்பவொன்றும். தலையாயார்-தலையாயினர்நட்பின்கண். எண்-எண்ணுதற்கு. அருமை-அரிய. பெண்ணேபோன்று-பெண்ணேபோல்வர். இட்டஞான்று-இட்டநாளிலே. இட்டதே - இட்டதாமென்றும். தொன்மையுடையார்-பழமையுடையார். தொடர்பு - இப்படிக்குச் செய்யுட்களிலே நட்டைக்கூறுபடுத்துரைத்தார். என்றவாறு.—தொன்மையுடையார் - எழுவாய். தொடர்பு-பயனிலை.

நட்பாராய்தல்.

இதன்கருத்து.

கடையாயார்நட்பின்கட்கழுகனையரென்றும்இடையாயார் நட்பின்கட்டெங்கனையரென்றும் கலையாயார் நட்பின்கட்பெண்ணை போர் றனையாரிட்டஞான்றிட்டதாமென்றுந் தொன்டையுடையார் செய்யுட்களிலே நட்டைக்கூறுபடுத்துச்சொன்னுலாம்பதாம்..... .... (சு)

கழுநீருட்காரடகேனுமொருவன்..... *
விழுமிதாக்கொள்ளினமிழ்தம்-விழுமிய .... *
குய்த்துவையார்வெண்சோறையாயினுமேவாதார்... *
கைத்துண்டல்காஞ்சிரங்காய்..... .. .. *

இதன்பதப்பொருள்.

கழுநீருள்-கழுநீரிலேவெந்த. கார்-பசிய-அடகேனும். இலகுகறியாயினும். ஒருவன்-அதனையொருவன். விழுமிதா-மனத்திற்சீரிதாக. கொள்ளின்-கொள்ளுவதுகில். அமிழ்து-அமிழ்தம்போல். ஆம்-ஆகும். விழுமிய-சீரிய. குய்-தாளிப்பையுடைய. துவை-கறியோடு. ஆர்-கூடிய. வெண்-வெள்ளிய-சோறையாயினும்-சோறையாதலும். மேவாதார்-நட்பினைவிரும்பாதார். கைத்து-நட்பொருளாகியவுணவை. உண்டல-உண்ணுதல். காஞ்சிரங்காய்-எட்டிக்காயோடொக்கும். என்றவாறு.—அமிழ்து-எழுவாய். ஆம்-பயனிலை. உண்டல்-எழுவாய். காஞ்சிரங்காய்-பயனிலை.

இதன்கருத்து.

கழுநீரிற்பெய்கட்டகாரடகேனுமொருவனதனை விழுமிதாக்கொள்ளினமிழ்தம்போலாம்விழுமியகுய்த்துவையார்த்தவெண்சோறையாயினுநட்பினைவிரும்பார்கையுளதனையுண்டலகாஞ்சிரங்காயோடொக்குமென்பதாம்..... ..... (எ)

நாய்க்காற்சிறுவிரல்போனன்கணியராயினு..... ..... *
மீக்காற்றுணையுமுதலாதார்நட்பெண்ணுஞ்..... *
சேய்த்தானுஞ்சென்றுகொளல்வேண்டுஞ்செய்விலாக்கும்*
வாய்க்காலனையார்தொடர்பு..... .... *

இதன்பதப்பொருள்.

நாய்-நாய்க்கு. கால்-தன்காலில். சிறு-சிறிய. விரல்போல்-விரலணித்தாறுத்போலத்தம்மொடு நட்புக்கொண்டார் நன்கு-மிக. அணியராயினும்-அணியராகினும். ஈ-ஈயினது. காற்றுணையும்-காலளவும். உதவாதார்-பயன்படாதாரோடுகொண்ட. நட்பு-உறவு. என்னும்-என்னபயனுண்டாம். செய்-வயலை. விளைக்கும்-விளைவிக்கும். வாய்க்கால்-வாய்க்காலை. அனையார்-ஒப்பவர். தொடர்பு-உறவு. சேய்த்தானும்-தூரத்திலேயிருப்பினும். சென்று-போய். கொளல்வேண்டும்-கொள்ளவேண்டும். என்றவாறு.—நட்பு-எழுவாய். என்னும்-பயனிலை. ஒருவர்-எழுவாய். கொளல்வேண்டும்-பயனிலை. தொடர்பை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

நாய்க்குத்தன்காலிற்சிறுவிரலணித்தாறுத்போலத்தம்மொடுநட்புக்கொண்டார்மிகவணியராயினுமீயின்காலளவும்பயன்படாதாம்மாடுகொண்ட நட்பென்னபயனுஞ்செய்விளைக்குமிடம் வாய்க்காலனையாரதுநட்புசேய்த்தாலுஞ்சென்றுகொளலேவேண்டுமென்பதாம்..... ..... (அ)

தெளிவிலார்நட்பிற்பகைநன்றுசாதல்..... ..... ✻
வினியாவருநோயினன்று-வினிய..... ..... ✻
விகழ்தலிற்கோறலினிதமற்றில்ல..... ✻
புகழ்தலின்வைதலேநன்று..... ✻

இதன்பதப்பொருள்.

தெளிவு-அறிவு. இலார்-இல்லாதாருடன்கொண்ட. நட்பின்-உறவைப்பார்க்கிலும். பகை-பகையாயிருக்கிறது. நன்று-நல்லது. வினியா-மருந்திற்றீராது. வரும்-நீட்டிக்கும். நோயின்-நோயைப்பார்க்கிலும். சாதல்-சாகிறது. நன்று-நல்லது. அனிய-ஒருவனெஞ்சுநோவ. இகழ்தலின்-வைகிறதிலும். கோறல்-அவனைக்கொல்லுகிறது. இனிது-நன்று. இல்ல ஒருவற்கில்லாதனவற்றைச்சொல்லி. புகழ்தலின்-புகழ்தலிலும். வைதல்-அவனைவைதல். நன்று-நல்லது. என்றவாறு.—பகை-எழுவாய். நன்று-பயனிலை. சாதல்-எழுவாய். நன்று-பயனிலை.

கோறல்-எழுவாய். இனிது-பயனிலை வைகல்-எழுவாய். தன்று-பயனிலை. ஆல-ஒன்றும்-எகாரம்-இரண்டும் - மற்றும்-அசை நிலைகள்.

இதன்கருத்து.

தேறப்படுந்தன்மையல்லாதாரோடுகொண்ட நட்பிற்பகை நன்றுமருந்திற்றீராதுநீட்டிக்குநோயிற்சாதனன்று ஒருவனை யிகழ்ந்துரைத்தலிற்கோறனன்று ஒருவற்கில்லாதகுணங்களைச் சொலலிப்புகழ்தலின்வைதனன்றென்பதாம்..... (கூ)

மரீஇப்பலரொடுபன்ணண்முயங்கிப்... .... *
பொரீஇப்பொருட்டக்கார்க்கோடலேவேண்டும் ... *
பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னு... ..... *
மரீஇப்பின்னேப்பிரிவு... .... *

இதன்பதப்பொருள்.

பலரொடு-பலருடனே. மரீஇ-மருவி. பன்ணுளீர்-பலநாளும். முயங்கி-கலந்து. பொரீஇ-தங்குணத்தோடவர்குணத்தையு மொப்புவித்து பொருள்-பொருளாக. தக்கார்-மதிக்கத்தக்காரை. கோடல்வேண்டும்-தமக்குநட்பாகக்கொள்ளவேண்டும். பரீஇ-பலவிலுல்வடுப்படுத்து. உயிர்-உயிரை. செகுக்கும்-நீக்கும். பாம்பொடு - பாம்பைப்பார்க்கிலும். மரீஇ-ஒருவரைநட்புக்கொண்டு. பின்னே-பின்பவரை. பிரிவு-விட்டுநீங்கல். இன்னு-பொலலாதது. என்றவாறு. ஒருவர்-எழுவாய். கோடல்வேண்டும்-பயனிலை. தக்காரை-செயப்படுபொருள். பிரிவு-எழுவாய். இன்னு-பயனிலை. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

பலரொடுபன்னுளும் பழகிக்கலந்தொப்புவிதீதுப் பொருளாகமதிக்கத்தக்காரைத்தமக்கு நட்பாகக்கொளவேண்டும் எயிற்றுல வடிப்படுத்தியுயிரைக்கொல்லும் பாம்பைப்பார்க்கிலுமொருவரைநட்புக்கொண்ட பின்னேப்பிரிதலின்னு தென்பதாம்... .... (ஙு)

நட்பாராய்தன்முற்றிற்று.

அஅ அதிகாரம்-உஉ-இ. வெண்பா... (உஉ ஙு)

நட்பிற்பிழைபொறுத்தல்.

நட்பில்-உறவில். பிழை - வந்தகுற்றங்களை. பொறுத்தல்-பொறுத்துக்கொள்ளுதல். அஃதாவது - தாம்நட்புக்கொள்ளப்பட்டவர்தமக்குக்குற்றங்களைச்செயினதியாமையாற்செய்தாரென்றுதெளிவுள்ளுரிமையாற்செய்தாரென்றுதலைவர்செய்தபிழையையிப்படிப்பொறுத்தலென்பதாம்.

நல்லாரெனத்தாநனிவிரும்பிக்கொண்டாரை ..... ❋
யல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டும்... ... . ❋
நெல்லுக்குயிருண்டுநீர்க்குநுரையுண்டு... ... . ❋
புல்லிதழ்பூவிற்குமுண்டு ..... ❋

இதன்பதப்பொருள்.

நல்லாரென-நல்லாரென்று. தாம்-தாம். நனி-மிகவும். விரும்பி விருப்பமுற்று. கொண்டாரை-நட்புக்கொள்ளப்பட்டாரை. அல்லாரெனினும்-பின்பவர்பொல்லாதவராயினும். அடக்கி-பிறரறியாமலடக்கி. கொளல்வேண்டும்-நட்பாகக்கொள்ள வேண்டுமதென்போலவென்னில். நெல்லுக்கு - நெல்லிற்கு. உயிருண்டு-உயிரென்பதொன்றுண்டு. நீர்க்கு - தண்ணீர்க்கு. நுரையுண்டு-நுரையென்பதொன்றுண்டு. புல்-புல்லிய. இதழ்-புறவிதழ். பூவிற்கும் - பூவினுக்கும். உண்டு-உண்டு. என்றவாறு.— ஒருவர்-எழுவாய். கொளல்வேண்டும்-பயனிலை. கொண்டாரை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

நல்லாரென்றுதாமிகவிரும்பி நட்புக்கொண்டாரை யல்லாரெனினுந்தமமனத்தினீங்கண்மறைத்து நட்பாகக்கொளலேவேண்டுமதென்போலவென்னினெலிற்குயிருண்டு நீர்க்குநுரையுண்டுபுல்லியபுறவிதழ்பூவிற்குமுண்டென்பதாம் ... ... (க)

செறுத்தேதுடைப்பினுஞ்செம்புனலோடோர் .... ❋
மறுத்துஞ்சிறைசெய்வர்நீர்நசைவாழ்நர்..... ❋
வெறுப்பவெறுப்பச்செயினும்பொறுப்பரே..... ❋
தாம்வேண்டிக்கொண்டார்தொடர்பு ..... ❋

நட்பிற்பிழைபொறுத்தல்.

இதன்பதப்பொருள்.

செறுத்தோறு-அடைக்குந்தோறும். உடைப்பினும்-உடைத்தாயினும். செம்-நவல். புனலோடு - நீருடனே. ஊடார்-கலாயாது. மறுத்தும்-மீண்டும். சிறை செய்வர்-அணைகாலுவர். நீர்-அந்நீரை. நசை-நச்சி. வாழ்நர் - வாழ்பவரதுபோல. தாம்-தாங்கள். வேண்டி-விருப்பி. தொடர்பு-நட்பு. கொண்டார்-கொள்ளப்பட்டார். வெறுப்பவெறுப்ப-தாம்வெறுக்கத்தக்கனவற்றை. செயினும்-மிகச்செய்தாராயினும். பொறுப்பர்-பொறுக்கக்கடவர் எற்றவாறு.—கொண்டார்-எழுவாய். பொறுப்பர்-பயனிலை. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

அடைக்குந்தோறுமுடைத்தாயினுஞ்செவ்வியபுனலோடு கலாயாதுபின்னையுமணிகோலுவரற்நீர்நசையாலவ்வாறது போலத்தாம்விரும்பித்தொடர்புகொள்ளப்பட்டார்வெறுப்பனவற்றைமிகச்செய்தாராயினும்பொறுப்பதொன்பதாம். (உ)

இறப்பவேதியசெயினுந்தந்நட்டார்..... ... . *
பொறுத்தறகுவதொன்றன்றே-நிறக்கோங்..... *
குருவவண்டார்க்குமூயர்வரைநாட..... ..... *
வொருவர்பொறையிருவர்நட்பு..... ..... *

இதன்பதப்பொருள்.

தம்-தம்மொடு. நட்டார்-உறவுகொண்டார். இறப்ப - மிகவும். தீய-தீயனவற்றை. செயினும்-செய்தாராயினும். பொறுத்தல்-பொறுக்கிறது. தகுவது-தகுதியுடையது. ஒன்றன்றே-ஒன்றல்லவோ ஆதலால். நிறம்-பொன்னிறத்தவான. கோங்கு-கோங்கம்பூவிலே. உருவம் - அழகிய. வண்டு-வண்டுகள். ஆர்க்கும்-ஆரவாரிக்கும். உயர்-உயர்ந்த. வரைநாட - மலைநாடனே. ஒருவர்-ஒருவர். பொறை-பொறுக்கவே. இருவர்-இருவர்க்கு. நட்பு-நட்பாம். என்றவாறு—நட்பு-எழுவாய். ஆம்-பயனிலை. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

நிறக்கோங்குருவ வண்டார்க்கு மூயர்வரை நாடனேதம்முடையநட்டார்மிகவுந்தீயனவற்றைச்செய்தாராயினும்பொறுத்

நட்பிற்பிழைபொறுத்தல். ாகூக

தவ்தருவதொன்றல்லவோ ஆதலாலொருவர்பொ... ... ❋
ருநட்பாருமென்பதாம்..... ... ❋

மழிதிரைதந்திட்டவான்கதிர்மூத்தங்..... ❋
கடுவிசைநாவாய்கரையிலேற்றுஞ்சேர்ப்ப..... ..... ❋
விடுதற்கரியாரியல்பிலோனைஞ்சு..... ❋
சுடுதற்குழூட்டியதீ..... .... ❋

இதன்பதப்பொருள்.

மழி-மறிகிற. திரை-அலைகள். தந்திட்ட-கொண்டுவந்திட்ட. வான்-வெள்ளிய. கதிர்-கிரணங்களையுடைய. மூத்தம்-மூத்தங்களாயும். கடு-கடிய. விசை-விசையையுடைய. நாவாய்-மரக்கலத்தையும். கரை-கரையிலே. அலைக்கும்-வந்தலைக்கும். சேர்ப்ப-கடற்சேர்ப்பையுடையவனே. விடுதற்கு-தாம்விடுதற்கு. அரியார்-அரியராகியநட்டார். இயல்பிலோன்-பண்பிலராயிலவரைநட்பாகக்கொண்டார். நெஞ்சம்-நெஞ்சை. சுடுதற்கு-சுடுகைக்கே. மூட்டிய-மூட்டப்பட்ட. தீ-தீயாவரவர். என்றவாறு.—அவர்-எழுவாய். தீயாவர்-பயனிலை.

இதன்கருத்து.

மழிதிரைதந்திட்டவெண்கதிரையுடையமூத்தங்களுங் கடுவிசைநாவாயுங்கரையின்கண்வந்தலைக்குஞ்சேர்ப்பனேவிடுதற்கரியராகிய நட்டார்பண்பிலராயிலவரை நட்பாகக்கொண்டார் நெஞ்சினைச்சுடுதற்குமூட்டியதீயாவரவொன்பதாம் ... (ச)

இன்னுசெயினும்விடற்பாலரல்லாரோ..... .... ❋
பொன்னன்னுய்போற்றிக்கொளல்வேண்டும்-பொன்னெடு❋
நல்விற்சிதைத்ததீநாடொறுநாடித்தம்..... ❋
மில்லத்திலாக்குதலால்..... .... ❋

இதன்பதப்பொருள்.

பொன்னெடு-பொன்னுடனேகூட. நல்-நல்ல. இல்-வீட்டையும். சிதைத்த-சுட்ட. தீ-நெருப்பை. நாடொறும்-நாள்தோறும். நாடி-தேடிக்கொண்டுவந்து. தம்-தம்மூடைய. இல்லத்தில்-இல்லிலே. ஆக்குதலால்-ஆக்கிக்கொள்ளுதலால்.

தின்னுதனவதீமை. செயினும் - செய்தாராயினும் செறு பாலரல்லாதா - விடுபாலன்மையரல்லாதநட்டானை. தீததா னன்னுப் - பொன்னேபோப்பாய். போற்றி-பின்னேயு கலாபாகவேபாதுகாத்து. கொளல்வேண்டும் - விரும்பிக்கொ வ்வேண்டுமி. என்றவாறு.— ஒருவர் - எழுவாய். கொளல்வே ண்டும்-பயனிலை. பொன்னுவென்பது உம்பாடம்.

இதன்கருத்து.

பொன்னுடனேநல்லமனையையழித்ததீயைநாடோறுந்தே டிக் தம்மனையகத்திண்டாக்குதலாற்றமதகின்னுதனவதீமைச் செய்தாராயினும்விடுபாலன்மையரல்லாதநட்டானைப்பொன் னேபோப்பாய் பின்னேயுநட்பாகவேபாதுகாத்துவிருபிக்கொ ளல்வேண்டுமென்பதாம் ..... (கு)

இன்னுசெயினுமிவிடுதற்கரியாரைத் ..... *
தின்னுதகுறத்தறகுவதோ - தின்னருஞ்சீர் ..... *
விண்குத்துநீள்வரைவெற்பகமேபோ ..... *
கண்குத்திற்றென்றுதங்கை ..... *

இதன்பதப்பொருள்.

இன்னு-குற்றங்களை. செயினும்-செய்தாராயினும். விடுதற் கு-தாம்விடுதற்கு. அரியாரை-அரியநட்டானை. தின்னு-பின் னேயுமவனையுறவாக்கிக்கொள்ளாமல். தகுறத்தல்-கைவிடுதல். தகுவதோ-தக்கதோ. தின்-கிட்டுதற்கு. அருஞ்-அரிய. சீர்-நன்மையினையுடைய. விண்-வானை. குத்துந்-பொருந்திய. நீள்-நீண்ட. வரைவெற்ப-மலைநாடனே. தம்-தப்பாடைய. கை-கையானது. கண்-தங்கண்ணை. குத்திற்றென்று-கலக்கிற் றென்று. கூடாபவோ-தறிக்கக்கடவதோ. என்றவாறு.— குற த்தல்-எழுவாய். தகுவதோ-பயனிலை.

இதன்கருத்து.

தின்னருஞ்சீர்விண்குத்துநீள்வரைவெற்பனே தமக்கின்னு தனவற்றைச்செய்தாராயினும் விடுதற்கரியநட்டானைதட்பாக மருவாதே நீக்குதறகுவதோதங்கண்ணைக்குத்திற்றென்றுதங் கையைக்குறையாவென்பதாம்..... .... (கூ)

நட்பிற்பிழைபொறுத்தல். ஈகூகூ

இலங்குநீர்த்தண்சேர்ப்பவின்னுசெயினும்... ... ... ❋
கலந்துபழிகாணுர்சான்றோர்-கலந்தபிற்... ... ... ❋
நீமையெடுத்துரைக்குந்திண்ணறிவில்லாதார் ... ... ❋
தாழுமவரிற்கடை ... ... ❋

இதன்பதப்பொருள்.

இலங்கு-விளங்குகின்ற. நீர்-நீரிலுல். தண்-குளிர்ந்த. சேர்ப்ப-கடற்சேர்ப்பையுடையவனே. இன்னு-நட்டார்குற்றங்களை. செயினும்-செய்தாராயினும். கலந்து-நட்புக்கொண்டபின். பழி-அவர்செய்தகுற்றங்களை. காணுர்-பாராசர். சான்றோர்-அமைந்தோர். கலந்தபின்-நட்புக்கொண்டபின். நீமை-அவர்செய்தகுற்றங்களை. எடுத்துரைக்கும்-பலர்க்குமறிவிக்கும். திண்-திண்ணிய. அறிவில்லாதார்-அறிவிலாதவர். தாழும்-தாங்களும். அவரின்-அவர்தம்மினும். கடை-கடையாவர். என்றவாறு.—சான்றோர்-எழுவாய். காணுர்-பயனிலை. பழிகளை-செயப்படுபொருள். அறிவில்லாதார்-எழுவாய். கடையாவர்-பயனிலை.

இதன்கருத்து.

விளங்குநீர்த்தண்சேர்ப்பனேநட்டாரின்னுதனவற்றைச்செய்தாராயினுங் கலந்துவைத்தவர்செய்தபழியைக் காணாமைநீதோர்நட்பின்செய்தநீமையையெடுத்துப்பிறர்க்குரைக்குந்திண்ணறிவில்லாதார்தாழும் பிழைசெய்தநட்டாரினுங்கடையாவரொன்பதாம் ... ... (எ)

எதிலார்செய்தநிறப்பவேதீதெனினு... ... ... ❋
நோதக்கதென்னுண்டாநோக்குங்காற்-காதல்... ... ❋
கழுமியார்செய்தகறங்கருவிநாட... ... ❋
விழுமிதாநெஞ்சத்துணின்று... ... ❋

இதன்பதப்பொருள்.

எதிலார்-அயலார். செய்தது-செய்தகுற்றம். நிறப்பு-மிக்க. தீதெனினும்-தீதாயினும். நோக்குங்கால்-ஐஃதாலாயத்தெனல் நுபார்க்குமிடத்தில். நோதக்கது-நோவதற்கு. என்னுண்டாம்-என்னவுண்டாம். காதல்-தம்மேலன்புபொருந்திய. கழுமியார்-நட்டார். செய்த-செய்தகுற்றம். கறங்கு-ஓசையுண்டாக. அருவி-வீழுமருவியினையுடைய. நாட-மலை

நட்பிற்பிழைபொறுத்தல்.

நாடனே. நெஞ்சத்துள்-நெஞ்சினுள்ளே. நின்று - இருந்து. விழுமிதா-சீர்தாகாதே' என்றவாறு.—குற்றம்-எழுவாய். விழுமிதா-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கறங்கருவிநாட வயலார்செய்தது மிகத்தீதெனினுமிஃதா னூன்வந்ததென்று நோக்குங்காலேவதத்தக்கதென்னுண்டாங் காதல கழுமியார்செய்தகுற்றநெஞ்சத்துணின் றுவிழுமிதாகா தோவென்பதாம்..... (அ)

தமரென்றுதாங்கொள்ளப்பட்டவர்தம்மைத் ... ... *
தமரன்மைதாமறிந்தாராயினவைத்..... ..... *
தமரிஞுதன்குமதித்துத்தமரன்மை..... *
தம்முளடக்கிக்கொளல்..... ..... *

இதன்பதப்பொருள்.

தமரென்று - இவர்தமக்குறவென்று. தாம்-தாம். கொள்ளப்பட்டவர்-விரும்பியுறவுகொள்ளப்பட்டவர். தம்மை-தம்மை. தமரன்மை - அவரிடத்தேதாருறவல்லாமையை. தாமறிந்தாராயின்-தாங்கண்டாராயின். அவை-அவர்கள். தமரிஞும்-முன்புதமக்குற்றவுறவைக்காட்டினும். நன்கு-நன்றாக. மதித்து-மிகவுமதித்து. தமரன்மை-அவர்செய்ததமரல்லாமையை. தம்முள்-தம்முள்ளே. அடக்கிக்கொளல் - அடக்கிக்கொள்ள வேண்டும். என்றவாறு.—ஒருவர் - எழுவாய். அடக்கிக்கொளல்-பயனிலை. தமரன்மையை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

தமக்குநட்பாவதொன்றுதாங்கொள்ளப்பட்டாரையவர்செய்ததமரன்மையைத் தாமறிந்தாராயினவரைப்பிழைசெய்யாததமரிஞுமிகவு மதித்தவர்செய்ததமரன்மையைநமக்கவர்தமராக்நாமொழுகமாட்டாமையான்வந்ததென்று தம்முள்ளேயடக்கிக்கொள்ளவேண்டுமென்பதாம்..... (கூ)

குற்றமுமேமனைக்குணமுமாருவினை... .... *
நட்டபிழைத்திரிவேனை-னட்டான்.. .... *
மறைகாவாவிட்டவன்செல்வுழிச்செல்க.. ... ... *
வறைகடல்சூழ்வையகம்..... .... *

கூடாநட்பு.

இதன்பதப்பொருள்.

நட்பு-உறவு. பின்-கொண்டபின்பு. குற்றமும்-செய்தகுற்றத்தையும். ஏனை-ஒழிந்த. குணமும்-குணத்தையும். ஒருவனை-ஒருத்தனை. நாடி-ஆராய்ந்து நிரிவேனேல்-நீரிவேனுகில். நட்டான்-நட்புச்செய்தவன் மறை-மறைத்துச்சொன்னகாரியத்தை. காவாவிட்டவன்-வெளிப்படத்துறந்தவன். செல்வழி-புகுநரகத்தில். அறை-ஆரவாரத்தையுடைய. கடல்-கடலால். குழ்-சூழப்பட்ட. வையம-வையத்தார். நகை-என்னைச்சிரிப்பதாக. செல்க-யான்புகுகக்கடவேன். என்றவாறு.—யான்-எழுவாய். செலக-பயனிலை.

இதன்கருத்து.

நட்புக்கொண்டபின்செய்தகுற்றத்தையுமேனைக்குணத்தையுமொருவனையாராய்ந்தொழுகுவேனுயினட்டானதுமறைக்கப்படுங்காரியத்தைப்பிறர்க்குவெளிப்படத்துரந்தவன்செல்லுநரகத்திலறைகடல்சூழ்ந்தவையத்தாரென்னைச்சிரிப்பதாகயான்புகுகக்கடவேனென்பதாம்..... (ல)

நட்பிற்பிழைபொறுத்தன்மூன்றிற்று.

ஆ அதிகாரம்-உசு-இ. வெண்பா... (உசுல)

கூடாநட்பு.

கூடா-கூடாத. நட்பு-உறவு. அஃதாவது-குடிமையானுங் குணத்தானுமொழுக்கத்தானுமனத்தானுமறிவுடைமையானுந் தம்மூடைய நெஞ்சுக்குப்பொருந்தாதவரை நட்புக்கொள்ளலாகாதென்பதாம்.

செறிப்பிற்பழங்கூரைசேறணையாக ... . *
விறைத்துநீரோற்றுங்கிடப்பர்-கறைக்குன்றம் .. ... *
பொங்குருவிதாழும்புனலவனைநன்னுட..... *
தங்குருமமூற்றுந்துணை..... *

கூடாநட்பு.

இதன்பதப்பொருள்.

செறிப்பில் - மரமுதலாயினவற்றுற் பிணிப்பதற்றுப்பிரிந்த. பழம்-பழைய. கூலா-கூளையையுடையவில்வின்கண். சேறு-சேற்றை. அணையாக-அணையாகக்கோலி. இறைத்தும்-அவ்வணைக்குள்விழுந்தநீரையிறைத்தும். நீர் - மேல்விழுகிறநீர். எற்றும்-எற்றலைசெய்தும். கிடப்பர் - இப்படிக்கிடப்பதுபோல. கறை-கரிய. குன்றம்-மலைக்கண். பொங்கு-மிக்க. அருவி-அருவியினை. தாழும்-வீழ்க்கும். புனல் - நீரினையுடைய. நல்-நல்ல. வனைநாட-மலைநாடனே. தம் நட்பையுடையாருந்தம்மூடைய. கருமம்-காரியம். முற்றுறத்துணை-முடியுமளவுமிருப்பர். என்றவாறு.—நட்புடையார்-எழுவாய். இருப்பர்-பயனிலை.

இதன்கருத்து.

கறைக்குன்றம்பொங்கருவிதாழும்புனல்வரைநன்னாடனே மரமுதலாயினவற்றுற்செறிப்பில்லாத பழங்கூளையையுடைய மனைக்கட் சேற்றினையணையாகக்கோலிப்புகுந்தநீரையிறைத்துமேலெழுகுகின்றநீரையேற்றுங்கிடப்பதுபோலநட்பையுடையாருந்தங்கருமமுடியுந்துணையுமிருப்பனென்பதாம். (க)

சீரியார்கேண்மைசிறந்தசிறப்பிற்றாய்..... ..... *
மாரிபோன்மாண்டபயத்ததா-மாரி... ... . *
வறந்தக்காற்போதுமேவாலருவிநாட..... ..... *
சிறந்தக்காற்சீரிலார்நட்பு..... ..... *

இதன்பதப்பொருள்.

சீரியார்-நல்லவருடன். கேண்மை-ஒருவன்கொண்டவுறவு. சிறந்த-மிக்க. சிறப்பிற்றாய்-சிறப்புடைத்தாய். மாரிபோல்-மழைபோல. மாண்ட - மாட்சிமைப்பட்ட. பயத்ததாம்-பயனையுடைத்தாம். வால்-வெள்ளிய. அருவி-அருவியினையுடைய. நாட-மலைநாடனே. சீரிலார் - சீர்மையில்லாதாருடன். நட்புகொண்டதொடர்ச்சி. சிறந்தக்கால்-மிக்கவிடத்தி. மாரி-அம்மழை. வறந்தக்காற்போதும் - பெய்யாமனின்றகாலத்தைப்போதும். என்றவாறு.—மகண்மை - எழுவாய். பயத்ததாம்-பயனிலை. நட்பு-எழுவாய். வறந்தக்காற்போதும் - பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதல் கருத்து.

வாலருவி நாடனேவிழுமியாரோடொருவன் கொண்டநட்பு மிக்க பெருந்தன்மையையுடைத்தாய் மழைபோலமாட்சிமைப்பட்டபயனேயுடைத்தாஞ்சீரிலாதாரோடு கொண்டநட்பு கிறந்தகாலத்தம்மாரிவறந்தக்காற்போலுமென்பதாம்..... (உ)

நுண்ணுணர்விலொடுகூடி நுகர்வுடைமை..... ..... *
விண்ணுலகேயொக்கும்விழைவிற்றூ-ணுண்ணூ..... *
ணுணர்விலராகியதூதியமில்லார்ப்..... *
புணர்தனிரயத்துளொன்று..... .... *

இதன்பதப்பொருள்.

நுண்-நுண்ணிய. உணர்விலொடு-அறிவினையுடையாரோடு. கூடி-நட்புச்செய்து. நுகர்வுடைமை-அநுபவிக்குமுடைமை. விண்ணுலகு-தேவருலகத்தை. ஒக்கும்-நிகர்க்கும். விழைவிற்று-டயனேயுடைத்து. நுண்-நுண்ணிய. தூல்-தூலே. உணர்விலராகிய-அறியமாட்டாதவராகிய. ஊதியம்-பயன். இல்லார்-இல்லாதாரை. புணர்தல்-நட்புக்கொள்ளுதல். நிரயத்துளீ-நரகங்களுள்ளே. ஒன்று-வைத்தெண்ணப்படுவதொருநரகம். என்றவாறு.—நுகர்வுடைமை-எழுவாய். விழைவிற்று-பயனிலே. புணர்தல்-எழுவாய். ஒன்று-பயனிலே. ஏகாரம்-ஆல்-அசைநிலைகள்.

இதன்கருத்து.

நுண்ணிய அறிவினையுடையாரோடு நட்புச்செய்து நுகர்வுடைமை துறக்கத்தையொக்கும்பயனேயுடைத்து நுண்ணிய நூலேயுணருமுணர்விலராகியபயனிலாதாரை நட்பாகப்பொருந்துதனரகங்களுள்ளேவைத்தெண்ணப்படுவதொருநரகமென்பதாம்..... .... (ஊ)

பெருகுவதுபோலத்தோன்றிவைத்தீப்போ..... *
லொருபொழுதுஞ்செல்லாதேதந்து-மருகெல்லாஞ் *
சந்தனஞ்சோலைச்சாரன்மலைநாட..... ..... *
பந்தமிலாளர்தொடர்பு..... ..... *

இதன்பதப்பொருள்.

அருகு-பக்கம். எல்லாம்-முழுதும். நீள்-நீண்ட. சந்தனஞ்சோலை-சந்தனச்சோலையையுடைய. சாரல்-சாரலாற்சிறந்த.

மஹாநாட - மஹாநாடனே. பந்தமிலாளர்-நெருங்கிற்பிணிப்பில்லாதாருடன். தொடர்பு-கொண்டநட்பு. பெருகுவதுபோல-மூற்பட்டவளர்வதுபோல. தோன்றி-தோற்றி. வை-வைக்கோல். தீப்போல்-நெருப்பைப்போல. ஒருபொழுதும்-ஒருபொழுதிற்கண்ணும். செல்லாதா-செல்லாமல். நந்தும் - கெடும். என்றவாறு.—தொடர்பு-எழுவாய். நந்தும் - பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

அருகெல்லா நீண்ட சந்தனச்சோலையையுடைய சாரன்மஹாநாடனேமனத்தின்கட் பிணிப்பில்லாதாரோடுகொண்ட நட்பு மூற்பட்டுப்பெருகுவதுபோலத்தோன்றிப்பின்னர்வைக்கோற்றீப்போலவொருபொழுதுஞ் செல்லாமற்கெடுமென்பதாம். (ச)

செய்யாதசெய்தானமென்றலுஞ்செய்வதனைச் .... ✻
செய்யாதுகாழ்த்துக்கொண்டொட்டலு-மெய்யாக. ✻
விண்புறூஉம்பெற்றியிகழ்ந்தார்க்குமந்நிலையே..... ✻
துன்புறூஉம்பெற்றிதரும்..... .... ✻

இதன்பதப்பொருள்.

செய்யாத - செய்யத்தகாதகருமத்தை. செய்தும் - செய்வதாக. நாமென்றலும் - நாந்துணிதலும். செய்வதனை-வினைந்து செய்யமுயலுகருமத்தை. செய்யாது - செய்யாமல். தாழ்த்துத்துக்கொண்டு நீட்டித்துவிட்டு. ஒட்டலு-வைத்தலும். மெய்யாக-இவ்விரண்டுமுண்மையாகவே. இன்புறூஉம்-மனவாழ்க்கையின்கண்ணின்புறத்தக்க. பெற்றி-தன்மையை. இகழ்ந்தார்க்கும்-கடந்தவருந்தவர்க்கும். அந்நிலையே - அப்பொழுதே. துன்புறூஉம் - துன்பமுறத்தக்க. பெற்றி-தன்மையை. தரும்-வகுக்கும். என்றவாறு. — இவ்விரண்டும் - எழுவாய். தரும்-பயனிலை. பெற்றியை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

செய்யாதனவற்றைச்செய்துமென்றுதாந்தலுஞ்செய்யக்கடவதனைச்செய்யாதேநீட்டித்துக்கொண்டுசேறலுமிவ்விரண்டு

மூன்மையாகவே மனைவாழ்க்கையின்கணின் புறூஉந்தன்மை யைக்கடந்தவருந்தவர்க்கு மப்பொழுதே துன்புறூஉம் பெற் றியைத்தருமென்பதாம்..... (சு)

ஒருநீர்ப்பிறந்தொருங்குநீண்டக்கடைத்தும்..... *
விரிநீர்க்குவளையையாம்பலொக்கல்லா..... *
பெருநீரார்கேண்மைகொளினுநீரல்லார்..... ..... *
கருமங்கள்வேறுபடும்..... .... *

இதன்பதப்பொருள்.

ஒருநீர்-ஒருபொய்கைநீரிலே. பிறந்து-தோன்றி. ஒருங்கு-ஒருவழிப்பட. நீண்டக்கடைத்தும்-வளர்ந்தவிடத்தும். விரி-மலர்ந்த. நீர்-நீர்மையையுடைய. குவளையை-செங்கழுநீரை. ஆம்பல்-செவ்வாம்பல். ஒக்கல்லா - ஒக்கமாட்டாவதுபோல. பெரு-மிக்க. நீரார்-நீர்மையையுடையாருடனே. கேண்மை-நட்பு. கொளினும்-கொண்டாலும். நீரல்லார் - நீர்மையல்லாதார். கருமங்கள்-செய்யுங்கருமங்கள். வேறுபடும்-வேறுபட்டிருக்கும். என்றவாறு.—கருமங்கள் - எழுவாய். வேறுபடும்-பயனிலை.

இதன்கருத்து.

ஒருபொய்கைநீரிற்றோன்றியொக்கவளர்ந்தவிடத்துமலர்ந்த நீர்மையையுடைய செங்கழுநீரைச்செவ்வாம்பலொக்கமாட்டாவதுபோலப்பெரியநீர்மையையுடையாரோடு நட்புக்கொளினுநீர்மையல்லாதார்செய்யுங்கருமங்கள்பொருந்தியிராவென்பதாம்..... ..... (சு)

மூற்றற்சிறுமந்திமூற்பட்டதந்தையை..... *
றெற்றுக்கண்டன்னவிரலான்ஞெமிர்த்திட்டுக் .... *
குற்றிப்பறிக்குமலைநாடவின்னுதே..... ..... *
யொற்றுமைகொள்ளாதார்நட்பு..... *

இதன்பதப்பொருள்.

மூற்றல் - மூற்றுதலல்லாத. சிறு - சிறிய. மந்தி - குரங்கு. மூன்-தனக்குமூன்னே. பட்ட-வரப்பட்ட. தந்தையை - கனி மூலாயினவற்றைக்கொடுவந்ததந்தையை. றெற்று - பயற்ற

கூடாநட்பு

நெற்றை. கண்டன்ன-கண்டாற்போலும். விரல்லல்-விரல்களாலே. ஞெமிர்த்திட்டு-ஒடித்து. குற்றி-குத்தி. பறிக்கும்-பறிக்கின்ற. மலைநாட-மலைநாடனே. ஒத்துறுமை-உறுதியாகியவொருமை. கொள்ளாதார்-கொள்ளாதாருடன். நட்பு-கொண்டநட்பு இன்னாது-பொல்லாது. என்றவாறு.— நட்பு-எழுவாய். இன்னாது-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. மந்தி-கருங்குரங்கின்பெண்.

இதன்கருத்து.

முற்றற்கிறுமந்திதனக்குமுற்படச்சென்றுகனிமுதலியவற்றைக்கொடுவந்ததற்தையைப்பயிற்றற்கு நற்றைக்கண்டாலனைன விரலான்முருக்கிக்குத்திப்பறிக்கு மலைநாடனேமனத்தாலொருமைப்படாதாரோடுகொண்டநட்பின்னுதென்பதாம்...(எ)

முட்டுற்றபோழ்தின்முடுகியென்னுரையினை..... *
நட்டாளொருவன்கைநீட்டேனை-னட்டான்..... *
கடிமனைகட்டழித்தான்செல்வுழிச்செல்க..... *
தெடுமொழிவையநக... ... . *

இதன்பதப்பொருள்.

முட்டு - என்றுறுதிறவுசெய்தவனுக்கொருதுன்பம். உற்றபோழ்தின்-வந்தகாலத்து. முடுகி-விரைந்து. என்-என்னுடைய. ஆர்-பெறற்கரிய. உயிர்-சீவனை. நட்டாளொருவன். நட்புச்செய்தவொருவன். கை-கையிலே. நீட்டேனை-கொடேனையில். நட்டான்-நட்புச்செய்தவனது. கடி - காவல். மனை-மனையாளை. கட்டு-காவல். அழித்தான்-அழித்தவன். செல்வுழி-செல்லுதரகத்திலே. நெடி-மிக்க. மொழி-புகழையுடைய. வையம்-உயர்ந்தார். நக-என்னைச்சிரிப்பதாக. செல்க - யான் செல்லக்கடவேன். என்றவாறு — யான்-எழுவாய். செல்க-பயனிலை. இதுகூடாநட்புக்குப்பொருந்தினபடியென்னெனிலிருவரும்புணையறக்கலந்து நட்புச்செய்தாலிவனின்னபடிமிடிப்பட்டால்யானின்னபடியே செய்யக்கடவேனென்றுசொல்விக்காட்டுதனட்புக்குப் போதாதாகையாற் கூடாநட்பிலேசேர்க்கப்பட்டதாம். இனையரிவைமொக்கின்னம் யாமென்றுபூவினையினும்புல்லென்னுநட்பு.

இதன்கருத்து.

என்னெடு நட்டானெனுவனுக்குச் செல்லாமை வந்துற்ற பொழுதுவிரைந்தெனதரியவுயிரை நட்டான்றன்கையின்கட் கொடேனுயிற் றன்னெடுநட்டான்காவன்மனையாளைக் காவன் மிதான்செல்லுநரகத்திற்றண்ணெடும்புகழையுடையவுயர்ந் தாரிகழயான்செல்லக்கடவேனென்பதாம்..... ... (அ)

ஆன்படுநெய்பெய்கலனுள தகளோந்து..... ... ... *
வேம்படுநெய்பெய்தனைத்தோ-தேம்படு..... .. *
நல்வரைநாடநயமுணர்வார்நண்பொரீஇப்... ..... *
புல்லறிவினொடுநட்ப..... *

இதன்பதப்பொருள்.

தேம்-தேன். படு-படுகின்ற. நல்-நல்ல. வரைநாட-மலைநாடனே. நயம்-நன்மையை. உணர்வார்-அறிவாரோடு. நட்பு-கொண்டநட்பை. ஒரீஇ-விட்டு. புல்-புல்லிய. அறிவினொடு-அறிவினையுடையாரோடு. நட்பு-கொண்டதொடர்ச்சி. ஆன்-பசுவினுல். படு-உண்டான. நெய் - நெய்யை. பெய்-வார்த்திருந்த. கலனுள் - கலசத்தினுள்ளே. அது-அந்நெய்யை. கள நீந்து நீக்கி. வேம்படு-வேம்பினுண்டாகிய. நெய்-நெய்யை. பெய்தனைத்து-பெய்துவைத்தாற்போலும். என்றவாறு. நட்பு-எழுவாய். அனைத்து-பயனிலை. அதோ-அசைநிலை.

இதன்கருத்து.

தேம்படுநல்வரைநாடனே நன்மையறிவாரோடுகொண்ட நட்பைநீக்கிப் புல்லறிவினையுடையாரோடுகொள்ளுநட்பாவி னுண்டாகியநெய்பெய்கலனுள்ளேயந்நெய்யைநீக்கி வேம்பி னெய்யைப்பெய்தாற்போலுமென்பதாம்..... (கூ)

உருவிற்கமைந்தான்கணூராண்மையின்மை..... *
பருகற்கமைந்தபானீரளாயற்றே..... .... *
தெரிவுடையார்தீயினைத்தராருதலகம்..... ..... *
விரிபெடையோடாடிவிட்டற்று..... *

இதன்பதப்பொருள்.

உருவிற்கு-வடிவிற்கு. அமைந்தான்கண்-அமைதியுடையவனிடத்து. ஊராண்மை-ஒப்புரவு. இன்மை-இல்லாமை. பரு

உரு-ம். அதிகாரம்.

அறிவுடைமை.

கர்கு-குடித்தற்கு. அமைந்த-அமைந்திருக்கின்ற. பால்-பாலி
லே. நீர் - நீரை. அளாயற்று - கலந்தாற்போலும். தெரிவுடை
யார்-அறிவுடையார். தீயினத்தர்-தீயவினத்தையுடையர். ஆகு
தல்-ஆதல். நாகம்-நாகமான து. விரி-விரியனுடைய. பெடை
யோடு-பெடையுடனே. ஆடிவிட்டற்று-கூடிப்புணர்ந்ததே
டொக்கும் எ ற வாறு.—இன்மை - எழுவாய். அளாயற்று-
பயனில. ஆ தல்-எழுவாய். ஆடிவிட்டற்று-பயனில. நாகம்
விரி பெடையோடாடிவிட்டற் றன்பது - நாகம்விரியன் பெ
டையொடுபுணர்ந்துயிரைவிட்ட அத்தன்மைத்து.

இதன்கருத்து.

வடிவிற்கமைவுடையான்மாட்டொப்புரவில்லாமைபருகற்
கமைந்தபாலின்கணீரைப்பெய்தாற்போலுமனத்தின்கணரா
யிவினையுடையார் தீயவினத்தராதல்படநாகம்விரியன்பெடை
யொடுபுணர்ந்தாற்போலவிடும்பையைத்தருமென்பதாம்(ய)

கூடாநட்புமுற்றிற்று.

ஆ அதிகாரம்-உசு-இ. வெண்பா... (உசுய)

அறிவுடைமை.

அறிவு - அறிவை. உடைமை - உடைத்தாயிருக்குந்தன்மை.
அஃதாவது-இயற்கையறிவானுஞ்செயற்கையறிவானும்அறம்
பொருளின்பம்வீடென்னு நான்கினையுநூல் சொன்னமுறை
மையிலேயறிந்தறிவுக்குத்தக்க வொழுகிமறுமைக்குறுதியான
காரியங்களைத்துணிந்தறிதலுமுலகவற்கையறிந்துலகத்துக்
குத்தக்கதாகவொழுகலுமாம்.

பகைவர்பணிவிடநோக்கித்தகவுடையார்..... *
தாமேயுணர்ந்தலைச்செல்லார்-காமுறு..... *
யிளம்பிறையாயகதிர்நிங்களைச்சேரா..... *
தணங்குருத்தூட்டினா..... *

அறிவுடைமை.

எளிமை

இதன்பதப்பொருள்.

பகைவர்-பகைஞர். பண்விடம்-தளர்ந்தவிடம். நோக்கி-பார்த்து. தகவுடையார்-தகுதியுடையார். தாமேயும்-தாங்கடாமே. நாணி-அதற்குநாணுகலுற்று. தலைச்செல்லார். அவையழிப்பதாகப்படையெடுத்தவ்விடத்துச்செல்லார். காணுப்-பாராய். இளம்-இளைய. பிறையாயக்கால்-பிறையானகாலத்து. திங்களை-அந்தப்பிறையை. சேராது-அடையாது. அணங்கு-பிறிதொன்றிலுவருந்துதற்கு. அரும்-அரிய. துப்பின்-வலியினையுடைய. அரா-பாம்பு. அதுபோல. என்றவாறு.—தகவுடையார்-எழுவாய். செல்லார்-பயனிலை.

இதன்கருத்து.

பகைவர்தளர்ந்தவிடநோக்கித்தகுதியுடையார் தாமேயுநாணியப்பகைவர்மேற்செல்லார் திங்களிளம்பிறையாயகாலத்துச்சென்றடர்க்கச்சேராது பிறிதொன்றிலுவருந்துதற்கரியவலியினையுடையநாகமதுபோலவென்பதாம்..... ..... (க)

நளிகடற்றண்சேர்ப்பநல்கூர்ந்தமக்கட்... .... ❋
கணிகலமாவதடக்கம்-பணிவில்சீர்... .... ❋
மாத்திரையின்றிநடக்குமேல்வாழ்மூர்... ... ... ❋
கோத்திரங்கூறப்படும்.... .... ❋

இதன்பதப்பொருள்.

நளி-பெரிய. தண்-குளிர்ந்த. கடற்சேர்ப்ப-கடற்சேர்ப்பையுடையவனே. நல்கூர்ந்த-வறுமையுற்ற. மக்கட்கு-மனிதர்க்கு. அணிகலமாவது-ஆபரணமாவது. அடக்கம்-அடங்கியொழுகுதல். பணிவில்-ஒருபொழுதின்கண்ணுமடக்கமில்லாத. சீர்-சீர்மையினையுடைய. மாத்திரையின்றி-அளவினைக்கடந்து. நடக்குமேல்-ஒழுகுவனுகில். வாழும்-தான்வாழும். ஊர்-ஊரினுள்ளாராலே. கோத்திரம்-தன்குடி. கூறப்படும்-பழிக்கப்படுவன். என்றவாறு.—அணிகலம்-எழுவாய். அடக்கம்-பயனிலை. ஊராலே-கோத்திரம்-கூறப்படும்-இதுகருமனிப்புணர்வு.

இதன்கருத்து.

பெருங்கடற்றண்சேர்ப்பனேவறுமையுடைய மக்கட்கணியுங்கலமாவதடக்கமுடைமை தாழ்வில்லாத சீர்மையையுடைய

அறிவுடைமை.

வளவினைக்கடந்தொழுகுவலுயின்முன்வாழுஞானே தன்பிற
ப்புக்கூறப்படுவனென்பதாம்... .... (உ)

எந்நிலத்துவித்திடினுங்காஞ்சிரங்காழ்தெங்காகா .. ❋
தென்னுட்டவருஞ்சுவர்க்கம்புகுதலாற் .... ❋
றன்னுறீமுகுமறுமைவடதிசையுங் .... ❋
கொன்னுளர்சாலப்பலர்..... .... ❋

இதன்பதப்பொருள்.

எந்நிலத்து-எல்லாநன்னிலத்திலே. வித்திடினும்-விதைப்பி
னும்.காஞ்சிரம்-எட்டியினது. காழ்-விதை. தெங்காகா-தெ
ன்னைமரமாகாது. தென்னுட்டவரும்-தெற்கின்கண்ணேபிறந்
தவருஞ்சிலர்நல்லறஞ்செய்து. சுவர்க்கம் - தெய்வலோகம்.
புகுதல்-புகுவர். வடதிசையும்-வடக்கின்கண்ணே பிறந்தாரு
ந்தமக்குறுதியாகியபயனைக்கொள்ளாமல். கொன்னுளர்-நர
கத்திலேவிழுவாரும். சால-மிகவும். பலர்-பலராதலால். தன்-
தன்னுடைய. ஆற்றின் - அறிவினதுதெறியானே. மறுமை-
அத்துணைமறுபிறப்பு. ஆகும் - ஆம். என்றவாறு.—ஆல்-அ
சைநிலை. மறுமை-எழுவாய். ஆகும்-பயனிலை.

இதன்கருத்து.

எல்லாநன்னிலத்துவித்திடினுங்காஞ்சிரம்விதைதென்னைமர
மாகாதுதென்றிசைப்பிறந்தாருஞ் சிலர்நல்லறஞ்செய்துசுவர்
க்கம்புகுவர்வடதிசைப்பிறந்து தமக்குறுதன்மைசெய்துபயன்
கொள்ளாதுபோவாரும்பலராதலாற்றனதறிவினது தெறியா
னேயாமத்துணைமறுமையென்பதாம்..... ..... (ஈ)

வேம்பினிலையுட்கனியினும்வாழைதன்..... ❋
நீஞ்சுவையாதுந்திரியாதா-டாங்கே..... .... ❋
யினுந்தீதெனினுமியல்புடையார்கேண்மை... ..... ❋
மனந்தீதாம்பக்கமரிது..... ❋

இதன்பதப்பொருள்.

வேம்பின்-வேம்பினுடைய. இலையுள் - இலையிலே. வாழை-
வாழை. கனியினும்-பழுப்பினும். தன் - தன்னுடைய. தீம்-
இனிய. சுவை-மதுரம். யாதும்-எவ்வளவும். திரியாது - வே

றுபடாது. ஆங்கு - அதுபோல. இனம் - தம்மைச்சேர்ந்தவினம். நீதெனினும் - நீதாயினும். இயல்புடையார் - பண்புடையார். கேண்மை - கெழுமுதல். மனம் - மனது. நீதாம் - நீதாகும். பக்கம் - நிறம். அரிது - அருமை. என்றவாறு.—பக்கம் - எழுவாய். அரிது - பயனிலை. ஆம் - ஏகாரம் - அசைநிலைகள்.

இதன்கருத்து.

வேம்பினிலையுள்வாழைகனிந்ததாயினுந் தனதினியசுவையாதும்வேறுபடாததுபோலத்தம்மைச்சேர்ந்தவினந்தீதாயினுமறிவுடையார்மனந்தீதாந்திறமரிதென்பதாம் ... . (சு)

கடல்சார்ந்துமின்னீர்பிறக்குமலைசார்ந்து... ... .. *
மூப்பீண்டுவரிபிறத்தலாற்றதீத..... .... *
மினத்தனையரல்லதெறிகடற்றண்சேர்ப்ப..... *
மனத்தனையர்மக்களென்பார்..... ... . *

இதன்பதப்பொருள்.

கடல்-சமுத்திரம். சார்ந்தும்-சார்ந்தவிடத்தும். இன்-இனிய. நீர்-நீரானது. பிறக்கும்-உண்டாம். மலை - வரை. சார்ந்தும்-சார்ந்தவிடத்தும். உப்பு-உப்பு. ஈண்டு - மிக்க. உவரி-உவரிநீர். பிறத்தலால் - தோன்றுமதனால். மக்களென்பார்-மக்களாவார். தத்தம்-தந்தம். இனத்து - இனங்கினவினத்தின். அனையரல்லர்-தன்மையரல்லர். எறி-கைகளையெறியுந்திரைகளையுடைய. தண்-குளிர்ந்த. கடற்சேர்ப்ப-கடற்சேர்ப்பனே. மனத்து-மனத்தின். அனையர் - தன்மையராவர். என்றவாறு.—மக்களென்பார்-எழுவாய். மனத்தனையர் - பயனிலை. இதுமனத்தான் மறுவிலரோனுமென்ற பாட்டுக்கு மலைவாகாதோவெனின்மலைவாவதாகமதனூலுக்காயிருக்குமிஃதுலகநூலானநாலடிநிருவள்ளுவப்பயன்மூதலான நூல்களறம்பொருளின்பமூன்றினையுந்திருந்தச்சொல்லி வீடுபேற்றையறிவிப்பிக்கவேண்டுகையிலுலகத்தாக்கியதீகையான வேதுக்களுங்குணங்களுமறிவுமறியாமையுமாதலிற்குற்றங்களையுங்குணங்களையுமொரோவதிகாரமாகவிட்டுவிரித்துரைத்து நல்வழிப்படுத்தவேண்டுதலினுநல்வினஞ்சேர்தலுக்குதீதகற்சியாகச்சொல்லித்தீயவினத்தைச்சேர்தலால் வருந்துன்பத்தையறிவித்திப்பொழுதறிவுடைமைக்குத்தகச்சொன்னார்.

அறிவுடைமை.

இதன்கருத்து.

எறிகடற்றண்சேர்ப்பனே கடல்சார்ந்தலிடத்து மினியநீர் தோன்றுமலைசார்ந்தவிடத்துமுப்புமிக்கவுவரி நீர்தோன்றுமை தலுன்மக்களாவார்தத்தமினதத்தின்றன்மையரல்லர் மனத்தின் றன்மையராவதொன்பதாம்..... .... (கூ)

பராஅரைப்புன்னைபடுகடற்றண்சேர்ப்ப..... *
வொராஅதுமொட்டலுஞ்செய்பவோநல்ல..... *
மருஉச்செய்தியார்மாட்டுந்தங்குமனத்தார்..... *
விராஅய்ச்செய்யாமைநன்று... ... . *

இதன்பதப்பொருள்.

பராஅ-பரிய. அரை-அரையினையுடைய. புன்னை-புன்னை மரத்தால். படு-சிறந்த. தண்-குளிர்ந்த. கடற்சேர்ப்ப-கடற் கரையையுடையவனே. நல்ல-நல்ல. மருஉ-மருவிய. செய்தி யார்மாட்டும்-செய்கையுடையாரிடத்தும். ஒராஅலும்-ஒருகா னீங்குதலும். ஒட்டலும்-ஒருகாற்கூடுதலும். செய்பவோ-செய்யக்கடவோ. தங்கும்-தங்கின. மனத்தார்-மனத்தினையு டையவர். விராஅய்-அதிலொருவருடனேவிரவி. செய்யாமை-நட்புச்செய்யாதிருத்தலே. நன்று-நன்மை. என்றவாறு.— செய்யாமை-எழுவாய். நன்று-பயனிலை.

இதன்கருத்து.

பரியவரையினையுடையபுன்னை படுகடற்றண் சேர்ப்பனே மிக்கவினிய செய்கை யுடையார் மாட்டுங்கொண்ட நட்பினை யொருகாலீங்குதலுமொருகாற்புணர்தலுஞ்செய்வாருளரோ நிலைபெற்றொருபெற்றியேநின்றமனத்தார் புணர்தலையுநீங்கு தலையுங்கலந்துசெய்யாமைநன்றென்பதாம்..... (ஈ)

உணரவுணருமுணர்வுடையாரைப்..... ... . *
புணரப்புணருமாமின்பம்-புணரிற் .... *
றெறியத்தெரியுந்தெரிவிலாதாரைப்..... ... . *
பிரியப்பிரியுமாநோய்..... .... *

இதன்பதப்பொருள்.

உணர-பிறரறிவிக்க. உணரும்-அறியும். உணர்வுடையா ரை-அறிவுடையோரை. புணர-நட்புச்செய்யவே. இன்பம்-

இன்பமும். புணரும்-பொருந்தும். தெரிய-அறிவிக்கவே தெரியும்-ஆராயும். தெரிவு-ஆராய்ச்சி. இலாதானை-இல்லாதானை. புணரில்-நட்புச்செய்தபின்னர். பிரிய-அவனைவிட்டுநீங்கவே. நேராய்-அதனுல்வருந்துன்பங்களும். பிரியும்-நீங்கும். என்றவாறு.—இன்பம்-எழுவாய். புணரும்-பயனிலை. நேராய்-எழுவாய். பிரியும்-பயனிலை. ஆம்-இரண்டும்-அசைநிலை.

இதன்கருத்து.

பிறரறிவிக்க வறியுமறிவினையுடையானைப் பொருந்தவேயின்பம்பொருந்தும் அறிவிக்கவாராயுமாராய்ச்சியில்லாதானைவிட்டுநீங்கவேயதனுல்வருந்துன்பங்களுநீங்குமென்பதாம்(எ)

நன்னிலைக்கட்டன்னேநிறுப்பானுந்தன்னே ... . *
நிலைகலக்கிக்கீழிடுவானு-நிலையினு..... ... . *
மேன்மேலுயர்த்துநிறுப்பானுந்தன்னேத்... ... ... *
தலையாகச்செய்வானுந்தான் .... *

இதன்பதப்பொருள்.

நல்-நல்ல. நிலைக்கண்-நிலையினிடத்து. தன்னே-தன்னை. நிறுப்பானும்-நிறுத்திக்கொள்வானும். தன்னே-தன்னை. நிலை-அந்நிலையை. கலக்கி-கெடுத்து. கீழிடுவானும்-கீழாக்கிக்கொள்பவனும். நிலையினும்-தான்முன்புநின்றநிலையினும். மேன்மேல்-தன்னைமேன்மேலும். உயர்த்து-உயரப்பண்ணி. நிறுப்பானும்-நிறுத்திக்கொள்வானும். தன்னை-தன்னை. தலையாக-தலைமையுண்டாம்படி. செய்வானும்-செய்துகொள்வானும். தான்-தானை. என்றவாறு.—தான்-எழுவாய். நிறுப்பான்முதலிய-பயனிலை.

இதன்கருத்து.

நல்லநிலையின்கட்டன்னைநிறுத்துவானுந்தன்னையந்நிலையைக்கலக்கிக்கீழ்மையின்கணிடுவானுமந்நிலைமையின்கண்மேலாகவுமுயர்த்துநிறுப்பானுந் தன்னைத்தலையாகச்செய்வானுந்தானென்பதாம்..... ..... (அ)

அறிவுடைமை.

கருமவரிசையாற்கல்லாதார்பின்னும்..... ... . *
பெருமையுடையாருஞ்சேற-லருமரபி..... *
றேதைமரற்றுமொலிகடற்றண்சேர்ப்ப..... .. ... *
பேதைமையன்றதறிவு..... ..... *

இதன்பதப்பொருள்.

கருமவரிசையால் - தமக்கொருகருமத்தைச்செய்துகொள் ளுமுறைமையால். கல்லாதார்-நூல்களைக்கல்லாதவர். பின்னு ம் - பிற்பேயும். பெருமை - பெரியவறிவினை. உடையாரும்- உடையவரும். சேறல்-செல்லுதல். அரும்-பெறுதற்கரிய. மர பின்-மரபினையுடைய. ஏதம்-தினைக்கள். அரற்றும்-ஆரவாரிக்கு ம். ஒலி-ஒலியையுடைய. தண் - குளிர்ந்த. கடற்சேர்ப்ப-கடற் சேர்ப்பனே. அது-அஃது. பேதைமையன்று - அறியாமைய ல்ல. அறிவு-அறிவுடைமை. என்றவாறு.—அது-எழுவாய். அறி வு-பயனிலை.

இதன்கருத்து.

அரியமரபினையுடையவேதமரற்றுமொலிகடற்றண்சேர்ப் பனேதமக்கொருகருமத்தைச்செய்து முடிக்குமுறைமையா லறிவில்லாதார்பின்னேயும் பெரியவறிவினையுடையாருஞ் சே றலஃதறிவில்லாமையன்றறிவுடைமையென்பதாம்..... (கூ)

கருமமுமூள்படாப்போகமுந்துவ்வாத்.. ..... *
தருமமுந்தக்கார்க்கேசெய்யா-வொருநிலையே..... *
மூட்டின்றிமூன்றுமுடியுமேலஃதென்ப... ..... *
பட்டினம்பெற்றகலம்..... *

இதன்பதப்பொருள்.

கருமமும் - பொருள்வருவாயாகியகாரியங்களும். உள்ப டா-உட்பட்டு. போகமும்-போகத்தையும். துவ்வா-அநுபவி த்து. தருமமும்-தருமத்தையும். தக்கார்க்கே-தகுதியுடையார் க்கே. செய்யா-செய்து. ஒருநிலையே-ஒருபிறப்பின்கண்ணே. மூட்டின்று-இடையூறின்றி. இம்மூன்றும் - இம்மூன்றுசெய் கையும். முடியுமேல்-ஒருவற்குக்கைகூடுமாயின். அஃது-அம் முடிபு. பட்டினம்-போய்வாணிகஞ்செய்துமீண்டுதன்பட்டி னத்தை. பெற்ற-சேர்ந்த. கலமென்ப-மரக்கலம்போலத்தனை

அறிவின்மை.

க்குப்பயன்படுமென்று சொல்லுவர். என்றவாறு.—அஃது-
எழுவாய். கலமென்ப-பயனிலை. இஃது அறிவுடைமையான
தெப்படியென்னிலிஃதொருவற்குவாய்க்குமாகிலென்னுமை
யத்திலுவிது மூன்றுகாரியமுமறுபிறப்புக்குவாய்க்கும்பொ
ழுதிப்பிறப்பிலொருவனேரறத்தைச்செய்யுங் காலத்ததற்கோ
ரிடையூறுவாராதற்குத்தளராமனின்றதனை நிறைவேறச்செய்
யும்பொழுதைக்கறிவென்கிறதேயதற்குக்கருவியாதலிலிவ்வள
வுகொண்டறிவுடைமையிலேசேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

பொருள்வருவாயிலாகுங் கருமமுட்படச்செய்து போகத்
தையநுகர்ந்தறத்தையுந்தகுதியுடையார்க்கே செய்தொருபிற
ப்பின்கண்முட்டின்றியொருவன் மாட்டுளவாய் முடியினும்மு
டிபுபட்டனத்தைச்சேர்ந்த கலம்போலத்தனக்குப்பயன்படு
மென்றுசொல்லுவனென்பதாம்..... ... . (ம)

அறிவுடைமைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-உரை-இ. வெண்பா... (உரை)

அறிவின்மை.

அறிவு - அறிவானது. இன்மை - இல்லாதிருக்குந்தன்மை.
அஃதாவது-தன்னிடத்தறிவின்மையைக்கண்டுகிறத்தவங்கு
ரவர்முதலாயினுரறிவுறுத்தின காரியங்களையுட்கொள்ளாமலு
தாசனம்பண்ணி நூல்சொன்னவற்றையுமையமாக்கியதனையு
மிகழ்ந்துலகவியற்கையான முறைமையும்விட்டுத்தன்னியா
மைக்கேற்றபடியொழுகியல்லாராலுமிகழப்படுதலுமறி
மைக்குறுதியல்லாமைசெயிதலுமாம்.

நுண்ணுணர்வின்மைவறுமையஃதுடைமை..... *
பண்ணப்பணைத்தபெருஞ்செல்வ-மெண்ணுங்காற் . *
பெண்ணவாயாணிழந்தபேடியணியாளோ... ..... *
கண்ணவாத்தக்ககலம்..... ... ... *

அறிவின்மை.

இதன்பதப்பொருள்.

வறுமை - ஒருவற்குத்தரித்திரமாவது. துன்ன - துன்னிய. உணர்வு-அறிவு. இன்மை - இல்லாமையே. பண்ண - செய்ய. பணைத்த-கிளைத்த. பெரும்-பெரிய. செல்வம்-ஒருவற்குச்செல்வமாவது. அஃது-அவ்வறிவை. உடைமை-உடைத்தாயிருக்குந்தன்மை. எண்ணுங்கால்-ஆராயுங்காலத்து. பெண்-பெண்டன்மையை. அவாய்-அவாவி. ஆண்-ஆண்டன்மையை. இழந்த-நீங்கிய. பேடி-பேடியானவள். கண்-கண்ணுக்கு. அவாத்தக்க-விரும்பத்தக்க. கலம்-ஆபரணங்களே. அணியாளோ-பூணாளோ. என்றவாறு.—உணர்வின்மை-எழுவாய். வறுமை-பயனிலை. உணர்வுடைமை-எழுவாய். செல்வம்-பயனிலை.

இதன்கருத்து.

ஒருவற்குவறுமைதுன்னிய வறிவின்மை மிகப்பணைத்தபெருஞ்செல்வந்துன்னியவறிவுடைமையாராயுங்காற்பெண்டன்மையையவாவுமவாவாலேயாண்டன்மையையிழந்தபேடிகண்ணல்லவாவத்தக்கவணிகலங்களேயணியாளோவென்பதாம்(க

பல்லான்றகேள்விப்பயனுணர்வார்பாடழிந் ... ... *
தல்லலுழப்பதறிதிரோ-தொல்சிறப்பி..... *
றுவினகிழத்தியுறைதலாற்சேராளே..... *
பூவின்கிழத்திபுலத்து..... *

இதன்பதப்பொருள்.

பல்-பலநூல்களையும். ஆன்ற-கற்றமைந்த. கேள்வி-கேள்வியால்வரும். பயன்-பயனே. உணர்வார் - அறியுமவர். பாடு-தம்பெருமை. அழிந்து-சிதைந்து. அல்லல் - துன்பம். உழப்பது - உறுதற்குக்காரணம். அறிதிரோ - அறிந்தீரில்லையோ. தொல்-பழைய. சிறப்பின் - சிறப்பினையுடைய. நாவின்கிழத்தி-நாமகள். உறைதலால்-அடைதலினாலே. பூவின்கிழத்தி-திருமகள். புலத்து-பிணங்கி. சேராள்-அடையாள். என்றவாறு.—பூவின்கிழத்தி-எழுவாய். சேராள்-பயனிலை. ஏகாரம் - அசைநிலை. அறிதிரோவென்பது உம்பாடம். இஃதறிவின்மையானதெப்படியென்னின் மூற்சனனத்திலேயிவர்கல்விக்குநீதவம்பண்ணிச்செல்வத்திற்குத்தவம்பண்ணினரில்லையாதலி லிப்பொ

மூதிவரறிவின்மையைக்கழறி யிவையிரண்டிற்கும் புண்ணியஞ் செய்யத்தக்கவறிவுடைமைவேண்டுமென்பது தோன்றவறிவின்மையிலேசேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

பலவான்றமைந்த கேள்வியான்வரும்பயனை யுணர்வார்தம் பெருமையழிந்தல்லலுழப்பதற்குக்காரணமறிந்தீரில்லையோ பழையசிறப்பினையுடைய நாமகளுறைதலாற் பூவின்கிழத்தியுழிச்சேசாளென்பதாம்..... ..... (உ)

கல்லென்றுதந்தைகழறவத்னையோர்..... ..... *
சொல்லென்றுகொள்ளாதிகழ்ந்தவன்-மெல்ல... ... *
வெழுதீதோலபல்லார்முன்னீட்டவிளியா .... *
வழுக்கோலக்கொண்டுவிடும்..... *

இதன்பதப்பொருள்.

தந்தை-தன்பிதாவானவன். கல்லென்று - நூல்களோக்கற்க வேண்டுமென்று. கழற-இடித்துச்சொல்ல. அதனை-அச்சொல்லை. ஓர் - ஒரு. சொல்லென்று - உறுதியானசொல்லென்று. கொள்ளாது -உட்கொள்ளாமல். இகழ்ந்தவன்-இகழ்ந்திருந்தவன். மெல்ல-மெல்ல. எழுதீதோலை-ஒருவனெழுதினவோலையைவாசியுமென்று. பல்லார்-நல்லோர்பலர். முன்-முன்பே. நீட்ட-கொடுக்க. விளியா-அதற்குவெகுண்டு. வழு-அடிப்படாகத்தவறுசெய்யும். கோலை-கோலை. கொண்டுவிடும்-எடுத்துக்கொள்வன். என்றவாறு.—இகழ்ந்தவன்-எழுவாய். கொண்டுவிடும்-பயனிலை. கோலை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

தந்தைநூல்களோக்கற்பாயென்றிடித்துச்சொல்லவதனையுறுதியாவதொருசொல்லென்றுகொள்ளாதிளமைக்காலத்திகழ்ந்தவன்பலர்முன்னேயொருவனெழுதீதோலையைமெல்லநீட்டவவன்வெகுண்டுமற்றவனிகழ்ந்தானென்றவனையடிப்பதாக்கவற்றினைச்செய்யுங்கோலைக்கொண்டுதயார்செய்துவிடுவனென்பதாம்..... ..... (ஊ)

கல்லாதுநீண்டவொருவனுலகத்து .... *
நல்லறிவாளரிடைப்புக்கு-மெல்ல..... .... *
விருப்பினுநாயிருந்தற்றேயிரா அ..... .... *
துரைப்பினுநாய்குரைத்தற்று .... *

இதன்பதப்பொருள்.

கல்லாது - கல்வியைக்கற்காது. நீண்ட-வளர்ந்த. ஒருவன்-ஒருத்தன். உலகத்து - உலகத்தில். நல்-நல்ல. அறிவாளர்-அறிவினையுடையார். இடை-நடுவே. புக்கு-புகுந்து. மெல்ல-மெல்ல. இருப்பினும்-இருந்தாலுயினும். நாயிருந்தற்று. அவர்கண்ணுக்கிவனுயிருந்தாற்போலும். இராது - இராமல். உரைப்பினும் - உரைத்தாலுயினும். நாய்குரைத்தற்று - நாய்குரைத்தாற்போலும். என்றவாறு.—ஒருவனிருப்பு-உரைப்பு. எழுவாய். நாயிருந்தற்று - குரைத்தற்று - பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கல்லாதுடம்புவளர்ந்திய வொருவனுலகத்து நல்லறிவாளர் நடுவுட்புக்கு மெல்லவிருந்தாலுயினு நாய்புக்கிருந்தாற்போலு மிராதுரைத்தாலுயினு நாய்குரைத்தாற்போலு மென்பதாம்..... (ச)

புல்லாப்புன்கோட்டிப்புலவரிடைப்புக்குக் ... ... *
கல்லாதசொல்லுங்கடையெலாங்கற்ற ... ... *
கடாஅயினுஞ்சான்றவர்சொல்லார்பொருண்மேற் *
படாஅவிடுபாக்கறிந்து .... *

இதன்பதப்பொருள்.

புல்லா - இலக்கணத்தோடுபொருந்தாத. புன்-புல்லிய. கோட்டி-சபையைக்கொண்டிருக்கும். புலவர்-புன்புலவர். இடை-நடுவே. புக்கு - புகுந்து. கல்லாத - தான்கல்லாதனவற்றை. சொல்லும்-சொல்லிக்காட்டுவதுன். கடை-கடையானவன். எலாம்-எல்லாம். கற்ற-தாங்கற்றவற்றை. கடாயினும்-பிறர்கேட்பினும். பொருண்மேல் - தாஞ்சொல்லும்பொருண்மேல். படா-அவர்புத்திசாராமல். விடுபாக்கு-விடுவதனை. அறிந்து-உணர்ந்து. சான்றவர்-அமைந்தோர். சொல்லார் - உரையார். என்றவாறு.—கடை-எழுவாய். சொல்லும் - பயனிலை. கல்லா

தனவற்றை-செயப்படுபொருள். சான்றவர்-எழுவாய்-சொல்லார்-பயனிலை. கற்றவற்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

இலக்கணத்தோடு பொருந்தாதபுல்லிய கோட்டியைக்கொண்டிருக்கும்புன்புலவரிடைப்புக்குக் கல்லாதனவற்றைச்சொல்லிக்காட்டுவான் கடையானவன் முன்கற்றவற்றை யெல்லாம்பிறர்கடாயினும்பொருண்மேலவரிடத்திடாது விடுவதனையறிந்தமைந்தோர் சொல்லாதென்பதாம்..... .... (நு)

கற்றறிந்தநாவினர்சொல்லார்தஞ்சோர்வஞ்சி .. ... ✻
மற்றையராவார்பகர்வர்பழனியின்மேல்... .... ✻
வற்றியவாலைகலகலக்குமெஞ்ஞான்றும்..... ✻
பச்சோலைக்கில்லையாலி..... ✻

இதன்பதப்பொருள்.

கற்று-நல்லநூல்களைக்கற்று. அறிந்த-உணர்ந்த. நாவினர்-நாவையுடையவர். தம்-தமது. சோர்வு-சொற்சோர்வுக்கு. அஞ்சி-பயந்து. சொல்லார்-ஒன்றினையுஞ்சொல்லார். மற்றையராவார்-கல்லாதவர். பகர்வர்-ஆராயாதுசொல்லுவர்.தெளிபோலவெண்ணில். பழனியின்மேல்-பழனமரத்தின்மேல். வற்றிய-உலர்ந்த. ஓலை-ஓலை. கலகலக்கும்-கலகலவென்றொலிக்கும். எஞ்ஞான்றும்-எப்பொழுதும். பச்சோலை-பசியவோலைக்கு. ஒலி-சத்தம். இல்லை-இலலை. என்றவாறு.—நாவினர்-எழுவாய். சொல்லார்-பயனிலை. மற்றையராவார்-எழுவாய். பகர்வர்-பயனிலை. கலகலக்கும்-ஈரடுக்கொலிக்குறிப்பு.

இதன்கருத்து.

நல்லநூல்களைக்கற்றுணர்ந்தநாவினர்தமதுசொற்சோர்வுபடுதலையஞ்சியொன்றினையுஞ்சொல்லார் கற்றறியாதமற்றையாராராயாதுசொல்லுவர்தெளிபோலவெண்ணிற் பழனியின்மேலுலர்ந்தவோலை கலகலவென்றொலிக்கும் பச்சோலைக்கெஞ்ஞான்றுமொலியில்லையென்பதாம் .... (நு)

பன்றிக்கூழ்ப்பதரிற்றேமாவடித்தற்று..... ✻
னன்றறியாமாந்தர்க்கறத்தாறுரைக்குங்காற்... ... ✻
குன்றின்மேற்கொட்டுந்தறிபோற்றலைதகர்த்து .... ✻
சென்றிசையாவாகுஞ்செவிக்கு .... ✻

அறிவின்மை.

இதன்பதப்பொருள்.

பன்றி-பன்றிக்கு-கூழ்-கூழ்வார்க்கிற. பத்தரில்-தொட்டியிலே. தேமா-தேமாங்கனியை. வடித்தற்று-பிழிந்தாற்போலும். நன்று-நன்றி. அறியா-அறியாத. மாந்தர்க்கு-மனிதர்க்கு. அறத்து-அறத்தினது. ஆறு-நெறியை. உரைக்குங்கால்-சொலலுங்காலத்து. குன்றின்மேல்-மலைமேலே. கொட்டும்-அடிக்கும். தறிபோல்-கட்டுத்தறிபோல. தலை-அவ்வறத்தாறு தலையானது. தகர்ந்து-சிதறி. செவிக்கு-காதிக்கு. சென்று-போய். இசையாவாகும்-ஏறுவாகும். என்றவாறு.---அறத்தாறு-எழுவாய். இசையாவாகும்-பயனிலை. ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

பன்றிக்குக் கூழ்வார்க்கும் பத்தரிற்கண்ணே தேமாங்கனியைவடித்தாற்போலுநல்றறியாதமாந்தர்க்கறநெறியையுரைக்கும்பொழுது மலைமேற்கொட்டுந்தறிபோல வவ்வறத்தாறு தலைதகர்ந்து செவிக்குச்சென்று பொருந்தாவாகு மென்பதாம்..... (எ)

பாலாற்கழீஇப்பலநாளுணக்கினும்... ... ... *
வாலிதாம்பக்கமிருந்தைக்கிருந்தன்று .... *
கோலாற்கடாஅய்க்குறினும்புகலொல்லா..... *
நோலாவுடம்பிற்கறிவு..... ..... *

இதன்பதப்பொருள்.

பலநாள்-பலநாளும். பாலால்-பாலாலே. கழீஇ-கழுவி. உணக்கினும்-உணத்தினாலும். வாலிதாம்-வெள்ளிதாகிய. பக்கம்-நிறம். இருந்தைக்கு-காக்கை. இருந்தன்று-உண்டாகாததுபோல. கோலால்-கோலாலே. கடாஅய்-அதட்டி. குறினும்-கூறினாலும். நோலா-மூற்பிறப்பிற்றவஞ்செய்யாத. உடம்பிற்கு-உடம்புக்கு. அறிவு-உணர்வு. புகலொல்லா-புகமாட்டாதென்றவாறு.---அறிவு-எழுவாய். புகலொல்லா-பயனிலை. குறினுமென்பது-செய்யுள்விகாரம்.

இதன்கருத்து.

பலநாளும்பாலாற்கழுவியுணத்தினும் வெள்ளியநிறங்காக்கை யிருந்ததில்லையதுபோலக் கோலாற்கடாஅய்க்கூறினுநோலாவுடம்பிற்கறிவுபுகமாட்டாதென்பதாம்..... .... (அ)

பொழிந்தினி தாநறி னும்பூமிசை தல்செல்லா ..... *
திழிந்தவைகா முறூஉமீப்போ-லிழிந்தவை..... *
தாங்கலந்தநெஞ்சிலுர்க்கெண் ணுதற்கார்வாய்த் . *
தேன்கலந்தசேற்றகசொற்றேர்வு..... ... ... *

இதன்பதப்பொருள்.

பொழிந்தா-தேனைப்பொழிந்து. இனிது-இனிதாக. நாறி னும்-மணப்பினும். பூ-பூவிற்றேனை. மிசைதல்-நுகர்தல். செல்லா து. போகாது. இழிந்தவை-இழிவான துர்க்கந்தங்களை. காமுறூஉ-ஆசையுற்றுச்செல்லும். ஈப்போல்-ஈயைப்போல. இழிந்தவை-இழிந்தசெய்கைகள். கலந்த-பொருந்தியிருக்கும். நெஞ்சிலுர்க்கு-நெஞ்சினையடையார்க்கு. தக்கார்-தகுதியுடையார். வாய்-வாயில். தேன்-தேனை. கலந்த-கலந்தாற்போலும். தேற்ற - தெளிந்த. சொல் - சொற்களினுடைய. தேர்வு - ஆராய்ச்சி. எண்ணுகும்-என்னபயனைச்செய்யும். என்றவாறு.—தேர்வு-எழுவாய். என்னுகும்-பயனிலை. தாம்-அசைநிலை.

இதன்கருத்து.

தேனைப்பொழிந்தினிதாக நாறினும் பூவிற்றேனை நுகரச்செல்லாதிழிந்தவற்றைக் காதலிக்குமியற்போலவிழிந்தசெய்கைகள் கலந்தவுள்ளத்தார்க்குத்தக்கார்வாயிற் சொல்லியதேனைக்கலந்தாற்போலுந்துணிவையுடையவாராய்ச்சியென்னபயனைச்செய்யுமென்பதாம்..... ..... (கூ)

கற்றாருரைக்குங்கசடறுநுண்கேள்வி..... ..... *
பற்றுதன்னெஞ்சதைத்தலான்-மற்றுமோர்..... *
தன்போலொருவன்முகநோக்கித்தானுமோர்... ... *
புன்கோட்டிகொள்ளுமாங்கீழ் ... ... *

இதன்பதப்பொருள்.

கற்றார்-நூல்களைக்கற்றார். உரைக்கும்-சொல்லுகின்ற. கசடு-குற்றம். அறு-அறற. நுண்-நுண்ணிய. கேள்வி - சொற்களை. பற்றுது - கொள்ளாது. தன்-தன்னுடைய. நெஞ்சு-மனசானது. தைத்தலால் - ஊதித்துப்போதலால். மற்றுமோர்-பின்னையும். தன்போல் - தன்னைப்போல்வான். ஒருவன்-ஒருத்தன். முகம்-முகத்தை. நோக்கி - பார்த்து. தானுமோர்-தானு

உடைமை. அதிகாரம்.

நன்றியில்செல்வம்.

மொரு. புன்-புல்லிய. கோட்டி-சபையை. கொள்ளும்-கொண்டிருப்பன். கீழ்-கீழாயினன். என்றவாறு.—கீழ்-எழுவாய். கொள்ளும்-பயனிலை. புன்கோட்டியை-செயப்படுபொருள். ஆல்-ஓர்-ஆம்-அசைநிலைகள்.

இதன்கருத்து.

நூல்களைக்கற்றுநாலாக்குந்தன்மையற்றபுன்மையுடையசாதிகளைக்கொள்ளாமற்றன்னினஞ்சுற்றத்தாலும்மற்றுந்தன்பாலருவன் முகத்தைநோக்கித்தானும்மார்புன்கோட்டியைக்கொள்ளுவன்கீழானவனென்பதாம்..... .... (ஐ)

அறிவின்மைமூற்றிற்று.

ஆ அதிகாரம் உரை. வெண்பா... (உசுஐ)

நன்றியில்செல்வம்.

நன்றி - நன்மை. இல் - இல்லாத. செல்வம் - ஐச்சுவரியம். அஃதாவது-செல்வத்தாலுள்ளஅநுபவங்களையறியாதாரிடத்துந்தன்னுறவின்முறையார்தன்பழுறவதனைக்கண்டுகண்ணுற்றிருப்பாரிடத்துமொன்றினை வேண்டிவந்தார்க்குக்கொடாதே தன்பழுகுமாயிருப்பாரிடத்துமிரந்தச்செல்வத்தைக்கொண்டுபிறர்க்குக்கேடுசெய்வாரிடத்துநிற்குஞ்செல்வத்தினைநன்றியில்செல்வமென்றார்.

அருகலதாகிப்பலபழுத்தக்கண்ணும்... .... *
பொரிதாள்விளவினவாவல்குறுகா.. ... . *
பெரிதணியராயினும்பீடிலரார்செல்வம்... ... ... *
கருதுங்கடப்பாட்டதன்று... ..... *

இதன்பதப்பொருள்.

அருகு-தானுறையுமிடத்திற்கு. அலதாகி-அயலதாகிநின்று. பல-அநேகம். பழுத்தக்கண்ணும்-பழுத்தவிடத்தும். பொரி-பொரிந்த. தாள்-தாளினையுடைய. விளவினை-விளைவு. வா

வல்-வெளவால். குறுகா-சேராத தபோல. பெரிது-மிகவும். அணியராயினும்-அண்ணியராயினும். பீடு-பெருமை. இலார்-இல்லாதார். செல்வம்-ஐச்சுவரியம். கருதும் - நினைக்கத்தக்க. கடப்பாட்டதன்று - முறைமையையுடைத்தல்ல. என்றவாறு. —செல்வம்-எழுவாய். கருதுங்கடப்பாட்டதன்று - பயனிலை. அலகாகி - செய்யுள்விகாரம். அருகினதாகியென்பதாயிற்று பாடம்.

இதன்கருத்து.

தானுறையுமிடத்திற்கயலதாகிப்பலபழுத்தவிடத்தும்பொரிந்தகாளினையுடைய விளவினைப்பயன்கோடற்பொருட்டுவவ்வல்சென்றணுகாதுபோலத்தாமிருந்தவிடத்துக்கு மிகவுமண்ணியராயினும்பெருமையில்லாதார்செல்வம் பிறரானைச்சப்படுந்தன்மையையுடைத்தன்றென்பதாம் ... ... (க)

அள்ளிக்கொள்வன்னகுறுமுகிழ்வாயினுங் .... *
கள்ளிமேற்கைநீட்டார்சூடும்பூவன்மையாற் ... ... *
செல்வம்பெரிதுடையராயினுங்கீழ்களோ .... *
நள்ளாரறிவுடையார்..... .....*

இதன்பதப்பொருள்.

அள்ளி-அள்ளி. கொள்வன்ன-கொள்வதுபோலும். குறு-குறிய. முகிழ்வாயினும்-அரும்புகளையுடையவாயினும். சூடும்-சூடத்தகும். பூவன்மையால்-பூவல்லாமையால். கள்ளிமேல்-கள்ளியின்மேல். கை-கைகளை. நீட்டார்-நீட்டுதலைச்செய்யாரதுபோல. செல்வம்-ஐச்சுவரியம். பெரிது-மிக. உடையராயினும்-உடையராகினும். கீழ்களோ-கீழ்மக்களோ. அறிவுடையார்-அறிவினையுடையார். நள்ளார்-சேரார். என்றவாறு. —அறிவுடையார்-எழுவாய். நள்ளார்-பயனிலை. கீழ்களோ - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

அள்ளிக்கொள்ளலாம்படிசெறிந்த மொட்டினையுடையவாயினுஞ் சூடத்தகும்பூவன்மையாற் கள்ளிமேற்கை நீட்டாரதுபோலச்செல்வம்பெரிதுடையராயினும்பிறர்க்குதவாக்கீழ்களைச்சேராரறிவுடையாரென்பதாம்.... .... (உ)

மல்குதிரையகடற்கோட்டிருப்பினும்..... ..... *
வல்லூற்றுவரில்கிணற்றின்கட்சென்றுண்பர்..... *
செல்வம்பெரிதுடையராயினுஞ்சேட்சென்று..... *
நல்குவார்கட்டேநசை..... .... *

இதன்பதப்பொருள்.

மல்கு-மிக்க. திரை-அலைகளையுடைய. கடல் - சமுத்திரத்தினது. கோடு-கரையிலே. இருப்பினும்-இருந்தாராயினும். வல்-வலிதாகத்தேண்டின. உற்று-உற்றையடைத்தாய். உவர்-உப்பு. இல-இல்லாத. கிணற்றின்கண்-கிணற்றினிடத்து. சென்று-போய். உண்பர்-நீரையுண்டருளகத்தாரதுபோல. செல்வம்-தமக்கையிலிருந்தார்செல்வம். பெரிது-மிக. உடையராயினும்-உடையராயினுமவர்களைநச்சாது. சேண்-தூரத்திலே. சென்று-போயாயினும். நல்குவார்கட்டே - கொடுப்பவரிடத்திலே. நசை - ஒருவனொருவரைவேண்டுவர். என்றவாறு.—ஒருவர்-எழுவாய். வேண்டுவர்-பயனிலை. ஒன்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

மல்குதிரைகளையுடையகடற்கரையின்கண்ணிருந்தாராயினும்வல்லூற்றையுடைத்தாயிருந்த கிணற்றின்கட்சென்று நீருண்பருலகத்தாரதுபோலத் தமக்கையிலிருந்தார் செல்வம்பெரிதுடையராயினுமவர்களைநச்சாதுசேய்த்தாகச் சென்றுயினுநல்குவாரிடத்திலொருவனொன்றைவேண்டுவனென்பதாம் ...(கூ)

புணர்கட்சூழ்வையத்துப்புணையமோவேமற .... *
புணர்வுதுடையாரிருப்பபுணர்விலா ... ... *
வட்டுமவழுதுணையும்போல்வாருமவாழ்வரோ... ... *
பட்டுத்துகிலுமுடுத்து..... .... *

இதன்பதப்பொருள்.

உணர்வுதுடையார்-அறிவுடையார். இருப்ப-வறுவியராயிருப்ப. உணர்விலா-அறிவில்லாத. வட்டுமம்-பனைவட்டுமம். வழுதுணையும்-வழுதுணைக்காயும். போல்வாரும்-ஒத்தறிவியாரும். பட்டுமம்-பட்டுப்புடைவையும். துகிலும்-நலலுடைவையும். உடுத்து - உடுத்துக்கொண்டு. வாழ்வர் - வாழ்வாராதலால்.

புணர்-பொருந்தின. கடல்-சமுத்திரம். சூழ்-சூழ்ந்த. வையத்து-பூமியினிடத்துள்ளாரது. புண்ணியம் - புண்ணியமானது. வேறு - வேறுபட்டிருக்கும். என்றவாறு.—புண்ணியம்-எழுவாய். வேறு-பயனிலை. ஏகாரம்-இரண்டிடம்-ஓகாரமும்-அசைநிலைகள். வட்டென்றது-அடியுந்தலையுமில்லாதது. வழுதுணையென்றது-இலைமறைகாயுங்கொத்துமாயிருப்பது.

இதன்கருத்து.

உனர்ச்சியையுடையாரொழிய வுணர்வில்லாயவட்டிம் வழுதுணையும் போலச்சிறியாருஞ்பட்டிந்துகிலுமூடித்தாவாழ்வாரதலாற்கடல்சூழ்ந்த வையத்துள்ளாரதுபுண்ணியமறிவு முதலானவற்றோடுபொருந்தாநிற்குமென்பதாம்..... (சு)

நல்லார்நயவரிருப்பநயமிலாக் .... *
கல்லார்க்கொன்றுகியகாரணந்-தெரிலே..... ..... *
வினைப்பயனல்லதுவேறெனிங்கண்ணுய்..... ... *
நினைப்பவருவதொன்றில்..... ..... *

இதன்பதப்பொருள்.

நல்லார் - நல்லவருமாய். நயவர்-நயத்தினையுமுணரத்தக்கார். இருப்ப-வறுவியராயிருப்ப. நயமிலா - ஈரமுமிலராயி. கல்லார்க்கு-கல்வியுமிலராயிருப்பார்க்கு. ஒன்றுகிய-ஒருசெல்வமாகிய. காரணம்-காரணமென்னேயெனின். தெரிலே-பதைய. வினை-நல்வினையினது. பயனல்லது-பயனல்லாமல். நினைப்ப-வேறுவிசாரிக்க. வேல்-வேல்போலும். நெடிய-நீண்ட. கண்ணுய்-கண்ணினையுடையாய். வருவது - வரத்தக்கது. ஒன்றும்-வேருென்றும். இல்-இல்லே. என்றவாறு.— ஒன்று-எழுவாய். இல்-பயனிலை.

இதன்கருத்து.

நல்லவருமாய்நயத்தினையுமுணரத்தக்கார்வறுவியராயிருப்பவீரமுமில்லாரதிவுமில்லாராயிருக்கொருசெல்வமுண்டாகியகாரணமென்னேயெனின்முன்செய்தநல்வினைப்பயனல்லது வேறெதிங் கண்ணுயாராயும் காலவருவது வேருென்றுமில்லையென்பதாம்..... (ரு)

நாறுத்தகடேபோனன்மலர்மேற்பொற்பாவாய்.... ✻
நீறுப்திலத்துவிளியரோ-வேறுய..... ... . ✻
புன்மக்கள்பக்தம்புகுவாய்நீபொன்போலு..... ✻
நன்மக்கள்பக்கந்துறத்து..... ..... ✻

இதன்பதப்பொருள்.

நாறு-நாறுத. தகடேபோல்-புறவிதழேபோல. நன்மலர் மேல்-நல்லபொற்றுமனைமேலிருக்கும். பொற்பாவாய்-திருமகளே. பொன்போலும்-பொன்போன்ற. நல்-நல்ல. மக்கள்-மனிதர். பக்கம்-பக்கத்தை. துறத்து-கைவிட்டு. வேறுய-குணம்வேறுபட்ட. புன்-புல்லிய. மக்கள்-மனிதர். பக்கம்-இடத்தேசென்று. புகுவாய்-புகுவையாதலால். நீறுய்-பொடியாய். நிலத்து-நிலத்தின்கண்ணே. நீ-நீ. விளி-கெடுவாயாக. என்றவாறு.—நீ-எழுவாய். விளி-பயனிலை. அரோ-அசைநிலை. தகடு-அச்சவடிவு. பொற்பாவாய்-பொலிவினையுடையபாவாயென்றுமாம்.

இதன்கருத்து.

நாறுத்தகடேபோனன்மலர்மேற் பொற்பாவாய் பொன்போலுநன்மக்கள் பக்கத்தைக்கைவிட்டுவேறுய புன்மக்கள்பக்கம்புகுவையாதலாற்பிறர்க்குப்பயன்படாதுநீறுய்நிலத்தின்கண்ணேவிளிவாயாகவென்பதாம்..... .... (சு)

நயவார்கணல்குரவுநாணின்றுகொல்லோ..... ✻
பயவார்கட்செல்வம்பறம்பப்-பயின்கொல்..... ✻
வியவாய்காண்வேற்கண்ணுயிவ்விரண்டுமாங்கே..... ✻
நயவாதுநிற்குநிலை..... .... ✻

இதன்பதப்பொருள்.

நயவார்கண்-நயமுடையார்மாட்டுநிற்கும். நல்குரவு, வறுமைக்கு. நாண்-நாணம். இன்றே-இல்லையோ. பயவார்கண்-பிறர்க்குப்பயன்படாதார்மாட்டுநிற்கும். செல்வம்-செல்வமானது. பறம்பப்பயின்-உறைகாரருடையபிரிவினை. இவ்விரண்டும்-இவ்விருவரிடத்தேயும். ஆங்கே-அங்கங்கே. நயவாது-ஆராயாது. நிற்குநிலை-நிற்குநிலையை. வேல்-வேல்போலும்.

நன்றியில்செல்வம்.

கண்ணுப்-கண்ணினையுடையாய். வியவாய்-நீகோண்டாடுகின்றாயில்லை. என்றவாறு.—நீ-எழுவாய். வியவாய்-பயனிலை. நிலையை-செயப்படுபொருள். கொல்-இரண்டாம் - அசைநிலை. கான்-முன்னிலையசைநிலை. நயவார்-நேயமுடையார்.

இதன்கருத்து.

நயமுடையார்மாட்டுநிற்கும்வறுமைக்குநாணின்மேற் ஒருவற்கொன்றையுதவாதார்மாட்டுநிற்குஞ்செல்வமுறைகாரராற் பிணிக்கப்பட்டபிதிரேனு இவ்விசண்டுமங்கங்கேயாராயாதுநிற்குநிலையைவேற்கண்ணுப்நீவியக்கின்றிலையென்பதாம் .... (எ)

வலவைகளல்லாதார்காலாறுசென்று... .. .. ✻
கலவைகளுண்டுகழிப்பர்-வலவைகள்..... ... ... ✻
காலாறுஞ்செல்லார்கருனையாற்றுய்ப்பவே... ..... ✻
மேலாறுபாயவிருந்து.... .... ✻

இதன்பதப்பொருள்.

வலவைகள்-நாணிலிகள். அல்லாதார்-அல்லாதவர்வறுமையுற்றுழல். காலாறு - தூரதேசங்களிலே. சென்று - போய். கலவைகள் - இரந்தூபெற்றகலவைகளை. உண்டு - புசித்து. கழிப்பர்-பொழுதுபோக்குவர். வலவைகள்-நாணமில்லாதார். காலாறும்-தூரதேசங்களினும். செல்லார்-செல்லாது. மேல்-தம்மூடம்பின்மேல். ஆறு-ஆறுபோல. பாய - வேர்வுநீர்வர. இருந்து-தம்மில்லத்திருந்து. கருனையால் - கருனைக்கறியோடுகூடியசோற்றை. துய்ப்ப - உண்பர். என்றவாறு.— அல்லாதார்-எழுவாய். கழிப்பர்-பயனிலை. வலவைகள்-எழுவாய். துய்ப்ப-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. கால்-பாதம். ஆறு-வழி. கலவை-கலப்பு. இதுதன்றியில்செல்வத்திற்குப் பொருந்துவதென்னெனில்குணமுடையவர்வறுமையுற்றுழலச்கிறவன்முகத்திற் கஞ்சித்தமதுயிரை வழிநிற்போக்காமற் தூரதேயங்களிற் சென்றிரந்துண்டாயினுநாளைக்கழிப்பர் நாணமில்லாதார்தம்முடைய செல்வத்தைப்பிறர்க்குப்பயன் படாமலடைத்துவைத்துவடியவிருந்து நல்லபொரிக்கறியுஞ்சோறுமுண்டுதமதுவயிறுன்றினையும்வளர்ப்பதனுலவர் செல்வத்தையிழித்தூநன்றியில்செல்வத்திற்சேர்க்கப்பட்டது.

இதன்கருத்து.

நாணிவிகளல்லாதார்மிடியுற்றுப்பலநாடுகளினுஞ்சென்றிர
ந்துபெற்றகலவைகளேயுண்டுபொழுதுபோக்குவர் நாணிவிக
ள்காலாறுஞ்செல்லாதுதம்முடம்பின்மேலாறுபோலவேர்வுநீ
ர்பாயத்தம்மில்லத்திருந்துகருணைக்கறியோடுசோற்றையுண்ப
தென்பதாம்..... (அ)

பொன்னிறச்செந்நெற்பொதியொடுபீள்வாட..... *
மின்னெளிர்வானங்கடவுள்ளுங்கான்றுகுக்கும். .. *
வெண்மையுடையார்விழுச்செல்வமெய்தியக்கால்... *
வண்மையுமன்னதகைத்து..... *

இதன்பதப்பொருள்.

பொன்-பொன்போலும். நிறம் - நிறத்தையுடைய. செந்
நெல்-செஞ்சாலி. பொதியொடு-பொதிதலுடனே. பீள்-கரு.
வாட - வாடாநிற்ப. மின் - மின்னையுடைத்தாய். ஒளிர்-விளங்
குகிற. வானம்-மேகம்பயனின்றியே. கடவுள்ளும்-கடவுளு
ள்ளே. கான்று-நீரைப்பெய்து. உகுக்கும்-உதிர்க்கும். வெண்
மையுடையார்-அறிவிலாதார். விழு-விழுமிய. செல்வம்-ஐச்சு
வரியம். எய்தியக்கால்-பெற்றகாலத்து. வண்மையும் - அவர்
செய்யுமுபகாரமும். அன்னதகைத்து-அத்தன்மைத்து. என்
றவாறு.—வண்மை - எழுவாய். அன்னதகைத்து - பயனில.
வெண்மை-அறியாமை. கான்று-கக்கி.

இதன்கருத்து.

பொன்போலு நிறத்தினையுடைய செந்நெல் கருப்பொதி
யொடுவாடாநிற்பமின்னெளிர்வானம்பயனின்றியேகடவுள்
ளேநீரைப்பெய்துகுக்கும்வெள்ளறிவினையுடையார் விழுமிய
செல்வம்பெற்றுலவாவீகையுமப்பெற்றித்தென்பதாம்... (கூ)

ஓதியுமோதாருணர்விலாரோதாது..... *
மோதியனேயாருணர்வுடையார்-தூய்தாக ... ... *
நல்கூர்ந்துஞ்செல்வரிரவாதார்செல்வரு..... *
நல்கூர்ந்தாரீயாரொனின்..... *

ஈயாமை.

இதன்பதப்பொருள்.

உணர்விலார் - அறிவிலாதார். ஓதியும் - பலநூல்களேயோதினாயினும். ஓதார் - ஓதாரோடொப்பர். உணர்வுடையார் - அறிவுடையார். ஓதாதும் - ஓதினரில்லையாயினும். ஓதியனையார் - ஓதினரோடொப்பர். இரவாதார் - பிறரைச்சென்றிரவாதார். தாம்தாக - ஒருபொருளுமின்றியே. நல்கூர்ந்தும் - வறியரேயாயினும். செல்வர் - செலவரோடொப்பர். செல்வரும் - செல்வமுடையாரும். ஈயாரெனின் - பிறர்க்கொன்றைக்கொடாராயின். நல்கூர்ந்தார் - வறியரோடொப்பர். என்றவாறு.—உணர்விலார் - எழுவாய். ஓதார் - பயனிலை. உணர்வுடையார் - எழுவாய். ஓதியனையார் - பயனிலை. இரவாதார் - எழுவாய். செல்வர் - பயனிலை. செல்வர் - எழுவாய். நல்கூர்ந்தார் - பயனிலை.

இதன்கருத்து.

அறிவிலார்பலநூல்களே யோதினராயினு மோதாரோடொப்பர்அறிவுடையா ரோதிற்றிலராயினு மோதினரோடொப்பர்பிறரைச்சென்றிரவாதாரொருபொருளுமின்றி வறியரேயாயினுஞ்செல்வரோடொப்பர்செல்வரும்பிறர்க்கொன்றையீயாராயின்வறியரோடொப்பரென்பதாம் .... (ஈ)

நன்றியில்செல்வமூற்றிற்று.

அஅ அதிகாரம்-உஎ-இ. வெண்பா... (உஎஈ)

ஈயாமை.

ஈயாமை-கொடாமலிருக்குந்தன்மை. அஃதாவது-ஒருபொருளைக்கண்டதன்மேலாசைசெல்லுதலும்பொருள்வருவாய்காரணமாகக்கோபம்பிறத்தலும்பொருடனக்குமிகவெய்தினுமதலைமைதிபிறவாமையுமொருவற்குக்கொடுக்கிலதிலேசிறுகுறையுமென்னுமூலோபத்தாலொருவற்கொன்றைக்கொடாமையுமாம் நன்றியில்செல்வத்திற்கொடாமையால்வருமறிவுதா

னேபோதாதோவிந்தவதிகாரமும் வேண்டுமோவென்னின்ம றுமைக்கு மிவனுக்கு றுதியில்லையென்பதுகாட்டிப்பரக்கவிட் டிச்சொன்னலொன்பதாம்.

நட்டார்க்குநள்ளாதவர்க்குமுளவாயா..... *
லட்டதுபாத்துண்டலட்டுண்ட-லட்ட..... ..... *
தடைத்திருந்துண்டொழுகுமாவதின்மாக்கட் .... *
கடைக்குமாமாண்டைக்கதவு..... *

இதன்பதப்பொருள்.

அட்டுண்டல்-சமைத்துண்டுவாழ்தலாவது. நட்டார்க்கும்-தம்மொடுநட்புக்கொண்டார்க்கும். நள்ளாதவர்க்கும்-நட்புக்கொள்ளாதவர்க்கும். உள-மமக்குள்ள. வாயால்-அளவிலால். அட்டது-சமைத்ததனை. பாத்துண்டல்-பகுத்துண்டல். அட்டது-தமக்குச்சமைத்ததனை. அடைத்திருந்து-பிறர்க்கிடாதடைத்திருந்து. உண்டு-புசித்து. ஒழுகும்-நடக்கும். ஆவது-ஆக்கம். இல்-இல்லாத. மாக்கட்கு-மனிதர்க்கு. ஆண்டை-மறுமையுலகத்து. கதவு-கதவுகள். அடைக்கும்-அடைத்திருக்கும். என்றவாறு.—அட்டுண்டல்-எழுவாய். பாத்துண்டல்-பயனிலை. கதவு-எழுவாய். அடைக்கும்-பயனிலை. ஆண்டை-அவ்விடத்து. ஆம்-அசைநிலை. அடைத்தவாமென்பதூஉம்பாடம்.

இதன்கருத்து.

அட்டுண்டுவாழ்தலாவது தம்மொடுநட்டார்க்குநள்ளாதவர்க்குந்தமக்குள்ளவளவிலலட்டதனைப்பகுத்துண்டலட்டதனைப்பிறர்க்கிடாதடைத்துண்டொழுகுமாக்கமில்லாதமாக்கட்குமறுமையுலகத்துக்கதவுகளடைத்திருக்குமென்பதாம்... (க)

எத்துணையானுமியைந்தவளவிற்..... ..... *
சிற்றறஞ்செய்தார்தலைப்படுவர்-மற்றைப் ... . *
பெருஞ்செல்வமெய்தியக்காற்பின்னறிதுமென்பா . *
ழிழிந்தார்பழிகடலத்துளர்..... .... *

இதன்பதப்பொருள்.

எத்துணையானும்-எவ்வளவாயினும். இயைந்த - தமக்குப் பொருந்திய. அளவினல்-அளவினுலே. சிற்றறம்-சிறியவறத்தை. செய்தார்-நாடோறுஞ்செய்தவர். தலை-தலைமையானகதியிலே. படுவர் - பிறந்துளாராவர். பெரும்-தமக்குப்பெரிய. செல்வம் - செல்வத்தை. எய்தியக்கால் - அடைந்தகாலத்து. பின்-பின்னறத்தை. அறிதும்-செய்வோம். என்பார்-என்று கருதியிருப்பார். கடலத்துள் - கடல்சூழ்ந்தபூமிக்குள். அழிந்தார்-கெட்டாருமாவர். பழி-பழியடைந்தாருமாவர். என்றவாறு.—செய்தார்-எழுவாய். தலைப்படுவர்-பயனிலை. அறிதுமென்பார்-எழுவாய். ஆவர்-பயனிலை. மற்று-ஐ-அசைநிலை.

இதன் கருத்து.

எவ்வளவாயினுந்தமக்குக் கூடியவளவினுற் சிறியவறத்தை நாடோறுஞ்செய்தார்தலைமையானகதிகளிலே பிறந்துளாராவரப்பெற்றியன்றித்தமக்குப்பெருஞ்செல்வமெய்தினுற் பின்னறத்தைச்செய்வாமென்றுகருதியிருப்பார்கடல்சூழ்ந்தபூமியிடத்தழிந்தாருமாவர்பழியடைந்தாருமாவரென்பதாம்.... (உ)

துய்த்துக்கழியான்றுறவோர்க்கொன்றீகலான்..... ✻
வைத்துக்கழியுமடவோனே-வைத்த..... ✻
பொருளுமவனேநகுமேபுலகத்..... ✻
தருளுமவனேநகும்..... ✻

இதன்பதப்பொருள்.

துய்த்து-தானுமுண்டு. கழியான் - நாளைக்கழிக்காமலும். துறவோர்க்கு - துறந்தோர்க்கு. ஒன்று - ஒருபொருளையும். ஈகலான்-கொடுக்காமலும். வைத்து-பொருளைத்தேடிவைத்து. கழியும் - பயன்கொள்ளாமலிறந்துபோம். மடவோனே-அறிவில்லாதானே. வைத்தபொருளும்-தேடிவைத்தபொருளும். அவனை-அவனை. நகும்-சிரிக்கும். உலகத்து-உலகத்தில். அருளும்-கிருபையும். அவனை-அவனை. நகும் - சிரிக்கும். என்றவாறு.—பொருள் - அருள் - எழுவாய். நகும்-பயனிலை. மடவோனே-செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை.

இதன் கருத்து.

தானுகர்ந் தூநாளாக்கழியாமலுந் தூறவோர்க்கொன்றுமீயா மலுமவைத்தூறந்துபோ மறிவில்லாதவனைவைத்தபொருளுமவனியகழ்ந் தென்னுலுள்ளபயன்கொணடிலனென்றுநகுமுலகத்தருளுமவனைநகுமென்பதாம்... .... (கூ)

கொடுத்தலுந் தூய்த்தலுந்தேற்றுவிடிக்குடை ... ... *
யுள்ளத்தான்பெற்றபெருஞ்செல்வமில்லத்..... ... *
தூருவுடைக்கன்னியைப்போலப்பருவத்தா..... *
லேதிலான் றுய்க்கப்படும்..... ..... *

இதன் பதப்பொருள்.

கொடுத்தலும் - ஒருவற்கொன்றைக்கொடுத்தலும். துய்த் தலும் - தானுண்டலும். தேற்று-தெளியாத. இடிக்குடை-குறைந்த. உள்ளத்தான்-நெஞ்சினையுடையவன். பெற்ற-பெற்றி ருக்கின்ற. பெரும்-பெரிய. செல்வம்-செல்வமான து. இல்லத்து-குடியிற்பிறந்த. உருவுடை - வடிவுடைய. கன்னியைப் போல-பெண்களைப்போல. பருவத்தால்-நுகரும்பக்குவகாலம்வந்தால். ஏதிலான்-அயலாரால். துய்க்கப்படும்-நுகரப்படும். என்றவாறு.— ஏதிலாரால்-செல்வம் - துய்க்கப்படும்-இஃதுகருமணிப்புனர்வு.

இதன்கருத்து.

பிறர்க்குக்கொடுத்தலுந்தானுகர்தலுந்தெளியாதசிறியவுள் ளத்தான்பெற்ற பெருஞ்செல்வமனையின் கண்ணுருவுடைக்க ன்னியைப்போலநுகருங்காலம்வந்தாலையலாரானுகரப்படு மென்பதாம்..... ... . (கூ)

எறிநீர்ப்பெருங்கடலெய்தியிருந்து..... *
மறுநீர்ச்சிறுகிணற்றூறல்பார்த்திருப்பர் ..... *
மறுமையறியாதாராக்கத்திற்சான்றோர்... .... *
கழிநல்குரவேதலே..... .... *

இதன்பதப்பொருள்.

எறி-கையையெறியும். நீர்-நீரையுடைய. பெரும்-பெரிய. கடல்-கடலை. எய்தியிருந்தும் - அடைந்திருந்தும். அறுநீர்-நீரற்ற. சிறு - சிறிய. கிணறு-கிணற்றின். ஊறல்-ஊறலை. பார்த்தல்-கண்டு. உண்பர்-உண்ணுவதுபோல. மறுமை - மறுமைக்குறுதியாகிய. அறியாதார்-அறப்பயனையறியாதார். ஆக்கத்தின்-செல்வத்தினும். சான்றோர்-அமைந்தோருடைய. கழி-மிக்க. நல்குரவு-வறுமை. தலை - தலைமையையுடைத்தென்றவாறு.—நல்குரவு-எழுவாய். உடைத்து - பயனிலை. தலைமையை-செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கையையெறியநீரையுடையபெருங்கடலையடைந்திருந்து மற்றநீரையுடையசிற்றியகிணற்றூறலைப்பார்த்திருந்தவரது போல மறுமையறியாதார் செல்வத்தைப்பார்க்கிலுஞ் சால்புடையோருடைய மிக்கநல்குரவுதலைமையையுடைத்தென்பதாம்..... .... (இ)

எனதெனதென்றிருக்குமேழைபொருளை .... *
யெனதெனதென்றிருப்பன்யானுந்-தனதாயிற் .... *
ருணமதனைவழங்காம்பயன்றுவ்வான்..... *
யானுமதனையது..... ..... *

இதன்பதப்பொருள்.

எனதெனதென்று - என்னதென்னதென்றுகருதி. இருக்கும் - பிறர்க்குக்கொடாதிருக்கும். ஏழை - அறிவிலான். பொருளை-தேடிவைத்தபொருளை. யானும்-யானும். எனதெனதென்று-என்னதென்னதென்றுகருதி. இருப்பன்-இருப்பனதற்கென்னகாரணமெனின். தனதாயின்-அப்பொருடனதாயின். தானும்-அவ்வேழைதானும். அதனை - அப்பொருளை. வழங்கான்-பிறர்க்குக்கொடான். பயன் - அப்பொருளாலெய்தற்பாலசிறியை. துவ்வான்-நுகரான். யானும்-யானும். அதனை-அப்பொருளை. அது - அப்படிவழங்கேன்பயன்றுவ்வேன். என்றவாறு.—யான்-எழுவாய். அது-பயனிலை. அதனை-செயப்படுபொருள்.

ஈயாமை.

இதன்கருத்து

எனதெனதென்று கருதிப்பிறர்க்குக்கொடாதிருக்கு மறிவி
லான்பொருளே யெனதெனதென்றுகருதி யிருப்பனதற்கென்
ன காரணமெனி னப்பொருடனதாயி னவ்வேவழைதலு மப்
பொருளைப்பிறர்க்குவழங்கானப்பொருளாலாய நுகர்ச்சியை
யுநுகரான்யா னும்பொருளைவழங்கேன்பயன் றவ்வே னென்ப
தாம்..... (சு)

வழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தா..... *
நிழந்தாரெனப்படுதலுய்ந்தாருழந்ததனைக்..... *
காப்புய்ந்தார்கல்லுதலுமுய்ந்தார்தங்கைநோவ ... *
யாப்புய்ந்தாருய்ந்தபல..... *

இதன்பதப்பொருள்.

வழங்காத-பிறர்க்கொன்றைக்கொடாத. செல்வரின்-செல்
வரினும். நல்கூர்ந்தார்-வறுமையர். உய்ந்தார்-தப்பினரெதைப்ப
டியென்னில். இழந்தார் - செல்வத்தைப்பிறர்க்குக்கொடாதி
ழந்தார். எனப்படுதல் - என்றுசொல்லப்படுதல்பழிய. உய்ந்
தார்-தப்பினர். அதனை-அப்பொருளை. உழந்து-வருந்தி. கா
ப்பு-காக்குங்காவலான துன்பத்தை. உய்ந்தார்-தப்பினர். கல்
லுதலும்-கல்லியதனைப்புதைக்குந்துன்பத்தையும். உய்ந்தா
ர்-தப்பினர். தங்கை-தங்கைகள். நோவ-வருந்த. யாப்பு-பிணி
க்கும்பிணிப்பையும். உய்ந்தார்-தப்பினர். உய்ந்தபல-இப்படி
பலமுறையாலுந்தப்பினர். என்றவாறு.—நல்கூர்ந்தார்-எழு
வாய். உய்ந்தார்-பயனிலை. துன்பத்தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பிறர்க்குக்கொடாத செல்வரினுநல்கூர்ந்தார் தப்பினரெதை
ப்படியென்னிற் செல்வத்தைப்பிறர்க்குக்கொடாதிழந்தாரென்
றுசொல்லப்படும் பழியைத்தப்பினரதனைவருந்திக்காக்கு
ங்காவலான துன்பத்தையுந்தப்பினர்கல்லியதனைப்புதைக்குந்
துன்பத்தினையுந் தப்பினர் தங்கைநோவப்பிணிக்கும் பிணிப்
பையுந்தப்பினரிப்படிபலமுறையாலுந்தப்பினரென்பதாம்.

(எ)

தனதாகத்தான் கொடான்றுயத்தவருந்..... ... .. *
தமதாயபோழ்தேகொடாஅர்-தனதாக..... ..... *
முன்னேகொடுப்பினவர்கடியார்தான்கடியான்..... *
பின்னேயவர்கொடுக்கும்போழ்து..... ... ... *

இதன்பதப்பொருள்.

தனதாக-தான்தேடியபொருடனக்குரித்தாகியபொழுதே. தான்கொடான்-தான்வழங்கான். தாயத்தவரும்-தாயாதிகளும். தமது-அப்பொருடங்கட்கு. ஆயபோழ்தே-உரித்தாகிய பொழுதே. கொடார்-வழங்கார். தனதாக-தனக்குரித்தாகிய பொருளை. முன்னே-தானிறப்பதன்முன்னே. கொடுப்பின்-கொடுக்கும்பொழுது. அவர்-அத்தாயத்தார். கடியார்-விலக்கார். பின்னே-தானிறந்தபின்பு. அவர்-தன்பொருட்குரியதாயத்தார். கொடுக்கும்போழ்து-கொடுப்பின். தான்-தான்வந்தவளை. கடியான்-விலக்காளுதலால்யாதேவிவர்கொடாமைக்குக்காரணம். என்றவாறு.—காரணம்-எழுவாய். யாது-பயனிலை.

இதன்கருத்து.

தான்தேடியபொருடனக்குரித்தாகியபொழுதேதானீயான்ருயாதிகளுந்தமதாயபோழ்தேகொடார்தனக்குரித்தாகிய பொருளைத்தானிறப்பதன்முன்னே கொடுப்பினதாயத்தார் கடியார்தானிறந்தபின்புபொருட்குரியதாயதீதார்தாங்கொடுப்பினிறந்தான்வந்து விலக்கமாட்டாளுதலால் யாதேவிவர் கொடாமைக்குக்காரணமென்பதாம்..... .... (அ)

இரவலர்கன்ருகவீவாராவாக..... .... *
விரகிற்சுரப்பதாம்வண்மை-விரகின்றி..... ..... *
வல்லவளுன்றவடியாபோல்வாய்வைத்துக்..... ... *
கொல்லச்சுரப்பதாங்கீழ்..... .... *

இதன்பதப்பொருள்.

இரவலர்-இரப்பவரே. கன்ருக-கன்ருகவும். ஈவார்-கொடுப்பவரே. ஆவாக-பசுவாகவும். விரகில்-விர்கிலால். சுரப்பது-கொடுப்பது. வண்மை-ஒருவர்கீதையாவது. விரகின்றி-அவ்விரகின்றி. வல்லவர்-அடர்க்கவல்லவர். ஊன்ற-அடர்த்து. அடி-அடிக்கும். ஆபோல்-பசுப்போல. வாய்வைத்து-உறு

ஈயாமை.

ப்பிடங்களிற்கருவிகளேவைத்து. கொல்ல-நோவுபண்ண. சுரப்பது-கொடுப்பது. கீழ் - கீழ்மக்களியல்பு. என்றவாறு.—வண்மை-எழுவாய். சுரப்பது-பயனிலை. கீழ்-எழுவாய். சுரப்பது-பயனிலை. ஆம்-இரண்டிடம்-அசைநிலை.

இதன்கருத்து.

இரவலோகன்முகவீவாரோயாவாகவிரகிறற்பொழிவதேபோலாவாவ்விரகின்றியடார்க்கவல்லவரடார்த்தடிக்கும் ஆபோலவுற்றிடங்களிற்கருவிகளேவைத்துநோவுபண்ணக்கொடுப்பதுகீழ்மக்களியல்பென்பதாம்..... .... (கூ)

ஈட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளேக்.... *
காத்தலுமாங்கேகடுந்துன்பங்-காத்தல்... ... . *
குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக்..... *
குறைபதிமற்றைப்பொருள்..... .... *

இதன்பதப்பொருள்.

ஈட்டலும்-பொருளினைமுயன்றுதேடுதலும். துன்பம்-துன்பம். மற்றீட்டிய-மற்றுந்தான்றேடிய. ஒண்-ஒள்ளிய. பொருளே-பொருளை. காத்தலுமாங்கே-அப்பொருளழியாமற்காத்தலுமதுபோல. கடும்-மிகவும். துன்பம்-துன்பம். காத்தல்-காத்தற்பொருட்டாகிய பொருளுள். குறைபடிலும்-சிறிதுகுறையுமாயினும். துன்பம்-துன்பமாம். கெடில்-அடையக்கெடினும். துன்பம்-மிகத்துன்பமாமாதலால். மற்றைப்பொருள்-மேற்சொல்லிய பொருள். துன்பத்து-துன்பத்தைக்கெல்லாம். உறைபதி-இருப்பிடமாம். என்றவாறு.—பொருள்-எழுவாய். உறைபதி-பயனிலை.

இதன்கருத்து.

பொருளேயீட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளேக்காத்தலுமதுபோலமிகத்துன்பங்கூடாதபொருளுட்குறைபடினுந்துன்பமாமடையக்கெடினுமிகத்துன்பமாமாதலாற்பொருடின்பத்திற்குறையும்பதியென்பதாம்..... ... (ஙி)

ஈயாமைமூற்றிற்று.

ஆ அதிகாரம் உஅஇ. வெண்பா... (உஅ)

இன்மை.

இன்மை-இல்லாதிருக்குந்தன்மை. அஃதாவது - உலகத்து மக்களுள்ளாராதிசங்கேதித்துக்கொண்டுநடக்கப்பட்டபொருளாதற்கறஞ்செய்தபிறவாமையால்வரும்பசிப்பிணியுமின்பங்களையநுபவிக்கப்பெறுதலின்பங்களும்பிறராலிகழப்படுமிவிவரவுமூடைதீதானவறுமையைச்சொன்னதாம்.

அதிதிட்டகூறையரைச்சுற்றிவாழினும்..... *
பதிதெட்டுடைமைபலருள்ளும்-பாடேபெறுதல்..... *
மொத்தகுடிப்பிறந்தக்கண்ணுமொன்றிலலாதார்... *
செத்தபிணத்திற்கடை..... .... *

இதன்பதப்பொருள்.

அதி-துவர். இட்ட-உள்ட்டிய. கூறை-ஆடையை. அரை-அரையின்கண். சுற்றி - கீழாயினர்சுற்றிக்கொண்டு. வாழினும் - வாழ்ந்தாராயினும். பத்து - பத்தாக. எட்டு - எட்டாக. உடைமை - பொருளுடையராயினவ்வுடைமையால். பலருள்ளும்-எல்லாருள்ளும். பாடு-பெருமை. எப்துபம் - அடையும். ஒத்த-ஒத்திருக்கின்ற. குடி-ஒருகுடியுள்ளே. பிறந்தக்கண்ணும்-பிறந்தாராயினும். ஒன்று - வறுமையாலொருபொருளும். இல்லாதார்-இல்லாதவர். செத்த-இறந்த. பிணத்தின்-பிணத்தினினும். கடை-கடையாவர். என்றவாறு.—உடைமை - எழுவாய். எய்துபம்-பயனிலை. பாடு - செயப்படுபொருள். இல்லாதார்-எழுவாய். கடையாவர்-பயனிலை.

இதன்கருத்து.

துவரூட்டியவாடையையரையின்கண் கீழாயினர்சுற்றியொழுகினராயினும்பத்தாகவெட்டாகப்பொருளுடையராயினவ்வுடைமையாலெல்லாருள்ளும் பெருமையெய்துமொத்தவொருகுடியின்கட்பிறந்தாராயினு மொருபொருளுமிலராயிற்செத்தபிணத்தினுங்கடையாவரொன்பதாம்..... (க)

நீரினுநுண்ணிதுநெய்யென்பர்நெய்யினும்..... *
யாருமறிவர்புகைநுட்பந்-தேரி..... ..... *
னிரப்பிடும்பையாளன்புகுமேபுகையும்..... ..... *
புகற்கரியபூழைநுழைந்து..... *

இன்மை.

இதன்பதப்பொருள்.

நீரினும்-நீரைப்பார்க்கினும். நெய்-நெய்யை. நுண்ணிது-நுண்ணியது. என்பர்-என்றுசொல்லுவர். நெய்யினும்-நெய்யைப்பார்க்கினும். புகை-புகையானது. நுட்பம்-நுண்ணிதாதல். யாரும்-யாவரும்-அறிவர்-அறிவார். தேரின்-ஆராயுமிடத்து. புகையும்-புகைதானும். புகற்கு-புகுதற்கு. அரிய-அரிதான. பூழை-வாயில்களை. நுழைத்து-நுழைத்துவரும். இரப்பு-இரப்பென்னும். இடும்பையாளன்-. தன்பழுடையான். புகும்-புகுவன். என்றவாறு.—இடும்பையாளன்-எழுவாய். புகும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

நீரினுநெய்யைநுண்ணிதென்று சொல்லுவர்நெய்யினும்புகைநுண்ணிதாதலெல்லாருமறிவரார்ராய்ந்துபார்க்கிற்புகையும் புகுதற்கரிய பூழையினை நுழைத்திரப்பென்னு மிடும்பையுடையான்புகுவனென்பதாம்..... (உ)

கல்லோங்குயர்வரைமேற்காந்தண்மலராக்காற்..... *
செல்லாவாஞ்செம்பொறிவண்டினங்-கொல்லைக் .... *
கலாஅந்கிளிகடியுங்கானகநாட..... .... *
விலாஅ அரக்கில்லைத்தமர்.... ... . *

இதன்பதப்பொருள்.

கொல்லை-கொல்லைப்புனத்தில். கிளி-கிளிகளை. கலால்-கல்வினைக்கொண்டு. கடியும்-ஓட்டும். கானகம்-காட்டையுடைய. நாட-நாடனே. கல்-கல்லால். ஓங்கு-ஓங்கிய. உயர்-உயர்ந்த. வரைமேல்-மலையின்மேல். காந்தள்-காந்தட்பூ. மலராக்கால்-மலராதகாலத்து. செம்-சிவந்த. பொறி-பொறிகளையுடைய. வண்டினம். வண்டினங்கள். செல்லாவாம்-போகாவாகுமது போல. இலார்க்கு-பொருளில்லாதார்க்கு. தமர்-உறவின்முறையார். இல்லை-இல்லை. என்றவாறு.—தமர்-எழுவாய். இல்லை-பயனிலை.

இதன்கருத்து.

கொல்லைப்புனத்துக்கல்லாற்கிளிகடியுங்கானகநாடனேகல்லாலோங்கிய வுயர்ந்தமலைமேற் காந்தண்மலராதபோற்றுசெ

ம்பொறிவண்டினங்களம்மலைமேற் செல்லாவாகு மதுபோல
ப்பொருளில்லாதார்க்குத்தமரில்லையென்பதாம். ... ... (க)

உண்டாயபோழ்திணடைந்தூழிக்காகம்போற் .... *
றொண்டாயிரவர்தொகுபவே-வண்டாய்த். ..... *
திரிதருங்காலத்தூத்தீதிலிரோவென்பா..... *
மொருவருமிவ்வுலகத்தில்... ... . *

இதன்பதப்பொருள்.

உண்டாய-செல்வமுண்டானன். போழ்திண்-காலத்து. உடை
ந்தூழி-யாக்கையுடைந்தவிடத்து. காகம்போல்-காக்கைபோ
ல. தொண்டு-அடிமையாக. ஆயிரவர்-ஆயிரம்பேர். தொகுப-
வந்துகூடுவர். வண்டாய்-வண்டுபோல. திரிதருங்காலத்து-திரி
யுங்காலத்து. தீதிலிரோ-நீர்மிடியாலேதுன்பமுற்றீரோ. என்
பார்-என்றுவினவுவார். ஒருவருமம்-ஒருத்தருமம். இவ்வுலகத்து-
இத்தவுலகத்தில். இல்-இல்லை. என்றவாறு.—ஆயிரவர்-எழுவா
ய். தொகுப-பயனிலை. என்பார்-எழுவாய். இல் - பயனிலை.
ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

பொருளுண்டாயபொழுதின்கண் யாக்கையுடைந்தவிடத்
தும்காக்கைபோலடிமையாகவாயிரம்பேர்வந்துகூடுவர்வண்டு
போலப்பெற்றனபெற்றனவாங்கேதுகர்ந்தொருநிலையின்றித்
திரிதருங்காலத்தூநீர்தீதிலிரோவென்றுவினவுவாரொருவருமி
வ்வுலகத்தில்லையென்பதாம்..... (ச)

பிறந்தகுலமாயும்பேராண்மைமாயுஞ்..... *
சிறந்ததங்கல்வியுமாயுங்-கறங்கருவி... ... . *
கன்மேற்கழூஉங்கணமலைநன்னாட..... ..... *
வின்மைதழூவப்பட்டார்க்கு..... ..... *

இதன்பதப்பொருள்.

கறங்கு-ஓசையுடைத்தாய். அருவி-விழுகிறவருவி. கன்மே
ல் - கல்லின்மேல்விழுந்து. கழூஉம் - அதன்மாசைக்கழுவும்.
கணம்-திரண்ட. மலை-மலைகளோடுடைய. நல்-நல்ல. நாட-நாட

இன்மை.

னை-இன்மை-வறுமை. தழுவப்பட்டார்க்கு. சூழப்பட்டார்க்கு. பிறந்த-தாம்பிறந்த. குலம் - குலநன்மையும். மாயும்-கெடும். பேர்-பெரிய. ஆண்மை-ஆண்மைத்தன்மையும். மாயும்-கெடும். சிறந்த-மிக்க. தம்-தமது. கல்வியும்-கல்வியுமதுலாயவறிவும். மாயும்-கெடும். என்றவாறு.—குலமுதலியஎழுவாய். மாயும்-பயனிலை.

இதன்கருத்து.

கறங்கருவிகன்மேற்கழுஉங்கணமலைநன்னாடனேவறுமைசூரப்பட்டார்க்குத்தாம்பிறந்தகுல நன்மையுங்கெடும்பேராண்மையுங்கெடுமிக்கதமதுகல்வியுமறிவுங் கெடுமென்பதாம்.

(இ)

உள்கூர்பகையாளுழைநசைஇச்சென்றூர்கட் .... ❋
குள்ளாநிருந்துமொன்றூற்றுதா-னுள்ளாளு ..... ❋
ர்ருந்துயிர்கொல்னைகழியாதுதான்போய்... .... ❋
விருந்தினுதலேநன்று..... ... ... ❋

இதன்பதப்பொருள்.

உள்-மனத்தின்கண். கூர்-மிக்க. பகையால்-பகைதாயால். உழை-தன்மாட்டு. நசைஇ-ஒன்றினைநச்சி. சென்றூர்கட்கு-வந்தவர்கட்கு. உள்ளூர்-உள்ளூரிலே. இருந்தும்-வந்திருந்தும். ஒன்று-ஒன்றினை. ஆற்றுதான்-செய்யமாட்டாதான். உள்ளூர்-உள்ளூரிலே. இருந்து-இருந்துகொண்டு. உயிர் - தன்வாழ்நாளை. கொன்னே-பயனின்றியே. கழியாது-கழியாமல். தான் - தான். போய்-தூரதேசங்களிற்சென்று. விருந்தினுதலே-விருந்தினுகத்திரிதலே. நன்று-நல்லது. என்றவாறு.—விருந்தினுதல்-எழுவாய். நன்று-பயனிலை.

இதன்கருத்து.

மனத்தின்கண்மிக்கபகைதாயாற்றன்மாட்டொன்றினைநச்சிச்சென்றூர்கட்குள்ளூரிருந்துமொன்றினையேயமாட்டாதான்றன்னூரிலிருந்துதன்வாழ்நாளைப்பயனின்றியேகழியாதுதான்போய்ப்பிறர்க்குவிருந்தினுகச்சேறலேநன்றென்பதாம்.

(சு)

நீர்மையேயன்றி நிரம்பவெழுந்ததங் .... *
கூர்மையு மெல்லாமொருங்கிழப்பர்-கூர்மையின் ... *
மூல்லையலைக்கு மெயிற்ரூய்நிரப்பென்னு ... . *
மல லலடையப்பட்டார்..... ..... *

இதன்பதப்பொருள்.

கூர்மையின்-கூர்மையாலே. மூல்லை-மூல்லையரும்பை. அலைக்கும்-வருத்தும். எயிற்ரூய்-பற்களையுடையாய். நிரப்பென்னும்-இரப்பென்னும். அலலல-துன்பம். அடையப்பட்டார்-சேரப்பட்டவர். நீர்மையே-நயமுடைமையே. அன்றி-அல்லது. நிரம்ப-நிறைய. எழுந்த-உளவாய. தம்-தமது. கூர்மையும்-கூரியவறிவும். எல்லாம்-மற்றுள்ளனவெல்லாமும். ஒருங்கு-கூட. இழப்பர்-இழந்துவிடுவர். என்றவாறு.—அடையப்பட்டார்-எழுவாய். இழப்பர்-பயனிலை.

இதன்கருத்து.

கூர்மையினின்மூல்லை முகையையலைக்கு மெயிற்ரூய்நிரப்பென்னு மிடுமையையடையப்பட்டார்தம்மோடுள்ள நற்குணங்களெயன்றிறையவுளவாயகூரியவறிவு மற்றுள்ளனவெல்லாமுங்கூடவிழப்பரென்பதாம்..... .... (எ)

இட்டார்ரூப்பட்டொன்றிரந்தவர்க்காற்ரூது ..... *
மூட்டார்ரூப்பட்டுமுயன்றுள்ளூர்வாழ்தலி..... *
னெட்டார்ரூச்சென்றுநிலாமனையிற்கைந்நீட்டுங்.... *
கெட்டார்ரூவாழ்க்கையேநன்று... .... *

இதன்பதப்பொருள்.

இட்டு-இட்டிதாகிய. ஆற்றுப்பட்டு-தெறியின்கட்பட்டு. இரந்தவர்க்கு-இரந்தவர்கட்கு. ஒன்று-ஒன்றினை. ஆற்றாது-செய்யாது. மூட்டு-மூட்டுதலையுடைய. ஆற்றுப்பட்டு-தெறியின்கட்பட்டு. முயன்று-முயற்சிசெய்து. உள்ளூர்-உள்ளூரில். வாழ்தலின்-வாழ்வதினும். நெட்டாற்று-தூரவழியிலே. சென்று-போய். நிரை-நிரையாகிய. மனையின்-வீடுதோன்கண்ணே புதந்து. கைந்நீட்டும்-பிச்சைக்குக்கையேற்கும். கெட்டாற்று-கெடுவழியான. வாழ்க்கையே-உயிர்வாழ்க்கையே. நன்று-

இன்மை.

நல்லது. என்றவாறு.— வாழ்க்கை - எழுவாய். நின்று-பயனிலை. இட்டு-அற்பம்.

இதன்கருத்து.

இட்டிதாகியநெறியின்கட்பட்டொழுகுந்தவர்க்கொன்றையாற்ற மாட்டாதுமூட்டுநெறியின்கட்பட்டுமுயன்றுள்ளுளுரிருந்துவாழ்கலினு நெடியவழிபோய் நிலையாகியமனையினகன்றனைசென்றிரந்துகைந்நீட்டுங்கட்டாற்றுவாழ்க்கையே நன்றெம்பதாம்..... (அ)

கடகஞ்செறிந்ததங்கைகளால்வாங்கி... ... ... *
யடகுபறித்துக்கொண்டட்டுக்-குடைகலலு..... *
வுப்பிலிவெந்தைதின்றுள்ளற்றுவாழ்பவே ... ... *
துப்புரவுசென்றுலந்தக்கால்..... ..... *

இதன்பதப்பொருள்.

துப்புரவு-செல்வம். சென்று-போய். உலந்தக்கால்-வற்றினகாலத்தில். கடகம்-பொற்கடகம். செறிந்த-செறிக்கப்பட்ட. தம்-தமது. கைகளால்-கைகளாலே. வாங்கி - தூற்றினவோத்து. அடகு-இலைகோ. பறித்துக்கொண்டு-பறித்துக்கொண்டுவந்து. அட்டு-வேகவைத்து. குடைகலலு-குடையேகலலுக. உப்பிலி-உப்பில்லாத. வெந்தை - வெந்தவிலைக்கறியை. தின்று - துகர்ந்து. உள்-மனம். அற்று-குறைந்து. வாழ்பவாழ்வர். என்றவாறு.— இல்லார்-எழுவாய். வாழ்ப-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. குடைகலன் - குழிந்தபாத்திரம். வெந்தை-வெந்தை.

இதன்கருத்து.

செல்வஞ்சென்றுகழிந்தவிடத்துப்பொற்கடகங்களோச்செறித்ததங்கைகளாலேதூற்றினவோவோத்தடகுபறித்துக்கொண்டட்டுக்குடைகலலுக வுப்பின்றிவெந்ததினைத்தின்று மனங்குறைந்துவாழ்வதொன்பதாம் .... (கூ)

ஆர்த்தபொறியவணிகிளர்வண்டினம்..... .... *
பூந்தொழிகாம்பின்மேற்செல்லாவா-நீர்த்தருவி... *
தாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்குடை... ... . *
வாழாதார்கில்லைத்தமர்..... .... *

மானம்.

இதன்பதப்பொருள்.

நீர்த்து - நீர்மையினையுடைய. அருவி - அருவிசலம். தாழா - தாழாமல்விழுகிற. உயர் - மிக்க. சிறப்பின் - சிறப்பினையுற்ற. தண் - குளிர்ந்த. குன்றம் - மலைகளையுடைய. நல் - நல்ல. நாட - நாடனே. ஆர்த்த - செறித்த. பொறிய - பொறிகளையுடைய. அணி - அழகு. இளர் - மிக்க. வண்டு - வண்டுகளினது. இனம் - கூட்டங்கள். பூத்து - மலர்ந்து. ஒழி - ஒழிந்த. கொம்பின்மேல் - கொம்பின்மேலே. செல்லாவாம் - செல்லாவாகுமதுபோல. வாழாதார்க்கு - செல்வமுடையராய்வாழாதார்க்கு. தமர் - உறவின்முறையார். இல்லை - இலராவர். என்றவாறு. - தமர் - எழுவாய். இலலை - பயனிலை.

இதன்கருத்து.

நீர்த்தருவிதாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்னாடனேயாப் பூத்தபொறிகளையுடைய வழகுமிக்கவண்டினம் பூத்தொழிந்த கொம்பின்மேற்செல்லாவாகுமதுபோலச் செல்வமுடையராய்வாழாதார்க்குத்தமரில்லையென்பதாம்..... (ஐ)

இன்மைமூற்றிற்று.

அஆ அதிகாரம்-உகூ-இ. வெண்பா... (உகூஐ)

மானம்.

மானம்-குற்றமின்மை. அஃதாவது - எவ்விடத்தினுமானஞ்சிதையாமற்காத்தொழுகுதலுமந்தமானத்துக்கோரழிவுவரின்றன்பிராணனைவிட்டுக்காப்பதூஉமாகியவியல்புகூறப்பட்டது.

திருமதுகையாகத்திறனிலார்செய்யும்..... ✻
பெருமிதங்கண்டடக்கடைத்து-மெரிமண்டிக்..... ✻
கானத்தலைப்பட்டதீப்போற்கனலுமே... .... ✻
மானமுடையார்மனம்..... .... ✻

இதன்பதப்பொருள்.

திரு-செல்வம். மதுகையாக-வலியாக. திறன் - திறப்பாடு. இலார்-இல்லாதவர். செய்யும்-செய்கின்ற. பெருமிதம்-மிகு

தினை. கண்டக்கடைத்தும்-கண்டவிடத்தும். எரி - நெருப்பு. மண்டி-நெருங்கி. கானம் - காட்டையெல்லாம். தலைப்பட்ட-பற்றிக்கொண்டுசுடுகின்ற. தீப்போல்-தீயைப்போல. மானம்-மானத்தை. உடையார்-உடையவரது. மனம்-மனது. கனலும்-கொதியாநிற்கும். என்றவாறு.—மனம்-எழுவாய். கனலும்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

செல்வம்வலியர்கத்திறப்பாடில்லாதார்செய்யுமிகுதியைக் கண்டபொழுதேதியரிமண்டிக்கானதனதையெல்லாங் கைக்கொண்டுசுடுகின்றதீப்போலமானமுடையார்மனங்கொதியாநிற்குமென்பதாம்..... (க)

என்பாயுகினுமியல்பிலார்பின்சென்று..... ..... *
தம்பாடுகாப்பதோதம்முடையார்-தம்பா ..... *
டுமையாடைமூன்றுணருமானமையுடையார்க்கு. ... *
குமையாரோதாமுற்றநோய்..... .... *

இதன்பதப்பொருள்.

என்பாய் - எலும்பாகி. உகினும் - உடம்புகெடினும். இயல்பு-குணம். இலார் - இல்லாதார். பின் - பின்னே. சென்று-போய். தம்-தம்முடைய. பாடு - இடர்ப்பாட்டை. உரைப்பதோ-சொல்லுவதோ. தம்-தம்மனதீதை. உடையார்-தமக்கெனவுடையார். தம்-தமது. பாடு - இடர்ப்பாட்டை. உரையாமை-உரைப்பதன். முன்-முன்னமே. உணரும்-அறியும். ஒண்மையுடையார்க்கு-அறிவினையுடையார்க்கு. தாம்-தாம். உற்றபொருந்திய. நோய்-வறுமைநோயினை. உரையாரோ - சொல்லாரோ. என்றவாறு.—தம்முடையார்-எழுவாய். உரைப்பதோ-பயனிலை. பாடு - செயப்படுபொருள். தம்முடையார்-எழுவாய். உரையாரோ - பயனிலை. நோய் - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

பகைநோயாற்றம்முடம்பழிந்தெனும் பாய்விழினுங்குணமில்லாதார் பின்சென்றுதாமிடர்ப்பட்ட விடர்ப்பாட்டினைச் சொல்லார்தம்மனதீதைதீதமக்கெனவுடையார்தாமிடர்ப்பட்

டவிடர்ப்பாட்டைத்தா மூரைப்பதற்கு முன்னே யுணர்ந்தத
ம்வ றுமையைக்கெடுக்கு மியல்பினை யுடையார்க்குத்தாமுற்ற
நோயைச்சொல்லாரோவென்பதாம்..... (உ)

யாமாயினெம்மில்லங்காட்டுதற்தாமாயிற்..... ... *
காணவேகற்பழியுமென்பார்போ-ணிப் .... *
புறங்கடைவைத்தீவர்சோறுமதனுன்..... .... *
மறந்திடுகெல்வர்தொடர்பு.... .... *

இதன்பதப்பொருள்.

யாமாயின்-நாமாலல். எம்-எமதுடைய. இல்லம் - இல்லத்தை. காட்டுதும்-காட்டுவோம். தாமாயின்-தாமாயில். காணவே-தம்மில்லத்தைப்பிறர்காணவே. கற்பு-கற்பானது. அழியுமென்பார்போல் - சிதையுமென்றுகருதிணைப்போல. நாணி-நாணுற்று. புறங்கடைவைத்து-எம்மைப்புறங்கடையின்கண்வைத்து. சோறுமும்-சோற்றையும். ஈவர்-இடுவர். அதனால்-அதனாலே. செல்வர்-செல்வருடைய. தொடர்பு-தொடர்ச்சியை. மற்திடுக-மறந்துவிடுக. என்றவாறு.—நீவிர்-எழுவாய்-மறந்திடுக-பயனிலை. தொடர்பை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

யாமாயினெம்மில்லத்தைக்காட்டுதற்தாமாயிற் றம்மில்லத்தைப்பிறர்காணவேகற்பழியுமென்றுகருதிணைப்போல நாணியெம்மைப்புறங்கடையின்கண்வைத்துச்சோற்றையுமிடுவரதனாற்செல்வருடையநட்பைமறந்துவிடுகவென்பதாம் (ஊ)

இம்மையுநன்றுமியனெறியுங்கைவிடா..... ..... *
தும்மையுநல்லடையத்தலாற்-செம்மையி..... .... *
னைங்கமழுங்கதுப்பினுய்நன்றேகாண்... .... *
மானமுடையார்மதிப்பு..... .... *

இதன்பதப்பொருள்.

இம்மையும்-இப்பிறப்பிற்கும். நன்றும்-நன்மையுண்டாம். இயல்-இயல்பாகிய. நெறியும்-ஒழுக்கநெறியும். கைவிடாது-நீங்காதுநிற்கும். உம்மையும்-மறுபிறப்பிற்கும். நல்ல-நல்லவின்பங்களை. பயத்தலால்-உண்டாக்குமாதலால். செம்மையி

ன்-செம்மையாக. நானம்-புழுகு. கமழும் - மணங்கமழும். கதுப்பினுப்-அளகத்தினையுடையாய். மானமூடையார்-மானமூடையோர். மதிப்பு-ஒருவனைமதிக்குமதிப்பு. நன்று-நன்மை. என்றவாறு.—மதிப்பு-எழுவாய். நன்று-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. காண்-முன்னிலையசைநிலை.

இதன்கருத்து.

இப்பிறப்பிற்குநன்மையுண்டாமியல்பாகியவொழுக்கநெறியுங்கைவிடாதுநிற்கு மறுமைப்பிறப்பிற்குநல்லவின்பங்கூடியுண்டாக்குமாதலாலெல்லார்க்கும்புலனுகநானங்கமழுங்கதுப்பினுய் மானமூடையமக்களொருவனைமதிக்குமதிப்பு நன்றென்பதாம்..... (சு)

பாவமுமேமனைப்பழியும்படவருவ..... .... *
சாவினுஞ்சான்றவர்செய்கலார்-சாத..... ... . *
லொருநாளொருபொழுதைத்துன்பமையேபோ..... *
லருதலையாற்றுதலின்று ... ... *

இதன்பதப்பொருள்.

பாவமும்-மறுமைக்குப்பாவமும். ஏனை-அஃதாழிந்து. பழியும்-இம்மைக்குப்பழியும். பட-உண்டாக. வருவ-வருவனவற்றை. சாவினும்-தாஞ்சாவவரினும். சான்றவர்-சால்புடையோர். செய்கலார்-செய்யார். சாதல்-சாதலஞ்சுதான். ஒருநாள்-ஒருவற்கொருநாள். ஒருபொழுது-ஒருமாத்திரைப்பொழுதில். துன்பம்-துன்பமேதருவது. அலைபோல்-அவத்திரனைப்போல. அருமை-அரிய. நலை-துன்பத்தை. ஆற்றுதல்-நெடுநாட்டருவது. இன்று-இல்லை-என்றவாறு.—சான்றவர்.எழுவாய். செய்கலார்-பயனிலை. வருவனவற்றை-செயப்படுபொருள். ஐ-அசைநிலை. சாவினுமென்றுபாடமோதி-தளர்ச்சிவளரினுமென்றுபொருளுரைப்பாருமுளர்.

இதன்கருத்து.

மறுமைக்குப்பாவமுமிம்மைக்குப்பழியும்வருவனவற்றைத்தாஞ்சாவவரினுமைந்தார்செய்யார்சாதலொருநாளொருபொழுதுவருத்துன்பமேதருவதப்பாவமும்பழியும்போலாயதுன்பத்தைநெடுநாட்டருவதில்லையென்பதாம் ... ... (கு)

மல்லன்மாஞாலத்துவாழ்பவருளெல்லாஞ்..... .. ❋
செல்வமொனிணுங்கொடாதவர்-நல்கூர்ந்தார்..... ❋
நல்கூர்ந்தக்கண்ணும்பெருமூத்தையரோ ... . ❋
செல்வரைச்சென்றிரவாதார்... .... ❋

இதன்பதப்பொருள்.

மல்லல்-வளப்பத்தையுடைய. மா-பெரிய. ஞாலத்து-பூமியிடத்து. வாழ்பவர்-உயிர்வாழ்பவர். உளெல்லாம்-எல்லாருள்ளும். செல்வமொனிணும்-மிக்கசெல்வமோயாயினும். கொடாதவர்-பிறர்க்குக்கொடாதவர். நல்கூர்ந்தார்-வறுமையோடொப்பர். நல்கூர்ந்தக்கண்ணும்-வறுமையுற்றவிடத்தும். செல்வரை-செல்வமுடையோரை. சென்று-போய். இரவாதார்-இரவாதவர். பெருமூத்தையர்-பெருமூத்தையரோடொப்பர். என்றவாறு.—கொடாதவர்-எழுவாய். நல்கூர்ந்தார்-பயனிலை. இரவாதார்-எழுவாய். பெருமூத்தையர்-பயனிலை. ஏகாரம்-அசைநிலை. பெருமூத்தையனென்பது-பெருமூத்தையனென்னுஞ் சிறப்புப்பெயர்பெற்றசெல்வர்-புகழான்மூவுலகுடையமொனிணுமமையும்.

இதன்கருத்து.

வளமையுடையபெரியஞாலத்தின்கண்வாழ்பவரெல்லாருள்ளுமிக்கசெல்வமோயாயினுங்கொடாதவர்நல்கூர்ந்தாரோடொப்பர் வறுமையுற்றகாலத்துஞ் செல்வமுடையாரைச்சென்றிரவாதார்பெருமூத்தையரோடொப்பரென்பதாம்... ... (சு)

கடையெலாங்காய்பசியஞ்சுமற்றேனை..... ❋
யிடையெலாமின்மையஞ்சும்-புடைபரந்த ... ... ❋
விற்புருவவேனெடுங்கண்ணுயத்தலையெலாஞ்..... ... ❋
சொற்பழியஞ்சிவிடும் .... ❋

இதன்பதப்பொருள்.

கடை-கடையாயினோர். எல்லாம்-எல்லாரும். காய்-மிக்க. பசி-பசிக்கு. அஞ்சும்-அஞ்சுவர். மற்றேனை-மற்றொழிந்த. இடை-இடையாயினோர். எலாம்-எல்லாரும். இன்மை-தண்டத்தால் வருந்தன்பத்திற்கு. அஞ்சும்-அஞ்சுவர். புடை-பக்கம். பரந்த-பரந்திருக்கின்ற. வில்-விற்போலும். புருவம்-புருவத்தினையு

ம். வேல்-வேல்போலும். நெடிம்-நெடிய. கண்ணுய்-கண்ணை யுடையாய். தலை-தலையாயினுர். எலாம்-எல்லாரும். சொற் பழி-தனக்குவரும்பழிப்புரைக்கு. அஞ்சிவிடும்-அஞ்சுவர். என்றவாறு.—கடை-இடை-தலை-இவை மூன்றும்-எழுவாய். அஞ்சும்-அஞ்சும்-அஞ்சிவிடும்-இவை மூன்றும்-பயனிலை.

இதன்கருத்து.

கடையாயினுமெல்லாருங்காய் பகிக்கஞ்சுவரிடையினு மெல் லாருந்தண்டத்தான்வருமின்னுமைக்கஞ்சுவர்புடைபரந்தவித் புருவவேனெடுங்கண்ணுய்தலையாயினுமெல்லாருஞ்சொற்பழிக் கஞ்சுவரென்பதாம்..... ...ஃ..... .... (எ)

நல்லர்பெரிதளியர்நல்கூர்ந்தாரென்றெள்ளிச்... ... ... *
செல்வர்சிறுநோக்குநோக்குங்காற்-கொல்லை ... ... *
லுலையூதுந்தீயேபோலுள்கனலுங்கொல்லோ ... ... *
தலையாயசான்றோர்மனம்..... .... *

இதன்பதப்பொருள்.

நல்லர்-இவர்நன்மையுடையர். பெரிது-மிகவும். அளியர்-அளிக்கத்தகுவர். நல்கூர்ந்தாரென்றவறுமையுற்றாரென்று. எள்ளி-இவ்வாறிகழ்ந்துசொல்லி. செல்வர்-செல்வராயினுர். சிறுநோக்கு-சிறியபார்வைகொண்டு. நோக்குங்கால்-பார்க் குங்காலத்து. தலையாய-தலைமையாகிய. சான்றோர்-சால்பு டையோர். மனம்-மனது. கொல்லன்-கருமானது. உலை-உலை க்களத்து. ஊதும்-ஊதாநின்ற. தீயேபோல்-நெயப்போல. உள்-உள்ளே. கனலும்-எரியாநிற்கும். என்றவாறு.—மனம்-எழுவாய். கனலும்-பயனிலை. கொல்லும்-ஓகாரமும்-அசைநி லைகள். கொல்லனுலையூதுந்தீயென்றுர்-மேற்சொரிந்தபதனை விட்டுமேற்புலப்படாமலுள்ளேயெரிந்துமண்டுதல்.

இதன்கருத்து.

இவர்நன்மையுடையர்பெரிதுமளிக்கத்தகுவர்வறுமையுற் றாரென்றிவ்வாறிகழ்ந்துசொல்லிச்செல்வராயினுர்சிறுநோக்கு நோக்குங்காற்றலையாயசான்றோர்மனங்கொல்லனுலையூதுந்தீ ப்போலவுள்ளேகொதிக்குமென்பதாம்..... .... (அ)

நச்சியார்க்கியாமைநாணன்றுநாணுரு... ... ... ✻
மச்சத்தாணுதணுணன்று-மெச்சத்தின் ... ... ✻
மெல்லியராகித்தம்மேலாயார்செய்தது..... ..... ✻
சொல்லாதிருப்பதுநாண் ... ... ✻

இதன்பதப்பொருள்.

நச்சியார்க்கு-தம்மைவிரும்பிவந்தவர்க்கு. ஈயாமை - ஒன்றைக்கொடாதிருக்குந்தன்மை. நாணன்று-நாணமல்ல. நாணுரும்-நாருநாரும். அச்சத்தால்-போருக்கஞ்சிவந்தவச்சத்தினால். நாணுதல் - நாணுதலும். நாணன்று-நாணமல்ல. எச்சத்தின்-மெய்ம்மையாகவே. மெல்லியராகி-எளியராகவைத்து. தம்மேல்-தம்மேல்வந்து. ஆயார்-மாறுயினர். செய்தது-செய்ததகுதியல்லதனை. சொல்லாதிருப்பது-பிறர்க்குச்சொல்லாதிருப்பது. நாண் - நாணமுடைமை. என்றவாறு.—நாண்-எழுவாய். சொல்லாதிருப்பது - பயனிலை. செய்ததை-செயப்படுபொருள். ஆம்-அசைநிலை.

இதன்கருத்து.

தம்மையிரந்துவந்தார்க்கொன்றையுதவப்பெறுமையால்வருநாணுநாணன் றெல்லாநாருஞ்செருவின்கட்புக்கஞ்சுமச்சங்காரணமாகவருநாணுநாணன்று மெய்ம்மையாகவே பிறப்பிணுமொழுக்கத்தினுணுமெளியராகவைத்துத் தம்மேல்வந்துமாறுயினர்செய்ததகுதியல்லதனைப்பிறர்க்குச் சொல்லாதிருப்பதுநாணமென்பதாம்... ... ... (கூ)

கடமாதொலைச்சியகாணுறைவேங்கை..... ..... ✻
யிடம்வீழ்ந்ததுண்ணுதிறக்கு-மிடமுடைய ... ... ✻
வானகங்ஙகையுறினும்வேண்டார்விழுமியோர்..... ✻
மானமழுங்கவரின்..... ✻

இதன்பதப்பொருள்.

கடமா-கடமாவை. தொலைச்சிய - கொன்ற. காண் - காட்டிலே. உறை-உறைகின்ற. வேங்கை - வேங்கையானது. இடம்-அக்கொன்றகடமாவிடப்பக்கம். வீழ்ந்தது - கீழ்ப்படவிழுமாகில். உண்ணுது-அதனைதின்னுமல். இறக்கும்-போய்விடுமதுபோல. விழுமியோர்-சீரியோர். இடம்-இடத்தை. உடைய-

இரவச்சம்.

உடைத்தான. வானகம்-வானகமெல்லாம். கையதிறும்-தமக்குவந்தெய்திறும். மானம்-மானம். அழுங்க-அழிய. வரின்-வந்தசெல்வமாயின். வேண்டார் - அதனை விரும்பார். என்ற வாறு.—விழுமியோர் - எழுவாய். வேண்டார்-பயனிலை. அதனை - செயப்படுபொருள். கடமாகொலைச்சியமென்பது உம் பாடம்.

இதன்கருத்து.

கடமாவினைக்கொன்றகானுறையும்புலியான தக்கொன்றகடமாவிடமருங்குவீழ்ந்ததாயினதனைத்தின்னுறுபோமதுபோலவிழுமியோரிடத்தையுடைத்தானவானகமெல்லாந்தமக்குவந்தெய்திறுமானங்கெடவந்தசெல்வமாயினதனைவிரும்பாரென்பதாம்..... .... (ஐ)

மாளமூற்றிற்று.

அஅ அதிகாரம்-ஈஐ-இ. வெண்பா... (ஈஈ)

இரவச்சம்.

இரவு-இரத்தலினுடைய. அச்சம்-பயம். அஃதாவது-வறுமையுற்றுழியவ்வறுமைதானேதள்ளிக்கொண்டுபோயிரப்பிக்குமம்பொழுதுதமக்குள்ளவொளியடங்கலுமழுங்கிக்கண்கள் குழிந்திதமதுபொலிவுந்திருந்துகடுகவுரைகூடாதுதின்றுநன்றுனதருமங்களுமதுரமாகச்சொல்லித்தமதுவறுமையைப்பலகாலுஞ்சொல்லுங்காலத்தவ்விரக்கப்படாதவர் செவியிற்றுக்காதுபின்பவனையெளியராகநினைத்துக்கடைக்கணித்துப்பார்க்குங்கண்களையுமவர்கொடுப்பாரைப்போலேயிருந்துபின்பொன்றுமில்லையென்றுவிடமூச்செறிந்துசெயலற்றுப்போம்போக்கையுங்கண்டவ்விரப்பினையஞ்சுதலாம்.

நம்மாலேயாவரிந்நல்கூர்ந்தாரொருவரன்றுத்..... *
தம்மாலாமாக்கமிலரென்று-தம்மை..... ... . *
மருண்டமனத்தார்பின்செல்பவோதாமுந்... ..... *
தெருண்டவறிவினவர்..... *

இதன்பதப்பொருள்.

இந்தல்கூர்ந்தார்-இந்தவறுவியர். நம்மாலே - நம்மாலே. ஆவர்-ஆக்கமுடையாராவரன்றி. எஞ்ஞான்றும்-எந்நாளும். தம்மால்-தம்மாலே. ஆம்-ஆகும். ஆக்கம்-செல்வம். இலென்று-இல்லாதவென்று. தம்மை-இப்படித்தம்மை. மருண்ட-இகழ்ந்த. மனத்தார்-மனத்தினையுடையார். பின்-பின்பு. செல்பவோ-இரந்துசெல்வதோ. தாமும்-தாமும். தெருண்ட-தெளிந்த. அறிவினவர்-அறிவினையுடையார். என்றவாறு.—அறிவினவர்-எழுவாய். செல்பவோ-பயனிலை.

இதன்கருத்து.

இந்தல்கூர்ந்தார்நம்மாலேயுளராகின்றாரல்லதெஞ்ஞான்றுந்தம்மாலாகுமாக்கமிலென்றிப்படித்தம்மையிகழ்ந்தமனத்தினையுடையார் பின்னிரந்துசெல்லார்தாமுந்தெருண்டவறிவினையுடையாரென்பதாம். ..... (க)

இழித்தக்கசெய்தொருவனுரவுணவித்..... .... ✻
பழித்தக்கசெய்யான்பசித்தறவேரு..... ... ... ✻
விழித்திமைக்குமாதிரையன்றேவெகாருவ... ..... ✻
னழித்துப்பிறக்கும்பிறப்பு..... .... ✻

இதன்பதப்பொருள்.

ஒருவன்-ஒருத்தன். அழித்து-செத்து. பிறக்கும்-பிறக்கின்ற. பிறப்பு-உற்பத்தி. விழித்து-கண்ணிணவிழித்து. இமைக்கும்-இமைக்கின்ற. மாத்திரையன்றே-அளவல்லோவாதலால். இழித்தக்க-இழிவானவிரப்பினை. செய்து-இரந்து. ஆர-வயிரார. உணவில்-உண்டவில். பழித்தக்க-பிறர்பழிக்கத்தக்கதனை. செய்யான்-செய்யாதிருந்து. ஒருவன்-ஒருவற்கு. பசித்தல்-பசித்தல். தவறே-குற்றமோ. என்றவாறு.—பசித்தல்-எழுவாய். தவறே-பயனிலை. அழித்துப்பிறக்கும்பிறப்பாவது-இப்போதிக்கருத்தொருபொருள்விட்டொருபொருளைப்பற்றுவதுபோலப்போதுடம்புவிட்டுப்பிறத்தல்.

இதன்கருத்து.

ஒருத்தன்மரித்துப்பிறக்கும்பிறப்புவிழித்திமைக்குமாத்திரையன்றே ஆதலாலிழித்தக்கவிரப்பினைச்செய்துவயிரார்வண்

இரவச்சம்.

உலித் பிறர் பழிக்கத்தக்கதனைச்செய்யாதிருந்தொருவற்குப்ப
சித்தல்குற்றமன்றென்பதாம்..... .... (உ)

இல்லாமைகத்தாவிரவு துணிந்தொருவர்..... ... ... *
செல்லாருமல்லர்சிறுதெறி-புல்லா..... .... *
வகம்புகுமினுண்ணுமினென்பவர்மாட்டல்லான்.... *
முகம்புகுதலாற்றுமோமேல்..... .... *

இதன்பதப்பொருள்.

இல்லாமை - வறுமையே. கத்தா-பற்றுக்கோடாக. இரவு-இரப்பினை. துணிந்து-துணிந்துகொண்டு. ஒருவர் - ஒருத்தர். சிறுதெறி-சிறியவழியில். செல்லரும் - செல்லாதிருப்பாரும். அல்லர் - அல்லர். புல்லா-தழுவிக்கொண்டு. அகம்-எம்மில்லம். புகுமின்-புகுதுமின். உண்ணுமின்-உண்மின். என்பவர்மாட்டல்லால்-என்றுபசரிப்பவரிடத்தல்லது. முகம் - மற்றையார் முன். புகுதல்-செல்லல். ஆற்றுமோ-வல்லவராவரோ. மேல்-மேலாயார். என்றவாறு.—மேல் - எழுவாய். ஆற்றுமோ-பயனிலை.

இதன்கருத்து.

வறுமையே பற்றுக்கோடாக விரப்பினைத் துணிந்தொருவர் சிறுதெறிக்கட்செல்லாருமல்லர் புல்லிக்கொண்டெம்மில்லம்புகுதுமினுண்ணுமினென் றேற்றுக்கொள்பவர் மாட்டல்லாதமற்றையார் முன்புசெல்லவல்லவராவரோ மேலாயாரென்பதாம்..... .... (ஊ)

திருத்தன்னைநீப்பினுந்தெய்வஞ்செறினு..... *
முருத்தமனத்தோடுயர்வுள்ளினல்லா..... ... ... *
லருத்தஞ்செறிக்குமறிவிலார்பின்சென்..... ... ... *
றெருத்திறைஞ்சிநில்லாதாமேல்..... .... *

இதன்பதப்பொருள்.

திரு-திருமடந்தை. தன்னை-தன்னைவிட்டு. நீப்பினும் - நீங்கினும். தெய்வம்-தெய்வம். செறினும்-செறிப்பினும். உருத்த-எழுந்த. மனத்தோடு-மனதிற்றினல். உயர்வு - உயர்வே. உள்ளினலால்-நினைப்பதல்லது. அருத்தம்-பொருளை. செறிக்கும்-புதைத்துவைக்கும். அறிவிலார்-அறிவிலாதார். பின்-பின்பு.

சென்று-போய். எருத்திறைஞ்சி - தலையிறக்கிட்டு. நில்லாது-நில்லார். மேல்-மேலாயினார். என்றவாறு.—மேல் - எழுவாய். நில்லாது-பயனிலை. ஆம் - அசைநிலை.

இதன் கருத்து.

திருமடந்தைதன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினுமெழுந்த மனத்தானுயர்வேநினைப்பினல்லது பொருளைப்புகைக்குமறிவிலாதார் பின் சென்றெருத்திறைஞ்சிநில்லார் மேலாயினொன்பதாம் ..... (சு)

கரவாதிண்ணன்பிற்கண்ணன்னுர்கண்ணு .... *
மிரவாதுவாழ்வதாம்வாழ்க்கை-யிரவினை .. .. *
யுள்ளுங்காலுள்ளமுருகுமாலென்கொலோ..... *
கொள்ளுங்காற்கொள்வார்குறிப்பு... ..... *

இதன் பதப்பொருள்.

கரவாத-பொருளையொளியாத. திண்-திண்ணிய. அன்பின்-அன்பினையுடைய. கண்ணன்னுர்கண்ணும்-தங்கண்ணையாரிடத்தும். இரவாது-இரவாமல். வாழ்வதாம்-வாழும்வாழ்க்கையாம். வாழ்க்கை-ஒருவற்குவாழ்க்கை. இரவினை-அவ்விரவினை. உள்ளுங்கால்-நினைக்குங்கால். உள்ளம்-நெஞ்சு. உருகுமால்-உருகியழியாநிற்குமாதலால். கொள்ளுங்கால் - கொள்ளும்பொழுது. கொள்வார்-கொள்ளுவார். குறிப்பு-மனம். என்கொலோ-என்செய்யுமோ. என்றவாறு.—வாழ்க்கை.எழுவாய். வாழ்வதாம்-பயனிலை. குறிப்பு - எழுவாய். என்கொலோ-பயனிலை.

இதன்கருத்து.

தமக்குள்ளபொருளைக்கரவாதிண்ணியவன்பினையுடையதங்கண்ணையாரிடத்துஞ்சென்றிரவாதுவாழ்வதாம்வாழ்க்கையவ்விரவினை நினைக்கும்பொழுதுள்ளமுருகியழியாநிற்குமாதலாற்கொள்ளும்பொழுது கொள்வார்மனமென் செய்யுமோவென்பதாம்..... .... (சு)

இன்னுவியைகவினியவொழுகென்று..... ... ... *
தன்னேயேதானிரப்பத்தீர்வதற்-கென்னேகொல்.... *
காதல்கவற்றுமனத்திலுற்கண்பாழ்ப்பட்..... ... ... *
டேதிலவனையிரவு..... .... *

இரவச்சம்.

இதன்பதப்பொருள்.

இன்னு-இன்னுதவறுமைகள். இனைய-எனக்குணடாவதாக. இனிய-இனியசெல்வங்கள். ஒழிகென்று-வேண்டாவென்றுகருதி. தன்னேயே-தன்னெஞ்சினேயே. தானிரப்ப-தானிரந்துகொள்ளவே. தீர்வதற்கு-தன்பமொழிவதாயிருக்க. காதல்-பொருளாசையால். கவர்றும்-கவலைப்படுத்தும். மனத்திலு-மனத்தால். கண்-கண்கள். பாழ்பட்டு-பொலிவழிந்து. எதிலவரை-அன்னியரைச்சென்று. இரவு-இரக்கின்றது. என்னெகொல்-யாதுதான். என்றவாறு.—இரவு-எழுவாய். என்னை-பயனிலை.

இதன்கருத்து.

இன்னுதவறுமைகளெனக்குவந்துபொருந்துக வினியசெல்வங்கள்வேண்டாவென்றுகருதித்தன்னெஞ்சினேயேதானிரந்துகொள்ளவேவறுமையான்வருந்தன்பம்போவதாயிருக்கப் பொருளாசையாற் கவலைசெய்வித்தமனத்தாற் கண்கள்பொலிவழிந்தன்னியரைச்சென்றிரக்கின்றதென்னையென்பதாம் (சு)

என்றூர்புதியார்பிறப்பினுமிவ்வுலகத்... .... *
தென்றுமவமேபிறக்கலான்-குன்றின்..... ..... *
பரப்பெலாம்பொன்னெழுதும்பாயருவிநாட..... *
விரப்பாரையெள்ளாமகன்..... ..... *

இதன்பதப்பொருள்.

குன்றின்-மலையினது. பரப்பெலாம்-பரப்பெல்லாம். பொன்-பொன்னை. ஒழுகும்-கொழித்து. பாய்-விழுகிற. அருவி-அருவியினையுடைய. நாட-மலைநாடனே. இரப்பாரை-இரக்குமவரை. எள்ளா-இகழாத. மகன்-மனிதன். என்றும்-எப்பொழுதும். புதியார்-புதியராக. பிறப்பினும்-பிறந்தாலும். இவ்வுலகத்து-இந்தவுலகத்தில். எஞ்ஞான்றும்-எந்நாளும். அவனே-அப்படியொத்தவனே. பிறக்கலான்-பிறக்கிற்றிலன். என்றவாறு.—மகன்-எழுவாய். பிறக்கலான்-பயனிலை. இஃதிரவச்சமானதெப்படியென்னிலிந்தவுலகத்திலிரக்குமவனேயிகழாதகூர்யாவருமில்லையாதலினிலையாதவுடம்பினைவிரும்பியிகழ்ச்சிக்கிடங்கொடாமலவ்விரப்பினைத்தவிரவேண்டுமென்பதாம்.

இதன்கருத்து.

குன்றின் பரப்பெலாம் பொன்னெழுதும்பாயருவி நாட னேயிரப்பாரையிகழாதமகனெப்பொழுதும் பிறக்கிறமனிதர் வேறுபட்டுப்புதியராகப்பிறப்பிலுமிவ்வுலகத்தென்றுமவனே பிறவாதொழிகின்றனென்பதாம்..... ..... (எ)

புறத்துத்தன்னின்மைநவியவகத்துத்தன் ... . *
னன்ஞானநீக்கிநிறீஇயொருவனே .... *
யீயாயெனக்கென்றிரப்பானேலந்நிலையே .... *
மாயாவேனுமாற்றிவிடின்..... .... *

இதன்பதப்பொருள்.

தன்-தனது. இன்மை-வறுமை. புறத்து - புறம்பானதன் மேனியை. நவிய-வருத்த. தன்-தனது. அகத்து-நெஞ்சினு ள்ளே. நன்ஞானம்-நல்லறிவினை. நீக்கி-கெடித்து. நிறீஇ-அறி யாமையைநிறுத்தி. ஒருவனே - ஒருவன்பக்கற்சென்று. எனக் கு-எனக்கு. ஈயாயென்று - தரல்வேண்டுமென்று. இரப்பா னேல்-இரப்பானுகில். மாற்றிவிடின்-அவனில்லையென்றுமற றுத்துவிடின். அந்நிலையே-அப்பொழுதே. மாயாவே - மாய்ந் துவிடாவே. என்றவாறு.—அவன் - எழுவாய். மாயாவே- பயனிலை.

இதன்கருத்து.

தன்வறுமையான துபுறம்பானதன்மேனியைப்பொலிவழி க்கத்தன்னகத்துள்ளே நல்லறிவினை நீக்கியறியாமையை நிறுத் தி பிறனொருவனைச்சென்றீயாயெனக்கென்றிரப்பானுயிற்ற னிரந்தவனேயவன்மாற்றினுலப்பொழுதேமாய்ந்துவிடாவே வென்பதாம்..... (அ)

ஒருவனொருவனைச்சார்ந்தொழுகலாற்றி..... ..... *
வழிபடுதல்வல்லுதலல்லாற்-பரிசழிந்து... .... *
செய்யீரோவென்னுனுமென்னுஞ்சொற்கின்றதே . *
டையதீராஞ்செல்லுமெறி..... ..... *

இதன்பதப்பொருள்.

ஒருவர்-ஒருத்தர். ஒருவனை-பிறொருவனை. சார்ந்து-சேர் ந்து. ஒழுகல்-ஒழுகுதலை. ஆற்றி-செய்து. வழிபடுதல்-அவருந்

தாமும்வழிபட்டிருக்கும். வல்லுதல் - முறைமையே. அல்லால்-அல்லது. பரிசு-தம்பண்பு. அழிந்து-சிதைந்து. என்னுனும்-எமக்கியாதானுமொன்றினை. செய்யீரோ-உதவிசெய்யமாட்டீரோ. என்னும்-என்றிரந்துசொல்லும். சொற்கு-சொல்லுப்பார்க்க. பைய-மெல்ல. தாம்-தாம். செல்லும்-துறந்து போய்த்தவம்பண்ணும். நெறி-நல்வழி. இன்னுதே-பொல்லாதோ. என்றவாறு.—நெறி-எழுவாய். இன்னுதே-பயனிலை.

இதன்கருத்து.

ஒருவர்பிறரொருவரைச்சார்ந்தொழுகுதலைச்செய்துவழிபட்டிருக்குமுறைமையேயல்லது 'தம்பண்புழிந்தெமக்கியாதானுமுதவிசெய்யீரோவென்றிரந்துசொல்லுஞ் சொல்லுப்பார்க்கமெல்லத்துறந்துபோந்தவறிவின்னுதோவென்பதாம்.

(கூ)

பழமைகந்தாகப்பசைந்தவழியே... ... ... ❋
கிழமைதானியாதானுஞ்செய்க-கிழமை... ... ... ❋
பொரு அரவொன்னித்பொதிந்திதந்நெஞ்சத்... ... ❋
சுரு அச்சுடுவதோர்தீ..... .... ❋

இதன்பதப்பொருள்.

பழமை-பழமையை. கந்தாக-பற்றுக்கோடாகக்கொண்டு. பசைந்த-தொடர்ந்த. வழி-தொடர்ச்சியை. கிழமை - உரிமையாக. யாதானும்-யாதானுமொன்றினை. செய்க-செய்துவேண்டுக. கிழமை-அவ்வுரிமையை. அவர்-அவர். பொரு-பொன்னில்-பொருராயில். தம்-தமது. நெஞ்சத்து-நெஞ்சிலே. பொத்தி-பொதிந்துகொண்டு. அரு-ஆருமல். சுடுவது - எரிவது. ஓர்-ஒரு. தீ-நெருப்பு. என்றவாறு.—தீ-எழுவாய். சுடுவது-பயனிலை. ஏகாரம்-தான்-இவ்விரண்டுமசைநிலை. அரு-செய்யுள்விகாரம். இஃது-கூடாநட்புக்குப்பொருந்தினபாட்டிரவச்சமானதெப்படியென்னிற்கலந்து நட்புச்செய்தாரிடத்துந்தன்னுடைமையைவிரும்பிப்பெறுதற்கரியநட்பினேவேறுபடுத்துவராதலிற்பிறரொருவனுக்கப்படியொத்தவுடைமையினைக்கொடானென்பதுகொண்டவ்விரப்பினைத்தவிரக்கடவனென்பதாம்.

அவையறிதல்.

இதன்கருத்து.

பழமையைப்பற்றுக்கோடாகக்கொண்டு தொடர்ந்ததொடர்ச்சியைக் காரணமாக யாதானுமொன்றுரிமை செய்துவேண்டுகவவ்வுரிமையையவர்பொருளாயிற் றமதுநெஞ்சத்தின்கண்பொதிந்துகொண்டாருமதற்சுவதொருதியென்பதாம்(ம)

இரவச்சமுற்றிற்று.

அஃ அதிகாரம்-நகஇ வெண்பா... (நாம)

அவையறிதல்.

அவை-சபையை. அறிதல்-அறிதல். அஃதாவது - கற்றறிவினையுடையார்திரட்சியினையறிதல் அறிகையாவதுலகத்துக்குப்பொதுப்படவழங்குநூல்களைக்கற்றவர்களுந்தத்தஞ்சமயநூல்களைக்கற்றவர்களுமிவ் விருதிறத்திற்கற்ற நூல்களையுநுண்ணிதாகவறிந்திருப்பாருந்தூலமாகவறிந்திருப்பாரு நுண்ணிதாகவெல்லாநூல்களினுமுட்புகுந்துண்மையானபொருளையுணர்ந்தொன்றினையுஞ்சொல்லாமல்லைதிபிறந்திருப்பாருமாகியவித்தத்திரட்சியினையுள் விளங்கித்தாஞ்சென்றினைச் சொல்லிலிதுவெல்லுந்தோற்குமென்றறிந்துசொல்லுதலுமொன்றினையுமறியாததிரட்சியினையறிந்ததற்குத்தக்கநிற்றலுமாம்.

மெய்ஞ்ஞானக்கோட்டியுறழ்வழிவிட்டாங்கோ..... ❋
ரஞ்ஞானத்தத்திட்டதுவாங்கறத்துழாய்க்..... ❋
கைஞ்ஞானங்கொண்டொழுகுங்காரறிவாளர்முன்... ❋
சொன்ஞானஞ்சோரவிடல்..... ..... ❋

இதன்பதப்பொருள்.

மெய்-மெய்யான. ஞானம்-ஞானநூல்களைக்கற்ற-கோட்டி-சபையிலே. உறழ்-கலந்த. வழி-வழியை. விட்டு-தவிர்த்து. ஆங்கு-அவ்விடத்து. ஓரஞ்ஞானம்- ஞானமில்லாததொன்றை. தந்திட்டு-சொல்லிக்காட்டி. அது-அதனை. ஆங்கு-அவ்விடத்திலே. அற-மிகவும். துழாய் - பரப்பி. கை - கைகளாற்குத்தி.

ஞானங்கொண்டு - தாஞ்சொன்னபுல்லியபொருளைக்கொண்டு. ஒழுகும் - நடக்கும். கார் - பயங்கிய. அறிவாளர் - அறிவினையுடையார். முன் - முன்பு. சொல் - சொல்லும். ஞானம் - அறிவை. சோரவிடல - தளரவிடுக. எஞ்றவாறு.—நீவிர் - எழுவாய். சோரவிடல் - பயனிலை. ஞானத்தை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

மெய்ஞ்ஞானக்கோட்டியட்கலந்தை பிழையவிட்டவிடத்து ஞானமிலாததொன்றைமிகவும்பரப்பிகையிலிடர்செய்து தாஞ்சொன்னபுல்லியபொருளைக்கொண்டுநடக்குமயங்கியவறிவினையுடையார்முன்புசொல்லுஞானத்தைச்சோரவிடுகவென்பதாம்..... (க)

நாப்பாடஞ்சொல்விநயமூணர்வார்போற்செறிக்குந் *
தீப்புலவ நீசரார்செறிவுடையார்-தீப்புலவன்..... *
கோட்டியுட்சூன்றக்குடிப்பழிக்குமல்லாக்காற்..... *
மேற்புடைக்கொள்ளாவெழும்..... *

இதன்பதப்பொருள்.

நா - நாவிற்கு. பாடம் - வந்தபாடங்களை. சொல்வி - கூறி. நயம் - நல்லநூற்பொருளை. உணர்வார்போல் - அறியுமவரைப்போல. செறிக்கும் - அந்நாப்பாடத்தையேகொண்டுபுகும். தீ - பொல்லாத. புலவன் - அறிவுடையவனை. சேரார் - அடையார். செறிவுடையார் - அடக்கமுடையார். தீப்புலவன் - அத்தீப்புலவன். கோட்டியுள் - சபையிலிருந்து. குன்ற - குறைய. குடி - குடியை. பழிக்கும் - பழிப்பன். அல்லாக்கால் - அல்லாதவிடத்து. தோள் - தோளினை. புடை - கையாற்புடைத்து. கொள்ளா - மேற்கொண்டு. எழும் - மற்போருக்கெழுந்திருப்பன். என்றவாறு.—செறிவுடையார் - எழுவாய். சேரார் - பயனிலை. தீப்புலவனை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

நாப்பாடத்தையேகூறிநன்னூற் பொருளறிவானைப்போலந்நாப்பாடத்தையேகொண்டுபுகுந் தீப்புலவனைக்கூடாரடக்கமுடையாரத்தீப்புலவனவையுட்டோற்றவன்குடியைப்பழி

ப்பன்பழித்திலனுயிற்பிறிதான்றினை மேற்கொண்டு தன்ரே
ஷக்கையாற்புடைத்துமற்போருக்கெழுவனெனபதாம். (உ)

சொற்றூற்றல்கொண்டுசூளைத்தெழுதல்காமுறுவர் . ✻
கற்றூற்றல்வன்மையுந்தாந்தேறூர்-கற்ற... ... ... ✻
செலவுரைக்குமாறறியார்தோற்பதறியார்..... ..... ✻
பலவுரைக்குமாந்தர்பலர்,..... .... ✻

இதன்பதப்பொருள்.

சொற்றூற்றல்-தாஞ்சொல்லுதலை. ஆற்றல்கொண்டு - மேலாகக் கொண்டு. சூளைத்தெழுதல்-பிறருடனே வாதுசெய்தலிலேயே மிக்குத்தொடங்குதலை. காமுறுவர்-ஆசைப்படுவர். கற்றூற்றல்-நூல் கலைக்கற்றூற்றல். ஆற்றல-நடாத்தல். வன்மையும்-வலிமையையும். தாம்-தாம். தேறூர் - தெளியார். கற்ற - தாங்கற்றனவற்றை. செல-செல்ல. உரைக்குஞ்-சொல்லும். ஆறு-வழியையும். அறியார்-அறியமாட்டார். தோற்பது-தோற்பதனையும். அறியார்-உணரார். பல-பலவற்றையும். உரைக்கும்-சொல்லும். மாந்தர்-மனிதர். பலர்-அநேகர். என்றவாறு.—மாந்தர்-எழுவாய். பலர்-பயனிலை. செற்றூற்றென்பதூஉம்பாடம். சூளைத்தெழுதலென்றுபாடமோதி - விளைந்துசெல்லுதலென்றுபொருள் கூறுவாருமுளர். சூளைத்தெழுதல் - பிறருடனேவாதுசெய்யவெழுதல்.

இதன்கருத்து.

தாஞ்சொல்லுதலைமேலாகக்கொண்டு பிறருடன்வாதுசெய்தலிலேமிக்குத்தொடங்குதலைக்காதலிப்பர்தமக்கெதிர்வாதியானவரறியுநூல்களைக்கோதறக்கற்றுநடாத்தல்வன்மையுந்தாமறியார்தாங்கற்றனவற்றைப் பிறர்க்குணரச்சொல்லுமாறுமறியார்தாந்தோற்பதனையுமறியார்பின்னையும்பலவற்றையுமுரைக்குமாந்தர்பலரென்பதாம்..... .... (ஈ)

கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தாற்..... ✻
பெற்றதாம்பேதையோர்சூத்திர-மற்றதனை..... ✻
நல்லாரிடைப்புக்குநாணதுசொல்லித்தன்... ... ... ✻
புல்லறிவுகாட்டிவிடும்..... .... ✻

இதன்பதப்பொருள்.

கற்றதூஉம்-தான்கற்றதும். இன்றி-ஒன்றின்றி. கணக்காயர்-பள்ளியிலோதுவார்களுடைய. பாடத்தால்-பாடத்திலே. பேதை-அறிவில்லாதவன். ஓர்-ஒரு. சூத்திரம்-சூத்திரத்தை. பெற்றது-பெற்றிருப்பது. அதனை-அதை. நல்லார்-நல்லறிவுடையோர். இடை-நடுவே. நாணுதல்-கூசாது. சொல்லி-உரைத்து. தன-தன்னுடைய. புல்-புலமை. அறிவு-அறிவை. காட்டிவிடும்-காட்டிவிடுவன். என்றவாறு.—பேதை-எழுவாய். காட்டிவிடும்-பயனிலை. புல்லறிவை-செயப்படுபொருள். மற்று-ஆம்-இவ்விரண்டுமசைநிலை.

இதன்கருத்து.

தான்கற்றதுமொன்றின்றிக் கணக்காயரறிந்த பாடத்தாற் பேதையொருசூத்திரத்தைப் பெற்றதனை நல்லரிடைப்புக்குநாணுறுதலசொல்லித்தன்புல்லறிவினைக்காட்டிவிடுவனென்பதாம்..... .... (உ)

வென்றிப்பொருட்டால்விலங்கொத்துமெய்கொள்ளார். ✻
கன்றிக்கறுத்தெழுந்துகாய்வாரோடொன்றி... ... ... ✻
யுளைவித்தகமெழுவார்காண்பரோகையுட்... ... ... ✻
சுளைவித்துப்போலுந்தம்பல் ..... ✻

இதன்பதப்பொருள்.

வென்றி - தாம்வெல்வது. பொருட்டு - காரணமாக. விலங்கொத்து-மிருகத்தையொத்து. மெய் - உண்மைப்பொருளை. கொள்ளார்-கொள்ளமாட்டாராய். கன்றி-மனம்புழுங்கி. கறுத்து-சினத்து. எழுந்து-எதிரெழுந்து. காய்வாரோடு-வெகுள்வாரோடு. ஒன்றி - பொருந்தி. உளை - தன்சொல். வித்தகம்-வண்மையை. எழுவார்-காட்டவெழுவார். சுளை - சுளையினை. வித்துப்போலும் - விதையைப்போலும். தம் - தம்முடைய. பல்-பலவினை. கையுள்-கையுள்ளே. காண்பர்-காண்பார். என்றவாறு.—எழுவார்-எழுவாய். காண்பர்-பயனிலை. பல்லை-செயப்படுபொருள். ஆல-வகரம்-இவ்விரண்டுமசைநிலை. உளைவித்தகமிழ்வாரென்பது உம்பாடம். வித்தகம்-அறிவு.

இதன்கருத்து.

வென்றிப்பொருட்டாகவிலங்கினையொத்தது மெய்ப்பொருளைக்கொள்ளாதமனத்தின்கண் வெகுண்டெதிரொழிந்தகாய்வாரோடு கூடிச்சொல வண்மையைக்காட்டத் தொடங்குவார் சுவைவித்துப்போலுந்தம்பல்லினைக்கையுள்ளே காண்பரென்பதாம்..... (௫)

பாடமேயோதிப்பயன்றெரிதறேற்றாத..... .... *
மூடர்மூனிதக்கசொல்லுங்காற்-கேடருஞ்சீர்ச்... .. *
சான்றோர்சமஞ்சேர்தனர்நிற்பவேமற்றவரை ... ... *
யீன்றாட்கிறப்பப்பரிந்து,..... .... *

இதன்பதப்பொருள்.

பாடம்-பாடத்தை ஓதி-சொல்லி. பயன்-அதன்பொருளை. தெரிதறேற்றாத-ஆராயமாட்டாத. மூடர்-அறிவில்லாதார். மூனிதக்க-வெறுக்கத்தக்கனவற்றை. சொல்லுங்கால்-சொல்லும்பொழுது. கேடு-கெடுதற்கு. அருமை-அரிய. சீர்-சீர்மையையுடைய. சான்றோர்-அறிவுடையோர். சமஞ்சேர்தனர்-நாணி. அவரை-அவ்வறிவிலாதாரை. ஈன்றாட்கு-பெற்றதாய்க்கு. இறப்ப-மிகவும். பரிந்து-இரங்கி. நிற்ப-நிற்பர். என்றவாறு.—சான்றோர்-எழுவாய். நிற்ப-பயனிலை. ஏகாரம்-இரண்டும்-மற்றும்-அசைநிலை. ஈன்றோர்க்கென்பது உம்பாடம்.

இதன்கருத்து.

பாடத்தையோதி யதன்பயனையாராயாதவறிவிலாதார் நல்லோர்வெறுக்கத்தக்கனவற்றைச்சொல்லும்பொழுது கெடுதற்கரியசீர்மையையுடையசான்றோர்நாணியவ்வறிவிலாதாரையீன்றதாய்க்குமிகவுமிரங்கிநிற்பரென்பதாம்... .... (சு)

பெறுவதுகொள்பவர்தோள்போனெறிபட்டுக். ... *
கற்பவர்க்கெல்லாமெளியனூன்-மற்றம்... .... *
மூறிபுரைமேனியருள்ளம்போன்றியார்க்கு.... ..... *
மறிதற்கரியபொருள் .... *

இதன்பதப்பொருள்.

பெறுவது-பெறத்தக்கதை. கொள்பவர்-கொள்ளும்பொழுமகளிர். தோள்போல்-தோளைப்போல. நெறிபட்டு-வழிப

அவையறிதல்.

ட்டு. கற்பவர்க்கெல்லாம்-கற்பவர்கட்கெல்லாம். நூல்-நூல்கள். எளிய-எளியவாம். முறிபுணை-தளிர்ப்போல. அம்மேனியர் - மேனியையுடையவப்பொதுமகளிர். உள்ளம்போன்று-மனம்போல். யார்க்கும் - யாவர்க்கும். பொருள் - அர்த்தூற் பொருள்கள். அறிதற்கு-உணர்தற்கு. அரிய-அரியவாம். என்றவாறு.— நூல்-எழுவாய். எளிய-பயனிலை. பொருள்-எழுவாய். அரிய-பயனிலை. மற்று - அசைநிலை. பெறுவதுகொள்பவர்-பொதுமகளிர்.

இதன்கருத்து.

பெறுவதுகொள்ளும்பொதுமகளிர்தோள்போல வழிபட்டுக்கற்பவர்க்கெல்லாநூல்களெளியவாமற்பொதுமகளிர துள்ளம்போலயாவர்க்குமந்நூற்பொருள்களறிதற்கரியவென்பதாம். .... (எ)

புத்தகமேசாலத்தொகுத்தும்பொருடெரியா ..... *
ருய்த்தகமெல்லாநிறைப்பினு-மற்றவற்றைப்..... *
போற்றும்புலவருமவேறேபொருடெரிந்து..... *
தேற்றும்புலவருமவேறு ..... *

இதன்பதப்பொருள்.

புத்தகம்-புத்தகங்களை. சால-அமைய. தொகுத்தும்-தொகுத்துவைத்தும். பொருள்-அப்பொருளை. தெரியார் - அறியாது. உய்த்து - அவற்றைக்கொண்டுவந்து. அகமெல்லாம்-இடமெல்லாம். நிறைப்பினும்-நிறைத்துவைப்பினும். அவற்றை-அப்புத்தகங்களை. போற்றும்-பாதுகாக்கும். புலவரும்-அறிவுடையோரும். வேறு-வேறும். பொருள்-அப்புத்தகத்தின்பொருளை. தெரிந்து-ஆராய்ந்து. தேற்றும்-பிறர்க்குணர்த்தவல்ல. புலவரும்-அறிவுடையோரும். வேறு-வேறும். என்றவாறு.—போற்றும்புலவர்-எழுவாய். வேறு-பயனிலை. அவற்றை-செயப்படுபொருள். தேற்றும்புலவர்-எழுவாய். வேறு-பயனிலை. உம்மை-இரண்டும்-எண்ணும்மை. ஏகாரம்-இரண்டும்-மறாமும்-அசைநிலை.

இதன்கருத்து.

புத்தகங்களையமைத்திரட்டிவைத்தாலப்பொருளையறியாதவற்றைக்கொண்டுவந்திடமெல்லாநிறைப்பினுமவற்றைப்பா

தகாக்குட்புலவரும்வேறுமப்புத்தகத்தின்பொருடெரிந்துபி
ரர்க்குணர்த்தவல்லபுலவரும்வேறென்பதாம்..... (அ)

பொழிப்பகலநுட்பநூலெச்சமிந்நான்கிர்..... *
கொழித்தகலங்காட்டாதார்சொற்கள்-பழிப்பி... ... *
னியாயாமாசேர்க்குநெடுங்குன்றநாட..... ..... *
வுரையாமோநூலிற்குறைன்கு..... ..... *

இதன்பதப்பொருள்.

பொழிப்பு-நிரண்டபொருளைச்சொல்லுதலும். அகலம்-விரித்துரைத்தலும். நுட்பம்-கடாவுமவிடையுஞ்சொல்லுதலும். நூலெச்சம்-நூலிற்புகுதாதொழிந்தபொருளைவருவித்துச்சொல்லுதலும். இந்நான்கின்-ஆகியவிந்நான்கு வகையாலும். கொழித்து-ஆராய்ந்து. அகலங்காட்டாதார்-செய்யுட்களின்பொருள்களைவிரித்தறியாதார். சொற்கள்-மொழிகள். ஆமா-காட்டுப்பசுக்கள். நிரை-நிரையாக. சேர்க்கும்-சேர்ந்திருக்கும். நெடும்-உயர்ந்த. குன்றநாட-மலைநாடனே. நூலிற்கு-நூற்கு. பழிப்பில்-பழிப்பில்லாத. நன்கு-நலல. உரையாமோ-உரையாகுமோ. என்றவாறு.—சொற்கள்-எழுவாய். உரையாமோ-பயனிலை. என்றுற்றவென்பதூஉம்பாடம். உரையாமோவென்னுமோகாரம்-மாறுகோளெச்சம்.

இதன்கருத்து.

தொகுத்தலும்விரித்தலுங்கடாவிற்கு விடைகொடுத்தலுநூலிற்புகுதாதொழிந்த பொருள்களை வருவித்துச்சொல்லுதலுமாகியவிந்நான்கிலுணுமாராய்ந்தகலங்காட்டாதார்சொற்களினையாமாசேர்க்குநெடுங்குன்றநாடனே நூற்குப்பழிப்பில்லாதநன்குரையாமோவென்பதாம்..... ..... (கூ)

இற்பிறப்பில்லாரெனைத்துநூல்கற்பினுங்..... *
சொற்பிறழாக்காக்குங்கருவியோ-விற்பிறந்த ..... *
நல்லறிவாளர்நவின்றநூறேற்றூதார்..... *
புல்லறிவுதாமறிவதில்..... *

இதன்பதப்பொருள்.

இல்-குடியிலே. பிறப்பு-பிறத்தல். இல்லார்-இல்லாதார். எனைத்து-எவ்வளவு. நூல்-நூல்களை. கற்பினும்-கற்றுராயினும்.

புல்லறிவாண்மை.

சொற்பிறழ்-பிறர்சொல்லின்கண்வருங்குற்றத்தை. காக்கும்-பாதுகாக்கும். கருவியோர்-அறிவுடையராகவல்லோர். இல்-குடியில்லை. பிறந்த-தோன்றிய. நல்-நல்ல. அறிவாளர்-அறிவினையுடையார். நவின்ற-சொன்ன. நூல்-நூற்பொருளை. தேற்றுதார்-தெளியாதாருடைய. புல்-புல்லிய. அறிவு-அறிவை. தாம்-தாம். அறிவதில்-அறிந்துகொள்வதில்லை. என்றவாறு.—இற்பிறப்பில்லார்-எழுவாய். கருவியோர்-பயனிலை. நல்லறிவாளர்-எழுவாய். அறிவதில்-பயனிலை. இதுகுடிப்பிறப்பின்றன்மைகூறல்-அவையறிதலாலோவெனின்னிலைவையறியாதான் புல்லியசொற்களேச்சொல்லியவையிலிருந்த வறிவுடையோர்மனத்திலேயிப்படிமிகவுநோவிப்பதெல்லதாம். சொற்பிறழ்ப்பார்க்குந்தகுதியரோவென்பதாலும்பாடம்.

இதன்கருத்து.

குடிப்பிறப்பில்லாதாரெவ்வளவு நூல்களைக்கற்றாராயினும் பிறர்சொல்லின்கண் வருங்குற்றத்தைப் பாதுகாக்குங் கருவியோகுடிப்பிறந்த நல்லறிவாளர்சொன்ன நூற்பொருளைத்தெரியவுணர்ந்திலாதாருடையபுல்லறிவினைத்தாமறிந்தாராயினுமறிந்திலரேபோலிருப்பரென்பதாம்..... (ஐ)

அவையறிதன்முற்றிற்று.

அஅ அதிகாரம்-கூஉ-இ. வெண்பா... (கூஉஐ)

புல்லறிவாண்மை.

புல்-புல்லிய. அறிவு-அறிவை. ஆண்மை-ஆளுமாட்சி. அஃதாவதுதேடினுஞ் சிறிதறிந்துகொண்டெல்லா மறிந்தவளவுகவுமெல்லாரினுந்தான்பெரியளவுகவுந்தன்னைநீதானே மதித்துவியந்துகூறலும் பிறர்பெருமையறியாதுதானிகழ்ந்துகூறலுமாம்.

அருளினறமூலைக்குமன்புடையார்வாய்ச்சொற் .... *
பொருளாகக்கொள்வர்புலவர்-பொருளல்லா..... *
வேலைமுதலினையிகழ்ந்தனைக்கும்பாற்கூழை..... *
மூலஞ்சுவையுணராதாங்கு... ..... *

இதன்பதப்பொருள்.

அருளின்-அருளினால். அறம் - அறநெறியை. உரைக்கும்-சொல்லப்பட்ட. அன்புடையார் - அன்புடையாரது. வாய்ச்சொல்-வாயிச்சொல்லே. பொருளாக-பொருள்போல. கொள்வர்-கொள்ளுவர். புலவர்-அறிவுடையார். பொருளல்லா-பொருளாகமதிக்கத்தகாத. ஏழை - ஏழையானவன். அதனை - அச்சொல்லை. இகழ்ந்தூரைக்கும். இகழ்ந்துசொல்லுவன். பாற்கூழை-கூழ்போலவெந்தபாலை. மூழை-அகப்பை. சுவை-அப்பாற்சுவையை. உணராதாங்கு-அறியாததுபோலும். என்றவாறு.—புலவர் - எழுவாய். கொள்வர்-பயனிலை. ஏழை-எழுவாய். இகழ்ந்தூரைக்கும்-பயனிலை. அதனை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

அருளுடைமையானற நெறியையுரைக்கு மார்வமுடையார் வாய்ச்சொல்லைப்பொருளாகக் கொள்வரறிவுடையார் பொருளாகமதிக்கப்படாதபேதையச்சொல்லையிகழ்ந்து சொல்லுவன் பாற்கூழினை மூழைசுவையுணராததுபோலுமென்பதாம்(க

அவ்வியமில்லாரறத்தாறுரைக்குங்காற்..... *
செவ்வியரல்லார்செவிகொடுத்துங்கேட்கலார் ... ... *
கவ்வித்தேறின்னுங்குணுங்கர்நாய்பாற்சோற்றின் . *
செவ்விகொளதேறீரதாங்கு..... ... . *

இதன்பதப்பொருள்.

அவ்வியம்-மனக்கோட்டம். இல்லார் - இல்லாதவர். அறத்து-அறத்தினது. ஆறு-நெறியை. உரைக்குங்கால்-சொல்லுங்காலத்து. செவ்வியர்-செவ்வியமாந்தர். அல்லார்-அல்லாதவர். செவி-காது. கொடுத்தும் - தாழ்த்தும். கேட்கலார் - கேட்கமாட்டார். தோல்-தோலை. கவ்வி-கடித்து. தின்னும் - தின்னுகின்ற-குணுங்கர்-பறையது. நாய்-நாயானது. பாற்சோற்றின்-பாற்சோற்றினது. செவ்வி-சுவையினை. கொள-கொள்ள. தேறீரதாங்கு - தெளியமாட்டாததுபோலும். என்றவாறு.—செவ்வியரல்லார்-எழுவாய். கேட்கலார். பயனிலை.

இதன்கருத்து.

மனக்கோட்ட மில்லாரறத்தாற்றைச்சொல்லுங்காற் செவ்வியமனத்தரல்லாதவர்செவிகொடுத்துங்கேட்கமாட்டார்தொலக்கவ்வித்தின்னும்பறையரதுநாய்பாற்சோற்றினது செவ்வியைக்கொள்ளமாட்டாததுபோலுமென்பதாம்..... (உ)

இமைக்குமளவிற்றம்மின்னுயிர்போமார்க்க..... ✻
மெனைத்தானுற்றாங்கண்டிருந்துந்தீ-தினைத்துணையு . ✻
நன்றிபரிதல்லாநாணின்மடமாக்கள்... ... . ✻
பொன்றிலன்பொன்றுக்காலென்..... ... . ✻

இதன்பதப்பொருள்.

இமைக்கும்-இமைத்துவிழிக்கும். அளவில்-அளவிலே. தம்-தமது. இன்-இனிய. உயிர்-உயிரானது. போம் - போகின்ற. மார்க்கம்-நெறியை. எனைத்தானுற்றம்-எல்லாவகையானும். தாம்-தாம். கண்டிருந்துழும்-பார்த்திருந்துழி. தினை-தினையினது. துணையும்-அளவாயினும். நன்றி-நன்மையை. பரிகலா - செய்யாத. நாண்-நாணம். இல்-இல்லாத. மடம்-அறிவில்லாத. மாக்கள்-மனிதர். பொன்றிலன்-இறந்தாலன்னே. பொன்றுக்காலன் - இறவாதிருந்தாலன்னே. என்னவாறு.---மாக்கள்-எழுவாய். பொன்றிலன்பொன்றுக்காலன்-பயனிலை.

இதன்கருத்து.

இமைக்குமளவிற்றம்மினியவுயிர்போம்கழியை யெல்லாவகையானுங்கண்டிருந்துந்தினையளவாயினுநன்மையைச்செய்யாதறிவிலாதறிவுகெட்ட மாக்கள்செத்தாலன்னே வாழ்ந்தாலன்னே யென்பதாம்... .... (ரு)

உளநாள்சிலவாவுயிர்க்கேமமின்றூதீ..... .... ✻
பலர்மன்னுந்தூற்றும்பழியாற்பலருள்ளுங்..... ✻
கண்டாரோடெல்லாநகாஅதெவனெஞ்சுவன்... ..... ✻
தண்டித்தனிப்பகைகோள்..... ..... ✻

இதன்பதப்பொருள்.

உளநாள் - தான்வாழுநாள்களும். சிலவால் - சிலவாதலால். உயிர்க்கு - தன்னுயிர்க்கு. ஏமம்-நிலை. இன்றூல் - இல்லாமை

யாள். பலர்-பலரும். தூற்றும்-தூற்றத்தக்க. பழியால்-பழிப்புரையினால். பலருள்ளும்-பலபேர்களுள்ளும். கண்டாரோடல்லாம்-தலைப்பட்டாரெல்லாரோடும். நகாது-மகிழ்ச்சியுடையரல்லாமல். ஒருவன்-ஒருத்தன். தனி-தனியனாயிருத்தல். தண்டி-வலிய. பகை-பிறரொடுபகை. கோள்-கோடல். எவன்-என்ன. என்றவாறு.—கோள்-எழுவாய். எவன்-பயனிலை. மன்-உம்மை-இவையிரண்டும்-அசைநிலை.

இதன் கருத்து.

தான் வாழுநாள்களுஞ் சிலவாற்றன் னுயிர்க்கே மமின்றிப் பலருந்தூற்றும் பழியாற்றலெப்பட்டாரெல்லாருடனு மகிழாதொருவன் றனியனுப்பிற ரொடுபகைகோடலென்னையென்பதாம்..... (சு)

எய்தியிருந்தவளைமுன்னர்ச்சென்றெள்ளி..... ... *
வைதாரெருவரெருவனை-வைய..... .... *
வயப்பட்டான்வாளாவிருப்பானேல்வைதான் ... ... *
வியத்தக்கான்வாழுமெனின்..... .... *

இதன் பதப்பொருள்.

எய்தியிருந்த-கூடியிருந்த. அவை-சபைக்கு. முன்னர்-முன்னே. சென்று-போய். ஒருவன்-ஒருத்தன். ஒருவனை-மற்றொருவனை. எள்ளி-இகழ்ந்து. வைதான்-வசைவன். வைய-அவன்வையத்தக்கதாக. வயப்பட்டான்-வையப்பட்டவன். வாளா-பேசாது. இருப்பானேல்-இருப்பானாகில். வைதான்-வைதவன். வாழுமெனின்-பின்னுமுயிர்வாழ்வனாகில்வன். வியத்தக்கான்-கொண்டாடத்தக்கவன். என்றவாறு.—வைதான்-எழுவாய். வியத்தக்கான்-பயனிலை.

இதன் கருத்து.

கூடியிருந்தவரைமுன்னர்ச்சென்றொருவன் மற்றொருவனை யிகழ்ந்துவைதான் வையப்பட்டானென்றுந் சொல்லாதிருப்பானையின்வைதவன்பின்னுமுயிர்வாழ்வனையினவன்யாவராலும் வியக்கத்தக்கானென்பதாம்..... .... (ரு)

மூப்புமேல்வாராமைமுன்னேயறவினையை..... ❋
யூக்கியதன்கண்முயலாதா-னூக்கிப்..... ❋
புறத்திருபோகென்னும்ன்ஞச்சொலிவ் வுட்..... ❋
டொழுத்தையாற்கூறப்படும்..... ❋

இதன்பதப்பொருள்.

மூப்பு-மூப்பானது. மேல் - மேலே. வாராமைமுன்னே-வருதற்குமுன்னே. அறம் - அறத்தினது. வினையை-செய்கையை. உளக்கி-மேற்கொண்டு. அதன்கண்-அதனிடத்தில். முயலாதான்-முயன்றொழுகாதான். உளக்கி-தன்னேதித்தள்ளி. புறத்திருபோகென்னும்-புறம்போயிருப்பாயாகவென்றுசொல்லப்படும். இன்ஞச்சொல்-பொல்லாதசொல். இல்லுள்-வீட்டிலிருக்கின்ற. தொழுத்தையால்-வெள்ளாட்டியால். கூறப்படும்-சொல்லப்படுவன். என்றவாறு.--தொழுத்தையால்-முயலாதான்-கூறப்படுவன்-இதுகருமணிப்புணர்வு.

இதன்கருத்து.

மூப்புமேல்வருதற்குமுன்னேயறவினையைச்செய்வோமென்றுமிகநினைத்ததன்கண்ணே முயன்றொழுகாதான் றன்னேத்தள்ளிப்புறம்போயிருப்பாயாக வென்றுசொல்லப்படுமின்ஞச்சொல்லில்லத்துட்டொழுத்தையாற்கூறப்படுவனென்பதாம்..... (கூ)

தாமேயுமின்புரூர்தக்கார்க்குதன்ரூற்ரு..... ..... ❋
சோமஞ்சார்தன்னெறியுஞ்சேர்கலார்-தாமயங்கி..... ❋
யாக்கத்துட்டூங்கியவத்தமேவாழ்நாஞப்..... ..... ❋
போக்குவார்புல்லறிவினூர்..... ..... ❋

இதன்பதப்பொருள்.

தாமேயும்-தாமாயினும். இன்புரூர்-இன்புறுகின்றிலர். தக்கார்க்கும்-தகுதியுடையார்க்கும். தன்ரூற்ரு-ஒருதன்மையும். ஆற்ரூர்-செய்யார். ஏமம்-தமக்கரணை. சார்-அமைந்த. நல்-நல்ல. நெறியும்-வீட்டுநெறியையும். சேர்கலார் - அடையமாட்டார். தாம்-தாம். மயங்கி-அறிவுகெட்டு. ஆக்கத்துள்-செல்வத்தினிடத்தில். தூங்கி-தங்கி. அவத்தமே-பயனின்றியே. வாழ்நாளை-வாழ்நாட்களை. போக்குவார்-கழிப்பர். புலலறிவினூர்-

புல்லறிவினையுடையார். என்றவாறு.—புல்லறிவினர்-எழுவாய். போக்குவார்-பயனிலை. வாழ்நாளை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

தாமேயுமின்புறுதற்கார்க்கொருநன்மையுஞ்செய்யார்தம க்கரணுகவமைந்தநன்னெறியையுஞ்சாராதாமறிவுகெட்டுத்த மக்கெய்தாதவாக்கத்துள்ளொழுகிவாழ்நாளைப்பயனின்றியே கழிப்பர்புல்லறிவினரென்பதாம்..... ..... (எ)

சிறுகாலையேதமக்குச்செல்வுழிவல்சி... .... *
யிறுகிறுகத்தோட்கோப்புக்கொள்ளார்-றிறுகிறுகிப். *
பின்னறிவாமென்றிருக்கும்பேதையார்கைகாட்டும். *
பொன்னும்புளிவிளங்காயாம்..... *

இதன்பதப்பொருள்.

சிறுகாலையே-மூற்காலத்திலே. தமக்கு-தமக்கு. செல்வுழி-செல்லுமிடத்திற்குத்தக்க. வல்சி-உணவினை. இறுகிறுக-யாப் புற. தோட்கோப்பு - தோட்கோப்பாக. கொள்ளார்-கொள் ளாது. இறுகிறுகி-சிக்கென்றிருந்து. பின் - பிற்பே. அறிவா மென்று-அறத்தைச்செய்வேமென்று. இருக்கும்-கருதியிரு க்கும். பேதையார்-அறியாதவர். கைகாட்டும்-கையாற்காட்டு ம். பொன்னும்-பொற்கட்டியும். புளிவிளங்காய்-புளித்தவிள ங்காய். ஆம்-ஆகும். என்றவாறு.—புளிவிளங்காய்-எழுவாய். ஆம்-பயனிலை.

இதன்கருத்து.

மூற்காலத்தே தமக்குச்செல்லுமிறப்பிற்குவேண்டுமுண வினையாப்புறத்தோட்கோப்பாகக்கொள்ளாது மிகப்பற்று ளஞ்செய்துமறுமைக்குதவுமுணவினைச்சாம்பொழுதுசெய்வே மென்றுகருதியிருக்கும்பேதையார் தஞ்சாங்காலத்துப்பே சமாட்டாமையாற்பிறர்க்குத்தருகவென்றுகையாற்காட்டும் பொற்கட்டியுஞ்சுற்றத்தார் சொல்லும்வகையாற் புளிவிளங் காயாகுமென்பதாம்..... (அ)

வெறுமையிடத்தும்விழுப்பிணிப்போழ்து... ..... *
மறுமைமனத்தாரோயாகி-மறுமையை..... *
யைந்தையனத்தானுமாற்றியகாலத்துச்..... *
சிந்தியார்சிற்றறிவினர்..... *

புல்லறிவாண்மை.

இதன்பதப்பொருள்.

வெறுமை - தமக்குவறுமை. இடத்தும் - உற்றவிடத்தும். விழு - சீரிய. பிணிப்போழ்தும்-பிணிவந்துற்றகாலத்தும். மறுமை-மறுமைக்குறுதிசெய்யும். மனத்தாேயாகி-மனத்தினையுடையாராகி. ஆற்றியகாலத்து - தமக்குச்செல்வமுண்டானகாலத்து. ஐந்தை ஒருநிறுகடி. அனைத்தானும்-அவ்வளவாயினும். மறுமையை-மறுமைக்குறுதியாகியதருமத்தினை. சிற்றறிவினர்-புல்லறிவாளர். சிந்தியார் - நினைக்கமாட்டார். என்றவாறு.—சிற்றறிவினர்-எழுவாய். சிந்தியார் - பயனிலை. மறுமையை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

தமக்குவறுமைவந்தவிடத்தும்பிணிவந்தவிடத்துமறுமையுண்டென்றுநினைக்குமனத்தினையுடையராகித்தமக்குச்செல்வமுண்டானகாலத்தெருநிறுகடிகவ்வளவாயினுஞ்சிற்றறிவினையுடையார்மறுமையைநினைக்கமாட்டாரென்பதாம்..... (கூ)

என்னேமதீவிவ்வுடம்புபெற்றுமறதினையார்..... *
கொன்னேகழிப்பர்தம்வாழ்நாளை-யன்னே ..... *
வளவிறந்தகாதற்றம்மாருயிரன்னார்க் ..... *
கொளவிழைக்குங்கூற்றமுங்கண்டு..... *

இதன்பதப்பொருள்.

அன்னே-ஐயோ. அளவிறந்த-எண்ணிறந்த. காதல்-காதலையுடைய. தம்-தமது. ஆர்-பெறுதற்கரிய. உயிரன்னார்-உயிர்போல்வாரை. கொள-கொள்ள. இழைக்கும்-சூழும். கூற்றமும்-கூற்றத்தையும். கண்டு-கண்டிருந்து. என்னே-என்னே. இவ்வுடம்பு-இம்மக்கள்யாக்கையை. பெற்றும்-பெற்றுவைத்தும். அறம்-அறஞ்செய்தலை. நினையாரீ-நினையாது. கொன்னே-பயனின்றியே. தம்-புல்லறிவாளர்தம்முடைய. வாழ்நாளை-வாழ்நாட்களை. கழிப்பர்-போக்குவர். என்றவாறு.—புல்லறிவாளர் - எழுவாய். கழிப்பர்-பயனிலை. வாழ்நாளை-செயப்படுபொருள். என்னே - அன்னே என்பன-அருளின்கட்குறிப்பு. மற்று-அசைநிலை.

பேதைமை.

இதன்கருத்து.

ஐயோ வளவினைக்கடந்த வன்பினையுடைய தம்மரியவுயிர் போல்வாரைக்கொள்ளச்சூழும் கூற்றத்தையுங்கண்டென்னை யிம்மக்கள்யாக்கையைப்பெற்றும் அறஞ்செய்தலிணையாது பயனின்றியேபுல்லறிவாளர் தம்வாழ்நாளைப்போக்குவரென்பதாம்..... (ஏ)

புல்லறிவாண்மைமுற்றிற்று.

அஃ அதிகாரம்-ஏழு. வெண்பா... (ஏழு)

பேதைமை.

பேதைமை-அறிவில்லாமை. அஃதாவது-இந்திரியங்களின் வழியேயோடியந்தந்த வஸ்துபோகங்களே யுண்மையாகக்கருதி யிந்தப்பிரத்தியட்சமான பிரமாணமொன்றினையுமே துணைத்துநின்றவநுமான சாத்திரமுதலாகிய பிரமாணங்களையில்லையென்றுமயங்கிமறுமைக்குறுதியையுமிழந்திந்தப்பிறப்புத்தன்னிலுமூலகத்துக்கியற்கையானமுறைமையினைத்தனக்குச்சிறந்தவர்களிந்தவர்கள் சொல்லுமதவுமுட்கொள்ளாமலிகழ்ந்துதீவினைத்தாருடனேயிணங்கியெல்லாராலுமிகழப்பட்டிடும்மைப்பயனையுமிழத்தல்.

கொலைஞருலையேற்றித்தீமடிப்பவாமை... ... . *
நிலையறியாதந்நீர்படிந்தாடியற்றே ..... *
கொலைவல்பெருங்கூற்றங்கோட்பார்ப்பவீண்டை ... *
வலையகத்துச்செம்மாப்பார்மாண்பு... .... *

இதன்பதப்பொருள்.

கொலை-கொலைத்தொழில். வல்-வல்ல. பெரும்-பெரிய. கூற்றம்-கூற்றுவன். கோள்-தமதுயிரைக்கொள்ளுங்கோளினை. பார்ப்ப-பாராநிற்ப. ஈண்டை-இவ்விடத்துள். வலையகத்து-சமூசாரமென்னுமின்றவலையினிடத்திலே. செம்மாப்பார்-இறுமாந்திருக்குமவர்கள். மாண்பு-மாட்சிமையானது. ஆமை-ஆமையை. கொலைஞர்-கொல்லுமகர். உலை-நீராயுலை

யாகவைத்து. ஏற்றி - அதனுள்ளேயந்தவாமையைவிட்டு. தீ-தீயை. மடுப்ப-மூட்ட. நிலை-அந்தவாமைமேற்றனக்குவருகின்றநிலைமையினை. அறியாது-அறியாமல். அந்நீர்-அந்நீரிலே. படிந்து-மூழ்கி. ஆடியற்று-வினையாடுறுப்போலும். என்றவாறு.—மாண்பு-எழுவாய். ஆடியற்று - பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

கொலையின்வல்ல பெருங்கூற்றந் தமதுயிரைக்கொள்ளுங் கோளைப்பாராதிற்ப விவ்விடத்துச்சமூசாரவலையிலகப்பட்டு நின்றிறுமாந்திருப்பார்மாட்சிமையாமையைக்கொலைஞருலையேற்றித்தீமடுப்பவவ்வாமையந்நீரின்கண்மேல் வருநிலைமையினையறியாதுகுளித்துவினையாடுறுப்போலுமென்பதாம்(க)

பெருங்கடலாடியசென்றொருங்குட..... .... *
றுணையவிந்தபின்றுடி-துமென்றற்று..... ..... *
விற்செய்குறைவினைநீக்கியறவினை..... ..... *
மற்றறிவாமென்றிருப்பார்மாண்பு..... *

இதன்பதப்பொருள்.

இல்-மனைவாழ்க்கையினுள். செய்-செய்கின்றகாரியங்களை. குறைவினைநீக்கி-குறைவறமுடித்து. அறவினை-தருமகாரியங்களை. மற்று - பின்பே. அறிவாமென்று - அறிந்துசெய்வோமென்று. இருப்பார்-இருக்குமவரது. மாண்பு-மாட்சிமை. பெரும்-பெரிய. கடல்-கடலிலே. ஆடிய-தீர்த்தமாட. சென்றார் - சென்றவர். ஒருங்கு - ஒருவழிப்பட. உடன் - உடனே. ஓசை-ஒலிமுழுதும். அவிந்த-அடங்கின. பின்-பின்பு. ஆடுதும்-ஆடுவோம். என்றற்று - என்றிருந்தாற்போலும். என்றவாறு.—மாண்பு-எழுவாய். என்றற்று - பயனிலை. ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

மனைவாழ்க்கையினுள்ளகுறைநிரம்பமுடித்தறவினையைப்பின்புசெய்வாமென்றிருப்பாரதுமாட்சிமைகடலிலேயாடவேண்டிச்சென்றொருவரக்கடலிலுணைசெல்லாமவிந்தாற்பின்னராடுதுமென்றுகருதியிருந்தாற்போலுமென்பதாம் (உ)

குலந்தவங்கல்விகுடிமைமூப்பைந்தும்.... ... . *
விலங்காமலெய்தியக்கண்ணு-நலஞ்சான்ற ... ... *
மையறுதொல்சீருலகமறியாமை..... *
நெய்யிலாப்பாற்சோற்றினேர்..... ... . *

இதன்பதப்பொருள்.

குலம்-குலமும். தவம்-தவமும். கல்வி-கல்வியும். குடிமை-குடிப்பிறப்பும். மூப்பு-மூதாளமையும். ஐந்தும்-ஆகியவிவ்வைந்தும். விலங்காமல்-ஒருவர்க்குத்தப்பாமல். எய்தியக்கண்ணும்-உண்டானவிடத்தும். நலம்-நன்மை. சான்ற - அமைந்த. மை-குற்றம். அறு-அற்ற. தொல்-பழைய. சீர்-சீர்மையினையுடைய. உலகம்-உலகநடையை. அறியாமை-அறியாதிருக்குந்தன்மை. நெய்யிலா-நெய்யில்லாத. பாற்சோற்றின்-பாற்சோற்றினுக்கு. நேர்-ஒக்கும். எனறவாறு.—அறியாமை - எழுவாய். நேர்-பயனிலை. சருக்கரைமுதலானவைபெற்றாலும்-நெய்பெற்றாற்போல நிரம்பினவினைபாற்சோற்றிற் கின்மையினெய்யிலாப்பாற்சோறென்றார் - ஆதலாற்சாரமில்லையென்பதாயிற்று.

இதன்கருத்து.

குலமுந்தவமுங்கல்வியுங்குடிப்பிறப்புமூப்புமென்றுசொல்லப்பட்டவிவ்வைந்துமொருவனிரம்பப்பெற்றவிடத்துந்தன்மையமைந்தகுற்றமற்றபழைய சீர்மையையுடைய வுலகவொழுக்கமறியாமைநெய்யிலாப்பாற்சோற்றினுக்கொக்குமென்பதாம்..... .... (ரு)

கன்னனிநல்லகடையாயமாக்களிற்..... .... *
சொன்னனிதாமுணராவாயினும்-மின்னினியே ... ... *
நிற்றவிருத்தல்கிடத்தலியங்குதலென்..... ..... *
றுற்றவர்க்குதீதாமுதவலான் .... *

இதன்பதப்பொருள்.

சொல் - பிறர்சொல்லை. நனி-மிகவும். தாம் - கற்கள்தாம். உணராவாயினும்-அறிந்தநில்லையாயினும். இன்னினியே-இப்பொழுதே. நிற்றல்-தம்மையெடுத்துநிறுத்தினவருக்குநின்றும். இருத்தல்-இருத்தினவருக்கிருந்தும். கிடத்தல்-கிடத்தினவருக்குக்கிடந்தும். இயங்குதலென்று-இயங்குமென்றுசொல்வி. உற்றவர்க்கு-அடைந்தவர்க்கு. தாமுதவலான் - தாமுதவி

செய்தலால். கடையாய - கடையான. மாக்களில் - மனிதரில். கல்-அக்கற்கள். நனி-மிகவும். நல்ல - நல்லன. என்றவாறு.— கல்-எழுவாய். நல்ல-பயனிலை.

இதன்கருத்து.

பிறர்சொல்லை மிகவுங்கற்கள் தாமுணராவாயினு மின்னினி யேநிற்றலிருத்தல் கிடத்தலியங்குதலென்றவற்றைத் தம்மைச் சார்ந்தவர்க்குத் தாமுதவலான்கடைப்பட்ட மாக்களிலக்கற்க ணிகவுநல்லனவென்பதாம்..... (உ)

பெறுவதொன்றின்றியும்பெற்றானேபோலக்... ... *
கறுவுகொண்டேலாதார்மாட்டுங்-கறுவுறற்..... *
கோத்தின்னுகூறியுரையாக்கால்பேதைக்கு ... ... *
நாத்தின்னுநல்லசுனைத்து..... *

இதன்பதப்பொருள்.

பெறுவது-தான்பெறுவது. ஒன்று-ஒரு பொருள். இன்றியும் - இல்லையாயினும். பெற்றான்போல - சிலபெற்றவனைப் போல. கறுவுகொண்டு - சினங்கொண்டு. ஏலாதார்மாட்டும்- ஏலாதாரிடத்தும். கறுவுறல்-அச்சினத்திறல். கோத்தின்னு- இன்னுதனவற்றைச்சேரக்கோத்து. கூறியுரையாக்கால் - மிகவுஞ்சொல்லாவிடில். பேதைக்கு - பேதையானவனுக்கு. நா- நாவானது. நல்ல-மிக்க. சுனைத்து-சுனைத்தெழுந்து. தின்னுமும்-தினவுதின்னுமும். என்றவாறு.—நா - எழுவாய். தின்னுமும்- பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

தான் பெறுவதொரு பொருளின்றியுஞ் சிலபெற்றவனைப் போலச்சினங்கொண்டு தன்னுடைமாறுபட்டேலாதார்மாட்டு மச்சினத்திறற் சென்றுதலைப்பட்டிடின்னுதனவற்றைச் சொல்லாவிடிற்பேதைக்கு நாமிக்கசுனைத்தெழுந்துதினவுதின்னுமென் பதாம்..... (ஙு)

தங்கண்மரபில்லார்பின்சென்றுதாமவரை..... *
யெங்கண்ணவணக்குதமென்பவர்-புன்கேண்மை. ... *
நற்றளிர்ப்புன்னைமலருங்கடற்சேர்ப்ப..... ... *
கற்கிள்ளிக்கையிழந்தற்று..... .... *

இதன்பதப்பொருள்.

தங்கண்-தம்மிடத்து. மரபு-பொருத்தர். இல்லார் - இல்லாதார். பின்-பின்னே. சென்று-போய். தாமவரை-மற்றவர் தம்மை. எங்கண்-எம்மிடத்து. வணக்குதும் - வசப்படுத்திக் கொள்ளுவோம். என்பவர் - என்பவருடைய. புல்லேமை-புல்லியகேண்மை. நல்-நல்ல. தளிர்-தளிரையுடைய. புன்னை-புன்னைப்பூக்கள். மலரும்-மலராநின்ற. கடற்சேர்ப்ப - கடற்கரையையுடையனே. கல்-கல்லில். கிள்ளி-கிள்ளி. கை-கையினை. இழந்தற்று - இழந்தாற்போலும். என்றவாறு.— புன்னேண்மை - எழுவாய். இழந்தற்று - பயனிலை. கையை - செயப்படுபொருள்.

இதன்கருத்து.

தம்மாட்டுப்பொருத்தமில்லார்பின்சென்று மற்றவரையெம்மாட்டிவணக்குது மென்பவருடைய புல்லியகேண்மைதற்றளிர்ப்புன்னைமலருங் கடற்சேர்ப்பனே கல்லிற்கிள்ளித்தங்கையையிழந்தாற்போலுமென்பதாம். . . .. (சுர)

ஆகாதெனினுமகத்தநெய்யுண்டாகிற்..... *
போகாதெறும்புபுறஞ்சுற்றும்-யாதுங்... ... . *
கொடாவொனினுமுடையாரைப்பற்றி... ... ... *
விடாவருலகத்தவர்..... .... *

இதன்பதப்பொருள்.

ஆகாதெனினும் - தனக்குநுகர்தற்கரிதாயினும். அகத்து-ஒன்றினுள்ளே. நெய்யுண்டாகில்-நெய்யுளதாயில். புறஞ்சுற்றும் - அதன்புறத்தைச்சுற்றிக்கொண்டு. போகாது - விட்டுப்போகாது. எறும்பு-எறும்புதானதுபோல. யாதும்-ஒன்றினையும். கொடாவொனினும்-கொடாராயினும். உடையாரை-செல்வமுடையாரை. பற்றி-பற்றிக்கொண்டு. உலகத்தவர்-உலகத்திலுள்ளார். விடார் - விட்டுப்போகார். என்றவாறு.— உலகத்தவர்-எழுவாய். விடார்-பயனிலை.

இதன்கருத்து.

உட்புகுந்துதனக்கு நுகர்தற்கரிதாயினுமொன்றினுள்ளே நெய்யுளதாயிலதன்புறத்தைச்சுற்றிப்போகாதெறும்புதானது

போலயாதொன்றுமுதவாராயினுஞ்செல்வமுடையாரைச்சார்
ந்திலகத்தார்விடாமென்பதாம்..... (எ)

நல்லவைநாடோறுமெய்தாரறஞ்செய்யா ... ... *
நில்லாதார்க்கியாதொன்றுமீகலா-லெல்லா.. ..... *
மினியார்தோள்சேராரிசைபடவாழார்..... *
மூனியார்கொலும்வாழுநாள்..... ... . *

இதன்பதப்பொருள்.

நாடோறும்-நாள்தோறும். நல்லவை-நல்லநூகர்ச்சிகளை. எய்தார்-பொருந்தார். அறம்-அறத்தை. செய்யார்-செய்யமாட்டார். இல்லாதார்க்கு-வறுமையார்க்கு. இயாதொன்றும்-இயாதொன்றையும். ஈகலார்-கொடார். எல்லாம்-எல்லாநற்குணங்களையுமுடைய. இனியார்-இனியமகளிர். தோள்-தோள்களை. சேரார்-சேரமாட்டார். இசை-புகழ். பட-உண்டாக. வாழார்-வாழ்கிற்றிலராதலால். தாம்-தாம். வாழுநாள்-உயிர்வாழுநாள்களை. மூனியார்கொல்-வெறுர்கொலமேலா. எனுமுறவாறு.—தாம்-எழுவாய். மூனியார்கொல்-பயனிலை. வாழுநாளை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

நாடோறு நல்லநூகர்ச்சிகளைப்பெறுறதீதைச்செய்யார்வியார்க்கியாதொன்றினையு மீயமாட்டாரொல்லாபினியார்தோள்களைச்சேரார்புகழ்படவாழாராதலாற்றம்வாழ்கின்றநாள்களைவெறுர்கொல்லோவென்பதாம்... ..... (அ)

விழைந்தீதாருவர்தம்மைவியப்பவாருவர்..... *
விழைந்திலேமென்றிருக்குங்கேண்மை-தழங்குரற் *
பாய்திரைசூழ்வையம்பயப்பினுமின்றுதே .... *
யாய்நலமில்லாதார்மாட்டு..... ..... *

இதன்பதப்பொருள்.

ஒருவர்-ஒருவர். தம்மை-தம்மை. ஒருவர்-மற்றொருவர். விழைந்து-விரும்பி. வியப்ப-கொண்டாட. விழைந்திலேமென்று. அவ்வியப்பையாம்விரும்பிலேமென்று. இருக்கும்-இருப்பாருடன். கேண்மை-கொண்டவுறவு. தழங்கு-முழங்காநின்ற. குரல்-ஒலியினையுடைய. பாய்-பரந்த. திரை-கடல். சூழ்-சூழ்

நீத. வையம்-வையகமெல்லாம். பயப்பினும்-பெற்றாயினும். ஆய்-ஆராய்ந்தறியும். நலம்-நன்மை. இல்லாதார்மாட்டு-இல்லாதாரிடத்து. இன்னாது-பொல்லாது. என்றவாறு.—கேண்மை-எழுவாய். இன்னாது-பயனிலை. எகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

ஒருவர்தம்மையொருவர்விழைந்தழியப்ப அவ்வியப்பை யாம்விழைந்திலேம் என்றிருப்பாருடன் கொண்டகேண்மை யானதுதங்குருதிபாய்ந்நினைகூழ்ந்தவையகமெல்லாம் பெற்றாயினுமாராய்ந்தறியு நன்மையில்லாத பேதையார்மாட்டின்னாதென்பதாம் ..... (கூ)

கற்றனவும்கண்ணகன்றசாயலுமிற்பிறப்பும்..... *
பக்கத்தார்பாராட்டப்பாடெய்தந்-தானுரைப்பின். *
மைத்தினர்பல்கிமருந்திற்றணியாத..... *
பித்தனென்றெள்ளப்படும்..... *

இதன்பதப்பொருள்.

கற்றனவும்-கற்றகல்விகளையும். கண்ணகன்ற - இடமகன்ற. சாயலும் - ஒளியையும். இற்பிறப்பும் - குடிப்பிறப்பினையும். பக்கத்தார் - அயலிருந்தார். பாராட்ட - கொண்டாட. பாடு-ஒருவன்பெருமையை. எய்தும் - அடைவன். தானுரைப்பின்-தான்சொல்லிக்கொள்ளுவனாயின். மைத்தினர் - தன்னேதகைசெய்யுமைத்தினர். பல்கி-பெருகி. மருந்தில் - ஒருமருந்தாலும். தணியாத - நீராத. பித்தனென்று-பித்தமுடையவனென்று. எள்ளப்படும்-இகழப்படுவன். என்றவாறு.—ஒருவன்-எழுவாய். எய்தும்-பயனிலை. பாட்டை-செயப்படுபொருள். அவன்-எழுவாய். எள்ளப்படும்-பயனிலை.

இதன்கருத்து.

கற்றகல்விகளையுமிடமகன்றவொளியையுங்குடிப்பிறப்பினையுமயலிருந்தார்பாகழ வொருவன்பெருமையைப் பெறுவன்றனைத்தானுரைத்தாலுயினவன்தன்னேதகைசெய்யுமைத்தினர் பல்கியொருமருந்தாலுந்தணியாதபித்தனென்றெள்ளப்படுவனென்பதாம்..... (ஈ)

பேதைதமைமூற்றிற்று.

அ அதிகாரம்-நகை-இ. வெண்பா... (நகைமை)

நூற்றம். அதிகாரம்.

கீழ்மை.

கீழ்மை-கீழினதாதன்மை. அஃதாவது-குலமுங்குடிமையு முடையாருமொழித்தகீழ்மக்களுமிழித்தக்கீழ்மையென்கிறகு ணமுடையராகிலவர்கீழோரொன்றிருருசாதியராகநீக்கப்பட்ட வராம். கீழ்மையாவது - பிறராக்கத்தைக்கண்டதனைப்பொரு மையுமந்தப்பொருளையாவேயவர்க்குக் குழிப்பழுதுசொல் லுதலுமவர்செல்வங்கெடத்தக்க வினைகொள்ளுதலுமவரைக் கண்டபொழுதவர்க்குச்சிறந்தாரிலுமினியையுடையராயிருத் தலுமவருடன்வேறுபாடற்றமுறைமையினைப்பொருந்தவொ ழுகியவர்மனையாளுக்குமவர்செல்வத்திற்குமழிவுசெய்தலுஞ் சிறிதுபொருள் பெற்றதுகொண்டுதன்னெவியத்தெல்லாயு மவுமதிபண்ணுதலுமொருவர்செய்த நன்றிகூறச்சிதைத்தலு மாம்.

கப்பிகடவதாக்காலைத்தன்வாய்ப்பெயினுங்..... *
குப்பைகிளப்போவாக்கோழிபோன்-மிக்க..... *
கனம்பொதிந்தநூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன் ... *
மனம்புரிந்தவாறேமிகும்..... ..... *

இதன்பதப்பொருள்.

காலை - சிறுகாலை. கடவதா - கடலுகவே. கப்பி-கப்பியை. தன்-தன்னுடைய. வாய்-வாயில். பெயினும்-சொரிந்தாலும். குப்பை-குப்பையை. கிளப்பு - இளறுதலை. ஓவா - ஒழியாத. கோழிபோல்-கோழிபோல. மிக்க-மிகுந்த. கனம்-கனத்தை. பொதிந்த-அடைத்துவைத்திருக்கிற. நூல்-அறநூல்களை. விரித்து-விரித்துச்சொல்லி. காட்டினும் - அறிவிக்கினும். கீழ்-கீழானவன். தன்-தன்னுடைய. மனம்-மனது. புரிந்த-விரும்பிய. ஆறே-தெறியின்கண்ணே. மிகும்-மிக்குச்செல்லுவன். என்றவாறு.—கீழ்-எழுவாய். மிகும்-பயனிலை.

இதன்கருத்து.

சிறுகாலைகடவதாகப்பிடியைத்தன்வாயிற்கப்பெயினுங் குப்பையைக்கிளறுதலொழியாதகோழிபோலறநூல்களைவிரி த்துக்காட்டினுங் கீழானவன்றன்மனம் விரும்பியதெறியின்க ண்ணேயிக்குச்செல்லுவனென்பதாம். ..... (க)

காழாயகொண்டுகசடற்றுர்தஞ்சாரற்... ..... *
ழூழாதுபோவாமெனவுரைப்பிற்-கீழ்தா..... ..... *
முறங்குவாமென்றெழுந்துபோமாமஃதன்றி... ... *
மறங்குமாமற்றென்றுரைத்து..... .... *

இதன்பதப்பொருள்.

காழாய-வெளிநில்லாத நூல்களைக்கற்று. கொண்டு-அந்நூற்பொருளைமனத்திற்கொண்டு. கசடு-குற்றம். அற்றூர்- அற்றபெரியோர். தஞ்சாரல் - அவர்தம்மிடத்தே. தாழாது-நீட்டியாது. போவாமென - போகவேண்டுமென்று. உரைப்பில்-சொல்லில். கீழ்-கீழ்கள். உறங்குவாமென்று - நித்திரைசெய்வோமென்றுசொல்லி. எழுந்து-எழுந்திருந்து. போம்-போகும். அஃதன்றி-அஃதல்லாவிடின். மற்று-வேறு. ஒன்று-ஒன்றை. உரைத்து-சொல்லி. மறங்கும்-மறங்கிப்போம். என்றவாறு.—கீழ்-எழுவாய். மறங்கும் - பயனிலை. தாம் - ஒன்றும்-ஆம்-இரண்டும்-அசைநிலைகள்.

இதன்கருத்து.

உயிர்க்குறுதியாகிய நூல்களைக் கற்றநூற்பொருளையுட்கொண்டு குற்றமற்ற பெரியோர் பக்கத்தே போவாமெனச்சொண்ணீர் கீழ்களுறங்குவாமென்று சொல்லிப்போமதனைச்சொல்லாதொழிந்தால்மற்றென்றினையுரைத்துமறங்கிப்போமென்பதாம்..... (உ)

பெருநடைதாம்பெறினும்பெற்றிபிழையா..... ... *
தொருநடையராகுவர்சான்றோர்-பெருநடை ... ... *
பெற்றக்கடைத்தும்பிறங்கருவிநன்னாட..... ... *
வற்றுமொருநடைகீழ்..... .... *

இதன்பதப்பொருள்.

பெருநடை - அரசராற்பெருஞ்சிறப்பு. தாம்பெறினும் - தாம்பெற்றாராயினும். பெற்றி-மூன்புள்ளதன்மையில். பிழையாது-பிறழாது. ஒருநடையராகுவர் - ஒருசெய்கையராவர். சான்றோர்-அமைந்தோர். பெருநடை-பெருஞ்சிறப்பு. பெற்றக்கடைத்தும் - பெற்றவிடத்தும். பிறங்கு - பெருத்தவி ழுகிற. அருவி - அருவியினையுடைய. நல்-நல்ல. நாட - மலை

கீழ்மை.

நாடனே. ஒருநடை - வேறெயாருசெய்கை. கீழ்-கீழ். அற்ரும்-செய்யவற்ரும். என்றவாறு.—சான்றோர் - எழுவாய். ஆகுவர்-பயனிலை. கீழ்-எழுவாய். அற்ரும்-பயனிலை.

இதன்கருத்து.

அரசராற்பெருஞ்சிறப்புத்தாம் பெற்ரராயினுமுன்புள்ள தன்மையிற் பிறழாதே யொருசெய்கையராவரைமவுடையார் பெருஞ்சிறப்புப் பெற்றகாலத்தும் பிறந்தருவி தன்னுடனே வேறெயாருசெய்கைகீழ்செய்யவற்ரருமென்பதாம்... (கூ)

தினையனைத்தேதையினுஞ்செய்தநன் றுண்டாற்... ... ✻
பனையனைத்தாவுள்ளுரவர்சான்றோர்-பனையனைத் ... . ✻
தென்னுஞ்செயினுமிலங்கருவிதன்னுட..... ... . ✻
தன்றிலதன்றறியார்மாட்டு..... ... . ✻

இதன்பதப்பொருள்.

செய்த-ஒருவன்செய்த. நன்று - நன்றி. தினையனைத்தாயினும்-தினையளவாயினும். உண்டால்-உண்டாயினதனை. பனையனைத்தா-பனையளவாக. சான்றோர்-சால்புடையோர். உள்ளுவர்-நினைப்பர். பனையனைத்து-பனையளவாகதன்றியை. என்னும்-எற்றாலும். செயினும்-செய்தாலும். இலங்கு-விளங்கும். அருவி-அருவியினையுடைய. நல்-நல்ல. நாட - மலைநாடனே. நன்று-செய்தநன்மையினை. அறியார்மாட்டு - அறியாதகீழானிடத்து. நன்று-நன்மை. இல-இலவாம். எற்றவாறு.—சான்றோர்-எழுவாய். உள்ளுவர்-பயனிலை. நன்று - எழுவாய். இல-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

ஒருவன்செய்தநன்றினையளவாயினுந்தம்மனத்தினகினை என்றுமுண்டாயினதனைப் பனையளவாகச் சான்றோர்நினைப்பர் பனையளவாகதன்றியையெஞ்ஞான்றுஞ்செய்தாலுமிலங்கருவி நன்னாடனேசெய்தநன்றியையறியாதார்மாட்டு நன்மையில்லை னவென்பதாம். .... (சு)

பொற்கலத்தூட்டிப்புறந்தரினுநாய்பிற..... ..... ✻
கொச்சிநிகிமையாதுபார்த்திருக்கு-மச்சீர்..... ... ✻
பெருமையுடைத்தாக்கொளினுங்கீழ்செய்யுங் ..... ✻
கருமங்கள்வேறுபடும்..... .... ✻

இதன்பதப்பொருள்.

பொற்கலத்து-பொன்னின்கலத்திலே. ஊட்டி-உண்பித்து. புறந்தரினும்-பாதுகாப்பினும். நாய்-நாயானது. பிறர்-அயலாருடைய. எச்சிற்கு-எச்சிற்சோற்றிற்கு. இமையாது-இமையாமல். பார்த்திருக்கும்-பார்த்துக்கொண்டிருக்கும். அச்சீர்-அச்சீர்மைபோல. பெருமையுடைத்தா-பெருமையுடையராக. கொளினும்-கொள்ளுவராயினும். கீழ்-கீழாயினர். செப்யும்-செய்கின்ற. கருமங்கள்-காரியங்கள். வேறுபடும்-வேறுபட்டிருக்கும். என்றவாறு.—கருமங்கள்-எழுவாய். வேறுபடும்-பயனிலை.

இதன்கருத்து.

பொற்கலத்தூட்டிப் பாதுகாப்பினுநாய்பிறரெச்சிற்கிணமையாதுபார்த்துக்கொண்டிருக்குமதுபோலப்பெருமையுடையராகமதித்துக் கொள்ளினுங்கீழ் செய்யுஞ் செய்கைகள் நல்லோர்செய்கைகட்குவேறுபட்டிருக்குமென்பதாம் ... (கூ)

சக்கரச்செல்வம்பெறினும்விழுமியோ... ... . *
மெக்காலுஞ்சொல்லார்மிகுதிச்சொ-லெக்காலு .... *
மூந்திரிமேற்காணிமிகுவதேதீக்கீழ்தன்னே..... *
யிந்திரனுவெண்ணிவிடும்..... *

இதன்பதப்பொருள்.

விழுமியோர்-சீரியோர். சக்கரச்செல்வம்-இந்திரசெல்வத்தை. பெறினும் - பெற்றாராயினும். மிகுதிச்சொல் - மிகுதிச்சொல்லே. எக்காலும்-எஞ்ஞான்றும். சொல்லார் - உரையார். எக்காலும்-எந்நாளும். மூந்திரிமேல் - மூந்திரிகைப்பொன்னின்மேலே. காணி - காணிப்பொன். மிகுவதேல்-மிகுமாயின். கீழ்-கீழானவன். தன்னை-தன்னை. இந்திரனு - இந்திரனுக. எண்ணிவிடும் - மதித்துக்கொண்டிருப்பன். என்றவாறு.—விழுமியோர்-எழுவாய். சொல்லார்-பயனிலை. மிகுதிச்சொல்லே-செயப்படுபொருள். கீழ் - எழுவாய். எண்ணிவிடும்-பயனிலை. தன்னை-செயப்படுபொருள். சக்கரச்செல்வம்-இந்திரன்செல்வமென்றும் - சக்கரவாளச்சக்கரத்திலுண்டானசெல்வமென்றுமாம்.

இதன்கருத்து.

விழுமியோரிந்திரனுக்கச் செல்வத்தைப்பெறினு முறைகடந்தசெல்வினை யெஞ்ஞான்றுஞ் சொல்லாரொந்நாளு மூந்திரி

கைப்பொன்னின் மேற் காணிப்பொன்மிருமாயின் கீழாயினவ
ன்றன்னையிந்திரனுகவெண்ணுவனெல்பதாம் ... ... (சு)

மைதிர்பசும்பொன் மேன்மாண்டமணியழுத்திச் ... ✻
செய்தெனினுஞ்செருப்புதீதன்-காற்கேயா ... ... ✻
மெய்தியசெல்வத்தராயினுங்கீழ்கஞைச்..... ✻
செய்தொழிலாற்காணப்படும்..... ✻

இதன்பதப்பொருள்.

மை-குற்றம். தீர்-தீர்ந்த. பசும்-பசிய. பொன்மேல்-பொ
ன்னின்மேல். மாண்ட-மாட்சிமைப்பட்ட. மணி-மாணிக்கமெ
னிகளை. அழுத்தி-பதித்து. செய்தெனினும்-செய்ததாயினு
ம். செருப்பு-கழல். தன்-தன்னுடைய. காற்கே-காலுக்கே.
ஆம்-ஆகுமதுபோல. எய்திய-நிரம்பிய. செல்வத்தராயினும்-
செல்வத்தையுடையராயினும். கீழ்கஞை-கீழ்மக்களை. செய்-
அவர்செய்யும். தொழிலால்-வினையினால். காணப்படும்-அறி
யப்படும். என்றவாறு.—செய்தொழிலால்-கீழ்கஞை-காணப்
படும். இதுகருமணிப்புனர்வு.

இதன்கருத்து.

மாசற்றபசும்பொன்மேலேமாட்சிமைப்பட்டமணிகளைய
ழுத்திச்செய்யப்பட்டதாயினுஞ் செருப்புதீதன்காற் கேயாம
துபோலநிரம்பியசெல்வத்தராயினுங் கீழானவர்களையவர்செ
ய்யுந்தொழிலாற்காணப்படுமென்பதாம்..... (எ)

கடுக்கெனச்சொல்வதிறுங்கண்ணேட்டமின்று..... ✻
படுக்கண்பிறர்மாட்டுவக்கு-மடுத்தடுத்து ... ... ✻
வேகமூடைத்தாம்விறன்மலைநன்னாட... ..... ✻
வேகுமாமெள்ளுமாங்கீழ்..... ..... ✻

இதன்பதப்பொருள்.

கடுக்கென-கழியவார்த்தைகளை. சொல்-சொல்லல். வதிறும்-
வல்லவனவன். கண்ணேட்டம்-கண்ணோட்டம். இன்றும்-இலனவன். பிறர்மாட்டு-பிறரிடத்தண்டாகிய. படுக்கண்-துன்ப
த்திற்கு. உவக்கும்-மகிழ்ந்திருப்பன். அடுத்தடுத்து-மேன்
மேலும். வேகம்-கோபத்தை. உடைத்தாம்-உடைத்தாயிருப்
பன். விறல்-வெற்றிபொருந்திய. மலை-மலைகளையுடைய. நல்-
நல்ல. நாட-நாடனே. கீழ்-கீழானவன். எள்ளுமாம்-ஒருவன்மா

ட்டிகழந்து. எகும்-செல்லுவன், என்றவாறு.---கீழ்-எழுவாய். எகும்-பயனிலை. ஆம்-இரண்டும்-அசைநிலை.

இதன்கருத்து.

வெய்தாகச்சொல்லவல்லனுவன் கண்ணோட்டமின்றியிருப் பன்பிறர்க்குவதீதவிடுக்கண்கண்டாலுமனமகிழுவன்மேன்மே லும்வெகுளியையுடைத்தாவன்விறன்மிகநன்னுடனேயொரு வன்மாட்டுநில்லாதிகழ்ந்துசெல்லுவன்கீழானவனென்பதாம் (அ)

பழையரிவனொன்றுபன்னாட்பின்னிற்பி..... ..... ❋
னுழையினியராகுவர்சான்றோர்-விழையாதே ... ... ❋
கள்ளுயிர்க்குதெய்தற்கனேகடற்றண்சேர்ப்ப... ... ❋
வெள்ளுவர்கீழாயவர். ... . ❋

இதன்பதப்பொருள்.

உழை-தம்மிடத்துச்சென்று. பன்னாள்-பலநாளும். பின்-பின்னே. நிற்பின்-நின்றால். பழையர்-பழையவர். இவனொன்று-இவனொன்றுகருதி. இனியர்-இனியராய். ஆகுவர்-ஒழுகுவர். சான்றோர்-சால்புடையோர். கள்-மதுவை. உயிர்க்கும்-பொழியாநிற்கும். நெய்தல்-நெய்தற்பூவினையுடைய. கானல்-ஆரவாரத்தாற்சிறந்த. தண்-குளிர்ந்த. கடற்சேர்ப்ப-கடற்கரையையுடையவனே. கீழாயவர்-கீழாயினர். விழையாதே-விரும்பாதே. எள்ளுவர்-இகழ்வர். என்றவாறு.---சான்றோர்-எழுவாய். ஆகுவர்-பயனிலை. கீழாயவர்-எழுவாய். எள்ளுவர்-பயனிலை.

இதன்கருத்து.

தம்மாட்டுச்சென்றுபலநாள்பின்னேநிற்பின்பழையரிவனொன்றுகருதியவர்க்கினியராயொழுகுவர்சால்புடையோர்கள்வெயுயிர்க்குதெய்தற்கனேகடற்றண்சேர்ப்பனையவ்வாறொழுகுகீழாயினர்விருப்பாதிகழ்வனென்பதாம்.. ..... (கூ)

கொய்புற்கொடுத்துக்குறைதீதென்றுற்றீற்றினும்... ❋
வையம்பூண்கல்லாதிறுகுண்டையேமே... ... ... ❋
வெய்நிலசெலவத்தாயினுங்கீழ்கணாச்... ... ... ❋
செய்தொழிலாற்காணப்படும் .... ❋

கயமை.

இதன் பதப்பொருள்.

கொய்-கொய்த. புல்-புல்லி. குறைத்து-பேரொருதுக்குக் குறைத்து. கொடுத்து - கிரிறருதுக்குக்கொடுத்து. எஃறும்-எந்நாளும். தீர்நிலும்-தீர்நிலையும். சிறுகுண்டை-அச்சிறுகுண்டைகள். வையம்-பண்டியை. பூண்கல்லா-பூணமாட்டா அதுபோல. ஐய-ஐயனே. கேள்-கேளாய். எய்திய-பிக்க. செல்வத்தராயினும்-செல்வத்தையுடையராயினும். கீழ்கஃ-கீழ்மக்கஃள. செய்தொழிலால் - அவர்செய்யுந்தொழிலால். காணப்படும் - கீழ்மைக்குணமுடையாரென்றறியப்படும். என்றவாறு.—செய்தொழிலால்-கீழ்கஃ-காணப்படும் - இதுகருமணிப்புனர்வு.

இதன்கருத்து.

கொய்தபுல்லைப்பெருங்குண்டைக்குக்குறைத்துச்சிறுகுண்டைக்குக்கொடுத்தென்றுந்தீர்நிலுமச்சிறுகுண்டைகள்சகடத்தைப்பூணமாட்டாவதுபோலவையகேள்நிரம்பியசெல்வத்தராயினுங்கீழாயினரை யவர்செய்யுந்தொழிலாற் கீழ்மைக்குணமுடையாரென்றறியப்படுமென்பதாம் .... (ஐ)

கீழ்மைமுற்றிற்று.

அஃ அதிகாரம்-நகர்-இ. வெண்பா... (நகுஐ)

கயமை.

கயமை-கயவரதுதன்மை. அஃதாவது - குலத்தானுஞ்சுடுமையானுங்கல்வியானுங்குறைவுற்றிருக்கவுமிவையிற்றிலேபந்தமற்றுக்கீழாயினர் செய்கையாகிப்பிறர்க்கொரு கேடுவரிற்றமக்கோராக்கம் வந்ததாகக்கருதியும் பிறர்க்கோராக்கம்வரிற்றமக்கொரு கேடுவந்தார்போலவதற்குவருந்தியுந்தமக்குத்தொருவர்சிலநன்றிகஃளச் செய்திருப்பராகிலவர்க்குச்சிறிதுகுறையுண்டாக்கியவர்க்குக்கேடுசெய்துமொருவரளவிலேதமக்கொருபயனுண்டாகிலதுபலிப்பித்துக்கொள்ளுமளவுமாசாரஞ்செய்ததுபலித்தபின்பவரையன்னியாப்போற்கண்டிந்தமைமையுந்தண்டம்பண்ணவல்லவற்குத்தாஞ் சிலபயன்பட்டாசாரஞ்செய்துவருவதுமாம்.

ஆர்த்தவறிவினராண்டிளையராயினுங்... .... *
காத்தோம்பித்தம்மையடக்குப-மூத்தொழுகுந். .... *
தீத்தொழிலென்றித்திரிதத்தெருவைபோற். ..... *
போத்தரூர்புல்லறிவினர் .... *

இதன்பதப்பொருள்.

ஆர்த்த-பிணிப்புண்ட. அறிவினர்-அறிவினையுடையவர். ஆண்டு-ஆண்டால். இளையராயினும்-இளையராகவிருப்பினும். தம்மை-தம்மை. காத்து-காவல்செய்து. ஓம்பி-பரிந்து. அடக்குப-தம்பொறிதளையடக்கிக்கொள்வர். புல்லறிவினர்-புல்லறிவினையுடையார். மூத்தொழுகும்-மூக்குந்தொழும். தீ-தீய. தொழில்-செய்கையே. கன்றி-தழும்பி. திரிந்தற்று-ஒழுகி. எருவைபோல்-கொறுக்கைபோல. போத்து-உட்புழையை. அரூர்-நீங்கார். என்றவாறு.—அறிவினர்-எழுவாய். அடக்குப-பயனிலை. தம்மை-செயப்படுபொருள். புல்லறிவினர்-எழுவாய். அரூர்-பயனிலை. போத்தை-செயப்படுபொருள். திரிபுந்தெரிவைபோலென்பதனுமிபாடம். பொத்தரூரென்பாலனு-போத்தரூரென்னீட்டவிகாரமாயிற்று.

இதன்கருத்து.

மனத்தின்கட்பிணிப்புண்ட அறிவினையுடைய ராண்டிளையராயினுந்தம்மைக்காவல்செய்துபோற்றித்தம்பொறிகளையடக்குவர்புல்லறிவினையுடையார் மூத்தொழுகுந்தீத்தொழிலின்கண்ணே தழும்பியாழுகி யேழைக்கோல்போலுட்புழையையரூரென்பதாம்..... (க)

செழும்பெரும்பொய்கையுள்வாழினுமென்றும். ... *
வழும்பறுக்கிலாவாத்தேரை-வழும்பில்சீர். .... *
நூலகற்றக்கண்ணுநுணுக்கமொன்றில்லாதார்... ... *
தேர்கிற்கும்பெற்றியரிது..... ..... *

இதன்பதப்பொருள்.

செழும்-வளவிய. பெரும்-பெரிய. பொய்கையுள்-பொய்கையிலே. என்றும்-எல்லாநாளும். வாழினும்-வாழ்ந்தாலும். வழும்பு-வழும்பை. அறுக்கில்லாவாம்-அறுத்துக்கொள்ளமாட்டாவாம். தேரை-தேரைகளதுபோல. வழும்பு-குற்றம். இல்-இல்லாத. சீர்-சீர்மையையுடைய. நூல்-நூல்களை. கற்றக்

கண்ணுடம்-கற்றவிடத்தும். நுணுக்கம் - நுண்ணியவறிவு. ஒன்றும்-ஒன்றும். இல்லாதார் - இல்லாதவர். தேர்கிற்கும்-அந்நூற் பொருளைத் தெளியத்தகும். பெற்றி - தன்மை. அரிது-இலர். என்றவாறு.—இலலாதார்-எழுவாய். பெற்றியிலர்-பயனிலை.

இதன்கருத்து.

வளவியபெரியபொய்கையுளென்றும் வாழினுந்தம்மேலு ள்ளவழும்பை நீக்கமாட்டாவாருந் தேதைகளது போலக்குற் மில்லாதசீரியநூல்களைக்கற்றாலுநுணுக்கமாயறியுமறிவான் றில்லாதாரந்நூற்பொருள்களை யாராயவல்லராந் தன்மையில னென்பதாம்..... (உ)

கணமலைநன்னுடகண்ணினின்றொருவர்... ... . *
குணனேயுங்கூறற்கரிதாற்-குணனழுங்கக் ... ... *
குற்றமுளைநின்றுகூறுஞ்சிறியவர்கட்..... *
கெற்றுவியன்றதோநா..... ..... *

இதன்பதப்பொருள்.

கணம்-திரண்ட. மலை-மலைகளையுடைய. நல் - நல்ல. நாட-நாடனே. கண்ணின்று-மூன்னேநின்று. ஒருவர்-ஒருவருடைய. குணனேயும்-நற்குணத்தையும். கூறற்கு - சொல்லுதற்கு. அரிது-அரிதாயிருக்க. குணன்-அவரதுகுணம். அழுங்க-கெட. குற்றம்-குற்றத்தை. உளைநின்று-அவரிடத்தேநின்று. கூறும் - சொல்லும். சிறியவர்கட்கு - கயவர்க்கு. எற்றுவியன்ற தோ-எதிரூறுசெய்ததோ. நா-நாவானது. என்றவாறு.—நா-எழுவாய். எற்றுவியன்றதோ-பயனிலை. ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

கணமலைநன்னுடனேயெதிர்நின்றொருவர் குணத்தையுங்கூ றுதற்கரிதாயிருக்க அவரதுகுணங்கெடக்குற்றத்தையவரிடத் தேநின்றுசொல்லுங்கயவர்க்கியாதிரூறுசெய்ததோநாவென் பதாம்..... (ங)

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை .. *
சேடியர்போலச்செயற்றேற்றார்-கூடிப்... .... *
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி. *
மதித்திறப்பர்மற்றையவர்..... ..... *

இதன்பதப்பொருள்.

கோடு-இருமருங்குங்கைகொண்டு. எந்து - உயர்ந்து. அகல்-அகன்ற. அல்குல்-அல்குலையுடைய. பெண்டிர் - குலமகளிர். தம்-தம்மூடைய. பெண்ணீர்மை-பெண்மையினதழகை. சேடியர்போல-தம்மைப்பாராட்டுஞ்சிலதியரைப்போல. செயற்றற்றூர் - தாந்தம்மைப்புனைதல்செய்யார். கூடி-பலவிடத்தநீருங்கூடி. புதி-புதிய. பெருக்கம்போல-வெள்ளம்போல. தம்-தம்மூடைய. பெண்ணீர்மை - பெண்டன்மையை. காட்டி-யாவர்க்குமறிவித்து. மதித்து-தம்மைமதித்து. இறப்பர்-நீங்குவர். மற்றையவர் - மற்றைப்பொதுமகளிர். என்றவாறு. — பெண்டிர்-எழுவாய். செயற்றற்றூர்-பயனிலை. தம்மை-செயப்படுபொருள். மற்றையவர்-எழுவாய். இறப்பர்-பயனிலை. இது நயமையான தெப்படியெனின் கற்புடையமகளிரில்லத்தினை வழுவாமலுந்தம்மூடைய கணவன்மனதுக்கேவல்தக வொழுகுதலுமுலகத்தார்தம்மைக்கொண்டாடவிருக்குமியல்பேதமதக்கழகாகவுமல்லது பூசமுடிக்கப்பூணவுடுக்கவெல்கிற விவற்றில் விருப்பம்மையாமற் றமக்கேவல்செய்கிறவர்களுடன்மேதீராமையற வழுக்கைடந்திருப்பதெதனைசெல்வமுண்டாயினும் அந்தக்குணமில்லாதமகளிர்செல்வமிலராயினுந்தம்மை யழகுசெய்துகொண்டு தாந்தூய்மையுடையொன்னுமதனைப் பிறர்க்கறிவித்துத்தம்மூடைய கணவன்மனதுக்குவாராமலொழுகுமம்மகளிரைப்போலக்கயவருந்தமக்கொன்றுமில்லையாயினும்பெற்றபெற்ற வளவுகளிலேதம்மையழகுசெய்துபெரியோரை யவமதிப்புப்பண்ணியுந்தமக்கொருதுன்பம்வந்தகாலத்துப்பறையரிற் கடையானகுறைச்சலுங் கயவர்குணமாம்.

இதன்கருத்து.

இருமருங்குமுயர்ந்தகன்ற வல்குலையுடைய குலமகளிர்தம்பெண்ணீர்மையைத்தம்மைப்பாராட்டுஞ் சேடியரைப்போலநீதாந்தம்மைப்புனைதல்செய்யார் புதுப்புனல்வெள்ளம்போலத்தம்பெண்ணீர்மையை வெளிப்படுத்தித்தம்மைவியந்துநீங்குவர் மற்றைப்பரத்தையரென்பதாம்..... (சு)

தளிர்மேலேநித்திலுந்தட்டாமற்செல்லா..... *
வுளிநீரர்மாதேகயவ-ரளிநீரார்க்..... ..... *
கெள்ளுஞ்செய்யாரெனைத்தானுஞ்செய்பவே.... *
யின்னுங்குசெய்வார்ப்பெறின்... .... *

இதன்பதப்பொருள்.

தளிர்மேல்மேல்-தளிரின்மேலே. நிற்பினும்-நின்றதாயினும். தட்டாமல்-ஒன்றுறட்டாமல். செல்லா-செல்லாத. உளிநீரர்-உளியில் நன்மையராவர். கயவர்-கீழ்மக்கள். அளி-அளிக்கும். நீரார்க்கு-நீர்மையுடையார்க்கு. என்னுறினும்-யாதொன்றினையும். செய்யார்-செய்யாது. இன்னுருக்கு-தம்மைப்போல்லாங்கு. செய்வார்-செய்வானை. பெறின்-பெற்றுலகர்க்கு. எனைத்தானும் எல்லாவற்றையும். செய்ப-செய்யீர். என்றவாறு.—கயவர்-எழுவாய். செய்வர்-பயனிலை. மாதோ-ஏ-இவ்விரண்டும் அசைநிலை.

இதன்கருத்து.

தளிர்மேலேநின்றதாயினுமொன்றுறட்டாமற்செல்லாதகுளியின்நன்மைபோல்வர்கயவரளிக்குநீர்மையையுடையார்க்கியாதொன்றினையுஞ்செய்யாதுதம்மையின்னுருக்குசெய்வானைப்பெறினவர்க்கெல்லாவற்றையுஞ்செய்வரென்பதாம் (இ)

மலைநலமுள்ளுங்குறவன்பயந்த..... *
வினைநிலமுள்ளுமுழவன்சிறந்தெருவர்..... *
செய்தநன்னுள்ளுவர்சான்றோர்கயந்தன்னை..... *
வைதலதையுள்ளிவிடும்..... *

இதன்பதப்பொருள்.

மலை-மலையினுள்ள. நலம்-நன்மைகளை. உள்ளும்-நினைத்திருப்பன். குறவன்-குறவனை. பயந்த-பயன்பட்ட. வினைநிலம்-வினைநிலத்தை. உள்ளும்-கருதியிருப்பன். உழவன்-உழவனை. சிறந்த-சிறப்புடைத்தாய. ஒருவர்-ஒருத்தர். செய்த-இயற்றிய. நன்னு-நன்மையை. உள்ளுவர்-நினைத்திருப்பர். சான்றோர்-சால்புடையோர். கயம்-கயவன். தன்னை-தன்னையொருவன். வைதலதை-வைதலைகையை. உள்ளிவிடும்-நினைத்திருப்பன். என்றவாறு.—கயம்-எழுவாய். உள்ளிவிடும்-பயனிலை. வைதலதை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

மலையினுள்ளநன்மைகளை நினைப்பன்குறவன்பயன்பட்டவினைநிலத்தை நினைப்பனுழவன்சிறப்புடைத்தாய ஒருவர்செய்த

நன்றியறிவோர்சான்றோர்தன்னைவைத்தறிவோன்கய
வனென்பதாம். .... (கூ)

ஒருநன்றி செய்தவர்க்கொன்றியெழுந்த... .. .. *
பிழைநூறுஞ்சான்றோர்பொறுப்பர்-கயவர்க் ..... *
கெழுநூறுநன்றிசெய்தான்றுதிதாயி... .... *
னெழுநூறுந்தீதாய்விடும். .... *

இதன்பதப்பொருள்.

ஒருநன்றி-ஒருநன்றியினை. செய்தவர்க்கு-செய்தவர்கட்கு. ஒன்றி-பொருந்தி. எழுந்த-உளவாய. பிழைநூறும்-நூறு பிழைகளையும். சான்றோர்-சால்புடையோர். பொறுப்பர்-பொறுத்துக்கொள்ளுவர். கயவர்க்கு-கீழ்மக்களுக்கு. எழுநூறு-எழுநூறு. நன்றி-நன்மையை. செய்தல்-பணை. ஒன்றுறு-ஒன்றுறு. தீதாயின்-தீதாமாயின். எழுநூறும்-மூன்புசெய்த எழுநூறு நன்மைகளும். தீதாய்விடும்-தீதாகிவிடும். என்றவாறு.—சான்றோர்-எழுவாய். பொறுப்பர்-பயனிலை. நூறுபிழைகளை-செயப்படுபொருள். எழுநூறுநன்றி-எழுவாய். தீதாய்விடும்-பயனிலை. ஒருநூறுநன்றியென்பது உம்பாடம்.

இதன்கருத்து.

அமைந்தோரொருநன்றியினைச்செய்தவர்க்குப்பொருந்தி யுளவாயநூறுபிழைகளையும்பொறுப்பர் கயவர்க்கெழுநூறுநன் றியைச்செய்தான்றுதிதாயின்முன்புசெய்தவெழுநூறுநன்றி ருந்தீதாய்விடுமென்பதாம்..... .... (எ)

ஏடைப்பருவத்துமிறந்தார்செய்வன... ... ... *
மோட்டிடத்தஞ்செய்யார்மூழுமக்கள்-கோட்டை. *
வயிரஞ்செறிப்பினும்வாட்கண்ணுப்பன்றி ... ... *
செயிர்வேழமாருதவின்று..... ..... *

இதன்பதப்பொருள்.

ஏட்டை-வறுமை. பருவத்தும்-காலத்தும். இறந்தார்-குடிப்பிறந்தார். செய்வன-செய்வனவற்றை. மோட்டிடத்தும்-பெரியசெல்வமுண்டானகாலத்தும். செய்யார்-செய்யமாட்டார். முழுமக்கள்-கயவர். கோட்டை-கொம்பினை. வயிரம்-கிம்புரி. செறிப்பினும்-செறிந்தாலும். வாள்-வாள்போ

லும். கண்ணுறீ-கண்ணினையுடையாய். பன்றி-பன்றியானது. செயிர்-பூசலைச் செய்யும். வேழம்-யானை. ஆகுகவின்று - ஆக மாட்டாது. என்றவாறு.—மூழுமக்கள் - எழுவாய். செய்யார்-பயனிலை. செய்யனவற்றை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

வாட்கண்ணுய்வறுமைக்காலத்தும் குடிப்பிறந்தார் செய்வனவற்றைக்கயவர் பெரியசெல்வம் பெற்றகாலத்தும் செய்யமாட்டார்கொம்பினைக்கிப்புரிசெறிட்பினும்பன்றி வேழமாகமாட்டாதென்பதாம்..... (அ)

இன்றுதுமித்நிலையேயாதுமினிச்சிறிது... ... . *
நின்றுதுமென்றுநினைத்திருந்-தொன்றி..... ..... *
யுளையின்மகிழ்ந்ததம்முள்ளம்வேருகி..... *
மனையிலையின்மாய்ந்தார்பலர்..... ..... *

இதன்பதப்பொருள்.

இன்று-செல்வத்தையின்று. ஆதும் - பெறுதும். இந்நிலையே-இப்பொழுதே. ஆதும்-பெறுதும். இனி-இனிமேல். சிறிது-சிறிதுபொழுது. நின்று-கழித்து. ஆதுமென்று-பெறுதுமென்று. நினைத்திருந்து-நினைத்துக்கொண்டிருந்து. ஒன்றி-பொருந்தி. உளையின்-உளையுமேல். மகிழ்ந்தது - மகிழ்ச்சியுற்று. தம்-பிரிவுதம்முடைய. உள்ளம்-மனது. வேருகி-வேறுபட்டு. மனையிலையின்-தாமனையிலேபோல. மாய்ந்தார்-மாய்ந்தவர். பலர் - பலராவர். என்றவாறு. --பலர் - எழுவாய். மாய்ந்தார்-பயனிலை. மனை-செய்யுள்விகாரம்.

இதன்கருத்து.

செல்வத்தையின்றுபெறுதுமிப்பொழுதேபெறுதுமினிமேற்சிறிதுபொழுதுநின்றுபெறுதுமென்றுகருதியிருந்தென்றிப்பிறரோடிப்பெற்றிகூறுகின்றவுளையுமன்மகிழ்ந்ததுபின்புதம்முள்ளம்வேறுபட்டுத்தாமனையிலேபோலத்தோன்றியிறந்துபோயினர்பலரென்பதாம்... .... (கூ)

நீருட்பிறந்துநிறம்பசியதாயினு..... *
மீரங்கிடையகத்தில்லாகு-மோரு..... *
நிறைப்பெருஞ்செல்வத்துநின்றக்கடைத்து... .... *
மறைப்பெருங்கலன்மூருடைத்து..... .... *

பண்பினை றி.

இதன்பதப்பொருள்.

நீருள்-நீருள்ளே. பிறந்து-தோன்றி. நிறம்-நிறம். பசிய தாயினும்-பசுமையாயிருந்ததாயினும். இடையகத்து-சடைக்குள்ளே. ஈரம்-ஈரமானது. இல்லாரும்-இல்லையாகுமது போல. நிறை-நிறைந்த. பெரும்-பெரிய. செல்வத்து-செல்வத்திலேபிறந்து. நின்றக்கடைத்தும்-நின்றவிடத்தும். அறை-பாறைபோலும். பெரும்-பெரிய. கலன்ஞர்-கற்போலப்பயன்படாதாரை. உடைத்து-உடைத்திவ்வுலகம். என்றவாறு.—உலகம்-எழுவாய். உடைத்து-பயனிலை. கல்லன்ஞரை-செயப்படுபொருள். ஒருமென்பதனைச்சொல்.

இதன்கருத்து.

நீருள்ளேதோன்றி நிறம்பச்சையாயிருந்ததாயினுங்கிடையகத்திரமில்லையாகுமதுபோலமிக்க செல்வத்தினின்றவிடத்தும் பாறையானபெருங்கற்போலப்பயன்படாதாரையுடைத்திவ்வுலகமென்பதாம்..... (ம)

கயமைமுற்றிற்று.

ஆ அதிகாரம்-ஈஈ-இ. வெண்பா... (ஈஈம)

பண்பினை றி.

பண்பினை றி-பல்வழி. அஃதாவது-இத்தூலையதிகாரவடைவு செய்தபதுமனாதிகாரங்களின் மிகுந்தபாட்டையெடுத்துப் பலதெறிகளையுஞ்சேர்த்தோரதிகாரமாக்கிப்பண்பினறியென்னுபெயர்கொடுத்துப்பொருட்பாவிலேசேர்க்கப்பட்டதாம்.

மழைநிலைக்குமாடமாய்மாண்பமைந்தகாப்பா. ... *
பிழைவிளக்குநிம்நிமைப்பினெண்ணும்-விழைதக்க. . *
மாண்டமனையாளையில்லாதானில்லகங்..... *
காண்டற்கரியதோர்காடு..... *

பன்னெறி.

இதன்பதப்பொருள்.

மழை-மேகம். திரைக்கும்-தவழும். மாடமாய் - மாளிகை யாய். மாண்பு மாட்சிமை. அமைத்த-நிரம்பின. காப்பாய்-காவலாய். இழை - ஆபரணங்கள். விளக்குறின் று - விளக்குப் போலதின் று. இமைப்பின்-ஒளிங்கினும். எவ்வும்-என்னபய னுடைத்தாம். விழைதக்க-விரும்பத்தக்க. மாண்ட - மாட்சி மைப்பட்ட. மனையாளை-மனைவியை. இல்லாதான்-இல்லாதவ னுடைய. இல்லகம்-வீடு. காண்டற்கு-பார்க்கைக்கு. அரிய து-அரிதாயிருப்பது. ஓர்-ஒரு. காடு - காடுபோலும். என்றவா று.— இலகுடை-எழுவாய். காடுபோலும்-பயனிலை.

இதன்கருத்து.

மழைநிலைக்குமாடமாய் மாண்பமைத்தகாவலையுடைத்தா யிற்பொற்கலன்கள்விளக்குப்போலதின் று விளங்கினுமெண்ணு ம் விருப்பத்தக்க மாட்சிமையுடைய மனையாளில்லாதானு டையவில்லகங்காண்டற்கரியதோர்காடுபோலுமென்பதாம்(க

எழுக்கெனைத்தும்மில்லாதவாள்வாய்த்திடந்து.... .... ❋
மிழுக்கினைதாம்பெறுவராயினிழுக்கெனைத்தும் . ❋
செய்குறுப்பாணிசிறிதேயச்சின்மொழியார்..... ❋
கையுறுப்பாணிபெரிது..... ❋

இதன்பதப்பொருள்.

வழுக்கு-தவறு. எனைத்தும்-எவ்வளவும். இல்லாத - இல்லா த. வாள்வாய் -வாள்வாய்ப்போன்றகாவலுள். திடந்தும்-தங் கியும். இழுக்கினை-காவற்சோர்வினை. தாம்பெறுவராயின்-சிறி தாதாம்பெறுவராயின். இழுக்கு - அவ்விழுக்கை. எனைத்தும்-எவ்வளவாயினும். செய்குறு - செய்யத்தொடங்காத. பாணி-காலம். சிறிது-சிறிதாம். அச்சின்மொழியார்-அந்தமெத்தெ ன்றவார்த்தையினையுடையமகளிர். கை - ஒழுக்கத்தை. உறு-மேவாத. பாணி-காலமே. பெரிது-பெரிது. என்றவாறு.— பாணி-எழுவாய். சிறிது-பயனிலை. பாணி-எழுவாய். பெரிது-பயனிலை.

இதன்கருத்து.

தவறொன்றுமில்லாதவாள்வாய்ப்போன்றகாவலுட்டங்கியு ங்காவற்சோர்வினைச்சிறிதுதாம்பெறுவராயினெனைத்தானும்

குற்றஞ்செய்யதீதொடங்காதகாலஞ்சிறிதாமச்சின்மொழியா
லொழுக்கத்தைமேவாதகாலமேபெரிதென்பதாம். ... (உ)

எறியன்றெதிர்நிற்பாள்கூற்றஞ்சிறுகாலே... ... ... *
யட்டில்புகாதாளரும்பிணி-யட்டதனை..... ..... *
யுண்டியுதவாதாளில்வாழ்பேயிம்மூவர்..... ..... *
கொண்டானைக்கொல்லும்படை..... ..... *

இதன்பதப்பொருள்.

எறியன்று-அடியன்று. எதிர்-எதிரே. நிற்பாள்-நிற்கு மவள். கூற்றம்-கூற்றத்தோடொக்கும். சிறுகாலே - சிறு காலையே. அட்டில்-மடைப்பள்ளியில். புகாதாள்-புகாதவள். அரும் பிணி-அரியதோயோடொக்கும். அட்டதனை - சமைத்தவுணவை. உண்டி-காதலன்விருப்பியுண்டற்கு. உகவாதாள்-உதவாதவள். இல்-வீட்டிலே. வாழ்-வாழ்கின்ற. பேய்-பேயோடொக்கும். இம்மூவர்-இப்பெண்டிர்மூவரும். கொண்டானை-கொண்டவனை. கொல்லும்-கொல்லுகின்ற. படை-படையோடொப்பர். என்றவாறு.—மூவர்-எழுவாய். ஒப்பர்-பயனிலை. உவவாதாளென்பது உம்பாடம்.

இதன்கருத்து.

காதலன்மூனிவிற்கஞ்சாதேயெறியன்றெதிர்நிற்பாள் கூற்றத்தோடொக்குஞ்சிறுகாலேயேயட்டில் புகாதாள்மருந்தாறீராததோயோடொக்கும் அட்டதனைக்காதலன் விரும்பியுண்டற்குதவாதாளில்வாழ்பேயோடொக்குமிப்பெண்டிர்மூவருங்கொண்டகணவனைக்கொல்லும்படையோடொப்பனென்பதாம்..... ..... (ஙு)

கடியெனக்கேட்டுங்கடியான்வெடிபட... ... . *
வார்ப்பதுகேட்டுமதுதெளியான்-பேர்த்துமோ... *
ரிற்கொண்டினிதிருஉமேமூறுதலென்பவே..... *
கற்கொண்டெறியுந்தவறு..... .... *

இதன்பதப்பொருள்.

கடியென-மனைத்துக்குக்கடியென்று. கேட்டும்-பெயர்கூறக்கேட்டும். கடியான்-அதனைவிடான். வெடிபட-வெளுவும்படி. ஆர்ப்பது-இயங்களாரவாரிக்கின்றதை. கேட்டும்-கேள்விப்பட்டும். அது-அதனை. தெளியான் - தெளியமாட்டான். பேர்த்தும்-மீளவும். ஓர்-தாளெரு. இற்கொண்டு-இல்லாளைக்

கொண்டி. இனிது - இனிதென்றுகருதி. இலேஉம் - இருக்கும். எழுவாய்தல்-மயக்குதலே. கற்கொண்டி-கல்லேக்கொண்டி. எறியும்-எறியப்படும். தவறென்ப - குற்றமென்றுசொல்லுவரறிவுடையோர். என்றவாறு.—அறிவுடையோர்-எழுவாய். தவறென்ப-பயனிலே. எழுவாய்தலே - செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலே.

இதன்கருத்து.

மணத்துக்குக்கடியென்றுபெயர்கூறக்கேட்டுமதனைக்கடியாவெருவுபடியெங்கள்முழங்குக்கேட்டுமிதுவேபிணப்பறையுமாயெனக்கு மெஞ்றதனைத்தெளியாவன்மீளவுந்தாழுரிலிலாளைக்கொண்டினிதென்றுகருதியிருக்குபயக்குதலேக்கற்கொண்டெறியப்படுதீதவறென்றுசொன்னஇயற்றிவுடையோனென்பதாம்..... .... (ச)

தலேயேதவமுயன்றுவாழ்தலெருவர்க்..... .. ... *
இடையேயினியார்சட்டுங்கல்-கடையே... ... . *
புணராதென்றெண்ணிப்பொருணசையாற்றம்மை . *
புணரார்பின்சென்றுநிலே..... .... *

இதன்பதப்பொருள்.

ஒருவர்க்கு-ஒருவருக்கு. தலேயே-தலேயானகாரியம். தவம்-தவத்திலே. முயன்று - முயற்சிசெய்து. வாழ்தல் - வாழ்க்கை. இடையே-இடையானகாரியம். இனியார்கண் - இனியமகளிருடனே. தங்கல்-தங்கிவாழ்தல். கடையே - கடையானகாரியம். புணராதென்று-பொருள்கூடுவதில்லேயென்று. எண்ணி-கருதி. பொருணசையால்-அப்பொருளாசையாலே. தம்மை-தம்மை. உணராள்-அறியாதார். பின்-பின்னே. சென்று-நீரிந்து. நிலே-நிற்குநிலே. என்றவாறு.—தலே-எழுவாய். வாழ்தல்-பயனிலே. இடை - எழுவாய். தங்கல்-பயனிலே. கடை - எழுவாய். நிலே-பயனிலே.

இதன்கருத்து.

ஒருவர்க்குத்தலேயான செய்கையாவது தவத்தின்கண்ணே முயன்றுவாழ்தல்இடையானசெய்கையாவதுதமக்கினியாரோடின்புற்றுவாழ்தல்கடையானசெய்கையாவது தமக்குப்பொருள்கூடுவதில்லேயென்றப்பொருண்மேலாசையாற்றம்மையறியாதார்பின்னேசென்றுநிற்றலென்பதாம்..... ..... (ஞ)

கல்லாக்கழிப்பர்தலையாயார்நல்லவை..... .... ❋
தீவினைக்கழிப்பரிடைகள்கடைக..... ❋
வினிதுண்ணிணைமாரப்பெறேம்யாமென்னு..... ..... ❋
மூனிவிலைத்தீண்பாடிலர்..... ❋

இதன்பதப்பொருள்.

தலையாயார்-தலையாயவறிவினையுடையவர். கல்லா-பலநூல்களைக்கற்று. கழிப்பர்-பொழுதுபோக்குவர். இடைகள்-மத்திமர். நல்லவை-நல்வினைப்பகுதியால்வந்தபொருள்களை. தீவினை-தீவினைக்கிட்டும். கழிப்பர்-பொழுதுபோக்குவர். கடைகள்-கடையாயவர். இனிது-இனிதாக. உண்ணேம்-உண்ணப்பெறேம். ஆர-நிறைய. பெறேம்-செல்வம்பெறேம். யாமெம்மை-யாமெனநினைந்து. மூனிவிலை-அவிவெறுப்பிலை. தீண்பாடு-தீண்டுறைக்கண். இலர்-இலராவர். எல்லாரும்-தலையாயார்-எழுவாய். கழிப்பர்-பயனிலை. இடைகள்-எழுவாய். கழிப்பர்-பயனிலை. கடைகள்-எழுவாய். இலர்-பயனிலை.

இதன்கருத்து.

தலையாயவறிவினையுடையார் பலநூல்களைக்கற்றுப்பொழுதுபோக்குவரிடையாயவறிவினையுடையார்நல்வினைப்பகுதியால்வந்தபொருள்களையேற்றவர்க்கிட்டிப்பொழுதுபோக்குவர்கடையாயவறிவினையுடையாரினிதாகவுண்ணப்பெறேநிறையச்செல்வம்பெறேம்யாமெனநினைந்தம்மூனிவிலைத்தீண்பயிலிலரென்பதாம்..... .... (கூ)

செந்நெல்லாலாயசெழுமூனைமற்றுமச்..... .... ❋
செந்நெல்லேயாகிவினைதலா-லந்நெல்..... ❋
வயனிறையக்காய்க்கும்வளவயலூர..... ❋
மகனறிவுதந்தையறிவு..... .... ❋

இதன்பதப்பொருள்.

செந்நெல்லால்-செந்நெல்லாலே. ஆய-ஆக்கப்பட்ட. செழுமூனை-வளவியமூனை. மற்றும்-பின்னும். அச்செந்நெல்லேயாகி-அந்தச்செந்நெல்லாகியே. வினைதலால்-வினையுமாதலால். அந்நெல்-அந்தச்செந்நெல். வயனிறைய-வயன்முழுதும். காய்க்கும்-விளைகின்ற. வளம்-வளப்பத்தினையுடைய. வயல்-கழனிசூழ்ந்த. ஊர-ஊரனே. தந்தையறிவு-பிதாவினறிவு.

மகனறிவு - புதல்வனறிவு. என்றவாறு.---தந்தையறிவு - எழுவாய். மகனறிவு-பயனிலை.

இதன்கருத்து.

செந்நெல்லாலேயாக்கப்பட்ட வளவியமுனாபின்னுமச்செந்நெல்லாகியேவிளாயுமாதலாலந்நெல்லையணிறையக்காய்க்கும் வளவயலூரனேதந்தையறிவேமகனறிவென்பதாம்..... (எ)

உடைப்பெருஞ்செல்வருஞ்சான்ரோருங்கெட்டிப்... *
புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்-பெருகிக்... ..... *
கடைக்காறலக்கண்ணதாகிக்குடைக்கால்போற் .... *
கீழ்மேலாய்நிற்குமுலகு..... *

இதன்பதப்பொருள்.

உடை-பொருளுடைய. பெரும்-பெரிய. செல்வரும் - செல்வமுடையோரும் சான்ரோரும்-அமைந்துடையோரும். கெட்டு-அழிந்து. புடை-பக்கத்தளிலிருக்கிற. பெண்டிர்-வைப்பாட்டிகளுடைய. மக்களும்-பிள்ளைகளும். கீழும்-கீழானவர்களும். பெருகி-பெருத்து. கடைக்கால் - கடைக்கண்ணது. தலைக்கண்ணதாகி-மூதலிடத்ததாகி. குடை-குடையினுடைய. காற்போல்-கால்போல. கீழ்-கீழானது. மேலாய்-மேலாகி. நிற்கும்-நிற்கும். உலகு - உலகியற்கை. என்றவாறு.---உலகு-எழுவாய். நிற்கும்-பயனிலை.

இதன்கருத்து.

பொருளுடையசெல்வருஞ்சான்ரோருங்கெட்டிப் புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்பெருகிக்கடைக்கண்ணதுதலைக்கண்ணதாகித்குடைக்கால்போலக் கீழ்மேலாய்நிற்குமுலகியற்கையென்பதாம்..... (அ)

இனியார்தந்நெஞ்சத்துதோயுமைப்பவந்தோய் .... *
தணியாதவுள்ளமுடையார்-மணிவரன்றி .... *
வீழுமருவிவிறன்மலைநன்ரு..... *
வாழ்வின்வமைபாய்தனன்று..... .... *

இதன்பதப்பொருள்.

இனியார் - தமக்கினியாராகியதட்டார். தம் - தம்முடைய. நெஞ்சத்து-மனத்துள். நோய்-இடும்பையை. உளைப்ப-சொல்ல. அந்நோய்-அந்தவிடும்பையை. தணியாத-மாற்றுத. உள்

ளம்-மனக்கை. உடையார்-உடையவர். மணி-மணிகளை. வரன்றி-கொழித்து. வீழும்-விழுகிற. அருவி-அருவியினையுடைய. விறல்-வெற்றி பொருந்திய. மலைநன்னாட-நல்லமலைநாடனே. வாழ்வின்-உயிர்வாழ்தலினும். வரைபாய்தல்-மலையினின்றும் வீழ்தலே. நன்று-நல்லது. என்றவாறு.—வரைபாய்தல்-எழுவாய். நன்று-பயனிலை.

இதன்கருத்து.

மணிவரன்றிவீழுமருவியினையுடையவிறன்மலைநன்னாடனே தமக்கினியாராகியநட்டார்தம்மனத்துளிடம்பையைச்சொல்ல அவ்விடும்பையைமாற்றுதலுள்ளத்தையுடையாருயிர்வாழ்தலினும்வரைபாய்ந்துசாதலேநன்றென்பதாம் ..... (கூ)

புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும் ... ... *
விதுப்பறநாடின்வேறல்லப்-புதுப்புனலு ... . *
மாரியறவேயறுமேயவரன்பும்.... .... *
வாரியறவேயறும்.. .... *

இதன்பதப்பொருள்.

புது-புதிய. புனலும்-நீரும். பூ - பொலிவினையுடைய. குழையார்-குழையினையுடையமகளிரது. நட்பும் - உறவுமென. இரண்டும்-இரண்டினையும். விதுப்பற-துளக்கற. நாடின்-ஆராயுங்காலத்து. வேறு-வேறுபாடு. அல்ல-அல்ல. புது - புதிய. புனலும்-நீரும். மாரி-மழை. அறவே-இல்லையாயின். அறும்-இல்லையாமதுபோல. அவர்-அம்மகளிருடைய. அன்பும்-ஆசையும். வாரி-பொருள்வரவு. அறவே-இல்லையாயின். அறும்-இல்லையாய்விடும். என்றவாறு.—வேறு-எழுவாய். அல்ல-பயனிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

யாற்றுள்வரும்புதுப்புனலும்பூங்குழையாராகியபுன்மகளிர்நட்புமெனவிரண்டினையுந்துளக்கறவாராயினைட்புமையுடையபுதுப்புனலுமழையறவேயறுமதுபோலப்பூங்குழையார்நட்புங்கொடுக்குமவனதுவளமையறவேயறுமென்பதாம். .... (ஙி)

பன்னெறிமுற்றிற்று.

அஃ அதிகாரம்-ஈஎ-இ. வெண்பா... (ஈஎஙி)

பொதுமகளிர்.

பொது-பொதுவாயிருக்கிற. மகளிர் - மடந்தையர். அஃதாவது. நல்லார்தியாரென்னுமதற்பொருள்தொடர்பாயில்லாரர்க்கும்பொதுவாயவுடம்பினையுடையராகிக்குணதீதங்களைனத்தினுவடிவிலுற்பெண்மையையுடையபரத்தையர்குணத்தினிழிவுகூறப்பட்டது.

விளக்கொளியும்வேசையர்நட்புமிரண்டுந் .... *
துளக்கற்றநாடிற்வேறல்ல-விளக்கொளியு..... ..... *
நெய்யற்றகண்ணேயறுமேயவரன்பு..... *
கையற்றகண்ணேயறும்..... ..... *

இதன்பதப்பொருள்.

விளக்கு-விளக்கினது. ஒளியும் - பிரகாசமும். வேசையர்-பரத்தையர். நட்பும் - உறவுமென. இரண்டும்-இரண்டினையும். துளக்கு-குற்றம். அற - நீங்க. நாடின்-ஆராயுங்காலத்து. வேறு - வேறுபாடு. அல்ல - அல்ல. நெய் - நெய். அற்றகண்ணே-அற்றவிடத்திலே. விளக்கு - விளக்கினது. ஒளியும்-பிரகாசமும். அறும்-அற்றுப்போமதுபோல. கை-கைப்பொருள். அற்றகண்ணே-அற்றவிடத்திலே. அவர்-அவருடைய. அன்பும்-ஆசையும். அறும்-அற்றுப்போம். என்றவாறு.—வேறு-ஏழாய். அல்ல-பயனிலை. வகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

விளக்கொளியும் பரத்தையர்நட்புமாகியவிரண்டினையுங்குற்றமறவாராயின்மேற்றுமையிலையொப்புமையுடைய நெய்யற்றகண்ணேவிளக்கொளியுமறுமதுபோலக்கைப்பொருளற்றபொழுதேபரத்தையர்நட்புமறுமென்பதாம்..... ..... (க)

அங்கேகாட்டகலல்குலாயிழையாணம்மொடு..... *
செங்கேகாடுபாய்துமேயன்முண்மற்-செங்கேகாட்டின். *
மேற்காணைமின்மையான்மேவாதகாழிந்தாளை..... *
காற்காமேய்காட்டிக்கலுழ்ந்து..... ..... *

இதன்பதப்பொருள்.

அம்-அழகிய. கோடு-புடை. அகல்-அகன்ற. அல்குல்-அல்குலையுடைய. ஆய்-ஆய்ந்த. இழையாள் - ஆபரணத்தையுடையாள். நம்மொடு - நம்மூடனே. செங்கோடு - செவ்வியமலைக்குவட்டின்மேல். பாய்திரம்-எறிவிழுகேயாம். எம்முள்-என்றன் சொன்னவள் செம்-செவ்விய. கோட்டின்மேல்-அம்மலைக்குவட்டின்மேலேறிவிழுகைக்கு. காரணம்-பொருள். இவ்வையாள்-நம்மூடையகையிலில்லாமையினால். கால்-தன்காலுக்கு. காலேய்-வர்தற்கு நாயுண்டென்று. காட்டி-காண்பித்து. கலுழ்ந்து-அழுது. மேவாது-நம்மொடுபொருந்தாது. ஒழிந்தாள்-தவிர்ந்தாள். என்றவாறு.—ஆயிழையாள்-எழுவாய். ஒழிந்தாள்-பயனிலை. எகாரம்-இரண்டும்-மன்னுடம்-அசைநிலைகள்.

இதன்கருத்து.

அழகியபுடைபரந்தவல்குலையுடையாள்முன்புநம்மொடுமலைக்குவடேறிப்பாய்துமென்றுசொன்னுளிப்பொழுதம்மலைக்குவட்டின்மேலேறிவிழுகைக்குநம்மூடையகையிற்பொருளில்லாமைகண்டு தன்காலுக்குவாதநோயுண்டென்று காட்டிக்கலுழ்ந்துநம்மொடுமேவாதொழிந்தாளென்பதாம்..... (உ)

அங்கண்விசும்பினமரர்தொழப்படுஞ்..... *
செங்கண்மாலாயினுமாகமத்-தங்கைக்..... *
கொடுப்பதொன்றில்லாரைக்கொய்தளிரன்னார்..... *
விடுப்பர்தங்கையாற்றொழுது .... *

இதன்பதப்பொருள்.

அம்-அழகிய. கண்-இடத்தையுடைய. விசும்பின்-சுவர்க்கத்திலே. அமரர்-தேவர்களால். தொழப்படும்-வணங்கப்படும். செங்கண்-சிவந்தகண்களையுடைய. மாலாயினும்-இந்திரனேயாயினும். ஆக-ஆகக்கடவது. தம்-தம்மூடைய. கைகையில். கொடுப்பது-கொடுப்பதற்கு. ஒன்று-ஒருபொருளும். இலலாரை-இலலாதவரை. கொய்-கொய்யும். தளிரன்னார்-தளிர்போலுநிறத்தினையுடையபரத்தையர். தம்-தம்மூடைய. கையால்-கையினாலே. தொழுது-வணங்கி. விடுப்பர்-அனுப்புவர். என்றவாறு.—தளிரன்னார்-எழுவாய். விடுப்பர்-பயனிலை. இலலாரை-செயப்படுபொருள். மன்-அசைநிலை.

இதன்கருத்து.

அழகியவிடத்தையுடைய துறைக்கத் துட்டேவராத்திறமுழப்ப டிநிந்ரனையாயினுமாகுகையிற் பொருளில்லாரைக்காய்த ளிர்பொலுமேனியையுடையபரத்தையர்தங்கையாற்றிறமுது போக்குவனென்பதாம்..... .... (சு)

ஆணமினெஞ்சத்தணிநீலக்கண்ணுரிக்குக்..... *
காணமில்லாதார்கடிவனையர்-காணமே..... *
செக்கூர்நீதுகொண்டாயினுஞ் செய்தபொருளுடையா *
ரக்காரமன்னரவர்க்கு..... .... *

இதன்பதப்பொருள்.

ஆணம்-நன்மை. இல்-இல்லாத. நெஞ்சத்து-நெஞ்சினையு டைய. அணி - அழகிய. நீலம் - நீலோற்பலம்போலும். கண் ணுரிக்கு-கண்ணையுடையார்க்கு. காணம்-பொருள். இல்லாதா ர்-இல்லாதவர். கடி-நஞ்சொடு. அனையர்-ஒப்பர். காணமே-கட்புலனுகமே. செக்கு-செக்கை. ஊர்ந்து - செலுத்தி. கொ ண்டாயினும்-கொண்டாயினும். செய்த-தேடிய. பொருளுடை யார் - பொருளையுடையவர். அவர்க்கு - அப்பரத்தையர்க்கு. அக்காரம்-சருக்கரையோடு. அன்னர்-ஒப்பர். என்றவாறு.— இல்லாதார்-எழுவாய். அனையர்-பயனிலை. கடிவை-செயப்படு பொருள். உடையார்-எழுவாய். அன்னர்-பயனிலை. அக்காரத் தை-செயப்படுபொருள்.

இதன்கருத்து.

ஈரமில்லாத நெஞ்சினையுடைய வழகிய நீலக்கண்ணுரிக்குப் பொருளில்லாதார்நஞ்சோடொப்பர்கட்புலனுகமே செக்கை யூர்ந்துகொண்டாயினுஞ் செய்த பொருளையுடையாரப்பரத் தையர்க்கக்காரம்போல்வனென்பதாம்..... ..... (சி)

பாம்பிற்கொருதலைகாட்டியொருதலை..... ..... *
தேம்படுதெண்கயத்தாமீன்காட்டு-மாங்கு... ... ... *
மலங்கண்ணசெய்கைமகளிர்தோள்சேர்வார்... ... ... *
விலங்கன்னவெள்ளறிவிலூர்..... .... *

இதன்பதப்பொருள்.

ஒருகலை-ஒருதலையை. பாம்பிற்கு-பாம்புக்கு. காட்டி-காண்பித்து. ஒருகலை-மற்றொருதலையை. தேம்-தேன். படி-உண்டாகியபூக்களையுடைய. தெண்-தெளிந்த. கயத்து-பொய்கையில். மீன் - மீனுக்கு. காட்டும்-காண்பிக்கும். மலங்கண்ண-மலங்குபோல. செய்கை-பலர்க்குமன்புகாட்டுஞ்செய்கையையுடைய. மகளிர்-பரத்தையர். தோள்-தோள்களை. சேர்வார் - சேர்வர். விலங்கன்ன-விலங்குசாதியையொத்த. வெள்ளறிவினர்-வெளிறுனவறிவினையுடையார். என்றவாறு.—வெள்ளறிவினர்-எழுவாய். சேர்வார் பயனிலை. ஆங்கு-அசைநிலை. மலங்கன்ன செய்கையென்பது-அவரவர்க்குவேற்றுமைகாட்டாமலினஞ்சேர்ந்தறின்றன்புகாட்டுதல்.

இதன்கருத்து.

ஒருதலையைப்பாம்பிற்குக்காட்டி மற்றொருதலையைத்தேம்படுதெண்கயத்து மீனுக்குக்காட்டி மலங்குபோலப்பலர்க்குமன்புகாட்டுஞ் செய்கையையுடையமகளிர் தோள்களைச்சேர்வார்விலங்கன்னவெள்ளறிவினரொன்பதாம் .... (நு)

பொத்தநூற்கல்லும்புணர்பிரியாவன்றிலும்போ ..... *
னித்தலுநம்மைப்பிரியலமென்றுரைத்த..... ..... *
பொற்றொடியும்போர்த்தகர்க்கோடாயிணைன்னெஞ்சே *
நிற்றியோபோதியோநீ .... *

இதன்பதப்பொருள்.

பொத்த - பொதுத்த. நூல்-நூலிற்கோக்கப்பட்ட. கல்லும்-மணியும். புணர்-இணை. பிரியா-பிரியாத. அன்றிலும்போல்-அன்றிற்பட்சியையும்போல. நித்தலும் - எப்பொழுதும். நம்மை-நம்மில். பிரியலமென்று-பிரியோமென்று. உரைத்த-சொன்ன. பொற்றொடியும் - பொற்றொடியையுடையாளும். போர்-போரைச்செய்யும். தகர்-கடாவினுடைய. கோடு-கொம்புபோல. ஆயிணை-மேலாயினை. நல்-நல்ல. நெஞ்சே-நெஞ்சமே. நிற்றியோ-இன்னுமிவளளவிலேநிற்கவாசையுடையையோ. போதியோ-நம்முடனேபொருந்திவருதற்குரியையோ. நீ-நீ. என்றவாறு.—நீ-எழுவாய். நிற்றியோபோதியோ - பயனிலை. பொத்தநூற்கல்லென்பது - பிணையார்கையுஞ் சாணை

பொருளடைகளின்.

யென்று பொருள்சொல்லி யரக்குமணலுங்கூடத் தேய்வது போல வவன்கெட்டபொழுதுகெடவும் வாழ்ந்தபொழுதுவா ழவுமான பரத்தையர்தெருஞ்சித்திணைமொன்னதாம். பிணையார்சார்ணை - அரக்குமணலுங்கூட்டிப்பண்ணப்படுதல். தகர்க் கோடாதல்-பின்புதிருகித்திறல்.

இதன்கருத்து.

பொதுத்தகூலிலேகோக்கப்பட்டமணியுந் தூணையெப்பி ரியாதவன்றிலும்போலநாடோறுநம்மித்பிரியலமென்றுரை த்தபொற்றொடியையுடையாருடம்போகாசெய்யுங்கடாவின் கொம்புபோலமேலாயினன்தல்லிநெஞ்சமேயிஃதுறுவண்மா ட்டேநித்தியோயென்றேடபோதியோநீயென்பதாம் (சூ)

ஆமாபோனக்கியவர்கைப்பொருள்கொண்டு ... ... ❋
சேமாபோற்குப்புறூஉஞ்சில்லைக்கணன்பினை ... ... ❋
யேமாத்தமதெற்றிருந்தார்பெறுபவே ... ... ❋
தாமாம்பல்லானகை ... ... ❋

இதன்பதப்பொருள்.

ஆமாபோல்-காட்டுப்பசுவைப்போல. நக்கி-இன்புறநக்கி. அவர்-அவருடைய. கை-கையி லுண்டாகிய. பொருள்-பொரு ள்களை. கொண்டு-வாங்கிக்கொண்டு. சே-சேவாகிய. மாபோ ல்-மானைப்போல. குப்புறூஉம்-குறித்தோடும். சில்லைக்கண்- சிறியசல்லாக்கண்ணிகையரிடத்து. அன்பினை-ஆசையினை. ஏமாந் து-மெய்யென்றுமாந்து. எமதென்று-நமதென்று. இருந் தார்-இருந்தவர். தாம்-தாங்கள். பலரால்-பலபேரால். நகை- நகையை. பெறுப-பெறுவர். என்றவாறு.--இருந்தார்-எழு வாய். பெறுப-பயனிலை. நகையை-செயப்படுபொருள். ஏகா ரமும்-ஆமும்-அசைநிலை. ஆமாபோனக்குகல்-சம்போககால த்தநாவிலுணருமிவ்சிகரணமாம். ஆமாநக்கியபிரிவினவாங்கு மதுபோலக்கைப்பொருளுள்ளது வாங்கியவனைக்கெடுத்துவி டுதல்.

இதன்கருத்து.

ஆமாபோலின்புற நுகர்ந்தவர்கைப் பொருளாக்கொண்டு சேவாகிய மாபோலக்குறித்தோடுஞ் சிரியசல்லாக் கணிகையை

ரன்பினேயமமாகக்காதலிப்போமென்றிருந்தார்பலரானதை யைப்பெறுவதொன்பதாம்..... (எ)

ஏமாந்தபோழ்தினினியார்போன்றின்னுராய்த்..... *
தாமார்ந்தபோதேதகர்க்கோடா-மாலைக்கிற்.. ... *
றந்தெறிப்பெண்டிர்தடமுலைசேராரே..... *
செந்தெறிச்சேர்துமென்பார்..... .... *

இதன்பதப்பொருள்.

ஏமாந்தபோழ்தின் - காமுகராற்பொருள்பெற்றுமகிழ்ந்த பொழுது. இனியார்போன்று-அவர்க்கினிமையுடையார்போன்றவர்பொருளையறக்கொண்டு. தாம்-தாம். ஆர்ந்தபோதே-நிறைந்தபொழுதே. இன்னுராய் - அவர்க்கின்னுராய். தகர்-கிடாயின். கோடாம்-கொம்புபோலத்திருகுதலையுடையராம். மான்-மான்போலும். நோக்கின் - பார்வையினையுடையராய். தம்-தமது. நெறி களவுவழியைத்தப்பாமனிற்கும். பெண்டிர்-பொதுமகளிருடைய. தடம்-பெரிய. முலை-முலையை. செம்-செவ்விய. நெறி-வழியை. சேர்தும்-அடைதும். என்பார்-என்றுகருதுமவர். சேராரே - அடையார். என்றவாறு.—என்பார்-எழுவாய். சேராரே-பயனிலை. முலையை - செயப்படுபொருள். ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

காமுகராற்பொருள்பெற்றுமகிழ்ச்சியெய்தியினியார்போன்றவர்பொருளையறக்கொண்டுதாநிறைந்தபொழுதேயின்னுராய்த்தகர்க்கோடுபோலமாலைக்கிற்றந்தெறியிடங்கண்டுதம்பெண்டிர்தடமுலையைச்சேரார்நல்லதெறியைச்சேர்துமென்றுகருதுபவொன்பதாம்..... (அ)

ஊறுசெய்தெறஞ்சந்தம்மூள்ளடக்கியாண்றுதலார் *
தேறமொழிந்தமொழிகேட்டித்-தேறி..... *
யெமரென்றுகொள்வாருங்கொள்பவேயார்க்குந்... *
தமரல்லர்தம்மூடம்பிலர்..... ..... *

இதன்பதப்பொருள்.

ஊள்-ஊள்ளிய. றுதலார்-றுதலினையுடையார். ஊறு-தாம்பின்பவர்க்குவருந்தம். செய்-செய்யும். நெஞ்சம்-நெஞ்சினை. தம்மூள்-தம்மூள்ளே. அடக்கி-புலப்படாமலடக்கிக்கொண்டு.

பொதுமகளிர்.

தேற - தெளிய. மொழிந்த-சொன்ன. மொழி - வார்த்தைக ளை. கேட்டு-கேள்விப்பட்டு. தேறி-அதனை நம்பி. எமன்று-எ ம்முடையவனென்று. கொள்வாரும்-கொள்ளுவாரும். கொ ள்ப-கொள்வர். தம்முடம்பினர்-தம்முடம்பைத்தமக்குரித்தா கவுடையவர். யார்க்கும்-யாவர்க்கும். தமரல்லர்-சுற்றத்தாரல் லர். என்றவாறு.—தம்முடம்பினர் - எழுவாய். தமரல்லர்-பய னிலை. ஏகாரம்-அசைநிலை.

இதன்கருத்து.

ஒள்ளிய நுதலையுடையார் குற்றஞ்செய்யுநெஞ்சைத்தம்மூள் ளேகரந்தாடுகித் தமக்கன்புடைமையத்தே மொழிந்த மொழிகேட்டதனை மெய்யென்று நம்பி மற்றவனையெம னென்றுகொள்வாருங்கொள்வர் தமக்கேயுரியவுடம்பினையுடை யாரியாவர்க்குந்தமரல்லரென்பதாம்..... .... (கூ)

உள்ளமொருவனுழையதாவெண்ணுதலார்..... ..... *
கள்ளத்தாற்செய்யுங்கருத்தெல்லாந்-தெள்ளி..... *
யறிந்தவிடத்தும்மறியாராம்பாவஞ் .... *
செறிந்தவுடம்பினர்..... *

இதன்பதப்பொருள்.

ஒள்-ஒள்ளிய. நுதலார்-நுதலினையுடையார். உள்ளம் - தம முள்ளம். ஒருவன் - வேறொருவன். உழையதா - மாட்டதாக. கள்ளத்தால்-களவினாலே. செய்யும் - அன்புடையார்போலச் செய்யும். கருத்தெல்லாம்-நினைவுகளெல்லாம். தெள்ளி-ஆரா ய்ந்து. அறிந்தவிடத்தும்-அறிந்தகாலத்தும். பாவம்-தீவினை. செறிந்த-நெருங்கிய. உடம்பினர்-உடம்பினையுடையார். அ றியார்-அறியாதாராவர். என்றவாறு.—உடம்பினர் - எழுவா ய். அறியார்-பயனிலை. ஆம்-அசைநிலை.

இதன்கருத்து.

ஒள்ளிய நுதலினையுடையார் தமதுள்ளமேவேறொருவன் மா ட்டதாகக்களவினாலன்புடையார்போலச் செய்யுங்கருத்தெல் லாமாராய்ந்தறிந்தவிடத்துந் தீவினை செறிந்தவுடம்பினரறி யாதாராவரென்பதாம்..... .... (ஙி)

பொதுமகளிர்முற்றிற்று.

அடு அதிகாரம்-ஈஅ-இ. வெண்பா... (ஈஅடு)

கற்புடைமகளிர்.

கற்பு-கற்பை. உடை-உடைத்தாயிருக்கிற. மகளிர்-குலமகளிர். அஃதாவது-குலமகளிர்தமக்கடவராகிய நாணமடமச்சம் பயிர்ப்பென்னுந்தான்கிலுவுமுள்ள நிறையுடைமையுங்கடைப் பிடியுங்கண்ணிகையானகாலமேதொடங்கித்தமக்கியற்கையான அறிவுடைமையாம்.

அரும்பெறற்கற்பினயிராணியன்ன..... *
பெரும்பெயர்ப்பெண்டிரெனினும்-விரும்பிப் .... *
பெறுநசையாற்பின்னிற்பாரின்மையேபேணு..... *
நறுநுதலாணன்னமதித்தணை ..... *

இதன்பதப்பொருள்.

அரும்பெறல் - பெறுதற்கரிய. கற்பின் - கற்பினையுடைய. அயிராணியன்ன-இந்திரன்றேவிபோலுஞ்செல்வச்செருக்கையுடைய. பெரும்-பெரிய. பெயர்-பெயரினையுடைய. பெண்டிரெனினும்-பெண்டிரேயாயினும். விரும்பி - தம்மைவிரும்பி. பெறும் - நுகரும். நசையால்-ஆசையால். பின்னிற்பார்-தம்மைப்பின்னிரந்துகுறையுறுவார். இன்மையே-இல்லாதிருக்குந்தன்மையே. பேணும்-பாதுகாக்கும். நறுநுதலாள்-நறுவியநுதலினையுடையாள். நன்மை - காதலர்பெறுநன்மைக்கு. துணை - துணையாயவள். எள்றவாறு.—நறுநுதலாள்-எழுவாய். துணை-பயனிலை. இரந்துகுறையுறுவாரில்லாதபழம்பெரிகரித்தலைவனது-தன்னேயழகுசெய்யாமலழுக்கடைந்திருத்தல்.

இதன்கருத்து.

பெறுதற்கரிய கற்பினையுடைய அயிராணிபோன்ற பெரும்பெயரையுடையபெண்டிரேயெனினுந் தம்மைவிரும்பிநுகருநசையாற் பின்னிரந்துகுறையுறுவாரில்லாமையே தமக்குண்டாகவேண்டுமென்றதற்குத்தக்க வொழுக்கத்தைப்பேணுநறுநுதலாள் காதலர்பெறுநன்மைக்குத்துணையாவளென்பதாம். ... ... (க)

குடநீரட்டுண்ணுமிடுக்கட்பொழுதுங்..... ..... *
கடனிரவுண்ணுங்கேளிர்வரினுங் .... *
கடனிர்மைகையாழுக்கொள்ளுமடமொழி... ... ... *
மாதர்மனைமாட்சியாள்..... ..... *

இதன்பதப்பொருள்.

குடநீர்-ஒருகுடநீராலே. அட்டு-சமைத்து. உண்ணும்-நுகரும். இடுக்கட்பொழுதும்-மிடிவந்தற்றகாலத்தும். கடல்-கடலினது. நீர்-நீரை. அற-அற்றுப்போக. உண்ணும்-உண்ணத்தக்க. கேளிர்-உறவின்முறையார். வரினும்-மிகவரினும். கடனிர்மை-கடப்பாட்டினையே. கையாழு-ஒழுக்கநெறியாக. கொள்ளும்-கொண்டிருக்கும். மடம்-மெத்தென்ற. மொழி-மொழியினையுடைய. மாதர்-மாதராள். மனை-மனைவாழ்க்கைக்கு. மாட்சியாள்-மாட்சிமையுடையாள். என்றவாறு.—மாதர்-எழுவாய். மாட்சியாள்-பயனிலை. ஒழுக்கநெறியாகக்கொள்ளுகையாவது-விருந்தினர்மிகவும்வந்தாரெனினுமதற்குவருந்தாமண்முன்னுள்ளநடத்தன்மைபோலிருத்தல்.

இதன்கருத்து.

ஒருகுடநீராலேயட்டுண்டுவாழும்வறுமைவந்தவிடத்தும்கடனிரவுண்ணுங்கேளிர்பலர்வரினுங்கடப்பாட்டினையேயொழுக்கநெறியாகக்கொள்ளுமடமொழிமாதராள் மனைவாழ்க்கைக்குமாட்சிமைப்பட்டகற்புடையாளென்பதாம்..... (உ)

நாலாறுமாழுய்நனிசிறிதாயெப்புறனு ..... *
மேலாறுமேனிறைசோரினு-மேலாய..... *
வல்லாளாய்வாழுமூர்தற்புகழுமாண்கற்பி... ..... *
னில்லாளமர்ந்ததேயில்..... ..... *

இதன்பதப்பொருள்.

நாலாறும்-நாலுதிக்கும். ஆழுய்-வழியாய். நனி-மிகவும். சிறிதாய்-சிறியதாய். எப்புறனும்-எல்லாவிடத்தும். மேலாறு-நெறியாலே. உறை-மழைநீர். மேல்-தம்மேலே. சோரினும்-ஒழுகினாலும். மேலாய-மேலாயவொப்புரவுசெய்ய. வல்லாளாய்-வன்மையுடையவளாய். வாழும்-தான்வாழ்கின்ற.

ஊர்-ஊரிலுள்ளாரால். தன்-தன்னை. புகழும் - புகழப்பட்ட. மாண்-மாட்சிமைபொருந்திய. கற்பின்-கற்பினையுடைய. இல்லாள்-மனையாள். அமர்ந்ததே - அமைவுடையதே. இல்-மனையாவது. என்றவாறு.—இல்-எழுவாய். அமர்ந்ததே-பயனிலை.

இதன்கருத்து.

நான்குநிலையுமிவ்வுலகியல்பாய்மிகவுஞ் சிறிதாயெப்புறனு நெறியாலேமழைநீர்தம்மேலேசொரியினுமேலாயவாப்புரவுசெய்யவல்லளாய்த் தானேவாழ்கின்ற ஊரிலுள்ளாராற்றன்னைப்புகழுமாட்சிமைபொருந்தியகற்புடையாளாகிய மனையாளைமையுடையதேமனையாவதென்பதாம்,.. ..... (க)

கட்கினியாள்காதலன்காதல்வகைபுனைவா..... *
ளுட்குடையாளூர்நாணியல்பிலு-ளுட்கி..... *
யிடனறிந்தூடியினிதிணைரு..... *
மடமொழிமாதராள்பெண்..... *

இதன்பதப்பொருள்.

கட்கு-கண்ணுக்கு-இனியாள்-இனியளாய். காதலன்-கொழுநன். காதல்வகை - காதலிக்குத்தக்கவகை. புனைவாள் - தன்னையழகுசெய்யவல்லளாய். உட்கு-பிறரஞ்சத்தக்கமதிப்பை. உடையாள்-உடையளாய். ஊர்-ஊரார். நாண் - நாணத்தக்க. இயல்பிலுள்-இயல்பினையுடையளாய். உட்கி - காதலனையஞ்சி. இடனறிந்து-செவ்வியறிந்து. ஊடி-பிணங்கி. இனிதின்-அப்புலவியையினிதாக. உணரும்-தீரவல்ல. மடம்-மெத்தென்ற. மொழி - மொழியினையுடைய. மாதராள்-மாதராள். பெண்-பெண்ணுவள். என்றவாறு.—மாதராள்-எழுவாய். பெண்-பயனிலை.

இதன்கருத்து.

கண்ணுக்கினியளாய்க்காதலன்காதலித்தனவேபுனைவளாய்ப்பிறரானஞ்சத்தக்கமதிப்பையுடையளாயூரார் நாணத்தக்கவியல்பினையுடையளாய்க்காதலனையஞ்சியிடனறிந்து புலந்தப்புலவியையினிதாகதீருமடமொழியையுடைய மாதராள்பெண்ணுவளென்பதாம்..... ..... (ச)

கற்புடைமகளிர்.

எஞ்ஞான்றுமெங்கணவொத்தோண்மேற்சேர்ந்தெழினு . ❋
மஞ்ஞான்றுகண்டேம்போலுணுதுமா-லெஞ்ஞான்று. ... ❋
மென்னேகொழீஇயினர்கொல்லோபொருணைசயாற் ..... ❋
பன்மார்புசேர்ந்தெழுகுவார் .... ❋

இதன்பதப்பொருள்.

எஞ்ஞான்றும்-எல்லாநாளும். எம்-எம்முடைய. கணவர்-நாயகனை. எம் - எம்முடைய. தோண்மேல் - தோளினிடத்து. சேர்ந்தெழினும்-பொருந்தியெழுகினும். அஞ்ஞான்று-மணஞ்செய்தவன்று. கண்டேம்போல்-யாங்கண்டாற்போல. நாணுதும்-நாணுதலையுடையேமாம். எஞ்ஞான்றும்-எல்லாநாளும். பொருள்-பொருண்மேலுள்ள. நசையால்-ஆசையால். பல்-பலருடைய. மார்பு-மார்புகளை. சேர்ந்தெழுகுவார்-சேர்ந்தெழுகுமவர். கெழீஇனர் - கெழுதகைமையுடையராயினர். என்னேகொல்லோ-எப்படியோ. எம்மறவாறு.—ஒழுகுவார்-ஒழுகுவாய். என்னேகொல்லோ-பயனிலை. ஆல்-அசைநிலை.

இதன்கருத்து.

நாடோறுமெங்கொழுநனொம்முடைய தோண்மேற்சேர்ந்தெழுஞ்ஞா ணுதனுட் கண்டாற்போல நாணுது நாடோறும் பொருணசையாற் பலருடையமார்புகளைச் சேர்ந்தெழுகுமவர்கெழுதகைமையுடையராயினெவ்வாறுகொல்லோவெண்பதாம்..... .... (ஙு)

உள்ளத்துணர்வுடையாரேஞெகிழ்தூலற்றூல்..... ❋
வள்ளன்மைபூண்டானன்கலனுண்டொருடெள்ளிய... ❋
வாண்மகன்கையிலில்வாளினைத்தோ..... ❋
நாணுடையாள்பெற்றநலம்..... .... ❋

இதன்பதப்பொருள்.

உள்ளத்து-மனத்து. உணர்வுடையீரன்-இயல்பாகமதியுடையவன். ஞெகிழ்தூலற்று - ஞெகிழ்தூல்பிறர்க்குப்பயன்படுமாறுபோல. வள்ளன்மை-கொடை. பூண்டானன்கண்-பூண்டானன்கையில். ஒண்-ஒள்ளிய. பொருள்-பொருளும்பிறர்க்குப்பயன்படும். தெள்ளிய-தெளிந்த. ஆண்மகன்கையில்-ஆண்டன்மையுடையவன்கையில். அயில்-கூரிய. வாளினைத்து - வாள்போல.

நாணுடையாள்-நாணமுடையாள். பெற்ற - பெற்றிருக்கிற. நலம்-நன்மைமதிக்கத்தகும். என்றவாறு.—நலம் - எழுவாய். மதிக்கத்தகும்-பயனிலை. அற்றென்பதனை-மதித்திமதீபமாக்கி நூலதிறுப்பொருளற்றுவாளனைத்தெனினுமாம். வாழியரோவென்பதும்மற்றோருமென்பதும்போல அற்றென்பதும்ஆலென்பதும் இடைச்சொல். அனைத்தென்பதீண்டுவமத்தின்கண்வந்தது.

இதன்கருத்து.

உள்ளத்தியல்பாகவுணர்வுடையாளேனுமியல்நூல் பிறர்க்குப்பயன்படுமாறுபோலக்கொள்ளுடபூண்டான்கையிலெண்பொருளும்பிறர்க்குப்பயன்படுதற்குமையினையுடைய ஆண்மகன்கையிற்கூரியவாள்போல நாணுடையாள்பெற்ற நலமதிக்கத்தகுமென்பதாம்..... .... (சு)

கருங்கொள்ளுஞ்செங்கொள்ளுந்துணிப்பதக்கென்.. *
ரொருங்கொப்பக்கொண்டாளுமூர-ரொருங்கொவ்வா *
நண்ணுதலார்த்தோய்ந்தவனமார்பநீராடா ... ... *
தென்னையுர்தோயவரும்..... ..... *

இதன்பதப்பொருள்.

கருங்கொள்ளும்-கருங்கொள்ளையும். செங்கொள்ளும்-செங்கொள்ளையும். துணிப்பதக்கென்று - ஒன்றற்குச்சிறப்புக்கொடாதேதுணிப்பதக்கென்று. ஒருங்கொப்ப-சரியாக்க. கொண்டாளும்-கொண்டாற்போல. ஊரன் - தலைவன். ஒருங்கொவ்வா-எப்போடாருங்கொவ்வாத. நல்-நல்ல. நுதலார்-நுதலினையுடையாரை. தோய்ந்த-கலந்த. வரை - மலைபோலும். மார்பம்-மார்பு. நீர்-நீரிலே. ஆடாது-குளியாதே. என்னையும்-என்னையும். தோய-கலக்க. வரும்-வரும். என்றவாறு.—மார்பு-எழுவாய். வரும் - பயனிலை. கருங்கொள்ளென்பது-மடிந்தகொள்ளு. செங்கொள்ளென்பது-கொள்ளுக்குச்சுபாபமானவுடைமை. கருங்கொள்ளென்பது - கருவேலம்விதையென்பாருமுளர். மார்பினென்பது உம்பாடம.

இதன்கருத்து.

கருங்கொள்ளையுஞ் செங்கொள்ளையுந் துணிப்பதக்கென்றொன்றற்குச்சிறப்புக்கொடாதேதாயகன்சரியாக்கக்கொண்

டாற்போல எம்மோடொருங்கொவ்வாததன்னுதலானாற்றோ
யிற்தவனாமார்புநீராடாதென்னேயுற்றோயவருமென்பதாம்.

(எ)

கொடியவைகூறுதிபாணநீகூறி .... *
னடியையவிட்டோதுங்கிச்சென்று - துடியி..... ..... *
னிடக்கண்ணானேயம்யாமூரற்கதலுல்... .... *
வலக்கண்ணானேயார்க்குரை..... .... *

இதன்பதப்பொருள்.

பாண-பாணனே. கொடியவை - கொடியவார்த்தைகளை
கூறுதி-சொல்லாதே. நீகூறின் - நீசொல்லுவையாகில். யாம்-
நாம். ஊரற்கு-நாயகனுக்கு. துடியின்-துடியினுடைய. இட
க்கண்-இடதுபக்கத்தை. அனேயம்-ஒப்பம். அதனுல்-அதனு
லே. அடி-அடியை. பைய-மெள்ள. இட்டு-வைத்து. ஒதுங்கி-
பதுங்கி. சென்று-போய். வலக்கண்-அத்துடியின்வலதுபக்க
த்தை. அனையார்க்கு-ஒப்பவருக்கு. உரை - சொல்லுவாயாக.
என்றவாறு.—நீ-எழுவாய். உரை-பயனிலை.

இதன்கருத்து.

பாணனேகொடியவுரைகளைக்கூறுதே நீகூறுவையாயின்யா
மூரற்குத்துடியினிடக்கண்ணானேயமதனுல்மெய்ய அடியிட்டொ
துங்கிச்சென்றதுடியின்வலக்கண்ணானேயபரத்தையர்க்குக்கூ
றுவாயாகவென்பதாம்..... .... (அ)

சாய்ப்பறிக்கநீர்திகழுந்தண்வயலூரன்மீ ..... *
நீப்பறக்கநொந்தேனும்யானேமற்-நீப்பறக்கத் ... *
தாக்கிழுலிபொருததண்சாந்தனியகல..... *
நோக்கியிருந்தேனும்யான்..... ..... *

இதன்பதப்பொருள்.

சாய்-கோதையை. பறிக்க-பிடுங்க. நீர் - நீரானது. திகழும்-
விளங்கும். தண்-குளிர்ந்த. வயல்-வயலையுடைய. ஊரன்மீ-
நாயகன்மேலே. ஈ-ஈயானது. பறக்க - பறக்க. நொந்தேனு
ம்-வருந்தினவளும். யானே - நானே. நீ-இப்பொழுதுபரத்
தையர்நெருப்புப்பொறி. பறக்க - பறக்குமாறு. முலை-முலை
யால். தாக்கி-எதிர்த்து. பொருத -போர்செய்த. தண்-குளிர்

ந்த-சாந்து-சந்தனத்தை. அணி-அணிந்த. அகலம்-மார்பை. நோக்கி-வலியதெனஞ்சினையுடையவளாய்ப்பார்த்து. இருந்தேனும்-உயிர்பொறுத்திருந்தவளும். யானே-தானே. என்றகூறு.—யான்-எழுவாய். நெஞ்சேதன்-பயனிலை. யான்-எழுவாய். இருந்தேன்-பயனிலை. மன்-அசைநிலை.

இதன்கருத்து.

கோழைப்புல்லெப்பிடிக்கநீர்நிகழ்ந்தண்வயலூரன்மீதீப்பற க்கநெஞ்சேனும்யானேயிப்பொழுதுபரத்தையர்த்தீப்பறக்கு மாறுமுலையாதிருக்கிப்பொருதகண்சாந்தணியகலத்தைக்கண் டிருந்தேனும்யானேயென்பதாம்..... (ஈ)

அரும்பவிழ்தாரிளனெம்மருளுமென்று..... *
பெரும்பொய்புனையாதிபாண-கரும்பின்..... *
கடைக்கண்ணனையநாமூரற்கதலை..... .... *
விடைக்கண்ணனையார்க்குரை..... ..... *

இதன்பதப்பொருள்.

பாண-பாணனே. அவிழ்-கட்டவிழும். அரும்பு - அரும்பி னற்றொடுத்த. தாரிளன்-மாலையையுடையான். எம் - எமக்கு. அருளுமென்று - அருள்செய்வனென்று. பெரும் - பெரிய. பொய்-பொய்யை. உனையாதி - சொல்லாதே. நாம் - யாம்-ஊரற்கு-நாயகனுக்கு. கரும்பின்-கரும்பினது. கடைக்கண்-கடைக்கண்ணை. அனையம்-ஒப்பம். அதனால்-அதனாலே. இடை க்கண்-இடைக்கண்ணை. அனையார்க்கு - ஒப்பவருக்கு. உரை-சொல்லுவாயாக. என்றவாறு. - நீ-எழுவாய். உரை-பயனிலை.

இதன்கருத்து.

பாணனே யரும்பவிழ்தாரா னெமக்கருளுமென்று பெரு ம்பொய்புனையா தொழிவையாக யாமூரற்குக்கரும்பின்கடை க்கண்ணைப்போல வினியமல்லேமதனாலக்கரும்பினிடைக்கண் ணைப்போலவினியார்க்குக்கூறுவாயாகவென்பதாம்.....(ஐ)

கற்புடைமகளிர்மூற்றிற்று.

அ.க. அதிகாரம்-நகை-இ. வெண்பா... (நகை ல)

பொருட்பான்மூற்றிற்று.

காமத்துப்பால்.

அஃதாவது காமத்தின்பகுதியாம்.

சயம். அதிகாரம்.

காமதுதலியல்.

காமம்-காமத்தை. நுதல்-குறித்த. இயல்-இலக்கணம். அஃதாவது. இன்பத்தின்முறைமையினைச்சொல்லியது. முன்னேயின்பஞ் சொல்விப்பின்புலகமுறைமையான பொருட்பாலைச் சொல்லியதன்பிற்பறப்பகுதியினைச்சொல்லிவீடுபேற்றினிலேமுற்றுவிக்கவேண்டாவோ வென்னினங்ஙனமன்றிளமைப்பருவத்திலேயறத்திற்குக்காரணமான நூலைக்கற்பித்ததிலுள்ளமுறைமையினையுணர்த்திப்பின்புமணஞ்செய்வித்தற்த அறநூலின்முறைமைக்குத்தக்க வொழுகும்படிபண்ணவேண்டியறப்பகுதியினைச்சொல்லிப்பின்புகல்விகேள்வி முதலியவற்றுன்மறுநூலினியல்பை வழுவாமல் நடத்துதலாலுலகத்திலுயிர்களெல்லாமிரட்சைப்படுதல்காரணமாகப்பொருட்பகுதியினைச்சொல்லிப்பின்பிற்றப்பிரஞ்சமேலுமுண்டாகி வருதற்பொருட்டிப்பின்பிற்பப்பகுதியினைச்சொன்னுனென்பதாம். பின்புவீடுபேறு சொல்லவேண்டாவோவென்னின் மூன்றனுள்ளுமுறைமைகளவழுவாமலிவ் பந்நூற்றத்துறத்துபின்புணர்மைப்பொருளையறிந்தவாப்பற்றுவிடவேவீடுபேறுமாதலினதற்கென வொருபகுதியுரைக்க வேண்டாவென்பதாம். இதற்குச்சாட்சி.—

ஈதலறநீடுவினைவிட்டீட்டுபொருளெஞ்ஞான்றுங்..... ... *
காதலிருவர்கருத்தறவைத்-தாதரவு..... ..... *
பட்டதேயின்பம்பரனினைநீநிம்மூன்றும்..... *
விட்டதேவீடின்பவீடு..... .... *

மூயங்காக்காற்பாயும்பசலைமரீஇறீ..... ... ... *
யுயங்காக்காலுப்பின்றுங்காமம்-வயங்கோத..... *
நில்லாத்திரையலைக்குநீள்கதிர்த்தண்சேர்ப்ப... ... ... *
புல்லாப்புலப்பதோராறு .... *

இது-தலைமகற்குவாயினேர்ந்ததோழி தலைமகள்புலவிநீங்கச் சொல்லியது.

இதன்பதப்பொருள்.

முயங்காக்கால்-புல்லாதபொழுது.மேனி. பசலை-பசலைநிறம். பாயும்-பரக்கும். ஊழி-பிணங்கி. உயங்காக்கால் - வருந்தாதவிடத்து. காமம்-காமநுகர்ச்சி. உப்பு இன்மை. இன்னும்- உண்டாகாதாமாதலால். வயங்கு - விளக்கத்தினையுடைய. ஓதம்-கடலலாசை. நில்லா-அடங்காமல். நிரை - அலைகள். அலைக்கும் - அலைக்கின்ற. நீள்-நீண்ட. கழி-கழியினுடைய. தண்-குளிர்ந்த. சேர்ப்ப-கானையுடையவனே. புல்லா-கூடி. புலப்பது-ஊடுவது. ஓராறு-தமக்கொருநெறியாவது. என்றவாறு.—புலப்பது - எழுவாய். ஓராறு - பயனிலை. மற்று-அசைநிலை. பசலையென்பது-துன்பத்தால்வேறுபட்டநிறம்.

இதன்பொழிப்பு.

புல்லாதபொழுதுமேனிபசலைநிறம்பரக்கும்பிணங்கிவருந்தாதவிடத்துக் காமநுகர்ச்சியினிமையுண்டாகாதாமாதலால் விளக்கத்தினையுடைய கடலலாசையடங்காமலலைக எலைக்கின்ற நீண்டகழியினுடையகுளிர்ந்தசேர்ப்பையுடையவனே கூடியூடுவதுதமக்கொருநெறியாவதென்றவாறு..... ..... (க)

தம்மமர்காதலர்தார்சூழணியகலம்..... ..... ✻
விம்மமுயங்குந்துணையில்லார்க்-கிம்மெனப்..... ✻
பெய்யவெழிலிமுழங்குந்திசையெல்லா ..... ✻
நெய்தலறைந்தன்னநீர்த்து .... ✻

இது-யருவங்கண்டாற்றாளாகியதலைவிதோழிக்குச் சொல்லியது.

இதன்பதப்பொருள்.

தம்-தம்மால். அமர்-விரும்பப்பட்ட. காதலர்-நாயகருடைய. தார்-மாலை. சூழ்-சூழ்ந்த. அணி-அழகிய. அகலம் - மார்பை. விம்ம-நம்மளவிலிறுக. முயங்கும்-தழுவும். துணை-அளவு. இல்லார்க்கு-இல்லாதவர்க்கு. இம்மென - இம்மென்னுமோசையையுடைத்தாய். பெய்ய - மிகவும்பெய்யான்றவண. எழிலி-முகில். முழங்கும்-ஆரவாரிக்கும். திசையெல்லாம்-திக்குகளலலாமம்முழக்கமவர்க்கு. நெய்தல்-நெய்தற்பறை. அறைந்தன்ன-அறைந்தாற்போலும். நீர்த்து - நீர்மையுடை

தீது. என்றவாறு.—முழக்கம் - எழுவாய். நீர்த்து-பயனிலை. நெய்தற்பறையென்பது - சாக்காட்டுப்பறை. இம்மெனல்-ஒலிக்குறிப்பு.

இதன்பொழிப்பு..

தம்மால்விரும்பப்பட்டநாயகருடையமாலைசூழ்ந்தஅழகியமார்பை நம்மளவிலிறுத்தழுவுமளவில்லாதவர்க்கும்மென்னுமோசையையுடைத்தாய்மிகவும்பெய்வான்வேண்டிமுகிலாரவாரிக்குந்திக்குகளெல்லாமம்முழக்கமவர்க்குநெய்தற்பறையறைந்தாற்போலுநீர்மையுடைத்தென்றவாறு..... (உ)

கம்மஞ்செய்மாக்கள்கருவியொடுக்கிய..... *
மம்மர்கொண்மாலைமலராய்ந்தபூத்தொடுப்பாள் ... *
கைம்மாலையிட்டுக்கலுழ்ந்தாடுணையில்லார்க்..... *
கிம்மாலையென்செய்வதென்று .... *

இது-தலைமகள்செலவுடன்படாமையைத் தலைமகற்குத்தோழி சொல்லியது.

இதன்பதப்பொருள்.

கம்மம்-தொழில். செய்-செய்யும். மாக்கள் - மக்கள். கருவி-தமதுகருவிகளை. ஒடுக்கிய - அடக்கிய. மம்மர் - மயக்கம். கொள்-கொண்டிருக்கிற. மாலை - மாலைக்காலத்து. மலர்-மலரை. ஆய்ந்து-தெரிந்து. பூ-பூவை. தொடுப்பாள்-தொடுக்குமவள். துணை-துணைவரை. இல்லார்க்கு - இல்லாதவர்க்கு. இம்மாலை-இந்தமாலையானது. என்-என்னபயன். செய்வதென்று-செய்குவதென்று. கை-கையிலிருக்கின்ற. மாலை - மாலையை. இட்டு-போட்டு. கலுழ்ந்தாள்-அழுதாள். என்றவாறு.—தொடுப்பாள்-எழுவாய். கலுழ்ந்தாள் - பயனிலை. கருவி - ஆயுதப்பொது.

இதன்பொழிப்பு.

தொழில்செய்யுமக்கடமது கருவிகளை யடக்கிய மயக்கங்கொண்டிருக்கிறமாலைக்காலத்துமலராகியபூக்களைத்தெரிந்து தொடுக்குமவடுணைவரையில்லாதவர்க்கிந்தமாலையானதென்ன பயன்செய்வதென்றுகையிலிருக்கின்ற மாலையைப்போட்டழுதாளென்றவாறு .... (ஊ)

செல்கடர்ஞாயிற்றிதரரிக்கண்கொண்டநீர் ... ... ✻
மெல்விரலூன்றித்தெறியாவிம்மித்தன்-மெல்விரலி ... ... ✻
முள்ளைவைத்தூநுங் குற்றமெண்ணுங்கொலந்தோதன்... ✻
மேருள்ளைவைத்தணைமேற்கிடந்து..... ... ... ✻

இது-வினைமுற்றிமீண்டதலைமகன் பாகன்கேட்பச் சொலியது.

இதன்பதப்பொருள்.

செல்-படுகின்ற. சுடர்-சூரியனை. நோக்கி-பார்த்து. சிதர்-சிந்திய. அரி-செவ்வரிபரந்த. கண்-கண்கள். கொண்டு-கொண்டிருக்கிற. நீர்-நீரை. மெல்-மெல்லிய. விரல்-விரலாலே. ஊன்றி-மூறைமூறையாக. தெறியா-வாங்கித்தெறித்து. விம்மி-அழுது. தன்-தன்னுடைய. மெல்-மெல்லிய. விரலின்-விரலிலே. தாள்-தாம்பிரிந்தநாள்களை. வைத்து-வைத்தெண்ணி. அணைமேல்-அணைமேலே. தன்-தனது. தோள்-தோளை வைத்து-வைத்தலைச்செப்ப. கிடந்து-படுத்து. அந்தோ-ஐயோ. நம்-நம்முடைய. சூற்றம்-சூற்றங்களை. எண்ணுங்கொல்-நினைக்குங்கொலோ. என்றவாறு.—தலைவி-எழுவாய். எண்ணுங்கொல்-பயனிலை. சூற்றங்களை-செயப்படுபொருள்.

இதன்பொழிப்பு.

படுகின்றசூரியனைப்பார்த்துச்சிந்தியசெவ்வரிபரந்தகண்களிற்கொண்டிருக்கிறநீரை மெல்லியவிரலாலே மூறைமூறையாக வாங்கித்தெறித்தழுதுதனதுமெல்லியவிரலிலேநாம்பிரிந்தநாள்களை வைத்தெண்ணியணைமேலேதன்தோளைவைத்துக்கிடந்தையோநம்முடையசூற்றங்களைநினைக்குங்கொலோவென்றவாறு..... ... . (சு)

கண்கயலெனினுங்கருதித்திறந்தகாதலி..... ... ... ✻
பின்சென்றதம்மதிறுசிறல்-பின்சென்று... .. .. ✻
மூக்கியமுடிந்தூமெறிகல்லாவெண்டுருவம்..... ... ✻
கோட்டியவில்வாக்குறித்து..... ✻

இது-தலைமகன்ஞானித்ததனைப்பாங்கற்குச்சொல்லியது அல்லதூஉம் பின்சென்றசெவிவிக்குமருதநிலத்தெதிர்ந்தார் சொல்லியதூஉமாம்.

காமநுதலியல்.

இதன்பதப்பொருள்.

கண்ண - காதலியுடையகண்ணை. கயலென்னும் - கயலென்று சொல்லும். கருத்திலை-கருத்திலை. காதலி - அக்காதலியின். பின்-பின்னே. சென்றது-தொடர்ந்துசென்றது. சிறு-சிறிய. சிரல்-சிச்சிலி. ஒண்ண - ஒள்ளிய. புருவம் - நுதல். கோட்டியவோத்த. வில்வாக்கு - வில்லின்றன்மையாகவிருப்பது. அறிந்து-தெரிந்து. பின்-பின்னே. சென்றும்-தொடர்ந்துசென்றும். உளக்கி-முயன்று. எழுந்தும் - எழுதலைச்செய்தும். எறிகல்லா-எறியமாட்டாது. என்றவாறு.—சிரல் - எழுவாய். எறிகல்லா-பயனிலை. அம்ம-இடைச்சொல்.

இதன்பொழிப்பு.

காதலியுடையகண்ணைக்கயலென்றுசொல்லுங்கருத்திலைக் காதலியின்பின்னேதொடர்ந்துசென்றது சிறியசிச்சிலியொள்ளியபுருவத்தைவளைத்தவில்லின்றன்மையாகவிருப்பதுதெரிந்துபின்னேதொடர்ந்துசென்றுமுயன்றெழுந்துமெறியமாட்டாதென்றவாறு..... .....(அ)

அரக்காம்பலறுமீவாயம்மருங்கிற்கண்ணே... ..... *
பரற்கானமாற்றினகொல்லோ-வரக்கார்ந்த..... .. *
பஞ்சிகொண்மேட்டிணும்பையெனப்பையெனவென். *
றஞ்சிப்பின்வாங்குமடி..... ..... *

இது-மகட்போக்கியதாயர்சொல்லியது.

இதன்பதப்பொருள்.

அரக்காம்பல்-செவ்வல்லிப்பூப்போலும். நாறும்-மணநாறும். வாய்-வாயையும். அம்-அழகிய. மருங்கிற்கு-இடையினையுமுடையாட்கு. அரக்கு - முன்சிவப்பு. ஆர்ந்த - தோய்ந்த. பஞ்சிகொண்டு - பஞ்சினைக்கொண்டு. உளட்டிணும் - உளட்டியழகுசெய்யினும். பையெனப்பையெனவென்று - அதற்குநொந்துமெல்லெனமெல்லெனவென்று. அஞ்சி-ஊட்டுதற்கஞ்சி. பின்-பின்னே. வாங்கும்-வாங்கிப்போகும். அடி - பாதம். பரல்-பருக்கைக்கல்லினையுடைய. கானம்-காட்டுவழிபோக. அன்னே - ஐயோ. ஆற்றினகொல்லோ - பொறுத்ததியாதோ. என்றவாறு.—அடி-எழுவாய். ஆற்றினகொல்லோ-பயனிலை.

இதன்பொழிப்பு.

செவ்வல்லிப்பூப்போலுமணநாறுமவ்வாயையுமழகியஇடை யினையுமுடையாட்கு முன்கிவப்புத்தோய்ந்த பஞ்சினைக்கொ ண்டேட்டி யழகுசெய்யினு மதற்குநொந்து மெல்லெனமெல் லெனவென்றாட்டுதற்கஞ்சிப்பின்னேவாங்கிப்போகும்பாதம் பருக்கைக்கல்லினையுடையகாட்டுவழிபோக ஐயோபொறுத்த தியாதோ. என்றவாறு..... (சு)

ஓலைக்கணக்கொலியடங்குபுன்செக்கர்... ..... *
மாலைப்பொழுதின்மணந்தார்பிரிவுள்ளி... .... *
மாலைபரிந்திட்டழுதாள்வனமுலைமேற்..... *
கோலஞ்செய்சாந்தந்திமிர்ந்து..... ... *

இது - தலைமகள்பிரிவுடன்படாமையைத் தோழிதலைமகற்குச் சொல்லியது.

இதன்பதப்பொருள்.

ஓலை - ஓலையெழுதும். கணக்கர் - கணக்கரது. ஒலி - ஓசை. அடங்கு-ஒடுங்கும். புன்-புற்கென்ற. செக்கர் - செம்மையை யுடைய. மாலைப்பொழுதில் - மாலைக்காலத்திலே. மணந்தார்- மருவினவர். பிரிவு-பிரிவை. உள்ளி-நினைத்து. மாலை-பூமாலை யை. பரிந்திட்டு-அறுத்தெறிந்து. வனம்-அழகிய. முலைமேல்- முலையின்மேல். கோலம்-அழகு. செய்-செய்திருக்கிற. சாந்த ம்-சந்தனத்தை. திமிர்ந்து-அழித்து. அழுதாள்-புலம்பினாள். என்றவாறு.—தலைமகள்-எழுவாய். அழுதாள்-பயனிலை.

இதன்பொழிப்பு.

ஓலையெழுதுங்கணக்கரோசையடங்கும்புற்கென்றசெம்மை யையுடைய அந்திப்பொழுதிற்காதலர்பிரிவைநினைத்துப்பூமா லையைப்பரிந்திட்டுவன முலைமேற்கோலமாகச்செய்தசாந்தை யுந்திமிர்ந்திட்டழுதாள். என்றவாறு..... ..... (எ)

கடக்கருங்கானத்துக்காளைபின்னாள்... .... *
நடக்கவும்வல்லியோவெஞ்சுடர்த்தொடீஇ... ... *
பெற்றாலொருவன்பெருங்குதிரையந்நிலையே... ... *
கற்றூனஞ்சுமாறு..... .... *

இது-உடன்போக்குக்குப்பொருந்தினதலைமகள் தோழிக்குச்சொல்லியது.

இதன்பதப்பொருள்.

கடக்கரும்-கடத்தற்கரிய. கானத்து-காட்டிலே. காஎ-காதலுங்கியகாஎ. பின்-பிறகே. நாஎ-நாஎ. நடக்கவும்-நடந்துபோகவும். வல்லேயோ-வல்லமையையுடையையோ. என்றி-என்றென்னேவிளுவிளுய். சுடர்-விளங்கிய. தொடீஇ - தொடியையுடையாய். ஒருவன்-ஒருத்தன். பெருங்-பெரிய. குதிரை-குதிரையை. பெற்றன்-அடைந்தான். அந்நிலையே-அப்பொழுதே. அஃது-அக்குதிரையை. உண்ருமாறு-செலுத்துமுறைமையினையும். கற்றன்ன - கற்றுவல்லுமதுபோலக் காதலன் பின்சேறற்கருமையில்லை. என்றவாறு.—குதிரைபெறுவதானநல்வினேயேறிமுயலவுங்கொடுக்கும். அருமை-எழுவாய். இல்லை-பயனிலை.

இதன்பொழிப்பு.

விளங்கியதொடியையுடையாய்கடத்தற்கரியகாட்டிலேகாதலுங்கிய காஎபிறகே நாஎநடந்துபோகவும் வல்லமையையுடையையோ வென்றென்னேவிளுவிளுயொருத்தன் பெரியகுதிரையையடைந்தானப்பொழுதேயக்குதிரையைச்செலுத்துமுறைமையினையுங்கற்றுவல்லுமதுபோலக்காதலன்பின்சேறற்கருமையில்லை. என்றவாறு... ... ... (அ)

மூலக்கண்ணுமுத்துமுழுமெய்யும்புல்லு ... ... *
மிலக்கணம்யாதுமறியேன்-கலக்கணம்... .... *
வேங்கைவெரூஉநறிசெலியமீபாலுமென்... ..... *
பூம்பாவைசெய்தகுறி..... .... *

இது-மகட்போக்கியதாய்கவன்றுசொல்லியது.

இதன்பதப்பொருள்.

மூலக்கண்ணும் - நெருநலென்மூலக்கண்ணினேயும். முத்தும்-முத்துமாலேயினேயும். முழுமெய்யும்-சரீரமுழுமையும். புல்லும்-தன்மெய்யிலழுந்தத்தழுவிக்கொண்ட. இலக்கணம்-

அடையாளத்தை. யாதும்-எதுவும். அறியேன்-அப்பொழுதறியேன். கலை-மான். கணம்-கூட்டம். வேங்கை-வேங்கைப்புலிக்கு. வெரூஉம் - அஞ்சித்திரியும். நெறி - வழியை. செவிய போலும்-செல்வாள்போலும். என்-என்து. பூம்பாவை-பொலிவினையுடைய பெண்ணாளவள். செய்த-பண்ணின. குறி-குறியையிப்பொழுதியானறிந்தேன். என்றவாறு.—யான்- எழுவாய். அறிந்தேன்-பயனிலை. குறியை-செயப்படுபொருள்.

இதன்பொழிப்பு.

நெருநலெஃகுமுலைக்கண்ணினையுமுதிராமலையினையுஞ்சாரமுழுமையுந்தன்மெய்யிலழுந்தத்தழுவிக்கொண்டசின்னத்தையானெறுவமப்பொழுதறியேன்மான்கூட்டம் வேங்கைப்புலிக்கஞ்சித்திரியும்வழியைச்செல்வாள்போலுமென்பொலிவினையுடையபெண்ணாளவள்பண்ணினகுறியையிப்பொழுதியானறிந்தேன். என்றவாறு ..... (கூ)

கண்ணாமூன்றுடையானுங்காக்கையும்பையரவு..... *
மென்னீன்றயாயும்பிழைத்ததென்-பொன்னீன்ற.... *
கோங்கரும்பன்னமுலையாய்பொருள்வயிற் .... *
பாங்கரார்சென்றநெறி... .... *

இது-தலைமகள்பிரிவாற்றுமையைத்தோழிக்குச்சொல்லியது.

இதன்பதப்பொருள்.

கண்ணாமூன்றுடையானும்- மூன்றுகண்ணினையுடையசிவனும். காக்கையும்-காக்கையும். பையரவும்-படத்தினையுடையபாம்பும். என்னீன்றயாயும் - என்னையீன்றதாயும். பிழைத்ததென்-எனக்குப்பிழைசெய்ததின்னை. பொன்னீன்ற - பொன்போலுநிறத்தையுடைய. கோங்கு - கோங்கினது. அரும்பன்ன-அரும்பையொத்த. முலையாய் - முலையினையுடையாய். பொருள்வயின்-பொருள்வயிற்பிரிந்து. பாங்கரார் - நம்முடையதலைவர். சென்றநெறி - போயினநெறியன்றேபிழைசெய்தது. என்றவாறு.—நெறி-எழுவாய்-பிழைத்தது-பயனிலை.

இதன்பொழிப்பு.

பொன்போலுநிறத்தையுடையகோங்கினதரும்பைபோலுந்
தமுலையினையுடையாய்காமனையுருவழித்துப்பின்னுமவனையுள
ளுக்கியமூன்றுகண்ணையுடையசிவனுங் குயிலைவளர்த்துவிட்ட
காக்கையுமதியையடையவிழுங்கிப்பின்பு முளதாக்கிவிட்டபட
தீதையுடைய பாம்புமித்துன்பமூறுதற் கெண்ணமீன்ற தாயு
மெனக்குப் பிழைசெய்ததென்ன பொருள்வயிற்பிரிந்து நம்
மூடையதலைவர்போயின நெறியன்மேற்பிழைசெய்தது. என்ற
வாறு ..... (ம)

காமத்துப்பான்முற்றிற்று.

ஆ அதிகாரம்-சம-இ. வெண்பா... (சுரா)

நாலடிநானூற்றுணைமுற்றிற்று

முற்றும்.

MADRAS GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS-1 சென்னை-1

அதிகாரவகராதி.

	பக்கம்.
அவையறிதல்	௨௬
அறன்வலியுறுத்தல்	௨௯
அறிவின்மை	௧௬௯
அறிவுடைமை	௧௬௭
இரவச்சம்	௨௰௯
இளமைநிலையாமை	௫
இன்மை	௨௬
ஈகை	௫௮
ஈயாமை	௧௫௯
உடமை	௨௫
கல்வி	௬௭
கற்புடைமகளிர்	௨௫
காமநுதலியல்	௨௭
கீழ்மை	௨௮
குடிப்பிறப்பு	௧௮
கூடாநட்பு	௧௫
கொடுங்கோன்மை	௮
சான்றாண்மை	௧௫
சிற்றினஞ்சேராமை	௮
சுற்றந்தழால்	௧௫
செல்வநிலையாமை	௫
தானாண்மை	௧௬
தீவினையச்சம்	௨௫
துறவு	௧௫
தூய்மன்மை	௧௬
நட்பாராய்தல்	௧௬
நட்பிற்பிழைபொறுத்தல்	௧௬
நல்வினைசேர்தல்	௧௮
நன்றியில்செல்வம்	௧௫
பழவினை	௬
பன்னெறி	௨
பிறர்மனைநயவாமை	௧௪
புல்லறிவாண்மை	௨௭
பெரியாரைப்பிழையாமை	௧௯
பெருமை	௧௬
பேதைமை	௨௬
பொதுமகளிர்	௨௫
பொறையுடைமை	௧௬
மானம்	௨௯
மெய்ம்மை	௧௯
மேன்மக்கள்	௧௬
யாக்கைநிலையாமை	௫

அதிகாரவகராதிமுற்றிற்று.

செய்யுளகராதி.

	பக்கம்.	கவி.
அஃகஞ்சுரை	௨௬	௬
அஃகேகபோ	௨௯	௯
அங்கண்	௧௬௬	௬
அங்கண்விசு	௨௬	௯
அங்கோட்	௨௫	௨
அச்சம்	௫௬	௬
அடுக்கின்ம	௧௬௫	௯
அடைத்தூர்ப்	௧௬௭	௯
அத்திட்டகூ	௨௬	௬
அம்பலயலை	௫௭	௭
அம்புமழலி	௫௫	௫
அரக்கர்	௨௰	௫
அருகல	௧௬	௬
அரும்பவிழ்	௨௭	௰
அரும்பெறற்	௨௫	௬
அரும்பெறல்	௨௭	௫

	பக்கம்.	கவி.
அருளின	... உஉஅ	... க
அலகுசால்	... ஈஈ	... ம
அவமதிப்பு	... ஈகக	... ங
அவனிய	... உஉக	... உ
அழன்மண்டு	... ஈசசு	... உ
அள்ளிக்கொ	... ஈஅள	... உ
அறம்புகழ்	... சுக	... உ
அறிவினை	... ஈஉச	... உ
அறியாப்பருவ	.. ஈஉச	... க
அறியாரு	... எக	... அ
அறிவதறிந்	... குடு	... ச
அறுவை	... க	... க
ஆகாதெ	... உஈசுக	... எ
ஆடுகோடா	... ஙக	... உ
ஆட்பார்த்	... சு	... ம
ஆணமினை	... உசுச	... ச
ஆமாபோ	... உசுசு	... எ
ஆர்ந்தபொ	... உஈசு	... ம
ஆர்ந்தவறிவி	... உசக	... க
ஆவாநாமாக்க	... உச	... உ
ஆன்றவருவி	... அசு	... அ
ஆன்றார்து	... ஈசக	... கா
ஆன்றடுதெ	... ஈஎக	... ஙா
இசைத்தீ	... ஈஙடு	... எ
இசையாதெ	... ஈசம	... க
இசையாவொ	... அட	... க
இசையுமெனி	... ஈகக	... உ
இடம்பட	... அடு	... சு
இடிம்மடைகூர்	... எக	... எ
இட்டார்த்து	... உஈடு	... அ
இணைச்சுமன	... உஈஙம	... ங
இம்மியரிசி	... எம	... ச
இம்மைபயக்கு	... கஉஅ	... உ
இம்மையு	.. உஈக	.. ச
இரவலர்களு	... ஈகஙக	... ஙா
இருக்கையெ	... ஈடு	... ங
இருப்பார்க்கு	... கம	.. உ

	பக்கம்.	கவி.
இலக்குநீர்	.. ஈசுங	... எ
இல்லம்னைமை	... சம	... ங
இலவாமை	... உகசு	... ங
இல்லாவிடத்	... சுஅ	... க
இழித்தக்க	... உகடு	... உ
இழைத்துநுழை	... டு	... சு
இளையாரை	... சுங	... டு
இறப்பச்சிறி	... எங	... ஙா
இறப்பதினை	... ஈஉசு	... சு
இறப்பவே	... ஈசும	... ங
இன்சார்வி	... ஈஙஉ	... உ
இன்பிறப்பில்	... உஉள	... ம
இன்பிறப்பெ	... ஈடுஉ	... உ
இனநன்மை	... ஈள	... சு
இனியார்தந்	... உசும	... கா
இன்பம்	... டுக	... ஙா
இன்முகம	.. உடுச	.. சு
இன்றெகொ	... உசு	... சு
இன்னாவினை	... ஈசுஅ	... டு
இன்னுசெயிறுமி	... டுசு	... சு
இன்னுசெயிறும்மி	... ஈசுக	.. டு
இன்னுசெயிறும்மி	... ஈசுஉ	... சு
இனமுவியை	... உகள	... சு
ஈட்டலு	... உள	... ம
ஈண்டுநீர்	... அம	... கா
ஈதலிசைபர	... ஈஙக	... க
ஈனமாயில்	... ஈசஉ	... அ
உடாஅதி	... அ	... ம
உடுக்கை	.. ஈச	... க
உடைப்பெரு	.. உசும	... அ
உடையாரிவ	... ஈம்சு	... ம
உணரிணரு	... ஈளசு	... எ
உண்டாய	... உஈங	... அ
உண்ணெறு	... எ	... சு
உதரஞ்	... டுக	.. கா
உயிர்போயா	... ஙள	... ம
உருவிற்	... ஈளச்	... ம

	பக்கம்.	கவி.
உருவுமிரமை	... எரு	... உ
உலகறிய	... ஈசன	... சு
உளதாள்	... உஈம்	... சு
உள்ளுரிப்ப	... உஈச	... சு
உள்ளத்தா	... கூச	... அ
உள்ளத்துளார்	... உளஉ	... சு
உள்ளமொரு	... உசுஅ	... ம
உறக்குத்	... உசு	... அ
உறுபாலை	... எள	... சு
உறுபுலி	... ஈசுக	... ஈ
உறுபுனறுக்	... ஈசுச	... ஞ
உறைப்பருப்	... ஈசுங்	... சு
ஊக்கிப் தாய்	... சுக	... எ
ஊரங்கணீர்	.. ஈஉள	... ஞ
ஊருளெழுந்	... சுள	... ம
ஊறியுவர்	... ஙரு	... எ
ஊறுசெய்	... உசுள	... கூ
எஞ்ஞான்று	... உளஉ	.. ஞ
எத்துணையா	... ஈசுச	... உ
எத்திலத்து	... ஈளச	... ஈ
எம்மைபறி	... ஈஉய	... ஞ
எய்தியி	... உஈக	... ஞ
எறிதிர்ப்	... ஈசுசு	... ஞ
எறியெய்	... உருள	... ஈ
எற்றென்று	... ஈய	... ம
ஏணாருத்தா	... மஉ	.. ஞ
ஏனைத்தன	.. ஈசுள	... சு
ஏர்பாயுஞ்	... உஈஅ	... உ
ஏன்றம்	... உகஅ	... எ
ஏன்றுணு	.. ச	... ஞ
ஏன்னைமற்	... உஙச	.. ம
ஏட்டைப்ப	... உருஈ	... அ
ஏதிலார்	... ஈசுஈ	... அ
ஏமாந்தபோ	... உசுள	... அ
ஏற்றலை	... எஉ	... அ

	பக்கம்.	கவி.
ஏண்கதிர்	... ஈஉள	... சு
ஏருமாறி	... உருஈ	... எ
ஏருந்ர்ப்	... ஈசுசு	... சு
ஏருபுடை	... ஈஅ	... அ
ஏருவொருவ	... உகசு	... சு
ஏந்தியவொள்	... சுச	... சு
ஏதியுமோதா	... ஈசுஉ	... ம
ஏலக்கணக்க	... உஅக	... எ
கடகஞ்சென்றி	... உஈசு	... சு
கடக்கருங்	... உஅக	.. அ
கடமாதொ	... உகஙு	.. ம
கடலசார்ந்து	... ஈளரு	... ரு
கடிந்துக்	... ஈயச	... சு
கடிப்பிடி	... எச	... ம
கடியெனக்	... உருள	... ஞ
கடுந்தியொரு	... ஈஙசு	... சு
கருக்கெனச்	.. உசசு	.. அ
கடையாயர்	... ஈருரு	... சு
கடையெலா	... உகக	... எ
கட்டினியாள்	... உளக	... ச
கணங்கொண்	... மசு	... ரு
கணமலை	... உரும	... ஙு
கண்கயலென்	... உளசு	... ரு
கண்ணன்	... உஅங	... ம
கப்பிகடவதா	... உசஉ	... சு
கம்மஞ்செய்	... உளஅ	... ஙு
கரவாதகிண்	... உகள	... ரு
கருங்கொள்	... உளங	.. எ
கருத்துணர்ந்	... ஈருஉ	... சு
கருமமு	... ஈளஅ	... ம
கருமவரிசை	... ஈளஅ	.. சு
கருப்பாட்டி	.. உசு	... ரு
கல்லாக்கழிப்	... உருசு	... சு
கல்லாது	... ஈஉஉ	.. சு
கல்லாதுநீண்	... ஈஅஉ	... ச
கல்லாமை	... ஈசு	... ரு
கல்லாரோயர்	... ஈஉ	... சு

	பக்கம்.	கவி.
கல்லெறிந்	.. ஈக	... கூ
கல்லென்று	... ஈஅக	... ஈ
கல்லோங்கு	.. உஈஉ	... ஈ
கல்விகையி	. . ஈ	... ஞ
கழி : தூரிடு	.. ஈகூ	... ஊ
கழுநீருட்	... ஈஞகூ	.. எ
களர்நிலத்து	... கூஙக	... ஈ
கள்ளார்கள்	... ஈய	... எ
கற்றூஉ	... உஉ	... ச
கற்றறிந்த	... ஈஅ	... கூ
கற்றனவு	... உச	... ய
கற்றுரைக்	... ஈஅ	... ய
கனகடற்ற	... ஈஉ	... அ
கன்னிநல்ல	... உஈள	... ச
காணிற்	... கூஈ	... ச
காதலர்சொ	... ஞச	.. ஈ
காலாடுபோ	... அஈ	... ஈ
காவாதொரு	.. சள	... ஈ
காழாயகொ	... உசஈ	... உ
குஞ்சியழகும்	... கூள	... க
குடநீரட்	... உளய	... உ
குடாரங்கொ	... ஈச	... கூ
குலந்தவங்	... உஈள	... ஈ
குற்றமுமே	... ஈகூச	... ய
கூர்ந்தநாய்	... ஞஉ	... ய
கேளாதேவந்	... உஉ	... ய
கொடியவை	... உளச	.. அ
கொடுத்தலுங்	... ஈசகூ	... ச
கொய்புர்	... உசள	... ய
கொலைஞரு	... உஈஞ	... க
கொல்லியிரு	... ஈஉஅ	... அ
கொள்ளே	.. சக	... ஞ
கோடேந்த	.. உஞய	... ச
கோட்டுப்பூ	... ஈஞச	... ஞ

	பக்கம்.	கவி.
கோதையரு	... ஞஈ	... க
கோளாற்றச்	... ஈஈஅ	... க
சக்கரக்கெல்	... உசஞ	... கூ
சாய்ப்பறிக்க	... உளச	... ஈ
சான்றுண்மை	... ஈச	... உ
சான்றோரொ	... கூஉ	... கூ
சிதலைனைப்	... ஈசஉ	... எ
சிறுகாலெரு	... அக	... ய
சிறுகாலையே	.. உஈஈ	.. அ
சிரியார்	... ஈகூஈ	... உ
செந்தெல்லா	... உஞக	... எ
செம்மை	... கூஈ	... ஞ
செய்கையழி	... ஈஅ	... எ
செய்யாத	... ஈகூஅ	... ஞ
செல்கூடர்	... உளக	... ச
செல்லாவிட	... ஈக	... ஈ
செல்வர்யா	... கூ	... அ
செல்வழிக்	... ஈகஈ	... ச
செழும்பெரு	... உசக	... உ
செறிப்பில்	... ஈகஞ	... க
செறுத்தா	... ஈஞக	.. உ
சென்றெயெ	... யஅ	... ச
சொற்றளர்ந்	... ய	... ஈ
சொற்றும்	... உஉஈ	... ஈ
தக்காருந்	.. அஉ	... உ
தகுகோலந்	... ஈஉ	.. ஈ
தண்கண்மற	... உஈஅ	... கூ
தண்டாச்	... சள	... உ
தமரென்று	.. ஈகூச	.. ஞ
தம்மைமர்காத	... உளள	... உ
தம்மையிகழ்ந்	... சஈ	... அ
தம்மையிகழ்வா	... அகூ	... எ
தலையதவ	... உஞஅ	... ஞ
தவலருந்	... ஈக	... எ
தளிர்மேலே	... உஞக	... ஞ
தனதாகத்	... ஈகஞ	... அ

	பக்கம்.	கவி.
தாரூசெய்ப்	... அஅ	... ய
தாமேயு	... உஉ	... எ
தாழாதீதளரா	... ய்க	... க
தான்கெடு	... நுக	... ய
திருத்தன்னே	... உதசு	... ச
திருமதுரை	... உாள	... க
தினைத்து	... எள	... நு
தினையனைத்	... உகச	... ச
தீக்குரும்	... ாசங	... கூ
துகடூர்	... ங	... உ
துச்சுத்துட்	... அசு	... க
தெய்த்துக்	... ாகநு	... ங
தொன்படுமை	... சநு	... ய
தொன்படும்பலை	... சய	... ச
தெண்ணீர்ச்	... ஙங	... ச
தெரியத்	... ாஉஉ	... அ
தெவிவிலார்	... ாநுள	... கூ
தேனியியக்	... ாக	.. கூ
தேர்ப்போர்	... ஙஉ	.. உ
தேர்றஞ்சா	... சு	... எ
நகியார்க்	... உகங	... கூ
நடுங்குபுறம்	... சுசு	... ங
நடுவுருள்	... எக	... சு
நட்டார்க்கு	... ாகச	... க
நட்புதாரா	... கூ	... உ
நம்மாலே	... உகச	... க
நயவார்க்	... ாசய	... எ
நரம்பெழுந்	... ங	... ங
நாணுருமை	... சு	... க
நல்லநுலை	... ாசய	... நு
நல்லர்பெரி	... உகஉ	... அ
நல்லனைகெ	... ாசு	... ச
நல்லனைதா	... உசய	... அ

	பக்கம்.	கவி.
நல்லாளொணுத்	... ாநுக	... க
நல்லார்நயவ	... ாஅக	... நு
நலனாவின்	... அச	... நு
நளிகடற்றண்	... ாஎங	... உ
நளிகடற்றண்	... ாஉய	... சு
நறுமலர்நீ	... ாநுய	... கூ
நன்னிலைக்	... ாஎள	.. அ
நாட்பாடஞ்	... உஉஉ	... உ
நாய்க்காற்	... ாநுசு	... அ
நார்நீதொடு	.. யக	... சு
நாலாறு	.. உஎய	.. ங
நாவ்வாய்ப்	... ாசசு	... எ
நாறுநீதக்கடை	... ாகய	... கூ
நிலநலந்	... ாஉக	... சு
நிலையாமை	... ஙசு	... உ
நின்றனதின்	... ச	... ச
நீரிணுதுண்	... உாக	... உ
நீருட்பிறந்	... உநுச	... ய
நீர்மையே	.. உாநு	... எ
நுண்ணுணர்வீரு	... ாசுள	.. ங
நுண்ணுணர்வின்	... ாளக	... க
நெடுங்கால	... நுக	... அ
நெருப்பழந்	... கூக	.. ச
நேரல்லர்நீ	... நுச	... உ
நேர்ந்து	.. சஅ	... ச
பகைவர்பணி	... ாளஉ	... க
பசுமழை	.. உய	.. எ
பண்டமறி	... ஙசு	... அ
பரவாவெளிப்	... சுநு	.. அ
பரா அணைப்	... ாளசு	... சு
பருவமெனை	... யங	... அ
பலநாளும்	... ாநுச	... ச
பல்லாரறியப்	... சுச	... கூ
பல்லாவு	... எநு	... ச

செய்யுளகராதி.

	பக்கம்.	கவி.
பல்லான்றி	... ஈ அ	... உ
பல்லான்	... எ அ	... ஈ
பழமைகத்	... உ உ	... ய
பழையரிவ	... உ ன	... ஈ
பனிபடு	... ய ஈ	... எ
பன்றிக்கூழ்	... ஈ அ ஈ	... எ
பன்னூஞ்	.. ஈ க ஊ	... ஈ
பாடமே	... உ உ ரு	... ஊ
பாம்பிற்கொ	... உ ஊ ச	... ரு
பாலாற்கழீஇ	... ஈ அ ச	... அ
பாலோடளா	... ஈ உ அ	... எ
பாவமுமே	... உ ஈ ய	... ரு
பிறக்குல	... உ ஈ ஈ	... ரு
பிறர்மறை	... ஈ க ரு	... அ
புக்கவிடத்	.. ஊ உ	... ஈ
புணர்கடல்	... ஈ அ அ	... ச
புதுப்புன	... உ ஊ க	.. ய
புத்தகமே	... உ உ ஊ	... அ
புல்லாப்புன்	... ஈ அ உ	... ரு
புல்லாவெழு	... ஊ க ஈ	.. ரு
புறந்தரத்	... உ க ஊ	... அ
புன்னுனி	.. உ க	.. ஊ
பெயற்பாற்	... எ உ	... எ
பெரியவர்	... ஊ உ	... ரு
பெரியார்பெருந	... ரு எ	.. எ
பெரியார்பெருமை	... ஈ உ ஈ	... ய
பெருகுவது	... ஈ ஊ எ	... ச
பெருங்கட	... உ ஈ ஊ	... உ
பெருநடை	... உ ச ஈ	... ஈ
பெருமக்க	... ஊ ச ச	... ய
பெருவளநா	... ஈ க ச	.. ஊ
பெறுவது	... உ உ ரு	... எ
பெறுவதொ	... உ ஈ அ	... ரு
பொத்தூறற்	... உ ஊ ரு	... ஊ
பொழிந்தினி	... ஈ அ ரு	... ஊ
பொழிப்பகல	... உ உ எ	... ஊ

	பக்கம்,	கவி.
பொறுப்ப	... ஈ க எ	... ஊ
பொற்கலத்து	... ஈ ச அ	.. ஊ
பொற்கலத்தூ	... உ ச ச	... ரு
பொன்னிற	... ஈ க உ	... ஊ
பொன்னே	... ஈ க அ	.. உ
மக்களாலாய	... உ எ	... எ
மடிதிரை	... ஈ ஊ க	... ச
மதித்திறப்	... ச ஊ	... ஊ
மனத்தான்	... ஈ ஈ ய	... ய
மரீஇப்பல	... ஈ ரு அ	... ய
மலைதல	... உ ரு உ	... ஊ
மலைமிசைத்	... ய ஊ	... ஊ
மல்குதிரை	... ஈ அ அ	.. ஊ
மல்லன்மா	... உ க க	... ஊ
மழைதினைக்	... உ ரு ரு	... ஊ
மறுமைஞ்	... ஈ ஊ உ	... ஊ
மறுமையு	... எ ய	... ரு
மற்றறிவா	... ய ச	... ஊ
மனைப்பாசங்	... ஊ ரு	... ய
மன்றம்பறந்	... ய எ	... ஊ
மன்னர்திருவு	... ஈ உ க	... எ
மாக்கேழ்மட	... ஊ க	... ஊ
மாண்டகுண	... ச உ	.. ஊ
மாற்றாரய்	... ரு ய	... எ
மானவருங்கல	... ஊ ய	... ய
மூட்டிகை	... ஈ ரு ய	... அ
மூட்டுற்ற	... ஈ எ ய	... அ
மேயங்காக்கா	... உ எ ஊ	... ஊ
மேலைக்கண்	... உ அ உ	... ஊ
மேல்லெழுகை	... ஊ ச	... ரு
மூற்றிசிறு	... ஈ ஊ ஊ	... எ
மூற்றுத்துந்	... ஈ ஊ எ	... ய
மூன்னோ	... ஊ அ	... உ
மூப்புமேல்	... உ ஊ உ	... ஊ
மெய்ஞ்ஞானக்	... உ உ க	... ஊ
மெய்வாய்கண்	... ச ச	... ஊ
மெல்லிய	... ஈ ஊ ரு	... அ

	பக்கம்.	கவி.		பக்கம்.	கவி.
மைதீர்படிம்	... உசசு	... எ	வாழ்நாட்	... யெ	... உ
யாதுருவகத்	... அெ	... கூ	விரிதிற	... ஈகசூ	... சு
யாதுெருவு	... தூ	... எ	விரிப்பிலா	.. ஈருக	... ய
யாதீங்கையை	... உக	.. அ	விழைத்தோ	... உசயெ	... கூ
யாமாயினேம்	... உாசூ	... ஈ	விளக்குப்	... ஈஅ	... க
யாமெனையெனைய	... ாஈரு	... ஈ	விளக்கொளி	... உசூஉ	... க
யாமெனையெ	.. ஈ	... ஈ	வினைப்பயன்	.. உசு	... ஈ
வடுவிலார	... அசு	... சு	வெறியயர்	.. யஉ	... சூ
வயாவுற்ற	... ாசருெ	... க	வெறுமை	... உஈஈ	... கூ
வலைவைக	... ாசூக	... அ	வென்றிப்	... உஉசு	... ரு
வழக்கரா	... ாசூஅ	... எ	வேம்பினிலை	... ாளக	... சு
வழக்கெனை	.. உருசூ	... ஈ	வேம்புமை	... ருசூ	... ரு
வளம்பட	... எசூ	... ஈ	வைகலும்	... உசூ	... கூ
வற்றிமற்	... ருஅ	... அ	வைப்புழிக்	... சுசூ	... சு

செய்யுளகராதிமுற்றிற்று முற்றும்.

வருக்கவக்கரத்தொகை.

அ	... உஅ	ஊ	... ரு	ந	... உய	சு	... உ
ஆ	... யக	எ	... யசூ	நா	... சூ	தெ	... உ
இ	... ஈள	ஏ	... உ	நி	... ஈ	தே	... உ
ஈ	... சு	ஒ	... ரு	நீ	... ஈ		
உ	... உஉ	ஓ	... ஈ				

அடை கவி. ஈஈஈ

க	... சூஈ	கெ	... க	ப	.. யசூ	பு	... அ
கா	... ரு	கொ	... சூ	பா	... ரு	பெ	.. யக
கு	... ரு	கோ	... சு	பி	... உ	பொ	... அ
கூ	... க						

அடை கவி. கூரு

ச	... க	சி	... க	ம	... யசூ	மூ	... க
சா	... ங	செ	... யஉ	மா	... சு	மெ	.. ங
சி	... ஈ	சொ	... உ	மூ	.. அ	மை	... க

அடை கவி. ஈஈ

ஞ	... யஉ	ஞி	... ரு	யா	... சூ	வெ	... சு
ஞா	... சு	ஞெ	.. ஈ	வ	... எ	வே	... க
ஞி	... சு	ஞோ	... ஈ	வா	.. க	வை	... உ
ஞீ	... க			வி	... சூ		

அடை கவி. உக

ஆகக்கூடிய ... கவி. சாா

உயிர்வரிகவி...	ாஈஈ	பகரவரிகவி.....	ரும்
ககரவரிகவி.....	ஈரு	மகரவரிகவி.....	ஈஈ
சகரவரிகவி...	உஉ	யகரவரிகவி...	சு
ஞகரவரிகவி.....	ஈஉ	வகரவரிகவி.....	உஅ
தகரவரிகவி.....	ஈஅ		

ஆகிய அக்கரவினம்-ஈக்ரு-கவி... சாா.

பிழை திருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	விடுபட்டசொற்கள்.
கூ	ய அ	,,	,,	இவ்வாழ்க்கையை-செயப்படுபொருள்.
		,,	,,	
ய கூ	ய கூ	,,	,,	நிலையாமையை - செயப்படுபொருள்.
		ஈ	,,	
உ ஈ	உ ஈ	,,	,,	தானம்-அசைநிலை.
உ கூ	ய ஈ	செய்வதுஎன்ன	உனை.	செய்வனை-செயப்படுபொருள்.
		,,	,,	
ஙெழ-	கூ	புகழ்இலை	புகழ்இலை.	
ஈ கூ	ய கூ	கோலம்	கோல்.	
ஈ கூ	ய ஈ	முதற்று	முதற்றன்று.	
ஈ எ	ய க	போகட்ட	போகிட்ட.	
ஙெழ-	உ க	வெள்	வெண்.	
ச கூ	உ கூ	தந்தம்	தந்தம்.	
ஞ ய	உ கூ	,,	,,	செய்யாமை - எழுவாய்.
		,,	,,	நன்று-பயனிலை,
ஞ க	உ கூ	உபகாரம்	உபகாரத்தான்.	
ஞ உ	உ	தீங்கை - செயப்படுபொருள்.		
ஞ ஈ	உ கூ	அவனை - செயப்படுபொருள்.		
ஙெழ-	உ கூ	மலை	மாலை.	
ஞ கூ	கூ	மடிற	மற்றது.	
ஞ ஞ	கூ	பெறில்	பெறின்.	
ஞ கூ	உ	தாய்	தாய.	
ஞ எ	ய	கலந்தானை - செயப்படுபொருள்.		
கூ உ	உ அ	பிறனில்லை-செயப்படுபொருள்.		
ஙெழ-	எ	,,	,,	நீக்குவானை-செயப்படுபொருள்.
		,,	,,	
ஙெழ-	அ	,,	,,	நீக்குவானை-செயப்படுபொருள்.
		,,	,,	

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	விடுபட்டசொற்கள்.
சுசு	ய ஃ	கடிபுத்க.	கடிப்புத்க.	
மெஞ	உசு	ஏதிண்மனேயர் ஊ-செயப்படு பொருள்.		
சுரு	யசு	,,	,,	தன்மையை-செயப்படுபொருள்.
		,,	,,	
சுள	உக	பிராய்	பிராய.	
எய	சு	நும	நும்	
எக	சு	,,	,,	ஈதல்-கொடுத்தலிலும்.
எசு	யஉ	பொவிகடன்	ஈதல்.	
மெஞ	ஙய	படுபனையன்னர் " எழுவாய். வாழ்வார்-பயனிலை.	வாழ்வார்-எழுவாய். படுபனையன்னர்-பயனிலை.	
அய	எ	நிண்ட	நீண்ட.	
மெஞ	உக	ஈண்டுநீர்மிக்க-	ஈண்டுநீர்-மிக்க	
அசு	யசு	இருதலை	அவன்.	
மெஞ	ய எ	பொருள-செயப்படுபொருள்.		
சுக	ங	தொழுநோய்	நீவினையாளர்.	
மெஞ	உய	கடு-வினையராயியார்	கடுவினையராயியார்.	
மெஞ	மெஞ	அஞ்சத்தக்க-வினையாளரை.	அஞ்சத்தக்க வினையாளரை.	
சுரு	ய	கலவாதானை-செயப்படுபொருள்.		
சயரு	ஙஉ	,,	,,	அறத்தை-செயப்படுபொருள்.
		,,	,,	
சசுக	யஎ	காவித்து	காதலித்து.	
சசுஉ	யக	விருபி	விரும்பி.	
சஎசு	சு	விரா அய்	விரா அ அய்.	
சஎஅ	உசு	முட்டின்று	முட்டின்றி.	
ஜஅரு	ஙய	மற்றுமர்	மற்றும்.	
உகஉ	உரு	என்ரூர்	என்றது.	

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	விடப்பட்டசொற்கள்.
உஉச	எ	தன	தன்.	
உஉங	ம	,,	,,	வாய்ச்சொல்லே-செயப்படு பொருள்.
		,,	,,	
உசுடு	ம	,,	,,	தோன்-செயப்படுபொரு
உஎங	உடு	மார்பு	மார்பினிடத்து	
ஙெழ	உஎ	மர்பு	ஊான்.	
ஙெழ	அ	,,	,,	நச்சுவாளை-செயப்படுபொருள்.
		,,	,,	
ஙெழ	ஙெழ	ஈதல்	பொலிகடன்.	

பிரசித்தபத்திரிகை.

இதனலியாவர்க்கும் அறிவிக்கப்படுவதியாதெனில் சென்னபட்டணம் பெத்துநாயகன்பேட்டையில் கொத்தவால் கணக்குஞ்செங்கான்கடைக்குமத்தியிற் கோவிந்தப்பநாயகன் கருவில் இஸ்கூர்-கிணற்றிற்கெதிர் மேல்எண்ணெய்வாடையில்-நிலவுது. நெம்பருடையவீட்டிலிருக்கும் அச்சிற்பதிப்பித்தால பலவகைத்தமிழ்ப்புதீதகங்கள்வேண்டியவர்கள்மேற்சொன்ன வீட்டில், ஈ-ஈ-வளவனூர்-சுப்பராயமுதலியாரவர்கள் குமாராகிய முத்துச்சாமி முதலியாரிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளப்படும்.

மேலும்பிறதேசங்களிலிருக்கின்றவர்கள் ஙெழ பட்டணத்திருக்குந் தங்கள்காரியக்காரர்களுக்காவது அல்லது நேராய் மேற்சொல்லப்பட்ட முத்துச்சாமிமுதலியாருக்காவது தபால்மூலமாக உண்டியனுப்பிப் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம் அப்படிப்பட்டவர்களுக்குப்பங்கித்தபாற் செலவு ஒதுக்கொடுக்கப்படும்.